தென்னிந்தியத் திருச்சபை

## கன்னியாகுமரிப் பேராயம்

# அருளுரைக் கையேடு

# 2020



"...சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன; அவற்றுள் சிலது நூறு மடங்காகவும், சிலது அறுபது மடங்காகவும், சிலது முப்பது மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன" மத். 13:8

தென்னிந்தியத் திருச்சபை

கன்னியாகுமரிப் பேராயம்

# அருளுரைக் கையேடு

# 2020

கருப்பொருள்

**அன்பு மற்றும் சமத்துவத்தின் கூட்டுறவை நோக்கி...**

**Towards Koinonia of Love and Equality**

வெளியீடு :

தொடர்புத்துறை, கன்னியாகுமரிப் பேராயம்

# ஆசியுரை

***"அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்".***

*(யோவா 16:8)*

***இயேசு கிறிஸ்துவில் அன்பிற்கினியவர்களே,***

இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரின் அன்பின் வாழ்த்துகள்.

ஆண்டவரின் ஆலயத்தில் நடைபெறும் தொழுகையில் அருளுரை மைய இடம்பெறுகின்றது. தென்னிந்தியத் திருச்சபையின் கீழ் உள்ள 24 பேராயங்களும் பயன்படுத்த உதவியாக Almanac 2020 யானது இவ்வாண்டு First Cycle (Year A) பின்பற்றி, ஆங்கிலத்தில் தென்னிந்தியத் திருச்சபையால் வெளியிடப்பட்டது. அதை அடிப்படையாகக் கொண்டு பேராயத்தின் ஆயர்கள் மற்றும் திருப்பணியாளர்கள் தகுந்த தலைப்போடும், திருமறைப் பகுதியோடும் ஞாயிறு மற்றும் சிறப்பு நாட்களில் அருளுரையாற்றும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள அருளுரைக் கையேடு 2020 வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். அருளுரைகளை இறைவேண்டலோடு ஆயத்தம் செய்து, ஆண்டவரின் தூய சமூகத்தில் அவரது வார்த்தையினைப் பயன்படுத்துவோம். அருளுரைகள் ஆயத்தம் செய்து ஆற்றப்படும் என்றாலும், அருளுரையாளர் தனது முன்மதியினையும், நேரத்தையும் இறைவேண்டலோடு செலவு செய்து, சீரிய முறையில் செய்தியானது மக்களுக்குச் சென்று சேரவும், அந்த வார்த்தையினால் தொடப்படவும் அருளுரையாற்ற வேண்டும். அருளுரை அவசரச் செய்தியாக அல்ல, ஆற்றல்படுத்தும் நற்செய்தியாகச் சொல்ல முற்படுவோம். நமது தனிப்பட்ட இன்ப, துன்ப அனுபவங்களைக் கூறும் இடம் அருளுரை மேடை (Pulpit) அன்று என்ற தீர்மானத்தோடு போதிக்கும் பணியினை நிறைவேற்றுவோம்.

நமது பேராயத்தின் இவ்வாண்டைய கருப்பொருள் "அன்பு மற்றும் சமத்துவத்தின் கூட்டுறறவை நோக்கி..." (Towards Koinonia of Love and Equality) என்பதாகும். இவ்வாண்டின் அனைத்து சிந்தனைகளும், இறைவேண்டல்களும் இக்கருப்பொருள் சார்ந்து அமைந்திட கடவுள் அருள்புரிவாராக.

இந்த அருளுரைக் கைநூலினை ஆயத்தம் செய்த அத்தனை பேரையும் உளமார வாழ்த்தி, ஜெபிக்கிறேன். இதன் தயாரிப்புப் பணியினை ஒருங்கிணைத்த பேராயத் தொடர்புத் துறை இயக்குநர் அருள்திரு. C. கில்டன் தயானந்த் அவர்களையும், இதனைத் தொகுக்கும் பணியில் தொகுப்பாசிரியராகச் செயல்பட்ட அருள்திரு. T.P. சலீம் தங்க குமார் அவர்களையும், அருளுரைகள் எழுதிய ஆயர்கள் மற்றும் திருப்பணியாளர்களையும், அச்சுப்பணிகளை நிறைவேற்றிய மார்த்தாண்டம் C.S.I. அச்சகத்தார், கண்காணிப்பாளர் அருள்திரு. N. விபின் ஜாண் ஆகியோரையும் வாழ்த்துகிறேன்.

இறைவார்த்தையைப் பகுத்துக் கூறும் பணியில் இந்நூல் சிறப்பாக உதவிடத் தந்தை, மைந்தர், தூய ஆவியார் திருப்பெயரில் வாழ்த்தி, ஆசி கூறுகிறேன்.

***இறையாசி அனைவரோடும் இருப்பதாக.***

பேரருள்திரு. அறிவர். A.R. ***செல்லையா,*** M.A.,B.D.,M.Th.,D.Min.
பேராயர், கன்னியாகுமரிப் பேராயம்

# இயக்குநரிடமிருந்து...

***கிறிஸ்துவில் அன்பானவர்களே,***

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அன்பான வாழ்த்துக்கள்.

இருளில் நடப்போர் இடறாமல் முன் செல்ல ஒளி தேவைப்படுவது போல வாழ்வில் குழப்பங்களும், பிரச்சனைகளும் வரும்போது தடுமாறாமல் நம்பிக்கையோடு முன்னேறிச் செல்ல இறைவார்த்தையாகிய ஒளி முதன்மையானதும், முக்கியமானதும் ஆகும். “கடலின் ஆழத்தினின்று உங்களை காக்கவும், துறைமுகம் எங்கிருக்கிறது என்பதைக் காட்டவும், பாறைகள் மற்றும் தடுப்புகளில்லா வழியில் பயணத்தைச் செலுத்தி துறைமுகத்தை அடையவும் உங்களுக்கான செயல் திட்டமே (திட்டவரைவு) திருமறையாகும்”(The Bible is God’s chart for you to seer by, to keep you from the bottom of the sea, and to show you where the harbor is, and how to reach it without running on rocks or bars) என்ற அமெரிக்காவின் பிரபல ஆயரும், அடிமைத்தன ஒழிப்புப் போராளியுமான ஹென்றி வார்டு பீச்சர் (Henry Ward Beecher) என்பவரின் கூற்று இறைவார்த்தையின் முக்கியத்துவத்தை இன்னும் மெருகூட்டுகிறது. நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் அதிக பலனைத் தந்தன என்றுத் திருமறை கூறுகிறது. விதைகள் வளர்ந்து பலன்தர நிலம் பண்படுத்தப்படுவது போல, தீமைகளும், ஒழுங்கீனங்களும் நிறைந்த உலகில் வாழும் மனித உள்ளங்கள் நல்வாழ்வுகெனப் பண்படுத்தப்பட வேண்டும். இறைவார்த்தை இவ்வுள்ளங்களில் சரியாக விதைக்கப்பட வேண்டும். விதைகள் முளைத்து, வளர்ந்து பலன் தருவது போல, அருளுரைகள் வாயிலாக இறைவார்த்தை விதைக்கப்படும் போது அது மக்களுடைய வாழ்வின் நல்ல பண்புகள் என்னும் கனிகளாக வெளிப்பட வேண்டும். இறைவார்த்தை சரியான புரிதலோடும், தகுந்த விளக்கங்களுடனும், மக்கள் முன் அருளுரைகளாக கொடுக்கப்பட முன் ஆண்டுகளைப் போல இவ்வாண்டிலும் அருளுரைக் கையேடு நம் பேராயத்தின் தொடர்புத் துறை வழியாக வெளியிடப்படுகிறது. 2020 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் உணர்த்துவதை போல, இறைவார்த்தையை கற்றுக் கொள்ளும் அனைத்து மக்களும் அன்பு மற்றும் சமத்துவத்திற்கான கூட்டுறவை வளர்த்துக்கொள்ள இவ் அருளுரைகள் உதவி செய்யட்டும்.

இவ் அருளுரைக் கையேட்டினை உருவாக்கும் பணியில் நல் ஆலோசனைகளும், ஊக்கமும் தந்த பெருமதிப்புக்குரிய பேராயர் பேரருள்திரு. அறிவர். A.R. செல்லையா அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கெள்கிறேன். இவ்வாண்டின் அருளுரைக் கையேட்டினை தொகுக்கும் பணியினை மிகுந்த பொறுப்புடன் நிறைவேற்றிய அருள்திரு.T.P. சலீம் தங்க குமார் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன். அவருக்கு உதவியாய் இருந்து இப்பணியில் உடன் உழைத்த அனைவருக்கும், அருளுரைகள் எழுதிய அனைவருக்கும், அச்சுப் பணிகளை கவனத்துடன் நிறைவேற்றிய மார்த்தாண்டம் C.S.I. அச்சகத்தாருக்கும், அதன் கண்காணிப்பாளர் அருள்திரு. N.விபின் ஜாண் அவர்களுக்கும் நன்றிகளைக் தெரிவித்துக் கொள்கிறேன். கடவுளுக்கே அனைத்தும் மாட்சியும் உண்டாகட்டும்.

கிறிஸ்துவின் பணியில்,

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்,** M.A.,B.D.,M.Th.,

இயக்குநர், தொடர்புத்துறை, கன்னியாகுமரிப் பேராயம்.

# தொகுப்பாசிரியரிடமிருந்து...

***இயேசு கிறிஸ்துவில் அன்புமிக்கவர்களே,***

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அன்பின் வாழ்த்துகள்.

விதை என்பது ஒரு தாவரத்தின் விதைக்கருவினை (கருமுளை) உள்ளடக்கிய ஓர் அமைப்பாகும். விதைக்கு "seed" மற்றும் விதைப்பதற்கு "sow" ஆகிய ஆங்கில வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. விதை விதைக்கப்பட வேண்டும். விதைக்கப்படும் விதை பலன் தர வேண்டும். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து இறைவார்த்தையை விதைக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். "சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவற்றுள் சில நூறு மடங்காகவும், சில அறுபது மடங்காகவும், சில முப்பது மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன" (மத் 13:8). அதுபோல, மக்கள் உள்ளங்களில் விதைக்கப்படும் இறைவார்த்தையாகிய விதை அதிக பலனைத் தர வேண்டும். விதைக்கப்பட வேண்டிய விதை என்பதை "SEED to SOW" என்று சொல்லலாம். இதற்கு Servants are Equipped, Encouraged and Discipled to Save Our World (நமது உலகை மீட்பதற்கு பணிவிடையாளர்கள் ஆயத்தப்படுத்தப்பட்டு, ஊக்கப்படுத்தப்பட்டு, சீடர்களாக உருவாக்கப்படுகிறார்கள்) என்னும் விளக்கம் பொருத்தமாக உள்ளது. இறைப்பணியாளர்களான நாம் நம்மை இறைவார்த்தையால் தயார்படுத்தி, அவ்வார்த்தையை மக்கள் உள்ளங்களில் விதைத்தால் அது உலகத்தை மீட்புக்கு நேராக வழி நடத்தும். "அன்பு மற்றும் சமத்துவத்தின் கூட்டுறவை நோக்கி..." என்னும் இவ்வாண்டின் கருப்பொருளின் எதிர்பார்ப்பு நாம் வாழும் சமுதாயத்தில் நிறைவேறிட இறைவார்த்தைகளை விதைப்போம். இவ்வகையில் இறைவார்த்தையைத் தெளிவாக எடுத்துக்கூற இவ் அருளுரைக் கையேடு வழிகாட்டுதலாய் அமையட்டும்.

2020 ஆம் ஆண்டின் அருளுரைக் கையேட்டைத் தொகுத்து வழங்கும் வாய்ப்பை எமக்குத் தந்த பெரும்மதிப்புக்குரிய பேராயர் பேரருள்திரு. அறிவர் A.R. செல்லையா அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். இப்பணியைக் கண்காணித்து, தகுந்த ஆலோசனை தந்து, எம்மை ஊக்கப்படுத்திய பேராயத் தொடர்புத்துறை இயக்குநர் அருள்திரு. C. கில்டன் தயானந்த் அவர்களுக்கு நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன். இப்பணிகளில் எமை உற்சாகப்படுத்தி, உடனிருந்து வழிகாட்டிய அருள்திரு R. சாம் பிரின்ஸ் மற்றும் அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ் ஆகியோருக்கும், அருளுரைத் தலைப்புகள் மற்றும்

அருளுரைச் சிந்தனைகளை மெருகூட்டி, இறுதி வடிவம் பெறும்வரை உடன் உழைத்த அன்பு சகோதரர் இறைப்பணியர் திருவாளர் B. சாம் ஜெபசிங் அவர்களுக்கும் மனப்பூர்வமான நன்றிகள். பிழைதிருத்தப் பணிகளில் உடன் உதவிய அருள்திருவாளர்கள் R. ஹென்சிலின் நேசராஜ், S. அருள் ஜெபசிங், R. டேவிட் ஜெபசிங், S.E. சிமியோன் ஆகியோருக்கும், அனைத்து நிலைகளிலும் இறுதிவரை உதவிசெய்த இறைப்பணியாளர்கள் திருவாளர் M.R. மில்ட்டன் மார்க் மற்றும் திருவாளர் P.C. பெரின் போப்பி ஆகியோருக்கும் உளமார்ந்த நன்றிகள். இறைவேண்டலுடன் இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு தகுந்த இறையியல் தெளிவுடன் அருளுரைகளை எழுதிய பேராயர், ஆயர்கள் மற்றும் திருப்பணிவிடையாளர்கள் அனைவருக்கும் நன்றிகள். உரிய நேரத்தில் இந்நூல் வெளிவர அச்சுப்பணிகளை நிறைவேற்றிய மார்த்தாண்டம் C.S.I. அச்சகத்தாருக்கும், அச்சக மேலாளர் அருள்திரு. N. விபின் ஜாண் அவர்களுக்கும் மிக்க நன்றிகள். நல்ல ஆலோசனைகள் தந்து இப்பணியை நிறைவேற்ற எல்லா நிலைகளிலும் உதவி செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றி கூறுகிறேன். தந்தை, மைந்தர், தூய ஆவியாராம் திரித்துவ கடவுளுக்கே அனைத்து மாட்சியும் உரித்தாகுக. ஆமென்.

இறைப்பணியில்,
அருள்திரு. T.P. **சலீம் தங்க குமார்,** M.A.,B.D.,M.Th.,
தொகுப்பாசிரியர்

# பொருளடக்கம்


1. 01-01-2020 அனைவரோடும் தொடரும் இறைஉடன்படிக்கை 1

**வார இறைவேண்டல்**

2. நாள் 1 - ஒப்புரவு: சுமைகளை வெளியே வீசுதல் 5

நாள் 2 - உள்ளொளிபெறுதல்: கிறிஸ்துவின் ஒளியை நாடுதலும் காட்டுதலும் 10

3. நாள் 3 - நம்பிக்கையே பவுலின் அறிவுரை 16

4. நாள் 4 - அஞ்சாதிருங்கள், பற்றுறுதிகொள்ளுங்கள் 18

5. நாள் 5 - ஆற்றல்: பயணத்திற்காக உணவைப் பகிர்தல் 21

6. நாள் 6 - விருந்தோம்பல்: அளவற்ற அன்பைக் காட்டுங்கள் 24

7. நாள் 7 - மாற்றம்: நமது இதயத்திலும் சிந்தையிலும் மாற்றம் பெறுதல் 28

8. நாள் 8 - வள்ளன்மை (உதாரத்துவம்) : பெற்றுக்கொள்தலும் கொடுத்தலும் 32

9. 05-01-2020 அனைவருக்கும் இறைவெளிப்பாடு 36

10. 06-01-2020 கிறிஸ்துவின் திருவெளிப்பாடு 38

11. 12-01-2020 கடவுளின் திருக்கோவிலாக உடலை மதித்தல் 40

12. 19-01-2020 அழைக்கப்பெற்றது ஒன்றுபடுவதற்கு 45

13. 26-01-2020 பற்றுறுதியிலும் செயலிலும் ஒன்றிப்பு 49

14. 26-01-2020 நாட்டுக்கட்டுமானத்தில் பங்கேற்பு 54

15. 01-02-2020 விசாரிக்கும் ஆண்டவர் 57

16. 02-02-2020 உண்மையான பக்தி 59

17. 09-02-2020 ஓய்வுநாள் : படைப்பின் உச்சம் 64

18. 09-02-2020 மனதுருகும் அன்பும் நலமருள்தலும் 67

19. 16-02-2020 வீழ்ச்சி : படைப்பின் நோக்கத்தை மீறுதல் 71

20. 23-02-2020 தவக்காலம் : ஒரு மாற்றுருவாக்கத்தின் காலம் 78

21. 26-02-2020 சிலுவை : மனமாற்றத்திற்கு ஓர் அழைப்பு 82

22. 28-02-2020 தீச்செயலை விட்டுத் திரும்புங்கள் 85

23. 01-03-2020 தேற்றும் ஆண்டவர் 87

| | | | |
|---|---|---|---|
| 24. | 01-03-2020 | தூய்மையாக்கும் கிறிஸ்து | 90 |
| 25. | 04-03-2020 | அறிமுகம் செய்த அந்திரேயா | 93 |
| 26. | 06-03-2020 | அகந்தையை விட்டுத் திரும்புங்கள் | 96 |
| 27. | 08-03-2020 | மன்னிக்கும் கிறிஸ்து | 99 |
| 28. | 11-03-2020 | அன்புக்குச் சான்று பகர்ந்த யோவான் | 103 |
| 29. | 13-03-2020 | நீதிக்குத் திரும்புங்கள் | 106 |
| 30. | 15-03-2020 | ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்து | 110 |
| 31. | 18-03-2020 | துன்பத்தைத் துணிவுடன் ஏற்ற யாக்கோபு | 113 |
| 32. | 20-03-2020 | இரக்கத்திற்குத் திரும்புங்கள் | 116 |
| 33. | 22-03-2020 | விடுவிக்கும் கிறிஸ்து | 119 |
| 34. | 25-03-2020 | கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் பேதுரு | 123 |
| 35. | 27-03-2020 | நன்மையை நாடித் திரும்புங்கள் | 126 |
| 36. | 29-03-2020 | சிலுவையும் மீள்நிலைப்படுத்தும் கிறிஸ்துவும் | 128 |
| 37. | 01-04-2020 | கண்ணீரைக் காணும் ஆண்டவர் | 131 |
| 38. | 01-04-2020 | கிறிஸ்துவுடன் சாகத் துணிந்த தோமா | 134 |
| 39. | 03-04-2020 | இறையுறவுக்குத் திரும்புங்கள் | 138 |
| 40. | 05-04-2020 | கிறிஸ்து : அமைதியின் அரசர் | 141 |
| 41. | 06-04-2020 | அர்த்தமற்ற ஆரவாரம் | 144 |
| 42. | 07-04-2020 | அநீதத்தின் ஆரவாரம் | 147 |
| 43. | 08-04-2020 | அர்ப்பணிப்புக்கான அங்கீகாரம் | 150 |
| 44. | 09-04-2020 | கிறிஸ்து : வாழ்வருளும் உணவு | 153 |
| 45. | 10-04-2020 | சிலுவை : தற்கையளிக்கும் அன்பு | 157 |
| 46. | 11-04-2020 | புதுவாழ்வுக்கான எதிர்நோக்கு | 162 |
| 47. | 12-04-2020 | உயிர்ப்பு : கிறிஸ்துவில் வாழ்வைக் கொண்டாடுதல் | 164 |
| 48. | 19-04-2020 | கிறிஸ்துவை ஆண்டவராகவும், கடவுளாகவும் உறுதிமொழிதல் | 167 |
| 49. | 26-04-2020 | கிறிஸ்துவின் விருந்தோம்பலுக்கு அழைப்பு | 172 |
| 50. | 01-05-2020 | நற்பலன் அருளும் ஆண்டவர் | 175 |
| 51. | 03-05-2020 | அன்றாட வாழ்வில் உயிர்த்த கிறிஸ்துவுடன் கூட்டுறவு | 177 |

| | | | |
|---|---|---|---|
| 52. | 10-05-2020 | கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல் : வழி | 180 |
| 53. | 17-05-2020 | அருட்பணி : கிறிஸ்துவின் அமைதியைப் பகிர்தல் | 184 |
| 54. | 24-05-2020 | தூய ஆவியாரின் வாக்குறுதி | 189 |
| 55. | 31-05-2020 | வாரும் தூய ஆவியாரே, முழுப் படைப்பையும் மாற்றுருவாக்கும் | 192 |
| 56. | 01-06-2020 | ஞானிகளாக்கும் ஆண்டவர் | 197 |
| 57. | 07-06-2020 | நாம் திரித்துவக் கடவுளில் நம்பிக்கை கொள்கிறோம் | 199 |
| 58. | 07-06-2020 | ஞானமும் அறிவும் கடவுளின் அருட்கொடை | 203 |
| 59. | 14-06-2020 | படைப்பு விடுதலைக்காக வேதனையுற்றுத் தவிக்கிறது | 208 |
| 60. | 21-06-2020 | வழிபாடு : மக்களுடைய நம்பிக்கையின் கொண்டாட்டம் | 212 |
| 61. | 28-06-2020 | சான்றுபகர்வதே சீடத்துவம் | 216 |
| 62. | 01-07-2020 | ஆண்டவரே நம் புகலிடம் | 222 |
| 63. | 05-07-2020 | பொறுப்பாண்மை: பொறுப்புள்ள வளமேலாண்மை | 225 |
| 64. | 12-07-2020 | இறையியல் கல்வி : இறைமக்களை மேம்படுத்துதல் | 229 |
| 65. | 19-07-2020 | இறைமக்கள் : கிறிஸ்துவின் தூதுவர்கள் | 235 |
| 66. | 26-07-2020 | அருட்பொழிவுத் திருப்பணி : மாற்றுருவாக்கப்பெற்றது மாற்றுருவாக்கவே | 239 |
| 67. | 01-08-2020 | வலுவூட்டும் ஆண்டவர் | 243 |
| 68. | 02-08-2020 | அருட்பணி : அனைவருக்கும் நற்செய்தி | 245 |
| 69. | 09-08-2020 | திருமணம் : உடன்படிக்கையின் கொண்டாட்டம் | 249 |
| 70. | 15-08-2020 | நீதிக்கான விடுதலை | 252 |
| 71. | 16-08-2020 | திருமுழுக்கு என்னும் திருவருள்சாதனம் | 256 |
| 72. | 23-08-2020 | தூய நன்றித் திருவிருந்து என்னும் திருவருள்சாதனம் | 260 |
| 73. | 30-08-2020 | பல்நம்பிக்கைச் சமூகத்தில் கிறிஸ்தவ இருப்புநிலை | 263 |
| 74. | 01-09-2020 | உயர்த்தும் ஆண்டவர் | 266 |
| 75. | 06-09-2020 | ஆசிரியர்கள் : விடுதலையின் முகவர்கள் | 268 |
| 76. | 13-09-2020 | மகளிர் மாற்றத்தை உருவாக்குவோர் | 273 |
| 77. | 20-09-2020 | அமைதியும் முரண்பாட்டுக்கான தீர்வும் | 277 |
| 78. | 27-09-2020 | முதியோரின் நற்பலன் | 284 |
| 79. | 27-09-2020 | சான்று பகர்வதில் ஒன்றிப்பு | 288 |

| | | | |
|---|---|---|---|
| 80. | 01-10-2020 | விருப்பம் நிறைவேற்றும் ஆண்டவர் | 291 |
| 81. | 04-10-2020 | இறைமக்களின் சான்று | 293 |
| 82. | 11-10-2020 | மாற்றுத்திறனுடையோர் : வாழ்வின் புனிதம் | 296 |
| 83. | 18-10-2020 | தற்கால உலகில் இளையோரின் ஆன்மிகம் | 301 |
| 84. | 25-10-2020 | பற்றுறுதியைத் திரும்பக் கண்டுபிடித்தலும் மீள்வாழ்தலும் | 304 |
| 85. | 01-11-2020 | அடையாளங்களாக்கும் ஆண்டவர் | 308 |
| 86. | 01-11-2020 | பற்றுறுதியில் பேணி வளர்த்தல் | 310 |
| 87. | 08-11-2020 | மண்பாண்டங்களில் செல்வம் | 313 |
| 88. | 15-11-2020 | பெண் குழந்தைக்கு வருங்காலத்தை உறுதிசெய்தல் | 316 |
| 89. | 22-11-2020 | இறையாளுகைக்காக இடர்வரவை ஏற்றல் | 320 |
| 90. | 29-11-2020 | கிறிஸ்துவின் வருகையை மகிழ்வுடன் எதிர்பார்த்தல் | 325 |
| 91. | 01-12-2020 | இறங்கி வரும் இறைவன் | 329 |
| 92. | 06-12-2020 | இறைவாக்கு : நமது பாதைக்கு வெளிச்சம் | 332 |
| 93. | 13-12-2020 | மீட்பின் நல்லெதிர்நோக்கு | 335 |
| 94. | 20-12-2020 | பேருவகை கொள்ளுங்கள், ஆண்டவர் அண்மையில் உள்ளார் | 338 |
| 95. | 24-12-2020 | கடவுள் நம்மிடம் வருகிறார் | 342 |
| 96. | 25-12-2020 | கிறிஸ்துப் பிறப்பு : அமைதியின் அரசருக்கு இடத்தைக் கண்டறிதல் | 347 |
| 97. | 27-12-2020 | குடும்பம் : கடவுளின் அருட்கொடை | 352 |
| 98. | 31-12-2020 | நன்றியறிதலோடு ஆண்டவரிடம் வாருங்கள் | 356 |
| | **சிலுவைத் திருமொழிகள்** | | |
| 99. | 1 - வாழ்வுக்கு அணிகலனாகும் மன்னிப்பு | | 363 |
| 100. | 2 - வாழ்வுக்கு வாசலாகும் மீட்பு | | 367 |
| 101. | 3 - வாழ்வுக்கு வழியாகும் உறவு | | 371 |
| 102. | 4 - வாழ்வின் ஏக்கமாகும் தவிப்பு | | 374 |
| 103. | 5 - வாழ்வின் எதிர்பார்ப்பாகும் தாகிப்பு | | 378 |
| 104. | 6 - வாழ்வின் நம்பிக்கையாகும் நிறைவு | | 381 |
| 105. | 7 - வாழ்வுக்கு இலக்கணமாகும் ஒப்படைப்பு | | 384 |

**சிறப்பு நாட்களுக்கான அருளுரைகள்**

106. இலக்குகளாகும் இலட்சியம் 389

107. தேர்வு : சாதனையாளருக்கான தொடக்கம் 391

108. பற்றுறுதியின் அடையாளமாகும் திருச்சபை 393

**விழாக்கால அருளுரைகள்**

109. நல்வழியில் நடக்கப் பழக்குவோம் 396

110. அடிமையாகாதிருப்போம் 399

111. உளமார இசை பாடுங்கள் 403

112. மாண்புறு மகளிர் 405

113. இறைப்பற்றாளர் கொர்நேலியு 408

114. இதய வேண்டுதலாம் இறைவேண்டல் 412

115. வாசிப்பு என்னும் கலை 415

116. கடவுளுக்கு ஏற்புடைய படையல் 417

117. நன்றியுடன் கொண்டாடுவோம் 420

118. விளைச்சலைச் சேகரித்துப் படைப்போம் 423

## LITURGICAL COLOURS - 2020

| | |
|---|---|
| **January 1 to January 6**<br>**(Christmas Season)** | **White** |
| **January 7 to February 25**<br>**(Epiphany Season)** | **Green** |
| **February 26 to April 11**<br>**(Lenten Season)** | **Purple** |
| **April 12 to May 30**<br>**(Easter Season)** | **White** |
| **May 31 to June 6**<br>**(Pentecost Season)** | **Red** |
| **June 7**<br>**(Trinity Sunday)** | **White** |
| **June 8 to November 28**<br>**(Pentecost Season)** | **Green** |
| **November 29 to December 24 Morning**<br>**(Advent Season)** | **Purple** |
| **December 24 Eve to December 31**<br>**(Christmas Season)** | **White** |

01-01-2020 **உடன்படிக்கையின் நாள் & புத்தாண்டு நாள்**

# அனைவரோடும் தொடரும் இறைஉடன்படிக்கை
## GOD'S CONTINUING COVENANT WITH ALL

தொநூ 9:8-17 கலா 4:21-31
திபா 145 லூக் 22:14-23

**"இதோ! நான் உங்களோடும் உங்களுக்குப் பின்வரும் உங்கள் வழிமரபினரோடும்.... மண்ணுலகில் உள்ள எல்லா உயிர்களோடும் என் உடன்படிக்கையை நிலைநாட்டுகிறேன்"** (தொநூ 9: 9,10).

புதிய ஆண்டின் முதல் நாள் என்பது ஆண்டவரோடு உடன்படிக்கை செய்யும் நாள். நாம் ஏற்படுத்தும் உடன்படிக்கைகளில் ஆண்டின் நிறைவுவரையிலும் நிலைத்துநிற்க நம்மைப் பக்குவப்படுத்துவது பொருத்தமாகும். உடன்படிக்கை (Covenant) என்பது வாக்குறுதி (Promise) அல்ல; உடன்பாடு (Agreement) அல்ல; ஒப்பந்தம் (Contract) அல்ல. உடன்படிக்கை என்பது இவைகளைவிட உயர்ந்தது. அது கடவுளுக்கும், அவரது படைப்பாகிய மனுக்குலத்துக்கும் இடையேயான உறுதியான உறவு சார்ந்தது. எல்லாம் வல்ல, எல்லாம் அறிகின்ற, எங்கும் நிறைந்த கடவுள் நீர்க்குமிழ் போன்ற நிலையில்லாத, பாவ நிலையில் உள்ள, தீமைகள் நிறைந்த மனிதர்களோடு செய்து கொண்ட உடன்படிக்கை ஆச்சர்யம் நிறைந்தது. கடவுள் மனிதரோடு உடன்படிக்கைசெய்யும் போது, வழக்கமாக சமுதாயத்தில் நிலவும் ஒப்பந்த முறைகளையே கையாளுகிறார். அதில் முக்கியமானது அவரவருக்குரிய கடமைகளை இருவருமே (கடவுளும், மனிதனும்) நிறைவேற்ற வேண்டும் என்பது தான். மேலும், மனிதரை நெறிப்படுத்தவே கடவுள் மனிதரோடு உடன்படிக்கை செய்து கொள்கிறார். மனிதரை நெறிப்படுத்தி இவ்வுலகில் இறையரசை நிறுவுவதே கடவுளின் நோக்கம். காலம் காலமாக கடவுள் மனுக்குலத்தோடு உடன்படிக்கை செய்து வந்தார். காலந்தோறும் அவைகளை நினைவு கூர்ந்தார். தலைமுறை தோறும் அவைகளை புதுப்பித்துக் கொண்டேயிருந்தார். நிறைவில், அனைத்து உடன்படிக்கைகளுக்கும் மேலாக ஒரு புதிய உடன்படிக்கையை தம் மைந்தராம் இயேசு கிறிஸ்து வழியாக இவ்வுலகிற்குத் தந்தார். இன்றும் இவ்வுடன்படிக்கை மக்கள் வாழ்வில் தொடர்கிறது.

### *1. நினைவுகூரப்படும் உடன்படிக்கை:* (தொநூ 9:8-17)

எனக்கும் உங்களுக்கும் சதையுள்ள உயிரினங்கள் எல்லாவற்றுக்கும் இடையே உள்ள என் உடன்படிக்கையை நான் நினைவுகூர்வேன்... (தொநூ 9:15)

கடவுள் நோவாவோடு உடன்படிக்கை செய்து, உலகத்தை நீரால் அழிக்கமாட்டேன். என உறுதி கூறினார். நோவா கடவுளோடு நடந்தவர். நோவாவின் முப்பாட்டனார் ஏனோக்கு உடலோடும் ஆன்மாவோடும் எடுத்துக் கொள்ளப்பட்டவர். நோவா 120 ஆண்டு காலங்கள் நற்செய்தி அறிவித்தார். அவரது வார்த்தையைக் கேட்ட எட்டுப்பேர் காப்பாற்றப்பட்டனர். நோவா பேழைக்குள் நுழைந்ததும் கடவுள் வெளியிலிருந்து கதவைப் பூட்டினார். பின்பு வானவில்லை அடையாளப்படுத்தி, நோவாவோடு உடன்படிக்கை செய்தார்.

பெருவெள்ளத்திற்குப் பின் நோவாவுடன் கடவுள் பேசும் வார்த்தைகளே முதல் திருமறைப் பகுதியாகும். திருமறை காட்டும் உடன்படிக்கையில் இருசாரார் இருப்பர்: ஒன்று உடன்படிக்கை செய்பவர், மற்றொன்று உடன்படிக்கை செய்யப்படுபவர். இதில் உடன்படிக்கை செய்பவர் எப்போதும் தலைமை நிலையிலும், செய்யப்படுபவர் பணியாளர் நிலையிலும் இருப்பர். மேலும், உடன்படிக்கை செய்யும் தலைவர், உடன்படிக்கை செய்யப்படும் நபருக்குப் பாதுகாப்பை வாக்குறுதியாகத் தருகின்றார். அதே போல கீழிருப்பவர் மேலிருப்பவர் சொல்வதையெல்லாம் கேட்டு நடப்பதாக வாக்குறுதி தருகின்றார். இந்த இருவரும் தங்கள் உடன்படிக்கையின் நினைவாக கல்தூண், மரம் போன்றவற்றை அடையாளமாக ஏற்படுத்திக் கொள்வர். இந்தப் பின்னணியத்தில் முதல் திருமறைப் பகுதியைப் பார்க்க வேண்டும்.

(அ) பெருவெள்ளத்திலிருந்து நோவாவின் குடும்பத்தைக் காப்பற்றியதன் வழியாக நோவாவை வெற்றி கொள்கின்றார் கடவுள் (9:8).

(ஆ) உடன்படிக்கை செய்பவர் கடவுள்; நோவாவோடும், அவரது தலைமுறையினர், அனைத்து மக்கள் மற்றும் உயிர்களுடனும் (9:9,10).

(இ) உடன்படிக்கையின் மையப்பொருள் இனி உயிர்கள் மீண்டும் அழிக்கப்படாது; மண்ணுலகில் அழிக்கும் வெள்ளப்பெருக்கு மீண்டும் வராது (9:11)

(ஈ) உடன்படிக்கையின் அடையாளம் வானவில் (9:12).

வானவில்லை உடன்படிக்கையின் அடையாளமாக வைத்த கடவுள் அது மேகத்தின்மேல் தோன்றும்போது தம் உடன்படிக்கையை நினைவுகூர்வதாகக் கூறுகிறார் (9:16). அப்படியென்றால் அதைப் பார்க்காத போது கடவுள் மனுக்குலத்தை மறந்துவிடுவாரா? இல்லை. இந்த வானவில் கடவுள் நம்மை நினைவுகூர்வதை நமக்குக் காட்டும் ஓர் அடையாளம். அது அனைவர் கண்ணுக்கும் எளிதாய்த் தெரிகின்ற ஓர் அடையாளம் என்பதால் இது கடவுள் நம்மை நினைவுகூர்கிறார் என்பதை நமக்கு நினைப்பூட்டுவதாகவும் இருக்கிறது. வெள்ளப்பெருக்கால் இனி உலகை அழிப்பதில்லை என்பது கடவுள் தரும் வாக்குறுதி (தொநூ 9:11). "கொல்பவரும் நானே, உயிரளிப்பவரும் நானே! காயப்படுத்துபவரும் நானே! குணமாக்குபவரும் நானே! (இச 32:39) என்று சொல்லும் இறைவன் தம்மை வாழ்வின் காரணியாக மட்டும் இங்கே காட்டுகின்றார். கடவுள்

நம் வாழ்வின் காரணியாக இருப்பதால் நாம் சாவின் காரணிகளுக்குத் துணை போகமல், அவரால் நினைவுகூரப்படும் உடன்படிக்கையின் பங்காளிகளாக வாழ்வது அவசியம்.

***2. நிலைநிற்கச்செய்யும் உடன்படிக்கை:*** (கலா 4:21-31)

...நீங்களும் ஈசாக்கைப்போல வாக்குறுதியின்படி பிறந்த பிள்ளைகள் (கலா 4:28).

தூய பவுலடியார் ஆகாரை அடிமையின் உடன்படிக்கை எனவும், சாராவை வாக்குறுதியின் உடன்படிக்கை அல்லது விடுதலையின் உடன்படிக்கை எனவும் ஒப்பிட்டுப் பார்க்கின்றார். ஆகார் அடிமைத்தனத்தின் மகனைப் பெறுகிறார் எனவும், சாராள் அருளின் வாக்குறுதியின் மகனைப் பெறுகிறார் எனவும், ஆகார் சட்டத்தையும், சாராள் அருட்கொடையையும் குறிப்பதாக எழுதுகின்றார். சாராளில் புதிய இஸ்ரயேல் இனம் தோன்றுகிறது. இஸ்மயேல் அல்ல, மாறாக, ஈசாக்கே வாக்குறுதியின் மகன் என ஈசாக்கைத் தெரிவு செய்கின்றார் கடவுள். அவ்வாறே இயேசுவும் சகோதரர் சகோதரருள் தம் மகன் தலைப்பேறானவராய் இருக்க வேண்டுமென்று (உரோ 8:29) கடவுள் அவரை முன்குறித்து வைத்தார். ஆக, பழைய உடன்படிக்கையைத் தள்ளி புதிய உடன்படிக்கை நமக்குக் கொடுக்கப்படுவதைத் தூய பவுலாரின் வார்த்தைகள் நமக்குக் காட்டுகின்றன. “நமக்கு அன்னை’ எனப் பவுல் கூறும் மேலே உள்ள எருசலேமின் உரிமைப்பேற்றினை இவ்வுடன்படிக்கை நமக்கு வாக்களிக்கிறது (கலா 4:26). உரிமைப்பேறு நம்மைத் தலைநிமிர்ந்து நிற்கச்செய்யும். “... உங்களில் கிறிஸ்து உருவாகும்வரை உங்களுக்காக மீண்டும் பேறுகால வேதனையுறுகிறேன்” எனக் கலாத்தியத் திருச்சபையினர்மீதுள்ள தம் ஏக்கத்தை தூய பவுல் வெளிப்படுத்துகிறார் (கலா 4:19). குறுகியகால, அழிவுள்ள, தற்காலிக, அடிமை வாழ்வு வாழ அல்ல. மாறாக, அழிவிலிருந்து வாழ்வுக்கும், அநீதியிலிருந்து நீதிக்கும் திரும்பும் மக்களாய் வாழவேண்டும் என்பது இவ்வுடன்படிக்கையின் நோக்கம்.

***3. நிலைவாழ்வருளும் உடன்படிக்கை :*** (லூக் 22:14-23)

“இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற எனது இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை” (லூக் 22:20).

புதியஉடன்படிக்கை என்பது திருமறையில் கூறப்படும் கடவுளின் உடன்படிக்கைகளுள் இறுதியானதும் நிறைவானதும் ஆகும். இந்த உடன்படிக்கையின் வழியாக இயேசு கிறிஸ்து மனுக்குலத்தை தந்தையாம் கடவுளோடு மீண்டும் ஒப்புரவாக்கினார். கடவுளோடு இணைக்கப்பட்ட நாம் அனைவரும் புதிய உடன்படிக்கையின் மக்கள் என்று அழைக்கப்படுகிறோம். பல பழைய ஏற்பாட்டுக் கால உடன்படிக்கைகளுக்கு புதிய வடிவம் தந்தார் ஆண்டவர் இயேசு. இது சீனாய் மலை உடன்படிக்கை

அல்ல, சீயோன் மலை உடன்படிக்கை. பழைய உடன்படிக்கைகள் மனிதர்கள், பொருட்கள் மீது செய்யப்பட்டவை. ஆனால் புதிய உடன்படிக்கை மனித உள்ளத்தில் எழுதப்பட்டது. இது இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் ஏற்பட்ட உடன்படிக்கை. இயேசு புதிய உடன்படிக்கையின் இணைப்பாளராக இருந்தார். பழைய உடன்படிக்கை ஒழிந்து புதிய உடன்படிக்கை தோன்றியது. இயேசு கிறிஸ்து தம் சீடர்களிடம், “ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்” என்றார். இதுவே, புதிய உடன்படிக்கையின் திருச்சட்டம் ஆகும். சிலுவையில் பலியான இயேசு கிறிஸ்துவே இதன் பலிப்பொருள் ஆவார். அவரது இரத்தத்தினாலேயே இந்த உடன்படிக்கை நிலைப்படுத்தப் பட்டுள்ளது. இதுவே, கடவுளின் உடனிருப்பை அடையாளப்படுத்துகிறது. எனது சதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன் (யோவா 6:54) என்னும் ஆண்டவரின் வார்த்தையில் இவ்வுடன்படிக்கை நிலைவாழ்வுக்கான உத்தரவாதத்தை நமக்குத் தருவதை அறியமுடிகிறது. புதிய உடன்படிக்கையின் வழி கடவுள் தம்முடன் இணைக்கப்பட்ட மக்களின் கடவுளாகவும், கடவுளோடு இணைந்த மக்கள் கடவுளின் உண்மையான மக்களாகவும் இருப்பது நிலையான வாழ்வின் அடையாளம்.

கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட நாம் அவரது உடன்படிக்கைக்கு உட்பட்டவர்கள். தொடக்கத்திலேயே மனுக்குலத்தோடு கடவுள் செய்த உடன்படிக்கை முற்றுப்பெறவில்லை. அது தொடர்ந்துகொண்டே இருக்கிறது. கடவுள் தம் உடன்படிக்கையை என்றும் நினைவுகூர்ந்து, நம்மைத் தம் மக்களாகும் உரிமைப்பேற்றினால் தலைநிமிரச் செய்து, நிலைவாழ்வுக்கென ஆயத்தப்படுத்துகிறார். நாம் நிலையான, நிறைவான வாழ்வுக்காக ஆயத்தப்பட இப்புதிய ஆண்டின் தொடக்கத்திலேயே இறைக் கரங்களில் நம்மைக் கொடுப்போம்.

இறையாசி நம்மில் என்றும் தங்குவதாக. ஆமென்.

பேரருள்திரு. அறிவர். **A.R. செல்லையா**
பேராயர்

**நாள் 1** **வார இறைவேண்டல்**

## ஒப்புரவு : சுமைகளை வெளியே வீசுதல்
## RECONCILIATION : THROWING THE CARGO OVERBOARD

திபா 85 திப 27:18,19,21
லூக் 18:9-14

**"புயலால் நாங்கள் மிகவும் அலைக்கழிக்கப்பட்டதால் மறுநாள் கப்பலிலுள்ள சரக்குகளை அவர்கள் கடலில் எறியத் தொடங்கினார்கள்".** (திப 27:18)

குவளையின் பயன்பாடு என்பது அதன் கலை நயத்தில் அல்ல; காலியான இடத்தில் தான் உள்ளது என்பது சொலவடையாகும் (The usefulness of the cup, is its emptiness). ஒருவர் தன்னைக் காலியாக அல்லது வெறுமையாக வைத்திருக்கும் போது தான் அவருக்குள் தன்னைப் பற்றிய அறிதலும், பிறரைக் குறித்த புரிதலும் உருவாகும். இரு வழிகளில் ஒருவர் தன்னை எப்போதும் காலியாக வைத்திருக்க முடியும்; ஒன்று, தனது வெறுமையை உணர்வதன் வாயிலாகவும், இரண்டாவது, வீணான சிந்தையை, எண்ணங்களைத் தனது மனதை அண்ட விடாமல் காத்துக் கொள்வதன் வழியாகவும் இது சாத்தியமாகிறது. ஆனால், மனிதர் வெறுமைக்குப் பதிலாகப் பொறாமையையும், உண்மைக்குப் பதிலாகப் பொய்மையையும், நன்மைக்குப் பதிலாகத் தீமையையும், ஒற்றுமைக்குப் பதிலாக வேற்றுமையையும், கூட்டாண்மைக்குப் பதிலாகப் பகைமையையும் தங்கள் மனதில் நிரப்பி அவை தரும் அழுத்தங்களால் அவதியுறுகின்றனர். பெருஞ்சுமை பயணத்திற்கு உகந்ததன்று என்பது வாழ்க்கை நமக்குக் கற்பிக்கும் பாடமாகும்.

திருத்தூதர் பணிகள் 27ஆம் அத்தியாயத்தில், கைது செய்யப்பட்ட பவுல் உடன் கைதிகளோடு உரோமைக்குக் கொண்டு செல்லப்படுகிறார். இக்கடற்பயணத்தில் வாடைக்கொண்டல் என்னும் பேய்ப்புயல் அவர்களது பயணத்தை அலைக்கழித்தது. காற்று வீசிய திசையிலேயே கப்பல் அடித்துச் செல்லப்பட்டது. இப்பேரிடரில் பயணத்தை எளிதாக்க, பேரிடரிலிருந்து தங்களைக் காக்க கப்பலிலிருந்த சரக்கு, தளவாடம் போன்ற கனமான சுமைகளைக் கடலில் எறிந்தனர். சுமைகளின் அழுத்தத்தால் பேய்க் காற்றில் கப்பல் அமிழ்ந்து போகா வண்ணம் பாதுகாக்கப்பட அவ்வாறு செய்தனர்.

வாழ்க்கைப் பயணத்தில் 2020 ஆம் ஆண்டில் நுழைந்திருக்கிறோம். நமது பயணம் இலகுவாகவும், எளிதாகவும் இருக்கவும் வீணான சுமைகளை வெளியே வீசவும் உடன் வாழ் மக்களோடும் படைப்புகளோடும் ஒப்புரவை நாடவும் ஆண்டவர் கற்றுத் தர நம் செவியையும் உள்ளத்தையும் அவருக்குத் திறந்தளிப்போம்.

***1. சுமைகளைக் களைவோம் :*** (லூக் 18:9-14)

நேர்மையற்ற நடுவரும் கைம்பெண்ணும் பற்றிய உவமையில் (லூக் 18:1-8) இடையறாத இறைவேண்டலின் பலனைக் குறித்து எடுத்துரைத்த ஆண்டவர், பரிசேயர் மற்றும் வரி தண்டுபவர் பற்றிய உவமையில் அகந்தையான, இறுமாப்புமிக்க இறைவேண்டலின் ஆபத்தைக் குறித்து எச்சரிக்கிறார்.

இறைவனிடம் வேண்ட இறையில்லம் சென்ற இருவரில் ஒருவரான பரிசேயரின் இறைவேண்டலில் தன்னைக் குறித்த பெருமிதமும் மற்றவரை இழிவாக, தாழ்வாகக் கருதும் பாங்கும் நிறைந்திருந்தன. பொதுவாக, பரிசேயர்கள் உறுதியான நம்பிக்கையுடையவர்களாகவும், கோவில் சார்ந்த செயல்பாடுகளில் நாட்டமுடையவர்களாவும் இருப்பார்கள். எடுத்துக்காட்டாக, பாவக் கழுவாய் நாளில் மட்டும் நோன்பு இருந்தால் போதுமானது. ஆனால் பக்திமான்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ள வாரத்தில் இருமுறை நோன்பிருப்பர் (லூக் 16:12). திருச்சட்டத்தின்படி, நிலத்தில் விளைவனவற்றில் பத்திலொரு பங்கு கொடுத்தாலே போதுமானது (இச 14:22). ஆனால், எல்லா வருவாயிலும் பத்திலொன்று கொடுப்பது பரிசேயரின் வழக்கம் (லூக் 18:12). இப்படித் திருச்சட்டம் வலியுறுத்துகிற வரையறைகளைக் கடந்து பக்திச் செயற்பாடுகளில் தங்களை மிகைப்படுத்தி முன்னிறுத்துவர். இயேசு கிறிஸ்து சொன்ன உவமையில் வரும் பரிசேயரும் தன்னை அப்படித்தான் காட்டிக் கொள்கிறார். இறைவேண்டலில், பரிசேயர், தன்னைக் குறித்துக் கூறியன அனைத்தும் உண்மையே. ஆனால், அவரது இறைவேண்டலின் சாரமும் சிந்தையும் தவறான நோக்கை எடுத்தியம்புகிறது. பரிசேயர் ஏறெடுத்த இறைவேண்டலில், "கடவுளே உமக்கு நன்றி" என்பதைத் தவிர எவ்வித முறையிடுதலோ, இறைஞ்சுதலோ இல்லை. ஆனால், தன்னைக் குறித்த சுய வாழ்த்தும், சுயநீதியும், தற்பெருமையும் மற்றவரைத் தாழ்வாக எண்ணுகிற அகந்தையான சிந்தையும் பிறர் மீதான குற்றச்சாட்டுகளும் மிகுந்திருந்தன (லூக் 18:11-12).

சுயநீதி, தற்பெருமை, அகந்தை, கயமை, போன்றவை தாம், மனித வாழ்வை அமிழ்த்தும் பெருஞ்சுமையான தீய எண்ணங்கள். இத்தகைய எதிர்மறையான உணர்வுகள் தாம், பிறரைக் குறைவாக, தீண்டத்தகாதவராகக் காண காரணிகளாயிருக்கின்றன.

ஆனால், வரி தண்டுபவர் (ஆயக்காரர்) அவர் ஆற்றிய பணியினிமித்தம் தீண்டத்தகாதவராகவும், விரும்பத்தகாதவராகவும் மக்களுக்கு எதிரான துரோகச் செயல்புரிகின்றவராகவும், கருதப்பட்டார். இந்த உவமையில் வரும் வரி தண்டுபவர், இறையில்லத்தில் தன் இயலாமையை உணர்ந்தார். தன்னை வெறுமையாக, காலியாக வைத்துக் கொண்டார். வானத்திற்கு நேராகக் கண்களை ஏறெடுத்து கைகளை உயர்த்தி இறைவேண்டல் செய்வது யூதச் சமயத்திலிருந்த நடைமுறையாகும். ஆனால் இவரோ வானத்தை அண்ணாந்து பார்க்கத் துணியாமல் தம் மார்பில் அடித்துக்கொண்டு "பாவியாகிய என்மீது இரங்கியருளும்" என்று மன்றாடினார். இதில் "மார்பில் அடித்துக் கொண்டு" என்பது இறந்த கால தொடர்வினை வாக்கியமாக (Past continuous tense) மூலமொழியில் (கிரேக்கம்) குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால், ஒருமுறை அன்று தொடர்ந்து மார்பில் அடித்துக் கொண்டேயிருந்தார் என்பது தெளிவாகிறது. அதே போன்று, "பாவியாகிய என்மீது இரங்கியருளும்" என்பதில், ஆங்கிலத் திருமறையில் 'a sinner' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் மூலமொழியில் 'the sinner' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்படியானால், பிறரோடு தன் வாழ்வை ஒப்பீடு செய்து, அந்தப் பாவிகளில் ஒருவராக அல்ல; நானே பாவி எனத் தன் நிலையையும், தன் குற்றத்தையும் உணர்ந்து அறிக்கை செய்கிறார். 'மார்பில் அடித்தல்' என்பது துயரத்தின், துக்கத்தின் அடையாளமாகும். பரிசேயர், இறைவேண்டலில் தன்னை உயர்த்துவதையும் தற்புகழ்ச்சியையும், தவிர வேறு எதையுமே கடவுளிடம் கேட்கவில்லை. ஆனால் வரி தண்டுபவரோ கடவுளின் இரக்கத்தை மட்டுமே கேட்கிறார்.

இவ்வுலகில் கடவுளிடம், நாம் ஒன்றைத் தவிர வேறு எதையுமே துணிந்து கேட்பதற்குத் தகுதியுடையவர்களோ, ஏற்புடையவர்களோ அல்லர். கடவுளின் இரக்கத்தை மட்டுமே நாம் கேட்க முடியும் என வரி தண்டுபவர் வாயிலாகக் கற்றுக் கொள்கிறோம்.

எனவே, வீணான சுமைகளான அழுத்தும் தேவையற்ற பாரங்களான, தற்பெருமை, பகைமை, பொறாமை, கயமை, ஆணவம், பிறரைத் தாழ்வாகக் கருதும் பாங்கு போன்றவற்றை வெளியே வீசிவிட்டு இப்புதிய ஆண்டில், கடவுள் நம் இதயத்தை, வாழ்வை அவரது அருளாலும், இரக்கத்தாலும் நிரப்ப நம்மை வெறுமையாக்குவது அவசியம்.

**2. ஒப்புரவை நாடுவோம் :** (திப 27:18-19, 21)

நற்செய்திப் பணியின் பொருட்டு கைது செய்யப்பட்டு பேரரசரால் விசாரிக்கப்படுவதற்கு கப்பல் பயணத்தின் வழியாக உரோமைக்குக் கொண்டு செல்லப்படும் பவுல், இப்பயணத்தில் நேரிடவிருக்கும் ஆபத்தைக் குறித்து எச்சரிக்கிறார். தொடர் பயணத்தில் "வாடைக் கொண்டல்" என்னும் பேய்க் காற்றினால் கப்பல் அலைக்கழிக்கப்பட்ட போது கப்பலிலிருந்த இருநூற்று எழுபத்தாறு (276) பேருக்கும் இனித் தப்பிப் பிழைப்போம் என்னும் எதிர்நோக்கே இல்லாமல் போய்விட்டது. இச்சூழலில், தன்னோடு இருந்தவர்களையும், தன்னைக் கைது செய்து உரோமைக்குக் கொண்டு செல்பவர்களையும், "நண்பர்களே" என்று அழைத்து பகையை வேரறுத்து ஒப்புரவை நிலைநாட்டும் நோக்கோடு உறவு பாராட்டுகின்றார் (திப 27:21). ஏனெனில், கிறிஸ்துவின் வாயிலாக கடவுளிடமிருந்து ஒப்புரவாக்கும் திருப்பணியையும், ஒப்புரவுச் செய்தியையும் பெற்றுக் கொண்டவர் திருத்தூதரான பவுல் (2கொரி 5:18,19). தன் வாழ்வின் எல்லாச் சூழல்களிலும் ஒப்புரவை மையப்படுத்தி தன் பணியையும் பயணத்தையும் அமைத்துக் கொண்டார்.

நான் என்னும் அகங்காரமும், தற்பெருமையும், தன் குற்றம் உணரா நிலையும் ஒப்புரவுக்குத் தடையாக இருக்கின்றன. பணிவும், தாழ்மையுமே ஒப்புரவுக்கு அடிப்படையாகும், அத்தகைய பணிவு பவுலிடம் தொடக்கம் முதலே இருந்து வந்தது.

பவுலின் தாழ்மையிலும் பணிவிலும் ஒரு பரிணாம வளர்ச்சியை நாம் காண முடியும். எடுத்துக்காட்டாக, தொடக்கத்தில், "திருத்தூதரான பவுல்" (Paul an apostle) (கலாத் 1:1-2) எனத் தன்னை அறிமுகம் செய்தவர், தொடர்ந்து பற்றுறுதியிலும் பணிவிடையிலும் அனுபவம் பெருகியதன் விளைவாக, "திருத்தூதர்களிடையே மிகக் கடையவன், திருத்தூதர் என அழைக்கப் பெறத் தகுதியற்றவன்" (I am the least of the apostles, unfit to be called an apostle) (1கொரி 15:9) எனத் தன்னை முன்னிறுத்துகிறார். பின்னர், இறைமக்கள் கூட்டுறவில் பெற்ற அனுபவத்தை முன்னிட்டு "இறைமக்கள் அனைவருக்குள்ளும் மிகவும் கடையவன்" (I am the very least of all saints) (தொடக்கத் திருச்சபையில் பற்றுறுதியாளர்களைப் பரிசுத்தவான்கள் என அழைக்கும் வழக்கம் இருந்தது (எபே 3:8) எனத் தனது பணிவை வெளிப்படுத்துகிறார். நிறைவாக, தமது ஆன்மிக வாழ்வின் முதிர்ச்சியின் விளைவாக, "பாவிகளுள் முதன்மையான பாவி" (I am the foremost of sinners) (1திமொ 1:15) எனத் தன்னைத் தாழ்த்துகிறார். இந்தத் தாழ்மையும், பணிவுமே எல்லாச் சூழல்களிலும் அனைவரோடும் சமாதானமாயிருக்கவும் ஒப்புரவை நாடவும் பவுலுக்கு உந்து சக்தியாயிருந்தது. இந்தத் தாழ்மையை, பவுல் இயேசு கிறிஸ்துவிடமே கற்றுக் கொண்டார் (பிலிப் 2:6-11)

இந்த உலகில் என்னை விட மிகவும் இழிவான, இரங்கத்தக்க, மோசமான நபர் வேறு எங்குமில்லை என்று கடவுளுக்கு முன்பாகத் தனது குறைவையும் மக்களுக்கு முன்பாகத் தனது பணிவையும் வெளிப்படுத்தினார், அசிசியின் ஃபிரான்சிஸ்.

புதிய ஆண்டில் நமது பயணத்தை இலகுவாக்கு எளிதாக்க, ஆகாத சிந்தைகளான வீணான சுமைகளை நமது இதயத்திலிருந்தும் வாழ்விலிருந்தும் வெளியே வீசுவோம். பணிவையும், தாழ்மையும் அணிந்து கொண்டு ஒப்புரவை நாடுவோம். அதற்கு கடவுளின் அருளும் இரக்கமும் நமக்குத் துணை செய்யட்டும்.

"பகை மறந்து போகட்டும்
மன்னிப்பே மருந்தாகட்டும்"

***இறைவேண்டல் :***

மன்னிப்பருளும் கடவுளே, எமது ஒன்றுபட்ட கிறிஸ்தவ வாழ்வைக் காயப்படுத்துகிற, கடந்த கால வலிமிகுந்த நினைவுகளிலிருந்து எம்மை விடுவித்தருளும். அன்பினால் வெறுப்பையும், கனிவினால் கோபத்தையும், நம்பிக்கையினால் ஐயத்தையும், தாழ்மையினால் பெருமையையும் தூய ஆவியார் வாயிலாக நாங்கள் மேற்கொள்ள எம்மை ஒப்புரவுக்கு நடத்தியருளும். உம் அன்பார்ந்த மைந்தரும், எங்கள் சகோதரருமாகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக மன்றாடுகிறோம் தந்தையே, ஆமென்!

திரு. B. ***சாம் ஜெபசிங்***

# உள்ளொளிபெறுதல்: கிறிஸ்துவின் ஒளியை நாடுதலும் காட்டுதலும்

## ENLIGHTENMENT: SEEKING AND SHOWING FORTH CHRIST'S LIGHT

திபா 119:105-110

திப 27:20

மாற் 4:35-41

**"அன்றொரு நாள் மாலை நேரம், இயேசு சீடர்களை நோக்கி, அக்கரைக்குச் செல்வோம் வாருங்கள் என்றார்"** (மாற்கு 4:35).

உலகளாவிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தி தொடங்கப்பெற்ற மாபெரும் இயக்கமே உலகத் திருச்சபைகளின் மன்றமாகும் (The World Council of Churches). முதலாம் உலகப் போருக்குப் பின்னர் இதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டாலும், இரண்டாம் உலகப்போரின் காரணமாக உலக திருச்சபைகளின் மன்றம் தொடங்கப் பெறுவதில் பல தடைகள் ஏற்பட்டன. இதனால் இருள் சூழ்ந்த இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் 1948 ஆம் ஆண்டு உலகத் திருச்சபைகளின் மன்றம் தோன்றியது. இந்த உலக திருச்சபைகளின் மன்றத்திற்கான இலச்சினை (logo) மிகவும் பொருள் பொதிந்த ஒன்றாகும். புயலினால் அலைவுபட்ட படகும் அதற்குப் பாய்மரம் போல் சிலுவையும் இருப்பது இந்த இலச்சினையின் சிறப்பம்சமாகும்.

இரண்டு உலகப்போர்களின் காரணமாக, மக்கள் சந்தித்த பேரிழப்புகளிலும் பெரும் துயரங்களிலும் உழன்று கொண்டிருந்த வேளையில் வரையப்பட்ட இந்த இலச்சினை அவர்களை ஆற்றுப்படுத்தும் நோக்கில் அமைந்திருந்தது சிறப்புக்குரியது. கடும்புயலில் படகு அலைக்கழிக்கப்படுவதுபோல எத்துன்பமும் துயரமும் நேர்ந்தாலும் படைப்புகளின் ஆண்டவரும் வரலாற்றின் நடுநாயகமுமான இயேசு கிறிஸ்து எல்லாச் சூழல்களிலும் தம் மக்களோடு இருக்கிறார் என்னும் பேருண்மையை உணர்த்துகிறது இந்த இலச்சினை. இது மாற்கு4:35-41 வரையுள்ள திருமறைப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டுள்ளது.

மாற்கு 4:35-41 மற்றும் திப 27:20 ஆகிய திருமறைப்பகுதிகள் கடற்பயணத்தில் ஏற்பட்ட பேரிடரையும் பேரச்சத்தையும் பேரிருளையும் குறித்து எடுத்துரைக்கின்றன. இருப்பினும் அக்கடற்பயணங்களில்

ஆண்டவர் எவ்வாறு தம் மக்களோடு இருந்து அவர்களைக் காக்கிறார், அவர்களை மீட்கிறார் என்பதோடு மட்டுமல்லாமல் இறையாற்றல் வெளிப்பட்டதன் வாயிலாக அவர்கள் பெற்ற உள்ளொளியையும், தொடர்பயணத்தில் கிறிஸ்துவாகிய ஒளியை அவர்கள் நாடவேண்டும் அதைப் பிறர்க்குக் காட்ட வேண்டும் என்பதையும் எடுத்துரைக்கின்றன.

2020 ஆம் ஆண்டில் நாம் தொடர்ந்து முன்னேறிச் செல்வதற்கு கிறிஸ்துவின் ஒளி நம் வழிக்குத் துணையாக இருக்கவும் அவ்வொளியை நாம் உள்வாங்கி பிறர்க்கு ஒளி வீசவும் திருமறை வாயிலாகக் கடவுள் நமக்குக் கற்றுத்தருவனவற்றைத் தியானிப்போமாக.

### *1. தடைகளைத் தாண்டுவோம் :*

அன்றொருநாள் மாலைநேரம் அக்கரைக்குச் செல்வோம் வாருங்கள் என்றார் (மாற்கு 4:35).

மாலை நேரம் என்பது பகலும் இரவும், இருளும் ஒளியும் சந்தித்துக் கொள்ளும் நேரம். இருளும் இரவும் இயல்பாகவே அச்சத்தைத் தரக்கூடியன. அத்தகைய அந்தி சாய்ந்த, இருள் சூழ்ந்த மாலை நேரத்தில் இயேசு கிறிஸ்து தம் சீடர்களோடு படகில் பயணம் செய்கிறார். அக்கரையை நோக்கிச் செல்லும் பயணத்தில் சீடர்குழாமுக்குப் பெரும் தடையாக இருந்தவை இருள், கடல், புயல் ஆகியனவாகும். ஆனால் இப்பயணத்தில் ஏற்பட்ட தடைகளின் போது (4:37) அனைத்தின் மீதும் அதிகாரம் படைத்த இயேசு கிறிஸ்து தங்களோடிருக்கிறார் என்னும் ஞானமும் உள்ளொளியும் அவர்கட்கு இல்லாமற்போயிற்று. புறத்திலிருந்த இருளைக் காட்டிலும் உள்ளத்திலிருந்த இருள்தான் (அச்சம், நம்பிக்கையின்மை) அவர்களுக்கு பெரும் தடையாயிருந்தது. இத்தகைய எல்லாத் தடைகளையும் தாண்டி பயணிக்க இயேசுகிறிஸ்து அழைக்கிறார்.

இயேசு கிறிஸ்து சீடர்களோடு மேற்கொண்ட பயணத்திற்கு இணையான ஒரு கப்பற்பயணத்தை திப 27 ஆம் அத்தியாயத்தில் படிக்கின்றோம். பேய்க்காற்றினால் கப்பல் கட்டுப்பாட்டை இழந்தது. பல நாட்களாக கதிரவனோ, விண்மீன்களோ தென்படவில்லை. ஆகவே திருத்தூதர் பவுலுடன் பயணித்தவர்களுக்கு இனி தப்பிப் பிழைப்போம் என்னும் எதிர்நோக்கே இல்லாமற்போயிற்று (திப 27:20). பல நாட்களாக பகலிலும், இரவிலும் இருள் சூழ்ந்திருந்தாலும், அனைவரும் நம்பிக்கை இழந்திருந்தாலும் பவுலின் உள்ளத்தில் மட்டும் கிறிஸ்துவின் ஒளி சுடர் விட்டுக் கொண்டிருந்தது. அதுவே அனைவருக்கும் நம்பிக்கையையும் எதிர்நோக்கையும் அளித்தது (திப 27:21-25).

இருளைச் சபிக்காமல் மெழுகுவர்த்தியை ஏற்றுவது புத்திசாலித்தனம் என்பது பழமொழி. இரவு என்பது ஒரு நாளின் பாதி. இருளும் உலகின் ஓர் அங்கம் என்பது நியதி. ஒளியின் முதன்மையையும் இன்றியமையாமையையும் உணரவே இருளையும் இருள் போன்ற அனுபவங்களையும் இறைவன் நம் வாழ்வில் அனுமதிக்கிறார். அத்தகைய தருணங்களில் கிறிஸ்துவின் ஒளியை நாடவும், இருளிலிருப்போர்க்கு அவரது ஒளியை காட்டவும் நாம் எதிர்பார்க்கப்படுகின்றோம்.

மாற்கு 4:35 இல் அக்கரைக்குச் செல்வோம் வாருங்கள் என்று இயேசு கிறிஸ்துவின் அழைப்பு பல உண்மைகளை நமக்கு எடுத்தியம்புகிறது. இயேசுகிறிஸ்து சீடர்களோடு, யூதர்கள் பெரும்பான்மையாகக் குடியிருக்கும் கலிலேயாக் கடலின் மேற்குப் பகுதியிலிருந்து புறவினத்தார் வாழும் கலிலேயாக் கடலின் கிழக்குப் பகுதிக்குச் செல்கிறார். மாற்கு நற்செய்தி. நூலில் யூதருக்கும் புறவினத்தாருக்கும் நடுவே ஒரு குறியீட்டுத் தடையாக (Symbolic barrier) கலிலேயாக் கடல் காட்டப்படுகிறது. இந்தத் தடைகளை உடைக்கும் வண்ணமாக கலிலேயாக் கடலைத் தாண்டி புறவினத்தார் வாழும் அக்கரைக்குச் செல்ல ஆண்டவர் அழைக்கின்றார்.

தொடக்கத் திருச்சபையில், படகு திருச்சபைக்கு உருவகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்து சீடர்களோடு கலிலேயாக் கடலைக் கடந்து புறவினத்தார் வாழ்ந்த அக்கரைக்குச் சென்றது என்பது திருச்சபை, தன் திருப்பணியில் சமய, சமூக எல்லைகளைக் கடந்து பயணிக்க வேண்டும் என்பதை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

புதிய ஆண்டு தடைகளைத் தாண்டி முன்னேறிச் செல்வதற்கு கடவுள் நமக்கு வழங்கியிருக்கின்ற ஒரு வாய்ப்பு. கடல், இருள், புயல் போன்ற தடைகள் எதிர்வந்தாலும் அனைத்தின் மீதும் அதிகாரமும் ஆற்றலும் படைத்த ஆண்டவர் நம்மோடிருக்கிறார் என்னும் உள்ளுணர்வோடு கிறிஸ்துவின் ஒளிபெற்று, ஒளி வீசி தடைகளைத் தாண்டி பயணிக்க கடவுள் நம்மை அழைக்கிறார்

### *2. நடைகளை உறுதிப்படுத்துவோம் :*

சார்லி டியூக் அப்பொல்லோ 16 என்ற விண்கலத்தின் வழியாக நிலவில் கால் பதித்த இளம் விண்வெளி வீரர் என்னும் பெருமையைப் பெற்றவராவார். இவர் நிலவிலிருந்து திரும்பிய சில ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில், இந்த இளம் வயதில் மூன்று நாள் நிலவில் நடந்ததைப் பெரும் பேறாகக் கருதுகிறீர்களா? என்று கேட்டனர்.

நிலவில் மூன்று நாள்கள் நடந்து திரிந்ததைக் காட்டிலும் ஆண்டவரோடு நடப்பதையே நான் பெரும் பேறாகக் கருதுகிறேன். மூன்று நாள்கள் நிலவில் நடப்பதற்கு அமெரிக்க அரசு எனக்காக நானூறு மில்லியன் டாலர் செலவிட்டிருக்கிறது. ஆனால் ஆண்டவரோடு நடப்பதென்பது இலவசமாகவும் என்றென்றைக்குமானதாகவும் நமக்கு வழங்கப்பட்டிருக்கின்ற ஓர் ஆசி எனப் பதிலளித்தார் சார்லி டியூக்.

வாழ்க்கைப் பயணத்தில் நமது நடைகள் உறுதிப்பட வேண்டுமானால் நம்முடைய நம்பிக்கை உறுதிப்பட வேண்டும். நம் நம்பிக்கை உறுதிப்பட நாம் கிறிஸ்துவோடு நடக்கப் பழக வேண்டும். ஆண்டவர் இயேசு கிறிஸ்து சீடர்களோடு மேற்கொண்ட கடற்பயணத்தில் ஆண்டவர் அவர்களோடு இருந்த பின்னரும் அவர்களது நம்பிக்கையும் நடையும் உறுதிப்படவில்லை. ஏனெனில், உடனிருக்கும் ஆண்டவரை உறங்குபவராகக் கண்டார்கள். மாற்கு நற்செய்தியாசிரியர் கிறிஸ்துவைத் தூங்குபவராகக் குறிப்பிடுவதின் வழியாக இரு உண்மைகளை நாம் புரிந்துகொள்ளலாம். ஒன்று எத்தகைய எதிர்மறையான சூழல்களிலும் அமைதியோடும், தொந்தரவின்றியும் நித்திரை செய்வதென்பது, நம்மைத் தாங்குகிற, காக்கிற கடவுளின் மீது நாம் முழுமையான நம்பிக்கையை வைத்திருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது. இரண்டாவது, கிறிஸ்துவைத் தூங்குபவராகக் காண்பதென்பது அவரது உடனிருப்பை உணராததன் வெளிப்பாடாகும்.

நமது நடைகள் தளர்ந்து போவதற்கு அச்சமும் ஐயமும் மிக முக்கியக் காரணங்களாகும். அப்படிப்பட்ட தருணங்களில் ஆண்டவரிடம் உதவிக்காக மன்றாட வேண்டுமே ஒழிய சீடர்களைப் போல ஆண்டவரை குறைகூறுதல் கூடாது (மாற்கு 4:38). நமது வாழ்வில் நேரிடும் நெருக்கடிகளில் ஆண்டவரின் உடனிருப்பை உணராமல் சீடர்களைப் போலவே ஆண்டவரைக் குறைகூறுகிறோம். ஆனால் ஆண்டவரோ பேரிடரில், நமது நம்பிக்கையோடு கூடிய பொறுமையையும், அவரில் நாம் நிலைத்திருப்பதையும் கவனித்துக் கொண்டே இருக்கிறார். அவற்றினின்று நமது நடைகள் தளரும்போது நம்மைத் திடப்படுத்துகின்றார். மாற்கு 4:35-41 வரையுள்ள பகுதியில் சீடர்களிடம் இருவகையான அச்ச உணர்வுகளைக் காண்கிறோம். ஒன்று, சாவைக் குறித்த அச்சம் (மாற்கு.4:38) மற்றொன்று, கிறிஸ்து காற்றையும் கடலையும் அடக்கிய பின்னர், அவர்களிடமிருந்த ஆண்டவர் மீதான பேரச்சம் (மாற்கு 4:41). இந்த இரண்டாம் வகையான அச்சத்தின் வெளிப்பாடுதான், காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே! இவர் யாரோ? என்ற கேள்வி. இந்தக் கேள்விதான், சீடர்கள், வாழ்வின், பணியின் ஒவ்வொரு நேரத்திலும் இயேசுகிறிஸ்து யார் என்பதை அறிந்து அறிக்கையிடுவதற்குக் காரணமாயிற்று.

ஆண்டவர் மீது நாம் கொள்ளும் அச்சமே உள்ளொளி பெறுவதற்கான தொடக்கம். கிறிஸ்துவின் வாயிலாக நமக்கு அருளப்பட்ட உள்ளொளி அணைந்து போகாமல் காத்துக் கொள்ள வேண்டும். நாம் சாலையிலோ, தெருவிலோ நடை தடுமாறாமல் சமநிலையுடன் நடந்து செல்வதற்கு கண்களின் ஒளி எவ்வளவு முக்கியமோ, வாழ்க்கைப் பயணத்தில் நம் நடைகள் உறுதிப்பட கிறிஸ்துவின் ஒளி அவசியம்.

மேரி ஆன் பேக்கர் என்பவர் அமெரிக்காவைச் சார்ந்த பெண்மணியாவார். இளம் வயதிலேயே கடும் துன்பங்களையும் துயரங்களையும் எதிர்கொண்டவர். காசநோயினால் தன் பெற்றோரை இழந்து தன் சகோதரனோடும், சகோதரியோடும் சிகாகோவில் வாழ்ந்து வந்தார். மேரி ஆன் பேக்கரின் சகோதரனும் சில நாட்களில் காசநோயால் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டார். மேரி ஆன் பேக்கரும் அவரது சகோதரியும் தங்களால் முயன்ற அளவு பணம் சேர்த்து தங்கள் சகோதரனை மருத்துவ சிகிச்சைக்காக புளோரிடா அனுப்பி வைத்தனர். ஆனால் சில வாரங்களில் அவரும் மரித்துப் போனார். புளோரிடா சென்று மருத்துவமனையிலிருந்து தங்கள் சகோதரனுடைய உடலை வாங்கி நல்லடக்கம் செய்யவோ அல்லது உடலை சிகாகோ கொண்டுவரவோ போதிய பணமில்லை. கண்ணீர் விட்டுக்கதறுவதைத் தவிர அவர்கட்கு வேறு வழி தெரியவில்லை.

இந்தத் துயரமான அனுபவத்தை மேரி ஆன் பேக்கர் எழுதியிருக்கிறார், "எனது இழப்பில், நான் நம்பிக்கையற்றவர்களைப் போலத் துக்கித்து அழவில்லை, எனது சிறுவயது முதலே கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு அவருக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்திருக்கிறேன் என்றாலும் எங்கள் வாழ்வில் கடவுள் அனுமதித்த ஆதரவற்ற, நிர்க்கதியான நிலையில் அவருக்கு எதிரான மனநிலை கொண்டவளாக மாறிவிட்டேன். கடவுளுக்கு என் மீது கரிசனை இல்லை, அவர் என்னைப் பராமரிக்கத் தவறிவிட்டார் என்று கடவுளை குறை கூறத் தொடங்கி விட்டேன். ஆனால், கடவுள் எல்லா இழப்புகளிலும், இன்னல்களிலும் என்னோடிருக்கிறார், இருந்திருக்கிறார் என்பதைப் பின்னர் புரிந்து கொண்டேன். அவரே என் வாழ்க்கைப் பயணத்தில் கடும் புயலை அடக்கி என்னை நம்பிக்கையில் பலப்படுத்தினார்" எனப் பதிவு செய்துள்ளார். இந்தத் தன் அனுபவத்தையே "Master, the Tempest is Raging" என்ற ஆங்கிலப் பாடலாக எழுதியுள்ளார். நமது கிறிஸ்தவப் பாமாலையில் "ராயரே, புயல் வீசுதே" என்ற 427 ஆம் ஞானப்பாடலாக இடம்பெற்றுள்ளது.

தடைகளைத் தாண்டி, நடைகளை உறுதிப்படுத்தி அக்கரையை நோக்கிப் பயணிப்பதற்கு கிறிஸ்துவின் ஒளி எப்போதும் நம்முள் ஒளிர்ந்து கொண்டே இருக்கட்டும். அவரது வாக்கே நம் காலடிக்கு விளக்கும் நம்

பாதைக்கு ஒளியுமாகட்டும். அவ்வொளி பிறருக்குக் காரிருளில் பேரொளியாகத் திகழட்டும்.

***இறைவேண்டல் :***

இறைவா, உமது வாக்கு எங்கள் காலடிக்கு ஒளிரும் விளக்காய் இருக்கின்றது. நீர் மட்டும் எங்கள் வாழ்வில் இல்லையென்றால் நாங்கள் தொலைந்து போனவர்களாயும், திசையைத் தவறவிட்ட பறவையைப் போலவும் மாறிவிடுகின்றோம். உமது பாதையில் நடக்க, உமது வாக்கின் வழியாக நாங்கள் உள்ளொளி பெறச் செய்யும். எங்கள் திருச்சபைகள் உமது வழிகாட்டுதலையும், உமது ஆறுதலையும், உமது மாற்றுருவாக்கும் உடனிருப்பையும் நாடுவனவாகுக. பிறர் உமது ஒளியையும் அருளையும் கண்டடைய நாங்கள் இடையூறாய் இருப்பதை ஒப்புக்கொள்ளும் நேர்மையை எங்களுக்குத் தந்தருளும். அனைவரோடும் உமது ஒளியைப் பகிர உமதருளை எங்கள்மீது பொழிந்தருளும். உலகத்திற்கு ஒளியாய்த் திகழ்வதற்கு தம்முடைய சீடர்களாய் எங்களை அழைக்கிற உம்முடைய மகனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக மன்றாடுகிறோம் தந்தையே, ஆமென்!

திரு. B. ***சாம் ஜெபசிங்***

# நம்பிக்கையே பவுலின் அறிவுரை

**HOPE : PAUL'S MESSAGE**

திப 27:22,34
திபா 27 மத் 11:28-30

**" இப்போதும் நீங்கள் மன உறுதியுடன் இருக்குமாறு உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன்"** (திப 27:22).

இருவர் படகில் மீன் பிடிப்பதற்காக கடலில் பயணம் மேற்கொண்டனர். அப்போது எதிர் காற்று பலமாக வீசத்தொடங்கியது. ஒருவர் உடன் வருபவரிடம் இன்று மோசமான நாள் என்றார். மற்றொருவர் எதிர்காற்றுடன் படகைச் செலுத்துவது சவால், ஆனால் நம்மால் படகை கடலுக்குள் நிச்சயம் செலுத்த முடியும் என்றார். இது நம்பிக்கையின் வார்த்தை, நேர்மறைக் கூற்று. தூய பவுலார் கப்பல் பயணத்தில் புயல் காற்றால் நிலைகுலைந்து உடன் பயணித்தவர்களின் நம்பிக்கை குன்றிய நிலையில் அவர் கூறும் வார்த்தை இறைநம்பிக்கையின் வெளிப்பாடு ஆகும்.

### *1. துணிவோடிருங்கள் :*

யானையின் பலம் தும்பிக்கையிலே மனிதனின் பலம் நம்பிக்கையிலே என்பது முதுமொழி. வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வும் நம்பிக்கையால் தான் நிகழ்கிறது. வாழ்வில் நம்பிக்கையில்லையேல் வாழவே முடியாது. வாழத் துணிகின்ற ஒவ்வொரு மனிதரும் நம்பிக்கை என்ற நங்கூரத்தில்தான் நிலைத்து நிற்கிறார். நம்பிக்கையுடைய காலம் மனிதருக்கு நிச்சயமான காலம். நம்பிக்கையற்ற காலம் மனிதருக்கு நிச்சயமற்ற காலம் ஆகும். நம்பிக்கையற்ற தன்மை வாழ்க்கையை ஒன்றுமில்லாமைக்கு இழுத்துச் செல்கிறது. விரக்தியின் விளிம்பில் தன்னை அழித்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளுகிறது. இறைநம்பிக்கையும் தன்னம்பிக்கையும் சேரும்போது முழு நம்பிக்கையாகிவிடுகிறது. தூய பவுலார் கடலில் பேய்ப் புயல் சீற்றத்தின் நடுவே கரைசேருவோமா என அஞ்சி கலங்கியவர்களிடம் கூறும் வார்த்தை மன உறுதியுடன் இருக்குமாறு உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன் (திப 27:22) என்றார். மனித வாழ்வில் நம்பிக்கையென்னும் ஆயுதம் துணிவோடு கரைசேர உதவுகின்றது.

இறை மக்களாகிய நாம் எல்லாரும் நம்பிக்கையின் மக்கள். இதற்கு அடிப்படை விசுவாசம் என்னும் ஆயுதமே. பவுலார் பேதுருவுக்கு எழுதிய மடலில் இறந்த இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்து நமக்கு

புதுப்பிறப்பு அளித்துள்ளார். இவ்வாறு குன்றா எதிர்நோக்குடன் நாம் வாழ்கிறோம் (1 பேதுரு 1:3). நமக்கு நிலை வாழ்வைப் பற்றிய நம்பிக்கை இருக்கிறது (தீத் 1:3). நம்முடைய நம்பிக்கை நாம் கடவுளால் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்ற உறுதியை அடிப்படையாகக் கொண்டது. நம்முடைய முயற்சியை அடிப்படையாகக் கொண்டதன்று. எதிர்நோக்கு இல்லாத சமூகமாக வாழ்ந்த நாம் கிறிஸ்துவால் புது நம்பிக்கை பெற்றிருக்கிறோம் (எபே 2:12,13). இறை நம்பிக்கை கொண்டவர் எவ்வாறு வாழ்வு பெற்றார் என்பதற்கு தூய பவுலார் ஆபிரகாமின் வாழ்வைச் சான்றாக காட்டுகிறார் (உரோ 4:18).

இத்தகைய இறை நம்பிக்கையின் பின்புலத்தை வாழ்வில் சுமந்தவர், நம்பிக்கை குன்றி மடிந்துவிடுவோம் என்பவர்களுக்கு மன உறுதியுடன் துணிவோடிருங்கள் என்று நம்பிக்கையை விதைக்கின்றார்.

### 2. இறைநம்பிக்கையோடிருங்கள் :

இவ்வுலகில் சிலர் பணம் மீது நம்பிக்கை வைத்திருக்கிறோம், சிலர் பதவி மீது நம்பிக்கை வைத்திருக்கிறோம், சிலர் உடைமைகள், உறவுகள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறோம். பவுலாரின் கப்பல் பயணத்தில் நூற்றுவர் தலைவர் பவுல் கூறியவற்றை நம்பாமல் கப்பல் தலைவரும் கப்பலோட்டுநரும் கூறியதை நம்பினார் (திப 27:11). புயலின் சீற்றத்தை தாங்க முடியாமல் சுமைகளை கடலில் வீசினர். நம்பிக்கை குன்றியிருந்த நிலையில் பவுலார் அனைவரையும் உணவருந்த கூறி நம்பிக்கையூட்டினார் (திப 27:34). பவுலாரின் வார்த்தை இறைநம்பிக்கையில் வெளிப்படும் வார்த்தை. இளைய குமாரன் தன் நண்பர்கள், செல்வம், ஆஸ்திகள் மீது நம்பிக்கை வைத்தான். சூழல்கள் மாறிவிட்ட வேளையில் நம்பிக்கை இழந்து பரிதவித்து நின்றான். இறைநம்பிக்கையின் வெளிப்பாடு மனிதர் மீது நம்பிக்கை வைப்பதை விட ஆண்டவரிடம் அடைக்கலம் புகுவதே நலம் (திபா 118:9). நாம் எதன் மீது நம் நம்பிக்கையை வைத்திருக்கிறோம்? இறை நம்பிக்கையோடு பயணிப்போம், நம்பிக்கையில் தளராது நடை பயில்வோம். வாழ்வின் சூழல்கள் தடம் மாறலாம், மாறாத ஆண்டவர் அருகில் உண்டு அவர் கரத்தைப் பற்றி நடை பயில்வோம், துணிவோடு செல்வோம்.

### இறைவேண்டல் :

இரக்கமுள்ள கடவுளே,

தொலைந்து போன, சோர்வடைந்து போன நாங்கள் உம்மிடம் திரும்புகிறோம். நம்பிக்கை என்னும் அருள்கொடையை எங்களுக்கு ஊட்டியருளும். உம் திருமைந்தர் துன்புறும் நாளின் முந்தைய மாலைப் பொழுதில் வேண்டிக்கொண்டது போல எங்கள் திருச்சபைகள் ஒன்றிப்புக்காக நல்லெதிர் நோக்கோடு போராட உதவியருளும். உம்மோடும் தூய ஆவியாரோடும் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை செய்கிற இயேசு கிறிஸ்துவின் வழியாக மன்றாடுகிறோம் தந்தையே, ஆமென்.

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**

**நாள் 4** **வார இறைவேண்டல்**

# அஞ்சாதிருங்கள், பற்றுறுதிகொள்ளுங்கள்

**DO NOT BE AFRAID, BELIEVE**

திபா 56

திப 27:23-26
லூக் 12:22-34

**"சிறு மந்தையாகிய நீங்கள் அஞ்ச வேண்டாம்; உங்கள் தந்தை உங்களைத் தம் ஆட்சிக்கு உட்படுத்தத் திருவுளம் கொண்டுள்ளார்".** (லூக் 12:32)

நமது இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் ஒரு முக்கியக் காரணி தேவையற்ற அச்சம் ஆகும். அச்சம் என்பது வலி அல்லது ஆபத்தின் அச்சுறுத்தல் போன்ற தூண்டலின் வழியாக உருவெடுக்கிறது. அச்சத்தின் விளைவாக மனக்கலக்கம் ஏற்படுகிறது. வாழ்க்கைப் பயணத்தில் உருவாகும் மோசமான சூழல் அல்லது தொடர்ந்து வரும் எதிர்மறையான சூழல் போன்ற வருங்கால நிகழ்வுகளை எண்ணியே அச்சம் ஏற்படுகிறது. "அச்சம் என்பது அறியாமையின் நீட்டிக்கப்பட்டட நிழல்" (Fear is the lengthened shadow of ignorance) என Arnold Glasow என்பவரும், "உலகில் உள்ள எந்த ஒன்றை விடவும் அச்சம் பெரும்பான்மையான மக்களைத் தோற்கடிக்கிறது" (Fear defeats more people than any other one thing in the world) என Ralph Waldo Emerson என்பவரும் குறிப்பிடுகின்றனர். இப்புதிய ஆண்டில் நம்மைத் தோற்கடிக்க முயலும் அச்சத்தை மேற்கொண்டு பற்றுறுதியுடன் இறையரசின் மக்களாய் வாழ திருமறை தரும் ஆலோசனைகளைத் தியானிப்போம்.

### *1. அஞ்சாதிருங்கள்* : (திப 27:23-26)

"பவுலே, அஞ்சாதீர்!...உம்மோடுகூடக் கப்பலிலுள்ள அனைவரையும் கடவுள் உம் பொருட்டுக் காப்பாற்றப் போகிறார்"என்று கூறினார். ஆகவே நண்பர்களே! மன உறுதியுடனிருங்கள். நான் கடவுளிடம் நம்பிக்கை கொண்டிருக்கிறேன். அவர் என்னிடம் சொன்னவாறே நடக்கும்" (திப 27:24,25)

தூய பவுலைக் கைதியாக ரோம் நகருக்குக் கொண்டு செல்லும் கப்பற் பயணத்தின்போது உருவான பேய்க்காற்றினால் கப்பல் உடையும் சூழல் ஏற்பட்டபோது, உடன் பயணித்த கைதிகள், அரசு அதிகாரிகள் அனைவரையும் சாவின் அச்சம் ஆட்கொண்டது. இந்நிலையில் தூய

பவுல் இறைத் தூதர் தன்னிடம் கூறிய நம்பிக்கையின் வார்த்தைகளை அங்கு பகிர்ந்து கொண்டு, நம்பிக்கையை உருவாக்கினார். மன உறுதியுடனிருக்க ஆலோசனை கூறி, தான் நம்பும் கடவுளை முன்னிலைப்படுத்தினார். பவுலின் வார்த்தைகள் மக்களின் அச்சத்தையும், விரக்தியையும் அகற்றி புத்துணர்வைக் கொடுத்தது. அச்சத்தை எதிர்கொள்ளும் வழி ஆண்டவரில் நாம் கொள்ளும் பற்றுறுதி மட்டுமே. அச்சுறுத்தும் கடல் போன்ற, பொங்கியெழும் அலை போன்ற, சீறிவீசும் பெருங்காற்று போன்ற பிரச்சனைகளையும், சவால்களையும் கண்டு அஞ்ச வேண்டிய தேவையில்லை. நமது நம்பிக்கை இவற்றின்மீது அல்ல அதிகாரமுடைய ஆண்டவர்மீது இருக்க வேண்டும். “கப்பலுக்கு இழப்பு வந்தாலும் எவருடைய உயிருக்கும் எந்தக் கேடும் வராது” என்பது ஆண்டவரிடமிருந்து தூய பவுல் பெற்றுக்கொண்ட உத்தரவாதமுள்ள வார்த்தை. கப்பல்மீது நம்பிக்கை வைக்காமல் ஆண்டவரிடம் பற்றுறுதி கொள்வது தேவையற்ற அச்சத்தைத் தோற்கடித்து வெற்றியுள்ள வாழ்வு வாழ உதவிசெய்யும். அச்சம் நம்பிக்கையின் முதல் எதிரி. அது நம் நம்பிக்கையைத் தடுத்து நிறுத்தும் தடை. ஆண்டவரிடம் கொள்ளும் பற்றுறுதி என்னும் நங்கூரத்தோடு நம் வாழ்க்கைக் கப்பல் கட்டப்பட்டிருக்கும்போது அச்சம் ஒருபோதும் நம்மைத் தோற்கடிக்க முடியாது. அச்சத்திலிருந்து நம்பிக்கைக்கு கடந்து செல்வோம். பிற தேவையற்ற அச்சங்களைத் தவிர்த்து ஆண்டவரிடம் அச்சமுள்ளவர்களாய்ப் பற்றுறுதியோடு வாழ்வுப் பயணத்தில் முன்னேறுவோம்.

## *2. அருளரசை நாடுங்கள்* : (லூக் 12:22-34)

“நீங்கள் அவருடைய ஆட்சியை நாடுங்கள்; அப்பொழுது இவை உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்...சிறு மந்தையாகிய நீங்கள் அஞ்ச வேண்டாம்; உங்கள் தந்தை உங்களைத் தம் ஆட்சிக்கு உட்படுத்தத் திருவுளம் கொண்டுள்ளார்” (லூக் 12:31,32).

வாழ்வில் உருவெடுக்கும் தேவையற்ற கவலைகள் தேவையற்ற அச்ச உணர்வுகளை ஏற்படுத்தும். கவலைப்படுவது ஒரு பாவமாகும், இது இயேசு கிறிஸ்துயினின்று மீது உள்ள பார்வை நம்மை விலக்கிவிடும். இது மற்றவர்களிடம் நாம் காட்ட வேண்டிய இயேசு கிறிஸ்துவின் தாராள குணத்தையும், அன்பையும் நம்மிடமிருந்து பிரித்து விடும். அடுத்த நாளுக்கான உணவு, உடை போன்ற தேவைகளைக் குறித்த கவலைகள் வருங்காலத்தைக் குறித்த அச்சத்தை உருவாக்கும். காட்டில் வளரும் புல் பூண்டுகள், பூக்கள், வானத்தில் சிறகடித்துப் பறக்கும் பறவைகள் ஆகிய

இவைகள் அடுத்த நாளுக்குரிய கவலையின்றி மகிழ்ச்சியாக வாழ்கின்றன. அவைகளுக்குரிய அனைத்தையும் நல்ல ஆயராம் கடவுள் குறைவின்றி வழங்குகின்றார். அதுபோல நமக்கும் அனைத்தையும் குறைவின்றித் தருவார். இறையரசை அடைய நாட்டம் கொண்டு அதன் நீதியை வாழ்வாக்கிக் கொண்டால் உலக வாழ்வுக்குத் தேவையான அனைத்தையும் கூட வழங்குவார் என்பது இறைவார்த்தை தரும் உத்தரவாதம். “எங்கள் அனுதின உணவை இன்று அளித்தருளும்” என்று அந்தந்த நாளுக்குரியதைக் கேட்பதுபோல ஒவ்வொரு நாளும், நமது தேவைகளுக்கு நாம் கடவுளை நம்பி இருக்க வேண்டும். தந்தையாம் இறைவனின் பராமரிப்பில் நம்பிக்கை கொண்டோருக்கு, அவரது அரசில் இடம் உண்டு.

வாழும் இறைவனை நம் வாழ்வின் மையமாக்குவோம். இன்றைய பிரச்சனைகள் என்ற அலைகள் நம்மை அடித்துச்சென்று, விரக்தி, அச்சம் என்ற பாறைகளில் நாம் மோதாமல் இருக்க அருளை வேண்டுவோம். அனைத்திலும், அனைத்திற்கும் மேலாகவும் ஆண்டவரைத் தேடும் வரம் வேண்டுவோம். கடவுள் தம்மை நம்பும் அனைவரையும் தம் அரசுக்கு உட்படுத்திப் பாதுகாப்பார். எனவே, எதற்கும் அஞ்சாமல் இறைவனில் பற்றுறுதி கொண்டு வாழ்வோம்.

***இறைவேண்டல்*** :

அனைத்து ஆற்றலுமுள்ள இறைவா,

எங்கள் தனிப்பட்ட துன்பம், வேதனையோடு வெளிப்படையாக அழுவதற்கு நடத்துகிறது. நோய், கவலை அல்லது அன்பானவர்களின் இறப்புகளில் அச்சத்துடன் குறுகிப் போகிறோம். உம்மில் உறுதியான நம்பிக்கையோடிருக்க எங்களுக்குக் கற்றுத்தாரும். நாங்கள் சார்ந்திருக்கும் திருச்சபைகள் நீர் வழங்கும் உமது பராமரிப்பின் அடையாளங்களாய் இருப்பதாக. உமது வார்த்தைக்குச் செவிகொடுக்கவும், ஒருவருக்கொருவர் பணிவிடை செய்யவும் எங்களுக்குக் கற்றுத்தந்த உம் மைந்தரின் சீடர்களாய் எங்களை மாற்றும். உம் திருப்பெயரிலும், தூய ஆவியாரின் ஆற்றலிலும் மனஉறுதியுடன் இவைகளைக் கேட்கிறோம், ஆமென்.

அருள்திரு. R. **சாம் பிரின்ஸ்**

## ஆற்றல்: பயணத்திற்காக உணவைப் பகிர்தல்

**STRENGTH :BREAKING BREAD FOR THE JOURNEY**

திப 27:33-36
திபா 77 மாற் 6:30-44

**"..பவுல் அப்பத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி கூறி, அதைப் பிட்டு அனைவர் முன்னிலையிலும் உண்ணத் தொடங்கினார்".** (திப 27:35)

வாழ்க்கை ஒரு முடிவில்லாப் பயணம், இப்பயணத்தில் குழந்தைப் பருவம், வாலிபப்பருவம், குடும்பம், முதுமையென்று பல பருவங்களை தன்னகத்தே கொண்டு பயணிக்கின்றோம். இப்பயணத்தில் சுகம், சோகம், இன்பம், துன்பம், ஏமாற்றம், தடுமாற்றம், ஏற்றம், இறக்கம், இனிமை, தனிமை போன்ற பல அனுபவங்களைச் சுமந்து செல்கின்றோம். ஜாண் பனியன் எழுதிய "பரதேசியின் மோட்ச பிரயாணம்" நூலில் ஒரு மனிதன் மண்ணகத்திலிருந்து விண்ணகம் செல்லும் பயணம் விவரிக்கப்பட்டுள்ளது. இப்பயணத்தில் தடுமாற்றங்கள், வெற்றிகள், தோல்விகளை எதிர்கொள்கின்றான். ஆனால் நோக்கத்தில் தெளிவு உடையவனாய் இருந்தபடியால் இறுதியில் இலக்கை அடைகின்றான்.

தூய பவுலாரின் கப்பல் பயணத்தில் புயலின் கோரத்தாண்டவம், அவரின் பயணப் போக்கை மாற்றி விடுகின்றது. நம்பிக்கைக்குரியவைகள் நாசமடைந்தன. இயற்கை சீற்றத்தால் சிறகு ஒடிந்த பறவை போன்று பயணத்தில் அனைவரும் பரிதவித்து நிற்கின்றனர். இறையாற்றலால் பவுலார் எல்லோரையும் திடப்படுத்தி உணவருந்தி ஆற்றல் பெற அழைக்கின்றார். துன்பச் சூழல் நடுவிலும் இறைவனுக்கு நன்றி கூறி உணவைப் பகிர்ந்தார். அவரின் இறைப்பற்று உடன் பயணிப்பவர்கள் மனதிலும் பார்வையிலும் தெளிவையும், தைரியத்தையும் அளித்தது.

### *1. ஆற்றல் தரும் உணவு :*

உணவு மனிதனுக்கு இன்றியமையாத ஒன்று. மனிதனின் அடிப்படைத்தேவைகளில் உணவு, தண்ணீர் முக்கிய இடம் பிடிக்கின்றன. உணவின்றி வாழ்வது கடினம். இயற்கைச் சீற்றங்கள், கொடிய பஞ்சம், வறட்சி காலங்களில் உணவிற்காக மனிதர்கள் பரிதவித்து நிற்பதைக் காணமுடியும்.

தூய பவுலாரின் கப்பல் பயணத்தில் தேவையான உணவுப் பொருட்கள் கைவசம் வைத்திருந்தனர், இருப்பினும் உணவை உண்டு மகிழ புயலின் சீற்றம் அனுமதிக்கவில்லை. இச்சூழலில் பவுலார் இறைப்பற்றோடு அனைவரையும் திடப்படுத்தி நீங்கள் உணவருந்தும்படி கேட்டுக்கொள்கிறேன் (திப 27:34) என்று கூறி, துன்பச் சூழல் நடுவிலும் இறைவனுக்கு நன்றி செலுத்தி உணவைப் பகிர்ந்து (திப 27:35) அனைவரையும் இறைநம்பிக்கையில் வளர, வாழத் தூண்டுகிறார். அவர் நன்றி கூறி ஏறெடுக்கும் விண்ணப்பம் கிறிஸ்துவின் பாடுகளை நினைவு கூரும் விண்ணப்பம். துன்பத்தின் நடுவில் அவருடைய சரீரமும் இரத்தமும் நமக்கு ஆற்றல் தருகிறதென்ற உண்மையை விவரித்து அனைவரையும் ஆற்றல்படுத்தினார்.

கடவுளின் மேலான ஒரு பண்பு மானுடரை ஆற்றல்படுத்துவதாகும். எகிப்தில் பாஸ்காவை ஆசரித்த மக்கள் கச்சையைக் கட்டி, கால்களில் பாதரட்சையைத் தொடுத்து கையில் தடியைப் பிடித்து தீவிரமாக பாஸ்காவைப் புசித்தனர் (விப 12:11). விடுதலைப் பயணத்திற்கான ஆயத்தத்தையும் பெலப்படுத்துதலையும் அது அறிவுறுத்தியது. எலியாவுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து ஆண்டவர் ஆற்றல்படுத்தினார் (1 அர 19:7-9). தூய பவுலார் எனக்கு வலுவூட்டும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நன்றி செலுத்துகின்றேன் என்றார் (1 திமொ 1:12).

ஜோனத்தான் கோபோர்த் (1859-1936) என்னும் அருட்பணியாளர் தெற்கு சீனாவிலுள்ள ஒரு சிற்றாலயத்தில் மூன்று நாள்கள் தொடர்ச்சியாக செய்தி கொடுத்தார். அவருடைய செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு சீனர், மூன்று நாட்களும் இயேசு கிறிஸ்துவைப் பற்றின ஒரே ஒரு செய்தியைத் தான் நீங்கள் குறிப்பிட்டீர்கள் அது ஏன்? எனக் கேட்டார். அருட்பணியாளர் அவரிடம் நேற்று நீங்கள் என்ன சாப்பிட்டீர்கள்? என்று கேட்டதற்கு அந்த சீனர் சாதம் சாப்பிட்டேன் என்றார். இன்று என்ன சாப்பிட்டீர்கள்? நாளை என்ன சாப்பிடுவீர்கள்? என திரும்பவும் அருட்பணியாளர் கேட்டார். அதற்கு அந்தச் சீனர் சாதம் தான் என்றார். ஏன் தினமும் சாதம் சாப்பிடுகிறீர்கள் என கேட்க, சாதம் எனக்கு ஆற்றலையும் ஆரோக்கியத்தையும் தருகிறது என்றார் அந்தச் சீனர். அருட்பணியாளர் அந்தச் சீனரிடம் வாழ்வு தரும் உணவு இயேசுவே (யோவா 6:35). அவரது சதையை உண்டு, அவரது இரத்தத்தைக் குடிப்பவர் நிலை வாழ்வைக் கொண்டுள்ளார் (யோவா 6:54). ஆதலால், இயேசுவே நமக்கு முதன்மையானவர் என்றார்.

தீமைகளும் போராட்டங்களும் நிறைந்த உலகில் வலுவுடன் வாழ்வதற்கு இறையாற்றல் நமக்கு இன்றியமையாதது. நம்பிக்கையுடன் திருவிருந்தில் பங்கு பெற்று இறைஆற்றலைப் பெற்றுக்கொள்வோம். உலகின் தீமைகளை அகற்ற பெலன் கிடைக்கும்.

## *2. பகிர்வால் நிறைவைத் தரும் உணவு :*

உணவு இன்று அனைவருக்கும் கிடைப்பதில்லை, ஏன்? இக்கேள்விக்கு ஒரே பதில் பகிர்ந்துகொள்ள மனமற்ற நிலை. நாம் வாழும் காலம் விவசாய நிலங்கள் விளை நிலங்களாக மாறிக்கொண்டே வருகின்றன. உணவை பதுக்குதல், விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்காத நிலை, லாப நோக்கில் உணவுப் பொருட்களை வியாபாரம் செய்யும் நிலைகள் நிறைந்த உலகில் வாழுகின்றோம். பவுலாரின் கப்பல் பயணத்தில் இருப்பதை பகிர்ந்துண்டனர், இறைமகன் இயேசுவின் போதனையை கேட்க வந்த மக்கள் பசியால் பரிதவித்த போது இருப்பதைக் கொண்டு வாருங்கள் என்று ஐந்து அப்பங்கள் இரண்டு மீன்களை கொண்டு நிறைவு தருகின்றார். அனைவரின் பசியைப் போக்க பகிர்வு காரணமாகின்றது. இன்றைய உலகில் பகிர்வின் பண்பு மறைந்து வருகின்றது, பொருளாசையின் மனது பெருகி வருகின்றது. நிலம் விளைந்த போது புசித்து, குடித்து, பூரிப்பாயிருப்பேன் (லூக் 12:19) என்ற மனநிலை பகிர்வுக்கு தடையாகிவிடுகிறது. தொடக்ககால திருச்சபையின் பகிர்வு, பகிர்தலுக்கு நற்சான்று (திப 2:44,45).

எதை நீ கொடுக்கிறாயோ அது உன்னுடையது; எதை நீ வைத்துக்கொள்கிறாயோ அது மற்றவ்ருடையது என்கிறார் குல்தீப் என்னும் அறிஞர். புதிய ஆண்டில் இறையாற்றலால் உடன் வாழ்பவரை திடப்படுத்தி, பகிர்வால் நிறைவை காண முன்வருவோம்.

## *இறைவேண்டல் :*

அன்பின் இறைவா,

உம் திருமைந்தராம் இயேசு கிறிஸ்து தாம் துன்புறும் நாளின் முந்தைய மாலைப் பொழுதில் தம் நண்பர்களோடு அப்பத்தைப் பிட்டு, கிண்ணத்தை பகிர்ந்தார். நாங்கள் நெருக்கமான கூட்டுறவுவில் ஒருமித்து வளரச் செய்வீராக. தூய பவுலையும் தொடக்கக் கிறிஸ்தவர்களையும் பின்பற்றி மனதுருக்கம், கூட்டொருமைப்பாடு, நல்லிணக்கம் என்னும் இணைப்புப் பாலங்களைக் கட்ட உமது ஆற்றலைத் தாரும். நாங்கள் வாழ தம் வாழ்வைத் தந்த உம் திருமைந்தரின் பெயரில் தூய ஆவியாரின் ஆற்றலோடு மன்றாடுகிறோம், ஆமென்!

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**

நாள் 6 வார இறைவேண்டல்

## விருந்தோம்பல்: அளவற்ற அன்பைக் காட்டுங்கள்

**HOSPITALITY : SHOW UNUSUAL KINDNESS**

திபா 46 திப 28:1-2,7 லூக் 14:12-24

**"...அவர் எங்களை வரவேற்று மூன்று நாள் அன்புடன் விருந்தோம்பினார்".**

(திப 28:7)

விருந்தோம்பல் தமிழ் மக்களின் தலைசிறந்த பண்பாடு. அனைத்து மக்களிடமும் இருக்க வேண்டிய நற்பண்புகளில் ஒன்று. திருமறையிலும் விருந்தோம்பல் என்பது இறைமக்களிடம் இருக்க வேண்டிய முக்கியமான பண்புகளில் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது. அறிமுகமில்லாதோரையும் தண்ணீர் அல்லது உணவு கொடுத்து உபசரிப்பது விருந்தோம்பலின் தனித்துவம் ஆகும். அன்னியரை வரவேற்று விருந்தோம்ப மறக்கக்கூடாது எனவும், இவ்வாறு விருந்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமலே வான தூதர்களை மகிழ்ச்சிப்படுத்தியதுண்டு என ஆபிரகாமும், லோத்துவும் இறைத்தூதர்களை வரவேற்று விருந்தோம்பியதைச் சுட்டிக்காட்டியும் எபிரேயர் திருமுகத்தின் ஆசிரியர் அறிவுறுத்துகிறார் (எபி 13:2). விருந்தோம்பலில் கருத்தாய் இருக்க வேண்டுமென தூய பவுல் உரோமைத் திருச்சபைக்கு ஆலோசனை கூறுகிறார் (உரோ 12:13).

கடலில் உருவான பேய்க்காற்றினால் கப்பல் உடைபட்டு அலைக்கழிக்கப்பட்ட தூய பவுலும், உடன் பயணிகளும் கிடைத்த பலகைகளையும், கப்பலின் உடைந்த துண்டுகளையும் பற்றிக்கொண்டு தப்பிக் கரை சேர்ந்தனர். இவர்கள் கரை சேர்ந்த தீவின் பெயர் மால்தா. அத்தீவினருக்கு அன்னியரான பவுலையும், அவரது உடன் பயணிகளையும் அத்தீவின் மக்கள் வெறுப்புடன் பார்த்து தங்களை விட்டு விலக்கவில்லை. மாறாக, மனித நேயத்துடன் நடந்துகொண்டனர். மிகவும் குளிரானபடியால் தீமூட்டி குளிர்காயச் செய்தனர் (திப 28:2). மூன்று நாள்கள் மிகவும் அன்புடன் வரவேற்று விருந்தோம்பினர் (திப 28:7). அத்தீவின் மக்கள் காட்டிய மனித நேயம் என்பது வழக்கத்திற்கு மாறான அன்பைச் சுட்டிக் காட்டுகிறது (unusual kindness). விருந்தோம்பலில் வெளிப்பட வேண்டிய இந்த தனித்துவம் நமது அனுதின வாழ்வில் வெளிப்படுமெனில் அது நம்மை இறையரசுக்குரியோராய் மாற்றும்.

### *1. ஏழையரோடு விருந்து :* (லூக் 14:12-24)

"...நீர் விருந்து அளிக்கும்போது ஏழைகளையும், உடல் ஊனமுற்றோரையும், கால் ஊனமுற்றோரையும், பார்வையற்றோரையும் அழையும்" (லூக் 14:13).

விருந்தினருக்கும், விருந்தளிப்போருக்குமான ஆலோசனையை லூக்கா நற்செய்தியாளர் எடுத்துரைக்கிறார் (லூக் 14:714). ஓர் ஓய்வுநாள் அன்று பரிசேயர்த் தலைவர் ஒருவர் இயேசுவை விருந்துக்கு அழைக்கின்றார். அவருடைய அழைப்பினை ஏற்று அவருடைய வீட்டிற்குச் செல்லும் இயேசு, அங்கு நடக்கின்ற குளறுபடிகளைப் பார்த்துவிட்டு, ஒருவர் கொடுக்கின்ற விருந்து எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு விளக்கம் தருகின்றார். விருந்து தொடர்பாக இயேசு தருகின்ற விளக்கத்திலிருந்து, ஒருவர் அளிக்கின்ற விருந்து எப்படி இருக்கக்கூடாது என்பதும், விருந்து எப்படி இருக்கவேண்டும் என்பதும் தெளிவாகிறது. இங்கு விருந்தளிப்பவருக்கான ஆலோசனையை நாம் கடைப்பிடிக்க அழைக்கப்படுகிறோம். விருந்தளிப்பவர்கள், பொதுவாக, உறவினர்கள், செல்வந்தர்கள், சமுதாயத்தில் உயர்நிலைகளில் இருப்பவர்கள் போன்றவர்களைத்தான் விருந்துக்கு அழைப்பர். ஆனால், இத்திருமறைப்பகுதியில் ஆண்டவர் இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டும் விருந்தினர்கள் ஏழைகள், உடல் ஊனமுற்றோர், கால் ஊனமுற்றோர், பார்வையற்றோர் போன்றவர்கள். நம்மோடு இருக்கக்கூடிய வறியவர்கள், ஏழைகள், கைவிடப்பட்டோர் ஆகியோர்க்கு நாம் அளிக்கின்ற விருந்துதான் உண்மையான விருந்து. அத்தகைய விருந்தினை அளிக்கின்றவர்கள் இறையரசின் பேற்றினை பெறுவார்கள்.

இன்றைய காலக்கட்டத்தில், பலர் விருந்தளிக்கின்றபோது, சமூகத்தில் தாங்கள் எவ்வளவு பெரிய ஆள் என்பதை நிரூபிப்பதற்காக விருந்துகொடுப்பதைக் காணமுடிகின்றது. விருந்தை தங்களுடைய கௌரவத்தை (அந்தஸ்தை) நிரூபிப்பதற்கான ஒரு கருவியாக நினைப்பதை அறியமுடிகின்றது. இயேசுவை விருந்துக்கு அழைத்த பரிசேயரும், இயேசுவை விருந்துக்கு அழைத்தால் தன்னுடைய பெயர் ஓங்கும் என்ற எண்ணத்தில்தான் அழைத்திருக்கக்கூடும். இத்தகைய உள்நோக்கத்தோடு அளிக்கப்படும் விருந்து உண்மையான விருந்தாக இருக்காது என்பதுதான் இயேசு கிறிஸ்து சொல்லும் செய்தியாக இருக்கின்றது. பெருமைக்காகக் கொடுப்பது நல்ல விருந்தாக இருக்காது. கைம்மாறு கருதி கொடுப்பது நல்ல விருந்தாக இருக்காது. பெருமைக்காக விருந்து கொடுப்போர், கைம்மாறு கருதி விருந்து கொடுப்பவர் என

இருவகையினரையும் நாம் வாழும் சமுதாயத்தில் காணமுடியும். திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருக்கின்ற வறியவர்கள், ஏழைகள், கைவிடப்பட்டோர் ஆகியோர்க்குக் கொடுக்கப்படும் விருந்துதான் உண்மையான விருந்து என்பது இயேசு கிறிஸ்து கற்றுத்தரும் உண்மை. எவரும் இரண்டு இடங்களில் கைம்மாறு பெற முடியாது. மனிதர்களிடம் கைம்மாறு எதிர்பார்க்கின்றவர் கடவுளிடமிருந்து கைம்மாறு பெறமுடியாது. மாறாக மனிதர்களிடமிருந்து கைம்மாறு எதிர்பாராதவர் கடவுளிடமிருந்து கைம்மாறு பெறுவார்கள். மனிதர்கள் தரும் கைம்மாற்றை விட, கடவுள் தரும் கைம்மாறு தான் மிகவும் உயர்ந்தது. எனவே, இயேசு கிறிஸ்துவின் இத்தகைய போதனையை உள்வாங்கியவர்களாய் நாம் அளிக்கின்ற விருந்துகளில் எளியவர்க்கும் வறியவர்க்கும் முதன்மையான இடம் கொடுப்போம்.

## *2. இறையரசின் விருந்து :* (லூக் 14:15-24)

"...இறையாட்சி விருந்தில் பங்கு பெறுவோர் பேறுபெற்றோர்..." (லூக் 14:15)

லூக்கா நற்செய்தி பதினான்காம் அதிகாரம் முழுவதும் விருந்து குறித்த இயேசுவின் போதனையாக இருக்கின்றது. வறியோர்க்கு விருந்துகொடுத்தால் நேர்மையாளர்கள் உயிர்த்தெழும்போது கைம்மாறு கிடைக்கும் என்று இயேசு கிறிஸ்து கூறினார். இதைக் கேட்டு அங்கு நடந்த விருந்தில் கலந்துகொண்ட ஒருவர் இயேசுவிடம், "இறையாட்சி விருந்தில் பங்குபெறுவோர் பேறுபெற்றோர்" என்கிறார். அப்பொழுதுதான் இயேசு பெரிய விருந்து உவமையைச் சொல்கின்றார். யூதர்கள் இறையாட்சியை ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றோரோடு உண்ணக்கூடிய ஒரு பெரிய விருந்தோடு ஒப்பிட்டுப் பார்த்து வந்தார்கள் (லூக் 13: 28; எசா 25:6). யூதர்கள் தாங்கள் எப்படி இருந்தாலும் இறையாட்சி விருந்தில் கலந்துகொள்ளலாம்; அதில் எப்படியும் பங்குபெற்றுவிடலாம் என்ற தவறான எண்ணத்தோடும் இருந்தார்கள். இத்தகைய பின்னணியில்தான் இயேசு கிறிஸ்து இறையரசைப் பெரிய விருந்துக்கு ஒப்பிடுகின்றார்.

இயேசு சொல்லும் உவமையில், விருந்து ஏற்பாடு செய்தவர் கொடுத்த அழைப்பினை உதாசீனப்படுத்தி ஒருவர் வயல் வாங்கியிருப்பதாகவும், இன்னொருவர் ஏர்மாடுகள் வாங்கியிருப்பதாகவும், மற்றொருவர் இப்போதுதான் திருமணமாகியிருப்பதாகவும் சாக்குப்போக்குச் சொல்லி விருந்துக்கு வராமல் இருக்கின்றார்கள். இவர்கள் அனைவரையும் யூதர்களோடு ஒப்பிடலாம். ஏனென்றால், யூதர்கள் கடவுள் கொடுத்த அழைப்பினை அசட்டைபண்ணி, இறைவனுக்கு முதன்மையான இடம் கொடுக்காமல் வாழ்ந்துவந்தார்கள். இதனால் தண்டிக்கப்பட்டார்கள்.

இறையாட்சி விருந்தில் பங்குபெற அழைப்புப் பெற்ற யூதர்கள் அவ்விருந்தில் கலந்துகொள்ள விருப்பமில்லாமல் தட்டிக்கழித்ததால், புறவினத்தார்க்கும் ஏழைகள் மற்றும் வறியவர்களுக்கும் விருந்தில் கலந்துகொள்ள அழைப்புக் கொடுக்கப்பட்டது. இவர்கள் தங்களுடைய தகுதியின்மையை உணர்ந்தபோதும், விருந்தில் கலந்துகொண்டு கடவுளின் ஆசியைப் பெற்றுக்கொண்டார்கள். திருமறை நமக்குக் கற்றுத் தருவதும் இதுதான். சிறுமைப்பட்டவாரான ஒருவரிடம் நாம் காட்டும் பரிவு கிறிஸ்துவிடம் அன்பு காட்டுவதற்குச் சமம் (மத் 25:40). ஆற்றல் குறைந்தவர்களிடமும், திக்கற்றவர்களிடமும் காட்டும் அன்பும், பரிவும் ஏழையருக்கென தனி இடம் வைத்திருக்கும் கடவுளின் உள்ளத்தோடு நம் உள்ளத்தை ஒன்றுபடுத்துவதாகும். எனவே, வேற்றுக் கலாச்சார, சமய, இன, மொழி சார்ந்த, ஆதரவற்ற மற்றும் வறிய பிற மக்களை வரவேற்பதும், விருந்தோம்புவதும் கிறிஸ்துவிடம் அன்பு காட்டுவதற்கும், கடவுள் அன்பு காட்டுவதுபோல அன்புகாட்டுவதற்கும் சமம். இதைத்தான் மால்தா தீவினர் பவுலுக்கும், அவரது உடன் பயணிக்களுக்கும் செய்தனர் (திப 28:2-7). இந்த ஆண்டிலும், விருந்தோம்பல் என்ற நல்ல பண்பினைக் கடைப்பிடித்து, இறையரசின் பங்காளிகளாவோம்.

### *இறைவேண்டல் :*

ஆதரவற்றோர், கைம்பெண் மற்றும் அன்னியரின் இறைவா,

விருந்தோம்பல் என்னும் ஆழமான உணர்வை எங்கள் இதயங்களில் நாட்டும். நீர் கேட்கும்போது உமக்கு உணவூட்டவும், உடை அணிவிக்கவும், உம்மை சந்திக்கவும் எங்கள் கண்களையும், இதயங்களையும் திறந்தருளும். பசிக்கும், தாகத்துக்கும், தனிமைப்படுத்துதலுக்கும் முடிவுகட்டும் பணியிலும், அனைத்து மக்களையும் வரவேற்பதில் உள்ள தடைகளை மேற்கொள்ளும் பணியிலும் எங்கள் திருச்சபைகள் பங்கெடுக்கட்டும். மிகவும் சிறியோரான எங்கள் சகோதர சகோதரிகளுள் பிரசன்னமாயிருக்கும் உம் திருமைந்தர் இயேசுகிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.

அருள்திரு. R. ***சாம் பிரின்ஸ்***

நாள் 7 வார இறைவேண்டல்

## மாற்றம்: நமது இதயத்திலும் சிந்தையிலும் மாற்றம் பெறுதல்

**CONVERSION : CHANGING OUR HEARTS AND MINDS**

திபா 119:137-144 திப 28:3-6
மத் 18:1-6

**"...நீங்கள் மனந்திரும்பிச் சிறு பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள்..."** (மத் 18:3).

மாற்றம் என்பதற்கு "Change" என்னும் ஆங்கில வார்த்தை அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. Conversion என்னும் வேறொரு வார்த்தை ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு நிலைமாற்றம் அடைவதைக் குறிக்க பயன்படுத்தப்படுகிறது. ஒரு சமயத்திலிருந்து மற்றொரு சமயத்திற்கு மாறுவது சமய மாற்றம் (Religious Conversion) என அழைக்கப்படுகிறது. மனித வாழ்வில் மதமாற்றத்தைவிட மனமாற்றமே முக்கியமானது. மாறாக, இந்த மாற்றம் ஒரு நிலையிலிருந்து வேறொரு நிலைக்கு, அதாவது, அழிவுக்குரிய பாவ நிலையிலிருந்து அழிவில்லாத வாழ்வின் நிலைக்கு மாறும் conversion ஆகும். இறைவன் எதிர்பார்க்கும் மாற்றம் நம்மில் மலர இன்றைய திருமறைப் பகுதிகள் காட்டும் வழிகளைச் சிந்திப்போம்.

### *1. மனத்தில் மாற்றம் பெறுதல் :* (திப 28:36)

"...தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொண்டார்கள்..." (திப 28:6)

இத்திருமறைப் பகுதியில் தூய பவுல் சந்தித்த மால்தா தீவின் மக்கள் பெற்ற மனமாற்றம் விளக்கப்படுள்ளது. தூய பவுலும், உடன் பயணிகளும் உரோமை நகருக்குச் சென்ற கப்பல் பயணத்தின்போது கப்பல் உடைந்து கடலில் விழுந்தபோது, கடினப்பட்டு தப்பி மால்தா என்னும் தீவில் கரை சேர்ந்தனர். அத்தீவின் மக்கள் அவர்களை வரவேற்று, அவர்களிடம் அன்பு காட்டி, அவர்களை உபசரித்தனர். மழை பெய்து குளிராயிருந்தபடியால் தீ மூட்டி குளிர்காய உதவினர். பவுல் சில சுள்ளிகளைப் பொறுக்கி தீயில் போட்டபோது அதிலிருந்த ஒரு விரியன் பாம்பு சூட்டின் மிகுதியால் வெளியே வந்து பவுலின் கையைக் கவ்விக் கொண்டது. இதைக்கண்டதும், பவுல் செய்த தவறுக்காக கடவுள் அவரைத் தண்டித்தார்; கடலிலிருந்து தப்பித்து வந்தாலும் நீதியின் கடவுள் அவரை வாழவிடவில்லை என அத்தீவின் மக்கள் சொல்லிக்கொண்டனர். ஆனால்,

பவுல் அந்தப் பாம்பை தீயில் உதறினார். அவருக்கு எந்தக் கேடும் வரவில்லை. பாம்பு தீயில் விழுந்த பின்பும் அவருக்கு வீக்கம் ஏற்படப் போகிறது அல்லது திடீரென இறந்து விழப்போகிறார் என எதிர்பார்த்தனர். நீண்ட நேரமாகியும் பவுலுக்கு எத்தீங்கும் ஏற்படவில்லை. இதைக் கண்ட அந்த மக்கள் தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொண்டனர். பவுல் ஒரு கொலைகாரர் என அவரைக் குறித்து தாங்கள் எண்ணியது மிகவும் தவறானது என் உணர்ந்து அவர்கள் மனமாற்றம் அடைந்தனர். மட்டுமல்ல, பவுலை "அவர் ஒரு தெய்வம்" எனக் கூறினர்.

கடவுள் செய்யும் ஆச்சரியமூட்டும் செயல்களைக் கண்ட மக்கள் தங்கள் உள்ளத்தின் எண்ணங்களை மாற்றிக்கொண்டார்கள். இவர்களின் பழைய, பாரம்பரியமான, மூடநம்பிக்கை எண்ணங்களிலிருந்து ஒரு மாபெரும் மாற்றம் இவர்களுக்குள் உருவானது. அந்த நாள் மால்தா தீவில் நற்செய்தி சென்றடைந்து இறை நம்பிக்கை பிறந்த நாள். மால்தா தீவினர் இன்றும் ஒவ்வொரு ஆண்டும் பெப்ருவரி 10ஆம் நாளில் அத்தீவில் கிறிஸ்தவ நற்செய்தி வந்து, கிறிஸ்தவ நம்பிக்கை பிறந்ததை நினைவுகூர்ந்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, "தூய பவுலின் கப்பற்சேத விழா" (the Feast of the Shipwreck of St Paul) கொண்டாடுகின்றனர். இறைமக்களாகிய நாம் நற்செய்திக்கு சான்றாகும் வாழ்வினால் பிற மக்கள் தங்கள் இருதயத்திலும் சிந்தையிலும் மாற்றம் பெற கருவிகளாய் மாறவேண்டும்.

### ***2. மழலைகளைப் போல மாறுதல் :*** (மத் 18:16)

"...நீங்கள் மனந்திரும்பிச் சிறு பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள்..." (மத் 18:3).

விண்ணரசில் மிகப் பெரியவர் யார்? என்று சீடர்கள் கேட்ட கேள்விக்கு இயேசு கிறிஸ்து ஒரு சிறு பிள்ளையை அழைத்து அவர்கள் நடுவில் நிறுத்திக் கூறிய பதில்தான் மேற்குறிப்பிட்ட வசனம். சிறு பிள்ளையைப் போல மாற வேண்டும்; சிறு பிள்ளையைப் போலத் தம்மைத் தாழ்த்திக்கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர். இத்தகைய சிறு பிள்ளை ஒன்றை ஆண்டவர் பெயரால் ஏற்றுக்கொள்கிறவர்கள் எவரும் ஆண்டவரையே ஏற்றுக்கொள்கின்றனர் என்பதே கிறிஸ்து வழங்கும் நற்செய்தி. இறையரசின் உரிமைப்பேறு பெற சிறு பிள்ளையைப் போல மாற வேண்டும் என்ற இயேசு கிறிஸ்துவின் எதிர்பார்ப்பும், மனமாற்றத்திற்கு உந்துசக்தியாக இருக்கும் இறைவார்த்தையின் சிறப்பும் விளக்கப்பட்டுள்ளன.

உலகத்தின் கண்களுக்குப் பெரியவர் என்றால் அனைவராலும் போற்றப்பட்டு, புகழப்பட்டு, உயர்நிலையில் வைக்கப்படுகின்ற ஒருவர். ஆனால், இயேசுவின் பார்வையில் பெரியவர் அனைவரிலும் சிறியவராக மாற வேண்டும். உலகப் பார்வையில் சிறப்புமிக்கோர் பிறரிடமிருந்து பணிவிடை பெறுவார்களே தவிர பிறருக்குப் பணிவிடை செய்பவர்கள் அல்லர். இக்கருத்தையும் இயேசு புரட்டிப் போடுகின்றார். மனிதர் எப்போதுமே சிறப்பான நிலையை அடைய விரும்புகிறார்கள். ஆனால் சிறப்புநிலை எதில் அடங்கியிருக்கிறது என்பதுதான் கேள்வி. பிறருக்குத் தொண்டுசெய்வதும் பிறரைத் தமக்கு உயர்ந்தவராகக் கருதுவதுமே உண்மையான சிறப்புக்கு அடையாளம். இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் வெளிப்பட்ட மதிப்பீடுகளை அவருடைய சீடர்களும் கடைப்பிடிக்க அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் நடுவே யார் பெரியவர் என்னும் கேள்வி எழுவதே சரியல்ல என இயேசு உணர்த்துகிறார். உண்மையான சிறப்பு பிறருக்குப் பணிசெய்வதிலே அடங்கும் என்று போதித்த இயேசு அதை முழுமையாகத் தம் வாழ்வில் கடைப்பிடித்தார். அவர் தம் சீடருடைய காலடிகளைக் கழுவினார். எனவே, இயேசுவைப் பின்செல்வோருக்குத் தரப்படுகின்ற வழிமுறை இதுதான். அவ்வழியே நாம் நடந்தால் நாமும் கடவுளின் பார்வையில் சிறப்புடையோர் ஆகமுடியும்.

இயேசு கிறிஸ்து குழந்தையை ஏன் சீடர்கள் மத்தியில் வைத்தார் என்பதன் நோக்கத்தையும் நாம் அறிய முற்பட வேண்டும். அதாவது, குழந்தைகளைக் குழந்தைகளாகவே ஏற்றுக் கொள்ளுங்கள். அவர்களை உங்களைப் போல் மாற்றாதீர்கள், முடிந்த அளவு, நீங்கள் குழந்தைகளாக மாறுங்கள் என்று இயேசு மறைமுகமாகக் கூறுகிறார். சிறிய வழி இறையாட்சியின் நுழைவாயில். சிறிய விதை மிகப் பெரிய பயன். சிறிய குழந்தையைப் போல மாறுங்கள் என்பதே இறையரசிற்கான அழைப்பு. சிறிய செயல்கள் நம்மை அடையாளம் காட்டுமா? இன்றைக்கு அடையாளத்திற்காக பெரிது பெரிதாக செய்து விட்டு, இறையரசில் தங்களது பெயர் பொறிக்க வைக்க கூடிய சிறிய செயல்களை செய்ய மறுக்கின்றோம். இறுதித் தீர்ப்பு நாளில் கேட்கப்படும் கேள்விகள் என்ன?

சிறிய செயல்களைச் செய்தாயா? இத்தகைய சிறியவர்களுக்கு செய்த போது எனக்கே செய்தாய் (மத் 25:31-40). நமது பழைய, பாரம்பரியமான, ஆணவம் நிறைந்த சிந்தனைகள் மாற்றம் பெற வேண்டும். குழந்தைகளைப் போல தாழ்மையும், எளிமையும், மாசற்ற எண்ணங்களும் நம்மில் நிறைய வேண்டும். பிறரிடமிருந்து பணிவிடை பெறவேண்டும் என்ற எண்ணத்தை மாற்றி, பிறருக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு

வாழ வேண்டும் (மாற் 10:45). முழுமையான மாற்றம் பெற்று இறையரசின் மக்களாய் இவ்வுலகில் வாழ இந்த ஆண்டின் தொடக்கத்திலேயே நம்மை இறைக் கரங்களில் ஒப்படைப்போம்.

***இறைவேண்டல் :***

அனைத்து ஆற்றலும் நிறைந்த இறைவா,

நாங்கள் மனம்வருந்தும் இதயங்களோடு உம்மிடம் திரும்புகிறோம். உண்மைக்குரிய எங்கள் உண்மையான தேடலில் பிறரைக் குறித்த அநீதியான எண்ணங்களிலிருந்து எங்களைத் தூய்மையாக்கி, கூட்டுறவில் வளரத் திருச்சபைகளை வழிநடத்தும். அச்சங்களைப் போக்கவும், நாங்கள் ஒருவரையொருவரும், எங்களிடையே உள்ள அன்னியரையும் நன்றாகப் புரிந்துகொள்ளவும் எங்களுக்கு உதவி செய்யும். இவைகளை நீதியுள்ள ஒருவரேயான உம் அன்பான மைந்தர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம், ஆமென்.

அருள்திரு. T.P. **சலீம் தங்க குமார்**

நாள் 8 வார இறைவேண்டல்

## வள்ளன்மை (உதாரத்துவம்) : பெற்றுக்கொள்தலும் கொடுத்தலும்

**GENEROSITY: RECEIVING AND GIVING**

திபா 103:1-5 திப 28:8-10
மத் 10:7-8

**“...கொடையாகப் பெற்றீர்கள்; கொடையாகவே வழங்குங்கள்”** (மத் 10:8).

வள்ளல் தன்மை எனும் வள்ளன்மை அல்லது உதாரத்துவம் என்பது ஓர் தரமான பண்பு. இது ஓர் சுயநலமற்ற பெருந்தன்மைப் பண்பு. இது பணமும் பொருளும் தாண்டிச் செயல்படும் ஓர் கனிவான உள்ளத்தின் செயல்பாடு. கலீல் கிப்ரான் என்னும் கவிஞர், “வள்ளன்மை என்பது உனக்குப் பெரிதும் தேவைப்படுவதைக் கொடுப்பதன்று; மாறாக, எனக்கு பெரிதும் தேவையும், முதன்மையுமாய் இருப்பதை உனக்குக் கொடுப்பதாகும்” (Generosity is not giving me that which I need more than you do, but it is giving me that which you need more than I do – Khalil Gibran) என்றார். திப 28:8-10 வரையுள்ள திருமறைப் பகுதி கொடுப்பதையும் பெற்றுக்கொள்வதையும் குறித்துப் பேசுகிறது. ஆபத்திலிருந்து தப்பி மால்தா தீவின் கரை சேர்ந்த தூய பவுலுக்கும் உடன் பயணிகளுக்கும் விருந்தோம்பியதில் தலைமை வகித்தவர் அத்தீவின் தலைவர் புப்பிலியு என்பவர். புப்பிலியுவின் தந்தை நோய்வாய்ப்பட்டுக் கிடந்தார். பவுல் அங்குச் சென்று அவர்மேல் தம் கையை வைத்து இறைவேண்டல் செய்து அவரை நலமாக்கினார். இந்நிழ்வுக்குப்பின் அத்தீவில் நோயுற்றிருந்த பிற மக்களும் அவரிடம் வந்து குணமடைந்தனர். அவர்கள் தூய பவுலுக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும் செய்நன்றிக்கு அடையாளமாக பல கொடைகளைக் கொடுத்ததுமன்றி, அவர்கள் கப்பலேறியபோது அவர்களுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் கொடுத்தார்கள். பவுலுக்கு அத்தீவினர் அளவற்ற மனித நேயத்தைக் காட்டி விருந்தோம்பினர். கப்பற் சேதத்தில் எல்லாம் இழந்து வந்தபோது அடுத்த பயணத்திற்குத் தேவையான அனைத்தையும் கொடுத்தார்கள். பவுலும் நோயுற்றிருந்த அத்தீவின் மக்களுக்கு நலமளித்தார். இறைவன் கரங்களிலிருந்து அனைத்தையும் பெற்றுக்கொள்ளும் நாம் பொறுப்புடன் பெற்றுக்கொள்ள வேண்டும். நாம் கொடுக்கும்போது நன்றியோடு கொடுக்கவும் கற்றுக்கொள்ள

வேண்டும். இறைவன் நமக்கு வழங்கும் அனைத்தையும் பொறுப்புடன் பெற்றுக்கொண்டு, நன்றியோடு கொடுப்பது எவ்வாறு என்பதைச் சிந்திப்போம்.

### *1. பொறுப்பாண்மையோடு பெற்றுக்கொள்தல் :*

"...கொடையாகப் பெற்றீர்கள்; கொடையாகவே வழங்குங்கள்" (மத் 10:8).

பொறுப்பாண்மை என்பது கடவுள் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டதில் நம்பிக்கைக்குரியவர்களாயிருக்கத் தரப்பட்ட ஒரு வாய்ப்பு ஆகும். நாம் பெற்றுக்கொள்ளும் எதுவும் நமக்குரியதாகப் பெற்றுக்கொள்வதல்ல. மாறாக, கடவுள் தமக்குரியதை நமக்குத் தருகிறார். அதைச் சரியாக நாம் நிர்வகித்துச் செயல்பட வேண்டும். இயேசு தம் சீடர்களிடம், விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது எனப் பறைசாற்றி, நலம் குன்றியவர்களைக் குணமாக்கி, இறந்தோரை உயிர் பெற்றெழச் செய்து, தொழுநோயாளரை நலமாக்கி, பேய்களை ஓட்டும்படி அறிவுரை கூறினார். இவ்வருட்கொடைகள் கொடையாக, அதாவது, இலவசப் பரிசாகத் தரப்பட்டது என்பதைக் குறிப்பிடுகிறார். கடவுள் விரும்புகின்ற சமுதாயம், கடவுளின் மதிப்பீடுகளை அடித்தளமாகக் கொண்டு, மனிதர் ஒருவரையொருவர் எதிரிகளாகக் கருதாமல் ஒரே குடும்பத்தின் உறுப்பினராக ஏற்பதினால் உருவாகின்ற மக்கள் குடும்பம் என்னும் இறையாட்சி ஆகும். இந்தப் புதியதோர் உலகமாகிய இறையரசு மனிதர் நடுவே உருவாக உழைக்கும் பணிசெய்ய அருட்கொடைகள் இலவசமாகத் தரப்பட்டிருக்கின்றன. அதைச் சீடர்கள் பொறுப்பாண்மையுடன் பெற்றிருக்கின்றனர். திருத்தூதரான பவுலும் இப்பொறுப்பாண்மையை உணர்ந்து, நலம் குன்றியிருந்த மால்தா தீவினரைக் குணப்படுத்தினார். அத்தீவின் மக்களும் நலமான வாழ்வைப் பொறுப்பாண்மையுடன் ஏற்றுக்கொண்டனர். மகிழ்வான ஓர் இறையரசின் சமுதாயம் அங்குக் கட்டப்பட்டது.

### *2. நன்றியுணர்வோடு கொடுத்தல் :*

"என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! அவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே" (திபா 103:2).

கொடுப்பது என்பது மனித வாழ்வுக்குத் தேவையான ஓர் நல்ல பண்பு. கிறிஸ்தவர்கள் பின்பற்ற வேண்டிய கட்டாயப் பண்பு. கொடை என்பது உரிமையின் அடிப்படையில் கோருகின்ற ஒரு பரிசல்ல; மாறாக, அக்கொடையைத் தருபவர், தாமே மனமுவந்து நமக்கு அளிக்கின்ற ஒன்று. கொடுப்பதில் நான்கு வகையுண்டு: தன்னில் மிகுதியானதைக் கொடுப்பது

(லூக் 21:14); உள்ளத்திலிருந்து கொடுப்பது (சக்கேயு லூக் 19:8); உள்ளதை எல்லாம் கொடுப்பது (ஏழைக் கைம்பெண் மாற் 12:41-44); தன்னையே கொடுப்பது (இயேசு கிறிஸ்து). கொடுப்பதை அனைவரும் ஒரு பழக்கமாக்கிக்கொள்ள வேண்டும். ஏனெனில், பெற்றுக் கொள்வதைவிட கொடுத்தலே பேறுடைமை எனத் திருமைறை கூறுகிறது (திப 20:35). கொடுத்தலை, ஒரு மரம் தன்னைக் கொடுப்பதற்கு ஒப்பிட்டுக் கூறும் கலீல் கிப்ரான் என்ற கவிஞர், "கொடுப்பதே மரத்தின் இயல்பு, அழகு. நிழல் கொடுக்க, கனி கொடுக்க ஒரு மரம் மறுத்தால், அதன் இயல்பு மாறிவிடும்; அது இறந்துவிடும்" என்றார். கொடுக்கத்தவறினால் நம்மில் இருப்பதும் இழக்கநேரிடும் என்பது இக்கூற்று தரும் மறுமுனைச் செய்தியாகும். கொடுப்பதைக் குறித்து புனித அன்னை தெரசா அவர்கள், கூறும்போது, "Give till it hurts," அதாவது, "கொடுங்கள், உங்கள் வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் கொடுங்கள்... கொடுங்கள், உங்கள் உடலை வருத்திக் கொடுங்கள்" என்றார்.

நாம் கொடுப்பது பெருந்தன்மையுடன், கடவுளுக்கு நன்றிசொல்லிக் கொடுக்க வேண்டும். காரணம், நாம் பெற்றவை அனைத்தும் கடவுளிடமிருந்து இலவசமாகப் பெற்றவை. திருப்பாடகர் கடவுள் தந்த நன்மைகளைப் பட்டியலிடுகிறார். அதாவது, கடவுள் குற்றங்களையெல்லாம் மன்னிக்கின்றார்; நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார். உயிரைப் படுகுழியினின்று மீட்கின்றார்; அவர் பேரன்பையும் இரக்கத்தையும் மணிமுடியாகச் சூட்டுகின்றார். வாழ்நாளை நலன்களால் நிறைவுறச் செய்கின்றார்; இளமையைக் கழுகின் இளமையெனப் புதிதாய்ப் பொலிவுறச் செய்கின்றார். எனவே, முழு உள்ளமும், உயிரும் ஆண்டவரைப் போற்ற அழைக்கின்றார் (திபா 103:1-5). மால்தா தீவினர் நன்மைகளைப் பொறுப்புடன் பெற்றுக்கொண்டார்கள். எனவே, தாங்கள் நன்மைகளைப் பெறவும், இயேசு கிறிஸ்து என்னும் நற்செய்தியைப் பெறவும் காரணமாயிருந்த பவுலுக்குப் பல கொடைகளை நன்றியுணர்வுடன் கொடுத்தார்கள் (திப 28:10).

கிறிஸ்தவ வாழ்வு முழுவதுமே கடவுள் நமக்குத் தருகின்ற கொடைக்கு நாம் நன்றிசெலுத்துகின்ற செயலாக அமைய வேண்டும். நம்மை இவ்வுலகில் மனிதராகப் படைத்து, பராமரித்துக் காக்கின்ற கடவுள் நமக்குக் கிறிஸ்தவ நம்பிக்கை என்னும் அரும் கொடையையும் அளித்துள்ளார். அதை நாம் நன்றியோடு ஏற்கிறோம். நன்றியின் வெளிப்பாடு இறைப்புகழாக மாற வேண்டும். அதே நேரத்தில், நாம் பெற்ற கொடையை நமக்கென்றே பூட்டி வைத்துக்கொள்ளாமல் அதைத் தாராள

உள்ளத்தோடு பிற மனிதரோடு பகிர்ந்து கொள்ளவேண்டும். பெற்றுக்கொள்வதைப் பகிர்ந்துகொள்வதுதான் இறைநீதி. நமது பொருளை, அன்பை, நேரத்தை, திறமையை வள்ளன்மையோடு கொடுக்க முன்வரவேண்டும். எனவேதான் இயேசு தம் சீடரை நோக்கி, கொடையாகப் பெற்றுக் கொண்டீர்கள்; கொடையாகவே வழங்குங்கள் என்றார் (மத் 10:8). பலன் எதையும் எதிர்பாராமல் நாம் கொடுக்க வேண்டும். கவிஞர் கலீல் கிப்ரான் அவர்கள் எழுதிய இறைவாக்கினர் (The Prophet) என்ற கவிதைத்தொகுப்பில், கொடுத்தல் (Giving) என்ற கவிதையில், நீ சேர்த்துவைத்துள்ள உடைமைகளிலிருந்து நீ கொடுக்கும்போது, வெகு குறைவாகவே கொடுக்கிறாய். எப்போது நீ உன்னையே கொடுக்கிறாயோ, அப்போதுதான் உண்மையிலேயே கொடுக்கிறாய் எனக் குறிப்பிடுகிறார்.

இவ்வாண்டிலும், வள்ளன்மையில் சிறந்துவிளங்க, கடவுள் நமக்குத் தரும் அருட்கொடைகளை பொறுப்புடன் பெற்றுக்கொண்டு, நன்றியுணர்வுடன் கடவுளுக்கும், உடன் மக்களுக்கும், இறைப்பணிக்கும் கொடுப்போம். இதன்வழி தொடர் நன்மைகளுக்குச் சான்றாவோம்.

***இறைவேண்டல் :***

வாழ்வருளும் இறைவா, எங்களை ஆற்றி, ஆற்றுப்படுத்தும் அருட்கொடையாம் உம் மனதுருகும் அன்புக்காய் நன்றி செலுத்துகிறோம். எங்கள் திருச்சபைகள் ஒன்றுக்கொன்று உம் அருட்கொடைகளைப் பெற்றுக்கொள்வதில் எப்போதும் திறந்தமனத்துடனிருக்க மன்றாடுகிறோம். கிறிஸ்தவ ஒற்றுமையின் வழியில் நாங்கள் இணைந்து பயணிக்கும்போது வள்ளன்மையின் ஆவியை எங்கள் அனைவருக்கும் வழங்கியருளும். உம்மோடும், தூய ஆவியாரோடும் ஆளுகை செய்யும் உம் திருமைந்தர் வழியாக வேண்டுகிறோம், ஆமென்.

அருள்திரு. T.P. **சலீம் தங்க குமார்**

05-01-2020

கிறிஸ்துப் பிறப்புக்குப் பின்வரும்
இரண்டாம் ஞாயிறு

# அனைவருக்கும் இறைவெளிப்பாடு

**GOD'S REVELATION TO ALL**

எசா 60:1-7 | எபி 1:1-12
திபா 98 | மத் 8:5-13

**பின்னர் இயேசு நூற்றுவர் தலைவரை நோக்கி: "நீர் போகலாம், நீர் நம்பிய வண்ணமே உமக்கு நிகழும்" என்றார். அந்நேரமே பையன் குணமடைந்தான்.** (மத் 8:13)

மனிதரால் அறியக்கூடாத இறைவன் தாமாக தம்மவர்களுக்கு தம்மை வெளிப்படுத்துகிறார். திருமறையின் மூலமாகவும், புனிதமாய் காக்கப்படுகின்ற பாரம்பரியங்களின் மூலமாகவும் இறைவெளிப்பாட்டை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. தெய்வீக உண்மைகள் வெளிப்படுவதால் அவை அறியப்படுகின்றன. மேலும், சிலவற்றை கடவுள் மனிதருக்குத் தாமாகவும் வெளிப்படுத்துகின்றார்.

வயது முதிர்ந்தவரான ஏலி இருந்த போது அவருக்கும், அவருடைய குடும்பத்திற்கும் தாம் செய்யப்போகிற நியாயத் தீர்ப்பைக் குறித்து சாமுவேலுக்கு சீலோவிலே தம்மை வெளிப்படுத்தினார்.

ஏலிக்கும் அவருடைய குடும்பத்திற்கும் செய்யப் போகிற நியாயத்தீர்ப்பைக் குறித்துச் சொன்னார். (1சாமு 3:12) கடவுளின் வெளிப்பாடு நம்மில் வெளிப்பட நமது வாழ்வின் மாற்றம் தேவையாகிறது. வாழ்வுச் சூழல்கள் இருளாகிறபோது மகிமையான வெளிச்சம் இறைவெளிப்பாடாகத் தோன்றுகிறது. நம் வாழ்வில் கடவுளின் செயல்களை மக்கள் காணும் போது அதினால் நாம் கடவுளை அவர்களுக்கு அறிமுகம் செய்கிறோம்.

## *1. இயேசு கிறிஸ்துவில் இறைவெளிப்பாடு* (எபி 1:1-12).

எபிரெயர் திருமுகம் யூதப்பின்னணியம் சார்ந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. இத்திருச்சபை யூத கிறிஸ்தவத் திருச்சபை. அவர்களின் கிறிஸ்தவ அர்ப்பணிப்பில் அசைவு கண்டு விசுவாசத்தில் அவர்கள் குழப்பமடைந்தனர். அத்தகையச் சூழலில் அவர்கள் விசுவாசத்தில் இயேசு கிறிஸ்துவில் கட்டப்படவும், பெலப்படவும், அவரில் நிலைத்திருக்கவும் வேண்டியதாயிற்று. நமது விசுவாச வாழ்வில் கடவுள் நம்மை வளர்த்துவதோடு நாம் பற்றுறுதியில் நிலைத்திருக்கவும் நமக்கு உதவுகிறார். அவர்கள் யூத கிறிஸ்தவர்களாயிருந்தபடியால் அவர்களுக்குள் யூத பின்னணியத்தின் தாக்கமிருந்தது. தங்கள் பெற்றோரிடம் கற்றிருந்தவைகளும், பழைய இறையியல் பழக்கங்களும் அவர்களில் காணப்பட்டன. தூதர்கள் வழிபாடுகள் நடந்ததை அவர்கள்

அறிந்திருந்திருந்தனர். சிலர் அதை நம்பி வழிபட்டனர். திருத்தூதர் அவர்களுக்குச் சொன்னவைகளைவிட மோசேயின் நியாயப்பிரமாணம் சிலருக்கும் பெரிதெனத் தோன்றியது. இவ்வாறு பற்றுறுதியில் குழப்பமடைந்திருந்தவர்களுக்கு எபிரேயர் கடித ஆக்கியோன் கூறுகையில் தேவதூதர், மோசே, ஆரோன், பிரதான ஆசாரியர் யாவரும் பழைய ஏற்பாடு கூறும் மத்தியஸ்தர்கள் மட்டும்தான் என்றார். இயேசு கிறிஸ்து கடவுளின் வெளிப்பாடாக இருப்பதால் நாம் கிறிஸ்துவில் கட்டப்படுவது அவசியம். இயேசு கிறிஸ்துவின் வாழ்வும், பணியும், போதனைகளும் கடவுளின் வெளிப்பாடுகளே. எனவே இன்றைய திருச்சபை கிறிஸ்துவின் போதனைகளில் உறுதிப்படுவதும், அவரின் பணிசெய்தலை முன்னெடுப்பதாலும் கடவுளை உலகுக்கு அறிமுகம் செய்கிறவர்களாவோம்.

## 2. நூற்றுவர் தலைவரின் நம்பிக்கையில் இறைவெளிப்பாடு (மத் 8:5-13).

இப்பகுதியில் நாம் காணும் நூற்றுக்கதிபதி யூதரல்லாதவர். மத்தேயு 8,9-ம் அதிகாரங்களில் இயேசு கிறிஸ்துவின் ஆற்றலின் வெளிப்பாடுகளை நாம் காண முடிகிறது. நூற்றுக்கதிபரின் வேலைக்காரன் சுகமடையும் நிகழ்வில் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வார்த்தையின் இறைவெளிப்பாட்டை காண்கிறோம். இயேசு நீர் நம்பினபடியே உமக்கு ஆகக்கடவது என்று சொன்னதும் வேலைக்காரன் சுகமடைந்தபோது நூற்றுக்கதிபர் தன்னை அறிந்து, உணர்ந்து கொண்டதோடு இயேசு கிறிஸ்துவின் பேராற்றலையும், உதவ முன்வரும் அவரின் தீவிரத்தையும் கண்டு இயேசுவில் விசுவாசம் கொண்டார். இயேசுகிறிஸ்துவின் ஆற்றலின் வெளிப்பாடு தொழு நோயாளியைச் சுகப்படுத்தி நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற மீண்டும் அவரைத் தகுதிப்படுத்த ஆசாரியரிடம் அனுப்பியது. நூற்றுக்கதிபரின் வேலைக்காரர் சுகமடைதலில் ஆண்டவரின் வார்த்தையின் ஆற்றலை வெளிப்படுத்தினார். மேலும் மத்தேயு நற்செய்தியாளர் இயேசுவே வாக்களிக்கப்பட்ட மேசியா என்பதோடு உலகின் பாவத்தைத் தம்மேல் சுமந்தார் என்கிறார். இயேசுவின் அருஞ்செயல்களால் அதிர்ச்சியடைந்தவர்களும், பயந்தவர்களும் பின்பு மக்களை இயேசுவிடம் அழைத்து வந்தனர். இயேசுகிறிஸ்துவின் மனதுருக்கத்தில் பாவத்தின் மேல் உள்ள அவரது இறையாற்றல் வெளிப்பட்டது.

மனிதரால் அறியக்கூடாத இறைவன் இன்றும் தம்மை வெளிப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவின் வாழ்வு, திருப்பணிகள், போதனைகள் இவைகளால் இன்றும் இறைவெளிப்பாடு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அது என்றும் தொடரும் தொடர் நிகழ்வே என அறிவோம்.

அருள்திரு. S. **எலியேசர் சுவாமிதாஸ்**

06-01-2020

திருத்தோற்றத் திருநாள்

# கிறிஸ்துவின் திருவெளிப்பாடு

## MANIFESTATION OF CHRIST

எசா 45:18-25 | திவெ 21:22-27
திபா 67 | மத் 2:1-12

**"...இஸ்ரயேலை ஆயரென ஆள்பவர் ஒருவர் உன்னிலிருந்தே தோன்றுவார்."**
(மத். 2:6)

விடுமுறை திருமறைப் பள்ளி ஒன்றில் இயக்குநர்கள் இணைந்து பிள்ளைகளை நோக்கி கேள்வி ஒன்றைத் தொடுத்தனர். உங்களுக்கு கிறிஸ்து யார்? என்பது தான் கேள்வி, ஒரு வெள்ளைத் தாளில் பதிலை எழுதித் தரும்படி கேட்டுக் கொண்டனர். பதில்களைப் பார்த்த இயக்குநர்களுக்கோ மிக்க மகிழ்ச்சி. கிறிஸ்துவை மீட்பர், உலகை ஆளுபவர். உன்னத வாழ்வு தருபவர் என்றெல்லாம் எழுதியிருந்தனர். ஆனால் ஒரு தாளில் எழுதி இருந்த வார்த்தை உள்ளத்தைக் கவர்ந்தது. இயேசு தந்தையற்ற எனக்குத் தேவையைச் சந்தித்து தந்தையாய் இருப்பவர். இவ்வரிகள் இயக்குநரின் மனதை மட்டுமல்ல இன்று நம் உள்ளத்தையும் தொடுகின்றது அல்லவா!

கிறிஸ்து இயேசு உலக மீட்பராய், உன்னத கடவுளாய், நம்மோடு வாழ்பவராய், மண்ணின் மைந்தராய் உலகில் வந்தார். அவர்பால் நம் புரிந்து கொள்ளல் எப்படி உள்ளது. இறைத் தன்மை இன்றி இயேசுவைப் புரிவதும் மனித தன்மை உணராது கிறிஸ்துவைச் சந்திப்பதும் முழுமையான புரிந்து கொள்ளுதலுக்கு வழிவகை செய்யாது. எனவே கிறிஸ்துவின் திரு வெளிப்பாட்டை உணர்ந்து சிந்திப்போம்!

### ***1. விடுவிக்கும் மீட்பர் :*** எசா 45:22

"மண்ணுலகின் அனைத்து எல்லை நாட்டோரே! திரும்பி வாருங்கள். விடுதலைப் பெறுங்கள்" விடுவிக்கப்படுவதற்கு மீட்பரை நோக்கிப் பார்க்க வேண்டும். அந்த மீட்பர் யார்? தமது ஜனங்களின் பாவங்களை நீக்குபவராகப் பிறந்த இயேசுவே மீட்பர் ஆவார் (மத் 1:21).

இயேசு அருளும் மீட்பு தனிமனித மீட்பு மட்டுமல்ல அது இல்லத்தாரையும் இணைக்கும். லூக் 19:9-ல் இயேசு சகேயுவை நோக்கி இந்த வீட்டிற்கு மீட்பு வந்தது என்று சொன்ன வார்த்தை சான்று ஆகும். இங்கே சகேயு மட்டுமல்ல அவரைச் சார்ந்தவர்களும் மீட்கப்படுகின்றனர்.

உரோ 1:6-ல் நம்பிக்கையினால் மீட்பு சுட்டிக்காட்டப்படுகிறது. கிறிஸ்துவை மீட்பராகப் புரிந்து கொண்டு நம்பி மீட்பு பெறவேண்டும். எனவே அதிக அச்சதோடும், நடுக்கத்தோடும் மீட்பு நிறைவேற. நம்மை

ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் (பிலி 2:12). கிறிஸ்துவை ஒரே மீட்பராக வெளிப்படுத்தினார் (திப 4:12) என்பதை உணர்ந்து புரிந்து கொள்ள முயற்சி செய்வோம்.

**2. *வல்லமைமிக்க அரசர் :*** (மத் 2:2)

"யூதர்களின் அரசராக பிறந்திருக்கிறவர் எங்கே?"

இயேசு கிறிஸ்து அரசராக, வல்லமைமிக்கவராக சித்தரிக்கப்பட்டுள்ளார். அவர் யூதருக்கு அரசராக பிறந்தவர் எனவேதான் ஞானிகள் அரண்மனையில் தேடினர். அதாவது வார்த்தையில் வல்லமை இருந்தது. அவரது வார்த்தையின், அருளுரையின் வல்லமையை அனுபவித்த மக்கள் ஆச்சரியப்பட்டார்கள் (மத் 7:28)-ல் இதைக் கேள்விப்பட்ட நூற்றுவர் தலைவர் மத் 8:8-ல் ஒரு வார்த்தை மட்டும் சொல்லும் அப்பொழுது என் வேலைக்காரன் நலமடைவான் என்று கூறுகிறார். மத் 8:16-ல் கிறிஸ்துவின் வார்த்தை பிணியாளிகளைச் சுகப்படுத்தியது, பிசாசுகளைத் துரத்தியது எனக் காண்கிறோம். லூக் 5:5-ல் இயேசுவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்த சீடர்கள் வலைகிழிய மீன்களைப் பிடித்தார்கள். இயேசுவின் வார்த்தையின் வல்லமையை உணர்வோம். ஆக இயேசு கிறிஸ்து வல்லமை மிக்க அரசராக காட்சியளித்தார்.

**3. *விளக்காக ஒளிர்பவர் :*** வெளி 21:23

"கடவுளுடைய மாட்சியே அதன் ஒளி"

கிறிஸ்து விளக்குக்கும் வெளிச்சத்துக்கும் ஒப்புமைப் படுத்தப்படுகிறார். கிறிஸ்துவின் பிறப்பு குறித்து சிமியோன் கூறும் போது பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி (லூக் 2:30-32) என்கிறார். யோவான் நற்செய்தியாளர் கூறும்போது 1:4-ல் கிறிஸ்துவுக்குள் இருந்த வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது அந்த ஒளி இருளிலே ஒளிர்ந்தது என்கிறார்.

அருள் நாதர் இயேசு தம்மைக் குறித்து வெளிப்படுத்தும் போது யோவான் 8:12-ல் நான் உலகிற்கு ஒளியாய் இருக்கிறேன். என்னைப் பின்தொடர்பவர் இருளிலே நடக்க மாட்டார். வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார். இந்த ஒளி திப 9:3-ல் சவுலைச் சந்தித்து மாற்றுகிறது. எனவே 1பேதுரு 2:9-ல் கூறியபடி ஒளியினிடத்தில் அழைக்கப்படுகிறோம். யோவான் 1:5, 1:7 இவைகளின்படி ஒளியாயிருக்கிற கிறிஸ்துவின் திருவெளிப்பாட்டை உணர்ந்து நடந்து மகிழ்வோம்.

கிறிஸ்துவின் திருவெளிப்பாடு திருமறை மூலமாகவும், திருத்தொண்டர் மூலமாகவும், அருட்பணியாளர் மூலமாகவும் பல்வேறு சூழல்களில் புரிந்து கொள்ளப்பட்டு நமக்கு அறிவிக்கப்பட்டாலும், நாம் கிறிஸ்துவை நம்முடைய வாழ்வில் எப்படி புரிந்து கொண்டிருக்கிறோம், தெரிந்து கொண்டிருக்கிறோம், உணர்ந்து கொண்டிருக்கிறோம். எப்படி வெளிப்படுத்துகிறோம்? சிந்திப்போம், செயல்படுவோம்.

அருள்திரு. **N. ஜெசின்**

12-01-2020

**திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு**

# கடவுளின் திருக்கோவிலாக உடலை மதித்தல்

**HONOURING THE BODY AS TEMPLE OF GOD**

சஉ 6:1-12 | 1 கொரி 3:16-23
திபா 1 | மத் 5:21-30

**"... கடவுளின் கோவில் தூயது, நீங்களே அக்கோவில்".** (1கொரி 3:17)

சிறுவன் ஒருவன் கடவுளின் முகவரியை அறிய மிகுந்த நாட்டம் கொண்டான். அவன் What is the address of God? என்னும் கேள்வியோடு தான் திருமறையை தினமும் படிக்கிறவர் நபர் ஆனதாலே, இறையவரால் படைக்கப்பட்ட தொடக்க மானிடர் ஆதாம், ஏவாளிடம் சென்று இக்கேள்வியை கேட்டான். அவர்கள், எங்களை மண்ணினால் உருவாக்கினார். தமது சுவாசத்தால் உங்களை உயிரடையச் செய்தார். நாங்கள் தான் அவரது சொல்லுக்கு கீழ்ப்படியாமல் மறைந்து விட்டோம் என்றனர். கேள்வியின் பதில் கிடைக்காத சிறுவன், முற்பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு. யாக்கோபிடம் சென்று அதே கேள்வியைக் கேட்டான். அவர்களும் நாங்கள் அவரை பலியிட்டு பணிந்து கொண்டோம். எங்களை மிகவும் அதிகமாய் அவர் ஆசீர்வதித்தார் என்றனர். முகவரி அறிய வந்த தம்பி மிகுந்த வருத்தத்தோடே திருமறையில் காட்டப்பட்டுள்ள அரசர்களிடம் இறைவாக்கினர்கள் அனைவரையும் அணுகினான். விடை கிடைக்காத விரக்தியுடன் இயேசுவின் சீடர்களை அணுகி கேட்டான். அவர்கள் கடவுள் தம் ஒரே மகனை அனுப்பினார். அவரது சாவிற்கு நாங்கள் காரணமானோம் என்றனர். மிகுந்த வருத்தத்துடன் தூய பவுலடிகளாரை அணுகி What is the address of Jesus Christ? என்றான். மிகுந்த யோசனை செய்தவர் தான் எழுதி வைத்திருநத் சுருளை திறந்து பிரித்து 1 கொரி 3:17 பகுதியை படித்துக்காட்டு "கடவுளின் கோவில் தூயது" "நீங்களே அக்கோவில்" என்று கூறி கடவுளின் முகவரி எங்கும் இல்லை. நாமே அவரது முகவரி, அவர் நமக்குள் வாழ்கிறார் என்று கூறவே மகிழ்ந்து தெளிவு பெற்று வந்தான் சிறுவன்.

ஆம் இந்நாளின் கருப்பொருள் "கடவுளின் திருக்கோவிலாக உடலை மதித்தல்" என்பதாகும்.

புல்ட்மேன் (Bultmann) கூறுகையில், உடல் என்ற கருத்தை அறிவுநெறி கோட்பாட்டில் இருந்து பவுல் எடுத்துக் கொண்டார் என்கிறார். N.T. Wright எனும் இறையியல் அறிஞர் கூறும்போது "நாம் ஒருவரோடு ஒருவர் இணைந்து வழிபடும் போது நமது உள்ளத்தினுள் உறவாடும் தூய ஆவியார் தங்கி இருப்பதை ஒவ்வொரு நபரும் தன்னுள் உணர முடியும் என்கிறார்."

Dietrich Bonhoeffer, "புதிய மானுடத்திற்கான அடையாளம் திருச்சபை" (The Church is called to be the representative and anticipatory sign of the new humanity) என்று திருச்சபையைக் குறித்து கூறுகிறார்.

மனித உடல் என்னும் சொல் தனி மனித உடல், மனிதர்கள், மனுக்குலம் என்ற பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. உடலுக்கு Basar என்ற எபிரேயச் சொல்லும் Sarx என்ற கிரேக்கச் சொல்லும் பயன்படுத்தப்படுகின்றது. உடல் படைக்கப்பட்டதா? அப்படியானால் அதைப் படைத்தது யார்? இறைவன் படைத்தார் என்றால் அந்த இறைவனுக்கு எப்படிப்பட்ட உடல் இருந்தது? அது ஏற்கனவே இருந்ததா? இப்படிப்பட்ட கேள்விகளை இந்திய மரபில் மிமாம்சகர் எழுப்புகின்றனர். ஆனால் பலர் உயிரிலிருந்து உடல் தோன்றுகிறது என்கின்றனர். சித்தில் இருந்து சடம் தோன்றுகிறது என்றும் கூறுகின்றனர். திருமறையின் தெளிவு என்னவெனில் கடவுள் மனிதரைப் படைத்தார், மனிதர் கடவுளால் படைக்கப்பட்டனர். அவர்களது உடலும், உயிரும், கடவுள் தந்தது தான் என்று தொடக்கநூல் 2:7-இல் கூறப்பட்டுள்ளது. தொடக்கநூல் 1:27-இல் கடவுள் மனிதர்களை தம்முடைய சாயலில் ஆணும், பெண்ணுமாக படைத்தார் என்று குறிப்பிடட்டிருப்பதை நாம் காணலாம்.

சாயல் என்பதை இங்கு ஓர் அடையாளச் சொல்லாக பயன்படுத்துவதுடன் கடவுளின் தன்மை மனிதருக்கு கொடுக்கப்பட்டுள்ளதாக இறையியலாளர்கள் கருதுகின்றனர். ஏனெனில் இறை அன்பின் உறவுக்கு பதில் கொடுக்கும் தன்மை மானிடாிடம் உள்ளது. உடல் கடவுள் தந்தது என்றும், அது கடவுளின் ஆலயம் என்றும் 1 கொரி 6:19 -ல் கூறப்பட்டுள்ளது. கடவுள் ஊனுடல் எடுத்து வந்தார் என்பது யோவானின் கருத்து (யோவா 1:14). ஆகவே, கடவுள் தனிமனித உடலுக்கு மட்டுமின்றி முழு மனுக்குலத்துக்கும் மேன்மை தரும் பொருட்டு இயேசு கிறிஸ்துவாக ஊனுடல் எடுத்து உலகில் வந்தார். எனவே, இன்றைய திருமறைப் பகுதிகளின் துணையுடன் கடவுளின் திருக்கோவிலாக உடலை மதிப்பது குறித்து நாம் தியானிப்போம்.

### ***1. நட்புறவுக்கு வழிகாட்டும்*** (மத் 5:23-24).

அமெரிக்கா நாட்டு இறையியலாளர் Ellen F. Davis என்பவர் கூறுகையில் "The whole created living is great" என்கிறார். வாழ்ந்து கொண்டிருக்கிற எல்லாப்படைப்புகளும் மிகவும் சிறப்புமிக்கவை என்று கூறுகிறார்.

கடவுளின் திருக்கோவிலாக உடல் மதிக்கப்படுவதின் மூலமாய் அவ்வுடல் நல்ல உறவுக்கு புது வழியைக் காட்டுவதாய் அமைகின்றது. நட்புறவு என்பது ஒப்புரவு மூலமாய் உருவாகும் புதிய அனுபவம். இரண்டுபேர் அல்லது குழுக்களிடையே பகைமையின் காரணமாக உறவு முறிவு ஏற்பட்டு பிரிந்திருந்து திரும்பவும் ஒன்றாக இணைந்து நல்லுறவுடன் வாழும் நிலைக்கு ஒப்புரவாகுதல் என்று கூறலாம். இந்த ஒப்புரவாகுதல் மூலமாய் உதயம் பெறும் நட்புறவு என்பது கடவுளால் நடைபெறுகின்ற ஒன்றேயன்றி மனித முயற்சியால் விளைவது அன்று. ஒப்புரவாகுதலின் காரணர் கடவுளே (God is the author of Reconciliation)

இங்கே காணிக்கை செலுத்த வரும் போது பிறர் மீது எழுகின்ற மனத்தாங்கல் என்பது (5:23). நம் உள்ளத்தினுள் ஏற்படும் ஒருவித தூண்டுதலால் தான் ஏற்படுகின்றது. அந்த தூண்டுதல் எம் உள்ளே செயல்பட்டுக் கொண்டு இருக்கும் கடவுளின் ஆற்றலாலும், எம் உடல் கடவுளின் கோவிலாய் நான் பார்ப்பதாலும் தான் இவ்வித உணர்வு உருவாகின்றது. குறைவை உணர்வது மூலமாக உள்ளத்தில் ஏற்படும் மாற்றமே இறையவரது கோயிலாக எம்மையும் பிறரையும் மாற்றி விடுகிறது. படையல் என்பது வெளிப்படையாய் காணும் பொருளல்ல, அது கடவுளுடன் நம்மை ஒன்றிக்க தூண்டுவதும், நமக்கும் இறைவருக்கும் இடையே புதிய உறவினையும், நெருக்கத்தையும் ஏற்படுத்துவது ஒன்றே. இங்கே உடன் சகோதர, சகோதரியுடன் ஏற்படுத்தும் நல்உறவு என்பது பிறரில் இறைச்சாயல் வெளிப்படுவதை நான் காண்கிறேன். அவரை என் கண் முன்தென்படும் கடவுளாய் பார்த்தல் என்பது கடவுளின் திருக்கோவிலாய் நம்மையும் மாற்றிவிடுகிறது.

### ***2. நல்வழிக்கு நடத்தும்*** (மத் 5:29).

தூயபவுலார் திருச்சபையை உடல் என்ற கருத்தில் பல நிலைகளில் பேசுகின்றார். 1கொரி 12-ம் பிரிவில் கிறிஸ்தவரை உடலின் உறுப்புகளாகவும், கிறிஸ்துவை எல்லா உறுப்புக்களையும் தாங்கி இருக்கும் உடலாகவும் வர்ணிக்கிறார் (1கொரி 6:15, 12:27). இதன்படி திருச்சபையையே பவுல் உடலாக கருதுகிறார் எனலாம் (உரோ 12:5).

கடவுளின் திருக்கோவிலாய் உடல் மதிக்கப்படல் மூலமாய் நல்வழிக்கு நேராய் நம்மை அழைத்துச் செல்கின்றது. உடலாகிய கிறிஸ்துவின், உறுப்புக்களாகிய நாம் விடுதலையின் வழிக்கு நேராய் பயணிக்க அழைக்கப்படுகின்றோம்.

மத் 5:29-ல் கூறப்படும் தீயன உடல் செய்வது கடவுளின் கோவிலின் தன்மையை இழக்க செய்கிறது. Karl Barth (கார்ல் பார்த்) கூறும்போது "கடவுளின் வெளிப்பாடாகிய இயேசு கிறிஸ்துவை மையமாக வைத்து வாழும் போது மட்டுமே நல்ல செயல்பாடு மனிதரில் வெளிப்படுகிறது. இதுவே நல்வழிக்கு வழிநடத்தும்" என்கிறார்.

கடவுளின் திருக்கோவிலாய் உடல் மதிப்பு பெறும் போது திருப்பாடல் 1:1-ல் கூறப்படும் பொல்லார் சொல்படி நடவாமை, பாவியின் தீய வழியில் நிற்காமை, இகழ்வார் கூட்டம் அமராமை போன்றவற்றினின்று விலகி (திபா 1:2-3) அவரது திருச்சொற்களை தியானித்து நீரோடை அருகே நடப்பட்ட மரம் போல் பிறருக்கு உதவி, அன்பு, மன்னிப்பு, நீதியின் வழிக்கு நேராய் வழி நடத்திடும்.

### ***3. நற்சான்று ஆக்கிவிடும்*** (1கொரி 3:17).

"Peace with God the Creator, Peace with all of creation" (Pope. John Paul II.)

கடவுளின் திருக்கோவிலாய் மதிக்கப்படும் நாம் ஒவ்வொருவரின் உடல் நடமாடும் சான்றுகளாய் இவ்வுலகில் செயல்பட வேண்டும். கடவுளின் வடிவைபெற்ற நாம் அவரது உயிர் மூச்சால் வாழ்ந்து கொண்டு இருக்கும்போது இறையரசின் தகவுகளை வெளிப்படுத்திடல் வேண்டும்.

கடவுளின் கோவிலாம் நாம் ஏழைகள், தேவையில் இருப்போர், கைவிடப்பட்டோர், விழிம்பு நிலையில் உள்ளோர், வாழ்வு குறித்த கேள்வியில் உள்ளோர் அனைவரையும் வாழ வைக்கும் கருவியாயும், ஏற்றத்தாழ்வை அகற்றி ஒற்றுமை, சமத்துவ உணர்வை உருவாக்குவதும், பிரிவுபட்ட சூழலை அகற்றி ஒன்றுபட்ட குமுகாயமாய் மாற்றம் பெற்றிட உதவி செய்வதும் மிகவும் சிறப்பானது. நீங்களே அக்கோவில் எனும் சான்று நாம் பிறரது பார்வையில் அங்கீகாரம் பெறுவது மட்டும் அல்ல. பிறரது காயங்களைக் கட்டுபவராயும், ஆறுதல் கூறுபவராயும், பிறரது துன்பங்களை தனது துன்பமாய் ஏற்பவராயும் இயேசுவில் வெளிப்பட கடவுளின் விடுதலையின் சாராம்சங்களை இவ்வுலகில் நிலைநாட்டுகின்ற நல்ல கருவிகளாய் செயல்படுவோம்.

ஆஸ்கார் ரொமெரோ என்பவர் சால்வடோரில் பிறந்த ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் ஆயர். சால்வதோர் உயர் மறைமாவட்டத்தின்

நான்காம் பேராயராக பணியாற்றியவர். இவர் பணியில் இருந்தபோதே தமது நாடான எல்சால்வடோரில் நிலவிய வறுமை, சமூக ஏற்றத்தாழ்வு, சர்வாதிகார ஆட்சி, படுகொலைகள் மற்றும் வதைப்புகளுக்கு எதிராக குரல் கொடுத்தார். இதனால் 1980-ம் ஆண்டு மார்ச் 24-ம் நாள் திருவிருந்து தொழுகை வழிபாடு நடத்திக் கொண்டு இருக்கும்போது இராணுவக் கூலிப்படையால் சுட்டுக் கொல்லப்பட்டார். 2008-ம் ஆண்டு ஐரோப்பிய செய்தி ஏடான A different view இவரை உலக மக்களாட்சியின் 15 வீரர்களுள் ஒருவர் (15 champions of world democracy) எனப்பட்டியலிட்டது. கிறிஸ்துவின் திருவுடலை பகிர்ந்து கொடுத்து கொண்டிருந்த பேராயரின் உடலும், வாழ்வும் நற்சான்றாகிறது.

கடவுள் திருச்சபையாய் வாழ்ந்து காட்டுவோம். இவ்வுலகில் இறையரசினை உருவாக்கிட முனைந்திடுவோம். இயேசு தாம் பகைமை என்னும் சுவரை தம் உடலில் ஏற்ற துன்பம் வழியாய் தகர்த்தெறிந்து அவர்களை ஒன்றுபடுத்தினார் (எபே 2:14).

நாமும் ஒன்றுபட்டு கடவுளின் கோவிலாய் இயங்கிடுவோம்.

அருள்திரு. S. **அருள் ஜெபசிங்**

19-01-2020

**திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு & ஒருமைப்பாட்டு ஞாயிறு**

# அழைக்கப்பெற்றது ஒன்றுபடுவதற்கு

**CALLED TO UNITY**

| | |
|---|---|
| எசேக் 37:15-23 | எபே 4:1-6 |
| திபா 133 | யோவா 15:1-12 |

**"அவை இரண்டும் உன் கையில் ஒரே கோலாயிருக்கும்படி அவற்றை ஒன்றாகச் சேர்".** (எசேக். 37:17)

நாம் வாழும் குழலில், குடும்பம், தனிநபர் வாழ்வில் வேற்றுமை களைந்து ஒன்றாக வாழ்வதற்கு இன்று அழைப்பு தரப்படுகிறது.

எசேக்கியேல் என்னும் பெயருக்கு ஆண்டவர் ஆற்றல் அளிப்பார் என்பது பொருள். எருசலேமின் வீழ்ச்சிக்கு முன்பும் பாபிலோனியச் சிறையிருப்பின் போதும் இறைவாக்கினர் எசேக்கியேல் இறை வார்த்தைகளை உரைத்தார். இஸ்ரயேல், எசேக்கியேல் இறைவாக்கினர் காலத்தில் வடக்கு அரசு தெற்கு அரசு என்று பிரிந்து ஒற்றுமையின்றி காணப்பட்டது. இந்த பிரிவினை மாற்றப்பட்டு ஒன்றான நாடாக மாற இறைவார்த்தைகளை உரைத்தார். இது தவிர பழைய ஏற்பாட்டில் இறைமக்கள் ஒன்றுபடுவதற்குரிய பல்வேறு இறைவார்த்தைகளை இறைவாக்கினர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் போதனை வழியாக ஒன்றுபடுவதற்குரிய அழைப்பு தரப்படுகிறது. கிறிஸ்துவின் "ஒரு மேய்ப்பன் மற்றும் ஒரு மந்தை" (One Shepherd One Flock) என்னும் சிந்தனை பல்வேறு சவால்களை நமக்கு முன் வைக்கிறது. சிலுவையில் தம் வாழ்வை இலவச மீட்பாக தந்த போது அவரை பின்பற்றுவோர் ஒற்றுமையுடன், ஒன்றாக வாழ்வதற்குரிய இறைவனின் மாபெரும் தியாகம் வெளிப்பட்டது. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமையே வலிமை, '(unity is strength)' கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பதைப் புலப்படுத்த எசேக். 37:15 முதல் 23 வரையுள்ள இறையியல் தகவுகளை சிந்திப்போம்.

### *1. இசைவிற்கான முயற்சி* : (Attempt for togetherness)

(எசேக் 37:17)

ஒற்றுமை, ஒன்றான வாழ்வு, இசைவு ஏற்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதுதான் ஒன்றிப்பிற்காக நமக்கு கொடுக்கப்படும் முதல்

அழைப்பு ஆகும். இசைவிற்கான முயற்சி குறித்து இறைமக்களின் புத்திரர் கேட்கும் போது "எப்பிராயீமும் அதை சேர்ந்த இஸ்ரவேல் கோத்திரங்களுக்கும் அடுத்த யோசேப்பின் கோலை எடுத்து, அதை யூதாவின் கோலோடே சேர்த்து, அவைகளை ஒரே கோலாக்குவேன்; என கூறுகிறது அவைகள் என் கையில் ஒன்றாகும்" (எசேக் 37:19) பிரிந்தவர்கள் இறைவனின் திட்டத்தினால், இறை வழிகாட்டுதலினால் இசைவு ஏற்பட்டு ஒன்றானார்கள் என்பதை வரும் தலைமுறைக்கு அறிவித்து ஒன்றாக வாழ்வதற்கு நாம் அறிவுறுத்தப்படுகிறோம். இங்கே, இரு துருவங்களாக காணப்பட்ட நாட்டு தலைவர்களிடம் இறைவன் இடையீட்டாளராக இருந்து செயல்படுகின்றார் (எசேக் 37:21,22).

"பிரிந்து, சிதறுண்டு போன மக்களை அவர்களின் சொந்த நாட்டில் அழைத்து வருவேன், ஒரே மக்களினமாக்குவேன், அவர்கள் எல்லாருக்கும் ஒரே அரசர் இருப்பார். இனி அவர்கள் பிரிவதில்லை" என்கிறார் கடவுள். ஆகவே பிரிவு, பிளவுபட்ட நிலை, உடைவுபட்ட சூழல் ஏற்படும்போது இசைவிற்கான முயற்சிகளை மேற்கொண்டு அதை சரிசெய்து ஒன்றாக்குவதற்கு நாம் முன்வர வேண்டும்.

பிரிந்து வாழ்ந்தும், பின்பு இணைந்து ஒற்றமையுடன் வாழ்ந்து, இறந்த தங்கள் தந்தையை இணைந்து அடக்கம் செய்ததும் ஓர் சிறந்த எடுத்துக்காட்டு (தொநூ 27:33-35).

1900-ஆம் ஆண்டு வரையில் நடைபெற்ற அருட்பணியர் மாநாடுகள் போல் ஒன்றான அருட்பணி இயக்க மாநாடுகள் கூட்டப்படவேண்டும் என்ற வில்லியம் கேரி அவர்களின் கனவு தென்னிந்திய திருச்பைப் பிரிவுகளில் ஓர் இசைவை ஏற்படுத்தி 1908-ஆம் ஆண்டு தென்னிந்திய ஐக்கிய திருச்சபை உருவாக வித்திட்டது (South India United Church). 1919-இல் இந்த ஒன்றிப்பு முயற்சி தரங்கம்பாடியில் வலிமையடைந்து, 1947 செப்டம்பர் 27-இல் தென்னிந்திய திருச்சபை உருவானது (Church of South India). திருச்சபைகளுக்கிடையே இந்த இசைவு முயற்சி இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது 1970-இல் உருவான வட இந்திய திருச்சபை (C.N.I.), தென்னிந்திய திருச்சபை (C.S.I.) மார்த்தோமா சிரியன் திருச்சபை (Marthoma Syrian Church) ஆகியன 1978-இல் ஒரு இணைந்த ஒன்றிப்பு கூட்டமைப்பை உருவாக்கியது. (Joint Council). 2001-இல் உருவாக்கப்பட்ட இந்திய திருச்சபைகளின் கூட்டமைப்பு (Council of Churches in India) பரந்துபட்ட ஒன்றிப்புக்கு (Wider Ecumenism) வலு சேர்க்கிறது.

குடும்பங்களில், உறவுகளில் அன்பு, பாசம், பரிவு காட்டி, ஒருவருக்கொருவர் மன்னித்து, ஒப்புரவாகி விட்டுக்கொடுத்து வாழும் போது இசைவு ஏற்படும். ஒன்றுபடுவதற்கான இறை அழைப்பு உறுதி செய்யப்படும். குடும்பங்கள், திருச்சபைகள் இறை வேண்டலுடன், முழு மனதுடன் முயற்சித்தால் ஒன்றிப்பு சாத்தியமாகும்.

### *2. அமைதியின் உடன்படிக்கையை ஏற்படுத்துதல்* :

(Making Covenant of Peace)

“நான் அவர்களுடன் நல்லுறவு உடன்படிக்கை செய்து கொள்வேன்.” (எசேக் 37:26)

திருச்சபை, குடும்பங்கள், தனிநபர், சமூக வாழ்வில், பகை உணர்வு, வேற்றுமை தன்மைகள், கசப்பான அனுபவங்கள், வைராக்கியங்கள், அமைதி, நல்லுறவு வாழ்வை பொய்த்துப் போகச் செய்கிறது.

அசிசியின் புனித பிரான்சிஸ் அவர்களின் இறை வேண்டலில் “இறைவா அமைதியின் கருவியாக என்னை மாற்றும்” (Lord, Make me a instrument of your Peace) என்கிறார். திருச்சபை, குடும்பங்கள், இயற்கை வள ஆதாரங்கள் இவற்றுடன் அமைதியாக முழுநல வாழ்வுடன் வாழ்வதற்கு இறைவன் விரும்புகிறார். “அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்...” (மத்தேயு 5:9).

பகையைச் சிலுவையினால் அழித்து அமைதியை நற்செய்தியாக அறிவிக்க வலியுறுத்துகிறார் (எபே 2:16a).

2019-ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசை பெற்றவர் எத்தியோப்பியா நாட்டின் பிரதமர் திரு. அபி அகமது. இவர் தன்னுடைய அரசு பணிக்காலத்தில் எத்தியோப்பியா கிழக்கு மற்றும் வடகிழக்கு எல்லை பகுதிகளில் அமைதி நல்லிணக்க நல்லுறவுக்காண முயற்சிகளை மேற்கொண்டு அகிம்சை வழியில் போர் நிறுத்தம், சுமூகமான அமைதி முயற்சிகளை ஏற்படுத்தினார். தன்னுடைய 100 நாட்கள் அரசு செயல்திட்டத்தில் சாதித்துக் காட்டினார். நாமும் அமைதி, நல்லுறவு உடன்படிக்கையினை திருச்சபை, குடும்பங்களில், இறை படைப்புகளில் ஏற்படுத்த முயலும் போது ஒன்றிப்பு சாத்தியமாகும்.

### *3. இறைக்கட்டளைகளைக் கைக்கொள்ளுதல்* :

(Obeying God's Commandments)

"என் நியமங்களைக் கருத்தாய்க் கடைப்பிடிப்பர்." (எசே 37:24)

நாம் இறைகட்டளைகளைக் கைக்கொண்டு வாழும் போது இறைவன் தம்முடன் ஒன்றித்து, இறையரசுக்கு நம்மை தகுதிப்படுத்துகிறார். இறையரசின் முன்சுவை, உலகில் வாழும் சூழலில் இறைகட்டளைகளைக் கைக்கொண்டு வாழ்வதில் உறுதிபடுத்தப்படுகிறது. எசேக் 37:26-இல் பரிசுத்த ஸ்தலத்தை ஸ்தாபிப்பேன் என்றும் எசேக் 37:27-இல் என் ஜனமாயிருப்பார்கள் என்றும், எசேக் 37:28-இல் பரிசுத்த ஸ்தலம் அவர்கள் நடுவிலே என்றென்றைக்கும் இருக்கும் போது, தாம் இஸ்ரயேலைப் பரிசுத்தம் பண்ணுகிற இறைவன் என்பதை அறிந்துகொள்ளச் செய்கிறார்.

இறைக்கட்டளைகள் நம் உள்ளத்தில் குடிகொள்ள வேண்டும். இக்கட்டளைகளின்படி வாழ்ந்தால் இறைவனோடு ஒன்றித்த வாழ்வு வாழ முடியும். இறை அன்புக்குத் தகுதியுடையவர்களாகவும் நம்மை மாற்றும். இதனால் மிகுந்த கனியுள்ள வாழ்வு நம்மில் மலரும் (யோவா 15:7-10). உடன் வாழும் மக்களோடு மனத்தாழமையோடும், கனிவோடும், பொறுமையோடும், அன்புடனும், அமைதியுடனும் வாழ்ந்து ஒற்றுமையைக் காத்துக்கொண்டு இயேசுகிறிஸ்துவின் சீடர்களாய் வாழ இறைவன் நம்மை அழைக்கிறார் (எபே 4:1-3).

நாமும் கிறிஸ்துவுடன் ஒன்றாகக் கலந்து, திருச்சபை, குடும்பங்களில், இறை படைப்புகளில், பிற சமய மக்களுடன் இசைவு முயற்சிகளை ஏற்படுத்தி, நல்லுறவு உடன்படிக்கை உருவாகவும். இறை கட்டளைகள், இறை நியமங்களின் படி நடந்து இறையரசைச் சுதந்தரிப்போம். ஒன்றாக இசைந்து இறை அழைப்பை புரிந்து வாழ்வோம்.

அருள்திரு. முனைவர். S. **டேவிட் ஜோசப் ராஜ்**

26-01-2020

**திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு**

# பற்றுறுதியிலும் செயலிலும் ஒன்றிப்பு

**UNITY IN FAITH AND ACTION**

யோசு 3:9-17 திப 9:20-25
திபா 53 மாற் 1:21-34

**"வாழும் இறைவன் உங்களிடையே இருக்கின்றார் என்று இதனால் அறிவீர்கள்".**
(யோசு 3:10)

பற்றுறுதியும், செயல்பாடும் கிறிஸ்தவ வாழ்வின் இரு பக்கங்கள் ஆகும். இவ்விரண்டின் ஒன்றிப்பில் தான் கிறிஸ்தவ வாழ்வின் நிறைவு அமைந்திருக்கிறது. பற்றுறுதி என்பது "கண்ணை மூடிக்கொண்டு இருளுக்குள் குதிப்பதல்ல. மாறாக இருளில் இருந்து ஒளியை நோக்கிப் பயணிப்பது" ஆகும் என்கிறார் டேவீட் ரீட் என்ற அறிஞர். ரெய்மண்ட் பணிக்கர் கூறும்போது "நம்பிக்கை இல்லாமல் எவரும் உண்மையான மானிட வாழ்க்கையை வாழ்ந்துவிட முடியாது" என்கிறார். இறைவனைவிட மேலானதும் உயர்வானதும் எதுவும் தம்முடைய வாழ்வில் இல்லை என்று செயல்படுவதே உண்மையான பற்றுறுதியாகும்.

கலாத்தியத் திருச்சபை என்பது இன்று துருக்கி என்று அழைக்கப்படும் நாட்டின் மத்தியில் உள்ள பீடபூமியே ஆகும். இப்பகுதியில் பவுலடியார் தமது முதல் நற்செய்திப் பயணத்தின் போது சபைகளை உருவாக்கினார் (திப 13:14). கலாத்தியத் திருச்சபை மக்களில் பெரும் பகுதியினர் புற இனத்தவர் ஆவர். வேற்றுச் சமய வழிபாடு கொண்டவர்கள். கடவுள் அல்லாதவற்றிற்கு அடிமைகளாய்ப் போனார்கள் (கலா 4:8). யூதராய் இருந்து கிறிஸ்தவர்களானவரும் அங்கு இருந்தனர். பவுல் இத்திருச்சபைக்கு இருமுறை நேரில் சென்று நற்செய்தி அறிவித்தார். முதல் முறை பவுலார் இத்திருச்சபைக்கு செல்லும் போது பலவீன அனுபவம் உடையவராய் கடந்து சென்றார். இவரை தூதர்களை ஏற்பது போல் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர் (கலா 4:13,14). கலாத்திய திருச்சபை மக்களின் ஆரம்பக்கால பற்றுறுதியானது வியப்புக்குரியதாக அமைந்திருந்தது (கலா 5:7). ஆனால் பிந்திய காலங்களில் இவர்களின் பற்றுறுதியானது செயலாற்றும் திறனில் குறைவுப்பட தொடங்கியது. காரணம் இவர்கள் நற்செய்தியல்லாததற்கு தங்களை ஒப்படைத்தனர் (கலா 1:6).

இதனால் தான் கலாத்தியத் திருச்சபைக்கு உங்களது பற்றுறுதியானது செயல்படும் வலிமைமிக்கதாக இருக்கட்டும் என்று ஆலோசனை கூறுகின்றார். பற்றுறுதி வாழ்வானது செயலற்ற வாழ்வு அல்ல. மாறாக அன்பினால் செயல்படும் வாழ்வு (1தெச 1:2). செயல்படும் பற்றுறுதி வாழ்வானது திருச்சட்டத்தைக் காட்டிலும் சிறப்புடையதும், பயனளிக்கக்கூடியதும் ஆகும் (யாத் 2:22). பற்றுறுதி செயல்படும் அனுபவத்தை பெற்றுக் கொள்ளும்போது மானிடவாழ்வில் நேரிடும் மாற்றங்களைக் குறித்து தியானிப்போம்.

***1. செயல்படும் பற்றுறுதி தடைகளைத் தாண்டச் செய்கிறது :***

(யோசு 3:17)

இன்பமான நேரங்களிலும், மகிழ்ச்சியான நேரங்களிலும் நம்பிக்கை என்பது கரைபுரண்டு ஓடும் என்பதற்கு எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால் துன்பம் நிறைந்த வேளைகளில் நம்பிக்கை என்பது ஆட்டம் காண ஆரம்பிக்கின்றது. துன்பம் நிறைந்த வேளைகளில் நம்பிக்கை என்பது செயல்படும் பற்றுறுதியாய் மாற்றம் அடையும் போது துன்பத்தைக் கொண்டுவரும் தடைகளைத் தகர்த்தெறிய முடியும். இஸ்ரயேல் மக்களின் விடுதலைப் பயணத்தில் தலைமைத்துவம் யோசுவாவின் கரத்தில் கையளிக்கப்பட்ட போது இஸ்ரயேல் மக்கள் பயணத்தில் தடைகளைக் காண்கிறார்கள். இவர்களது பயணத்தில் தடையாய்த் தென்படுவது தான் யோர்தான்நதி. இந்நதியானது எர்மோன், தாண் மற்றும் செசரியா, பிலிப்பியில் உள்ள நீரூற்றுகளை உள்ளடக்கியது. இந்நதி 90 முதல் 200 அடி வரை அகலமுடையது. இந்நதியை கடப்பதற்கு உதவியாக தங்களது பற்றுறுதியை மையப்படுத்திய உடன்படிக்கைப் பேழை இவர்களிடம் காணப்படுகிறது. இப்பேழை உடன் இருக்கும் போது வெற்றி உண்டு என்பது இவர்களது பற்றுறுதி. ஆனால் இவ்வுடன்படிக்கைப் பேழையைச் சுமந்து செல்லும் குருக்கள் (யோசு 3:6) மற்றும் நீண்ட நேரம் இவ் உடன்படிக்கைப் பேழையைச் சுமந்து, யோர்தானில் கால் ஊன்றி நிற்கும் இவர்களது செயல்பாடு பாராட்டிற்குரியது. குருக்கள் தங்களது பற்றுறுதியைச் செயல்பாட்டோடு இணைத்த போது யோர்தான் குவியலாக மாறியது. இங்கு குருக்களின் செயல்பாடும், பற்றுறுதியை வெளிப்படுத்தும் உடன்படிக்கைப் பேழையின் இருப்புநிலையும் யோர்தான் என்னும் பெரும் தடையினைத் தகர்த்தெறிகிறது.

மாற்கு 2:1-5 வரையுள்ள பகுதியில் இயேசு கிறிஸ்து முடக்குவாத நோயுடைய மனிதனைக் குணப்படுத்திய நிகழ்வும் செயல்படும் பற்றுறுதியின் வெளிப்பாடு ஆகும். முடக்கு வாதமுடைய மனிதனை இயேசு கிறிஸ்துவிடம் கொண்டு வருவதற்கு ஏராளமான தடைகள்.

ஆனால் நால்வரின் செயல்பாடும், அவர்களது பற்றுறுதியும் தடைகளாய் இருந்த பெரும் கூட்ட மக்களையும் தாண்டி இயேசு நாதரின் வல்லமை வெளிப்படக் காரணமாயிற்று. இயேசு அவர்களின் பற்றுறுதியைக் கண்டு (மாற்கு 2:5) (சுமத்தல், உயர ஏறுதல், கூரையைப் பிரித்தல், இறக்குதல்) முடக்குவாதமுள்ள மனிதனைக் குணமாக்கினார்.

இன்று இறையாற்றல் வெளிப்பட இனம், நிறம், மொழி போன்ற பல தடைகள் தென்படுகின்றன. இவைகளைத் தாண்டி பயணிப்பவர் தான் இறைப்பற்றாளர். இதனை யோவான் 4-ஆம் அத்தியாயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இயேசுநாதர்-சமாரியப் பெண் உரையாடலின் வழியாய்ப் புரிந்து கொள்ளலாம். மார்ட்டின் லூத்தர் கிங் என்பவர் கி.பி. 1929 முதல் கி.பி. 1968 வரை அமெரிக்காவில் காணப்பட்ட பாப்திஸ்து சபையின் ஆயராகச் செயல்பட்டவர். அமெரிக்கா வெள்ளையர்கள், கறுப்பின மக்களை தீண்டத்தகாதவர்களாக நடத்தின போது, அவர்களின் விடுதலைக்காகப் போராடிய ஒரு புரட்சிப் போதகர். அக்காலத்தில் பேருந்துகளில் கறுப்பின மக்களுக்கு தனி இருக்கைகள் ஒதுக்கப்பட்டன. இதனை எதிர்ந்து நின்ற ரோசா பார்க்ஸ் என்ற பெண்மணியின் துணிவான செயல், விடுதலை இயக்கத்திற்கு வித்திட்டது. அப்போது 1963-இல் வாஷிங்டன் நகரில் பேரணி ஒன்றை ஏற்படுத்தி அதன் முடிவில் நடந்த பொதுக்கூட்டத்தில் "எனக்கொரு கனவு இருக்கிறது" என்ற தலையங்கத்தில் உணர்ச்சிமிக்க உரையை ஆற்றினார். இவ்வுரையில் இனம், நிறம், சமயம், மொழி போன்ற தடைகளைத் தாண்டி பயணிப்பது தான் உயிரோட்டம் உடைய பற்றுறுதி என்று பறைசாற்றினார்.

### 2. ***செயல்படும் பற்றுறுதி சாதிக்கும் எண்ணத்தை உருவாக்குகிறது*** : (திப 9:25)

பற்றுறுதியும் செயல்பாடும் ஒன்றிக்கும் போதுதான் சாதனைகள் உருவாகும். காது கேட்கும் திறன் இழந்த பீத்தோவன் என்பவர் பற்றுறுதியும், செயல்படும் திறனையும் உள்ளடக்கி ஒன்பது சிம்பனிகள் (Symphony) இயற்றி இசை உலகில் இறவாப் புகழுடன் விளங்குகிறார். கண் பார்வை இழந்த நிலையில் வாழ்ந்த மில்ட்டன் என்பவர் ஆங்கில இலக்கியங்களை இயற்றும் மன்னராகச் செயல்பட்டார். திறமையிலும் சாதனை படைத்திருக்கும் பவுலடியாரின் வாழ்விலும் செயல்படும் பற்றுறுதியே சாதனைக்கு ஆதாரமாக அமைந்திருக்கிறது. செயல்படும் பற்றுறுதியே கிறிஸ்துவுக்காக எதையும் சாதிக்கும் எண்ணத்தை உருவாக்கியது (பிலி 4:13). எனக்கு உறுதியூட்டும் இறைவனால் என்னால் எதையும் செய்ய முடியும். மனம்திரும்பிய காலங்களில் மாந்தர் போற்றும் சாதனையை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனை பவுலின் வாழ்வில் நிறைந்து

காணப்பட்டது. சமூகமே வியப்படையும் வகையில் இயேசுவே கிறிஸ்து என்று உறுதியுடன் அறிக்கையிட்டார் (திப 9:22). கலக்கம் அடைந்த யூதச் சமூகம் பவுலைக் கொலை செய்யத் திட்டமிட்டனர் (திப 9:24) இப்போது தான் செயல்படும் பற்றுறுதி வெளிப்பட ஆரம்பிக்கிறது. இவரது சீடர்கள் பவுல் தமஸ்குவில் இருந்தால், இவரால் சாதனைகளை நிறைவு செய்ய முடியாது. ஆகவே இவர் எப்படியாவது தப்புவிக்கப்பட வேண்டும் என்ற உணர்வுடன் செயல்பட ஆரம்பித்தனர். உடனடியாக ஒரு பெரிய கூடை ஒன்றை எடுத்து பவுலடியாரை அதன் மீது உட்கார வைத்து நகரத்தின் மதில் வழியாக இறக்கி விட்டனர். இத்தகைய செயல்படும் பற்றுறுதியின் பலனாக பவுலார் தப்புவிக்கப்பட்டு சாதனைகள் பல புரிந்தார். ஆகவே சாதனைகள் நிகழ்ந்திட செயலாற்றும் பற்றுறுதியே அடிப்படைக் காரணியாக அமைகிறது.

### 3. *செயல்படும் பற்றுறுதி பலனைப் பாராமல் பரிவு காட்டுகிறது* : (மாற் 1:29)

கடமையைச் செய்யாதே, பலனை எதிர்பார் என்ற சிந்தனை மிகுந்த மனிதர்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இத்தகைய சூழலில் பலனைப் பாராமல் நன்மை செய் என்ற சிந்தனையும், செயலும் பாராட்டுக்குரியது (லூக். 14:13). இயேசுநாதரின் செயல்படும் பற்றுறுதியின் பலனை நற்செய்திப்பகுதி தெளிவாக விளக்குகிறது. இயேசு நாதரும், அவரது சீடர்களும் இணைந்து பயணிக்கிக்றனர். இப்பயணத்தில் சந்திப்பது தான் பேதுருவின் மாமியின் வீடு. இங்கு சென்ற போது இயேசுநாதர் கண்ட காட்சி அவரது உள்ளத்தில் பரிவினை ஏற்படுத்தியது. இந்த பரிவின் பின்னணியத்தில் இயேசுநாதர் சீமோன் பேதுருவின் வீட்டிற்குச் செல்கிறார். அங்கு தமது செயல்படும் பற்றுறுதியை வெளிப்படுத்துகிறார்.

(i) படுக்கையின் அண்மையில் செல்லுதல் (மாற் 1:34). இந்நிகழ்வு இயேசுநாதர் துயரப்படுகிறவர்களுக்கு தூரத்தில் அல்ல அண்மையில் நின்று துயரத்தை மாற்றுகிறார் என்ற உண்மையை வெளிப்படுத்துகிறது.

(ii) இயேசுநாதர் இப்பெண்மணியின் கையைப் பிடித்து தூக்கிவிட்டார். என்பது துன்புறுவோரோடு தம்மை இணைத்துக்கொள்கிறார் என்பதனை உணர்த்துகிறது (மாற் 1:31). இயேசு நாதரின் பற்றுறுதியின் பயன்பாடானது பலன் எதிர்பாராத சமுகம் சார்ந்து, தனிமனிதம் சார்ந்து காணப்படுகிறது. பற்றுறுதி என்பது சமுதாயச் செயல்பாட்டில் வெளிப்படுகிறது. இதனை வலியுறுத்தும் கிரேக்கச் சொல் ‘Diakonia’. பொருள் பணிவிடை செய்தலை

வலியுறுத்துகிறது. ‘கொசுக்கி கொயாமோ’ என்ற இறையியலாளர் “சீடர்களின் பாதங்கள் இருக்கும் வரை இயேசுவின் முழங்கால்கள் முடங்கும்” என்கிறார். கழுத்தில் சிலுவையைத் தொங்க விடுவது பற்றுறுதி அல்ல. சிலுவைக்கு கழுத்தைக் கொடுப்பது தான் பற்றுறுதி. ஆல்பர்ட் சுவைட்சர் என்பவருக்கு தென்னாப்பிரிக்காவில் மருத்துவச் சேவை செய்ததைப் பாராட்டி 1952-இல் சிக்காகோ நகரில் வைத்து நோபல் பரிசு வழங்கப்பட்டது. நோபல் பரிசு பெறுவதற்காய் சிக்காகோ நகரின் புகைவண்டி நிலையத்தில் சென்று இறங்கிய போது அநேக பத்திரிகையாளர்கள் பேட்டி காண்பதற்காக வந்தனர். பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கும் போது அவர் கண்ட காட்சி அவரைச் சிந்திக்கத் தூண்டியது. கொஞ்சம் நில்லுங்கள் என்று சொல்லி விட்டு காட்சி கண்ட இடம் நோக்கி நடக்க ஆரம்பித்தார். அங்கு கறுப்பின நிறை மாத கர்ப்பிணிப் பெண் தலையில் பாரமான சுமையோடு புகைவண்டியில் ஏற முயற்சி செய்கிறார், முடியவில்லை. உடனே ஆல்பர்ட் அவரது சுமையைத் தனது தலையில் சுமந்து புகைவண்டியில் வைத்துவிட்டு, அப்பெண்மணி புகைவண்டியில் ஏற உதவிசெய்தார். இதனைப் பார்த்த பத்திரிக்கையாளர் தனது பத்திரிக்கையில் இவ்விதம் எழுதினார். “அநேக அருளுரைகளை கேட்டிருக்கிறேன். ஆனால் நேற்று நடமாடும் அருளுரை ஒன்றினைப் பார்த்தேன்”. இதுதான் உண்மையான செயல்படும் பற்றுறுதி.

அருள்திரு. P.G. **ஜெயின் குமார்**

26-01-2020

குடியரசு நாள்

## நாட்டுக்கட்டுமானத்தில் பங்கேற்பு

**PARTICIPATION IN NATION BUILDING**

நெகே 2:11-18 1பேது 2:13-17
திபா 101 லூக் 3:7-14

**"...நாங்கள் என்ன செய்ய வேண்டும்?".** (லூக் 3:10)

இந்திய திருநாடு ஆங்கிலேயருடைய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது. மக்களாட்சியால் மட்டுமே முழுமையான வளர்ச்சியை நோக்கி செல்ல முடியும் என்று முடிவு செய்யப்பட்டது. Dr. B.R. அம்பேத்கர் தலைமையில் பலவிவாதங்களுக்கு பின் 308 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலுடன் 1950-ஆம் ஆண்டு ஜனவரி 26-ஆம் நாள் தனக்கென்று ஓர் அரசியல் அமைப்பு சாசனத்தை உருவாக்கியது. இந்திய குடியரசின் ஆணிவேராக இருப்பது நமது அரசியல் அமைப்பு சட்டமேயாகும். உலகத்திலுள்ள எழுதப்பட்ட அரசியல் அமைப்பு சட்டத்தில் நமது அரசியல் அமைப்பு சட்டமே மிகவும் பெரியதாகும். மன்னராட்சி மாற்றம் பெற்று மக்களாட்சி உதயமானது குடியரசாகும். மக்கள் தேர்தல் வழி தங்கள் விரும்பிய ஆட்சியாளர்களை தேர்ந்தெடுக்கும் முறையே குடியரசு எனப்படுகிறது. இந்தியா உலகத்தின் மிகப்பெரிய ஜனநாய நாடு என்பதில் பெருமை கொள்வோம். ஏனெனில், அதன் பின்னணியால் லட்சக்கணக்கான போராளிகளின் குருதியும், ஆயிரக்கணக்கான தேசத்தலைவர்களின் தியாகமும் மறைந்திருக்கிறது. ஆனால் தற்போது நாட்டின் இறையாண்மை மறைந்து இனமுரண்பாடுகளும், மதவேறுபாடுகளும் தலைவிரித்தாடுகின்றது என்பது கசப்பான உண்மை. வளர்ச்சி என்ற போர்வையால் பலதிட்டம். அது கடைநிலையோரை சென்று சேரவில்லை. நாட்டிற்கு உணவு வழங்கிய விவசாயி நிலமிழந்து வாழ்வாதாரம் இழந்து நிற்கின்றான். வியாபாரமாகி போன கல்வி, சேவையை மறந்த மருத்துவம், பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள், இயற்கை வளங்களை சூறையாடும் எண்ணற்ற திட்டங்கள், ஏழைகளை இணைக்காத பொருளாதார வளர்ச்சிதிட்டம், ஊழல் ஊடுருவிய துறைகள், சுகாதார கேடுபாடுகள், அதிகரிக்கும் வன்முறைகள் என அடிக்கி கொண்டே செல்லலாம்.

இயேசு கிறிஸ்துவுக்கு முன்னோடியாக வந்த முழுக்கு முனிவர் யோவான் சமூகவியல் மறுகட்டுமானத்தை அதிகம் வெளிப்படுத்துவதை காணமுடியும். மனமாற்றத்தை செயல்களில் காட்டுங்கள் என்றார்.

யோவானிடம் மூன்று விதமான மக்கள் கூட்டம் வந்தன. அவரை நெருங்கியவர்கள் "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள். எதைச் செய்ய வேண்டும் என்றும் எதை செய்ய கூடாது என்றும் கற்றுக் கொடுத்தார். நாட்டுக் கட்டுமானத்தில் நம் பங்கேற்பு என்ன என்பதை லூக் 3:7-14 பகுதி சார்ந்து சிந்திப்போம்.

### *1. பகிர்ந்தளிக்கும் நாட்டைக் கட்டமைப்போம்* : (லூக் 3:10,11)

யோவானிடம் வந்த சமானிய மக்கள் ochlos தான் முதலாவது கேள்வியை கேட்கிறார்கள். இவர்கள் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கிறார்கள். இவர்கள் சாதாரண மக்கள், தற்செயலாக ஒன்று கூடியவர்கள், ஆட்சியாளர்களுக்கும், தலைவர்களுக்கும் எதிர்ப்பானவர்கள், அறிவில்லாத சாமானியர்கள், எதிர்பாராமல் கொந்தளிக்கும் கூட்டத்தார். சட்டமில்லாதவர்கள் என பல வரைவிலக்கணங்கள் கிரேக்க அகராதிகளில் கொடுக்கப்பட்டுள்ளது. எப்படியிருப்பினும் இவர்கள் சாதாரண, சாமானிய மக்கள் என்பது புலப்படுகிறது. பழைய ஏற்பாட்டு காலத்தில் சாக்குடை தரிக்க கேட்கப்பட்டது. ஆனால் யோவான் இவர்களை பகிர கேட்கிறார். மற்றவர்களுக்கு இரக்கம் காட்ட கேட்கிறார். இரண்டு ஆடைகள் உள்ளவர்கள் இல்லாதவர்களுக்கு பகிரட்டும் அவ்வாறே உணவு உடையவர்களும் செய்யட்டும் என்றார். உணவும், உடையும் மனிதனுடைய அடிப்படைத்தேவையாகும். "தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்றார் பாரதி. உலகவங்கி இந்தியாவை ஆய்வு செய்து விட்டு மூன்றில் ஒரு பங்கினர் வறுமையால் வாடுகின்றனர். என முடிவை வெளிப்பட்டது. ஐ.நா. பொது செயலாளர் பான்கீமூன் "பசியால் உலகில் சுமார் 1700 குழந்தைகள் தினமும் இறப்பதாகவும், சராசரியாக 6 நொடிக்கு ஒரு குழந்தை இறப்பதாகவும் குறிப்பிடுகின்றார்". காந்தியடிகள் 1921-ஆம் ஆண்டு மதுரைப்பகுதிக்கு வந்தார். அப்பொழுது அவர் கண்டது அவரை பாதித்தது. ஒரு புறம் செல்வ சீமான்களாய் இங்கிலாந்து பணியில் மினுக்கோடும், மறுபுறம் ஏழைகள் மானம் மறைக்க முடியாமலும், சிலர் ஒட்டுதுணிகளோடும் வலம் வருவதை கண்டு மனம் வருந்தினார். இரவு தூக்கத்தை தொலைத்தார். மறுநாள் காலை இடுப்பில் ஒரு வேட்டியும், தோளில் ஒரு துண்டோடு தன் உடையை மாற்றிக் கொண்டார். மனிதனுடைய தேவையை பூர்த்தி செய்வதற்கு எல்லா வளங்களும் இந்த உலகத்தில் உண்டு. ஆனால் ஒரு குறிப்பிட்ட கூட்டத்தின் பேராசையால் அது தங்கள் வசமாக பாதுக்காக்கப்பட்டுள்ளது என்றார். இறைமகன் இயேசு கிறிஸ்து மானுடவாழ்வுக்கு தம்மையே வழங்கினார். எங்கு பதுக்கல் மறைந்து பகிர்வு பிறக்குமோ அங்கு சமத்துவ சமுதாயம் அமையும்.

## ***2. நீதியான நாட்டைக் கட்டமைப்போம்*** : (லூக் 3:12-14)

யோவானிடம் வந்த இரண்டாம் கூட்டத்தார் வரிதண்டுவோர் (telonai) இவர்கள் உரோமையருக்காக மண்ணின் மைந்தரிடம் கப்பம் பெறுகின்றவர்கள். அக்காலத்தில் வரிதண்டுதல் என்பது எளிதில் செல்வம் சேர்ப்பதற்கு வழியாக அமைந்த ஒரு தொழில். பாலஸ்தீனத்தில் ஆதிக்கம் செலுத்திய உரோமை ஆளுநர்கள் வரிதண்டும் பொறுப்பை குத்தகைக்கு விட்டனர். காரணம், வரிதண்டுவோர் ஆரம்பத்தில் பணியை செய்தனர் ஆனால் வேலை நேரங்களில் உரோமை இராணுவத்தின் பாதுகாப்பு இல்லாத போது பிணமாகவே மீட்கப்பட்னர். யூதர்களினால் அதிகமாக வெறுக்கப்பட்டனர். எனவே யூதர்களை வரிதண்டுவோராக நியமித்தனர். வரிதண்டுவோர் வேலையை பணம் கொடுத்தே பெற்றுக் கொண்டனர் வரிதண்டுவோர் கொடுத்த பணத்தை விட பன்மடங்காக மக்களிடமிருந்து பெறவேண்டும். என்று செயல்பட்டனர். இவர்களின் மத்தியில் காணப்பட்ட அநியாயத்தையும், பலவீனத்தையும் அறிந்த யோவான் சொன்னார் பதவியை தவறுதலாக பயன்படுத்தாதிருங்கள் என்றார். உங்களுக்கு குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் வாங்காதிருங்கள் என்றார்.

யோவானிடம் வந்த மூன்றாவது கூட்டத்தார் படைவீரர்கள் இவர்கள் உரோமை இராணுவமல்ல என்பதை புரிய வேண்டும். அதிகமான காசுக்கு ஆலயத்திலும், பொது இடங்களிலும் பாதுகாப்பு கொடுக்கும் இந்த கூலிப்படையையே நம்பி இருந்தார்கள். போரில் தங்கள் சொந்த மக்களை அரசுகள் விரும்பவில்லை. அத்தோடு கூலிப்படையினர் சில வேளைகளில் ஆக்ரோசமாக போரிட்டார்கள் என்பதும், இவர்களுக்கு உரிமைகளும், கூலியும் வெகுவாக தேவையில்லை என்பதும் இன்னொரு முக்கியமான காரணமாயிருக்கிறது. அரசு தங்களிடம் ஒப்படைத்திருக்கும் பணியை வைத்து சாமானிய சாதாரண மக்களை பயப்படுத்தி அநீதியாய் பணம் பறித்தனர். மக்களை பாதுகாக்க வேண்டியவர்கள், அமைதியை கொண்டுவர வேண்டியவர்கள் அடக்குமுறை தன்மையை கையாண்டனர். பொய்யாய் குற்றம் சாட்டி மக்களை வஞ்சிக்கிறவர்களாய் மாறியிருந்தனர். யோவான் இந்த இரண்டு கூட்டத்தையும் பார்த்து தொழிலை விட்டுவிட வேண்டும் என்று சொல்லவே இல்லை. மாறாக, "சுயநலமாக செயல்படுவதை விட்டு பொது நலத்திற்கு வாருங்கள், போதும் என்ற மனநிலைக்கு வாருங்கள்" என்றார்.

இன்று பொறுப்பில் இருப்போர் சேவை, நீதி செய்யவேண்டும் என்பதை மறுத்து அநீதியை ஊழலை அரங்கேற்றுகின்றனர். ஒரு நாட்டின் வளமை என்பது நீதியிலும் அமைதியிலும் உள்ளது. குடியரசு தினத்தன்று இயேசு கிறிஸ்து விரும்பும் பகிர்வு நிறைந்த நீதி நிறைந்த பாரத்தை அமைக்க நாம் முற்படுவோம். மாற்றம் நம்மிடமிருந்து மலரட்டும்.

அருள்திரு. D. **டார்வின் வினோ**

01-02-2020 **புதிய மாத நன்றித் தொழுகை**

# விசாரிக்கும் ஆண்டவர்

1பேது 5:6-10

**"உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டு விடுங்கள்".** (1பேதுரு. 5:7)

இத்திருமறைப்பகுதி சின்ன ஆசியாவிலுள்ள கிறிஸ்தவ சபைகளுக்கு எழுதப்பட்டது. துன்புறுத்தல் காலத்திலும் சோதனைக் காலத்திலும் கிறிஸ்தவர்களை ஊக்கப்படுத்தவும் தளர்ந்து போன நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் இத்திருமுகத்தை பேதுரு எழுதினார். அத்துடன் வாழ்வின் தகவுகளான கிறிஸ்தவ கடமைகள், உண்மையான வாழ்வு, சகோதர அன்பில் நிலைப்பெற்று வாழ்தல் போன்றவற்றையும் குறிப்பிடுகின்றார். சோதனையில் துவண்டு போகாமல் நம்பிக்கையில் மீண்டும் துளிர்விட்டு வளர அழைக்கிறார். இச்சூழலில் நம்முடைய கவலைகளையெல்லாம் எப்படி ஆண்டவரிடத்தில் விட்டுவிட வேண்டும் என்பதனை தியானிப்போம்.

## *1. இறைவனிடத்தில் தாழ்மைப்படுங்கள்* : (1பேதுரு 5:6)

இறைவனிடத்தில் தாழ்மைப்பட வேண்டுமாயின் கொலோ 1:18 படி திருச்சபையின் தலைவரும், மரித்து உயிர்த்தெழுந்த இறைவனின் திருமகனாம் இறை இயேசுவினிடத்தில் விசுவாசம் கொண்டு தாழ்மைப்பட வேண்டும். முதியவருக்கும் பணிந்து நடப்பது மேலானது. நம்மிடம் மனத்தாழ்மை இல்லையெனில் கடவுள் நம்மை இகழ்ச்சியுடன் நோக்குவார். ஆகையால் இறைவனிடத்தில் தாழ்பணிந்தால் உயர்வு உண்டு. இதைத்தான் இயேசுநாதர் யோவான் 13:4-16-ல் தம்முடைய சீடர்களின் காலடிகளைக் கழுவி மாதிரியைக் காண்பித்தார். அம்மாதிரியான வாழ்வு நம்மிடம் இருத்தல் வேண்டும். தாழ்மையின் ஆடையை தரித்துக் கொள்ளுங்கள் என்கிறார் பேதுரு. அப்படியெனில் தாழ்மை மனநிலையை தரித்துக்கொள்ள வேண்டும். இறைத்திட்டம் நம்மில் நிறைவேற தாழ்மை மிகவும் முக்கியம். தாழ்ந்த இடத்தில் தான் தண்ணீர் நிற்கும் என்பது பழமொழி. அதற்கேற்ப ஆண்டவரின் அருளை ஆசியைப்பெற வேண்டுமானால் நம்மிடம் தாழ்மை வேண்டும். மோசே தன்னை ஆண்டவருக்கு முன் தாழ்த்தினார். உயர்வு பெற்றார். அதுபோல நாமும் நம்மை மனப்பூர்வமாய் தாழ்த்துவோம். இறைவனின் விசாரிப்பை அனுபவிப்போம்.

***2. இறைவனிடத்தில் ஒப்படையுங்கள்*** : (1பேதுரு 5:7)

நம் கவலைகளையெல்லாம் இறைவனிடத்தில் விட்டுவிட வேண்டும். கவலை இல்லாத மனிதர்கள் இல்லை. கவலை மனித வாழ்வை சீரழிக்கிறது. கவலை மகிழ்ச்சியை, அமைதியை சீர்குலைக்கிறது. கவலைப்படுவதால் உடலின் ஒரு பகுதியைக் கூட கூட்டவோ குறைக்கவோ முடியாது. ஏனெனில் இயற்கையையும் இறைவன் போஷிக்கிறார் (லூக் 12:22-25). எனவே கவலைப்படாத வாழ்வு வேண்டும் ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள் என்கிறார் (பிலி 4:4). பவுல் இறையோடு இணைந்த வாழ்வு துயரை போக்கும் வாழ்வு. எனவே கவலைகளை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிட்டு மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டும். 1சாமு 1-ம் அதிகாரத்தில் அன்னாள் தன் வாழ்வின் கவலையை விசாரிக்கிற ஆண்டவரிடம் ஒப்புக்கொடுத்தார். அதன் பின்பு அவர் முகம் வாடியிருக்கவில்லை (1சாமு 1:18). எனவே நாம் நமது கவலைகளை ஆண்டவரிடம் ஒப்புக்கொடுத்து மகிழ்ச்சியை பெற்றுக்கொள்வோம்.

ஆண்டவர் நம்மை விசாரிக்கிறவர். எனவே நாம் நம்மை அவருக்கு முன்பாக தாழ்த்தி, நம் கவலைகளை அவரிடம் ஒப்புக் கொடுத்து முன்னேறிச் செல்வோம். இப்புதிய மாதத்தில் விசாரிக்கும் ஆண்டவரின் அருள் பெற்று மகிழ்வோம்.

திரு. S. **ஜாண் வினோ ராஜ்**

02-02-2020

**திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு**

# உண்மையான பக்தி

**TRUE PIETY**

மீக் 6:1-8 யாக் 1:19-27

திபா 42 மத் 6:1-8

**"தந்தையாம் கடவுளின் பார்வையில் தூய்மையானதும் மாசற்றதுமான சமய வாழ்வு எதுவெனில், துன்புறும் அனாதைகளையும் கைம்பெண்களையும் கவனித்தலும் உலகத்தால் கறைபடாதபடி தம்மைக் காத்துக்கொள்வதும் ஆகும்."** (யாக் 1:27)

பக்தி இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றது. (1) குரங்குப் பக்தி (2) பூனைப் பக்தி. குரங்குகள் மரத்துக்கு மரம் தாவி கொண்டிருக்கும் அப்போது அதன் குட்டியும் கூடவே செல்ல வேண்டும். இச்சூழலில் குரங்குக் குட்டி தனது தாயை இறுகக் கட்டிப் பிடித்துக் கொள்ளும். எத்தனை உயரத்திலிருந்து குரங்குகள் கீழே குதித்தாலும் மேலே தாவினாலும் அபூர்வமாகத்தான் குட்டிகள் கீழே விழும். இதைப் போல கடவுளை தாமாகச் சென்று பிடித்துக்கொள்ளுதலை குரங்குப் பக்தி என்பர். பூனைகள் குட்டி ஈன்ற பின் தாய்ப் பூனை இடம்விட்டு பெயரும் போது குட்டியைத் தானே வாயில் கவ்விக்கொண்டு போகும். குட்டிகள் சும்மா இருக்கும். அதாவது எல்லாப் பொறுப்புகளையும் அம்மாவிடம் விட்டுவிட்டு அம்மாவே பார்த்துக் கொள்ளட்டும் என்று பூனைக்குட்டி பேசாமல் இருந்துவிடும். இதைப் போல கடவுள் பார்த்துக்கொள்ளட்டும் என்று சும்மா இருப்பதை பூனைப் பக்தி என்பர். இப்படி பக்தி பற்றி சொல்லப்பட்டாலும் பக்தி என்பது இறைப் பயத்துடன், இறை நம்பிக்கை கலந்த ஒரு நற்செயல் ஆகும். இன்று பக்தி பல நிலைகளில் வெளிப்படுகிறது. தாழவிழுதல், பணிந்து வணங்குதல், உண்ணா நோன்பிருந்து உடலை வருத்துதல் போன்றவை பக்தியின் வெளிப்பாடாகக் காணப்படுகின்றன. ஆனால் பக்தியின் இலக்கணம் குறித்து திருமறையில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உறவு பக்தி எனப்படுகிறது. அது உண்மையானதாக இருத்தல் அவசியம். உண்மை பக்தி என்றால் எப்படிப்பட்ட குணநலன்களை வெளிப்படுத்த வேண்டும் என்பதை இன்றைய தியானப் பகுதிகள் வழியாக தியானிப்போம்.

## *1. இறைவிருப்பம் நிறைவேற்றுதல்* : (மீக் 6:8)

“ஓ மானிடா, நல்லது எது என அவர் உனக்குக் காட்டியிருக்கின்றாரே! நேர்மையைக் கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கின்றார்!”

மீக்கா இறைவாக்கினர் யூதேயாவைச் சார்ந்தவர். இவர் எசேக்கியா அரசரின் காலத்தில் சுமார் கிமு 720-719-ல் தம் செய்தியைக் கூறினார். மீக்கா என்பதற்கு ‘யாவேக்கு இணை யார்?’ என்பது பொருள். இவர் இறைவாக்கினர் வரிசையில் மிக முக்கியமானவர். அத்துடன் எளியவர்களிடம் மிகுந்த அனுதாபம் உடையவர். இவர் காலத்தில் இஸ்ரயேல் மக்கள் நேர்மையற்று நடந்தனர். தீச்செயல்கள் பல புரிந்தனர். ஏழைகளை ஏமாற்றினர். அனாதைகளை நசுக்கியதுடன் பக்தியின் பெயரால் பலி செலுத்தினர். இப்படிப்பட்ட மக்களுக்கு இறை விருப்பம் நிறைவேற்றுதல் தான் உண்மைப் பக்தி என்று தெளிவுபடுத்துகின்றார்.

அப்படி இறைவனின் விருப்பம்தான் என்ன? நேர்மை, இரக்கம், தாழ்மை போன்ற பண்புகளை உள்ளடக்கி வாழ்தல் இறைவனின் விருப்பம் என்பதை (மீக்கா 6:8) புரிந்து கொள்ளலாம். எனவே தான் நீதியற்ற நேர்மையற்ற மக்களைப் பார்த்து இறைவாக்கினர் எரேமியா, “நீதியுடனும், நேர்மையுடனும் நடந்து கொள்ளுங்கள்” (எரே 22:3) என்றும் செக்கரியா இறைவாக்கினர் “நேர்மையுடன் நீதி வழங்குங்கள், ஒருவருக்கொருவர் அன்பும், கருணையும் காட்டுங்கள்; கைம்பெண்ணையோ, அனாதையையோ, அன்னியரையோ, ஏழைகளையோ ஒடுக்க வேண்டாம்; உங்களுக்குள் எவரும் தம் சகோதரனுக்கு எதிராகத் தீமைச் செய்ய மனத்தாலும் நினைக்க வேண்டாம்” (செக் 7:9,10) என்றும் குறிப்பிடுகின்றர்.

பக்தியுடன் வாழ்கிறேன் என்று சொல்லும் நாம் கடவுள் விரும்பும் செயல்களைச் செய்து அதன் வழியாக நம் பக்தியை உண்மை பக்தியாக மாற்றி இறை ஆசி பெறுவோம்.

## *2. கறைபடாது வாழ்தல்* : (யாக் 1:27)

“தந்தையாம் கடவுளின் பார்வையில் தூய்மையானதும் மாசற்றதுமான சமய வாழ்வு எதுவெனில், துன்புறும் அனாதைகளையும் கைம்பெண்களையும் கவனித்தலும் உலகத்தால் கறைபடாதபடி தம்மைக் காத்துக் கொள்வதும் ஆகும்”

உலகெங்கும் சிதறுண்டு வாழும் இஸ்ரயேலின் பன்னிரு குலத்தினருக்கும் யாக்கோபு திருமுகம் இயேசு கிறிஸ்துவின் பணியாளராகிய யாக்கோபினால் எழுதப்பட்டது. கிறிஸ்தவர் ஒருவர் தம் அன்றாடக் கடமைகளைப் பிழையின்றிச் செய்து முடிக்க வேண்டும் என்பதை இத்திருமுகம் தெளிவுபடுத்துகிறது.

கறை நல்லது என்று விளம்பரங்கள் சொல்லுகின்றன. ஆனால் கறை நல்லதல்ல. கறைபடாத வாழ்வு வாழவேண்டும் என்பதை திருமறை தெளிவுப்படுத்துகின்றது. மனித வாழ்வில் கறைபடிவது இலகுவானது. கறைபடிந்து விடாமல் வாழ்வது மிகமிக கடினம். ஆனால் உலகத்தில் வாழும் போது கறைபடாமல் வாழ்வது உண்மைப் பக்தி என்று யாக்கோபு தெளிவுப்படுத்துகின்றார். நம்மில் மலிந்து காணப்படும் பெருமை, ஆணவம், ஆடம்பரம் போன்றவை நம்மை கறைபடுத்தி விடுகின்றது.

அரசர் யோயாக்கீம் ஆட்சிக்காலத்தில் பாபிலோனிய அரசன் நேபுகாத் நேச்சார் எருசலேம் மீது போர் தொடுத்து யோயாக்கீமையும் எருசலேம் ஆலயத்தில் இருந்த சில பாத்திரங்களையும் எடுத்துச் சென்றான். பின்பு இஸ்ரயேலருக்குள்ளே அழகுமிக்க, எல்லா ஞானத்திலும் தேர்ச்சி பெற்ற, அறிவிலும், உணர்விலும், கல்வியிலும் சிறந்த அரண்மனையில் பணியாற்றும் திறமை படைத்த இளைஞர்களை அழைத்து பயிற்சி கொடுக்கப்பட்டது. இதில் தானியேல், அனனியா, மிசாவேல், அசரியா என்பவர்களும் இருந்தார்கள். தானியேல் அரசனின் சிறப்புணவினாலும், திராட்சை இரசத்தினாலும் தம்மைக் கறைபடுத்திக் கொள்ளக்கூடாது என்ற உறுதியை உள்ளத்தில் கொண்டார். எனவே மரக்கறி உணவை உட்கொண்டார். இதனால் அந்நிய நாடாகிய பாபிலோனிலே உயர்ந்த பொறுப்பை கடவுள் வழங்கினார் (தானி 1)

நேபுகாத்நேச்சார் பெருமையால் தன்னைக் கறைபடுத்தினார். தாழ்நிலைக்குத் தள்ளப்பட்டார் (தானி 4). யோசேப்பு எகிப்தில் போத்திபார் என்பவரின் இல்லத்தில் அடிமையாக இருந்த போது தன்னைக் கறைபடுத்திக் கொள்ளுகின்ற சூழல்கள் போத்திபாரின் மனைவியால் வந்த போது கூட குற்றத்திற்கு அஞ்சி விலகி ஓடினார். தன்னைக் கறைபடியாமல் பாதுகாத்தார். விளைவு கடினங்களைச் சந்திக்க வேண்டியது இருந்தது. ஆனால் கறைபடாமல் வாழ்ந்த யோசேப்பு கடவுளால் எகிப்தில் உயர்ந்த பொறுப்பைப் பெற்றார் (தொநூ 39).

“உங்களைக் கழுவித் தூய்மைப்படுத்துங்கள்; உங்கள் தீச்செயலை என் திருமுன்னிருந்து அகற்றுங்கள்; தீமை செய்தலை விட்டொழியுங்கள்” (எசா 1:16) என்று இறைவாக்கினர் எசாயா அழைப்புக் கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்து தமது மலைப் பொழிவில் “தூய்மையான உள்ளத்தோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்” (மத் 5:6) என்கிறார். எனவே இறை மக்களாகிய நாம் வாழ்வில் பெருமை, பொறாமை, உலக இச்சை இவைகளால் நம்மை கறைபடுத்திக் கொள்ளாமல் உண்மைப் பக்தியுடன் தூய்மை வாழ்வு வாழ்ந்து இறை ஆசிபெறுவோம்.

### *3. மறைவாக நன்மை செய்தல்* : (மத் 6:3)

“நீங்கள் தர்மம் செய்யும் போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்.”

மீக்கா இறைவாக்கினர் சொல்லும் போது இரக்கம் கொள்வதில் நாட்டம் வேண்டும். அதுவே உண்மைப் பக்தி என்கிறார். இதையே இயேசு கிறிஸ்து சொல்லும் போது இரக்க குணம் தேவை. ஏழை எளியவர்களுக்கு நன்மை செய்து வாழ்தல் வேண்டும். ஆனால் அது பிறர் காண அல்ல. மறைவாகச் செய்யபடவேண்டியது என்று குறிப்பிடுகின்றார். அதைத்தான் இன்றைய நற்செய்திப் பகுதி குறிப்பிடுகின்றது.

இயேசு கிறிஸ்துவின் காலத்தில் சமயத் தலைவர்களும், பரிசேயர்களும், பிறர் காணுகின்ற விதத்தில் தர்மம் செய்தார்கள். தாங்கள் தர்மம் செய்வதைக் குறித்து தம்பட்டம் அடித்தார்கள். எனவே மக்கள் பார்க்க வேண்டுமென்று அவர்கள் முன் உங்கள் அறச் செயல்களைச் செய்யாதீர்கள். நீங்கள் தர்மம் செய்யும் போது உங்களைப் பற்றி தம்பட்டம் (தற்பெருமை) அடிக்காதீர்கள். நீங்கள் தர்மம் செய்யும் போது உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரிய வேண்டாம். நீங்கள் செய்யும் தர்மம் மறைவாக இருக்கட்டும். அப்போது கடவுள் கைம்மாறு அளிப்பார் (மத் 6:1-4) என்று குறிப்பிடுகின்றார்.

தூய பவுலார் குறிப்பிடும் போது “நன்மை செய்வதில் மனந்தளரா திருப்போமாக”! (கலா 6:9) என்று கலாத்திய திருச்சபை மக்களுக்குத் தெளிவாகப் போதிக்கின்றார்.

“ஏழைக்கு இரங்குகிறவர் இன்பம் துய்ப்பார்” (நீதி 14:21) “நேர்மையையும் இரக்கத்தையும் கடைப்பிடித்து நடப்பவர் நீடித்து வாழ்வார், மேன்மையும் அடைவார்” (நீதி 21:21) என்று நீதிமொழிகளின் ஆக்கியோன் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

வானதூதர் புடைசூழ மானிட மகன் மாட்சியுடன் வரும் போது அவர் தம் மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். அப்போது ஆயர் செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் வெவ்வெறாகப் பிரித்துச் செம்றியாடுகளை வலப்பக்கத்திலும் வெள்ளாடுகளை இடப்பக்கத்திலும் நிறுத்துவது போலும் மக்களை அவர் வெவ்வேறாகப் பிரித்து நிறுத்துவார். அப்போது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து நான் பசியாக இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள்; தாகமாக இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள்; அன்னியனாக இருந்தபோது என்னை ஏற்றுக்கொண்டீர்கள், ஆடையின்றி இருந்தபோது ஆடை

அணிவித்தீர்கள். நோயுற்ற போது கவனித்தீர்கள். சிறையில் இருந்தபோது தேடி வந்தீர்கள். எனவே நீங்கள் என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்கள். உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாக பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறுவார். அப்போது அவர்கள் நாங்கள் இதை எப்போது செய்தோம் என்று கேட்பார்கள். அதற்கு மறுமொழியாக மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்று பதிலளிப்பார் என்றும் இடது பக்கத்தில் நிற்பவர்கள் நன்மை செய்யாதபடியால் அவர்களுக்குத் தண்டனை வழங்குவார் (மத் 25:31-46) என்றும் குறிப்பிட்டுச் செய்கின்ற நன்மையை மறைவாகச் செய்தவர்கள் இறையாசி பெறுவர் என்பதை தெளிவுப்படுத்துகிறார் இயேசுகிறிஸ்து. எனவே நன்மை செய்து வாழ்வது சிறப்பு. அந்த நன்மையை மறைவாகச் செய்வதே உண்மையான பக்தி என்பதை புரிந்து செயல்படுவோம்.

பக்தியுடன் வாழும் கிறிஸ்தவர்கள் என்று மார்தட்டிக் கொள்கின்ற நாம், நமது பக்தி எப்படி இருக்கிறது என்பதைச் சிந்திக்க அழைக்கப்படுகிறோம். நமது பக்தியால் இறை விருப்பம் நிறைவேற்றுகின்றவர்களாக, கறைபடாது வாழ்கின்றவர்களாக, மறைவாக நன்மை செய்கின்றவர்களாக வாழ்ந்து உண்மைப் பக்தியுள்ளவர்களாக மாறி இறை ஆசி பெறுவோம்.

அருள்திரு. R. ***டேவிட் ஜெபசிங்***

09-02-2020

**உயிர்ப்புக்கு முன்வரும்**
**ஒன்பதாம் ஞாயிறு**

## ஓய்வுநாள் : படைப்பின் உச்சம்

**SABBATH AS THE CULMINATION OF CREATION**

எசா 65:17-25 எபி 4:2-13
திபா 8 மாற் 2:23-28

**"...ஓய்வுநாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது; மனிதர் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை."** (மாற் 2:27)

ஓய்வுநாள் யூதர்கள் வாழ்வில் முக்கியமான நாள். இஸ்ரயேலர் ஆண்டவரோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளம். படைப்பின் வரலாற்றில் படைப்பாளராகிய கடவுள் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் அந்நாளைப் புனிதப்படுத்தினார் எனவும் திருமறை கூறுகிறது. (தொநூ 2:2,3). இஸ்ரயேலருக்கு ஆண்டவர் மோசேயின் வழியாக கொடுத்த பத்துக் கட்டளையில் 'ஓய்வுநாளை தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு' எனவும், 'அந்நாள் உன் கடவுளாகிய ஆண்டவருக்கான ஓய்வுநாள் எனவும் வாழ்வில் கருத்தாய்ப் பின்பற்ற வேண்டும்' எனவும் கற்றுக்கொடுத்தார் (விப 20:8-11). மேலும், இச 5:15-இல் இஸ்ரயேலருக்கு ஆண்டவர் கொடுத்த விடுதலையை நினைவுகூர்ந்து அவர்கள் அடிமைகளுக்கும் வேலையாட்களுக்கும் ஓய்வு வழங்க வேண்டும் என்ற நியதியையும் இஸ்ரயேலருக்கு வழங்கினார். வாரத்தின் ஏழாம் நாளாகிய ஓய்வுநாள், இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு பின்பு வாரத்தின் முதல்நாளாகிய ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. ஓய்வுநாள் இன்று படைப்பின் உச்சமாக பின்பற்றப்பட்டு வருகிறதா? அல்லது பெயருக்காக மட்டும் பின்பற்றப்படுகிறதா? என்ற கேள்வியோடு ஓய்வுநாள் நமக்கு கற்றுத்தரும் உண்மைகளை திருமறை சார்ந்து சிந்திப்போம்.

### *1. ஓய்வுநாள் புத்தாக்கம் செய்யப்பட வேண்டிய நாள்* :
(எசா 65:17)

எசாயா இறைவாக்கினர் புதிய மண்ணுலகும் விண்ணுலகும் படைக்கப்படும் நாளை திருக்காட்சியாக பார்க்கிறார். புதிய படைப்பில் மக்களின் வாழ்வும் புத்தாக்கம் செய்யப்படவுள்ளது என்ற செய்தியை முன்னறிவிக்கிறார். தீங்கு செய்யாத மக்களும், வேறுபாடின்றி இணைந்து வாழ்பவர்களும் தங்கள் உழைப்பின் பலனை தாங்களே அனுபவிக்கும்

நாட்களும் நீண்ட வாழ்நாள் கொண்ட மக்களும் வாழும் நாள் அது. தொடக்கத்திலிருந்த படைப்பின் உண்மை நிலை இங்கு புதுப்பிக்கப்படுகிறது. மானிடர்களின் கீழ்ப்படியாமையினால் ஏற்பட்ட படைப்பின் வீழ்ச்சி புதிய நிலையை எட்டுகிறது. அடிமைத்தன வாழ்விலிருந்த இஸ்ரயேலருக்கு இறைவனின் திட்டம் இங்கு எசாயாவால் முன்னறிவிக்கப்படுகிறது. அவர்கள் வாழ்வில் இத்தகைய மாற்றம் உருவாவதால் அவர்கள் வாழ்வு சிறப்படையும்.

படைப்புகளனைத்தும் புத்தாக்கம் செய்யப்படும்போது படைப்பின் உச்சமாகிய ஓய்வுநாள் இன்று புதிதாக்கம் செய்யப்படுகிறதா? என்ற கேள்விக்கு நமது பதில் என்ன? நமது சிந்தனையிலும் செயலிலும் ஏற்படும் மாற்றமே ஓய்வுநாளின் உண்மைத் தன்மையினை உலகிற்கு சான்றாக மாற்றும்.

### *2. ஓய்வுநாள் இறையுறவைப் புதுப்பிக்கும் நாள்* : (எபி 4:7)

ஓய்வுநாள் இறைவனால் உருவாக்கப்பட்டது. தம் படைப்பின் வழியாக மகிழ்வைக் கண்டவர் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். எனவேதான் ஓய்வு நாளை தூய்மையாகப் பின்பற்ற வேண்டும் என்ற நியதியை இஸ்ரயேலருக்கு கொடுத்தார். தம்மைப்போல தம் படைப்பும் காணப்பட வேண்டும் என்பதில் கடவுள் விருப்பமுடையவராக காணப்பட்டார். மேலும், இந்த வாய்ப்பை கீழ்படியாமையினால் பலர் பெற்றுக்கொள்ளவில்லை எனவும், கடவுளே அந்த நம்பிக்கையின் வாசலை அடைத்தார் எனவும் கூறப்பட்டுள்ளது.

இஸ்ரயேல் மக்கள் தம் ஆண்டவரோடுள்ள உறவை சீராக வைத்துக்கொள்ளவில்லை. இதனால் பலமுறை வேற்றுநாட்டு அரசனுக்கு அடிமையாக சென்று பல துன்பங்களை அனுபவித்தனர். துன்பத்தின் உச்ச நிலையில் இறைவனைத் தேடி அவரோடுள்ள உறவை சீர்செய்தனர். திரும்பவும் இறையாசிக்கு சொந்தமானார்கள். இயேசு கிறிஸ்துவும் 'என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார்' (மத் 12:30) எனக் கூறுகிறார். எனவே, நாமும் ஓய்வுநாளில் இறையவரோடு இணையும் உறவை புதுப்பிக்க இறைவனின் சத்தத்தைக்கேட்டு அவர் சொற்படி கீழ்ப்படிந்து நடந்தால் இறையுறவை புதுப்பித்துக் கொள்ளலாம் (எபி 4:7) ஓய்வு நாள் இறையுறவைப் புதுப்பிக்கும் நாளாக அமையட்டும்.

### *3. ஓய்வுநாள் மனிதநேயம் காக்கப்பட வேண்டிய நாள்* : (மாற் 2:27)

யூதர்கள் ஓய்வுநாளைக் கடைபிடிப்பதில் மிகவும் கண்டிப்பாக இருந்தனர். யூதச் சட்டங்களுக்கு ரபிமார் கொடுக்கும் விளக்கங்களை

கடைபிடிக்கக் கட்டாயப்படுத்தப்பட்டனர். மேலும், யூதர்கள் கண்டிப்பாக தவிர்க்க வேண்டிய 39 வேலைகளைப் பட்டியலிட்டு ஓய்வுநாளில் அதை செய்யக்கூடாது என வற்புறுத்தினர். இவைகளில் அனுதின வாழ்விற்கு அடிப்படையாக கட்டாயம் செய்யப்பட வேண்டிய வேலைகளும் இருந்தது. இந்த பின்னணியத்தில் ஓய்வுநாளில் இயேசுவின் சீடர்கள் வழியில் கதிர்களை கொய்து தின்றபோது பரிசேயர்கள் இயேசுவிடம் இச்செயலைக் குறித்து குற்றம் சாட்டினர். ஆனால், இயேசு பழைய ஏற்பாட்டின் சட்டங்களுக்கு புது விளக்கங்களைக் கொடுத்து பழைய ஏற்பாட்டு நிகழ்வையும் சுட்டிக் காண்பித்து (மாற் 2:25,26), ஓய்வுநாளைக்குறித்த அவர்களின் தவறான எண்ணத்தை நீக்கி ஓய்வுநாளுக்காக மனிதன் அல்ல, மனிதர்களுக்காகத்தான் ஓய்வுநாள் என்னும் கருத்தை தெளிவுபடுத்தினார் (மாற் 2:27). இயேசுவின் போதனைப்படி அன்பு, இரக்கம், நீதி ஆகியவையே ஓய்வுநாள் சட்டத்தை கடைபிடிப்பதைவிட மேலானது என்ற மனிதநேய சிந்தனைகளை வெளிப்படுத்தினார்.

எனவே, நாமும் ஓய்வு நாளை கடமைக்காக பின்பற்றாமல் நம்மை புத்தாக்கம் செய்து, இறையுறவை புதுப்பித்து மனிதநேய சிந்தனைகளோடு செயல்படும்போது நாம் பின்பற்றும் ஓய்வுநாள் பொருள் சார்ந்ததாக அமையும்.

அருள்திரு. **ரமேஷ் D. தாஸ்**

09-02-2020

**உயிர்ப்புக்கு முன்வரும்**
**ஒன்பதாம் ஞாயிறு &**
**குணமாக்கும் அருள்பணி ஞாயிறு**

# மனதுருகும் அன்பும் நலமருள்தலும்

**COMPASSIONATE LOVE AND HEALING**

எசா 42:1-9 யாக் 5:13-18
திபா 103:1-14 மாற் 7:31-37

**“.....வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சுவிட்டு அவரை நோக்கி “எப்பத்தா” அதாவது “திறக்கப்படு” என்றார்.** (மாற் 7:34)

மனதுருகும் அன்பு என்று சொல்லும் போது அது உணர்ச்சியன்று. அது உணர்வாகும். அந்த உணர்வு மேலோட்டமானதல்ல மிகவும் ஆழமானது. இதை அடிவயிற்றில் இருந்து எழும் அன்பு எனலாம். துன்பப் படுவோருடன் உடலால் உள்ளத்தால் உணர்வுப் பூர்வமாக இணைவதாகும். கண்பார்வை இழந்தவர்கள் மீது (மத் 20:34), தொழுநோயாளிகள் மீது (மாற் 1:41), பசியோடிருந்த மக்கள் மீது (மாற் 6:34) மகனை இழந்த கைம்பெண் மீது (லூக் 7:13) இயேசு மனதுருகினார். இறைவனின் இந்த மனதுருகும் அன்பை விப 3:7-ல் எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன். அடிமை வேலை வாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன், ஆம் அவர்களின் துயரங்களை நான் அறிவேன் என்ற வார்த்தைகள் இறைவனின் கசிந்துருகும் உள்ளத்தை வெளிப்படுத்துகின்றன. ஆக தன் உள்ளத்தில் பிறரது வேதனையை அனுபவிப்பதாகும். ஆங்கிலத்தில் Compassion இது cum (with)+Patio (to suffer) என்ற இரு இலத்தீன் வார்த்தைகளின் இணைப்பு. இதன் பொருள் உடன் துன்புறுதல் (to suffer with) என்பதாகும்.

நாம் வாசிக்க கேட்ட நற்செய்திப் பகுதியில் காது கேளாதவரும் திக்கிப் பேசுபவருமான ஒருவரை கொண்டு வந்தபோது இயேசு அவரைப்பார்த்து பெருமூச்சுவிட்ட நிகழ்வு அவருடைய உடல் ஊனத்தை உள்ளத்தில் உணர்வதின் அடையாளமாகும்.

அதாவது உடலால் உள்ளத்தால் உணர்வுப் பூர்வமாக இதயத்தில் வேதனைகளை உணர்ந்த அனுபவமாகும். இது அக்கறையின் பெருமூச்சு, கரிசனையுள்ள பெருமூச்சு ஆகும்.

நலமருள்தலுக்கு கொடுக்கப்பட்ட எபிரேய சொல்லான "நிபுத்" என்பதற்கு உடைந்ததை ஒன்றிணைத்தல், பழுது நீக்கி சீராக்குதல் அதாவது உடலளவிலோ மனதளவிலோ அல்லது இருநிலைகளிலுமோ ஏற்படும் பாதிப்பில் இருந்து மீண்டும் இயல்புநிலைக்கு கொண்டு வருவதாகும்.

ஆக, காது கேளாதவரும், திக்கிப் பேசுபவருமான ஒருவருக்கு இயேசு மனதுருகி நலமருளினதை அவர்கள் அளவு கடந்த வியப்பில் ஆழ்ந்தவர்களாய் இவர் எத்துணை நன்றாக யாவற்றையும் செய்து வருகிறார்! காதுகேளாதோர் கேட்கவும் பேச்சற்றோர் பேசவும் செய்கிறாரே என்று பேசிக் கொண்டார்கள் (மாற் 7:37).

## ***1. பாவி என்ற முத்திரையை மாற்றுகிறது*** :

யூதர்கள் எந்த ஒரு உடல் குறைபாடும் நோய்களும் துன்பங்களும் பாவத்தின் விளைவாகத் தான் வருகின்றன என்ற கொள்கை உடையவர்கள் இறைவன் பாவத்திற்கு கொடுக்கிற தண்டனையே காது கேளாமையும் வாய் பேச முடியாமையும் பார்வையின்மையும் என்பர். நீர் கடுஞ்சினங் கொண்டதால் என் உடலில் நலமே இல்லை (திபா 38:3). பாவி என்றவரை தொட்டாலே தீட்டு என்ற சமுதாயத்தில் அவர்களும் இறைவனுடைய சாயாலாக படைக்கப்பட்டவர்கள். மனித மாண்புக்குரியவர்கள் என்பதை வெளிப்படுத்தும் வண்ணமாக, எல்லாராலும் விலக்கப்பட்டு ஒதுக்கப்பட்டவரைத் தொட்டு தோழமைகொண்டு நட்பு கொள்கின்றார். தொடுதல் என்றாலே உறவு பாராட்டுதல் ஆகும். கால் ஊனமுற்றவருக்கு சுகம் அளிக்கும் போதும் பேதுருவும், யோவானும் அவரை உற்றுப்பார்த்து எங்களைப் பார் என்று கூறினர். இது உறவை வெளிப்படுத்துகிறது. அன்றைய சமூகப்பார்வை அவர்கள் பாவி என்பது. ஆனால் இறைப்பார்வை இவர்களும் கடவுளின் பிள்ளைகள். ஆக இறைவனின் அன்பு நலமருளி பாவி என்ற முத்திரையை மாற்றுகிறது.

## ***2. அங்கீகாரம் தருகிறது*** :

ஐயோ நான் ஏன் பிறந்தேனோ? நான் இவ்வுலகிற்கு பாரமாய் இருக்கிறேனே? எனக்கு ஏன் இந்த குறை என்று மனம் வெதும்பியவரை ஒன்றுமில்லாதவராக, ஒன்றுக்கும் உதவாதவராக இந்த சமுதாயத்தில் 'ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த, அருவருப்புடன் நோக்கிய மக்கள் மத்தியில் தனியே அழைத்து' (மாற் 7:33). நீ எனக்கு முக்கியமானவன், நானிருக்கிறேன் என்ற தன்னம்பிக்கையைக் கொடுத்து அஞ்சாதே, நான் உன்னை மீட்டுக்கொண்டேன்; உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன்; நீ எனக்கு உரியவன் (எசா 43:1). என் பார்வையில் நீ

விலையேறப்பெற்றவன்; மதிப்புமிக்கவன் (எசா 43:4) என்ற வாக்கின்படி நம்பிக்கையூட்டி தொட்டு அன்பை வெளிப்படுத்தினார். இயேசு அவனுடைய உடல் ஊனத்தை, உள்ளத்தில் உணர்வதின் அடையாளமாக பெருமூச்சு விடுகிறார். இறைவன் அனைவருக்கும் சொந்தம். நான் உன்னை மனிதனாக படைத்தேன். மனிதனாக ஏற்றுக் கொள்கிறேன். மனித உறவையும், மனித மாண்பையும் இழந்து இருக்கின்ற உனக்காக நான் இருக்கிறேன் என ஏற்றுக் கொள்கிறார். நோபல் பரிசுபெற்ற அன்னைதெரெசா குப்பைத் தொட்டிகளில் கிடந்த குழந்தைகள், தொழுநோயாளிகள், சமுதாயத்தில் புறந்தள்ளப்பட்டவர்களை அரவணைத்து சுகமாக்கும் பணியைச் செய்தார். (அன்னைதெரசாவிடம் ஒரு பெரிய மனிதர் எவ்வாறு இப்படிப்பட்டவர்களைத் தொடமுடிகிறது, இவர்களோடு அன்போடு, பாசமாக பழக முடிகிறது என்று கேட்டபோது நான் இறைவனிடம் பெற்ற அன்பைக் கொடுக்கிறேன் என்றார். நம்முடைய பேராயத்திலும் தூரதரிசனத்தோடு நடந்தேறும் காது கேளாதவர்பள்ளி, கண்பார்வையற்றோர் பள்ளி, மனவளர்ச்சிக் குன்றியோர் பள்ளி இவைகள் உயிருள்ள சாட்சி.

### *3. புதுவாழ்வைத் தருகிறது* :

காது கேளாமை திக்கிப் பேசுதல் குறைபாடு இருப்பதால் அவர் உடல் அளவில் முழு மனிதர் இல்லை என்பதை உணர்ந்த இயேசு, தமது விரல்களை அவர் காதுகளில் இட்டு உமிழ் நீரால் அவர் நாவை தொட்டு பெருமூச்சுவிட்டு இதயத்தில் வேதனைகளை உணர்ந்து பாதிக்கப்பட்டவரின் இதயமாகி, ‘எப்பத்தா’ என்று அதாவது திறக்கப்படுவாயாக என்று சொல்ல உடனே சுகம் கிடைத்தது. அதோடு தாழ்வு மனநிலையோடு இருந்த சூழ்நிலையை மாற்றி முழு மனிதனாக்குகிறார். சிதைந்திருந்த மானிட சாயலை முழுமைப்படுத்துகிறார். எசா 35:3-5-ல் அவர் வந்து உங்களை விடுவிப்பார் என்று சொல்லுங்கள் காது கேளாதோரின் செவிகள் கேட்கும்-வாய் பேசாதோர் மகிழ்ந்து பாடுவர் என்பதற்கிணங்க முழு மனித வாழ்வுக்கு முதல் தடையாக இருந்த உடல் ஊனத்தையும், அதோடு சேர்ந்து வரும் மன ஊனத்தையும் மாற்றி புது வாழ்வைத் தந்தார். இந்த உலகத்திற்கு வாழ்வை, அதுவும் நிறைவான முழுமையான வாழ்வை வழங்கி நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் (யோவா 10:10) பொருட்டு வந்துள்ளேன் என்ற இயேசு முழுமையற்ற மனிதத்தை முழுமையாக்கினார்.

இன்று பார்வையற்றவர்களாய் சமுகத்தில் பலர் கண்ணிருந்தும் காதிருந்தும் கேளாதவர்களாய் நாவிருந்தும் பேசாதவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த சமுதாயம் பார்வையின்மை, காது கேளாமை, பேச்சாற்றலின்மை போன்ற கட்டுகளினின்று விடுவிக்கப்பட வேண்டும். இக்குறைபாடுகள் என்பது உடலில் அல்ல உள்ளத்தில் தான். அநீதிகளை, அவலங்களை கண்டும் அமைதியாக இருக்கும் போது பார்வையற்றவர்களாகவும், பொய்மை பேசப்படுகின்ற போது அதைக் கேட்டும் பாதிக்கப்படாமல் இருக்கும் போது காதுகேளாதவர்களாகவும், உண்மைகள் விலையாகும் போது அதை எதிர்த்து குரல் எழுப்பாத போது பேச்சற்றர்களாகவும் இருக்கிறோம். இவற்றினின்று சமுகம் நலமாக்கப்பட வேண்டும். சமுகம் நலமாக்கப்பட இயேசுவின் மதிப்பீடுகளால் தொடப்பட்டு திறக்கப்படவேண்டும். பகைமை என்னும் கட்டு விலக வேண்டுமென்றால் அன்பு என்னும் உள்ளம் திறக்கப்பட வேண்டும். அநீதி என்ற கட்டு உடைக்கப்பட வேண்டுமென்றால் நீதி என்னும் கதவு திறக்கப்பட வேண்டும். பொய்மை என்ற கட்டு அழிய வேண்டுமென்றால் உண்மை என்னும் கதவு திறக்கப்படவேண்டும். ஏற்றத்தாழ்வு என்னும் கட்டுகள் உடைய வேண்டுமென்றால் சமத்துவம் என்னும் கதவு திறக்கப்பட வேண்டும். வன்முறை என்னும் கட்டு அழிக்கப்பட வேண்டுமென்றால் அமைதி என்னும் கதவு திறக்கப்பட வேண்டும். ஆண்டவரின் மனதுருகும் அன்பை அனுபவித்து, அவரின் அங்கீகாரம் பெற்று முழுவாழ்வாகிய நலமான வாழ்வு வாழ இறைவனிடம் நம்மைக் கையளிப்போம்.

அருள்திரு. N. **ஜாண் பெண்டிங்**

16-02-2020

**உயிர்ப்புக்கு முன்வரும் எட்டாம் ஞாயிறு**

# வீழ்ச்சி : படைப்பின் நோக்கத்தை மீறுதல்

**FALL AS THE VIOLATION OF THE PURPOSE OF CREATION**

தொநூ 6:1-13 உரோ 7:4-25
திபா 32 மத் 7:15-23

**"மண்ணுலகில் மனிதரை உருவாக்கியதற்காக ஆண்டவர் மனம் வருந்தினார். அவரது உள்ளம் துயரமடைந்தது"** (தொநூ 6:6).

கடவுள் தம் ஆற்றலை வெளிப்படுத்துவதாக நாம் வாழும் இவ் உலகை ஆறு நாட்களின் படைத்து நிறைவு செய்தார். இந்த ஆறு நாட்களுக்குள் மனுக்குலத்திற்குத் தேவையான எல்லாவற்றையும் படைத்து நிறைவு செய்தார். மனிதனிடம் பேணி பாதுகாக்கும் பொறுப்பும் கொடுத்தார். கடவுளால் படைக்கப்பட்டவை அனைத்துமே நல்லவைகள். ஞானமாய் படைக்கப்படவே (திபா 104:24). கடவுளின் திட்டத்தின்படி வாழாமல் தீய ஆலோசனையினால் வீழ்ச்சி உலகில் ஏற்பட்டது. ஆதாம் ஏவாள் மனுகுலம் முழுவதற்கும் முன்னோராகவும், அவர்களின் பாவம் பின்வரும் எல்லா தலைமுறையினருக்கும் உரிமைச் சொத்தாகவும் கையளிக்கப்பட்டது. பெலேகியு என்ற அறிஞர் கூறுபோது, "வீழ்ச்சியில் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு" என்றார்.

நெகேமிய கோரே என்ற இந்திய கிறிஸ்தவ இறையியலாளர் கூறும் போது, "மனிதர்கள் எவ்வளவு நற்காரியங்கள் செய்த போதிலும் அவற்றினுள் எல்லாத் தீமையும், குறையும் ஒட்டிக் கொண்டே இருக்கும் வண்ணம் மனிதன் இயற்கையாகவே முற்றிலும் கெட்டுப் போய் இருக்கிறான். மனிதன் தூய்மையான உடலுடனும், பேச்சுடனும், உள்ளத்துடனும் ஒரு சிறிய நற்செயலை செய்யக்கூடியவன் அல்ல" என்று கூறுகிறார். உலகம் உண்மை நிலையினை இழந்துவிடவில்லை மனிதனின் பாவச் செயலினால் தடைபட்ட கடவுளின் படைப்பின் நோக்கம் கிறிஸ்துவுக்குள்ளானவர்கள் வழி நடைபெறும் புதுப்படைப்பின் வழியாக திரும்பவும் தொடரப்படுகிறது. வீழ்ச்சியின் விளைவுகளை இங்கு தியானிப்போம்.

### *1. மறைத்துக் கொள்ளுதல் :*

"....நான் ஆடையின்றி இருந்தேன், எனவே, நான் ஒளிந்து கொண்டேன்" (தொநூ 3:10).

கிரேக்க நாட்டின் தலைநகரில் ஒரு தெருவில் பகல் 12 மணியளவில் ஒரு முதியவர் தன் கையில் தீப்பந்தம் ஒன்றை ஏந்திக்

கொண்டு எதையோ தேடிக் கொண்டிருந்தார். அங்கிருந்த மக்கள் அவர் செயலைக்கண்டு கிண்டல் செய்தார்கள். பார்த்தவர்கள் சிரித்தார்கள். முதியவர் எதையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து வேகத்துடன் தேட ஆரம்பித்தார். பொறுமை இழந்த ஒருவர் முதியவரை நிறுத்தி "ஐயா, எதைத் தொலைத்தீர்கள்?. இந்த பட்டப்பகலில் அதுவும் தீ பந்தத்துடன்" என்று வினவ அந்த முதியவர் "மனிதனைத் தேடுகிறேன்" என்றார். ஏன் மனிதனைத் தேடினார். தன் சொல்லிலும் செயலிலும் உண்மையுள்ள மனிதனைத் தேடினார்.

பாவம் செய்கிறவர்கள் தூயவருக்கு முன் நிற்பதில்லை. ஒளிந்து கொள்ள தாங்களாகவே தீர்மானிக்கிறார்கள். மனிதர்களின் அவல நிலை மனுகுலத்திற்கும் இயற்கைக்கும் இடையே நிகழும் இழுவை நிலையை வெளிப்படுத்துகின்றது. தொநூ 2:15-ல் கடவுள் ஏதேன் தோட்டத்தில் அழைத்து வந்து பண்படுத்தவும் காக்கவும் ஒப்படைத்தார். கீழ்ப்படியாமையினால் இறை நோக்கத்தை மீறிவிட்டார்கள். கடவுள் மனிதனின் உள்ளத்தை உற்றுநோக்குகிறார். மனிதன் உயர்வாகக் கருதும் மதிப்பீடுகள் வேறு. கடவுளின் மதிப்பீடுகள் வேறு. மனிதன் நினைவுகள் பொல்லாதவை. மனிதன் சுயநலம் சார்ந்து சிந்திக்கிறான். இந்நாட்களில் போலிகளைக் கண்டு ஏமாந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். உண்மை அறியும் போது வெட்கத்தினால் ஒளிந்து கொள்ள முற்படுகிறார்கள். வெளிவேடக்காரர்களாகவே வாழ்ந்து மனிதர்கள் மதிப்பை பெற முயற்சிக்கிறார்கள் (திபா 32:7). நம் ஆண்டவர் மட்டுமே நமக்கு மறைவிடமாக இருக்கிறார். இயேசுகிறிஸ்து மனிதனைத் தேடி வந்தார். படைப்பில் இறை நோக்கத்தை மீறி வீழ்ச்சியடைந்த, இருளில் வாழ்ந்த முந்திய ஆதாமின் ஒளிந்த தன்மையை அகற்றி புதிய ஆதாமின் பிள்ளைகளாக வாழ ஒப்படைப்போம்.

### *2. அடிமைகளாதல் :*

படைப்பின் நோக்கம் மனிதன் தந்திரமாக வாழ வேண்டும் என்பதே. இறை விருப்பத்துடன், இறை உறவில் வாழவே இறைச்சாயலில் படைக்கப் பட்டோம். ஆளுகை செய்ய வேண்டியவன் அடிமையாகிவிடுகிறான். வாழ்வு கடினமாகின்றது. பாவ அடிமைத்தனம் கடவுளால் குறிக்கப்பட்ட சிம்சோன் வாழ்வை ஆட் கொண்ட போது தன் தூரக்காட்சியை இழந்து போனான். வேதனை, ஏமற்றம், ஒடுக்கப்படும் நிலை, சாவும் தொடர்நது ஆட்கொண்டது. இறைநோக்கத்தை சிதைத்து விட்டான். செய்யக்கூடாதவற்றை செய்து இறை மாண்பை தொலைத்துவிட்டான். பாவம் ஒருவகையில் தனிமைப்படுத்துவதும், அடிமைப்படுத்துவதும், பிரிப்பதுமாகும் "பொல்லார் தம் குற்றச்செயல்களில் தாமே சிக்கிக் கொள்வர்; தம் பாவ வலையில் தாமே அகப்பட்டுக் கொள்வர்" (நீமொ 5:22).

மனித இனம் எல்லாவற்றிலும் முன்னேற்றமடைந்தாலும் பிறப்பு முதல் இறப்பு வரை ஏதோ ஒன்றில் அடிமையாகிக் கொண்டுதான் இருக்கிறது. நிறைவை நோக்கிய வாழ்க்கைப் பயணத்தில் படைப்பில் ஏற்பட்ட அடிமைத்தனம் மனிதனை ஒரு வெறுமையான நிலையைத் தான் உணரச் செய்கின்றது. மனித இயல்புகளுக்கும், உணர்வுகளுக்கும், ஆசைகளுக்கும் இடம் கொடுத்து பாவ நிலையில் தான் வாழ்கிறோம். இந்த வீழ்ச்சி விலக உலக போக்கிலான வாழ்க்கை முறைமைகளைத் தவிர்த்து இயேசுகிறிஸ்துவின் முன் மாதிரியைப் பின்பற்றும் போது புது;ஞ்படைப்பாகின்றோம்.

***3. அழியாமையை இழந்து விடுதல் :*** (மத் 7:21).

கடவுளின் கட்டளைப்படி உண்ணக்கூடாது என்ற கனியை உண்டு கீழ்படியாமையினால் ஏற்பட்ட பாவம் அழியா வாழ்வினை இழக்கச் செய்தது. மனிதன் சாவாமையை இழந்துவிட்டான். ஏதேன் தோட்டத்திலிருந்து இறைவன் இவர்களை வெளியேற்றினார். பேராசையினால் பெரும் நஷ்டத்தைச் சந்தித்தார்கள். படைப்பாளரை அவமதித்தார்கள். இதனால் ஏற்பட்ட பகை மனிதனுக்கும், இயற்கைக்கும் மற்ற படைப்புகளுக்கும் இடையே அழிவினை ஏற்படுத்தியது. ஆசீர்வாதமான வாழ்வு சாபமான வாழ்வாக மாறியது. வளமான வெற்றியான வாழ்வை இழந்து போனார்கள். இறைவன் எவ்வளவு நல்லவர், நல்ல நேக்கமுடையவர் என்பதை சுவைத்துப் பார்க்க வேண்டியவர்கள் வீழ்ச்சியடைந்தார்கள். படைப்பில் இறைவன் மேன்மையானவைகளைக் காண்பித்தார். தீயவனோ அழிந்து போகின்ற உலக ஆசையைக், காண்பித்தான். அழியாத வாழ்வுக்கு ஆஸ்திகளோ, செல்வங்களோ போதுமானவைகள் அல்ல. மனிதர் பார்க்கின்ற விதமாக கடவுள் பார்ப்பதில்லை. பரிசுத்த வாழ்வைப் பார்க்கிறார். கீழ்ப்படிதலின் வாழ்வைப் பார்க்கிறார் (எபி 10:34). இறையரசின் வாழ்வில் அதிக மேன்மையும், நிலையான சுதந்திரமும் உண்டு. ஒவ்வொருவருக்கும், எப்போதும் எதைச் செய்தாலும் அழிவற்ற இறையரசின் சிந்தை அவசியமாயிருக்கிறது.

கீழ்ப்படியாமையினால் படைப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி சாபமாய் இறைவனிடமிருந்து பூமிக்கும் மனுக்குலத்திற்கும் வந்தது. நன்மை பெற வேண்டிய இறைவனிடமிருந்து தண்டனை வந்தது. இறை நோக்கம் மாறிவிட்டது. மகிழ்ச்சிபெற வேண்டிய இடத்திலிருந்து மறைந்து கொள்கின்றார்கள். பாவ அடிமைத்தனம் இன்றும் தொடர் நிலையாகவே உள்ளது. வாழ்வுதரும் மரத்தின் வழி அடைப்பட்டு போயிற்று. இயேசுகிறிஸ்துவினால் வாழ்வின் மரத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாக மாறுவதற்கு இயேசுகிறிஸ்து சிலுவையின் வழியான மீட்பை சொந்தமாக்கி, மீட்கப்பட்டவர்களாக வாழுவோம்.

அருள்திரு. T. **ஜாண் பீட்டர்**

# தவக்காலம் (Lent)

தவக்காலத்தைக் குறிக்கும் "Lent" என்னும் ஆங்கில வார்த்தை, "Lencten" என்ற பழைய ஆங்கில (Old English) மற்றும் "lente" என்ற இடைக்கால ஆங்கில (Middle English) வார்த்தையின் சுருக்கம் ஆகும். இதன் பொருள் "இளவேனிற்காலம்" (வசந்த காலம்) என்பதாகும். தவக்காலம் (Lent) என்பது கிறிஸ்தவர்களின் வழிபாட்டு ஆண்டில் ஒரு முக்கியமான காலகட்டம் ஆகும். இது "சாம்பல் புதன்" என்றும், "திருநீற்றுப் புதன்" என்றும் வழங்கப்படுகின்ற நாளிலிருந்து இயேசு கிறிஸ்து உயிர்பெற்றெழுந்த நிகழ்வைக் கொண்டாடும் உயிர்த்தெழுதல் ஞாயிறு வரை நீடிக்கின்ற நாற்பது நாள் காலத்தைக் குறிக்கும். தொடக்ககாலத் திருச்சபையில் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா மைய இடம் பெற்றது. அந்த விழாவை மகிழ்ச்சியோடும், ஆரவாரத்தோடும் கொண்டாடுவதற்கு முன்னால், குறிப்பாக, அந்நாளில் திருமுழுக்குப் பெறுவதற்குமுன், ஓரிரு நாள்கள் கிறிஸ்தவர்கள் நோன்பு இருந்தனர். உயிர்த்தெழுதல் ஞாயிறுக்கு முன் வரும் ஞாயிறு "பாடுகளின் ஞாயிறு" எனக் கடைப்பிடிக்கப்பட்டது. பெரிய குற்றம் செய்தவர்கள் கடவுளோடும் திருச்சபையோடும் மீண்டும் நல்லுறவு கொள்வதற்குத் தயாரிப்புக் காலமாக ஆறு வாரங்கள் ஒதுக்கும் வழக்கம் உருவானது. நோன்புக்கு அடையாளமாக உடல்மீது சாம்பல் பூசிக்கொண்டு, சாக்குத் துணி உடுத்துவதும் வழக்கமானது. 5ஆம் நூற்றாண்டுக்குப் பின் எல்லாக் கிறிஸ்தவர்களும் உயிர்த்தெழுதல் பெருவிழாவுக்கு நாற்பது நாள்களுக்கு முன் சாம்பல் புதனன்று சாம்பல் பூசத் தொடங்கினர். "கடவுள் முன்னிலையில் அனைவருமே பாவிகள்" என்னும் உண்மையை அது உணர்த்தியது.

## *தவக்காலத்தின் நோக்கம்*

தவக்காலத்தின்போது கிறிஸ்தவர்கள் இறைவேண்டல், தவ முயற்சிகள், தருமம் செய்தல், தன்னொறுத்தல் போன்ற நற்செயல்கள் புரிய ஊக்குவிக்கப்படுகிறார்கள் (மத் 6:1-18). இயேசு கிறிஸ்து துன்பங்கள் அனுபவித்து, மானிட மீட்புக்காகச் சிலுவையில் இறந்தார் என்பதால் அவர் அனுபவித்த துன்பங்களில் பங்குபெற கிறிஸ்தவர்கள் தவக் காலத்தின்போது முன்வருகிறார்கள். சிலுவையே வாழ்வுக்கு வழி என்னும் நம்பிக்கையிலிருந்து இச்செயல் பிறக்கிறது. மேலும், பிறருக்குத் தங்களால் இயன்ற உதவி செய்து, பிறரிடம் அன்பு காட்டும் பணிகளில் ஈடுபடவும் கிறிஸ்தவர்கள் தவக் காலத்தின்போது தங்களை ஈடுபடுத்துகிறார்கள்.

## தவக்காலத்திற்கான திருமறை அடிப்படை

மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய நற்செய்தியாளர்கள் இயேசு கிறிஸ்து பாலைநிலத்தில் நாற்பது நாள்கள் இரவும் பகலும் நோன்பிருந்தார் என்னும் தகவலைத் தருகின்றனர் (மத் 4:1-11; மாற் 1:12-13; லூக் 4:1-13). இவ்வாறு இயேசு நோன்பிருந்ததைக் கிறிஸ்தவர்களும் தங்கள் வாழ்வில் கடைப்பிடிக்க அழைக்கப்படுகிறார்கள். இயேசு கிறிஸ்து நோன்பிருந்தபோது அலகை அவரைச் சோதித்தான். தம் பசியை ஆற்ற இயேசு கல்லை அப்பமாக மாற்றலாம் என்றும், தன்னை வணங்கினால் உலக அரசுகளை அவருக்குக் கொடுப்பதாகவும், எருசலேம் கோவிலின் உச்சியிலிருந்து கீழே குதித்தாலும் அவருக்குத் தீங்கு நிகழாமல் கடவுள் காப்பார் என்றும் கூறி, மூன்று முறை அலகை இயேசுவைச் சோதித்தான். இயேசு தம்மை மாயாஜாலம் (magic) நிகழ்த்துபவர் போல ஆக்கலாம் என்றும், கடவுளை மறுத்து அலகையை வணங்கலாம் என்றும், கடவுளின் ஆற்றலுக்குச் சவால் விடலாம் என்றும் வந்த சோதனைகளுக்கு இடம் கொடாமல், அவற்றை முறியடித்து, அலகையை வென்றார் என்று நற்செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறே கிறிஸ்தவர்களும் அலகையின் சோதனையை முறியடிக்க தவக்காலம் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

## நாற்பது (40) நாள்களுக்கான திருமறை அடிப்படை

நாற்பது நாள்கள் என்னும் காலம் நிர்ணயிக்கப்பட்டதற்குத் திருமறையில் சில பின்னணியங்கள் உண்டு. கடவுள் எப்போதெல்லாம் ஒருவரைத் தம் பணிவிடைக்காக ஆயத்தப்படுத்த விரும்பினாரோ அப்போதெல்லாம் 40 நாள்கள் ஆயத்த/தயாரிப்புக் காலத்தைக் கொடுத்தார். அவை:

1. 40 நாள்கள் பெய்த பெருமழையினால் நோவாவின் வாழ்வு மாற்றமடைந்தது (தொநூ 7:12).
2. 40 நாள்கள் மோசே சீனாய் மலையில் தங்கியிருந்து கடவுளிடம் கற்று, தன்னை ஆயத்தப்படுத்தினார் (விப 24:18; 34:28; இச 9:9,25).
3. 40 நாள்கள் இஸ்ரயேலிய உளவுகாரர்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டில் தங்கியிருந்து அதை ஆய்வுசெய்தனர் (எண் 13:25).
4. 40 நாள்கள் சவால்விட்ட கோலியாத்தின் சவாலினால் தாவீதுக்குள் ஒரு மாற்றம் வந்தது (1சாமு 17:16).
5. ஒரு வேளை உண்ட உணவின்வழி கடவுள் தந்த ஆற்றலால் எலியா இறைவாக்கினர் 40 நாள்கள் நடந்தார் (1அர 19:8).

6. 40 நாள்கள் நினிவே மக்கள் மனம் மாற காலக்கெடு கொடுக்கப்பட்டது. மக்கள் மனமாற்றமடைந்தனர் (யோனா 3:4).
7. 40 நாள்கள் இயேசு பாலைநிலத்தில் நோன்பிருந்து தம் திருப்பணிக்கு ஆற்றல் பெற்றார் (மத் 4:2).
8. 40 நாள்கள் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து தம் சீடர்களோடிருந்து அவர்களை ஆற்றல்படுத்தினார் (திப 1:3).

### *இன்று தவக்காலம்*

மேற்கூறிய திருமறை அடிப்படையிலும், திருச்சபையின் மரபுப் பின்னணியிலும் தவக் காலம் நாற்பது நாள்கள் நோன்புக் காலமாகக் கருதப்பட்டு வந்துள்ளது. நாற்பது நாள்கள் கணக்கிடுவதில் கிறிஸ்தவ சபைகளிடையே சில வேறுபாடுகள் உள்ளன. பொதுவாக, தவக் காலம் சாம்பல் புதனிலிருந்து தொடங்கி, புனித சனி வரை நீடிக்கும். இடையில் வருகின்ற ஆறு ஞாயிறுகளும் தவ நாட்களாகக் கருதப்படுவதில்லை. ஏனெனில், ஞாயிற்றுக் கிழமை இயேசு உயிர்பெற்றெழுந்த நாள் ஆதலால் அது விழாக் கொண்டாடும் காலமே தவிர நோன்பு கடைப்பிடிக்கும் காலம் அல்ல.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் மக்கள் தங்கள் பாவங்களை உணர்ந்து, மனம்வருந்தி, சாம்பலை உடலெங்கும் பூசி, சாக்குஉடை உடுத்தி, தலைக்கு எண்ணெய் பூசாமல் சாம்பலில் உட்கார்ந்து நோன்பு இருப்பார்கள். எனவே, தவக்காலம் என்பது தவறுகளை உணர்ந்து மனந்திரும்பவும், நம்மை நாமே அறிந்து ஆண்டவரின் வழிக்குக் கொண்டுவரவும் தரப்படுகிறது. மேலும், ஆண்டவர் இயேசுவின் சிலுவைப் பாடுகளைச் சிந்தனை செய்யவும், அப்பாடுகளில் நம்மை இணைத்து சிலுவை சுமக்கவும், சிலுவைக்கு அப்பால் உள்ள வெற்றி வாழ்வை சொந்தமாக்கவும் இக்காலம் நம்மை அழைக்கிறது. தவக்காலத்தில் திருமறையில் அடங்கியுள்ள கடவுளின் வார்த்தையைக் கவனமாகப் படிப்பதும், படிக்கக் கேட்பதும், அந்த வார்த்தைக்கு ஏற்ப வாழ்வதும் பொருத்தமானது. நாம் செய்த பாவங்களுக்குக் கடவுளிடம் மன்னிப்புக் கேட்பதும், அதே மன்னிப்பைப் பிறருக்கு வழங்குவதும் தவக் காலத்தின் சிறப்பாகும். சாம்பல் புதனன்று தொடங்கும் தவக்காலத்தை இந்நிலையில் உண்மையாய் பயன்படுத்துவோம்.

## *இவ்வாண்டு....*

இவ்வாண்டின் தவக்கால தியானத்தை வலுப்படுத்த, தவக்கால புதன்கிழமைகளில், "சிலுவைக்குச் சான்றுபகர்ந்தவர்கள்" என்ற பொதுவான கருப்பொருளை மையப்படுத்தி, இயேசு கிறிஸ்துவை அறிமுகம் செய்த அந்திரேயா, சிலுவையின் அன்புக்குச் சான்றுபகர்ந்த யோவான், துன்பத்தைத் துணிவுடன் ஏற்ற யாக்கோபு, கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் சான்றான பேதுரு, கிறிஸ்துவுடன் சாகத் துணிந்த தோமா எனத் திருத்தூதர்கள் சிலரின் வாழ்வை மையப்படுத்திய அருளுரைகள் தரப்பட்டுள்ளன. அதுபோல, தவக்கால வெள்ளிக்கிழமைகளில், "மனந்திரும்புங்கள்" என்ற கருப்பொருளில் தீச்செயல் மற்றும் அகந்தையை விட்டு, இறைநீதி, இறை இரக்கம், இறைநன்மை மற்றும் இறையுறவு போன்றவைகளுக்குத் திரும்பவேண்டும் என்ற இறையழைப்பை மையப்படுத்திய அருளுரைகள் ஓசேயா இறைவாக்கின நூலைத் தழுவி வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ்வருளுரைகள் தரும் சிந்தனைகள் இவ்வாண்டின் தவக்காலத்தில் இறைமக்களின் வாழ்வைப் புதுப்பிக்கப் பயன்படுத்துவோம்.

அருள்திரு. **T.P. சலீம் தங்க குமார்**

23-02-2020 **உயிர்ப்புக்கு முன்வரும் ஏழாம் ஞாயிறு**

## தவக்காலம் : ஒரு மாற்றுருவாக்கத்தின் காலம்

**LENT : A TIME OF TRANSFORMATION**

எசா 44:21-28 உரோ 11:13-24
திபா 6 யோவா 2:1-11

**"உன் குற்றங்களைக் கார்மேகம் போலும், உன்பாவங்களை பனிப்படலம் போலும் அகற்றிவிட்டேன். என்னிடம் திரும்பிவா, நான் உனக்கு மீட்பளித்து விட்டேன்."**

(எசா 44:22)

ரிச்சர்ட் உம்பிராண்ட் ருமேனியா நாட்டைச் சார்ந்த போதகர். 1909 முதல் 2001 வரை வாழ்ந்தவர். அவரது துவக்க வாழ்வு சமயக் கல்வியுடன் துவக்கப்படவில்லை. தமது 14-ம் வயதில் நாத்திகராகத் திகழ்ந்தார். இந்நிலை வாழ்வு அவருக்கு அமைதி தரவில்லை. உளப் போராட்டம் தான் அவரில் மிஞ்சி நின்றது. Christian Wolfkes என்ற ஜெர்மனிய தச்சர் வழியாக (Carpenter) 1938 -ம் ஆண்டு கிறிஸ்தவப் பற்றுறுதி வாழ்விற்குள் வந்தார். இவர் அருட்பொழிவுபெற்ற ஆங்கிலிக்கன் ஆயராகவும், லுத்தரன் ஆயராகவும் பணிபுரிந்தார். 1948-ல் வெளிப்படையாக கம்யூனிசமும், கிறிஸ்தவமும் ஒத்துப்போக முடியாது எனக் குறிப்பிட்டார். அதன் விளைவாக சிறையிலடைக்கப்பட்டு, 14 ஆண்டுகள் சிறையில் துன்புறுத்தப்பட்டார். ரஷ்ய நாட்டுச் சிப்பாய்களுக்கு ஒரு மில்லியன் நற்செய்தி நூற்களை வினியோகம் செய்தார். 1965-ல் இருநிறுவனங்கள் இவருக்காக 10,000 லாடர், பணயத்தொகையாக செலுத்தி மீட்டு ருமேனியாவை விட்டு வெளிநாடு அனுப்பினர்.

ருமேனியச் சிறையில் இவர் அடைக்கப்பட்ட நாட்களில் இவரோடு பல கிறிஸ்தவ கைதிகளும் அவருடன் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். ஒருவர் காயப்பட்டு பக்கவாத வியாதியாய் நடக்க இயலாது படுத்திருந்தார். சிறையில் ஒரு ஈஸ்டர் ஞாயிறு கிறிஸ்தவ கைதிகள் நற்கருணை நடத்தும்படி அனுமதி தரப்பட்டது. திருவிருந்து நடந்துவதற்குரிய மேசை கிடைக்கவில்லை. பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்த கிறிஸ்தவக் கைதியைப் படுக்க வைத்து அவர் உடல் மீது அப்பம், இரசம் ஆகியவற்றை வைத்துத் திருவிருந்து தொழுகையை நடத்தினர். அப்போது அருளுரையாற்றிய ரிச்சர்ட் உம்பிராண்ட், "இதைவிட சிறந்த திருவிருந்து மேசை நமக்கு கிடைக்க முடியாது, ஆண்டவரின் நொறுக்கப்பட்ட உடலை ஏந்தி வழங்குவதற்கு இந்த

சகோதரனின் நொறுக்கப்பட உடல் தான் சிறந்த மேசையாக அமைய முடியும்'' என்று கூறினார். உம்பிராண்ட் அவர்கள் சிறைச்சாலைத் துன்பத்தின் மத்தியில் பெற்றுக்கொண்ட மன வலிமை, மாற்றுருவாக்கத்துடன் புதுப் பணிகளைத் தொடர வழிகாட்டியது.

இதுபோன்று லெந்துகாலம், ஆன்மிக வளம் பெற்றும் மாற்றுருவாக்கம் பெறும் காலம் எனலாம். திருச்சபையின் கால அட்டவணையில் லெந்து என்னும் தபசுக்காலம் நோன்புக்கும், இறைவேண்டுதலுக்கும், தான தர்மத்திற்குமென வேறுபடுத்தப்பட்டு இயேசுவின் இறப்பு, உயிர்த்தெழுதல் நிகழ்வினை ஆண்டு தோறும் கொண்டாடுவதற்கான காலமாகும். இயேசுநாதர் 40 நாள்கள் யூதேயாவின் வனாந்திரத்தில் உபவாசம் செய்ததையும் (மத் 4; மாற் 1:13; லூக் 4:2), நோவாவின் நாட்களில் வெள்ளப் பெருக்கு 40 நாட்களில் நிறைவு பெற்றதையும், சீனாய் மலையில் மோசே 40 நாட்கள் தங்கியிருந்ததையும், தேவதூதன் கொடுத்த உணவினால் தீர்க்கர் எலியா 40 நாட்கள் நடந்து திரிந்த நிகழ்வுகளைத் திருமறையில் காணலாம். (1அரா 19:8) இத்தகைய பற்றுதிப் பயணங்களில் 40 நாள்கள் முதன்மை பெறுவதையும் திருமறையில் காணமுடிகின்றது. இப்பணிகளிலும் மாற்றுருவாக்கத்தின் வளர்ச்சி நிலையினை நாம் காணமுடியும். உதாரணமாக இயேசு 40 நாள் உபவாசம் செய்தபின் சோதனையை எதிர்த்து வெற்றி கண்டார். இது முழுமையாக ஒரு மாற்றுருவாக்கத்தின் அனுபவமே.

### *1. அடிமைத்தனத்திநின்று விடுதலைக்கு நேரான மாற்றுருவாக்கம்* : (எசா 44:21-28)

சிலை வழிபாடு இஸ்ரயேல் மக்களின் மாபெரும் பாவம். இது இஸ்ரயேலின் கடவுளுக்கு புகழ் செலுத்தாமல் பிறவற்றின் மீது புகழ் செலுத்தும் நிலைக்குத் தள்ளிவிட்டது. அதாவது, சிலை வழிபாடு நம்மை கடவுளை விட்டு விலக்கி பொருட்களுக்கு நேராக அர்ப்பணிக்க வழிநடத்தும் (கொலோ 3:5). இறைவாக்கினர் எசாயா 'இஸ்ரயேலே, இவற்றை நீ நினைவிற் கொள்வாய்' (வ. 21) என இறைமக்களிடம் கேட்கின்றார். இதன்வழியாக இறைமக்கள் தங்கள் அடிமை வாழ்வை, அதாவது, ஏளனத்திற்குரிய சிலை வழிபாட்டின் அடிமைத்தனத்தை அமர்ந்திருந்து ஆய்வு செய்ய அழைக்கப்படுகின்றனர். நம் கண்களும், காதுகளும் கடவுளைக் குறித்த பொய்யான சிந்தனைகளால் நிரப்பப்பட்டு மாற்று வழிகளை சேவிக்கும் நிலையில் தள்ளப்பட்டது. இச்சூழலில் இறைஉண்மை நம் உள்ளத்தை நிறைக்காவிடில் தீமை நம்மை வென்று விடும் ஆகவே 'ஆய்வு செய்து இறைவனிடம் மீண்டு வா' என்கிறார் (வ. 22). தொடர்ந்து மீட்பை பெற்றுக்கொண்டதால் மகிழ்ச்சியின் பாடலை பாடினார் (23).

மாற்றுருவாக்கம் பெறும் தவக் காலம் நாம் நம்மை ஆய்வு செய்யும் காலம் (Time of self exaimnation). அதாவது, சிலுவையின் அடிச்சுவட்டில் நம்மை ஆய்வு செய்யும் காலம். திபா 46:10-ல் "அமைதி கொண்டு, நானே கடவுள் என உணர்ந்து கொள்ளுங்கள்" என கவியரசர் தாவீது குறிப்பிடுகின்றார். நாம் கடந்து வந்த பாதைகளில் மனித உறவுக்கும், இறை உறவிற்கும், சமுதாய கூட்டுறவின் வாழ்விற்கும் ஊனமுறும் வகையில் நம் செயல்கள் அமைந்திருக்குமெனில் நம்மை ஆய்வு செய்து மாற்றங்களுக்கு உட்புகுத்துவோமாக. "நாம் நம்மை உணர்வது எல்லா அறிவிற்கும்" தொடக்கம் என்ற அரிஸ்டாட்டில் என்ற மெய்யியலாளர் குறிப்பிடுகின்றார் (Knowing yourself is the beginning of all wisdom). அதுபோல "சோதனை செய்யாத வாழ்வு வாழ்த்தகுந்த வாழ்வு அல்ல" (The unexamined life is not worth living) என்கிறார் சாக்ரட்டீஸ் என்ற மெய்யியலாளர். அதே நேரத்தில் Walter Savage என்பவர் கூறுகையில், "அடுத்தவர் மீது உற்றுப்பது எளிது; ஆனால் நம்மை உற்றுப்பார்ப்பது மிகவும் கடினம்". (It is easy to look down on other; to look down on ourselves is the difficulty) என்கிறார். நம் வாழ்வு குறித்த சுய ஆய்வு இல்லையெனில் நாம் வெளிவேடக்காரர்களாவோம். எனவே, இந்த தவ நாள்கள் சிலுவையின் அடிச்சுவட்டில் நம்மை ஆய்வு செய்து நம் குறைவுகளைக் கண்டு விடுதலை வாழ்விற்கு முன்னேறுவோமாக. "இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக, உங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள்" எனப் பவுல் கூறுவது மிகவும் பொருத்தமானதே (உரோ 12:2).

### *2. இறை மீட்பில் நிலைநிற்பதற்கான மாற்றுருவாக்கம்* :

(உரோ 11:13-24)

கடவுளின் திட்டத்தில் யூத இனம் மற்றும் இனக் கிறிஸ்தவர்களின் நிலையை விளக்கும் தூய பவுல் இருதரப்பினரும் கடவுளின் பங்காளர்கள் என்கிறார். இவ் இருவரும் கடவுளால் அழைக்கப்பட்டவர்கள்; கடவுள் தமது மக்களை முற்றிலும் கைவிடவில்லை; இறைவனது அருள் வரங்களும் அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே. இவ்வாறு பிற இனத்தவர் உட்பட அனைவரும் மீட்பின் அனுபவத்தில் இணைக்கப்படுகின்றனர். இந்த மீட்பின் அனுபவத்தில் நிலைநிற்க மாற்றுருவாக்கம் தேவை.

தவக் காலம் இயேசுகிறிஸ்துவின் சிலுவையில் கனிந்த மீட்பு அனைவருக்கும் உரியது என்ற புரிதலோடு மீட்பின் பணிகளுக்காக மாற்றுருவாக்கம் பெறும் காலம் எனலாம். பூமியின் மையம் என

கருதப்படும் கொல்கொதா மலையில் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் இம்மண்ணில் கொட்டப்பட்டது. எனவே, இம்மண்ணில் வாழும் மக்களின் மீட்பிற்காக நாம் உழைக்க அழைக்கப்படுகிறோம். Andrew Murry என்பவர் குறிப்பிடுவதைப் போன்று "Salvation Comes through a Cross and a Crucified Christ". அதாவது, "மீட்பு சிலுவை வழியாகவும் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்து வழியாகவும் வருகிறது" என்ற கருத்தினை உள்வாங்கி மனித மீட்பிற்காக நாம் உழைக்க அர்ப்பணிக்க வேண்டும் மார்ட்டின் லுத்தர் கிங் ஜூனியர் என்ற அமெரிக்க மெதடிஸ்ட் போதகர், தான் சுட்டுக்கொல்லப்படுவதற்கு முந்தின நாள் நல்ல சமாரியன் உவமை வழியாக சிலுவை வழியான மீட்பின் வாழ்வு குறித்து விளக்கினார். எரிகோவின் பாதையில் குற்றுயிராய் விடப்பட்ட மனிதனைப் பார்த்து ஆசாரியனும் லேவியனும் எழுப்பிய கேள்வி 'நாங்கள் இப்பொழுது இங்கு நின்று இவனுக்கு உதவி செய்தால் எங்களுக்கு என்ன நேரிடும்? நிச்சயமாக எங்களுக்கும் இதே நிலைதான்'. எனவே, உதவாமல் சென்றனர். ஆனால், சமாரியன் அவர்கள் கேட்ட கேள்வியைத் திருப்பி கேட்கிறான். "நான் இப்போது இங்கே நின்று இவனுக்கு உதவாவிட்டால் இவனுக்கு என்ன நேரிடும்? நிச்சயமாக அழிவுதான்". எனவே, இன்னல் ஏற்று மீட்புதழுவிய மாற்றுருவாக்கப் பணிக்குத் தன்னை ஒப்படைத்தான். இதுவே சிலுவை தழுவிய மீட்பிற்கான ஒப்படைப்பு. "கலங்கரை விளக்குகள் எக்காளம் ஊதுவதில்லை. அவை ஒளிரமட்டும் செய்கின்றது" (Light houses blow no horns; they only shine) என்பது போல் லெந்து காலத்தில் மீட்பின் பணிகள் தொடரட்டும்.

ஜேக்கப் வின்டர்ஸ் என்பவர் குறிப்பிடும்போது, "தவக்காலமும், சாம்பற்புதனும் தீமையான காரியங்களை விலக்கி வைப்பது மாத்திரமல்ல; நல்லதை செய்வதும் தேவையுள்ள ஏழைக்கு உதவுவதும், மக்கள் மீது கருணையாய் இருப்பதையும் நம்மில் உருவாக்க வேண்டும்" என்கிறார். வண்ணத்துப் பூச்சியானது லார்வா, கூட்டுப்புழு, தொடர்ந்து வண்ணத்துப் பூச்சி என ஒரு நிலையிலிருந்து வளர்ச்சி நிலைக்கு மாற்றமடைந்து செல்வதைப் போன்று தவக்காலங்களில் வாழ்வுநிலையில் மாற்றங்களை அமைத்துக்கொண்டு பணிபுரிதல் வேண்டும். கிறிஸ்துவுக்குள் புது மானுடமாக (New humanity in Christ) மாற்றுருவாக்கம்பெற நம்மை ஒப்படைப்போம்.

அருள்திரு. W. **ஸ்டேன்லி ஜோண்ஸ்**

26-02-2020

தவக்காலம் - சாம்பல் புதன்

## சிலுவை : மனமாற்றத்திற்கு ஓர் அழைப்பு

**CROSS : A CALL TO REPENTANCE**

| | |
|---|---|
| எசா 1:16-20 | 2கொரி 7:8-16 |
| திபா 51 | மாற் 1:12-15 |

**“கடவுளுக்கு ஏற்புடைய முறையில் தாங்கிக் கொள்ளப்படும் மனவருத்தம் மீட்பு தரும் மனம் மாற்றத்தை விளைவிக்கிறது”.** (2கொரி 7:10)

கிறிஸ்தவ வாழ்வு என்பது மதமாற்றம் அல்ல! மனமாற்றம்! இயேசுகிறிஸ்து மதமாற்றத்தை இவ்வாறு கண்டிக்கின்றார்: “வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்கு கேடு! ஒருவரையாவது உங்கள் சமயத்தில் சேர்ப்பதற்கு, நாடு என்றும் கடல் என்றும் பாராது சுற்றி அலைகின்றீர்கள்; அவ்வாறு சேர்த்த பின் அவரை உங்களை விட இரு மடங்கு நரகத்தண்டனைக்கு ஆளாக்குகிறீர்கள்” (மத் 23:15). இயேசு கிறிஸ்து தம் போதனையில் கூட, “காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்” என்று கூறினார் (மாற் 1:15). திருமுழுக்கு யோவானின் பாலைநில அருளுரையின் தலையங்கம் மனமாற்றம் என்பதாகும் (மத் 3:2). தூய பவுல் மனுக்குலம் சிலுவையின் வழி மீட்படைவதற்கு மனம்மாறுதல் தான் தொடக்கச் செயல் என்று கருதினார் (2கொரி 7:10). பேதுரு, பெந்தெகொஸ்தே நாளில் ஆற்றிய அருளுரையின் நிறைவில் மனந்திரும்புதலுக்கான அழைப்பை விடுத்தார் (திப 2:38). சிலுவையில் தொங்கிய கள்வர்களில் ஒருவன் சிலுவையில் மனமாற்றம் பெற்று பேரின்ப வீட்டை பெற்றுக்கொண்டான் (லூக் 23:39-43). இத்தவக் காலத்தில் சிலுவையின் வழியாக மனமாற்றம் பெறுவது எவ்வாறு என்பதை நாம் தியானிப்போம்.

### *1. தீச்செயல்களிலிருந்து மனமாற்றம்* : (எசா 1:16-20)

தென் நாடாம் யூதா வலிமை மிக்க அண்டை நாடான அசிரியாவின் அச்சுறுத்தலுக்கு உட்பட்டிருந்தது. யூதாவிற்கு வரவிருந்த அழிவிற்கு காரணம் அசீரியாவின் ஆற்றலை விட யூதாவின் கடவுள் நம்பிக்கையற்றச் செயல், கடவுளுக்கு பணியாது செய்த பாவங்கள் என்பதை உணர்ந்த எசாயா இறைவாக்கினர் உங்கள் தீச்செயல்களை என்னைவிட்டு அகற்றுங்கள் என்று இறைவாக்கு உரைத்தார்.

நன்மை செய்ய வேண்டியவர்கள் நன்மை செய்யத் தவறினார்கள்; நீதியையும், நியாயத்தையும் புரட்டினார்கள். நலிவுற்றோரை நசுக்கினார்கள். உதவிச் செய்யும் மனமற்று இருந்தார்கள். இத்தகு தீயச் செயல்களிலிருந்து மனமாற்றம் தேவை என்கிறார் எசாயா ஆதரவற்றவர்களுக்கும், வழிதெரியாமல் திணறிக்கொண்டிருக்கும் கைம்பெண்களுக்காகவும் வழக்காட வேண்டும். இப்படிச் செய்வது வாழ்வில் பாடுகளைக்கொடுக்கும். சகித்துக்கொண்டு நன்மைச் செய்ய மறுக்கின்ற தீச்செயல்களிலிருந்து மனமாற்றம் பெற வேண்டும்.

இயேசு கிறிஸ்துவும் தாம் வாழ்ந்த காலத்தில் நலிவுற்றவர்கள், நோயினால் நொந்துருகிய மக்கள், தேவையிலிருப்போர், ஆதரவற்றோர் போன்றோருக்கு நன்மை செய்தார். இதனாலே பாடுகளை ஏற்கவேண்டியச் சூழல் வந்தது, அவரது முன்மாதிரியைக் கடைப்பிடிக்கும் நாம் இத்தவக்காலத்தில் நம்மை தியானித்துப் பார்த்து நன்மை செய்யாமலிருக்கும் தீச்செயலிருந்து மனமாற்றம் பெறுவோம்.

**2. *மனவருத்தம் தரும் மனமாற்றம்*** : (2கொரி 7:8-16)

வாழ்வில் மன வருத்தங்கள் மனமாற்றத்தினைக் கொண்டு வருகின்றது. தூய பவுலார் கொரிந்திய திருச்சபை மக்கள் செய்த தவறுகளைக் கண்டித்து உணர்த்துகிறார். அதாவது கொரிந்தியர்கள் இறை நம்பிக்கையற்றவர்களுடன் தங்களை பிணைத்துக்கொண்டார்கள். சிலைவழிபாடுகளில் கவனம் செலுத்த ஆரம்பித்தார்கள். தீட்டானவைகளில் அதிக நாட்டம் கொண்டவர்கள் (2கொரி 6). இந்த தீயச் செயல்களை கடுமையாக சாடினார். அறிவுரை கூறினார். இது அவர்களுக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தியது. அந்த மனவருத்தம் மனமாற்றத்தை ஏற்படுத்தியது. இந்த மனமாற்றம் அவர்களை நேர்மையாளர்கள் என்பதைக் காட்டிக் கொள்ளச் செய்தது (2கொரி 7:11).

ஆசிரியர் மாணவனைத் தண்டிக்கும் போது அதனால் ஏற்படும் மனவேதனை தனது தவறை விட்டுவிடச் செய்யவேண்டும். அதுதான் மனமாற்றம். திருப்பாடலாசிரியர் தாவீது சொல்லும் போது, "எனக்கு துன்பம் விளைந்தது என் நன்மைக்காகவே அதனால் கடவுளின் விதிமுறைகளைக் கற்றுக் கொண்டேன்" (திபா 119:7) என்கிறார். இத்தவக்காலத்தில் நாம் நம்மை ஆய்ந்து பார்த்து தவறுகள் சுட்டிக்காட்டப்படும் போது ஏற்படுகின்ற மன வருத்தங்களால், அது தரும் பாடுகளால் மனமாற்றம் பெற்றும் ஆண்டவரின் ஆசியைச் சுதந்தரிப்போம்.

### *3. இறையாட்சிக்கான மனமாற்றம்* : (மாற் 1:12-15)

இறைமகன் இயேசு கிறிஸ்து தமது திருப்பணியினை தொடங்குவதற்கு முன் முழுக்கு முனிவர் யோவானால் திருமுழுக்கு பெற்றார். அதைத் தொடர்ந்து தூய ஆவியாரால் பாலை நிலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு நாற்பது நாள்கள் இரவும் பகலும் விலங்குகளோடு இருந்தார். சாத்தானால் சோதிக்கப்பட்டார். இத்தகைய பாடுகள் முடிந்தபின், "காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி விட்டது, மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்" (மாற் 1:13-15). என்று இறையாட்சிக்கான மனமாற்றத்தைக் குறித்து போதித்தார்.

இன்று நாம் பல்வேறு பாடுகள் நம்மை நெருக்குகின்ற சூழலில், அத்தகைய பாடுகளால் நாம் வடிவமைக்கப்பட்டு இறையாட்சிக்குரிய நற்செய்தியை அறிவிக்க ஆயத்தப்பட வேண்டும். அத்தகைய மனமாற்றம் வேண்டும் என்று ஆண்டவர் இந்த தவக்காலத்தில் நம்மிடம் எதிர்பார்க்கிறார். பாடுகளைக் கண்டு ஒளித்துக்கொள்ளாமல் நற்செய்தியை அறிவிக்க நமது வாழ்வின் வழியாக, வார்த்தையின் வழியாக, செயல்கள் வழியாக இறையாட்சிக்கான நற்செய்தியை அறிவிக்கும் மனமாற்றம் பெற்றும் ஆண்டவரின் அருள் பெறுவோம்.

அன்பர்களே! இத்தவக்காலத்தை ஆண்டவர் நமக்கு தந்துள்ளார். சிலுவையின் வழியாக ஆண்டவர் மனமாற்றத்திற்கான அழைப்பையும் தந்துள்ளார். எனவே நாம் பாடுகளால் வரும் தீச்செயல்களிலிருந்து மனமாற்றம்பெற்று, மனவருத்தம் தரும் மனமாற்றம் இறையாட்சிக்கான மனமாற்றம் இவைகளைப் பெற்று முன்னேறிச் செல்வோம்.

அருள்திரு. T. **ஸ்டாலின் வினு ஜோண்ஸ்**

28-02-2020 **தவக்கால முதலாம் வெள்ளி**

## தீச்செயலை விட்டுத் திரும்புங்கள்

திருமறைப்பாடம் : ஓசே 14:1-4

**“இஸ்ரயேலே! உன் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வா; நீ உன் தீச்செயலால் வீழ்ச்சியுற்றாய்”.** (ஓசே 14:1)

இஸ்ரவேல் தன்னுடைய சமய, அரசியல், சமூக பாவச்செயல்களின் உச்சத்தில் தன்னிலையை இழந்து போயிருந்த சூழ்நிலையில், மிகப்பெரிய அன்பை, தூய்மையாகுதலை, ஏற்றுக்கொள்ளப்படுதலை வெளிப்படுத்தியிருக்கிற செய்தி. சோரம்போனாய் என்ற ஒரு சொல்லின் திரட்சியில் அந்நாட்டின் சூழ்நிலையும், கடவுளுடன் கொண்ட உறவின் இழிநிலையும் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட தீயச்செயலைவிட்டு மனந்திருப்ப ஓசியா வழியாக கடவுள் அழைக்கிறார்.

### *1. கடவுளை நோக்கிய திருப்பம்* : (ஓசே 14:1a)

கடவுளின் பார்வையில், கடவுளோடு கொண்டுள்ள உறவில் தீமைக்கு இடம் தந்திருக்கின்ற மக்கள் தங்கள் தீய நிலையிலிருந்து கடவுளை நோக்கி திரும்ப வேண்டும். கடவுள் தன்னுடைய கோபத்திலிருந்து இஸ்ரவேல் மக்களை விடுவிக்க வேண்டும். அவர்களுடைய சீர்கேடான சூழ்நிலையிலிருந்து அவர்கள் குணப்பட வேண்டும். கடவுளின் மனப்பூர்வமான அன்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே இஸ்ரவேல் மக்கள் தங்களுடைய அக்கிரமத்தை விட்டு கடவுளை நோக்கி திரும்ப வேண்டும். இந்நாட்களில் கர்த்தரிடத்தில் திரும்புவதை விடுத்து சபைகளை நோக்கி திரும்புகிற மக்கள், சில பிரசங்கியார்களை நோக்கி திரும்புகிற மக்கள் என்ற சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறோம். கிறிஸ்தவம் இன்று கடவுளை நோக்கி திரும்புவதை விடுத்து தீச்செயல்களில் விழுந்து வருகிறது. ஓசியா தீர்க்கன் வழியாக தரப்படுகின்ற அழைப்பு மெய்யான மனந்திரும்புதலை நோக்கி நம்மை வழிநடத்த இடம் தருவோம்.

### *2. வார்த்தைகள் வழியான திருப்பம்* : (ஓசே 14:2a)

கடவுளிடம் திரும்புவதற்கு அவருடைய வார்த்தைகள் தான் பிரதானமாக இருக்கிறது. ஆனால் அசீரியாவின் மிகப்பெரிய சேனைகளைக் கண்டும், வல்ல செயல்களைக் கண்டும் இரட்சிப்பு

உண்டாகிறது என்று நம்பி செயல்பட்டுக்கொண்டிருந்த இஸ்ரவேல் மக்களுக்கு வார்த்தைகளைக் கொண்டு திரும்புங்கள் என்று செய்தி அறிவிக்கப்படுகிறது. இன்றைய சூழ்நிலையில் மனந்திரும்புதலும், இரட்சிப்பும் வல்ல செயல்களையும், பாஷை வரங்கள் என்று நம்பிக்கை கொண்டிருக்கிற பரவச வார்த்தைகளையும் அடிப்படையாக கொண்டுதான் ஏற்படுகிறது என்ற இன்றைய புதுமை சபைகளின் அறிவிப்புகளால் ஈர்க்கப்பட்டு மக்கள் கடவுளின் வார்த்தைகளைக் கேட்காமல் செயல்படுகின்ற சூழ்நிலைகள் கண்டிக்கப்படத்தக்கது. வார்த்தைகளைக் கொண்டு கடவுளிடம் திரும்ப வேண்டும் என்ற கடவுளின் அறிவிப்பு ஓசியா தீர்க்கன் மூலமாக உண்டாகிறது. வார்த்தைகளை ஏற்று மனந்திரும்ப இடம் தருவோம்.

அருள்திரு. J. **ஜெப டேனியல்**

01-03-2020

**புதிய மாத நன்றித் தொழுகை**

# தேற்றும் ஆண்டவர்

திருமறைப்பாடம் : எசா 66:12-14

**“தாய் தன் பிள்ளையைத் தேற்றுவது போல் நான் உங்களைத் தேற்றுவேன்”.**
(எசா 66:13)

மூன்றாம் எசாயா யூதா நாட்டு மக்கள் பாபிலோனிலிருந்து எருசலேமுக்கு திரும்பி வந்த நிலையில் அவர்களுக்கு இறை திருவுளத்தை தெளிவுபடுத்துகிறார். கடவுள் இஸ்ரயேல் மீது தாயன்பு உள்ளமும், தனிப்பட்ட அக்கறையும் கொண்டுள்ளார் என்பதை எசாயா இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் வெளிப்படுத்துவதை இன்றைய தியான பகுதி நமக்கு காட்டுகின்றது. அதுபோன்று கடவுள் தம்மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவார் என்றும் ‘கடவுளின் அன்பு தாய் அன்பைப் போன்றது அந்த அன்பில் நிலைத்து இன்புறுங்கள்?’ என்றும் வலியுறுத்துகின்றார்.

கடும்புயலில் சிக்கிய கப்பல் ஒன்று கவிழ்ந்து போனது. அதில் பயணித்த அநேகம் பேர் மாண்டு போயினர். எப்படியோ ஒருவர் தப்பித்து ஒரு தீவை அடைந்தார். அங்கு சிறு குடிசை அமைத்து கிடைத்தவற்றை உண்டு உயிரை காத்து வந்தார். திடீரென ஒருநாள் குடிசை பற்றி எரிய ஆரம்பித்தது. தீயின் வெப்பத்தினாலும், மனவேதனையினாலும் நொந்து போனார்.

கடற்கரையில் அமர்ந்து தன்னையும் தன்னைப் படைத்த கடவுளையும் சபித்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு இன்பங்கலந்த அதிர்ச்சி அவருக்குக் காத்திருந்தது. தொலைவில் கப்பலொன்றைக் கண்டார். அக்கப்பல் அந்த தீவை நோக்கி வந்தது. அம்மனிதர் கப்பல் மாலுமியிடம், “நான் இங்கிருப்பதை எப்படி உணர்ந்தீர்கள்?” என்று வினவ, அதற்கு மாலுமி நீ நெருப்பை உணடாக்கி புகையை எழுப்பி உதவி கேட்டதை உணர்ந்து இப்பக்கம் வந்தேன் என்றார்.

இந்த நபர் இறை பராமரிப்பினால் கடலில் இருந்து தப்பித்து தீவை அடைந்தது, புயலிலிருந்தும், கப்பற் சிதைவிலிருந்தும், காப்பாற்றிய கடவுள் தம்மோடு இருந்து தன்னை தேற்றியதை உணரவில்லை. பல நேரங்களில் நாமும் இந்த மனிதரைப் போலத் தான் இருக்கிறோம். ஆனால் நாம் எந்த நிலையில் இருந்தாலும் கடவுள் அன்பு செய்பவர், நம்மை தேற்றுகிறவர், என்பதை உணர அழைக்கப்படுகின்றோம். தேற்றும் ஆண்டவர் நம்மை எத்தகைய நிலையிலெல்லாம் தேற்றுகிறவர் என்பதைக் குறித்து தொடர்ந்து தியானிப்போம்.

## *1. அன்பு செய்து தேற்றுகிறவர்* :

பால்குடிக்கும் மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளை மீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? இவர்கள் மறந்திடினும் நான் உன்னை மறக்கவே மாட்டேன் என்று (எசா 49:15) கூறுவது கடவுளின் அன்பை உணர்த்தவே. பாபிலோனிலே அடிமைகளாக இருந்து திரும்பி வந்த யூதா நாட்டு மக்களுக்கு எருசலேம் அழகும், மகிழ்ச்சியும்,அன்பும் மிளிரும் இடமாக இருந்தது. ஆனாலும் அவர்களிடையே ஒருவித அச்ச உணர்வும் காணப்பட்டது. தங்கள் வலியும், வருத்தங்களும் கண்ணீரும் இன்னும் எங்களிடையே தொடருமோ, அடிமைநிலை வாழ்வுக்கு மீண்டும் தள்ளப்பட்டுவிடுவோமோ என்ற ஐயப்பாட்டின் நடுவினில் ஆண்டவரின் அன்பின் வார்த்தை அவர்களைத் தேற்றுவதாக அமைந்திருந்தது.

ஆறுபோல் நிறைவாழ்வை (அமைதியை) பாய்ந்தோடச் செய்வேன்; பெருக்கெடுத்த நீரோடைபோல் வேற்றினத்தாரின் செல்வம் விரைந்து வரச்செய்வேன் (எசா 66:12a). மட்டுமல்ல அவர்களுடைய துன்பங்கள் அனைத்திலும் அவர்களின் மீட்பர் ஆனார்; தூதரோ வானதூதரோ அல்ல அவரே நேரடியாக அவர்களை விடுவித்தார்; தம் அன்பினாலும் இரக்கத்தினாலும் அவர்களை மீட்டார் என்று இஸ்ரயேல் மீது ஆண்டவர் கொண்டுள்ள அன்பின் இரக்கத்தை வெளிப்படுத்துகின்றார் (எசா 63:9).

உலக மக்கள் பல்வேறு நிலைகளில் தங்கள் அன்பை வெளிப்படுத்துகின்றனர்.

EROS - (ஏராஸ்) என்ற எபிரேய சொல் கணவன் மனைவி மேல் வைக்கும் அன்பை வெளிப்படுத்துகின்றது. இது தகுதியின் அடிப்படையில் அழகு, பணம், பொருள், கண்களின் விருப்பம், தோற்றம், சூழ்நிலை இவற்றால் உண்டாகும் அன்பு. இது மாறக்கூடியது. இந்த அன்பு மறையக் கூடியது. PHILEO - (ஃபிலியோ) என்ற கிரேக்க சொல் சகோதர அன்பை நட்புறவை குறிக்கின்றது. இது பிரதிபலன் எதிர்பார்த்தும், காரணத்தோடும் கூடிய அன்பு, தகுதியின் அடிப்படையில் அன்பு கூரும் செயல். AGAPE - (அகப்பே) தெய்வீக அன்பு. காரணமில்லாமல், தகுதியைப் பாராது, பிரதிபலன் எதிர்பாராது செய்யும் அன்பு இறை அன்பு. இத்தகைய இறை அன்பை யோவா 3:16 இல் காணலாம். தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்.

தாய் அன்பிலும் மேலான கடவுள் எத்தகைய சூழ்நிலையிலும் நம்மைக் கைவிடாமல் அன்பு செய்து தேற்றுகிறவர் என்பதை இப்பகுதி நமக்கு தெளிவுபடுத்துகின்றது.

## *2. அரவணைத்துத் தேற்றுகிறவர்* :

அன்பு செய்வதும், அரவணைப்பதும் ஒரு தாயின் நற்பண்புகள் ஆகும். நாடுகடத்தலுக்கு பின்னர், எருசலேமானது மேன்மையிலும் பெருமளவு குறைந்து விட்டது. நாடுகடத்தப்பட்ட யூதர்களில் குறைந்த எண்ணிக்கையினரே திரும்பி வந்தனர். ஏற்கனவே பஞ்சத்தினாலும், உள்நாட்டுக் குழப்பத்தினாலும் காணப்பட்ட எருசலேம் இடிந்த மண்மேடாக இருந்த நிலையில் சொந்த நாட்டிற்கு வந்த அவர்களால் அங்கிருந்த காட்சியை பொறுத்துக் கொள்ள முடியவில்லை. கண்கலங்கி நின்றனர். அரவணைப்பதற்கு எவரும் இல்லையே என்ற ஏக்கப் பெருமூச்சுகளோடு இருந்த நிலையில் கடவுளின் வார்த்தை எசாயாவின் வழியாக இம்மக்களுக்கு உரைக்கப்பட்டது. எருசலேமில் நீங்கள் தேற்றப்படுவீர்கள் (எசா 66:13b).

நீங்கள் பால் பருகுவீர்கள்; மார்பில் அணைத்து சுமக்கப்படுவீர்கள்; மடியில் வைத்து தாலாட்டப்படுவீர்கள் (எசா 66:12) என்பது கடவுளின் அரவணைப்பை வெளிப்படுத்துகின்றார். பால் பருகுவதும், மார்பில் அணைத்தலும், மடியில் வைத்து தாலாட்டுதலும் ஒரு தாய் தன் பிள்ளையின் மீது கொண்டிருக்கும் அரவணைப்பை (பாதுகாப்பை) உறுதிப்படுத்துகின்றது. ஆனால் இஸ்ரயேல் மக்கள் மீது கடவுள் கொண்டுள்ள அரவணைப்பு என்பது உலகில் நாம் பெற்றிருக்கும் தாயின் பாதுகாவலை விடவும் மேலானது.

தேற்றுகிறவர் என்பது மெசியாவின் ஒரு பெயராகும். தங்களது பாவத்தினிமித்தம் வருந்துவோர், துயரப்படுவோர் யாவரையும் மெசியா தேற்றவல்லவர். அவர் அவர்களது துயரை மகிழ்ச்சியாக மாற்றுவார். அழுது கொண்டிருப்போரே, நீங்கள் பேறு பெற்றோர்; ஏனெனில் நீங்கள் சிரித்து மகிழ்வீர்கள் (லூக் 6:21). உலகில் நடைபெறும் துன்ப துயரங்களும், கொடுமைகளும், இழப்புகளும், அநேக நேரங்களில் நமது உள்ளத்தில் ஆழ்ந்த துயரத்தைத் தருகின்றன. அத்தகைய நேரங்களில் நம்மை அரவணைக்க, ஆறுதல்படுத்த யார் எனக்கு உண்டு எனக் கலங்குகின்றோம். இறைவனின் திருவாக்கு நான் “இருக்கின்றவராகவே இருக்கிறேன்” (விப 3:14). இம்மானுவேலாய் (கடவுள் நம்முடன் இருக்கிறார்) இருக்கின்றார் (மத் 1:23) இயேசுவினால் வரும் மீட்பும், அரவணைப்பும் கடவுள் நம்மோடு இருப்பதன் வழியாக தெளிவுபெறும். நம்மை அன்புசெய்து, அரவணைத்து தேற்றும் ஆண்டவரின் கரங்களில் நம்மை அர்ப்பணிப்போம், அவரின் வார்த்தைக்கு கீழ்ப்படிவோம், இறை ஆசியைப் பெறுவோம்.

அருள்திரு. S.E. ***சிமியோன்***

01-03-2020

**உயிர்ப்புக்கு முன்வரும் ஆறாம் ஞாயிறு &**
**தவக்கால முதலாம் ஞாயிறு**

# தூய்மையாக்கும் கிறிஸ்து

**THE CLEANSING CHRIST**

| | |
|---|---|
| செக் 13:1-9 | 1யோவா 1:5-10 |
| திபா 130 | மாற் 1:40-45 |

**"ஆண்டவரே! நீர் எம் குற்றங்களை மனத்தில் கொண்டிருந்தால், யார்தான் நிலைத்து நிற்க முடியும்? நீரோ மன்னிப்பு அளிப்பவர். மனிதரும் உமக்கு அஞ்சி நடப்பர்"**

(திபா 130:3,4)

கிறிஸ்தவ வாழ்வு என்பது தூய்மைக்கு முழு இடத்தையும் கொடுக்கக் கூடிய வாழ்வாகும். அதைத்தான் கிறிஸ்து பெருமான் நமக்கு சிலுவை வழியாக போதித்தார். இயேசுக்கிறிஸ்துவின் சிலுவை காயங்கள் வழியாக நம்மை ஒவ்வொரு நாளும் தூய்மைப்படுத்திக் கொண்டிருக்கிறார். உண்மையான தூய்மை வாழ்வு வாழ பாவம் நிறைந்த வாழ்வினை விட்டுவிட்டு புதிய அறம் சார்ந்த நன்னடத்தையான நன்னம்பிக்கையுள்ள வாழ்வு வாழ அழைக்கப்படுகிறோம்.

நாம் படிக்கக் கேட்ட திருப்பாடல் 130 ஒரு தனியார் புலம்பப் பாடல். இத்தத் திருப்பாடல் தூய்மையான வாழ்விற்காக மனம் வருந்தி நிற்கும் மனநிலையையும் மன்னிப்புக் கேட்கும் விண்ணப்பமும் காணப்படுகிறது. இந்தத் திருப்பாடல் விடியற்காலத்திற்கு காத்திருக்கும் காவலர் என்னும் உருவகம் காவலரின் பெரிய விருப்பத்தையும், நீண்ட இரவைத் தொடர்ந்து வரும் விடியற்காலப் பொழுதின் நிச்சயத்தைத் தருகிறது. அப்படியானால் விடியல் ஒரு புதிய நாளைக் குறிக்கிறது. அதுபோல கிறிஸ்துவுக்காய் காத்திருந்து தூய வாழ்வு வாழும் போது புதிய வாழ்வு கிடைக்கிறது என்பதை சுட்டுகிறது.

## *1. பாவ நினைவுகளிலிருந்து தூய்மை :*

"அந்நாளின் பாவத்தையும் தீட்டையும் நீக்கித் தூய்மையாக்கும் நீருற்று தாவீதின் குடும்பத்தாருக்கெனவும் எருசலேமில் குடியிருப்போருக்கெனவும் தோன்றும்" (செக் 13:1)

செக்கரியா இறைவாக்கினர் இந்தப் பகுதியில் எருசலேம் நகரின் வருங்கால வளத்தினையும் மீட்பினையும் குறிப்பிடுகிறார். இந்தப் பகுதி சிறையிருப்புக் காலத்திற்குப் பின் எழுதப்பட்டது. இஸ்ரயேலர் பாபிலோனில்

துன்பப்படுத்தப்பட்டனர். இது அவர்களின் பாவ வாழ்வால் வந்ததெனவும் இனி தங்களை தூய்மைப்படுத்தும் போது புது வாழ்வு மலரும் என உரைக்கப்பட்டது. பொதுவாக இந்த உலகில் பிறக்கின்ற அனைவரும் பாவத்தின் பிடியில் பிறக்கின்றார்கள். எல்லாருமே பாவம் செய்து இறைச்சாயலை இழந்து போயினர் (ரோ 3:23). முதல் மனிதன் செய்த பாவத்தால் இத்தீய சக்தி உலகில் நுழைந்தது. இன்று ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும், உணர்விலும் பாவம் இரண்டறக் கலந்து காணப்படுகிறது. எல்லா வகையான இச்சைகளையும் தூண்டிவிடுகிறது. மனிதரில் குடிகொண்டிருக்கும் மோசமான பாவ உணர்வு அவனுக்கு எதிராகவே செயல்படுகிறது. வாழ்க்கையை தூய்மையாக மாற்றிக் கொண்ட இஸ்ரயேலரை போல நாமும் மோசமான பாவ நினைவுகளை வேகமாக அழிக்க வேண்டும். கொள்கையில்லா வாழ்வு, நேர்மையில்லாமல் கிடைக்கும் புகழ், பண்பில்லாத கல்வி, தியாகமில்லாத பணி, மனச்சாட்சியில்லாத இன்பம், மனிததன்மையற்ற செயல்பாடுகள் அனைத்தும் நமக்கும், கிறிஸ்துவுக்கும் இடையேயுள்ள உறவை துண்டிக்கிறது. எனவே இப்படிப்பட்ட செயல்பாடுகள் நம்மிடமிருக்குமானால் தூய்மையான வாழ்வுக்காக இவைகளை வேகமாக அழிக்க வேண்டும்.

### *2. பாவ வாழ்க்கையிலிருந்து தூய்மை :*

"நம் பாவங்களை நாம் ஒப்புக்கொள்வோமென்றால் கடவுள் நம் பாவங்களை மன்னித்து, குற்றம் அனைத்திலிருந்தும் நம்மைத் தூய்மைப்படுத்துவார்" (1யோவா 1:9)

நன்மை எது? தீமை எது? என்று பகுத்தறியக்கூடிய தன்மையைக் கடவுள் மானிடர்க்கு கொடுத்துள்ளார். இப்பகுத்தறிவின் வழியாக ஒருவர் தான் பாவம் செய்கிறானோ அல்லது நன்மை செய்கிறானோ என்பதனை நன்றாக அறிந்து கொள்ளமுடியும். பாவ உணர்வு இருப்பதனால் கிறிஸ்தவர்கள் பாவ அறிக்கையையும் செய்கின்றனர். ஆகவே பாவ அறிக்கை என்பது தொடர்ந்து பாவம் செய்யலாம் என்பதல்ல. சடங்காச்சரமான பாவ அறிக்கை பயனற்றது. "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்" எனவே நேற்று பாவம் செய்தேன், இன்று பாவம் செய்கிறேன், நாளையும் பாவம் செய்வேன் என்பதல்ல கிறிஸ்தவ வாழ்க்கை. பாம்பாட்டி ஒருவர் அவனை பிழைப்பூட்டிய பாம்பு உண்மையாகவே அவனைக் கொத்தியது. அவன் பாசாங்கு செய்கிறான் என வேடிக்கைப் பார்த்தவர்கள் நினைத்தார்கள். ஆனால் சற்று நேரத்தில் அவன் இறந்து போனான். அதுபோல

பாவத்தையும் பால் போல பருகும் போது ஒருநாள் அது நம்மை அழிக்கும் சக்தியாக மாறிவிடும். எனவே ஒரு கிறிஸ்தவருக்கு பாவ வாழ்க்கையைப் பற்றிய உணர்வு வரும்போது தூய வாழ்வு தானாகவே மலர்கிறது.

### *3. நலம் அருளி தூய்மை :*

“இயேசு அவர் மீது பரிவு கொண்டு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு அவரிடம், நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக!” என்றார். (மாற் 1:41).

பழைய ஏற்பாட்டின் காலத்திலும் இயேசுவின் நாட்களிலும் தொழுநோயாளிகள் சமுதாயத்தின் நபராகக் கருதப்படவில்லை (லேவி 13:45,46). யூத சமயவாதிகள் மத்தியில் தொழுநோயாளியைக் குணப்படுத்துவது மரித்தவரை எழுப்புவதற்கு சமமென நம்பப்பட்டது. குறிப்பாக யூத ரபிமார்கள் தொழுநோயாளியைக் குணப்படுத்துவது கடினமென எண்ணினர். எனவேதான் மோசேயின் வழியாகக் கொடுக்கப்பட்ட சட்டத்தில் குணமாக்கப்பட்ட தொழுநோயாளி குணமான பின்பு தன்னை ஆசாரியருக்கு காண்பித்து காணிக்கை செலுத்தி அதை மற்றவருக்கு சான்றிதழாக காண்பிக்க வேண்டும் (லேவி. 14). இப்படி இந்த நோய் இறைத் தண்டனையால் வந்தது என எண்ணப்பட்ட காலத்தில் இது தண்டனையல்ல, மாறாக, தூய்மையான வாழ்விற்கான அழைப்பு என்பதனை உணரச் செய்ய இயேசுகிறிஸ்து அவருக்கு நலமருளினார். அவர் தன்னை தூய்மையாக்கிக் கொண்டு கிறிஸ்துவுக்கு சான்று வாழ்வு வாழ்ந்தார். கண்ணாடிக் குவளையை உடைத்து நொறுக்கிய பின் அதை ஒன்று சேர்க்க முடியாது. மானிட வாழ்க்கையும் அப்படித்தான் சீர்குலைந்து விட்டால் சுகத்தையும், சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பெற முடியாது. எனவே தூய்மையாக்கும் கிறிஸ்துவிடம் நம்மை முழுமையாக ஒப்படைத்து புதிய பாவமில்லா மானுடத்தை உருவாக்க அழைக்கப்படுகிறோம்.

அருள்திரு. K. **பிறின்ஸ்குமார்**

04-03-2020

**தவக்கால இரண்டாம் புதன்**

## அறிமுகம் செய்த அந்திரேயா

திருமறைப்பாடம் : யோவா 1:35-42

**"அவர் போய் முதலில் தம் சகோதரர் சீமோனைப் பார்த்து "மேசியாவைக் கண்டோம்" என்றார்".** (யோவா 1:41)

குருவானவர் ஒருவரிடம் ஓர் இளைஞர் வந்து நீங்கள் மக்கள் மத்தியில் புகழ் பெற்றவராக விளங்குகின்றீர்கள். உங்கள் புகழை மேலும் பரப்புவதற்கு உங்களைப் பற்றி எழுதலாம் என்றிருக்கிறேன். ஆகவே உங்களைப் பற்றி நீங்கள் எனக்கு சொல்லுங்கள். மக்கள் எல்லாரும் உங்களை ஒரு பேரறிவுமிக்கவர் என்கிறார்கள். உண்மையிலேயே நீங்கள் பேரறிவுமிக்கவரா? என்று கேட்டார். நீங்கள் எவ்வித ஐயமும் தயக்கமும் இன்றி என்னைப் பேரறிவு மிக்கவர் என்று அழைக்கலாம் எனப் பதிலளித்தார். மேலும் குருவானவர், ஒருவரை பேரறிவு உடையவராக மாற்றுவது எது, என்று விளக்கும்போது உண்மையைக் கண்டுகொள்ளும் ஆர்வமும், ஆற்றலுமே, ஒருவரை பேரறிவு மிக்கவராக மாற்றுகிறது என்று மறுமொழி கூறினார். உண்மையை உய்த்துணரும், உண்மையைப் பின்தொடரும் ஆற்றல்மிக்கவரே ஞானியாகவும் அறிவாளியாகவும் விளங்குகிறார்.

ஆண்டவராகிற இயேசு கிறிஸ்துவின் சீடர் குழுவிலும் உண்மையை அறிந்து கொள்ளும், உண்மையை அறிமுகம் செய்யும், உண்மையைப் பின்தொடரும் ஒருவராக அந்திரேயா, விளங்கினார். திருமுழுக்கு யோவான், "இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி" என்று இயேசு கிறிஸ்துவை அறிமுகம் செய்தபோது இயேசுவே மெசியா என்ற உண்மையை அந்திரேயா கண்டு கொண்டார். நற்செய்தியாளர் யோவான் பதிவு செய்திருக்கிறபடி இயேசு யார் என்பதை கண்டு கொண்டதோடு மட்டுமல்லாமல் அவரைப் பின் தொடர்ந்து அவருடைய முதல் சீடரானார். அந்திரேயாவிடம் காணப்பட்ட சிறப்பு இயல்புகளைத் தியானிப்போம்.

### *1. ஆர்வமிக்கவர்* :

ஆர்வமின்றி எந்தப் பெரும் செயல்களும் நிகழ்வதில்லை என்கிறார் அறிஞர் எமர்சன். அந்திரேயாவுக்கு இருந்த ஆர்வம் இயேசுவைக் காணவும், அறிந்து கொள்ளவும் அவருக்கு உதவிற்று.

திருமுழுக்கு யோவானால் இயேசுவை அறிந்து கொண்ட அந்திரேயா தன் நண்பரோடு அவரைப் பின் தொடர்ந்தார். இயேசு எங்கே தங்கியிருக்கிறார், அவருடைய மாண்பு என்ன, அவருடைய வருகையின் நோக்கமென்ன என்பவற்றை மேலும் அறிந்துகொள்ள ஆர்வம் காட்டினார். அவர்களின் பின்தொடருதலையும், ஆர்வத்தையும் கண்ட இயேசு என்ன தேடுகிறீர்கள்? என்று கேட்டார். நீர் எங்கே தங்கியிருக்கிறீர்? என்று வினவினர். வந்து பாருங்கள் என்று அவர்களை அழைத்தார். அவர்கள் சென்று, அவர் தங்கியிருந்த இடத்தைக் கண்டு அன்று அவரோடு தங்கினார்கள். அந்திரேயாவின் ஆர்வம், இயேசுவை அறிந்து கொண்டு அவரைப் பின் தொடர்ந்து அவருடன் தங்கியிருந்து அவர் நல்லவர், மீட்பர் என்பதைச் சுவைக்கச் செய்தது. ஆண்டவரைப் பின்தொடர்வது என்பது அவரை அறிந்துகொள்ள முயல்வதும், அவரோடு இருக்க ஆர்வம் காட்டுவதுமாகும் என்பதற்கு அந்திரேயா உதாரணமாகக் திகழ்கின்றார். உரோ 12:11 இல், “விடா முயற்சியோடும் ஆர்வமிக்க உள்ளத்தோடும் ஆண்டவருக்குப் பணிபுரியுங்கள்” என்கிறார் திருத்தூரான பவுல். இறைமக்களாகிய நாம் இத்தவக்காலத்தில் ஆண்டவரை உண்மையாய் அறிவதிலும், அவரோடு இருப்பதிலும் ஆர்வம் காட்ட வேண்டும்.

### *2. அறிமுகம் செய்பவர்* :

சமநோக்கு நற்செய்தி நூல்களைக் காட்டிலும் யோவான் எழுதின நற்செய்தி நூலில் அந்திரேயாவைக் குறித்து சற்று விளக்கமாக சொல்லப்பட்டுள்ளது. யோவான் நற்செய்தி நூலில் எங்கெல்லாம் அந்திரேயாவைப் பற்றிய குறிப்பு வருகிறதோ அவ்விடங்களில் அவர் இயேசு கிறிஸ்துவை மற்றவர்களுக்கும், பிறரை இயேசுகிறிஸ்துவுக்கும் அறிமுகம் செய்வதைக் காணலாம். இப்படி அறிமுகம் செய்கிற பாங்கை அந்திரேயா திருமுழுக்கு யோவானிடம் கற்றுக் கொண்டார். திருமுழுக்கு யோவான் இயேசு கிறிஸ்துவை அந்திரேயாவுக்கு அறிமுகம் செய்தார். (யோவா 1:35,36) இயேசுகிறிஸ்துவோடு சென்று அவரோடு தங்கி அவரை அறிந்து கொண்ட அந்திரேயா பின்னர் தன் சகோதரனாகிய சீமோனுக்கு இயேசு கிறிஸ்துவை அறிமுகம் செய்து கிறிஸ்துவிடம் அவரை அழைத்து வந்தார் (யோவா 1:40-42). அதே போன்று யோவான் 6-ஆம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள இயேசு கிறிஸ்து அப்பங்களை பலுகச் செய்த நிகழ்வில் ஐந்து வாற்கோதுமை அப்பமும் இரண்டு மீன்களும் வைத்திருந்த பையனை இயேசு கிறிஸ்துவிடம் அறிமுகம் செய்கிறார் அந்திரேயா. யோவா 12-ஆம் அத்தியாயத்தில் இயேசுவைக் காணவிரும்பிய கிரேக்கர்களை பிலிப்போடு இணைந்து இயேசு கிறிஸ்துவிடம் அறிமுகம் செய்கிறார்.

யோவான் நற்செய்தி ஆசிரியர் அந்திரேயாவை சீடத்துவ வாழ்வில் மக்களுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே ஒருவரை மற்றவர்க்கு அறிமுகம் செய்கிற, பிறரை கிறிஸ்துவிடம் அழைத்து வருகிற மாதிரியாளராகக் காட்டுகின்றார்.

இப்படி இயேசுகிறிஸ்துவுக்கு பிறரை அறிமுகம் செய்கிற பணியை தமது வாழ்வு முழுவதும் தொடர்ந்தார். அந்திரேயா பல நாடுகளுக்கு சென்று இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை எடுத்துரைத்தார். அவர் கிரேக்க நாட்டின் தென்பகுதியில் உள்ள “பத்ரோஸ்” என்னும் நகருக்கு வந்து அங்கு கிறிஸ்துவையும் கிறிஸ்துவின் நற்செய்தியையும் அனைவருக்கும் அறிமுகம் செய்தார். இதனால் கோபம் கொண்ட அப்பகுதியின் ஆளுனர் “ஏஜேடிஸ்” அந்திரேயாவை கைது செய்து அவருக்கு 7 கசையடிகள் கொடுத்து சிலுவையில் அறையுமாறு உத்தரவிட்டார். தாம் அறையப்படவிருந்த சிலுவையைப் பார்த்து “மேன்மை மிக்க சிலுவையே எம் தலைவர் இயேசு கிறிஸ்துவின் உடல் உன்மீது தானே தொங்க விடப்பட்டது. இதோ என்னை தனியே பிரித்துதெடுத்து ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு அன்பு காணிக்கையாக அளிப்பாயாக” என்றார் அந்திரேயா. பின்னர் பெருக்கல் வடிவ சிலுவையில் அந்திரேயா அறையப்பட்டார். சிலுவையில் அவர்பட்ட துன்பத்தைப் பார்த்து பத்ரோஸ் நகர மக்கள் அவரை விடுவிக்க முன் வந்தும், நீதிபதி சிலுவை தண்டனையை ரத்து செய்ய ஆயத்தமாயிருந்த போதும் அந்திரேயா மறுத்து விட்டார். சிலுவையில் அறையப்பட்டவராய் “ஆண்டவரே இந்த சிலுவையிலேயே நான் மரிக்க அருள்தாரும்” என்று வேண்டிக் கொண்டே இரண்டு நாட்களுக்கு பின் தமது உயிரை ஆண்டவரிடம் கையளித்தார்.

தவக்காலத்தில் இயேசுகிறிஸ்துவின் வழியாக சிலுவையில் வெளிப்படுத்தப்பட்ட இறையன்பையும், கிறிஸ்துவின் மனதுருக்கத்தையும் அறிந்து கொள்வதிலும், பிறருக்கு அறிமுகம் செய்வதிலும் ஆர்வமிக்கவர்களாய் நாம் திகழ வேண்டும். இந்த அறிதலும், அறிமுகம் செய்தலும் நம்மிலும் பிறரிலும் சமூகத்திலும் மாற்றுருவாக்கத்தைக் கொண்டு வரும்.

திரு. A. **கால்வின் தேவநேசன்**

06-03-2020

**தவக்கால இரண்டாம் வெள்ளி**

## அகந்தையை விட்டுத் திரும்புங்கள்

திருமறைப்பாடம் : ஓசே 13:1-6

**"வளமான மேய்ச்சல் கிடைத்தபடியால் அவர்கள் மனநிறைவுற்றார்கள்; மன நிறைவடைந்ததும் செருக்குற்று என்னை மறந்து போனார்கள்".** (ஓசே 13:6)

அகந்தை என்னும் வார்த்தை 'கர்வம்', 'இறுமாப்பு', 'தற்பெருமை' என்னும் வார்த்தைளோடு தொடர்புடையது. ஒருவர் தன்னைத்தானே உயர்ந்தவராய்க் கருதுதல், மனமேட்டிமை கொள்ளுதல் அகந்தை என்று பொருள்படும். தன்னை மட்டும் முன்னிலைப்படுத்தும் எண்ணமும் அகந்தை என்று கொள்ளப்படும் ஓசேயா 13:1-6ல் வடநாடாகிய இஸ்ராயேலர் தங்கள் அகந்தையால் வீழ்ச்சியுறுவதை கடவுள் ஓசேயாவிற்கு வெளிப்படுத்துகிறார். மனித இயல்பினால் தன் நிலையை உயர்த்தி, இறைவனிடமிருந்து விலகிச் சென்ற நிலையை விட்டு விட்டு மீண்டும் இறைவனிடம் திரும்பி வர இத்தவக்காலத்திலும் இறைவன் நம்மை அழைக்கிறார். அகந்தையிலிருந்து விடுபடவும், இறைவனிடம் திரும்பி வரவும் நம் திருமறைப் பகுதி சுட்டிக்காட்டும் வழி முறைகளைச் சிந்திப்போம்.

### *1. அகந்தைக்கு மாற்று தாழ்மை :* (Humility)

...மன நிறைவடைந்ததும் செருக்குற்று... (ஓசே 13:6)

கி.பி. 590ல் கத்தோலிக்க திருச்சபையின் தலைவராயிருந்த போப் கிரகோரி என்பவர், ஒருவரின் நன்னடத்தைக்கு சவலாய் இருக்கும் இறப்புக்குச் சமமான பாவங்களாய் ஏழு பாவங்களையும் (காமம். பெருந்தீனி, பேராசை, சோம்பல், கோபம், பொறாமை, அகந்தை அதை எதிர்கொள்ள ஒருவர் அணிந்து கொள்ள வேண்டிய முக்கியமான ஏழு நற்குணங்களையும் (கற்பு, நிதானம், தர்மம், விடாமுயற்சி, பொறுமை, இரக்கம், பணிவு) தன் திருச்சபையாரிடத்தில் பிரசுரித்தார். அதில் 'அகந்தையிலிருந்து விடுபட தாழ்மை எனும் நற்குணத்தை பழக்கப்படுத்த வேண்டும்' என்று கூறுகினார்.

'அழிவுக்கு முந்தியது அகந்தை' என நீதிமொழிகள் எச்சரிக்கிறது (16:18). பிள்ளையைப் போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர் (மத் 18:4) மற்றும் தம்மைத்தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப்பெறுவர் (மத் 23:13) ஆகிய திருவார்த்தைகளில் தாழ்மை மட்டுமே அகந்தைக்கு மாற்றான வழி என இயேசு கிறிஸ்து அறிவுறுத்துகின்றார்.

எருசலேம் யூதேயாவின் அடையாளமாய் இருப்பது போல், எப்பிராயீம் இஸ்ராயேலின் அடையாள பட்டணம், இது சமாரியாவின்

மத்திய பகுதி, எப்பிராயீம் இஸ்ராயேலிலே மேன்மை பெற்றவன். சாலமோன் அரசருக்குப் பின் ஒருங்கிணைந்த இஸ்ராயேல் பிரிவதற்கு காரணம் எப்பிராயீமின் யெரொபெயாம் (1அர 11:26) வட நாட்டின் முதல் அரசன். அகந்தை சகமனிதனின் மீது உள்ள காழ்ப்புணர்ச்சியால் கடவுளை விட்டு விலகச் செய்கிறது. 1அர 12-ம் அதிகாரத்தில், யெரொபெயாம், ரெகோபெயாமின் அரசியல் உரையாடல் நடைபெறுகிறது. ரெகோபெயாம் முதியோரின் ஆலோசனைப்படி தாழ்மையோடு பணிவிடை செய்ய விரும்பாமை (1அர 12:7-11) புதிய தலைவன் யெரொபெயாமை ஏற்படுத்தியது. ஆனால் புதிய இஸ்ராயேலாகிய வடநாடு தன் விருப்பத்தை நிறைவேற்றியது. இனி நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வேன் என மனமேட்டிமை கொண்டு கடவுளையும், அவர் கொடுத்த சட்டதிட்டங்களையும் விட்டு விலகி சென்றனர். கடவுள் வருத்தத்தோடு எப்பிராயீம் என்னை மறந்து போனான் எனக் கூறுகிறார். (ஓசே 12:6)

அதிகார அகந்தை பெருகியிருக்கும் இக்காலகட்டத்தில், மத்தேயு 20:25-28ல் கிறிஸ்து தன்னை வெளிப்படுத்தியிருக்கும் போங்கு அறைகூவலாயிருக்கிறது. இறுமாப்பான ஆளுகைக்கும், கடினமாய் அதிகாரம் செலுத்துதலுக்கும் மாற்று பணிவிடை செய்தலே. அதுவே இம்மண்ணின் அருட்பணியாளர்களின் அருட்பணி அஸ்திபாரம். ஒரு முட்டாள் தன்னை முட்டாள் என்று உணரும் தருணத்தில் புத்திசாலியாகிறான். ஒரு புத்திசாலி தன்னை புத்திசாலி என்று அகந்தை கொள்ளும் கணத்தில் முட்டாளாகிறான் என்பது அப்துல்கலாமின் கூற்று.

### *2. அகந்தையை மாற்றும் ஒன்றிணைந்த இறைவழிபாடு :*

(United worship)

"செருக்குற்று என்னை மறந்து போனார்கள்" (ஓசே 13:6)

ஒற்றுமையே நம் பலம், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, வேற்றுமையில் ஒற்றுமை போன்ற கூற்றுக்கள் ஒற்றுமையின் தத்துவத்திற்கு எடுத்துக்காட்டு. கோடைக்கால தங்குமிடங்களாகிய ஊட்டி, கோடைக்கானல், ஏற்காடு, மூணார் போன்ற இடங்களில் மலர் கண்காட்சிகள் நடைபெறுவது வழக்கம், இக்கண்காட்சிகளில் பல வகை, பல இன பூக்கள் இடம் பெறுவதே அழகு. ஒற்றுமையின் சிலை (Statue of Unity) என்று நிறுவப்பட்ட சர்தார் வல்லபாய் பட்டேல் சிலை வளாகத்தில், கீர் தொண்டு நிறுவனம் சார்பில் 836 சதுர அடியில் 500 வகையான கற்றாழைச் செடிகள் நடபட்டு முள்ளுக்குள் மறைந்து கிடக்கும் ஒற்றுமையைப் பறைசாற்றுகிறது. சர்தார் வல்லபாய் பட்டேலின் கூற்று, ஒற்றுமை இல்லாத மனித சக்தி ஒரு பலம் அல்ல, அது ஒன்றிசைந்து, ஒழுங்காக இருந்தால் ஆன்மிக சக்தியாக உருவெடுக்கிறது என்பதாகும்.

வழிபாடு என்றால் 'மரியாதை' (reverence, honor) மதிப்பு (respect) செலுத்துதல். வழிபாடு செலுத்தும் முறை என்பது புகழ்தல் ஒருவரை மதிக்கிறேம் என்பதை எப்படி வெளிப்படுத்துவது? அவர் தந்த

நன்மைகளுக்காய் புகழ் பாடுதல் (Praise) தவறை ஒத்துக் கொள்ளுதல் (confession), உதவி கோருதல் (Intercession or Prayer) ஒழுங்குடன் செயல்படுவேன் என உறுதிமொழி ஏற்றல் அல்லது உடன்படிக்கைச் செய்தல் (Commitment or Dedication) செல்வத்தை பகிர்ந்தளித்தல் (Sharing of Wealth or Offering) போன்றவைகளால் நாம் ஒருவரை மதிக்கிறோம் என்பது புலப்படுகிறது. லேவியர் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் பலி சட்டங்கள் இதற்கான வரையறைகளைக் கொடுக்கிறது. இஸ்ராயேலர் இதை எருசலேம் தேவாலயத்தில் முறையாக கடைபிடித்தனர். வழிபாடு வெவ்வேறு கோத்திரங்களை ஒன்றுபடுத்தியது.

யெரொபெயாமால் அரசாட்சியில் எழுந்த பிரிவினை என்பது வழிபாடு வரையில் சென்றது. பிரிந்து காணப்படும் மக்கள் எருசலேம் வழிபாட்டால் ஒன்றிணைந்து விடுவார்களோ என்னும் அகந்தையுடன் யெரோபெயாம் பொன்னால் ஆன இரண்டு கண்டுகுட்டிகளை வார்பித்தான் (1அர 12:27,28). எப்பிராயீம் பாகாலை வழிபட்ட குற்றத்திற்காய் மடிந்தான் (ஓசே 13:1) என ஆண்டவர் கூறுகிறார். வழிபாடு சகோதரத்துவ சமூகத்தின் அடையாளம். எப்பிராயீமரின் அகந்தை இறைவழிபாட்டை தவிர்த்து பாகால் வழிபாட்டை ஊக்குவித்தது. தங்களை ஆசீர்வதித்தது யாவே அல்ல, பாகாலே என்னும் போதனை பெருகியது. பாகால் வழிபாடு வழிபாட்டில் வேறுபாடுகளையும் பிரிவினைகளையும் ஊக்குவித்தது (ஓசே 13:2,4,5).

வழிபாட்டை அலைக்கழிக்கும் சவால்கள் இரண்டு: 1) அதிகாரம், 2) செல்வம், ஓசே 12:8-ல் எப்பிராயீம் சொல்கிறான் நான் பணக்காரனாகி விட்டேன், எனக்கென்று செல்வம் சேர்த்துக் கொண்டேன். எப்பிராயீம் பெற்ற அதிகாரம், செல்வம், மனமேட்டிமையடைய செய்து வழிபாட்டை மறக்கச் செய்தது. ஒருவரின் அகந்தை ஒற்றுமையான சமூகத்தின் அடையாளமான வழிபாட்டை உருவில்லாததாக்குகிறது.

இழந்த வழிபாட்டை கிறிஸ்து தம் சிலுவை இறப்பினால் திருப்பித் தந்துள்ளார். அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாம் பங்கு பெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே உடலுமாயிருக்கிறோம். (1கொரி 10:17). இயேசு கிறிஸ்துவின் பெயரில் நம் சொந்த சபையில் வழிபாடு வழி ஒன்றுபடுகிறோம். இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையால் உருவெடுத்துள்ள வழிபாட்டால் அகில உலக திருச்சபையோடு ஒன்றுபடுகிறோம். ஆகையால் ஒன்றுபடும் திருச்சபையும், வழிபாடுமே அகந்தைக்கு மாற்று. எனவே, அகந்தையை விட்டுத் திரும்பி வந்து இறைவனோடும், உடன் மக்களோடும் ஒன்றித்து வாழ்வோம்.

திரு. I. **ஜாண் ரோஜின் ஜேக்கப்**

08-03-2020

**உயிர்ப்புக்கு முன்வரும் ஐந்தாம் ஞாயிறு & தவக்கால இரண்டாம் ஞாயிறு**

# மன்னிக்கும் கிறிஸ்து

**THE FORGIVING CHRIST**

தொநூ 4:8-16 உரோ 5:6-11
திபா 25 மாற் 2:1-12

**"...உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன..."** (மாற் 2:5)

2003-ல் அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் கேய் லீ ஹேரியட் என்ற ஐந்து வயது சிறுமி மிகுந்த மகிழ்ச்சியுடன் ஆடிப் பாடிக் கொண்டிருந்தாள். அப்பொழுது எங்கிருந்தோ பறந்து வந்த மூன்று இரக்கமற்ற துப்பாக்கி குண்டுகள் அச்சிறுமியின் உடலை துளைத்தன. அந்த உற்சாக பறவைக்கு சக்கர நாற்காலியே வாழ்க்கையானது. வழக்கு நீதிமன்றத்துக்கு வந்தது அன்று தீர்ப்பு நாள் குற்றவாளியான 29 வயது ஆண்டனி வாரன் கூண்டில் நிற்கிறான். அவன் குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பு கூறியதும். சக்கர நாற்காலியில் இருந்த சிறுமி குற்றவாளியின் அருகில் செல்கிறாள். நீதிமன்றத்தில் நீதிபதி உட்பட எல்லோரும் கவனிக்கிறார்கள் அருகில் சென்ற சிறுமி தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள். பின் குற்றவாளியிடம் Sir நீங்கள் செய்தது தவறுதான். ஆனாலும் என் இயேசுகிறிஸ்துபிறரை மன்னித்தது போன்று நானும் உங்களை மன்னிக்கிறேன் என்றாள். உடனே அக்குற்றவாளி 5 வயது சிறுமியின் காலில் விழுந்து கண்ணீர் விட்டான். இந்நிகழ்வு 2003-ல் தொலைகாட்சியில் பிரபலமான நிகழ்வு. நீதிபதி தண்டனை கொடுத்தபோது அசையாத மனதில், ஒரு சிறுமி மன்னித்தேன் என்று கூறியதும் கலங்கிய கண்களுடன் வயது வித்தியாசம் இல்லாமல் காலில் விழுந்தார் என்றால் மன்னிப்பின் வலிமையை புரிந்து கொள்ளவேண்டும். இயேசு கிறிஸ்துவும் தம்மை மன்னிக்கும் கிறிஸ்துவாக சிறப்பாக வெளிகாட்டுகிறார்.

இந்த உலகில் மிக எளிமையான செயல் எது? யோசித்து பார்த்தால் பல செயல்கள் நம் சிந்தையில் வரும். எளிமையான செயலை எல்லோரும் திரும்ப திரும்ப செய்வார்கள். அறிவுரை கூறுவதா? திரும்ப திரும்ப பலருக்கு சொல்லி கொண்டேயிருப்பார்கள். காரணம் எளிது. ஒரு குடும்ப செய்தியை வாட்ஸ்அப்பில் பலரும் பல முறை அனுப்பி அனுப்பி நோகடிக்கின்றனர். காரணம் எளிது. நம் பார்வையில் இவைகளெல்லாம் எளிமையான செயல். ஆனால் இயேசுகிறிஸ்துவின் பார்வையில் எது

எளிது? மாற்கு 2:1-13-ல் கப்பர்நகூமில் நாலுபேர் சுமந்துகொண்டுவந்த முடக்குவாத முற்றவரை பார்த்து மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்றார். மறைநூல் அறிஞர்கள் இதை கடவுளை பழிக்கிறார் என்றும், பாவத்தை மன்னிக்க இவர் யார் என்றும் இருதயத்தில் சொல்ல இயேசுகிறிஸ்து அவர்களை பார்த்து உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப் பட்டனவென்று சொல்வதோ எழுந்து உன் படுக்கையை எடுத்துகொண்டு நட என்பதா? எது எளிது? (2:9) என்று கேட்டு மன்னிப்பதே இந்த உலகில் எளிமையான செயல் என்று உணர்த்துகிறார்.

மன்னிப்பு எனும் செயல் மனித குலத்துக்கே உரிய மகத்துவமான செயல். மிகவும் எளிதாக செய்யக்கூடிய இச்செயலில் தான் இன்று பலருக்கு உலகமகா யுத்தம். மன்னிப்பு மிக எளிமையானது. ஆனால் போரைவிட வலிமையானது. போர் உடலைதான் வெற்றிகொள்ளும் ஆனால் மன்னிப்பு மனதை வெற்றிகொள்ளும். மன்னிப்பு என்பது வார்த்தையன்று அது ஒரு வாழ்க்கைமுறை இயேசுகிறிஸ்து மன்னிக்கிறவராக வாழ்ந்து காட்டியிருக்கிறார் 7,70 முறை மன்னிக்க சொன்னார். (மத் 13:21-23). பாவியான பெண்ணை சமூகமே மன்னிக்க தவறியபோது முதல் ஆளாய் மன்னித்துசெயல்வடிவம் கொடுத்தார். மன்னிக்கும் கிறிஸ்துவாய் வாழ்ந்த இந்த வாழ்க்கை முறையை நாம் ஏன் பின்பற்ற முடியவில்லை? பிறரை நம்மால் ஏன் மன்னிக்க முடியவில்லை? 1. கோபம், 2. பொறாமை, 3. எளிதில் மறக்க முடியாமை, 4. சுபாவமில்லாமை, 5. பிடிவாதம், 6. இறை பயம் இல்லாமை என சொல்லிக் கொண்டே போகலாம். இயேசுகிறிஸ்துவுக்கு மிக எளிமையான சொல் மன்னிப்பு ஆனால் நமக்கு? "மன்னிப்பை மிக எளிமையான செயலாக்க சில கருத்துக்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும்".

### *1. மன்னிப்பு : உறவுக்கு அழைத்துச் செல்லும் ஆயுதம்* :

(தொநூ 33:10).

தவறுக்கு தவறு என்பது மிருகத்தன்மை தவறுக்கு மன்னிப்பு என்பது தயாளகுணம். தவறுக்கு நன்மை என்பது இறையவர் குணம். விண்ணின் கடவுளை மண்ணில் காண மன்னிக்க தெரிந்த மனிதராய் இருக்க வேண்டும். தன்னை ஏமாற்றிய தன் சகோதரன் யாக்கோபு வருகிறார் என அறிந்தும், யாக்கோபு செய்த தவறுகளை மனதில் வைக்காமல், தம் சகோதர உறவை மனதில் வைத்து "எந்த எதிர்பார்ப்பும் இன்றி" ஏசா யாக்கோபை சந்திக்க சென்றதினால், இந்த ஏசாவின் மன்னிப்பு யாக்கோபின் பார்வையிலே உயர்ந்ததாய் இருந்தது. எனவே தான் தன்னை தன் சகோதரன் முழுமையாய் மன்னித்ததினால் அந்த மன்னிப்பின் நிறைவினால், சொந்த சகோதரன் முகத்தில் கடவுளை பார்த்தான் (33:10) மன்னிப்பு ஒரு மனிதனை பகைமையை மறந்து சகோதர உறவை உருவாக்கும் ஆயுதமாகும்.

1981 -ஆம் ஆண்டு திருத்தந்தை 2-ம் அருள் சின்னப்பர் சுடப்பட்டு, மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அப்பொழுது அவர் "தம்மை சுட்டவரை ஒன்றும் செய்து விடாதீர்கள்" நான் அவரை மன்னித்து விட்டேன். என்று சொல்லிக் கொண்டே சென்றார். இதனை கவனித்த பத்திரிக்கையாளர் ராஜ் மோகன் காந்தி அவர்கள் "போப் அவர்களின் இச்செயலினால் அவர் எந்த அளவிற்கு உறவை வலுப்படுத்தும் தன்மை உடையவர் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது" என விளக்குகிறார். மன்னிப்பு எளிமையானது என கற்றுத்தருகின்ற இயேசுகிறிஸ்து, நாமும் பிறரை மன்னித்து சிறப்பான நிலைக்கு உயர்ந்து நிற்க எதிர்பார்க்கிறார். எனவே ஏசாவைப் போல் மன்னிப்போம். மன்னிப்பால் உறவை வலுப்படுத்துவோம்.

## *2. மன்னிப்பு : இருவர் பக்கமும் ஆரோக்கியம் தரும்*

(மத் 18:21,22)

மன்னிப்பு என்பது இருவர் பக்கமும் ஆரோக்கியம் தருகிற உன்னதமான மருந்து. "அடுத்தவர்களை மன்னிப்பது என்பது அடுத்தவர்களுக்கு நீங்கள் கொடுக்கும் சலுகையல்ல. மாறாக, அது உங்களை நீங்களே விடுவித்துக் கொள்ளும் வித்தை. பிறரை மன்னிக்க மறுக்கும் ஒவ்வொரு முறையும் நம்மை நாமே காயப்படுத்திக் கொண்டே இருக்கிறோம்." பிறரை மன்னிக்க மனதில்லாதவர்கள் தம் கையால் நெருப்புத் தழலை வைத்துக் கொண்டு, பிறர் மீது எறிய நினைக்கும் மூடனுக்கு ஒப்பானவர்கள். ஸ்டான் ஃ போர்ட் என்ற பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் மன்னிக்க கற்றுக் கொள்ளுங்கள் என்ற நூலில் மன்னிப்பு தரும் ஆரோக்கியத்தை பிரமிப்பூட்டும் வகையில் குறிப்பிட்டிருக்கிறார். மன்னிக்கிறவர்களை நோய் நெருங்காது என்றும் அவர்களின் இருதயம் ஆரோக்கியமாய் மிக வலிமையாய் இருக்கிறது என்பதனையும் நிரூபித்திருக்கிறார். கேம்பைன் ஃபார்பர்கிவன்ஸ் கிராஸ் என்பவரும் சுமார் 48 ஆராய்ச்சிகளைச் செய்து, எல்லா ஆராய்ச்சியிலும் மன்னிக்கும் மனிதர்கள் உடலிலும், உள்ளத்திலும் ஆரோக்கியமாக இருப்பதாகத் தெரிகிறது. எனவே ஆண்டவர் இயேசுகிறிஸ்துவும் பேதுரு கேட்ட கேள்விக்கு 7 முறையல்ல 7,70 முறை மன்னிக்க வேண்டும் என்று மன்னிப்பை வலுப்படுத்துகிறார்.

கார்ல் யுங் என்ற உளவியலாளர் மனித உறவை பற்றி "இரண்டு மனிதர்கள் சந்தித்துக் கொள்வது என்பது இரண்டு வேதிப்பொருட்கள் சந்தித்துக் கொள்வது போன்றது" என்றார். இரண்டு வேதிவினைப் பொருள்கள் இணையும் போது மாற்றம் அடைவது போல, மனித உறவுகளும் சந்திக்கும் போது மாற்றமடைகிறது. இரண்டு நபர்கள் நெருங்கும் போது நேர்மறை வேதிவினைமாற்றம் நடைபெற்றால் அவர்கள்

நண்பர்களாக மாறுகின்றனர். இதற்கு பதிலாக எதிர்மறை வேதிவினைமாற்றம் நடைபெற்றால் இருவரும் ஒருவருக்கொருவர் பிடிக்காதவர்களாக, எதிரிகளாக மாறுகின்றனர். மன்னித்து வாழ்வது ஆரோக்கியமானது. ஆனால் மன்னிக்காமல் மனதில் சுமந்து வாழ்ந்தால் அது நிம்மதியை' தூக்கத்தைக் கெடுக்கும்.

"அடுத்தவர்கள் நமக்கு செய்த தீங்குகளை, மன்னிக்காவிட்டால் வருடங்கள் பல ஓடினாலும் நீங்கள் கடந்த கால கைதியாகவே இருப்பீர்கள்" பிறரை மன்னிக்க மறுத்து நாம் நம்மை காயப்படுத்தாமல் இருக்க இயேசுகிறிஸ்து மிக எளிதான செயலாகிய மன்னிப்பை எத்தனை முறையானாலும் வெளிப்படுத்த சொல்கிறார். எனவே நாம் ஆரோக்கியம் தரும் மன்னிப்பை வெளிப்படுத்தி வாழ்வோம்.

### *3. மன்னிப்பு : நிறைவான வாழ்க்கைக்கான பலம்* (மாற்2:5)

இயேசுகிறிஸ்து முடக்குவாதமுள்ளவரை மன்னித்து அவருக்கு நிறைவான வாழ்வைக் கொடுக்கும் பாலமாக செயல்படுகிறார். மன்னிப்பு உறவுகளுக்குப் பாலம். உடைந்து போன உறவுகளைக் கட்டி எழுப்புவது மன்னிப்பு. நெல்சன் மண்டேலா கறுப்பின மக்களின் விடுதலைக்காக 27 ஆண்டுகாலம் சிறைவாசம் அனுபவித்தார். அவர் விடுதலை பெற்று அதிபராக பதவி ஏற்ற போது சிறைச்சாலையில் அவருக்கு சிறை அதிகாரியாக இருந்தவரை முக்கிய பிரமுகராக வரவேற்று அரங்கில் இடம் பெற செய்தார். ஆச்சர்யம் என்ன தெரியுமா! தமது 27 ஆண்டு சிறைவாசத்துக்கு காரணமாயிருந்து, தமது வழக்குக்கு எதிராய் வாதாடி மரணத் தண்டனையைத் தவிர வேறு எந்த தண்டனையும் குறைவாக வழங்கப்பட்டுவிடக்கூடாது என்று தீவிரமாய் வாதாடினவரை மதிய உணவு விருந்துக்கு வரவழைத்து அருகில் அமர்த்திக் கொண்டார். இந்த மன்னிக்கும் மனநிலை யாருக்கு வரும். மற்றொரு ஆச்சர்யம், தம் 27 ஆண்டுகாலம் சிறைக்கு செல்ல மூலக்காரணமான H.F. வேர்வோர்டின் என்பவரின் மனைவி சுகவீனமாய் இருந்த போது நாட்டுக்கே அதிபரான நெல்சன் மண்டேலா வேர்வோர்டின் இல்லத்துக்கே சென்று நேரில் நலம் விசாரித்து தேநீர் அருந்தி விட்டு வந்தார். மன்னிக்கிறவர்கள் உறவுகளுக்கு பாலமாக இருக்கிறார்கள். அதுவே நிறைவான வாழ்வுக்கு வழிநடத்தும்.

ஆண்டவர் இயேசுகிறிஸ்து மன்னிக்கும் கிறிஸ்துவாய் இருந்து நம்மையும் மன்னிக்க அழைக்கிறார். கிறிஸ்து நம்மை மன்னித்தது போல் நாமும் பிறரை மன்னித்து, நம்மில் இருக்கும் இறைச்சாயலை வெளிப்படுத்த, ஆரோக்கியத்தை மேம்படுத்தி, நிறைவான வாழ்க்கைக்கு பாலமாக வாழ்வோம்.

அருள்திரு. P. **இராஜா ஸ்டாலின்**

11-03-2020 **தவக்கால மூன்றாம் புதன்**

## அன்புக்குச் சான்று பகர்ந்த யோவான்

திருமறைப்பாடம் : யோவா 3:13-21, 1 யோவா 3:11-18, 1 யோவா 4:7-21

**"கிறிஸ்து நமக்காக தம் உயிரை கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று அறிந்து கொண்டோம்..."** (1யோவா 3:16)

சிலுவைக்குச் சான்று பகர்ந்தவர்களின் வரிசையில் மிகவும் முக்கியமான ஒரு சீடன் தான் யோவான். அவரது வாழ்வும், போதனையும் அன்பை ஆதாரமாக கொண்டே அமைந்திருத்து. அன்பை குறித்தும், அதன் முக்கியத்துவத்தை குறித்தும் யோவான் தமது நற்செய்தி நூலிலும், திருமுகங்களிலும் குறிப்பிட்டிருப்பதை நாம் காண முடியும். இது தவிர யோவானைப் பற்றி 'அன்பின் சீடன்' என்றும், 'இடிமுழக்கத்தின் மகன்' என்றும் இயேசுவின் சிலுவை பாடுகளில் இறுதிவரை உடனிருந்தவர் என்றும் திருமறையில் நாம் காண இயலும். இயேசுவோடு முழுமையான அன்பு இருந்தால் அவருக்கு சீடனாகி, அவர் மார்பிலே சாய்ந்து, சிலுவை பாடுகளின் மத்தியில் ஓடி ஒளியாமல் உடனிருந்தவர் தான் யோவான். பின்பு, தனது போதனையினாலும் அன்பையே அதிகமாக வலியுறுத்தினார். இப்போதும் அன்புக்கு சான்று பகர்ந்த யோவான் கற்றுத்தரும் சிந்தனைகளைத் தியானிப்போம்.

### *1. அறிந்து கொள்ளுங்கள் :*

"கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று அறிந்துகொண்டோம்" என யோவான் சொல்லுகிறார். சிலுவையின் அன்புக்கு சான்று பகர கடவுளின் அன்பை அறிந்து கொள்ளுங்கள். கடவுளின் அன்பு உலகத்தில் வெளிப்பட்டது.

கடவுளின் அன்பு வெறும் உணர்ச்சிபூர்வமானது அல்ல. எந்த சுயநலமும் இல்லாமல், கைம்மாறு பாராமல் உலக மக்களுக்கு நன்மையை அளிக்கும் இறை அன்பு. இப்படிப்பட்ட அன்பு வாழ்வுக்கு மகிழ்ச்சியையும் அர்த்தத்தையும் கொடுக்கவல்லது.

படைப்பின் பணியை முழுமையாக்கும் முன்னே கடவுள் மனிதர்கள் மேல் அன்பு காட்டினார். மனிதர்கள் உயிர்வாழ தேவையான அனைத்தையும் அவர் பூமியில் படைத்தார். அவர்கள் மகிழ்வுடன் வாழ ஏற்ற இடமாக அதை ஆயத்தப்படுத்தினார். அதன் பின்பு தான்

மனிதர்களை படைத்தார். நம் மீது கொண்ட அன்பினால் எதையுமே அவர் தமக்காக செய்யாமல் நமக்காக செய்தார். அதன்பின்பு பாவத்தில் விழுந்துபோன மனுகுலத்தை மீட்டெடுக்க தன் சொந்த மகனின் உயிரை மீட்பின் விலையாகக் கொடுத்துத் தம் அன்பை விளங்கப்பண்ணினார்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் அன்பின் வடிவமாக வந்து, அன்பைப் போதித்து, அன்பால் அனைத்தையும் சாதித்து, வாழ்வின் செயல்களில் அன்பை பிரதிபலித்தார். சீடரின் கால்களை கழுவினது (யோவா 15:12-17). சீடர்களுக்காய் வேண்டிக்கொண்ட மன்றாட்டு (யோவா 17:1-26) என அனைத்திலுமே அன்பின் செயல்பாட்டை இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தினர். இறுதியாக "தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமுமில்லை." (யோவா 15:13) எனத் தாம் சொன்னபடியே, பாவிகளாகிய நமக்காக பாவமறியாத இயேசு கிறிஸ்து பாவபலியானார். அன்பின் முழுவடிவத்தையும் சிலுவையிலே நாம் காணும்படி செய்தார். அவர்பட்ட அடிகளும், கொண்ட காயங்களும் சகித்த ஏளனமான வார்த்தைகளும் நம்மீது கொண்ட அன்பின் நிமித்தமே. அந்த அன்பை அறிந்து கொள்வதும், நாளும் சிந்திப்பதும், அவ்வன்புக்கு சான்று பகர்வதும் நமது கடமை என்பதை யோவான் நமக்கு ஆலோசனையாக சொல்லுகிறார்.

### *2. அன்பு செலுத்துங்கள் :*

கடவுளின் அன்பை அறிந்து கொண்டதோடு நின்று விடாமல், கடவுளோடும், மனிதரோடும் அவ்வன்பை காண்பிக்கவும், அவ்வன்புக்காகப் பாடுகளை பொறுமையோடு ஏற்கவும் அறிவுறுத்தப்படுகிறோம். எப்படி கடவுளிடம் அன்பு செலுத்துவது என்பது அவர் கட்டளைகளை கடைபிடிப்பதில் தான் கடவுள் அன்பு அடங்கியுள்ளது. ஆகவே, கடவுளின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிய யோவான் நமக்கு ஆலோசனை தருகிறார். அப்படி கீழ்ப்படியும் போது நாமும் கடவுளிடம் அன்பு செலுத்துகிறோம். இது ஓர் உன்னதமான அனுபவம்.

அதைத் தொடர்ந்து சகோதர உறவுகளிடத்திலும் அன்பு செலுத்த வேண்டியது கட்டாயம். நாம் சகோதரிடத்தில் அன்பு கூருகிறபடியால் சாவை விட்டு நீங்கி வாழ்வுகக்கு உட்பட்டிருக்கிறோம் என்று அறிந்திருக்கிறோம் என யோவான் சொல்லுகிறார்(1யோவா 3:14) நம் சகோதரிடம் காட்டும் அன்பு நிலைவாழ்வுக்கு நேராய் நம்மை வழிநடத்தும். சகோதரரிடம் எப்படி அன்பு செலுத்த வேண்டும் என்பதை யோவா. 3:18

-இல் குறிப்பிடுகிறார். சொல்லினாலும், பேச்சினாலுமல்ல, செயல்கள் வழி அன்பு கூர வேண்டும். இன்றை அன்பு வெறும் பேச்சளவிலே நின்றுவிடுகிறது. உண்மையாகவே பிறரிடம் அன்பு வைத்திருப்பவர் செயலில் காட்டவேண்டும். உதாரணமாக, தேவையில் இருப்போருக்கு அன்பான ஆறுதலின் வார்த்தைகள் மட்டும் போதாது. அவர்களது அடிப்படை தேவைகளை சந்திக்க நம்மால் இயன்ற செயலை நிறைவேற்றவேண்டியது கட்டாயம். அதற்காக இன்னுயிரையும் தியாகம் செய்ய முன்வர வேண்டும். அங்கே தான் உண்மையான அன்பு அர்த்தமுள்ளதாகும். தியாக அன்பு வெளிப்பட்டு நாமும் அன்புக்கு சான்று பகர முடியும்.

இயேசு கிறிஸ்துவின் சீடராகிய இந்த யோவான் பிற்காலத்தில் எபேசுவுக்குச் சென்று அங்குத் திருச்சபைத் தலைவராக இருந்தார். அங்கு ரோமானியரால் துன்புறுத்தப்பட்டார். கொதிக்கும் எண்ணெயில் இவரை அமிழ்த்தினார்கள். ஆனாலும் ஆச்சரியமாகக் கடவுளால் காக்கப்பட்டார். சபைக்கூடுகைகளின் போது “பிள்ளைகளே ஒருவரில் ஒருவர் அன்பாய் இருங்கள்” என்று கூறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இவர் சுமார் நூறு வயதுள்ளவராய் இறந்தார். தூய பவுல் இவரைத் திருச்சபையின் தூண்களில் ஒருவர் என்கிறார் (கலா 2:9). கடவுளின் அன்புக்கு மட்டும் கடனாளியாக வேண்டும் என அடிக்கடி இவர் கூறுவது போல, தன் வாழ்வின் நிறைவுவரையிலும் அன்பையே பிரதிபலித்து வாழ்ந்து அன்புக்குச் சான்றுப் பகர்ந்தார்.

திரு. J. **ஜோஸ் டோபின்**

13-03-2020 **தவக்கால மூன்றாம் வெள்ளி**

# நீதிக்குத் திரும்புங்கள்

திருமறைப்பாடம் : ஓசே 12:1-6

**"...இஸ்ரயேலே! உன் கடவுளிடம் திரும்பிவா; இரக்கத்தையும் நீதியையும் கடைப்பிடி..."** (ஓசே 12:6)

வாக்குத்தத்த நாட்டை அடைந்து, செழுமையான நிலையை எட்டியவுடன் மக்கள் ஆண்டவராகிய கடவுளை விட்டுவிட்டார்கள். அவர்கள் அந்த நாட்டிலிருந்த கானானியரை முழுவதுமாக நீக்கிவிடவில்லை. அதற்கு மாறாக, அவர்கள் மத்தியில் வாழ்ந்து அவர்களுடைய பழக்கங்களில் சிலவற்றைக் கையாண்டனர். கானானியத் தெய்வங்கள் தான் மழையைக் கொடுத்து தானியங்களை விளையச் செய்வது செழுமையை அருளுகின்றன என்று நம்பினர். எனவே இஸ்ரவேலில் அநேகர் கானானியத் தொழுகைகளில் பங்கு கொள்ளலாயினர். இந்த காலகட்டத்தில் (கிமு 750-722/1) இஸ்ரவேல் அசீரியர்களால் அச்சுறுத்தப்பட்டனர். அந்த நேரங்களில் இஸ்ரவேலின் அரசர்கள், அசீரியர் தங்களைத் தாக்காதபடிக்கு வெகுமதிகளை கொடுத்தனர். சில வேளைகளில் அசீரியர்களுக்கு விரோதமாக எகிப்து போன்ற நாடுகளின் உதவிகளை நாடினார். இத்தகைய அரசியல் அணுகுமுறைகள் அவர்களுக்கு பின் விளைவுகளை ஏற்படுத்தினது. இந்த பின் விளைவுகளைக் குறித்து எச்சரிப்பதே இந்நூலின் சிறப்பு நோக்கமாகும். அதைத்தான் நாம் தியானிக்கிற திருமறைப்பகுதியில் படிக்கின்றோம். அதிலே குறிப்பாக "நீதிக்குத் திரும்புதல்" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு சில கருத்துக்களை நாம் சிந்திக்கலாம்.

### *1. நீதியின் கடவுளிடம் திரும்புங்கள்* (12:2,6)

ஓசேயா தீர்க்கர் இஸ்ரயேல் ஜனங்களின் (யாக்கோபின் சந்ததிகள்) செயல்களுக்கு தக்கவாறு ஆண்டவர் கைமாறு தருவார் என்று இரண்டாம் வசனத்தில் எச்சரிக்கிறார். அந்த செயல்பாடுகள் இஸ்ரவேலின் வெளியுறவு கொள்கையை (Foregin Policy) குறித்து விவரிக்கின்றது. எப்ராயீம் (இஸ்ரவேல் என்னும் வட நாட்டைக் குறிக்கும்) காற்றை உண்டு, நாள் முழுவதும் கீழைக் காற்றைப் பிடிக்க ஓடுகிறான்; பொய்யும் வன்செயலும் பெருகிவிட்டன. அசீரியாவோடு உடன்படிக்கை செய்கின்றான். எகிப்துக்கு

எண்ணெய் கொடுத்தனுப்புகிறான் (வச.1). இதிலே “காற்றை உண்டு”, “கீழைக் காற்றை பிடிக்க” என்னும் சொற்றொடர்கள் அசீரியரோடும், எகிப்தோடும் இஸ்ரவேல் கொண்டுள்ள “வெளியுறவு” பயனற்றது என்பதை விளக்குகின்றது. காற்றை எப்படி பிடிக்க முடியாதோ அது போல இஸ்ரவேலின் முயற்சிகள் வீணென்பதை சுட்டிக் காண்பிக்கிறது. இதோடு ஓசேயா 8:7-ஐ ஒப்பிடும் போது “அவர்கள் காற்றை விதைக்கிறார்கள்; கடும் புயலை அறுப்பார்கள்....” என்கிறார். அதன் அர்த்தம் இஸ்ரவேலுக்கு இந்த வெளியுறவு எந்த காலத்திலும் பயன்தருகிறதல்ல என்பதாகும்.

மேலும், வச.1-ல் சொல்லப்பட்டுள்ள இஸ்ரவேலின் செயல்பாடுகளான “பொய்யும் வன்செயலும் (Or) வன்செயலை பிறப்பிக்கும் பொய்” என்பது இஸ்ரவேலின் அரசரான மெனகேம் கிமு 738-ல் அசீரிய அரசரான திகிலாத்பிலேசரிடம் நாடிய உதவியை (2 அர 15:19,20) அல்லது இஸ்ரவேலின் அரசரான ஓசேயா அசீரிய அரசர் சல்மனாசருக்கு கப்பம் கட்டிய பின்னர் அசீரியாவுக்கு எதிராக, எகிப்து மன்னரான சோவிடம் நாடிய உதவியைக் குறிக்கும் (2 அர 17:1-6). இதில் இஸ்ரவேல் அசீரியருடன் உடன்படிக்கை செய்துவிட்டு அதேநேரத்தில் அவர்களுக்கு எதிராக எகிப்துக்கு “எண்ணெயை” லஞ்சமாகக் கொடுத்து எகிப்தியரின் உதவியை நாடினது அவர்கள் பொய், ஏமாற்று வேலை மற்றும் வன்முறையை தூண்டும் செயல்பாடுகளை தோலுரித்துக் காண்பிக்கிறது. இன்னும் அழுத்தமாக விளக்கினால், நல்ல வாழ்வையும், வளத்தையும் நிறைவாக அருளின கடவுளைவிட்டு அசீரியர், எகிப்தியர் பக்கம் திரும்பினது கடவுளுக்கு விரோதமாக செய்த துரோகம் மட்டுமல்ல. அது அசீரியருக்கும்-எகிப்தியருக்கும் இடையே வன்முறையை தூண்டும் செயலராகவும், அதோடு அந்த இரண்டு தேசங்களின் கடுங்கோபத்திற்கு இஸ்ரவேல் ஆளாகும் முட்டாள்தனமான செயலாக நாம் இதை காணமுடிகின்றது. இஸ்ரவேலின் இந்த ஏமாற்று வேலையையும், முட்டாள்தனத்தையும் மக்களுக்கு விளக்கவே தீர்க்கர் ஓசேயா இஸ்ரவேலின் தந்தையான “யாக்கோபை” அவர்கள் மீட்பின் வரலாற்றிலிருந்து ஒப்பிட்டு பேசுகிறார். ஓசேயா 12:3,4 -ல் யாக்கோபு தன் தமையன் ஏசாவை தாயின் கருவிலே முந்தினான். (அதன் பொருள்-அவன் தன் தமையன் ஏசாவை ஏமாற்றித் தலைமகன் உரிமையையும், பின்னர் தந்தையின் ஆசிகளையும் சொந்தமாக்கினான்). எனினும் பின்பு கடவுளின் அருளை வேண்டி போராடி வெற்றியும் கொண்டான் என விவரிக்கின்றார். இப்படி விளக்கிக் காண்பித்து வச. 6-ல் நீதியின் கடவுளிடம் திரும்பி வாருங்கள் என்று இஸ்ரவேலரை தீர்க்கர் அழைக்கின்றார். நீங்கள் திரும்பி வந்தால், யாக்கோபை ஆசிர்வதித்த கடவுள் உங்களுக்கும் இரங்குவார் என்ற நற்செய்தியையும் தருகின்றார்.

அன்பானவர்களே, நாமும் இந்தத் தவக்காலத்தில் மனிதர்களை ஏமாற்றுவது போல கடவுளையும் ஏமாற்றிவிடலாம் என்ற சிந்தனை முற்றிலும் அகற்றிவிட்டு நீதியின் கடவுளிடம் முழுமனதோடு திரும்பி வந்தால் இந்த தவக்காலம் நமக்கு மாற்றத்தின் காலமாக அமையும்.

## *2. நீதி செய்யத் திரும்பி வாருங்கள்* (12:6)

நீதியின் கடவுளிடம் திரும்பி வாருங்கள் என்ற அழைப்பைக் கொடுத்த தீர்க்கர் ஓசேயா, தொடர்ந்து நீதி செய்ய திரும்பி வாருங்கள் என்கிறார். அதாவது உங்கள் சகோதர, சகோதரிகளுக்கு விரோதமாகச் செய்த அநீதிகளை விட்டு ஓய்ந்து நீதியுள்ள கிரியைகளை நடப்பிக்க கடவுளிடம் முழுமனதோடு திரும்பி வாருங்கள் என்கிறார். இதைத்தான் மனந்திரும்புதலின் அடிப்படை ரகசியமாக நாம் புரிந்துக் கொள்ள வேண்டியது. அது கடந்த காலத்தில் செய்த செயல்களுக்காக வருந்துவது மட்டுமன்று; நமக்கு நேராக வைக்கப்பட்டிருக்கும் நம் வாழ்வை நன்கு சிந்தித்து வாழ்க்கையில் திசை மாறுவதாகும். யாக்கோபும் இதைத்தான் செய்தார். தன் சகோதரனிடம் செய்த தவறுக்காக வருந்தினதுடன் விட்டுவிடவில்லை. கடவுளின் அருளை வேண்டிப் போராடினார். அதிலே வெற்றியும் கொண்டார். அதனைத் தொடர்ந்து சகோதரனை நேருக்கு நேர் சந்தித்தார் ஒப்புரவானார். வாழ்க்கையின் திசையினை மாற்றினார். அதற்கு பின்பு அவர் யாரையும் ஏமாற்றவில்லை.

ஓசேயா தீர்க்கன் நீதியையும், இரக்கத்தையும் நிறைவேற்ற மூன்று ஆலோசனைகளைத் தருகின்றார்.

அ) யூதாவின் தலைவர்கள் எல்லைக் கல்லை தள்ளி வைக்கிறவர்களுக்கு ஒப்பாயிருக்கிறார்கள் (ஓசேயா 5:8-10). இது யூதாவின் தலைவர்கள் இஸ்ரவேலின் எல்லையைக் கடந்து போனதைக் குறிக்கிறது. இச்செயலை இஸ்ரவேலரின் சட்டம் கண்டிக்கிறது (இச 19:14, 27:14-26, நீதி 22:28). இந்தத் தீயச் செயலைவிட்டு திசைமாற ஓசேயா தீர்க்கர் எச்சரிக்கை தருகின்றார். தன் சகோதரர்களின் சொத்தை அபகரிக்கும் தீயச் செயலை விட்டு விட்டு, நீதியை நடப்பிக்க அழைக்கப்படுகின்றார்.

ஆ) அசீரியாவோடும், எகிப்தோடும் பெய்யாணையிட்டு உடன்படிக்கை செய்கிறார்கள் (ஓசேயா 10:4, 12:1). ஆண்டவரை நம்பாமல் பிற நாட்டின் உதவிகளை நாடி தங்களையே ஏமாற்றிக் கொள்கிறார்கள். இது தங்களுக்கு அழிவைக் கொண்டுவரும் என்று உணர்ந்து நீதியின் ஆண்டவரை நம்பி திசைமாற ஆண்டவர் அழைக்கின்றார்.

இ) தங்கள் உள்ளத்திலிருந்து என்னை நோக்கி கூப்பிடாமல்.....எனக்கு எதிராக தீங்கு நினைக்கிறார்கள். "பாகாலையே" நோக்கித் திரும்புகின்றனர் (ஓசேயா 7:14-16). இந்த வேசித்தனத்திலிருந்து விடுபட்டு முழுமனதுடன் ஆண்டவரை சேவிக்க, அதனால் நீதியை நடப்பிக்க ஆண்டவர் தீர்க்கர் வழியாக எச்சரிக்கை தருகின்றார். இங்ஙனம் இஸ்ரவேலர் நீதியை நடப்பித்தல் ஆண்டவரின் இரக்கத்தை அவர்கள் சொந்தமாக்க முடியும்.

அன்பானவர்களே, நாமும் இந்த தவக்காலத்தில் அநீதிகளை ஒழித்துவிட்டு முழுமனதோடு இந்த தவக்காலத்தில் நீதியின் கடவுளிடம் திரும்புவோம். நீதியையும், இரக்கத்தையும் நடப்பித்து வாழ்க்கை திசையை மாற்றுவோம். மாற்றுருவாக்கத்தின் காலமாக இந்த தவக்காலம் அமையட்டும்.

அருள்திரு. **வின்சிலோ G. ஷேபர்**

15-03-2020

**உயிர்ப்புக்கு முன்வரும் நான்காம் ஞாயிறு & தவக்கால மூன்றாம் ஞாயிறு**

# ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்து

**THE ACCEPTING CHRIST**

ஓசே 2:14-23 | பில 1-21
திபா 87 | மத் 15:21-28

**இயேசு மறுமொழியாக "அம்மா உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்" என்று அவரிடம் கூறினார்".** (மத் 15:28)

கடவுள் எவரையும், எந்நிலையிலும் தள்ளி விடுபவர் அல்ல. அவருக்கு துரோகம் செய்தாலும் அவரை நோக்கி திரும்பும் எவரையும் மனதார ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு புதுவாழ்வு கொடுக்கின்றார். உதாரணமாக மனாசே அரசர் (2குறிப் 33:1-16). கடவுளை உண்மையாய் சேவித்த எசேக்கியா அரசரின் மகன். ஆனால் கடவுளை விட்டு விலகி தனது பிள்ளைகளை நரபலி கொடுக்கும் அளவுக்கு பிற தெய்வங்களை சேவித்தார். மக்கள் கடவுளை விட்டு வழி விலகிச் செல்ல தூண்டினார். பாபிலோன் அரசன் இவர் மீது படையெடுத்து இவரை சிறைக்கைதியாக பாபிலோனுக்கு கொண்டு சென்றான். பாபிலோனில் வைத்து மனாசே கடவுளைத் தேடினார். கடவுள் அவரை மறுபடியும் எருசலேமுக்கு வந்து ஆட்சி செய்ய வாய்ப்புக் கொடுத்தார். இந்த நிகழ்வு கடவுளிடம் மனிதன் எந்த நிலையில் இருந்து திரும்பினாலும் அவனை ஏற்றுக்கொண்டு புதுவாழ்வு கொடுப்பார் என்பதைக் காட்டுகின்றது. ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்துவின் அன்பு இன்று எவ்விதம் செயல்படுகிறது என்பதைக் கொடுக்கப்பட்ட திருமறைப் பகுதிகளின் அடிப்படையில் காண்போம்.

## ***1. பாவிகளை ஏற்கும் கிறிஸ்து*** : (ஓசே 2:20)

இஸ்ரவேல் மக்கள் கடவுளை விட்டு பாவத்தினால் விலகினார்கள். அக்காலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்த ஓசேயா கணவனை விட்டு பிரிந்து வாழ்வில் கெட்டுப்போன ஒரு பெண்ணின் வாழ்வுடன் ஒப்பிட்டு இதை விளக்குகிறார். இந்த தவறுக்கு தண்டனை உண்டு என்ற எச்சரிப்பைத் தருகின்றார் (ஓசே 2:13). அதே வேளையில் 14-ம் வசனத்தில் இருந்து தண்டிக்கப்பட்டாலும் கடவுளின் அன்பு அவளைத் தேடிச்சென்று மனம் திரும்பச் செய்கிறது என்றும் மாறாத அன்புடன் மறுபடியும் மண ஒப்பந்தம் செய்துகொள் என்றும் கூறுகின்றார். ஓசேயா நூல் முழுவதும் மனுக்குலம் பாவத்தினால் விலகிச் சென்றாலும்

கடவுளின் அன்பு அவர்களைத் தேடி, அவர்களது மீட்புக்காக ஏங்குகிறது. என்பதைக் குறிப்பிடுகின்றார் (ஓசே 18:1-8). மேலும் கைவிடமுடியாமல் தவிக்கும் கடவுள் குரலையும் எதிரொலிக்கின்றது (ஓசே 12:6). மேலும் ஒசேயாவின் இறுதி அதிகாரத்தில் பாவத்தால் நாம் விலகிச் சென்றாலும் அன்பு நிறைந்த கடவுள் எப்பொழுதும் நம்மை ஏற்க ஆயத்தமுடையவராய், நமது மனம் திரும்புதலை எதிர்பார்த்து காத்திருக்கிறார்.

யோவா 8:1-11 வரையுள்ள பகுதியில் இயேசுவிடம் கொண்டு வரப்பட்ட பாவியான பெண் தவறுசெய்த சூழலில் பிடிக்கப்பட்டவர், தண்டனைக்கு உரியவர். ஆனால் இயேசு அவளை மன்னித்து "நீர் போகலாம். இனிப் பாவம் செய்யாதீர்" என்று கூறி அனுப்பி விடுகின்றார். இந்த நிகழ்வு தவறு செய்தவர்களையும் மன்னித்து ஏற்கும் இயேசுவின் அன்பை காட்டுகின்றது.

***2. ஓரம்கட்டப்பட்டவர்களை ஏற்கும் கிறிஸ்து*** : (பில 16)

ஒனேசிமு பிலமோனின் அடிமை. ஆனால் தவறு செய்து தப்பிச்சென்ற அடிமை (வச. 18). தப்பி ஓடிய அவன் பவுலடியாரிடம் தஞ்சம் புகுந்தான். அவனை ஏற்றுக்கொண்ட பவுல் அவனது விடுதலையை வேண்டியும், அவனை சகோதரனாக ஏற்றுக்கொள்ள வேண்டியும் இக்கடிதத்தை எழுதினார். வச. 12-ல் பவுல் ஒனேசிமுவைப தன் இதயத்துடன் ஒப்பிட்டு பேசுவது அவன் அடிமை ஆனாலும், தவறு செய்தவனானாலும், தன்னை ஏற்பது போல் அவனையும் ஏற்க வேண்டும் என்ற செய்தியைக் கூறுகிறார். கலா 3:28; கொலோ 3:11 ஆகிய வசனங்களில் இனம், வர்க்கம் போன்ற பாகுபாடுகளைக் கடந்து கிறிஸ்து அனைவரையும் சகோதர உறவுக்குள் இணைக்கிறார். எனவே நாமும் ஒருவரை ஒருவர் வேறுபடுத்தி பார்க்கக் கூடாது என்ற கருத்தைக் கூறுகிறார். அதை பிலமோன் மூலம் செயல்வடிவத்தில் காட்டுகின்றார்.

நமது வாழ்விலும் எளியவர்கள், வேற்று இனமக்கள், வேறு ஜாதியார், அற்பமானவர்கள் என எவரையும் தள்ளாதபடி கிறிஸ்து நம்மை ஏற்றுக் கொண்டதைப் போல அவர்களை அன்புடனும், பாசத்துடனும் சகோதரர்களாக ஏற்று வாழ வேண்டும்.

***3. எளிய மக்களின் பற்றுறுதியை ஏற்கும் கிறிஸ்து*** :

(மத் 15:28)

சமாரியப் பெண்ணின் மகள் சுகம்பெற்ற நிகழ்வை மட்டும் வாசித்தால் இயேசு கிறிஸ்துவின் செயலை தவறாக புரிந்துகொள்ள நேரிடும். இதை மத் 14:23-33-ல் கூறப்பட்டுள்ள இயேசு கடலின் மேல் நடந்த நிகழ்வுடன் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். அதில் இயேசு கடலின்

மேல் நடக்கின்றார் (வச 25), அதைப் பார்த்து பேதுருவும் இயேசுவிடம் அனுமதி பெற்று கடலின் மேல் நடந்தார் (வச 29). ஆனால் பயமும் அவிசுவாசமும் அவரை அமிழ்ந்து போகச் செய்கின்றது (வச 30). அப்போது இயேசு அவரைப் பார்த்து "நம்பிக்கை குன்றியவனே" என்கிறார். மற்ற சீடரின் விசுவாசத்துடன் ஒப்பிடும்போது பேதுருவின் விசுவாசம் பெரிது என்றாலும் நெருக்கடிகளை எதிர் கொள்ளும்ஆற்றல் இல்லாத விசுவாசம் இது. அத்தகைய அற்ப விசுவாசம் உள்ள சீடருக்கு கானானியப் பெண்மணியின் விசுவாசத்தின் உறுதியைக் காட்ட அவளுக்கு அதிகமான நெருக்கடியை கொடுத்தார். முதலாவது அவர் கூப்பிட்டும் பதில் சொல்லவில்லை (வ 23). அதன் பின்னர் அவளை தவிர்க்கும் பதிலைக் கூறுகிறார் (வ 24) இறுதியாக அவள் மனம் புண்படும் பதிலைக் கூறுகின்றார் (வ 26). ஆனால் இவை அனைத்தின் மத்தியிலும் அவள் உறுதியாக இயேசுவை பற்றிக்கொண்ட போது சீடரின் முன்பும், இயேசுவை பின்பற்றின ஏனைய மக்கள் முன்பும் "அம்மா உம் நம்பிக்கை பெரிது" என்று பாராட்டுகின்றார். இதன்மூலம் அற்பவிசுவாசமுள்ள பேதுரு விசுவாசத்தின் சிறப்பை இந்த கானானிய பெண் மூலம் உணரச் செய்கின்றார். அவளது விண்ணப்பமும் கேட்கப்பட்டது.

இயேசு எவரையும் தள்ளிவிட விரும்புவதில்லை. பாவம்செய்து தூரம் போனவர்களையும் (மாற் 1:15), வாழ்வில் பாரத்தினால் சோர்ந்து போனவர்களையும், சமூகத்தின் சூழல்களால் ஓரம்கட்டப்பட்டவர்களையும், விசுவாச வாழ்வுக்கு தகுதி அற்றவர்கள் என்று சமூகத்தால் கருதப்பட்டவர்களையும் அவர் தள்ளி விடுவதில்லை. எப்போதும் அன்பினால் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருக்கிறார்.

அருள்திரு. J. **விக்டர் ஞானராஜ்**

18-03-2020

**தவக்கால நான்காம் புதன்**

## துன்பத்தைத் துணிவுடன் ஏற்ற யாக்கோபு

மத் 20:20-28, திப 12:1,2

**"...நான் குடிக்கப் போகும் துன்பக் கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா? என்று கேட்டார். அவர்கள் எங்களால் இயலும் என்றார்கள்".** (மத் 20:21)

Raimond Panikkar என்ற தத்துவ ஞானி துன்பத்தை பற்றி கூறும் போது ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்று சொல்லி துன்பத்தைத் தவிர்க்க சொல்கிறது புத்த சமயம் எல்லாம் மாயை என்று சொல்லி துன்பத்தை மறுக்க முயற்சி செய்கிறது. இந்து சமயம், இஸ்லாம் மற்றும் சைன சமயங்கள் துன்பத்திற்கான காரணங்களைச் சொல்லி அவற்றிற்கு விளக்கம் கொடுக்கின்றன. ஆனால் கிறிஸ்தவமோ துன்பத்தை மீட்பின் கருவியாக மாற்றுகிறது என்று குறிப்பிடுகின்றார்.

மனித வாழ்வில் வந்து செல்லும் இன்பமும், துன்பமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும். துன்பத்தை நாம் எதிர்கொள்ளும் போது அதை எப்படி எடுத்துக் கொள்கிறோம் அந்த துன்பத்தில் எப்படி செயல்படுகிறோம் என்பதில் தான் மனித வாழ்வு ஏற்றம் பெறுகிறது. எனவே Oscar wilde தான் என்னும் கவிதையாளர் துன்பத்தைப் பற்றி கூறும் போது, "கசப்பான துன்பங்கள் அனைத்துமே இறைவனின் ஆசிர்வாதங்களின் மாறு வேடங்கள் என்பதை உணர்வது அவசியம்" என்று குறிப்பிடுகின்றார்.

ஆகவே தான் யாக்கோபு துணிவோடு துன்பத்தைத் ஏற்றுக் கொண்டார். இயேசு கிறிஸ்து தான் அடைய போகின்ற துன்பத்தை உங்களால் ஏற்றுக் கொள்ள இயலுமா என்ற கேள்விக்கு யாக்கோபின் தாய் மற்றும் யாக்கோபும் அவர் சகோதரனும் இயலும் என்று பதில் அளித்தனர்.

இயேசு கிறிஸ்து உயிர்த்து விண்ணேற்றமான பின் மற்ற அப்போஸ்தலர்களுடன் யாக்கோபுவும் எருசலேம் சென்றார் (திப 1:13) ஆனால் சிறிது காலத்திற்குள்ளாக எரோது அகரிப்பாவால் சிரைச்சேதம் செய்யப்பட்டார்(திப 12:2). கிறிஸ்துவினிமித்தம் துன்பத்தை ஏற்றுக் கொண்டார்.

யாக்கோபு கிறிஸ்துவின் பாடுகளை தமக்குரியதாக்கி துன்பங்களை துணிவுடன் ஏற்றுக் கொண்டார். இதையே புனித அம்புரோஸ் என்பவர் பல வேளைகளில் துன்புறுத்துவோரிடமிருந்து நாம்

அடைகின்ற வேதனைகளில் தான் கிறிஸ்துவை மிக உறுதியாகக் கண்டடைய முடிகிறது என்றார். ஆகவே துன்பத்தைத் ஏற்று கிறிஸ்துவின் உடன் பங்காளியாக யாக்கோபு மாற்றம் பெற்றார்.

துணிவுடன் துன்பத்தை ஏற்றுக் கொண்ட யாக்கோபின் தன்மைகளை குறித்து தியானிப்போம்.

***1. ஆழமான நம்பிக்கை :*** (மத் 20:21)

மத்தேயு இந்நிகழ்வை விளக்கும் போது யோவான். யாககோபின் தாய் மரியாள் இயேசுவிடம் தன் மகன்களுக்கு வலது இடது பக்கத்தில் இடம் கேட்டதாக குறிப்பிட்டுள்ளது. ஆனால் மாற் 10:35-45 இல் யாக்கோபும், யோவானும் தாமே முன் சென்று உமது அரசில் வலது, இடது பக்கத்தில் இடம் கேட்டதாக குறிப்பிட்டுள்ளது.

இந்த இரு திருமறைப்பகுதிக்கும் பொதுவான செய்தி என்னவென்றால் யாக்கோபும், யோவானும் இப்படி கேட்பதற்கு முன்பு கிறிஸ்து இயேசு தன் பாடுகள் அனைத்தையும் முன்னறிவிக்கின்றார் (மத் 20:17-19, மாற்கு 10:32-34). இந்த துயரமான காரிருள் சூழ்ந்த நிலையிலும் இயேசு கிறிஸ்துவின் மேல் முழுமையாக பற்றுறுதி வைத்திருந்தனர். கிறிஸ்து இயேசுவால் மரணத்தை வெல்ல முடியும் அவரால் புதிய அரசை அமைக்க முடியும் என்று நம்பிக்கை வைத்தனர்.

கிறிஸ்தவ வாழ்வு என்பது கடவுள் மீது கொண்ட ஆழமான நம்பிக்கையால் கட்டப்பட்டது. நம்பிக்கை பொறுமைக்கு வித்திடுகிறது துன்ப வேளையில் மனத்திடனைத் தருகிறது.

Victor Frankl என்பவர் ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த உளவியலாளர். இவர் பிறப்பால் ஒரு யூதர். இரண்டாம் உலகப்போர் சமயத்தில் நாஜிக்கள் இவரைச் சிறையிலடைத்து இவருடைய உடையைக் களைந்து விட்டு ஏற்கெனவே இறந்த கைதி ஒருவரின் கந்தலாடையை இவருக்குத் தந்தது. தான் கந்தலாடையை அணிந்த பின் அதன் பையைத் துழாவிய போது ஒரு நாள் மடித்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டார் அதனுள் இஸ்ரவேலே கேள். நம் ஆண்டவராகிய கடவுள் ஒருவரே ஆண்டவர். உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு மனத்தோடும் முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக (மாற் 12:29,30). என்ற வசனம் எழுதப்பட்டிருந்தது. இந்த வசனம் துன்பமான சூழ்நிலையில் நம்பிக்கையையும் வல்லமையையும் கொடுத்ததாகக் குறிப்பிடுகின்றார். ஆண்டவரில் நம்பிக்கை கொள்வோரை அவரது பேரன்பு சூழ்ந்து நிற்கும் (திபா 32:10). எனவே ஆழமான நம்பிக்கையோடு முன்னேறுவோம்.

### ***2. அசையாத உண்மைப் பற்று :*** (மத் 20:23)

இயேசு கிறிஸ்துவின் மறு மொழியாகிய என் துன்ப கிண்ணத்தில் நீங்கள் குடிப்பீர்கள் என்ற வார்த்தை யாக்கோபுவின் வாழ்வில் எந்த பின் மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. துன்பத்தை ஏற்றுக் கொள்ளும் மனநிலையோடு இயேசு கிறிஸ்துவிடம் இயலும் என்ற பதிலைக் கூறுகின்றனர். யாக்கோபு இயேசு கிறிஸ்துவின் மீது அசையாத உண்மைப்பற்றோடு இருந்தார். யாக்கோபு பின்மாறி போகவில்லை. இயேசு கிறிஸ்துவை விட்டு பிரிந்து போகவில்லை. துன்பத்தை முழு மனதோடு ஏற்றுக் கொண்டார்.

தென் கொரியாவின் ஜனாதிபதியாக இருந்தவர் Kim Dae-jung. 2000 ஆவது ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர். திரு முழுக்கின் போது அவருக்கு கொடுக்கப்பட்ட பெயர் தாமஸ் மூர் என்பதாகும். ஜனாதிபதி ஆகும் முன்பு தன் நாட்டில் அமைதியை ஏற்படுத்தும் பொருட்டு கடுமையாக உழைத்தவர். பல முறை சிறைச்சாலைக்குச் சென்ற அனுபவங்களும் பல்வேறு வகையான சித்ரவதைகளுக்கு உள்ளான துன்பமான அனுபவங்களும் அவருக்கு உண்டு. தன்னைப் பற்றிய குறிப்பில், எனக்குக் கொடுக்கப்பட்ட கிறிஸ்தவ விசுவாசமே நான் துன்பங்களை சகித்து வெற்றி பெற காரணம் என்றார்.

அன்புக்குரியவர்களே, நாமும் அசையாத உண்மைப்பற்றோடு ஆழமான நம்பிக்கையோடு துன்பங்களைச் சகித்து கிறிஸ்வுக்காக செயல்படுவோம். யாக்கோபு 14 ஆண்டுகள் ஸ்பெயின் நாட்டிலும் இறைப்பணியாற்றினார். எருசலேமலில் யூத கைதிகளுக்கு நற்செய்தி அறிவித்ததால் ஏரோது யாக்கோபை கொலைச் செய்ய திட்டம் வகுத்து, கைது செய்து நீதிமன்றம் அழைத்துச் சென்றான். அப்போது யாக்கோபின் சான்று வாழ்வினால் சேவகன் ஒருவர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார். இதனால் கி.பி 42 இல் யாக்கோபும், சேவகனும் ஒன்றாகவே சிரச்சேதம் செய்யப்பட்டார்கள். திருமறையில் படிக்கும் போது யாக்கோபை பட்டயத்தால் ஏரோது கொலைச் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்து (திப 12:1,2). இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் முதல் இரத்த சாட்சி என்ற பெருமை யாக்கோபைச் சாரும். இப்படி துணிவுடன் துன்பத்தை ஏற்ற யாக்கோபு போல் கிறிஸ்துவின் பணி செய்வோம். துன்ப சூழலில் இறைப்பாதம் சேர்வோம் இறைப்பெலனை பெற்று இடறை ஆசி பெறுவோம்.

திரு. **J. ஜாண் லெனின்**

20-03-2020

**தவக்கால நான்காம் வெள்ளி**

# இரக்கத்திற்குத் திரும்புங்கள்

திருமறைப்பாடம் : ஓசேயா 6:1-6

**"...நான் விரும்புவது பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகின்றேன்".** (ஓசே 6:6)

இரக்கம் ஓர் உன்னதமானப் பண்புநலன். அன்பின் அளப்பெரிய அன்பளிப்பு. ஒருவர் இன்னொருவரின் தேவையை அல்லது வேதனையைப் புரிந்துக்கொண்டு, பரிவுடன் உதவி செய்யும் அன்பின் உயரியநிலை. மனிதர் சக மனிதரிடம் வெளிப்படுத்தும் இரக்கம், மனித நேயத்தின் மகத்துவமான வெளிப்பாடு எனலாம். இறைவர் மனிதரிடம் காட்டுகின்ற இரக்கம் மிகவும் மேன்மையானது. இறைமக்கள் இறைவரை விட்டுத் தூரம் சென்ற நிலையிலும், அவருக்க எதிராக துரோகம் செய்யும் சூழலிலும், இறைவர் அவர்களை ஏற்றுக்கொள்ள விரும்புவது அவரது இரக்கத்தின் முதன்மையான வெளிப்பாடு எனலாம். இன்றைய திருமறைப்பகுதி இறையவரின் இரக்கத்தைப் பெறவும், சக மனிதரிடம் இரக்கம் காட்டவும் அழைப்புத் தருகின்றது.

## *1. இரக்கம் பெற திரும்புங்கள்* :

"வாருங்கள், ஆண்டவரிடம் நாம் திரும்புவோம்; நம்மை காயப்படுத்தியவர் அவரே, அவரே நம்மை குணமாக்குவார். நம்மை அடித்து நொறுக்கியவர் அவரே, அவரே நம்மைக் குணமாக்குவார்" (ஓசே 6:1).

இறைவனின் பேரன்பையும், அவர் வழங்கிய மீட்பையும் இஸ்ரயேல் மக்கள், இறைவனை விட்டு தூரம் சென்றனர். பொய் தெய்வங்களிடம் புகலிடம் தேடினர். படைப்பாளரை மறந்து படைப்புகளை வழிபட்டனர். இறைவனிடம் பெற்ற நன்மைகளுக்காக பாகாலுக்கு நன்றி செலுத்தினர். இஸ்ரயேலரின் நெறியற்ற வாழ்வு முறைகள் இறைவனின் இதயத்தைக் கலங்கச் செய்தன. இறைமக்களை நெறிப்படுத்த சிட்சைகளை இறைவர் அனுமதித்தாலும், அவரது பேரிரக்கம் குறைந்து போகவில்லை. அருவியாய் பொழியும் அவரது பேரன்பு வற்றிப்போகவுமில்லை. எனவே, இறைவனிடம் திரும்பினால் காயங்களை ஆற்றி இரக்க வாழ்வை வழங்குவார் என்ற நம்பிக்கையின் செய்தியை இறைவாக்கினர் ஓசியா வழங்குகின்றார்.

திருமறையில் இறைவனின் இரக்கத்தைக் குறிக்கம் எபிரேயச்சொல் 'ராகாயிம்' என்பதாகும். இந்தச் சொல் 'ரெகெம்' என்றச் சொல்லிலிருந்துப் பெறப்பட்டது. இந்த எபிரேயச் சொல் 'கருப்பை' என்ற

சொல்லுடன் தொடர்புடையது. 'அம்மாவின் இரக்கம்' என்ற பொருள் இங்கே தொனிக்கின்றது. அம்மாவை விட அளவற்ற இரக்கம் உடைய இறைவர் தம் பிள்ளைகளின் நல்வாழ்வில் அதிக கரிசனை காண்பிக்கின்றார் என்ற செய்தியை 'ராகாயிம்' என்ற சொல் சுமந்து நிற்கிறது.

ஆண்டவர் இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த பொழுதிலும் இரக்கம் உடையவராகவே இருந்தார். அவரின் அருகாமையில் தொங்கிக் கொண்டிருந்த குற்றவாளிகளில் ஒருவர் ஆண்டவரிடம் திரும்ப விரும்பினார். தன் குற்றத்தை உணர்ந்து, ஆண்டவரின் இரக்கத்தைப் பெற ஏக்கம் கொண்டார். 'இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்' (லூக். 23:42) என்று பணிவுடன் வேண்டிக்கொண்டார். மனம் வருந்தி, தம்மிடம் திரும்பி வரும் எவரையும் புறம்பே தள்ளாத இரக்கமுள்ள ஆண்டவர், குற்றவாளியை பரிவுடன் நோக்கினார். அவரது இரக்கம் அருவி போன்று அந்த குற்றவாளி மேல் பொழிந்தது. 'நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்...' என கூறி நிறைவான நிலை வாழ்வை கனிவுடன் வழங்கினார். இன்னல் நேர்ரத்திலும் ஆண்டவரின் இரக்கம் சிறிதும் குறையவில்லை.

குற்றங்களை மன்னித்து, புது வாழ்வு வழங்கும் இறைவரின் இரக்கம் எனும் அரியணைக்கு நம்பிக்கையுடன் திரும்புவோம். அவர் வழங்கும் நல்வாழ்வைப் பெற்று மகிழ்வோம்.

### *2. இரக்கம் செய்யத் திரும்புங்கள்* :

"உண்மையாகவே நான் விரும்புவது பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகின்றேன்..." (ஓசே 6:6).

இறைமக்களிடம் அளவற்ற இரக்கத்தைக் காண்பிக்கும் இறைவர், தம் மக்களும் இரக்கமுடையோராய் வாழ வேண்டும் என விரும்புகிறார். வாழ்வுடன் இணைந்து செல்லாத வழிபாடும், பண்பில்லாமல் செலுத்தும் பலிகளும் இறைவனின் உள்ளத்தை மகிழ்விக்கவில்லை. தீமை செய்து விட்டு பலி செலுத்துவதும், பலி செலுத்தி விட்டு தீமை செய்வதும் இறைவனின் இதயத்தை வேதனைபடுத்தின. "காலை நேர மேகம் போலவும், கதிரவனைக் கண்ட பனி போலவும் மறைந்துப் போகும் அன்பை அவர் விரும்பவில்லை" (ஓசியா 6:4).

ஓசியா 6:6-இல் வருகின்ற இரக்கம் என்ற பண்புநலனைக் குறிக்க பயன்படும் எபிரேயச் சொல் 'கெசெட்' என்பதாகும். இந்தச் சொல் 'இரக்கம்' என்றப் பொருளுடன் 'பக்தி' என்றப் பொருளையும் கொண்டுள்ளது. இரண்டுப் பொருள்களையும் இணைத்துப்பார்த்தால், இறைவனிடமும், மனிதரிடமும் வெளிப்படுத்தும் அன்பின் உயரிய நிலையே

பொருத்தமானப் பொருளாக அமையும். இரக்கம் என்ற நற்பண்பினை இரக்கம் காட்டின சமாரியர் உவமை வழியாக ஆண்டவர் இயேசு விளக்குகின்றார். சமாரியரின் வாழ்வில் வடிவம் பெற்ற வழிபாடு, இரக்கம் என்ற பண்பிற்கு இலக்கணம் அமைத்தது.

ஹோவர்ட் கெல்லி என்னும் சிறுவன் தன் பிழைப்புக்காக பொருட்களை தெருவில் சென்று விற்றுப் பிழைத்து வந்தான். ஒருநாள் கடும் மழையால் அவனுக்கு வியாபாரமும் நடக்கவில்லை. கையில் காசுமில்லை. பசியோ வயிற்றைக் கிள்ள, வழியறியாது ஒரு வீட்டின் கதவைத் தட்ட, ஓர் பெண்மணி வெளியே வந்தார். அவரிடம் பசிக்கு உணவு கேட்க கூச்சப்பட்டு, தண்ணீர் வேண்டுமென்றான். ஆனால், அப்பெண்மணியோ சிறுவனின் பசியினைப் பார்வையிலேயே அறிந்தவராய், ஒரு குவளை நிறைய பால் கொண்டு வந்து தந்தார். அதைக் குடித்துவிட்டு, "இதற்கு எவ்வளவு பணம் தரவேண்டும்?" என்றான். "அன்போடும், இரக்கத்தோடும் கொடுக்கின்ற எதற்கும் விலையாக எதையும் பெறக்கூடாது என்று என் அன்னை சொல்லியிருக்கிறார்" என்று பதிலுரைத்தார் அப்பெண் வருடங்கள் கடந்தன, வயதின் முதிர்வால் நோய்ப்பட்டார் அப்பெண்மணி, அவரை ககன்ஸ் ஹாப்கின்ஸ் மருத்துவ பல்கலைக்கழகத்தில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர். அங்கிருந்த டாக்டர் கெல்லி இப்பெண்மணியினைக் கண்டதும் அவரது முகவரி கேட்டார். தனக்கு ஒரு குவளை பால் தந்தவர் அவர்தான் என்பதை அறிந்தார். உறக்கம் பாராது உழைத்து அவளைக் காப்பாற்றினார். அவர் நன்கு குணமடைந்ததும், மருத்துவமனையிலிருந்து மருத்துவ சிகிச்சைக் கட்டணத்தை ஓர் உறையில் தந்தனர். பணம் அதிகமாகச் செலவாகியிருக்கும், எதை விற்றுக் கட்டுவது என்று யோசித்துக்கொண்டே அந்த உறையினைத் திறந்தார். நினைத்தது போலவே கட்டணத் தொகை மிக அதிகமாக இருந்தது. இருப்பினும் அத்தொகையின் அருகே எழுதுகோலால் "ஒரு குவளைப் பால்தான் இக்கட்டணத் தொகை" என எழுதப்பட்டிருந்தது. "இரக்கமுள்ளோர் தம் செயலால் தாமே நன்மை அடைவர்..." (நீதி 11:17) என்ற திருவசனத்தின்படி, ஒரு குவளைப் பாலின் வழியாக தனது வாழ்க்கையினைத் திரும்பப் பெற்றாள் அப்பெண்.

ஆன்மிக வாழ்வை புத்தாக்கம் செய்ய தரப்பட்டுள்ள இந்த தவக்காலத்தில், இறைவரின் பேரிரக்கத்தை மீண்டும் பெற அவரண்டைத் திரும்புவோம். அவரிடம் பெற்ற இரக்கத்தை நாமும் வாழ்வில் வடிவமாக்குவோம். இறை ஆசி பெற்று மகிழ்வோம்.

அருள்திரு. R. **ஜெகதீஸ்லால் ரெகு**

22-03-2020

**உயிர்ப்புக்கு முன்வரும் மூன்றாம் ஞாயிறு & தவக்கால நான்காம் ஞாயிறு**

## விடுவிக்கும் கிறிஸ்து

**THE LIBERATING CHRIST**

விப 3: 1 -13 கலா 5:1-12

திபா 82 லூக் 13:10-17

**"அம்மா, உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்"** (லூக் 13:12).

இறைச் சாயலில் படைக்கப்பட்ட மனுக்குலம் பாவத்தில் விழுந்த போது படைப்பாளராம் கடவுளின் நோக்கத்தை விட்டுத் தவறிய நிலைக்கு சென்றது. தாம் படைத்த மனுக்குலம் தம் சாயலை இழந்து நிற்பது கண்டு வேதனையுற்ற (தொநூ 6:6) இறைவன், மனுக்குலத்தை மீட்டு இழந்து போன சாயலை மீண்டும் மனிதனில் கொண்டு வர விரும்பினார். எனவே, விடுதலை என்பதைக் தம் திட்டத்தின் மையப்பொருளாக அமைத்தார். பழைய ஏற்பாட்டில், தம் மக்களின் விடுதலையை உறுதிப்படுத்த யாவே கடவுள் வரலாற்றில் தலையிடுகின்றார். புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவினால் அருள் நிறைந்த மீட்பு மக்களுக்கு உரிமை வாழ்வைப் பெற்றுத் தருகிறது. இஸ்ரயேலின் விடுதலை கிறிஸ்தவ மீட்பின் முன்னோடியாக இருந்தது. பற்றுறுதியிலும் அன்பிலும் தம்முடன் இணையும் அனைவரையும், அதாவது, யூதரையும், புறஇனத்தாரையும், முழுமையான, நிலையான விடுதலையில் நிலைநிறுத்துபவர் இயேசு கிறிஸ்துவே. அவரது வார்த்தையை ஏற்றுக் கொள்ளும் பற்றுறுதியே உண்மையான விடுதலை ஊற்று. "உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும், மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலே விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள்" என்றஅழுத்தமான இறைவாக்கு இதை உணர்த்துகிறது (யோவா 8:32,36). கிறிஸ்து வழியாக நாம் பெறும் விடுதலையைக் குறித்து இங்கு தியானிப்போம்.

### *1. அடிமைத்தளையிலிருந்து விடுதலை :* (விப 3:1-13, கலா 5:12)

மனுக்குலத்தின் மீதான இறைநோக்கத்தை நிறைவேற்ற கடவுள் வரலாற்றில் தொடர்ந்து செயல்படுகிறவராக பழைய ஏற்பாட்டின் சிந்தனைகள் எடுத்துரைக்கின்றன. குறிப்பாக, உலகிற்கான தம் நோக்கங்களை இஸ்ரயேல் மக்களின் வரலாறு வழியாக கடவுள் வெளிப்படுத்தினார் என்ற பற்றுறுதி சிந்தனையைத் திருமறை

எடுத்தியம்புகிறது. பஞ்சத்தினின்று விடுபட்டுப் பிழைக்க எகிப்துக்குச் சென்ற இஸ்ரயேல் மக்கள் அங்கு அடிமைகளாகக்கப்பட்டனர். எகிப்தியரால் ஒடுக்கப்பட்டனர். அவ் அடிமைத்தனத்தால் தாங்க முடியாமல் அழுது புலம்பினர். அவர்களது முறையீடு கடவுளை நேக்கிச் சென்றது. அவர்களது புலம்பலைக் கடவுள் கேட்டார், கடவுள் மூதாதையரோடு தாம் செய்திருந்த உடன்படிக்கையை அவ்வேளையில் நினைவு கூர்ந்தார். இஸ்ரயேல் மக்களைக் கண்ணோக்கி, அவர்களது நிலைமைகளைக் கடவுள் நன்றாக அறிந்து கொண்டார் (விப 2:23-25). மோசேயை அழைத்து, இஸ்ரயேலரின் அடிமைத்தனத்தின் கூக்குரலையும், அவர்களது வேதனையையும், அங்கலாய்ப்பையும் அறிந்தவராய் அவர்களை விடுவிக்க தாமாக இறங்கி வருவதாகக் கூறுகிறார். இச்செய்தியைக் கேட்ட மோசே கடவுள் மனுக்குலத்திற்கு ஒரு புதிய வாழ்வையும், ஓர் நல்ல எதிர்காலத்தையும் வடிவமைப்பவராய்த் தொடர்ச்சியாக மனித வரலாற்றில் செயல்படுகிறார் என்ற புரிதலுக்கு நேராக வருகிறார். கடவுளிடம் பெற்றநம்பிக்கையின் நலமான. வாழ்வூட்டுகிற வார்த்தையை இஸ்ரயேல் மக்களுக்கு தலைவரான மோசே அறிவிக்கிறார். இஸ்ரயேரை விடுதலையாக்க எகிப்தியர் விரும்பாவிட்டாலும், கடவுள் தம் நோக்கத்தில் உறுதியாயிருந்து, அவர்களை எகிப்தியரிடமிருந்து விடுதலையாக்கினார். இதுவே முதல் மீட்பு ஆகும்.

தாம் படைத்த படைப்புக்கள் அடிமையாவதைக் கடவுள் விரும்புபவரல்லர். கடவுளின் விருப்பத்திற்கு மாறாக உடன்படைப்புக்களை, உடன் மனிதர்களை அடிமையாக்கினால் அந்த அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப் போராடுகிறார். இஸ்ரயேல் மக்களை விடுவிக்க கடவுள் இறங்கி வருவது, பாவத்திற்குத் தம்மை அடிமையாக்கிக் கொண்ட மனுக்குலத்தை மீட்பதற்கான கடவுளின் போராட்டத்தின் அடையாளம். இப்போராட்டத்தின் நிறைவாகத் தம் மைந்தராம் இயேசு கிறிஸ்துவை உலகில் அனுப்பி முழு மனுக்குலத்தையும் அடிமைத்தளையிலிருந்து விடுவித்தார். விடுதலை பெற்றவர்கள் மீண்டும் அடிமைத்தனத்தின் கட்டுகளுக்கு உட்படுவது முறையற்றது. பாவத்தினின்று விடுவிக்கப்பட்ட நாமும் மீண்டும் அதன் அடிமைத்தனதுக்குள் செல்லாமல் பெற்றுக் கொண்ட விடுதலையில் உறுதியாயிருக்க அழைக்கப்படுகிறோம். (உரோ 6:15,18; கலா 5:1)

இன்றைய சூழலில் மனுக்குலம் பலநிலைகளில் நவீனம் என்ற பெயரிலும், நாகரிகம் என்னும் போங்கிலும், கலாச்சாரம் என்னும் போர்வையிலும் விழுந்து, நெறியற்ற வாழ்வுக்குள் சிக்கிக்கிடக்கிறது.

தொழில்நுட்பம், சமூகஊடகம் போன்ற அடிமைதனத்தில் உழன்று கொண்டிருக்கிறது. நாம் நம்மை பாவத்திற்கு மீண்டும் அடிமையாக்கினால் அழிவும், கடவுளுக்குக் கீழ்ப்படிந்தால் அவருக்கு ஏற்புடையவர்களாகும் வாழ்வும் உண்டு எனத் திருமறைகூறுகிறது (உரோ 6:16). அடிமைநிலையிலிருந்து விடுதலையாக்கப்பட்ட நாம் கிறிஸ்துவின் வழியாகத் பெற்றுக் கொண்ட உரிமை வாழ்வில் நிலை நிற்க ஒப்படைப்போம்.

***2. அலகையின் பிடியிலிருந்து விடுதலை :*** (லூக் 13:10-17)

பதினெட்டு ஆண்டுகளாகக் கூன் விழுந்த நிலையில் இருந்த பெண் குணமடைந்த நிகழ்ச்சியை லூக்கா மட்டுமே பதிவு செய்துள்ளார். அவரால் சிறிதும் நிமிர முடியவில்லை (லூக் 13:11) கூன் விழுந்த மனிதர் பிறமனிதரை முகமுகமாகக் கண்டு, நேருக்கு நேர் நின்று அவர்களோடு உரையாட இயலாது. அவர்களுடைய கண்கள் எப்பொழுதும் தரையை நோக்கியே இருக்கும். மிகுந்த சிரமப்பட்டு ஒரு வேளை பக்கவாட்டில் மட்டுமே அவர்களால் பிறமனிதர்களைப் பார்க்க இயலும். இவ்வாறு ஊனமுற்றநிலையில் இருந்த பெண் சமுதாயத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட ஒருவர் அவரை யாரும் மதிப்போடு பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் இயேசுவின் கண்கள் அப்பெண்ணைக் கண்டு கொள்கின்றன. ஊனமுற்றிருந்து அப்பெண்ணைப் பார்த்தும் இயேசு அவரைத் தம் அருகே கூப்பிடுகிறார். அருகில் வந்த பெண்ணை நேருக்கு நேர் பார்க்கும் விதத்தில் ஒரு வேளை இயேசு கூட குனிந்திருப்பார். "அம்மா, உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்" என்று கூறி இயேசு தம் கைகளை அவர்மீது வைத்தார். உடனே அப்பெண் நிமிர்ந்து கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார் (லூக் 13:12-13). கூன் விழுந்திருந்தவர் இப்போது நிமிர்ந்து நிற்கிறார். வழக்கமாகத் தன்னை நாடி வந்து, தங்களுடைய நோய் நீங்க வேண்டுபவர்களின் நோயை மட்டும் குணப்படுத்தும் இயேசு இந்த இடத்தில் தாமாக முன் வந்து நோயுற்றிருக்கும் அந்தப் பெண்மணிக்கு விடுதலை தருகிறார். அதாவது, நாம் கேளாமலே நமது தேவைகளை அறிந்து, அவற்றைப் பூர்த்தி செய்யும் இறைவனாக இருக்கிறார் என்பதை இப்பகுதி நமக்கு மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. சமுதாயத்தின் ஒடுக்குமுறைகள் மக்களைக் கூனிக் குறுகி நிற்கும் நிலைக்குத் தள்ளிவிட்டாலும் கடவுள் அம்மனிதர்களை நிமிர்ந்து நிற்கச் செய்யும் ஆற்றல் கொண்டவர் என்பதை அறிய முடிகிறது. நிமிர்ந்து நிற்கும் திறனைக் கடவுளின் அருளால் பெற்றுக் கொண்ட அப்பெண் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார் (லூக் 13:13)

எவரும் குணம் பெறும் நோக்குடன் ஓய்வு நாளில் வரக் கூடாது என்பது இந்நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த தொழுகைக் கூடத் தலைவரின் கருத்து (லூக் 13:14). ஆனால் இயேசு அக்கருத்தை மறுக்கின்றார், அது தவறு எனக் காட்டுகின்றார். ஆடு மாடுகளைக் கட்டவிழ்த்துத் தண்ணீர் காட்டுவது ஓய்வு நாளில் நிகழலாம் என்றால் பதினெட்டு ஆண்டுகளாக அலகையினால் கட்டுண்ட நிலையில் ஊனமுற்று, கூன் விழுந்து வாழ்ந்த அப்பெண்ணின் கட்டை அவிழ்ப்பது ஓய்வு நாளில் நிகழ்வது முறையில்லையா? என இயேசு கேட்கிறார். இயேசு ஓய்வு நாளில் அப்பெண்ணை விடுதலை செய்தல் முறையல்ல என்று கருதுவதே தவறு. மாறாக, ஓய்வு நாளில் அப்பெண்ணை விடுதலை செய்ய வேண்டும் என்பதே சரி என இயேசு காட்டுகின்றார். ஓய்வு நாள் மனிதரின் விடுதலை நாள். கடவுளுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட நாள். மனிதர் விடுதலை பெற்றவர்களாக தம்மை அணுகி வந்து வழிபட வேண்டும் எனக் கடவுள் விரும்புகிறார். ஆகவே, மனிதருக்கு விடுதலை வழங்க வந்த இயேசு ஓய்வு நாளில் அந்த விடுதலையை வழங்கியது பொருத்தம் தான். இன்று வாழ்கின்ற நமக்கும் இச்செய்தி வழங்கப்படுகிறது.

நாமும் இன்று தலைநிமிர்ந்து நிற்க முடியாத நிலையுண்டு. தீயோனின் பிடிக்கு உட்பட்டு, பல தீமைகளால் கூனிக் குறுகி, நிமிர முடியாமல் வாழ்கிறோம். சிறைப்பட்டோர் விடுதலையடைவர் என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கவும் இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வந்தார். தாங்கள் அடிமைகளென ஏற்றுக் கொள்ள மறுத்த யூதர்களுக்கு மட்டுமல்லாது (யோவா 8:33) வாழ்வில் குழம்பிப் போய் நிரந்தர விடுதலைக்காக ஏங்கி நிற்கும் இன்றைய மனுக்குலத்துக்கும் இயேசு கிறிஸ்து விடுதலை அளிக்கிறார். நாமும் அவரது செயலைப் பின்பற்றவிரும்புகிறார். நாம் வாழும் சமுதாயத்தில் எளியவர்கள், திக்கற்றவர்கள், சிறுமையுற்றோர், ஏழைகள், வறியவர்கள் ஆகியோர் பொல்லாரின் பிடியில் அகப்பட்டு, விடுதலைக்காகத் தவித்துக் கொண்டிருப்பதைக் காணமுடியும். பொல்லாரின் பிடியினின்று அவர்களுக்கு விடுதலை அளியுங்கள்” எனத் திருப்பாடல் ஆசிரியர் விடுதலையின் கருவிகளாக மாற நம்மை அழைக்கின்றார் (திபா 82:3-4) இவ்வழைப்பினை ஏற்றுக் கொண்டு, அடிமைத்தளையிலும், அலகையின் பிடியிலும் இருப்போர் கிறிஸ்து அருளும் விடுதலையை பெற்று அனுபவித்திட விடுதலையின் முகவர்களாய் முன்னேறுவோம்.

சுவி. J. ***பிரபின் செல்வமணி***

25-03-2020 **தவக்கால ஐந்தாம் புதன்**

## கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் பேதுரு

திருமறைப்பகுதி : 1பேது 2:18-25

**"கிறிஸ்துவும் உங்களுக்காகத் துன்புற்று ஒரு முன்மாதிரியை வைத்துச் சென்றுள்ளார். எனவே நீங்கள் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுங்கள்".**

(1பேது 2:21)

பேதுரு பெத்சாய்தா என்ற ஊரைச் சார்ந்தவர். தந்தை பெயர் யோனா, இவர் சகோதரர் பெயர் அந்திரேயா, அந்திரேயாவினால் இயேசுவிடம் அழைத்து வரப்பட்டவர். பேதுரு வருவதைக் கண்ட இயேசு "கேபா" என்று அழைத்தார். கேபா என்றால் 'கல்', 'பாறை' என்று பொருள் (யோவா 1:41,42). கடல் சார்ந்த தொழில் புரிந்தவர். இறைப்பணிக்கு அழைப்புப் பெற்றப்போது உடமைகளையும், உறவுகளையும் விட்டு இயேசுவுக்கு பின்சென்றார். இயேசுவுடன் பயணித்த பேதுரு, ஒரு கட்டத்தில் தன் உயிர்மீது ஆசைக்கொண்டு இயேசுவை யாரெனத் தெரியாது என்று ஆணையிட்டு மறுதலித்தவர். இவர் கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடந்து எப்படி மாதிரி காண்பித்தார் என்பதை தியானிப்போம்.

***1. பணிவு*** : (1பேதுரு 2:18)

கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் வாழ "பணிவு" வாழ்வியல் பண்பாக மாற வேண்டும். கிறிஸ்துவின் துன்புறும் தன்மையினை விளக்குகின்ற பேதுரு, அவர் வாழ்வில் காணப்பட்ட பணிவை முன் வைக்கிறார். சிதறி வாழ்ந்த கிறிஸ்தவர்கள் பல்வேறு துன்புறுத்தலுக்குட்பட்டு வாழ்ந்த நேரம் துன்புறும் கிறிஸ்துவின் வாழ்வியல் பண்பினை விளக்கி தலைவர்களுக்குப் பணிந்திருங்கள், கனிந்த உள்ளமுடையோருக்கப் பணிந்திருங்கள், முரட்டுக் குணம் உள்ளவருக்குப் பணிந்திருங்கள் கிறிஸ்துவைப் போல் பணிந்திருக்க அறிவுரை வழங்குகின்றார். (1 பேதுரு 2:18-24)

பணிவு என்றால் பிறரிடம் மரியாதையை வெளிப்படுத்தும் முறையில் அல்லது மற்றவர்களைவிடத் தன்னை உயர்வாகக் காட்டிக்கொள்ளாத முறையில் நடந்துக்கொள்ளும் தன்மை. பேதுரு கிறிஸ்துவின் பணிவைத் தனது வாழ்வில் வெளிப்படுத்தி இறைமக்களும் பணிவுடன் நடந்துகொள்ள வேண்டுமெனப் பறைசாற்றுகின்றார்.

**2. பொறுமை** : (1பேதுரு 2:19,20)

குற்றம் புரியாமல் அநியாயமாகத் துன்புறும் வாழ்வை முன் வைக்கிறார். இயேசு கிறிஸ்து தமது பேரருளுரையில் (மத். 5:10,11) நீதியின் பொருட்டு ஏற்படும் துன்பத்தில் பொறுமை காக்கும்போது பேறுபெற்றவர்களாய், கடவுளின் குழந்தைகளாய் ஆவீர்கள் என்று கூறுகிறார். சிதறி வாழ்ந்த கிறிஸ்தவர்கள் அநியாயமாக, பல்வேறு இன்னல்களையும் துன்புறுத்தல்களையும் அடைந்தனர். இவர்கள் பற்றுறுதியில் தடுமாறாமல் பயணிக்க பேதுரு வினா ஒன்றை எழுப்புகின்றார். “குற்றம் செய்ததற்காக நீங்கள் அடிக்கப்படும்போது பொறுமையோடு இருப்பதில் என்ன சிறப்பு...” (1பேதுரு 2:20) எனக் கேட்டு, துன்பத்தில் பொறுமையுடன் வாழுமாறு வலியுறுத்துகிறார். “கடவுளை மனத்தில் கொண்டு” என்றால் கடவுளின் பொருட்டு கடவுளுக்காக இயேசு கிறிஸ்துவைப் போல் பொறுமையுடன் வாழ வேண்டும்.

குற்றம் புரியாமல் தவறாகத் தண்டிக்கப்படும்போது பொறுமை பிறர் வசைமொழி கூறும்போது பொறுமை கிறிஸ்துவை பின்பற்றுவதால் வரும் துன்பத்தில் பொறுமை இவைகளை மையப்படுத்த கிறிஸ்துவுடனான பணிவிடையில் எப்போதும் துரிதப்பட்டு, முந்தி நின்ற பேதுரு கிறிஸ்துவின் வழியாகப் பொறுமையின் மேன்மையைப் புரிந்துகொண்டு, நமக்கும் அதை வலியுறுத்துகின்றார்.

**3. பின்தொடர்தல்** : (1பேதுரு 2:21)

இயேசு கிறிஸ்து “பின்பற்றுங்கள்” என்று பலமுறை அழைப்பு விடுத்துள்ளார். கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்பற்றிய பேதுரு கிறிஸ்தவர்கள் வாழ்வில் “இயேசுவின் வாழ்வை” வாழ்வின் அடிச்சுவடாக வைத்து அவரைப் பின்பற்ற அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று அழைப்பை நினைப்பூட்டுகிறார். கிறிஸ்துவைப் பின்பற்றுவது வஞ்சனை வாழ்வல்ல, முட்கள் நிறைந்த வாழ்வு. கடவுளின் விருப்பத்தை நிறைவேற்ற இயேசுவின் வாழ்வில் வந்த துன்பங்கள் ஏராளம். கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு பின் புத்துயிர் பெற்றவராய் நற்செய்திப் பணியில் முழுவீரராய் செயல்படத் தொடங்கினார். அவரது மறையுரையால் வெகுதிரள் மக்கள் மனமாற்றம் அடைந்தனர் (திப 2:41). பேதுரு தன்னுடைய பணியை இஸ்ரயேல் நாட்டின் மேற்கு எல்லையிலுள்ள மத்திய தரைக் கடற்கரையோரமாக விரிவுபடுத்தினார். கி.பி. 33 முதல் கி.பி. 40-ஆம் ஆண்டுவரை 7 ஆண்டுகள் அந்தியோக்கியா நகரிலும் அதைச் சுற்றிய பகுதிகளிலும் கிறிஸ்தவத்தைப் பரப்பினார். எகிப்து, உரோம், ஸ்பெயின், பிரிட்டன்,

பிரான்ஸ் போன்ற பல நாடுகளுக்கும் சென்றார். பிரான்ஸ் நாட்டிலுள்ள கால் என்னுமிடத்தில் சார்ட்ரஸ் சபையின் (Chartres Church) புனிதத் தந்தை என்று அழைக்கப்பட்டார்.

கி.பி. 67-இல் உரோமில் வைத்து பேதுரு கைது செய்யப்பட்டு, மேமர்டைன் (wamartine) சிறையில் அடைக்கப்பட்டனர். மிகவும் கொடுமையான தண்டனை, உணவு, நீர் வழங்கப்படமாட்டாது. ஒரு தூணில் கைகளையும், கால்களையும் இணைத்து கட்டிவிடுவார்கள். வெளிச்சமும், காற்றும் சிறைக்குள் எட்டிக் கூடப்பார்க்காது. பலர் சிறையில் வைத்தே இறந்து விடுவர். பேதுரு சிறையில் 9 மாதங்கள் போராடினார். உரோமின் பேரரசர் நீரோ (Nero) கிறிஸ்வர்களைக் கொன்று குவிப்பதை பொழுதுபோக்காகக் கொண்டிருந்தார். பேதுருவைச் சிலுவையில் அறைந்து கொல்லத் தீர்ப்பிட்டனர். பேதுரு "இயேசு சிலுவையில் அறையப்பட்டு இறந்தார். நானும் அப்படியே இறக்கத் தகுதியற்றவன். எனவே என்னைத் தலைகீழாகச் சிலுவையில் அறையுங்கள்" என்று வேண்டினார். டைபர் நதியின் (Tiber) கரையில் இருந்த வாடிகன் (vatican) மலையின் உச்சியில் பேதுரு தலை கீழாகச் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார். "துன்புற்று ஒரு முன்மாதிரியை வைத்துச் சென்றுள்ளார்" (1பேதுரு 2:21). இயேசுவின் அடிச்சுவட்டில் நடக்க விரும்பும் மக்கள் துன்பத்தைக் கண்டு துவண்டுபோகாமல் பேதுருவைப் போல் துன்பத்திலும் கிறிஸ்துவைப் பின்தொடரக் கற்றுக்கொள்ள வேண்டும்.

தவக்காலம் என்பது இயேசுவின் வாழ்வையும் துன்பத்தையும் தியானித்து அவரோடு நம்மை இணைத்துக்கொள்ளும் காலம். அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றும்போது துன்பம் வந்தாலும் அது மேன்மை நிறைந்த வாழ்வுக்கு அடித்தளமாய் அமையும். பேதுரு இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் வாழ்ந்து, பலர் கிறிஸ்து என்னும் ஒளி பெற காரணமானார். தவக்காலத்தில் வாழும் நாம் மற்றவர்கள் இயேசுவை ஒளியாக கண்டடைய நம் வாழ்வை இயேசுவில் கட்டமைப்போம்.

திரு. **மு. ஜெஸ்லின் ஸ்டீபன்**

27-03-2020

**தவக்கால ஐந்தாம் வெள்ளி**

# நன்மையை நாடித் திரும்புங்கள்

திருமறைப்பாடம் : ஓசே 3:4,5; 8:1-3

**"அதற்கு பிறகு இஸ்ரயேல் மக்கள்...ஆண்டவரையும் அவர் தம் நன்மைகளையும் நாடி நடுக்கத்தோடு வருவார்கள்".** (ஓசே 3:5)

தவக்காலம் தவமிருந்து தற்பரிசோதனைச் செய்து தகுதி உடையவராக நம்மை உருவாக்கும் காலம். தந்தையாம் இறைவனின் தியாக அன்பினை உணர்ந்து தன் நிலை அறிந்து, தடம் மாறி சென்ற நம்மை இறைவனிடம் திருப்பி இறைஉறவை புதுப்பிக்கும் காலம். வாழ்க்கைப் பயணத்தில் பல திருப்பங்களைச் சந்திக்கிறோம். இறையரசுக்கு உகந்த பண்புகளோடு பிறந்த மனுக்குலம், உலகத்தின் ஊடுருவலாலும், ஊடகங்களாலும், உன்னதரை மறந்ததாலும் உதவாக்கரையாக நிற்கிறது. இந்த நிலையில் கிறிஸ்தவ சமூகம் இறை விருப்பபடி கனி கொடுக்கும் சமூகமாய் மாற, களைகளை அகற்றவும், கடவுளோடு நிலைத்திருக்கவும் திருமறைப்போதிக்கிறது, கனி கொடுத்த கிறிஸ்தவ சமூகம் கனியற்ற கவர்ச்சி மரமாகவும், கசந்த கனி கொடுக்கின்றதுமான நிலைக்கு காரணமானதைக் கண்டறிந்து சீர்ப்படுத்தவும் இத்தவக்கால் கண்டித்துணர்த்துகிறது.

திருமறைப்பகுதியிலே ஓசேயா இறைவாக்கினர் இறைவனுக்கும் இறைமகக்ளாகிய இஸ்ரயேலருக்குமிடையேயுள்ள உறவை வெளிக்காட்டுகிறார். இறைவன் தம் உறவை காட்ட தாம் இஸ்ரயேலின் இறைவன் (3:5) எனவும், இஸ்ரயேலர் என் மக்கள் (4:6) எனவும் வெளிப்படுத்துகிறார். ஆனால் இஸ்ரயேல் மக்களோ இறைஉறவை உதாசீனப்படுத்தி உதறித் தள்ளி, தீயவனின் கருவிகளாக தீமைச் செய்து தீயவைகளை அறுவடைச் செய்து கொண்டிருக்கின்றனர். இதைக் கண்ணுற்ற இறைவன் இறைவாக்கினர் வழியாக எச்சரிப்பின் செய்தியோடு அழைப்பும் விடுக்கிறார். இறைவனை விட்டு விலகிச் சென்றதினாலே தான் வாழ்விலே இன்னல்களும், இல்லாமையும் ஏற்பட்டு இன்பமான நன்மைகள் மிகுந்த வாழ்வை பெறமுடியவில்லை. உங்கள் தீச்செயல்கள் வழியாகவே கைவிடப்பட்டவர்களாய், கண்ணீரோடு வாழ்கிறீர்கள். ஆயினும் இறைவனின் பேரன்பு இறுதி வரை நிலைத்திருக்கும். நீங்கள் திரும்பி வந்தால் முறிந்த உறவு மலரும். வாழ்விலும்

நன்மையானவைகளைப் பெறமுடியும். எனவே திரும்புங்கள் என அழைக்கிறார். நாம் நன்மைக்காக எப்படி திரும்ப வேண்டும்? என்பதைத் தியானிப்போம்.

### *1. நடுக்கத்தோடு திரும்புங்கள் :*

ஆண்டவரையும் அவர் தம் நன்மைகளையும் நாடி நடுக்கத்தோடு வருவார்கள் (3:5)

நடுக்கத்தோடு வருதல் என்றால் உணர்வடைந்து வருதல் என்பதாகும். தான் தவறிய நிலைகளையும், இறைவனது மகத்துவங்களையும் உணர்ந்து வருதல், இறைவனது இரக்கம், அவருடைய நீதி இதை அறிந்து உணர்வுடன் திரும்புதல், நாம் செய்த தவறுகளுக்காக அவருடைய நீதி படி தண்டிக்கப்பட வேண்டியவர்கள். ஆனால் அவருடைய இரக்கமோ நாம் மீறுதல்களை விட்டு மனம் திரும்பி அவரிடத்தில் திரும்புவதினாலே நம்மை ஏற்று கொண்டு நன்மையானதை தருகிறது.

### *2. நம்பிக்கையோடு திரும்புங்கள் :*

ஆண்டவரையும் அவர் தம் நன்மைகளையும் நாடி நடுக்கத்தோடு வருவார்கள். (3:5)

நாடி வருதல் என்றால் நம்பி வருதல், எதிர்பார்த்து வருதல் எனலாம். இறைவன் நம்பிக்கைக்கு உரியவர், மனிதர்கள் மாறினாலும் இறைவன் மாறாதவர். கைவிடாதவர். அவரது பேரன்பு அவர் மீது கொண்ட நம்பிக்கை நம்மை வெட்கபடுத்தாது. ஏமாற்றாது. ஆகவே, இறைவனை நாடி வருவார்கள். இறைவனல்லாததை நம்பி தோல்வியிலே துவண்டு போன இஸ்ரவேலே நம்பிக்கையோடு இறைவனிடம் வாருங்கள். இறைவன் நன்மையானதை தருவார் என்று நம்பிக்கை வாக்கு தரப்படுகிறது. இத்தவக்காலத்தில் நம்பிக்கையோடு ஆண்டவரிடம் திரும்பி ஆசி பெறுவோம்.

### *3. நன்மைக்காகத் திரும்புங்கள் :*

வாழ்வில் நன்மையானதை பெறஇறைவனிடம் நம்பிக்கையோடு நடுக்கத்தோடு வாருங்கள் (3:5).

உங்கள் வாழ்க்கை இறைவனுக்கு எதிராக இருந்து நீங்கள் இறைவனை நோக்கி கூப்பிட்டதாலே அவர் உங்களுக்கு செவி கொடுக்கவில்லை (8:1-3) ஆகவே தான் தீமை தொடருகிறது, இறைவனுக்கு அர்பணித்து நன்மையானதைப் பெற வாழ்வை மாற்றுவோம். ஏதோ துக்கமுகமாய் தவகாலத்தை அனுசரிப்பதை விட்டு வாழ்விலே நன்மைப் பெறும் காலமாய் இக்காலத்தை பயன்படுத்துவோம்.

திரு. **S. ஸ்டாலின் ஜெபராஜ்**

29-03-2020

**உயிர்ப்புக்கு முன்வரும் இரண்டாம் ஞாயிறு & தவக்கால ஐந்தாம் ஞாயிறு & பாடுகளின் ஞாயிறு**

# சிலுவையும் மீள்நிலைப்படுத்தும் கிறிஸ்துவும்

**CROSS AND THE RESTORING CHRIST**

| | |
|---|---|
| யோபு 42:10-17 | எபே 2:1-10 |
| திபா 126 | மாற் 10:46-52 |

**“நீங்கள் அந்த அருளாலேயே நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கிறீர்கள்”** (எபே. 2:8).

கடவுளில் மீள்நிலை என்பது வாழ்வை மையப்படுத்தியது. குறிப்பாக இது நிறை வாழ்வுக்கு (Fullness of Life or Abundance of Life) நேரான ஓர் சீரிய பயணம் (இச 30:20; யோவா 10:10). இயேசுகிறிஸ்துவின் சிலுவை அடிமைத்தனம், அதிகாரக் குவிப்பு மற்றும் நிறுவனமாக்கப்பட்ட பாவங்களை (Institutionalized or Systematized evil) வேரறுக்கும் எதிர்குரலாக காணப்படுகிறது. கிறிஸ்துவில் புதுவாழ்வு வாழ சிலுவை நம்மைத் தூண்டுகிறது. இச்சிலுவை நம்மை எதிர்ப்பு அல்லது எதிர்ப்பாற்றல் ஆன்மிகத்திற்கு (Spirituality of Resistance) நேராக உந்தித் தள்ளுகிறது. எவ்வாறு நம் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு அமைப்பு (Immune System) கிருமிகளையும் நோய்களையும் நம் உடலினை அண்டவிடாதோ, அது போன்று கிறிஸ்துவும், அவரது சிலுவையும் நம்மை மீள்நிலைப்படுத்தி, நிறை வாழ்வுக்கு நேராக நடத்தும்.

## *1. சகோதர உறவுவழி மீள்நிலை* : (யோபு 42:10)

(Restoration through Fraternity)

நண்பன் எல்லாக் காலத்திலும் அன்பு காட்டுவான் (நீமொ 17:17). யோபுவின் நண்பர்கள் துன்பகாலத்தில் பகைத்தாலும் யோபு அவர்களுக்காக மன்றாடினான். கடவுள் அவன் வேண்டுதலைக் கேட்டு மீள்நிலைப்படுத்தினார். திருப்பாடகர் தாவீது சகோதர உறவின் மேன்மையையும் அதினால் வரும் நன்மைகளையும் திருப்பாடல் 133-ல் கூறுகிறார். அது நறுமணத்திற்கும் மலைப்பனிக்கும் ஒப்பிடப்படுகிறது. நல்ல தைல நறுமணம் அருகில் இருப்போர்கு ஓர் உற்சாகத்தை தருகிறது. அதுபோல் மலைப்பனி புத்துணர்ச்சிக்கு அடையாளமாக காணப்படுகிறது. அங்கு ஆண்டவர் வாழ்வெனும் ஆசிதனைத் தருவார் என்கிறார் திருப்பாடகர்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் தன்னை அறைந்தோருக்காவும், ஏளனம் செய்தோருக்காகவும் தந்தையாம் கடவுளிடம் மன்னிக்கும்படி மன்றாடினார் (லூக் 23:34) நம் அன்றாட வாழ்வில் மன்னிப்பின் மேன்மையையும் (மாற் 11:25; லூக் 11:4; எபே 4:32; கொலோ 3:13) அதன் வழியாய் நாம் பெறும் சகோதரத்துவ உறவு நிலைகளையும் திருமறை கற்றுத்தருகிறது. "கர்த்தரின் பந்தியில் வா" என்ற கீர்த்தனைப்பாடல் பிறந்த வரலாறு, திருவிருந்தின் போது சகோதரத்துவத்தின் மேன்மையை நினைவுபடுத்துகிறது.

தென் ஆப்பிரிக்காவில் வெள்ளைக்கார ஆங்கிலேயர் ஆதிக்கத்தால் அடிமைப்படுத்தப்பட்ட கறுப்பின மக்கள், நெல்சன் மண்டேலா போன்றோரின் போராட்டத்தால் விடுதலை பெற்றனர். மண்டேலா அதிபரானபோது அவர் வெள்ளைக்காரர்களை பழிவாங்குவார் என எல்லாலும் நினைத்தனர். ஆனால் அவரோ "மன்னிப்பின் வழியாக நம் கடந்தகால வாழ்வின் காயங்களை ஆற்றும் நேரம் வந்தது" என்றார். மண்டேலாவோடு இப்பணியில் ஈடுபட்ட பேராயர் டெஸ்மண்ட் டூட்டு பழிவாங்கும் நீதி (Retributive Justice) க்கு மாற்றாக மீள்நிலைப் படுத்தும் நீதியை (Retributive Justice) முன்னெடுக்கிறார். அவர் கூறும்போது "While Restorative Justice look for revenge, restoration calls for forgiveness" என்கிறார். கிறிஸ்துவில் சகோதரத்துவத்தில் வரும் மீள்நிலையை சொந்தமாக்குவோம்.

### ***2. இறையருளால் மீள்நிலை*** : (எபே 2:8)

(Restoration through Grace)

தூய பவுல் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கித்து, அச்சிலுவை வழியாக வரும் மீள்நிலையை முன்னிலைப்படுத்துகிறார். இறையருளால் நம்பிக்கையின் வழி மீட்கப்பட்டோம் என்ற அனுபவத்தை பவுல் எபேசு சபைக்கு வலியுறுத்துகிறார். "நாம் செய்த அறச்செயல்களை முன்னிட்டு அல்ல, புதுப்பிறப்பு அளிக்கும் நீரினாலும் புதுப்பிக்கும் தூய ஆவியாலும் கடவுள் நம்மை மீட்டார்" என்று பவுல் தீத்துவுக்கு கூறுகிறார் (தீத்து 3:5). "நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இவ்வாறு கடவுள் நம்மீது கொண்டுள்ள தம் அன்பை எடுத்துக்காட்டியுள்ளார்" என்று பவுல் உரோம திருச்சபைக்கு கூறுகிறார் (உரோமை 5:8).

15-ம் நூற்றாண்டில் திருச்சபை பாரம்பரிய சடங்குகளிலும், பாவ மன்னிப்புச் சீட்டின் பிடியிலும், போப்பின் ஆதிக்கத்திலும் உழன்று கொண்டிருந்த போது, இறையருளால்தான் மீட்கப்பட முடியும்,

மீட்கப்பட்டோம் என உணர்ந்த மார்ட்டின் லூதர், திருச்சபை சீர்திருத்தத்திற்கு வித்திட்டார். இக்காலகட்டத்தில் திருச்சபை மீள்நிலைக்கு நேராக பயணிக்க துவங்கியது.

### *3. நலவாழ்வும் மீள்நிலைப்படுத்துதலும்* : (மாற் 10:52)

(Well being and Restoration)

இயேசுகிறிஸ்து பர்த்திமேயுவின் வாழ்வில் ஒளியேற்றினார், மீள்நிலைப்படுத்தினார் என்று கூறும்போது அது உடல் சார்ந்த விடுதலையையும், உளம்சார்ந்த விடுதலையையும் சுட்டிக்காட்டுகிறது. கிறிஸ்துவில் பார்வை பெறுதல் என்பது வெறும் உடல் சார்ந்தது அல்ல, அதையும் தாண்டி அக ஒளி பெற்று மெய்யுணர்வுக்கு நேராகப் பயணிக்கும் பார்வை பெறுவதிலே அது முழுமை பெறுகிறது.

இயேசு தம் சீடரோடு பேசும்போது அதின் ஆழ்ந்த அர்த்தங்களை அவர்களால் புரிந்துகொள்ள இயலவில்லை. ஆகவே அவர் தன் சீடர்களை நோக்கி, “கண்ணிருந்தும் நீங்கள் காண்கிறதில்லையா? காதிருந்தும் நீங்கள் கேட்பதில்லையா?” என்றார் (மாற் 8:18). கிறிஸ்துவில் அக ஒளிபெறுதல் நம்மை மீள்நிலைக்கு அழைத்து செல்லும். பர்த்திமேயுவின் பார்வையடைய வேண்டும் என்ற விருப்பம் வெறும் உடல் சார்ந்தது அல்ல, மாறாக அவன் இயேசுவை பின்பற்ற அது தூண்டுதலாகவும் அமைந்தது (மாற் 10:52).

கிறிஸ்துவின் சிலுவை சகோதரத்துவ உறவு வழியாகவும், இறையருளாலும் நம்மை நல வாழ்வுக்கு நேராக நடத்தி, நிறை வாழ்வு பெற உதவியாக அமையட்டும்.

அருள்திரு. முனைவர். O. **டென்சிங்**

01-04-2020 புதிய மாத நன்றித் தொழுகை

# கண்ணீரைக் காணும் ஆண்டவர்

திருமறைப்பாடம் : திபா 56:1-13

**"என் துன்பங்களின் எண்ணிக்கையை நீர் அறிவீர்; உமது தோற்பையில் என் கண்ணீரைச் சேர்த்துவைத்துள்ளீர்..."** (திபா 56:8).

இப்பகுதி தாவீது அரசரின் கண்ணீரின் வார்த்தைகள். எதிரிகளால் நெருக்கப்பட்ட போது உள்ளம் உடைந்து சொன்ன வார்த்தைகள். இங்கு கடவுள் மனித வாழ்வின் நெருக்கங்களையும், பாடுகளையும் அதன் வழியாக வெளிப்படும் கண்ணீரையும் காண்கிறவர் என்பதையும் அதை கணக்கு வைப்பவர் என்பதையும் சுட்டுகிறார்.

கண்ணீர் என்பது மனித வாழ்வின் இன்பத்தையும், துன்பத்தையும் வெளிக்காட்டும் வெளிப்பாடு. வாழ்வின் உட்பகுதியில் அனுபவிக்கும் நிந்தைகள், துக்கங்கள், இல்லாய்மை, இழப்புகள் இவையனைத்தின் வெளிப்பாடாக கண்ணீரை அன்றாட வாழ்வில் பார்க்க இயலுகிறது. திருமறையில் சிலரது வாழ்வின் அனுபவங்களை அடித்தளமாகக் கொண்டு கடவுள் கண்ணீரைக் காண்கிறவர் என்பதைக் கற்றுக் கொள்வோம்.

## *1. ஆகாரின் குழந்தையின் கண்ணீரைக் கண்டார் :*

(தொநூ 21:14-20)

ஆபிரகாமின் அடிமைப் பெண்ணுக்கும், சாராளுக்கும் வாக்குவாதம் வந்தபோது வீட்டைவிட்டு ஆகாரை வெளியேற்றும் சூழல் ஆபிரகாமுக்கு வந்தது. எதிர்பாராத நாள் அதிகாலையில் வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்டாள்.

அப்பத்துடனும், ஒரு துருத்தித் தண்ணீருடனும் வெளியேற்றப்பட்டாள். - பெயர்செபாவின் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தாள் (வச. 14). துருத்தியில் தண்ணீர் தீர - வனாந்தரத்தில் குழந்தையை ஒரு செடியின் கீழ் விட்டாள் (வச.15). தேவன் குழந்தையின் சத்தத்தைக் கேட்டார் - மரணத்தின் விழிம்பில் கண்ணீர் ஊற்றும் குழந்தையை கண்டார். ஆகாரை அழைத்து நம்பிக்கை தந்தார் (வச.17). ஆகாரின் கண்களைத் துறந்தார். தண்ணீர்த் துரவைக் காட்டினார்-குழந்தைக்கு தண்ணீர் தந்து மரணத்திலிருந்து பிழைக்கச் செய்தார் (வச.19).

வச. 20-தேவன் பிள்ளையுடனே இருந்தார். அவன் வளர்ந்து வல்லவனானான். இன்றும் அழுகிறவர்களின் கண்ணீரையும், கைவிடப்பட்டு அங்கலாய்ப்போரின் இயலாமையும், கண்ணீரையும் காண்கிறார். வாழ்வு தருகிறார்.

### *2. அன்னாளின் கண்ணீரைக் கண்டார் :* (1 சாமு 1:1-28)

அன்னாளின் துயரமும், அவளது ஜெபமும், அவளது மகிழ்வும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்னாளின் கர்ப்பம் கடவுளால் அமைக்கப்பட்டது போல அவள் அடைந்த துயரமும் அழுகையும், கண்ணீரும் கணக்கற்றதாகவே இருந்தது (வச. 1-8). அன்னாள் ஆண்டவரின் ஆலயத்தில் நம்பிக்கையின் அலை பெருக, மனம் நொந்து அழுதாள், விண்ணப்பித்தாள் (வச.10). அன்னாள் கண்ணீருடன் வேண்டினதுடன், பொருத்தனையுடன் இறை பாதம் நின்றாள். ஆனால், ஆசாரியனால் அவளது துக்கத்தை அடையாளம் காண இயவில்லை. ஆண்டவர் அவளது துக்கத்தையும், கண்ணீரையும் கண்டார் (வச.11). அன்னாள் சென்று உணவு உண்டாள். பின்னர் அவள் துக்கமாயிருக்கவில்லை (வச.18). குறிப்பிட்ட நாட்களுக்கு பின்பு அன்னாள் ஆண் குழந்தையை பெற்றெடுத்து (வச. 20).

தான் இப்பகுதியில் அன்னாளின் கண்ணீர்-அவளது இல்லாமையை நீக்கி இன்பம் தர வழிவகுத்தது என்பதை கற்றுத்தருகிறது. கடவுள் இல்லாமையை காண்கிறவரும், கண்ணீரைக் கண்டு இல்லாமையை நீக்குபவராக இன்றும் செயல்படுகிறார். அங்கலாய்ப்புடன் வாழ்கிறோமானால் நமது அகவாழ்வில் எழும் கேள்விகளுக்கு பதில் தரவும், கண்ணீருக்கு பதில் தரவும் கடவுள் வல்லவர்.

### *3. அரசர் எசேக்கியாவின் கண்ணீரைக் கண்டார்* :

(2 அர 20:1-6)

கண்ணீர் என்பது ஆண்டியாக வாழ்பவருக்கு மட்டுமல்லாது அரசர்களின் வாழ்விலும் உண்டு என்பதை இப்பகுதி சுட்டுகிறது. எசேக்கியா தன் இருபத்தைந்து வயதில் அரசனாகி, ஆண்டவரின் பார்வையில் உண்மையுடனும், உத்தமத்துடனும் வாழ்ந்து பணி செய்தார்.

எதிர்பார்க்காத நாளில் எசேக்கியா நோயுற்று சாவின் விளிம்பில் நிற்க வேண்டியதாயிற்று. ஏசாயா கூறிய சாவின் வார்த்தை அதிர்ச்சியை தந்தது. எசேக்கியா கலங்கினார், கண்ணீர் வடித்தார் எசேக்கியா (வச.1). உலக மனிதர்களை மறந்து சுவர் புறமாக திரும்பினார் (வச. 2). தனது உண்மை நிலையை கடவுளிடம் சொன்னார். தான் கடவுளுக்கு பிரியமாக

வாழ்ந்ததையும், வரக்கூடாத தீமை தன்னைப் பற்றிக் கொண்டதையும் எண்ணி மிகவும் அழுதார். எசேக்கியாவின் அழுகுரலைக் கேட்டு, கண்ணீரைக் கண்டார் கடவுள் (வச. 3).

எசேக்கியாவுக்கு இரங்கினார், ஆயுள் நாட்களைக் கூட்டித்தந்தார். தனது உடனிருத்தலையும், உதவியையும் எசேக்கியாவுக்கு உறுதிபடுத்தினார் (வச.5).

வாழ்க்கையில் எதிர்பார்க்காத வியாதியால் கலங்கினாலும், சாவைக் குறித்த பயமும் பதட்டமும் வாட்டினாலும் இல்லாமை, இயலாமை, இவைகளால் நொந்து போனாலும் கண்ணீரை காண்கின்ற கடவுளிடம் கண்ணீர் ஊற்றினால் ஆகார், அன்னாள், அரசன் எசேக்கியா போன்றவர்களைப் போல் மகிழ்ச்சியாய் மாற்றுவார். கடவுள் மறைந்து நிற்பவர் அல்ல. அன்றாட வாழ்வில் உடனிருந்து நமது உணர்வுகளை அறிபவர். அந்த கடவுள் நம்மை காண்பவர், கண்ணீரை துடைப்பவர், ஆனந்தமளிப்பவர்.

அருள்திரு. Y. **லாறன்ஸ்**

01-04-2020

**தவக்கால ஆறாம் புதன்**

## கிறிஸ்துவுடன் சாகத் துணிந்த தோமா

திருமறைப்பாடம் : யோவா 11:7-16

**"திதிம் என்னும் தோமா தம் உடன் சீடரிடம், நாமும் செல்வோம், அவரோடு இறப்போம் என்றார்".** (யோவா 11:16)

இயேசு கிறிஸ்துவின் வாழ்வும் திருப்பணியும் இந்த மானுடத்திற்கு சான்று நிறைந்தவையாக, இறையரசுக்கு நேராக மக்களை திருப்புவதற்கு வழிகாட்டியாக அமைந்தன. கிறிஸ்துவின் வாழ்வு மற்றும் திருப்பணியோடு பலர் தங்களை இணைத்துக் கொண்டனர். அவர்களில் முக்கியமானர்கள் தான் இயேசு கிறிஸ்துவினால் தெரிந்துக்கொள்ளப்பட்ட சீடர்கள். அவர்கள் தன்னோடு இருக்கவும், இறையரசைக் குறித்து போதிக்கவும், நோயுற்றோரைக் குணப்படுத்தவும் ஏற்படுத்தினார். அவருடன் வாழ்ந்து, அவரது சிலுவைக்கு சான்று பகர்ந்த சீடர்களில் ஒருவராகிய தோமாவின் வாழ்வும் அனுபமும் கிறிஸ்துவின் பாடுகளில் நாம் நம்மை இணைத்துக் கொள்ள அழைக்கின்றன.

தோமா கலிலேயா கடலில் மீனவராக இருந்தவர். தாமஸ் திதிமஸ் என அழைக்கப்பட்டார். அரமேயு மொழியில் தாமஸ் என்பதற்கு 'இரட்டையர்' என்பது பொருளாகும். திதிமஸ் என்பது கிரேக்க மொழியில் 'இரட்டையர்' என்ற பொருளைக் குறிக்கிறது. எனவே தோமா இரட்டையர்களில் ஒருவர் என்பது தெளிவாகிறது.

யோவான் நற்செய்தி நூல் 11 ஆம் அதிகாரம் 6 முதல் 16 வரையுள்ள வசனங்களில் தோமாவைப் பற்றிய முதல் நிகழ்வைக் காண்கிறோம். யோவா 11:16 இல் "நாமும் செல்வோம், அவரோடு இறப்போம்" என தோமா சீடர்களைப் பார்த்து சொன்ன வார்த்தை கிறிஸ்துவின் பாடுகளில் துணிவுடன் இணைய தூண்டுகிறது. தோமாவின் இந்த வார்த்தையை மையமாகக் கொண்டு சிந்திப்போம்.

### *1. துணிவுமிக்க வார்த்தை :*

பெத்தானியாவில் இயேசுவுக்கு அன்பாயிருந்த குடும்பத்தைச் சார்ந்த லாசர் என்பவர் நோயுற்றிருந்த செய்தியை இயேசு அறிந்தார். லாசருவைப் பார்க்க இயேசு யூதேயாவுக்கு போக தீர்மானித்தார். அந்த வேளையில் தான் சீடர்களிடத்தில் அச்ச உணர்வு ஏற்பட்டது. காரணம் யூதர்கள் இயேசுவைக் கல்லெறிய வகைத் தேடினார்கள் (யோவா 11:8).

இயேசு யூதேயாவுக்கு சென்றால் நிலைமை மோசமாகி விடும் என இயேசுவிடம் கூறினார்கள். மேலும் இயேசுவை யூதர்கள் கொலைச் செய்ய மிகுந்த முயற்சி செய்தார்கள் (யோவா 5:18), யூதாஸ் என்னைக் காட்டி கொடுப்பான் (யோவா 6:70,71), இன்னும் சிறிது காலம் மட்டுமே உங்களோடு இருப்பேன். பின்னர் என்னை அனுப்பியவரிடம் செல்வேன் (யோவா 7:3) என இயேசு கூறிய வார்த்தைகள் சீடர்களுக்கு நினைப்பூட்டின. இயேசு எங்களை விட்டு பிரிந்து சென்று விடுவாரோ என்ற அச்சத்தின் உச்சத்திற்கு அவர்களைக் கொண்டு சென்றது.

இத்தருணத்தில் லாசர் மரித்துப் போனார் என வெளிப்படையாகக் கூறி, லாசருவிடம் செல்வோம் வாருங்கள் என இயேசு சொன்ன போது, தோமாவின் துணிவுமிக்க வார்த்தை அவர் வாயிலிருந்து வெளிப்பட்டது (யோவா 11:16). கலக்கமும், திகிலும், நடுக்கமும் நிறைந்த சூழலிலும் ஒரு தனி நபராக இயேசுவோடு நாமும் பாடுகளை ஏற்போம் என பிற சீடர்களையும் அழைத்தார். எந்த துன்பம் வந்தாலும், ஏன் சாவே வந்தாலும் கிறிஸ்துவுடனே கூட நாங்கள் பாடுகளை ஏற்போம் என்ற துணிவுமிக்க வாழ்வை தோமா கூறிய வார்த்தைகளின் வழியாக காண்கிறோம். இத்தகைய துணிவுமிக்க வார்த்தை நம்மிலும் மலரட்டும்.

### *2. துணிவுமிக்க சான்று :*

“அவரோடு இறப்போம்” என்ற துணிவுமிக்க வார்த்தையைக் கூறிய தோமாவின் வாழ்வில் வேறு எந்த சீடரிடமும் வெளிப்படாத சான்று வாழ்வு வெளிப்பட்டது. இத்தனை வருடங்கள் எங்களோடு இருந்து எங்களுக்கு நல்வாழ்வு காட்டிய இயேசுவுக்காக இறக்கவும் தயார் என்ற துணிவை தோமாவிடம் காண்கிறோம். இந்த துணிவு அந்த வேளையில் மட்டுமல்ல, இயேசு உயிர்த்தெழுந்த பின்பும் (யோவா. 20:18), நற்செய்திப் பணி காலத்திலும் சான்று பகர்ந்தது என்பதை தோமாவின் வாழ்வினூடாக அறிகிறோம்.

உலகெங்கும் சென்று நற்செய்தி அறிவியுங்கள் என்ற இயேசு கிறிஸ்துவின் இறுதி கட்டளையை ஏற்று சீடர்கள் சிதறிச் சென்று நற்செய்தியை அறிவித்து மக்களினத்தாரை சீடராக்கினர். மெசப்டோமியாவிலுள்ள எடெசா நகரில் தனது திருப்பணியை ஆரம்பித்த தோமா பாபிலோன் மற்றும் பாரசீகத்திலுள்ள அபியோபெனியில் திருப்பணி செய்தார். இந்தியாவைப் பற்றி கேள்விப் பட்ட தோமா இந்தியா வர விரும்பினார். பல்வேறு நாடுகளில் நற்செய்தித் திருப்பணியை அறிமுகப்படுத்திய தோமா கிபி. 52 இல் கடல் வழியாக சேரநாட்டின் (தற்போதைய கேரளா) முசிறி என்றழைக்கப்பட்ட மலபார் பகுதிக்கு வந்து

ஆயிரக்கணக்கான மக்களுக்கு நற்செய்தியை அறிவித்தார். தம் இனத்தவரான யூதர்கள் அங்கு வசிப்பதைக் கண்டு அவர்களுக்கும் நற்செய்தி அறிவித்தார். முசிறிக்கு அருகாமையிலுள்ள பாலையூர் பகுதியில் தோமா போதிக்கும் போது சில பிராமணர்கள் தோமாவின் போதனையை ஏற்றுக் கொண்டனர். இதனால் ஆத்திரம் அடைந்த வேறு சில பிராமணர்கள் அவ்வூரை விட்டு வெளியேறிதுடன் அவ்வூருக்கு சாப்பாக்காடு (சாபமான இடம்) என்றும் பெயரிட்டனர்.

தமது போதனையை ஏற்றுக் கொண்டு மனந்திரும்பிய மக்களுக்கு திருமுழுக்கு கொடுத்து அவர்களுக்காக சபைகளையும் நிறுவினார். மலபார் பகுதியில் தோமா 7 சபைகளை நிறுவியதாக வரலாறு கூறுகின்றது. அவை பள்ளூர், முசிறி, பரூர், கொத்தமங்கலம், காயல், நிரணம், கொல்லம் என்பவைகளாகும்,

பின்பு கிபி 57 இல் தோமா திருவிதாங்கோடு பகுதிக்கு வந்து அந்த இடத்திலும் ஓர் ஆலயம் கட்டி பலருக்கு திருமுழுக்கு கொடுத்தார். அதற்கு அமலகிரி ஆலயம் என்ற பெயரை அப்போதைய சேர மன்னன் உதயஞ்சேரல் சூட்டினார். இவ்வாலாயம் அரசர்களின் உதவியால் கட்டப்பட்டதால் அரசர் பள்ளி என்று அழைக்கப்பட்து. நாளடைவில் அது ‘அரைப்பள்ளி’ என அழைக்கப்படுகிறது. பின்னர் கிபி 65 .ல் கொரமண்டல் (தற்போதைய சென்னை) பகுதிக்கு சென்று மயிலாப்பூரை அடைந்தார். பின்னர் சின்னமலை மற்றும் பெரிய மலை பகுதிகளிலும் மக்களுக்கு போதனைச் செய்தார். தோமா மற்றும் அவர் காட்டும் மார்க்கத்தின் செல்வாக்கு மயிலை மக்களிடம் பெருகுவதைக் கண்ட காளிகோயில் பூசாரிகள் எரிச்சலடைந்தனர். பொய் குற்றச்சாட்டுகள் மூலம் அரசரிடம் தண்டனைப் பெற்று தர இயலாததால் நேரடியாக செயலில் இறங்கினர். கிபி. 72 இல் வழக்கமாக அவர் சின்னமலை பகுதியிலுள்ள குகைக்கு சென்று ஜெபித்து கொண்டிருக்கும் போது காளிகோயில் பூசாரிகள் அவரைத் தாக்கினர். எப்படியோ தப்பித்து பெரியமலைப் பகுதிக்கு வந்தார். அங்கு தான் ஏற்கனவே செதுக்கி வைத்திருந்த கற்சிலுவையைக் கட்டி பிடித்து ஜெபித்து கொண்டிருந்தார். இதைப் பார்த்து கொண்டிருந்த கோயில் பூசாரி ஒருவன் தோமாவின் இதயப்பகுதியில் ஈட்டியால் குத்தினான். சிறிது நேரத்தில் இரத்தசாட்சியாக தோமா மரணம் அடைந்தார். தோமாவின் சீடர்கள் அரசரின் அனுமதியுடன் அவரது உடலை மயிலாப்பூரில் அடக்கம் செய்தனர். அடக்கம் செய்யப் பட்ட இடத்தில் மகாதேவன் என்ற மன்னரின் உத்ததரவின் படி ஒரு பெரிய நினைவு மண்டபம் கட்டப்பட்டது. அங்கு தற்போது இருக்கும் சாந்தோம் பேராலயம் 1896 இல் கட்டப்பட்டது.

இந்தியாவின் முதல் குடியரசு தலைவர் 1955 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் நாள் புதுடெல்லியில் வைத்து நடைபெற்ற புனித தோமா நாள் கொண்டாட்டத்தில் தோமாவைக் குறித்து "ஐரோப்பாவின் பல நாடுகள் கிறிஸ்தவத்தை அறியும் முன்னரே, புனித தோமா இந்தியாவிற்கு வருகைப் புரிந்தார் என்பதை நினைவில் கொள்ளல் வேண்டும். பல ஐரோப்பிய நாடுகளின் கிறிஸ்தவர்களுக்கும் முந்தைய வரலாறு புனித தோமா வழிவந்த இந்திய கிறிஸ்தவர்களுக்குண்டு. இது உண்மையிலேயே நாம் பெருமை கொள்ளத்தக்க செய்தியாகும்". என கூறினார். மேலும் இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்வால் நேரு அவர்கள் "ஐரோப்பா நோக்கி கிறிஸ்தவம் திரும்பும் முன்னரே அது தன்னை இந்திய நாட்டில் வலுவாக உறுதிப்படுத்திக் கொண்டது என்பதைச் சிலரே அறிந்துணர்கின்றனர்" என்கிறார். இவர்களின் சான்றுகள் தோமாவின் சான்று மிக்க திருப்பணியைப் பிரதிபலிக்கின்றன. எனவே இத் தவக்காலத்தில் நம் வாழ்விலும் துணிவுமிக்க சான்று தேவை என்பதை உணர்ந்து செயல்படுவோம்

தோமாவின் வாழ்வு எளிது அல்ல, பல கண்டங்களைத் தாண்டி, பல நாடுகளை, பல பகுதிகளைத் தாண்டி துணிவுடன் கடவுளின் வார்த்தைகளைப் பகிர்ந்து சிலுவை வழி பயணித்த வாழ்வாகும். ஒரு குறிப்பிட்ட சூழலில் "அவரோடு இறக்க நாமும் செல்வோம் வாருங்கள்" (யோவா 11:16) என்று மொழிந்த வார்த்தை துணிவுடன் கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகளுக்கு நேராய் அழைத்து சென்றது. நாமும் கிறிஸ்துவின் பாடுகளையும், இறப்பையும் தியானிக்கும் இந்த காலத்தில் துணிவுடன் இறைவார்த்தையைப் பகிர்ந்து, நம்பிக்கையோடு கிறிஸ்துவின் பாடுகளை அடையாளப்படுத்தும் சிலுவைக்கு சான்றாளர்களாவோம். இறை ஆசிப்பெறுவோம்.

திரு. M.R. **மில்ட்டன் மார்க்**

03-04-2020

தவக்கால ஆறாம் வெள்ளி

## இறையுறவுக்குத் திரும்புங்கள்

திருமறைப்பாடம் : ஓசே 2:14-22

**“மாறாத அன்புடன் உன்னோடு மண ஒப்பந்தம் செய்து கொள்வேன்; ஆண்டவராம் என்னை நீயும் அறிந்து கொள்வாய்”** (ஓசே 2:20)

Joseph Murphy என்னும் உளவியலாளர் மனித மனதை மூன்றாகப் பிரிக்கிறார். அவை நினைவு மனம் (Concious Mind), அடிமனம் (Subconcious Mind), ஆழ்மனம் (Unconcious Mind) என்பவை ஆகும். இதில் ஆழ்மனம் பயத்தினாலும், இச்சையினாலும் (Lust) நிரம்பி இருப்பதாக வரையறுக்கப்படுகிறது. ஆழ்மனதில் காணப்படும் அச்சமே அதிக பொருள் வேட்கைக்கு வழிவகுப்பதாகவும், இச்சை சுய ஒழுக்கமற்ற வாழ்க்கைக்கு வழிவகுப்பதாகவும் கொள்வர்.

உள்மனதின் இத்தகைய எண்ணங்களும் உணர்வுகளும் ஆண்டவரைப் பின்பற்றுவோரையும் அவரை விட்டு நெடுந்தொலைவில் செல்ல வழிநடத்துகின்றது. அப்படி மனுக்குலம் சென்றாலும் ஆண்டவரின் மனம் அன்பினால் நிரம்பி வழிவதால் அவர்களை அருகில் அழைத்து தம்மண்டை நிலைப்படுத்துகிறது. இந்த மேலான உண்மையை வலியுறுத்தும் திருமறைப்பாடமே ஓசே 2:14-22. அதாவது எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து, இஸ்ரவேல் மக்களை விடுவித்து, ஆண்டவர் கானானில் குடியமர்த்தினார். அப்படி குடியமர்த்தப்பட்ட மக்கள் ஆண்டவரோடு நிரந்தர உறவில் காணப்பட்ட வேண்டும் என்பதே அவரது எதிர்பார்ப்பு. இந்நிலையில் கடவுளை விட்டு அவர்கள் பல முறை தொலைவில் சென்றனர். குறிப்பாக, ஓசேயா இறைவாக்கினரின் காலமாகிய கிமு 8-ம் நூற்றாண்டில் இஸ்ரவேல் மக்கள் தூரம் சென்ற நிலையில் காணப்பட்டனர். இந்நிலையில் இறைவாக்கினர் கூறும் வார்த்தைகளும் (ஓசே 2:14-22) அதின் ஆகமங்களுமே நமது சிந்தனைக்குரிய பகுதி.

### *1. உறவைப் புதுப்பிக்கும் கடவுள் :*

இறையவருக்கும் இறைமக்களுக்கும் உள்ள உறவு பல உவமானங்களால் திருமறையில் கூறப்பட்டுள்ளன. அதில் மிக முக்கியமானதாக கணவன்-மனைவி உறவில் கொள்ளப்படுகிறது. அது மிகப் பொருத்தமானதாகவும் காணப்படுகிறது. கணவன்-மனைவி உறவில் ‘கற்பே’ இருபால் இனத்தவரிடையேயும் காணப்படும் முக்கியமான ஒன்று.

பழைய ஏற்பாட்டு காலத்திலே கற்பு இல்லாத மனைவி என அடையாளங்காணப்பட்டவர்கள். மிக எளிதாகவே கணவன்மார்களால் துரத்திவிடப்பட்டனர் (இச 24). இப்படி மிகக் கடுமையான நடவடிக்கைகள் காணப்பட்ட சூழலில் ஓசேயா 2:15,16 -ல் வரும் வார்த்தைகள் மிகவும் புரட்சி மிக்கவை ஆகும். தொலைவில் சென்று வேற்று சமய வழிபாடுகளை பின்பற்றிய இஸ்ரவேல் மக்களை தம்மண்டை அழைத்தணைப்பது ஆச்சரியமிக்க அன்பே!

புதிய ஏற்பாட்டிலும் கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் உள்ள உறவு கணவன்-மனைவி. அதாவது மணமகன்-மணமகன் உறவாகவே கொள்ளப்படுகிறது. வெளிப்பாடு மூன்றாம் அதிகாரத்தில் இதை அதிகமாகக் காணமுடியும்.

உளவியலாளர்கள் கூறும் மிக முக்கியமான உண்மை ஒன்று உண்டு. அதாவது திருமணநாள் அன்று அழகுபடுத்தப்பட்டிருக்கும் மணமகள் தன் அலங்காரத்தின் மீது மட்டுமே கவனம் வைத்து தன் வாழ்வோடு இணைய இருக்கும் மணமகனைக் குறித்து கவலையற்றிருப்பார்களேயாகில் அவளது குடும்ப வாழ்வு சிறக்காது என்பதே அவ்வரிய உண்மை. கிறிஸ்துவைப் பின்பற்றும் திருச்சபையும், தனி மனிதரும் உலகம் சார்ந்த கவலை கொள்ளாமல் கிறிஸ்து மீதே, அவரது அன்பு மீதே நாட்டம் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

திவெ 3:5 -ம் வசனத்தில் சர்தை சபையோடு கிறிஸ்துவின் ஆவியர் கூறும் வார்த்தைகள் முக்கியமானது. மனந்திரும்பி தம்மண்டை வருவோருக்கு கிறிஸ்து சிறந்த வாழ்வு அருளுகிறார் என்பதே அவ்வார்த்தை. இந்த அழைப்பிற்கு காரணம் கிறிஸ்துவின் நிபந்தனையற்ற அன்பே காரணம்.

'இந்த ஒருமுறை கூட மன்னியும்' என மன்றாடுவோரைப் பார்த்து ஆண்டவர் கேட்பாராம் 'இதற்கு முன் எப்போது என்னிடம் மன்னிப்பை கேட்டாய்!' என்று. ஆம்! அந்த அளவுக்கு அன்பு கொண்ட ஆண்டவர் இயேசு கிறிஸ்து. இப்படி இறையுறவு என்பது நெடுந்தொலைவில் செல்லும் மனைவியையும் அருகில் இழுத்து அன்பு செலுத்தும் அரிய உறவுக்கு ஒப்பானது.

## *2. இறையுறவுக்கு எதிரானவற்றை அழிக்கும் கடவுள் :*

(ஓசே 2:18)

எதிர்மறை (Negative) எண்ணங்களும் செயல்களும் மாந்தருக்கு எப்போதும் சவால் நிறைந்த ஒன்றாகவே காணப்படுகிறது. இஸ்ரவேல் மக்கள் எதிர்மறை ஆற்றல்களால் பலமுறை மோசமான பின்விளைவுகளை

சந்தித்தனர். ஆனால் ஓசே 2:18-ம் வசனத்தில் எதிர்மறைகளை அழித்து சுகமாய் வாழப்பண்ணுவேன் என்று வாக்குப்பண்ணுகிறார்.

தொடக்கக்கால திருச்சபை, திருச்சபை மக்கள் பல நிலைகளில் எதிர்மறை ஆற்றல்களால் தாக்கப்பட்டனர். திப 5-ம் அதிகாரத்தில் அனனியா, சப்பீராள் எதிர்மறை ஆற்றலால் பாதிப்புக்குள்ளாயினர். திப 5:3-ல் தீமை செய்ய சாத்தான் உள்ளத்தை நிரப்பியது என்ன?, என்ற கேள்வி எழும்புகிறது. அந்த எதிர்மறை எண்ணம் அக்குடும்பத்தை அழிக்கிறது. எதிர்மறை ஆற்றல்கள் எண்ணங்கள் தனி மனித வாழ்விலிருந்து சமூக வாழ்வு வரையிலும் பரவி மிக மோசமான பின்விளைவைத் தந்து நிற்கிறது. சில வேளைகளில் திருச்சபை அரசாங்கத்தால் எதிர்மறை ஆற்றலாய் இருந்தாலும் ஆண்டவர் அவைகளை அழிக்கிறவராய் இருக்கிறார்.

மாற் 3:1-6 -பகுதியில் பார்க்கும் போதுஎதிர்மறை ஆற்றலால் பாதிக்கப்பட்ட மனிதன் கிறிஸ்துவால் வாழ்வைப் பெற்றுக் கொள்கிறார். ஆம்! கிறிஸ்துவண்டை ஒருவர் திரும்பும் போது, அவரண்டை நெருங்கும் போது, அவர் எதிர்மறையான ஆற்றலை அழித்து நேர்மறை ஆற்றலைப் பெருகப்பண்ணி வாழ்வளிக்கிறார். இப்படி இறையுறவானது எதிர்மறை ஆற்றலை அழித்து நேர்மறை ஆற்றலை அளிக்கும் அன்புறவை தன்னுள் கொண்டது.

‘நான் என் பாவ சுபாவத்தைப் பார்க்கையில்,
இரட்சகர் செய்த அற்புதங்களிலெல்லாம்
மிகச் சிறந்தது என் மீட்பே எனக்
காண்கிறேன்.’ - சாமுவேல் ரூதர்போர்டு

கடவுளோடு நல்லுறவு கொண்டு வாழும் நோக்கத்திலேயே மனித சமூகங்கள் உருவாக்கப்பட்டது. ஆனால் பல சூழல்கள் அவ்வுறவில் பற்றுமிக்கதாய் இருப்பது சாவால் நிறைந்ததாகவே உள்ளது. ஆனாலும் இயேசு நாதர் தொலைத்தூரத்தில் இருப்போரையும் தம்மண்டை இழுத்து எதிர்மறை எண்ணங்களை, ஆற்றல்களை அகற்றி நேர்மறை எண்ணங்களைத் தந்து, நல்சூழல்களைத் தந்து வாழ வைக்கிறார். சமூகங்களை ஒன்றிணைக்கும் அன்பு என்னும் தங்க சங்கிலியை தன் கரத்தில் கொண்டு அனைவரையும் தம்மண்டை இருக்கும் ஆண்டவரண்டை திரும்புவோம்!

அருள்திரு. J.T. **ஜெறோம்**

05-04-2020

**உயிர்ப்புக்கு முன்வரும் ஞாயிறு & குருத்தோலை ஞாயிறு**

## கிறிஸ்து : அமைதியின் அரசர்

**CHRIST : THE KING OF PEACE**

| | |
|---|---|
| செக் 9:1-12 | எபே 2:11-22 |
| திபா 24 | மாற் 11:1-11 |

**"மகளே சீயோன்! மகிழ்ந்து களிகூரு; மகளே எருசலேம்! ஆர்ப்பரி. இதோ! உன் அரசர் உன்னிடம் வருகிறார். அவர் நீதியுள்ளவர்; வெற்றி வேந்தர்; எளிமையுள்ளவர்; கழுதையின்மேல், கழுதைக் குட்டியாகிய மறியின்மேல் ஏறிவருகிறவர்".** (செக். 9:9)

தூய வாரத்தின் முதல் நாள் ஒரு சிறப்பு பேரணியில் தொடங்குகிறது. பெத்பகு என்றும் சிற்றூரிலிருந்து புறப்பட்டு எருசலேம் நோக்கி சென்றது பேரணி. எருசலேம் யூதேயாவின் தலைமை இடம். பேரணியின் தலைவர் இயேசு. வாகனம் கழுதை வாகனம் செல்வதற்கு தரையில் ஆடைகள் விரிக்கப்பட்டன. மரக்கிளைகள் பரப்பப்பட்டன. குருத்தோலைகள் பிடித்து, ஓசன்னா தாவீதின் மைந்தருக்கு ஓசன்னா என்ற முழக்கம்.

இயேசுவின் காலத்துக்கு முன்னரும் ஊர்வலங்கள் நடை பெற்றதுண்டு.

எ.கா. (i) மோசே தலைமையில் எகிப்திலிருந்து கானான் நாடுவரை சென்ற மிகப்பெரிய பேரணி.

(ii) உடன்படிக்கை பெட்டியை சுமந்து கொண்டு மக்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

(iii) தாவீதின் போர்கள் வெற்றியை பாடிக்கொண்டு மக்கள் நடத்திய பவனி நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இறைவாக்கினர் செக்கரியா கி.மு. 540-ம் ஆண்டில் இயேசுவை ஓர் அமைதியின் அரசராக முன்னறிவித்துள்ளார்.

### *1. பேரணியின் நோக்கம்* :

இயேசுகிறிஸ்து தாம் ஒரு நீதியும், தாழ்மையும், அமைதியும், நிறைந்த அரசர் என்பதை எளிய முறையில் காட்ட விரும்பினார். பஸ்கா பண்டிகைக்கு புனித பயணம் செய்யும் பயணிகள் வழக்கமாக நடந்தே செல்வர். இயேசு கழுதையின் மேல் பயணம் செய்யவிரும்பினார். அன்று அரசர்களின் முடிசூட்டுவிழாவில் அரசனை கோவேறு கழுதையில் ஏற்றி ஊர் முழுவதும் பவனி சென்றனர். அரசன் குதிரைமேல் பயணம் செய்தால் அது போரை காட்டும். கழுதையின் மேல் பயணம் செய்தால் அது

சமாதானத்தைக் காட்டும் என்று கருதினர். மனிதன் பாவத்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை பெறவேண்டும் இந்த விடுதலை இயேசுவின் வழியாக வருகிறது. இந்த வெற்றியை கொடுக்கும் இயேசுவை ஓர் அமைதியின் அரசராக காட்டுவதே இப்பவனியின் நோக்கம்.

### *2. பேரணியின் செய்தி* :

### (a) *அகமகிழ்விக்கும் அமைதியின் அரசர்* : (செக் 9:9)

மக்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் எருசலேம் பவனியை அமைதியைத் தரும் பவனியாக மாற்றினார் இயேசு. பஸ்கா பண்டிகைக்காக எருசலேம் அலங்கரிக்கப்பட்டதைப் பார்த்தார். மகிழ்வுதான் என்றாலும் மறுபக்கம் மக்களின் துயரங்களைக் கண்டார், கண்ணீர்விட்டார் (லூக் 19:41). இந்த துயரங்களை மாற்ற மகிழ்விக்கும் அமைதியின் அரசராக பவனியை மேற்கொண்டார்.

### (b) *அநீதியை அகற்றும் அமைதியின் அரசர்* : (மத் 21:13)

இறை இல்லம் திருடர்களின் புகலிடமாக மாறியதை கண்டு, சீர்படுத்தினார். நீதி வழங்க வேண்டிய ஆலயத்தில், அநீதி நடைபெற்றது. அநீதியை ஒருபோதும் ஏற்காத கிறிஸ்து இந்த பவனியின் வழியாக மாற்றினார்.

### (c) *அறியச் செய்யும் அமைதியின் அரசர்* : (மத் 21:10)

இவர் யார்? அறியாதவர்கள் அறிந்து கொள்ளும், பவனியாக அமைந்தது. இந்த கேள்வி இயேசுவின் பிறப்பிலிருந்தே கேட்கப்படும் கேள்வி.

(i) யூதரின் அரசராக பிறந்திருக்கிறவர் எங்கே?

(மத் 2:2) சாஸ்திரிகளின் கேள்வி.

(ii) முழுக்கு முனிவர் யோவான் தம் சீடர் 2 பேரை இயேசுவிடம் அனுப்பி வருகிறவர் நீர்தானா? எனக் கேட்டார் (லூக் 7:19-23).

அவர் பதிலாக, நீங்கள் கண்டவற்றையும், கேட்டவற்றையும் யோவானிடம் போய் அறிவியுங்கள். ஆம்! இயேசுவின் போதனை, செயல்கள் அனைத்தும் அவரை மேசியாவாக அடையாளம் கண்டுகொள்ள வைத்தது.

### *3. பேரணியின் விளைவு* :

இயேசுவின் பவனியின் மையம் என்பது

(i) மனிதரின் மீட்பும், விடுதலை வாழ்வுமாகும்.

(ii) தலைவர்களின் ஏக்கமும், எச்சரிப்புமாகும் (லூக் 19:42)

இயேசுநாதரின் பவனி மக்களுக்கு அமைதியை ஏற்படுத்தும் பவனியாக அமைந்தது. எனவே தான் இறைமக்கள் அவரை அமைதியின் அரசர் என்றழைத்தனர். இன்றும் மனிதனின் எதிர்பார்ப்பு என்பது அமைதியை நோக்கியதாகவே அமைந்துள்ளது. சமயத்திலும், சமூகத்திலும், குடும்பத்திலும் அமைதியற்ற நிலையே நிலவிவரும் சூழலில் அமைதியின் அரசர் நமக்கு அமைதி அளிக்கிறவராகவே இருக்கின்றார். இத்தகைய அமைதி என்பது வெறும் ஒரு மேற்போங்கான அமைதி அல்ல. இவ் அமைதி நீதியோடு கூடிய அமைதியே என்றால் அது மிகையாகாது. “அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்; என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்கு தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல. நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்; மருளவேண்டாம் (யோவா 14:27) என்ற இயேசுவின் வார்த்தை நம்மை அமைதிக்கு நேராகவே அழைத்துச் செல்கின்றன. இந்த அமைதி அரசரின் நோக்கத்தையும் செய்தியையும் விளைவுகளையும் இந்த பவனியின் வழியாக அறிந்து கொண்ட நாம் நம் வழியாய் பிறர் அமைதிகாண நம்மை அர்ப்பணிப்போம்.

அருள்திரு. Y. **மோகன் அருள்தாஸ்**

06-04-2020

தூய வாரம் - திங்கள்

# அர்த்தமற்ற ஆரவாரம்

திருமறைப்பாடம் : மத் 21:18-22

**"இனி நீ கனி கொடுக்கவே மாட்டாய்" என்று அதைப் பார்த்துக் கூறினார்". உடனே அந்த அத்தி மரம் பட்டுப்போயிற்று** (மத் 21:19)

பட்டிமன்றங்களிலும், பொது விழாக்களிலும் சொற்பொழிவு ஆற்றும் ஒருவர் இருந்தார். பேசிக்கொண்டிருக்கும் போது திடீரென்று சத்தத்தை உயர்த்திப் பேசுவதை தன் வழக்கத்தில் கொண்டிருந்தார். பார்வையாளருக்கு 'இந்த இடத்தில் சத்தத்தை உயர்த்திப் பேச வேண்டிய அவசியம் இல்லையே' என நினைக்கத் தோன்றும். எது எப்படியிருந்தாலும் இதில் ஒரு இரகசியம் மறைந்திருக்கிறது. எப்போது சொற்பொழிவாளர் தனது பக்கம் நியாயம் இல்லை என நினைக்கின்றாரோ அப்போது கருத்து இல்லாத குறையைக் கத்திக் கத்தி நிரப்புவார். அர்த்தமற்ற சத்தங்களும், ஆரவாரங்களும் பெருவாரியான எல்லாத் தளங்களிலும் பெருகிப் போயின. இயேசுகிறிஸ்து எருசலேமிலுள்ள திருக்கோவிலைச் சுத்தம் செய்த பின் மறுநாள் காலையில் நகரத்திற்கு திரும்பி வந்தபொழுது அவருக்குப் பசி உண்டாயிற்று. இலைகள் நிரம்பிய அத்தி மரத்தைக் கண்டு தமது பசியைப் போக்க நினைத்தார். ஆனால் இலைகளால் ஆரவாரம் காட்டிய அத்தி மரமோ அவருக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்தது. இந்த அத்தி மரம் நமது வாழ்வுக்கு இரண்டு அரும் பெரும் பாடங்களைக் கற்றும் தருகின்றது.

### *1. பகட்டு வாழ்வுக்கு எச்சரிப்பைத் தரும் மரம் :* (மத் 21:19)

நகரத்தை நோக்கி வந்து கொண்டிருந்த இயேசு கிறிஸ்துவுக்கு பசி ஏற்பட்டதும் அவரது பார்வையில் விழுந்தது வழியருகே நின்ற அத்தி மரம். மரம் முழுவதும் இலைகளால் அலங்கரிக்கப்பட்டு ஆரவாரம் செய்து கொண்டிருந்ததைக் கண்ட இயேசு கிறிஸ்து அருகிலே சென்று கவனித்தார். அதில் கனிகள் ஒன்றும் இல்லாதிருந்தது. பார்வைக்கு பகட்டான தோற்றத்தைத் தந்ததே தவிர பலன் ஒன்றும் இல்லை. அத்திமரம் தன் அலங்கோலத்தை மறைக்க அதின் இலைகளால் தன்னை அலங்காரப்படுத்திக் கொண்டதைக் கண்ட இயேசு கிறிஸ்து "இனி நீ கனி கொடுக்கவே மாட்டாய்" என்று அதைப் பார்த்துக் கூறினார். உடனே அந்த அத்தி மரம் பட்டுப்போயிற்று.

இந்த நிகழ்வு அன்றைய கால யூதர்களுடைய வாழ்க்கை முறையை படம் பிடித்துக் காட்டுகின்றது. யூதர்களுடைய வாழ்வில் ஆலயம், வழிபாடு, தலைமை குருக்கள், விழாக்கள் என அனைத்தும் தாராளமாக இருந்தது. ஆனால், வழிபாட்டிலிருந்து வெளிக்கொணரப் படுகின்ற அன்பும், தாழ்மையும், பக்தியும், பற்றுறுதியும் சாரமிழந்திருந்தது. யூத சமய தலைவர்களின் வாழ்க்கை முறைக்கும் அவர்களுடைய வழிபாடுகளுக்குமிடையே உள்ள முரண்பாட்டைக் கண்டு இயேசு கண்டனம் செய்கின்றார். “வெளிவேடக்காரரே மறைநூல் அறிஞரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ கேடு! நீங்கள் புதினா, சோம்பு, சீரகம் ஆகியவற்றில் பத்தில் ஒரு பங்கைப் படைக்கிறீர்கள். ஆனால் திருச்சட்டத்தின் முக்கியப் போதனைகளாகிய நீதி, இரக்கம், நம்பிக்கை ஆகியவற்றைக் கடைப்பிடிக்காமல் விட்டு விடுகிறீர்கள்.” (மத் 23:23).

நமது பற்றுறுதி வாழ்விலும், பணியிலும் மையமாக அமைந்திருக்கும் வழிபாடுகளும், விழாக்களும் ஒருபோதும் சாரம் இழந்து போகாமல், அர்த்தமற்ற ஆரவாரங்களாக அமையாமல் பொருளுடையதாக இருக்க ஆண்டவர் ஒரு அறைகூவலை நமக்கு விடுக்கின்றார். வெறுமனே அத்திமர இலைகளின் சலசலப்பைப் போல இன்று வழிபாடுகள் அனைத்தும் பொருளற்றதாய் மாறிப் போயின. வாழ்வோடு இணையாத அத்தனை வழிபாடுகளும் அர்த்தமற்றதே. அத்தகு வழிபாடுகளை ஆண்டவர் ஒருபோதும் அங்கீகரிப்பதும் இல்லை. அர்த்தமற்ற வழிபாடுகள் அனைத்தும் ஆண்டவருக்கு எரிச்சலாகவும், இரைச்சலாகவும் அமைகிறது (ஆமோ 5:23). வழிபடுகின்ற ஆலயங்களில் அநீதிகளையும், அநியாயங்களையும் நடப்பித்து அதிகாரத்தையும், ஆணவத்தையும், பணத்தையும், பதவியையும், பெயரையும், புகழையும் தேடி அதையே முதன்மையானதாகக் கருதி பகட்டு வாழ்வு வாழ்வோர்க்கு அத்திமரம் ஓர் எச்சரிப்பாக அமைகிறது.

### ***2. பற்றுறுதி வாழ்வுக்குப் பாடமான மரம் :*** (மத் 21:21)

பட்டுப் போன அத்தி மரம் சீடர்களுடைய பற்றுறுதி வாழ்வுக்கு பாடமாக அமைந்தது. பட்ட அத்தி மரத்தைக் கண்ட சீடர்கள் வியப்புற்று இயேசு கிறிஸ்துவிடம் வினவினர். “இந்த அத்திமரம் எப்படி உடனே பட்டுப்போயிற்று?” அத்திமரத்தைக் கண்டு ஆச்சரியமடைந்த சீடர்களுக்கு இறைவேண்டலின் அழுத்தத்தையும், பற்றுறுதியின் ஆழத்தையும் குறித்து தகுந்த பாடம் ஒன்றைக் கற்றுக் கொடுக்கின்றார். பற்றுறுதி என்பது கடவுளோடு நம்மை ஒன்றுபடுத்தி வாழ்வில் அவருக்கு முதன்மையான இடமளிப்பது என்பதை உணரச் செய்கின்றார். இயேசுகிறிஸ்து சீடர்களிடம்

மறுமொழியாக, நீங்கள் ஐயம் எதுவுமின்றி நம்பிக்கையுடன் இருந்தால் அத்தி மரத்துக்கு நான் செய்ததை நீங்களும் செய்வீர்கள் (வ. 21) என்கிறார். தூய பவுலாரும், “கடவுளின் வாக்குறுதியைப் பற்றி ஐயப்படவே இல்லை...” கடவுளின் வாக்குறுதியை நம்பினோர்க்கு மட்டும் அது பயனைத் தருகிறது என்பது தூயப் பவுலாரின் சான்று. இயேசுகிறிஸ்துவும் தமது சீடர்களுக்குப் பற்றுறுதியின் ஆழத்தை அழுத்தமாகச் சொல்லிக் கொடுக்கின்றார். ஆண்டவரில் கொள்ளுகின்ற பற்றுமை வாழ்வில் எள்ளளவேனும் ஐயம் கொள்ளக் கூடாது. கண்ணெதிரே அத்தி மரம் பட்டதும் வியப்புற்று நின்ற சீடர்களிடம் ஐயம் அகன்ற ஆழமான பற்றுறுதி இருந்தால் போதும் அதிசயிக்கத்தக்க அருஞ்செயல்களை உங்களாலும் நிகழச் செய்ய முடியுமெனச் சொல்லி அத்திமரத்தைச் சீடர்களின் பற்றுறுதி வாழ்வுக்குப் பாடமாக்கினார் (மத் 21:22).

நமது வாழ்விலும் நாம் வைத்துக்கொள்ளும் பகட்டு ஆரவாரங்கள் பயனற்றவை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். பற்றுறுதி வாழ்வில் பகட்டான ஆரவாரங்களுக்கு இடமில்லை. இவை பற்றுறுதியைப் அர்த்தமற்றதாக்கிவிடும். நம்மில் உள்ள அர்த்தமற்ற ஆரவாரங்களைக் களைந்துவிட்டு, பொருள் நிறைந்த பற்றுறுதி வாழ்வுக்கான கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து, அவருக்குச் சான்றுகளாவோம்.

அருள்திரு. R. **ஜெஸ்பேர்ள் ராபின்**

07-04-2020

தூய வாரம் - செவ்வாய்

## அநீதத்தின் ஆரவாரம்

திருமறைப்பாடம் : மாற் 12:13-34

**"...ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள்".** (மாற் 12:15)

அநீதம் என்ற வார்த்தைக்கு 'தன்னல விருப்பு' என்பது பொருளாகும் இந்த அநீதத்தின் ஆரவாரத்தை உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்த்த இறைச் செம்மறியாம் இயேசுவும் தம் சிலுவைப் பாடுகளுக்கு முன் பல்நோக்கு கேள்விகளால் சந்தித்தார் என்பதை மாற்கு நற்செய்தியாளர் பதிவு செய்கிறார். அநீதத்தின் ஆரவாரத்திற்கான காரணம் பொறாமையாகும். இயேசுவை பகைத்தவர்கள் பார்வையில் இயேசு பிறப்பால் ஒரு சாதாரண தச்சனின் மகன். ஆனால் மக்களால் உயர்நிலையில் வைத்து போற்றப்பட்டவர். எனவே பொறாமை கொண்டனர். ஆகவே, தன்னல விருப்புமிக்க சமயவாதிகள் பொதுநலத்தோடு கேள்வி கேட்பதுபோல் பாவனை புரிந்தனர். எப்படியேனும் இயேசுவை அரசியல் எதிரியாக்கி அரசிடம் ஒப்படைத்து கொலை தண்டனைக்குரியவர் ஆக்கிவிட வேண்டும் என துடித்தனர். அதன் வெளிப்பாடே அநீதத்தின் ஆரவாரம்.

மூன்று பிரிவினரின் மூன்றுவித அநீதத்தின் ஆரவாரத்தை மாற்கு 12:13-34 வரையுள்ள திருமறை பகுதி வழியாக தியானிப்போம்.

### *1. சிக்கவைக்கும் ஆரவாரம்* : (மாற்கு 12:13-17)

"பரிசேயர் இயேசுவை அவருடைய பேச்சில் சிக்க வைக்க ஏரோதியர் சிலரை அவரிடம் அனுப்பி வைத்தனர்". 'எதிராளிக்கு எதிராளி கூட்டாளி' என்று சொல்லுவார்கள். அதற்கிணங்க எதிரெதிர் துருவங்களான ரோம ராஜ்யத்தை வெறுத்த பரிசேயர்களும், ஏரோதை ஆதரித்த ஏரோதியர்களும் இணைந்து இயேசுவை சிக்கவைக்க துடித்தனர். அதற்காக இரண்டு கேள்விகளை எழுப்பினர். சீசருக்கு வரி செலுத்துவது முறையா, இல்லையா? நாங்கள் செலுத்தவா, வேண்டாமா?

John Miller என்னும் உளவியலாளர் கருத்துப்படி ஆம், இல்லை என்று விடையளிக்கும் கேள்விதான் பெரிய கேள்விகளை விட மிகவும் கடினமானது. இங்கும் இந்த ஏரோதியர் இப்படிப்பட்ட கேள்வியைத்தான் இயேசுவிடம் கேட்டனர்.

சீசருக்கு வரி செலுத்துவது முறைதான் என்று சொன்னால், ஏற்கனவே உரோமை காலனி ஆதிக்கத்தால் பாதிக்கப்பட்டிருந்த மக்கள் மனமுடைவார்கள். மாறாக சீசருக்கு வரி செலுத்துவது முறையல்ல என்று

சொன்னால் இயேசுவை ரோம அரசிற்கு எதிராய் மக்களை திசைதிருப்புகிறான் என்று சொல்லி விடுவார்கள்.

இப்போது இயேசு தம்மை சிக்கவைக்க ஆரவாரித்து நின்ற கூட்டத்திற்கு என்ன பதில் கூற போகிறார்? அவர்களுடைய தீய நோக்கத்தை அறிந்த இயேசு அவர்களை நோக்கி வெளிவேடக்காரரே! ஏன் என்னை சோதிக்கிறீர்கள்? வரி கொடுப்பதற்காக பயன்படுத்தும் நாணயம் ஒன்றை எனக்கு காட்டுங்கள் என்றார். அவர்கள் தெனாரியத்தை அவரிடம் கொண்டு வந்தார்கள். அந்த நாணயத்தின் ஒரு புறம் ரோம சீசருடைய உருவமும் மறுபுறம் யூதேயா அகுஸ்து சீசருக்குக் கீழ்ப்பட்டது என்னும் எழுத்துக்களும் பொறிக்கப்பட்டிருந்தன. இந்த உருவமும் மேலெழுத்தும் யாருடையவை என்று இயேசு கேட்டார். அவர்கள் இவை சீசருக்குரியவை என்று சொன்னார்கள் உடனே இயேசு தம்மை சிக்கவைக்க துடித்த கூட்டத்திடம் சீசருடையதை சீசருக்கும். கடவுளுக்குரியதை கடவுளுக்கும் கொடுங்கள் என்றார். இதைக் கேட்டவுடனே ஆரவாரித்து நின்ற கூட்டம் பேசுவதறியாமல் போய் விட்டார்கள்.

***2. சந்தேகத்தின் ஆரவாரம்*** : (மாற்கு 12:18)

"உயிர்ர்தெழுதல் இல்லை என்னும் கருத்துடைய சதுசேயர் இயேசுவை அணுகி.....".

உயிர்தெழுதலே இல்லை என்ற கொள்கை கொண்டவர்கள் தான் சதுசேயர்கள். ஆனால் தாங்கள் பின்பற்றும் சாதோக்கின் கொள்கைப்படியில்லாமல், உயிர்த்தெழுதலை நம்புகிறவர்கள் போல நடித்து ஒரு சந்தேகத்தை விவிலியம் சார்ந்து இயேசுவுக்கு முன் வைக்கிறார்கள். பிரபல ஆங்கில இலக்கியவாதியான Shakesspeare கூறும்போது 'உலகம் என்பது ஒரு நாடக மேடை, அதில் மனிதர்களெல்லாரும் நடித்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று கூறுவார். உயிர்த்தெழுதலில் நம்பிக்கையில்லாத இந்த சதுசேயர்கள் இயேசுவிடம் வந்து, போதகரே ஒருவர் மகப்பேறின்றி இறந்து போனால் அவருடைய மனைவியை அவர் சகோதரர் மனைவியாக ஏற்றுக்கொண்டு தன் சகோதரருக்கு சந்தானம் உண்டாக்க வேண்டும் என்று மோசே உரைத்திருக்கிறார் அல்லவா? எங்களுக்குள்ளே சகோதரர் ஏழு பேர் இருந்தார்கள். மூத்தவன் திருமணம் செய்து மகப்பேறின்று மரித்ததினால் அவர் தம் மனைவியை அவர் சகோதரர் திருமணம் செய்ய வேண்டியதாயிற்று. அப்படியே இரண்டாம், மூன்றாம் என ஏழு சகோதரர் வரை நடந்தது. பின்பு அப்பெண்ணும் இறந்தாள். உயிர்தெழுதலில் அவள் யாருடைய மனைவியாயிருப்பாள்? என்ற சந்தேகமான கேள்வியை முன் வைத்தனர்.

இயேசுவோ அவர்கள் உணர்வுகளை அறிந்து உங்களுக்கு மறைநூலும் தெரியாது. தேவனுடைய வல்லமையும் தெரியாது. இதனால்

தான் தவறான கருத்து கொண்டிருக்கிறீர்கள் என்று அவர்கள் அறியாமையை அறிவுறுத்தி, உயிர்த்தெழுபவர்கள் விண்தூதரைப்போல் இருப்பார்கள் என பதிலுரைத்து சந்தேகத்தின் ஆரவாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து வாயடைத்தார்.

### *3. சாதுரியமான ஆரவாரம்* : (மாற்கு 12:28)

'அவர்கள் வாதாடிக் கொண்டிருப்பதை கேட்டு கொண்டிருந்த மறைநூல் அறிஞருள் ஒருவன், இயேசு அவர்களுக்கு நன்கு பதில் கூறிக்கொண்டிருந்ததைக் கண்டு அவரை அனுகி வந்து அனைத்திலும் முதன்மையான கட்டளை எது என்று கேட்டார்''.

மறைநூல் அறிஞருள் ஒருவர் இயேசுவின் விடையளிக்கும் திறனைக் கண்டு வியந்து, தன்னிடமிருந்த கேள்வியையும் கேட்கிறார். அந்த கேள்வி எதுவென்றால், அனைத்திலும் முதன்மையான கட்டளை எது? என்பதாகும். அதற்கு இயேசு உன் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு ஆற்றலோடும், உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக என்பது முதன்மையாளர் உன் மீது அடுத்திருப்பவர் மீதும் நீ அன்பு கூருவதுபோல் உனக்கு அன்பு கூருவாயாக என்பது இரண்டாவது கட்டளை. இவற்றை விட மேலான கட்டளை வேறு எதுவும் இல்லை (மாற்கு 12:28-34) என்றார்.

உடனே இந்த மறைநூல் அறிஞர் சரிதான் ஆண்டவரே, நீர் சொன்னது உண்மையென்று ஒத்துக்கொண்டார். இதைக் கேட்ட இயேசுவோ நீ இறையரசுக்கு தூரமானவன் அல்ல என்று பதிலளித்தார்.

ஒருமுறை ஒரு பெரிய தத்துவ ஞானியிடம் அவருடைய சீஷர்களில் ஒருவன் குருவே நான் ஞானியாக என்ன செய்ய வேண்டும்? என வினவினார். அதற்கு அந்த தத்துவ ஞானி சற்று யோசித்துவிட்டு கூறினாராம் எவனொருவன் தன்னிடமுள்ள தவறு சுட்டிக்காட்டப்படும்போது யார்? எந்த நேரம்? சுற்றிலும் யாரெல்லாம் இருக்கிறார்களென்று பாராமல் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ளுகிறானோ அவனே உண்மையான ஞானி என்றார்.

இங்கும் தன் கேள்விக்கு தெளிவான விடை கிடைத்தவுடன் மறைநூல் அறிஞர் சாதுரியமாய் ஏற்றுக்கொண்டார் இறையரசுக்கு உகந்தவராவார்.

அன்பர்களே! பச்சைமரத்துக்கே இப்பாடு என்றால், பட்டமரம்? ஆகவே பட்டமரமாகிய நாம் அநீதத்தின் ஆரவாரம் புரண்டுவரும்போது ஆரவாரத்தையும் தாண்டி வெற்றிகொண்ட இயேசுவை அண்டிக்கொள்வோம். சுகவாழ்வைப் பெறுவோம்.

அருள்திரு. S. **ஏசு ரென்னிபெல்**

08-04-2020 **தூயவாரம் - புதன்**

## அர்ப்பணிப்புக்கான அங்கீகாரம்

திருமறைப்பாடம் : மாற் 14:3-9

**"உலகம் முழுவதும் எங்கெல்லாம் நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம் இவர் செய்ததும் எடுத்துக்கூறப்படும்..."** (மாற் 14:9).

யூதர்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்டதை நினைவு கூர ஒவ்வொர் ஆண்டும் பஸ்கா விழாவை எருசலேமில் கொண்டாடினர். பொதுவாக 50,000 மக்கள் தொகை, பஸ்கா விழா நாட்களில் சுமார் 2,50,000 என்ற அளவுக்கு அதிகரித்து வருவது வழக்கம். ஏனெனில் விழா கொண்டாட ஏராளமான யூதர்கள் பயணப்பட்டு எருசலேமிற்கு வருவார்கள். பஸ்கா விழாவுக்கு சில நாட்களுக்கு முன்பு இயேசுவும் எருசலேமிற்கு வந்தார், தொழுநோயாளியாய் இருந்து நலம்பெற்ற பெத்தானியா ஊரைச் சார்ந்த சீமோன் வீட்டில் தங்கி இருந்தார். இன்றைய திருமறைப்பகுதியில் சொல்லப்பட்டுள்ள பெண்மணி ஒருவரால் நறுமணத் தைலம் பூசப்படும் சிறப்பான நிகழ்வு நிறைவேறுகிறது. இந்த நிகழ்வு ஏனைய மூன்று நற்செய்தி நூல்களிலும் சொல்லப்பட்டுள்ளது (மத் 26:1-16; லூக் 7:36-50; யோவா 12:1-8). நான்கு நற்செய்தி நூல்களிலும் சொல்லப்பட்டுள்ள நிகழ்வின் அடிப்படையில், இந்தச் செயலைச் செய்த பெண்மணி பாவி என்று எல்லோராலும் அழைக்கப்பட (லூக் 7:36), யோவான் நூலில் மார்த்தாளுக்கும் லாசருவுக்கும் சகோதரியான மரியாள் ஆவாள் (யோ 11:1-2; 12:2-3). இந்நிகழ்வு மரியாளின் உண்மையான அர்பணிப்பையும், இயேசுகிறிஸ்து எவ்வாறு அதை அங்கீகரிக்கிறார் என்பதையும், நமக்குக் கற்றுத் தருகிறது.

### *1. வார்த்தைகளில்லாத அர்ப்பணிப்பு* : (மாற் 14:3)

இயேசு சீமோன் வீட்டில் இருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்ட மரியாள், தன் வாழ்வில் விலை மதிப்புள்ள சொத்தாகக் கருதப்பட்ட இலாமிச்சை நறுமணத் தைலம் கொண்ட படிகச் சிமிழை எடுத்துக் கொண்டு, இயேசுவிடம் தன்னை அர்ப்பணிக்க வருகிறாள். இந்த அர்ப்பணிப்பு நிகழ்வில் மரியாள் சூழ்நிலை பற்றிக் கவலைப்படவில்லை. சீமோன் மற்றும் அங்கே நிற்கும் மனிதர்கள் தன்னைப் பாவி என்றோ, ஒதுக்கப்பட்டவள் என்றோ சொல்லுவார்கள் என்று வருத்தப்படவில்லை. அவளுடைய முழுமையான எண்ணமும் இயேசுவிடம் இருந்தது. என்னை

நேசிப்பவர், என்னை மீட்பவர், என்னை காண்கிறவர், என்னை அறிகிறவர், என்னை விசாரிக்கிறவர், என்னைத் தேற்றுகிறவர் இங்கே இருக்கிறார். நான் அவரைக் காணவேண்டும், அவரிடம் என்னை அர்ப்பணிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இயேசுவிடம் வந்தாள். சீமோன் வீட்டில் இயேசுவைக் கண்டாள், அவளுடைய வாழ்வின் பாதுகாப்புக்கானதும், விலையேறப் பெற்றதுமான இலாமிச்சை நறுமண தைலத்தை இயேசுவின் சிரசில் முழுவதும் ஊற்றிப் போட்டாள், அதோடு தன் தலைமையிரைக் கொண்டு அவருடைய பாதத்தைத் துடைத்தாள் (யோவா 12:3).

மரியாள் யாரும் தன்னிடம் சொல்லி அல்ல, தானாகவே தான் இயேசுவிடம் கொண்ட அன்பையும், மரியாதையையும், நன்றியையும் ஏதோ வார்த்தைகளினால் அல்ல, தன்னுடைய முழுமையான அர்ப்பணத்தால் வெளிப்படுத்தினாள். இது ஓர் உணர்வு பூர்வமான அர்ப்பணம், உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்பட்ட அர்ப்பணம். ஆம்! அர்ப்பணம் என்பது வார்த்தைகளினால் ஆனது அல்ல, அது நம்முடைய செயல்களினாலே வெளிப்பட வேண்டும். ஆண்டவர் நமக்கு திறமைகள், உடமைகள், தந்திருக்கிறார் அவற்றை நமக்கென்றே வைத்துக் கொண்டோமானால் யாருக்கும் எந்த பயனும் இராது. இறுதியில் நமக்கும் பயன் தராது. ஏனெனில் நாம் இருக்கும்போது எதையும் கூட எடுத்துச் செல்ல முடியாது. இயேசுவின் பாதத்தில் நம்மையும், நம் திறமைகளையும், உடைமைகளையும் உண்மையாய் அர்ப்பணிக்கும்போது மட்டுமே அவர் அவற்றை எடுத்து கடவுளுடைய மாட்சிக்காகவும், பிறரின் நன்மைக்காகவும் பயன்படுத்த முடியும்.

### *2. வல்லவரின் அங்கீகாரம்* : (மாற் 14:4-9)

அந்தக் கூட்டத்தில் இருந்த சிலர், இந்த நறுமணத் தைலத்தை வீணாக்கிவிட்டதாக கூறி மரியாளைக் கடிந்து கொண்டனர். வேறு சிலர் இந்த நறுமணத் தைலத்தை அதிக விலைக்கு விற்று ஏழைகளுக்கு கொடுத்திருக்கலாமே என்று குறை கூறினார். ஆனால் இயேசுவைப் பெறுத்த வரை மரியாள் செய்த இந்தச் செயல், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. "இவர் தம்மால் இயன்றதைச் செய்தார் என் அடக்கத்திற்கே இவர் முன்னதாகவே என் உடலுக்குத் தைலம் பூசிவிட்டார்".என இதை இயேசு முக்கியத்துவப்படுத்துகிறார். மரணத்தண்டனை விதிக்கப்பட்டு கொல்லப்படும் குற்றவாளிகள் தவிர மற்றவர்களின் உடல்களை யூதர்கள் எப்பொழுதும் நறுமணப் பொருட்களையிட்டு ஆயத்தப்படுத்துவது வழக்கம். ஆனால் தாம் ஒரு குற்றவாளி போல கொல்லப்படுவோம். அதனால் தமது உடலுக்கு தக்க முறையில் நறுமண பொருட்கள் இடப்படுவது கடினம்

என்பது இயேசுவுக்குத் தெரியும். மரியாள் இயேசுவுக்கு முன்கூட்டியே அதனை செய்தாள் அவள் என்னச் செய்தாள் என்பதை இயேசு அறிந்திருந்தார். எனவே எங்கெல்லாம் நற்செய்தி அறிவிக்கப்படுமோ, அங்கெல்லாம் மரியாள் செய்தவை சொல்லப்படும் என்று அவருடைய வார்த்தைகளில்லாத உண்மையான அர்ப்பணத்தை வல்லவராகிய இயேசுகிறிஸ்து ஏற்றுக்கொண்டு வாக்குத்தத்தம் செய்தார்.

ஆம்! நாம் நம்மையும் நமது திறமைகளையும், உடமைகளையும் உண்மையாய் இயேசுவுக்கு அர்ப்பணிக்கும் போது, பலர் நம்மைப் பார்த்து நாம் நமது வாழ்க்கையையும், உடமைகளையும் வீணாக்கிப் போருவதாக கூறுவார்கள். ஆனால் நாம் இயேசுவுக்காய் உண்மையாய் செய்வது எதுவும் ஒருபோதும் வீண் ஆகாது.

இலாமிச்சை நறுமண படிகச் சிமிழ் உடைக்கப்பட்ட போது அந்த வீடு முழுவதும் நறுமணத்தினால் நிறைந்தது. அந்த தைலம் சிமிழுக்குள் இருந்த வரை அதன் நறுமணம் வெளிப்படவில்லை. நாம் உயர்வாக கருதுபவை கடவுளுக்காக அர்ப்பணிக்கும் போது, அதன் மாட்சி வெளிப்படும். நம்முடைய வாழ்வைப்பற்றி கவலைப்படாமல் கடவுளுக்காக எதையும் செய்யும் நல்உள்ளம் இருக்க வேண்டும். எஞ்சி இருப்பதையல்ல; நம்மையும், நம்முடைய முதன்மையானவைகளையும் கடவுளுக்கு அர்ப்பணிக்க வேண்டும். அது தான் உண்மையான அர்ப்பணிப்புக்கான அடையாளம். அது வல்லவரான ஆண்டவருக்கு நறுமனமாகவும், அவரின் அங்கீகரிப்புக்கு ஏற்றதாயும் அமைகிறது.

அருள்திரு. T. **லிபின்ராஜ்**

09-04-2020 **வியாகுல வியாழன்**

# கிறிஸ்து : வாழ்வருளும் உணவு

**CHRIST : THE LIFE - GIVING BREAD**

விப 12:12-20 1 கொரி 11:23-29
திபா 116 யோவா 6:47-58

**"வாழ்வுதரும் உணவு நானே".** (யோவா 6:48)

கிறிஸ்தவ குடும்பங்களில் மழலையர் பேசத்துவங்கம்போது பெரும்பாலும் அவரது அன்னையர் முதன் முதலில் ஜீவ அப்பம் நானே எனும் திருவசனத்தை கற்று கொடுப்பர் மிகச் சிறிய கருத்தாழம் மிக்க இத்திருமறை வசனம் ஆன்மீக வாழ்வின் உணவாய் அமைந்துள்ளது.

இதனை, இத்தாலிய இறையியலாளர் புனித தாமஸ் அக்குவினாஸ் "ஆயன் தன் மந்தைக்கு உணவளிப்பது போல கிறிஸ்து தன் சொந்த உடலாலும், இரத்தத்தாலும் தன் விசுவாசிகளுக்கு ஆன்ம உணவளிக்கிறார்." என்கிறார்.

உயிர் வாழ உணவும், தண்ணீரும் மிக முக்கியமானது. அதுபோல நமது ஆன்மீக வாழ்வு புத்துயிர் பெற கிறிஸ்து இயேசுவின் திருவுடலும் திருரத்தமும் இன்றியமையாதது. இறைவன் அருளிய இவ்வரிய, உயர்ந்த உணவின் சிறப்பினைச் சிந்திப்போம்.

## *1. இறைவனிடமிருந்து இறங்கி வந்த உணவு :*

"விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே," (யோவா 6:41).

இயேசுவைப் பின் தொடர்ந்தவர்களில் சிலர் உணவுக்காக அவரைப் பின்பற்றினர் அப்போது அவர் அழிந்துபோகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலைவாழ்வு தரும் அழியா உணவுக்காக உழையுங்கள். அவ்வுணவினை மானுடமகன் உங்களுக்கு கொடுப்பார் (யோவா 6:27) என்று கூறினார்.

ஆனால் இதனை ஏற்றுக்கொள்ளாத மக்கள் எங்கள் முன்னோர்கள் பாலை நிலத்தில் மன்னாவை உண்டனர். அவர் உண்பதற்கு மோசே வானிலிருந்து உணவு அருளினார் என்றார்கள் (யோவா 6:31). இயேசு அவர்களுக்கு மறுமொழியாக வானிலிருந்து உங்களுக்கு உண்மையாக உணவு தருகிறவர் கடவுளாகிய ஆண்டவர். அவர் தரும் உணவு வானிலிருந்து இறங்கி வந்து உலகிற்கு வாழ்வு தருகிறது

(யோவா 6:32,33) என்றார். உடனடியாக இந்த உணவு தங்களுக்கு வேண்டுமென கேட்டார்கள். அப்போது இயேசு அவர்களிடம், வாழ்வுதரும் உணவும் (யோவா 6:35) விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவும் நானே (யோவா 6:41) என்றார். ஆனால் யூதர்கள் அவருக்கு எதிராக முணுமுணுத்தார்கள். இச்சூழலில் இயேசு அவரிடம் நீங்கள் முணுமுணுக்க வேண்டாம், என்னை நம்புவோர் நிலைவாழ்வினை பெறமுடியும் வாழ்வு தரும் உணவு நானே என மிகவும் அழுத்தமாக கூறினார் (யோவா 6:47,48).

மேலும் இயேசு குறிப்பிடும்போது, பாலை நிலத்தில் உண்ட முன்னோர் மன்னாவை உண்டபோதிலும் இறந்தனர். ஆனால் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவாகிய தமது உடலையும் உதிரத்தையும் உட்கொள்கிறவர்கள் நிலைத்து வாழமுடியும். அனைவரும் நிலைத்து வாழ விண்ணிலிருந்து இறங்கி வந்த உணவு தான் என்பதை தெளிவுபடுத்தினார். இயேசு கிறிஸ்துவின் பிறப்பினைக் குறித்து காபிரியேல் தூதன் மரியாளிடம் முன்னறித்ததும் (லூத் 1:35). "இதோ ஒரு கன்னி கருவுற்று ஓர் ஆண்மகனை பெற்றெடுப்பார் அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்" (மத் 2:22,23) என்ற இறைவாக்கின் நிறைவேறுதலும் இயேசுகிறிஸ்து இறைவனிடமிருந்து இறங்கி வந்த உணவு என்பதை உறுதிப்படுத்துகிறது.

திருவிருந்தின் வாயிலாய் கிறிஸ்துவின் உடலையும் உதிரத்தினையும் உட்கொள்ளும் அனைவரும் எனக்காய் விண்ணிலிருந்து இறங்கி வந்த உணவினை உட்கொள்கிறேன் எனும் ஆன்மீக அனுபவத்தினை சொந்தமாக்கிட வேண்டும்.

## *2. இறையுடன் இணைக்கும் உணவு :*

"எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர். நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்" (யோவா 6:56). இந்த இணைவு கிறிஸ்துவின் உடலையும் உதிரத்தையும் உட்கொள்வதினால் அனைவருக்கும் கிடைக்கிறது.

இறைவனோடு மானுடர் இணைந்திருத்தல் அவசியமானது. கொடி திராட்சைச் செடியோடு இணைந்திருந்தாலன்றி கனிதர இயலாது. அதுபோல் மானிடரும் இறைவனோடு இணைந்திருந்தாலன்றி கனிதர இயலாது. "நானே திராட்சை செடி, நீங்கள் அதன் கொடிகள். ஒருவன் என்னுடனும், நான் அவருடனும் இருந்தால் அவர் மிகுந்த கனி தருவார்......என்னோடு இணைந்து இராதவர் கொடியைப்போல தறித்து எறியப்பட்டு உலர்ந்து போவார்," (யோவா 15:5,6).

பிறப்பால் பிற இனத்தவராய், விருத்தசேதனமற்றவராய், இஸ்ரவேல் சமுதாயத்துக்கு புறம்பானவர்களாய், உடன்படிக்கைக்கு அன்னியர்களாய், எதிர் நோக்கு இல்லாதவர்களாய் தொலைவில் கிடந்த மானுடரை இயேசுவின் உதிரம் தம்முடன் இணைந்திருக்கிறது என்று எபேசியர் திருமுகம் விளம்புகிறது. " ஒரு காலத்தில் தொலைவில் இருந்த நீங்கள் இப்பொழுது இயேசு கிறிஸ்துவோடு இணைந்து அவரது இரத்தத்தின் மூலம் அருகில் அருகில் கொண்டுவரப்பட்டீர்கள்" (எபே 2:13).

இறைவனோடு மனிதர்களை இணைத்ததின் நீட்சியாய் பகைமைகளை தகர்த்து அமைதிக்காய் மனிதர்களையும் மனிதர்களோடு இணைத்திருக்கிறது. யூதர் பிற இனத்தவர் என பிரிந்து கிடந்தவரை ஒருடலாக்கியது. "தாமே துன்புற்று பகைமையை அழித்தார். சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கி கடவுளோடு ஒப்புரவாக்கி இப்படிச் செய்தார்" (எபே 2:16).

இயேசுகிறிஸ்துவின் உடைக்கப்பட்ட உடலையும் சிந்தப்பட்ட இரத்தத்தையும் உட்கொண்டோர் அவரோடு ஒன்றாகின்றனர். கிறிஸ்துவும் அவர்களோடு ஒன்றாயிருக்கிறார். இத்தகைய ஒன்றிப்பு மனித வாழ்வு அவரில் நிலைத்திருக்க காரணமாகிறது. இதனை "அப்பம் ஒன்றே, ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம்" (1 கொரி 10:17) என்னும் திருவாக்கியம் உறுதியாக்குகிறது.

### *3. இறவாமை (சாவாமை) தரும் உணவு :*

"உண்பவரை இறவாமல் இருக்கச் செய்யும் உணவு விண்ணகத்தில் இருந்து இறங்கி வந்த இந்த உணவே" (யோவா 6:50).

".....இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார்......" (யோவா 6:51).

விண்ணிலிருந்து இறங்கி வந்த வாழ்வுதரும் உணவு நானே இந்த உணவை எவராது உண்டால் அவர் என்றுமே வாழ்வார் என்ற இயேசுவின் வார்த்தையினை யூதர்கள் ஏற்றுக்கொள்ளாமல் நாம் உண்பதற்கு இவர் தமது சதையை எப்படி கொடுக்க இயலும் என வாக்குவாதம் செய்தனர். இயேசு அவர்களிடம் உறுதியாக வாழ்தரும் உணவாகிய மானிடகனின் சதையினை உண்டு அவருடைய இரத்தத்தை குடித்தாலொழிய நீங்கள் வாழ்வடைய முடியாது என்றார் (யோவா 6:53). இயேசுகிறிஸ்துவாகிய உணவு மனுக்குலத்திற்கு நிலையான வாழ்வினைத்தரும் உணவு. இதனை உண்பவர் பசியடையார். குடிப்பவர் தாகமடையார். அதோடு "எனது

சதையை உண்டு எனது இரத்தத்தை குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர் நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்” என்கிறார் (யோவா 6:56). கிறிஸ்துவோடு நாம் இணைந்து வாழ்வதும், அவர் நம்மோடிருந்து நம்மை வழிநடத்துவதும் அழிவில்லாத நிலையான வாழ்வாகும்.

விண்ணகத்திலிருந்து இறங்கிவந்து சாவாமை அருளும் உணவாகிய இறைவிருந்து உண்போரை இறந்துபோகும் வாழ்விற்கல்ல, என்றுமே இறவாமல் வாழும் வாழ்வினைத் தருகிறது (யோவா 6:58). திருவிருந்தின் மூலமாக நாம் இவ்வுறவிலும், உணவிலும் பங்கு பெறும்போது என்றுமே அழிவில்லாத வாழ்வுக்காக நம்மை ஆயத்தமாக்குகிறோம். வாழ்வுதரும் உணவு நானே என்றவர். நிலையில்லா வாழ்வுக்கு, ஆட்டுகுட்டியானவரின் திருமணம் விருந்துக்கு அழைத்து செல்கிறார். ஆட்டுகுட்டியானவரின் திருமணவிருந்தில் பங்கு பெறுகிறவர்கள் பேறுபெற்றவர்கள்.

கடவுள் தம்மை உணவாகத் தந்து, தம்முடன் அனைவரையும் இணைத்து நிலைவாழ்வு நல்குகின்றார். இயேசுவின் உடலையும், உதிரத்தையும் தூய உள்ளத்துடன் உள்வாங்கி இச்சமுதாயத்தில் வாழ்விழந்து நிற்கும் மக்களுக்கு இயேசு தரும் வாழ்வை பறைசாற்றுவோம். இயேசுவின் உணர்வுடன் செயலாற்றுவோம்.

அருள்திரு. T. **சுதீர்**

10-04-2020

**புனித வெள்ளி**

## சிலுவை : தற்கையளிக்கும் அன்பு

**CROSS : SELF-GIVING LOVE**

எசா 52:13-53:12 1பேது 2:21-25
திபா 22 மாற் 15:22-41

**"...அவர் தம்மையே சாவுக்குக் கையளித்தார்...".** (எசா 53:12)

மேலை நாட்டு கத்தோக்கத் திருச்சபைகள் மற்றும் சில பிற திருச்சபைகள் ஒவ்வொரு ஆண்டும் "புனிதச் சிலுவையின் விருந்து" (feast of holy cross) எனும் நிகழ்வைக் கடைப்பிடிக்கின்றன. இந்த விருந்துடன் எல்லாக் கிறிஸ்தவர்களும் இயேசுவின் வாழ்வை, குறிப்பாக, சிலுவையில் தம்மைக் கொடுத்ததை நினைவில் கொள்கின்றனர். ஆகவே இந்த விருந்தை கடைபிடிப்பதால் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு நிலை வாழ்வு கிடைக்கும் என்று ஆழமாக நம்புகிறார்கள். இன்று நாமும் இதே மனநிலையுடன் இயேசு சிலுவையில் மொழிந்த திருவார்த்தைகளை சிந்திக்க காத்திருக்கிறோம்.

ஒரு காலத்தில் சிலுவையும், சிலுவைச் சாவும் இழிவாக பார்க்கப்பட்டன. வாழ்வில் எந்நிலையிலும் இப்படிப்பட்ட சாவு வரவே கூடாது என்பதுதான் அனைவரின் வேண்டுதலாக இருந்தது. காரணம் சிலுவைச் சாவு அத்துணைக் கொடியது. சிலுவை ரோமர்கள் பயன்படுத்தின ஒரு கொலைக்கருவி. சிலுவையில் அறையப்படுகிறவர்கள் வயின் குரூரத்தால் அங்கு நின்றிருக்கும் மக்கள், தண்டனை தந்த ஆட்சியாளர்கள், என தங்களுக்கு தெரிந்த அத்தனை பேரையும் வன்மம் நிறைந்த சொற்களால் சபிப்பர். ரோம தத்துவ அறிஞரான செனக்கா (Senaca) "சிலுவையில் அறையுண்ட அத்துணை மக்களும் தாங்கள் பிறந்த நாளை, தங்கள் தாயை, தன்னை சிலுவையில் அறைந்த மக்களையும் சபிப்பர்" என்று சொல்கிறார்.

மற்றொரு ரோம தத்துவ அறிஞரான சிசரோ "சிலுவையில் தொங்கும் மக்கள் போடுகிற சாபம் அவர்கள் நாவை வெட்டி விடும் அளவிற்கு இழிவாகவும், வன்மம் கொண்டதாகவும், வன்முறையை தூண்டுவதாகவும் இருக்கும்" என்று கூறுகிறார். அந்த அளவுக்கு கொடிய வேதனைப்படுவர். இப்படிப்பட்ட வினையை இயேசுவிடமும்

எதிர்பார்த்தனர். ஆனால், இயேசுவோ எந்த ஓர் இழிவான வார்த்தையையும் பேசவில்லை. மாறாக, அவர் அன்பை பறைசாற்றும் சொற்களையே அவர்களுக்குப் பரிசாகக் கொடுத்தார். சிலுவை மொழிகளின் முதல் மூன்று வார்த்தைகளும் இதைப் பறைசாற்றுகின்றன.

### *1. தற்கையளிக்கும் அன்பு :*

தற்கையளிப்பும் அன்பும் ஒரே நேர்கோட்டில் பயணிப்பவை. இன்னும் சொல்ல போனால் இரண்டு வார்த்தைகளுக்கும் பொருள் ஒன்று தான். தன்னை இன்னொருவருக்காக அளிப்பது தான் அன்பின் வெளிப்பாடு. அதே போன்று உண்மையான அன்பு என்பது தன்னை அளிப்பதில் தான் வெளிப்படும். ஆக, தற்கையளிப்பு இல்லாமல் அன்பும் நிறைவு பெறாது, அன்பு இல்லாமல் தன்னைக் கொடுக்கவும் முடியாது. தற்கையளிக்கும் அன்பு என்பது இழப்பு நோக்காது, இழப்பீடு எதுவும் எண்ணாது, எதிர்பார்ப்பு ஏதும் இல்லாது, தன் விருப்பத்தோடு கொடுப்பது. இதில் தன்னலம் இல்லாது எந்நாளும் பிறர்நலம் ஒன்று தான் உயிர் மூச்சாய் இருக்கும். இந்த அன்பைத் தான் இயேசுவும் சிலுவையில் தம்மையே அளித்து வெளிப்படுத்தினார். புதிய ஏற்பாடு கடவுளின் அன்பை குறிக்க இயேசுவின் சிலுவை இறப்பைத்தான் சுட்டிக்காட்டுகிறது. கிறிஸ்தவம் தோன்றுவதற்கு முக்கிய காரணமான தூய பவுலாரை பொறுத்தமட்டில் அவரது திருப்பணியின் தொடக்கப்புள்ளியும் முடிவுப்புள்ளியும் சிலுவை தான். "சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவையே நாங்கள் பறைசாற்றுகிறோம்" என்பதே அவரது திருப்பணியின் மையம். இப்படி சிலுவையில் வெளிப்படுத்தின அன்பு தான் தற்கையளித்தல் என்பது. இந்த கடவுளின் அன்புக்கு எல்லையில்லை. உலகை காட்டிலும் பரந்து பட்டது.

யோவான் 3:16 சொல்லும் சிந்தனையும் இது தான். கடவுள் இந்த உலகின் மீது கொண்ட அன்பின் அளவு எல்லையில்லாதது அதனால் தான் தம் ஒரே மகனை இவ்வுலகுக்கு தந்தருளி தனது எல்லையில்லா அன்பை வெளிப்படுத்தினார்.

பொதுவாக, அன்பை "உணர்வுரீதியில்" தான் நாம் பார்க்கிறோம். ஆனால், புதிய ஏற்பாட்டில் அன்பு என்பது தற்கையளிப்பில் முற்றுகிறது. காரணம், கடவுளின் அன்புக்கும் பிற அன்புக்கும் பெரிய இடைவெளி உண்டு. இதை அறிந்து கொள்ள வேண்டுமாயின் அவ்வார்த்தையின் ஆதாரத்திற்கே (source) சென்று ஆராய வேண்டும். ஆங்கில சொல்லான Love என்பதற்குக் கிரேக்க மொழியில் நான்கு பதங்களை புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

1. Eros-காதல் அல்லது பாயல் காதல் romantic (or) sexual love
2. Storge- இயல்பான பாசம் அதாவது தாய்க்கு தன் பிள்ளை மீது இருக்கும் இயல்பான அன்பு அது (natural love)
3. phileo நண்பர்களுக்கிடேயே இருக்கும் அன்பு (friendship)
4. Agape-தெய்வீக அன்பு (or) தற்கையளிக்கும் அன்பு divine love (or) self giving love

இங்கு கடைசியாக சுட்டப்பட்டிருக்கும் தற்கையளிக்கும் அன்புக்கு (Agape) சிறப்பு உண்டு. யோவான் 21:15-17 முடிய உள்ள வாசகங்கள் ஆண்டவரின் தற்கையளிக்கும் அன்பு எத்தகையது என்பதை உணர்த்துகிறது. இயேசு நாதர் அன்பு செலுத்துகிறாயா எனும் கேள்வியில் முதல் இரண்டு முறைகளும் "அன்பை" குறிக்க அகாப்பே (Agape) எனும் கிரேக்க சொல்லை பயன்படுத்தியிருப்பார். ஆனால் பேதுருவோ "அன்பு செலுத்துகிறேன்" என்பதற்கு Phileo என்ற பதத்தை பயன்படுத்தினார்.

இப்பகுதியின் சிறப்பே மூன்றாம் முறை கேட்ட கேள்வியில் தான் இருக்கிறது. மூன்றாம் முறையும் அதே "அன்பு செலுத்துகிறாயா" என்று தான் வருகிறது. ஆனால் இந்த முறை ஆண்டவர் பயன்படுத்தியிருக்கும் வார்த்தை Phileo அதாவது "நட்பு" அப்படியென்றால் கடவுள் தான் மனிதரை நேசிப்பது போல் மனிதனும் அதே போல் நேசிக்க வேண்டும் என்று விரும்புகிறார். முதன்மை முக்கியத்துவம் கடவுளுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்பது கடவுளின் எதிர்பார்ப்பு. அப்படி மனிதர் அன்பு செலுத்தாத போது அவர் மனித நிலைக்கு இறங்கி வருகிறார் என்ற ஆச்சர்யமான கருத்து இங்கு கொண்டாடப்பட வேண்டியது. பேதுரு மூன்று முறையும் தன் நிலையிருந்து மாறவேயில்லை. மூன்று முறையும் Phileo என்ற பதத்தை தான் பயன்படுத்துகிறார். அப்படியென்றால் கடவுள் நம் மீது எந்த அளவுக்கு அன்பு செலுத்துகிறார் என்பதை இதிருந்து புரிந்து கொள்ள முடியும்.

இதே செய்தி தான் கடவுளின் மைந்தரான இயேசுவின் பிறப்பிலும், இறப்பிலும் வலுப்பெறுகின்றது. அவர் நம்மீது உயர்ந்த அன்பு கொண்டதினால் அந்த அன்பு குழந்தையாகப் பிறந்தது. அதே உயர்ந்த அன்பின் வெளிப்பாடு தான் இன்று சிலுவையில் தம்முயிரைத் தந்தது. ஆகவே, கடவுளின் அன்பு தன்னிகரில்லாதது; எவற்றாலும் ஈடு செய்ய முடியாதது.

## ***2. துன்பம் ஏற்கும் அன்பு :*** மாற்கு 15:22-42

கிறிஸ்தவ மற்றும் திருமறையின் கண்ணோட்டத்தில் சிலுவை என்பது துன்பத்தையும், இன்னல்களையும் உணர்த்துவது ஆகும். பொதுவாக, துன்பத்தை அல்லது இன்னலை இரண்டு வகையாகப் பிரிப்பர்:

1. Objective suffering (புறநிலை இன்னல்); 2. Subjective suffering (அகநிலை இன்னல்)

Objective suffering எனப்படும் புறநிலைத் துன்பமானது நமக்கு வெளியே நடக்கும் துன்பங்கள் ஆகும். அதாவது வெளியிலிருந்து வருவது எனலாம். வெளி மனிதர்களுக்கு வரும் துன்பங்கள். அதாவது அவர்களது நோய், இறப்பு, பாடுகள் ஆகியவை இவ்வகைத் துன்பத்தில் அடங்கும். இவ்வகை துன்பங்கள் நமக்கு சொல்லித் தரும் பாடம் என்னவென்றால் வாழ்க்கை என்பது சவால்கள் நிறைந்தது. புத்தர் தன் 24 ஆம் வயதில் அரண்மனை வாழ்க்கை வேண்டாம் என்று வெளியே வந்து சாலையில் நடந்து போய்க் கொண்டிருக்கும் போது மூன்று காட்சிகளை கண்டார். முதலாவது, வயது மூப்பின் காரணத்தால் துன்பப்பட்ட ஒரு முதியவர். அடுத்ததாக, கொடும் நோயால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளி, இறுதியாக, ஒர் இறந்த மனிதரை வீதியில் சுமந்து சென்ற காட்சி. இதிலிருந்து வாழ்க்கை என்பது சொகுசானதல்ல, மாறாக, அது சவால்களையும், இன்னல்களையும் கொண்டது என்று புரிந்து கொண்டார்.

Subjective suffering எனப்படும் அகநிலைத் துன்பமானது வெளியில் நடக்கும் துன்ப காட்சிகளைக் கண்டு வாழ்க்கை சவால்கள் கொண்டது என்பதோடு நின்றுவிடாமல், அந்தச் சவால்கள் மற்றும் கண்ட இன்னல்களினால் மனதளவில் துன்பம் கொள்வது ஆகும். அதாவது, சாலையில் விபத்தைக் காண்கிறோம். அந்த விபத்திற்குட்பட்ட மனிதர் இறந்தும் போகிறார். அந்த கணத்தில் நமக்கு அதிர்ச்சியையும், சிறு துன்பத்தையும் தருகிறது. அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் அந்த அதிர்ச்சி காணாமல் போகிறது. இன்னும் சொல்லப்போனால் எது நமக்கு மனதில் வலி தராதோ அது புறநிலைத் துன்பம். எது நமக்கு எப்போதும் உள்ளத்தில் இருந்து வலியைத் தருமோ அது அகநிலைத் துன்பம். மூன்றுத் காட்சிகளை கண்ட புத்தர், வாழ்க்கை சவால்களை கொண்டது என்று அத்தோடு அதை மறந்திருந்தால் அவர் புத்தராகியிருக்க மாட்டார். மாறாக, அந்த காட்சிகள் அவரை மிகவும் பாதித்தன. அந்தத் துன்பங்களை அவரது மனதில் ஆழமான வடுவை ஏற்படுத்தினது. அந்த துன்பங்கள் தனக்கே நேர்ந்த துன்பங்களாகக் கருதி நொந்தார். இதிலிருந்து விடுபட என்ன செய்வது என்ற அவரது தியானத்தின் உச்சமே புத்தர் என்ற நிலைக்கு அவரை உயர்த்தியது.

சிலுவை என்பதும் இப்படி இன்னல்களை கொண்டது. இந்த சிலுவை இயேசுவுக்கு அவரது செயலுக்காக வந்தது அல்ல. மாறாக, உலக மனிதரின் பிழைகளுக்காக வந்தது. அடுத்தவர்களின் பிழைகள் என்றாலும் ஆண்டவருக்கு மிகுந்த வலியை தந்தது. அதனால் துன்பம் மற்றும் இழிவுக்கு மறு உருவமான சிலுவையை தம் சிலுவையாக உணர்ந்து சுமந்தார். இங்கு சிலுவை என்பது வெறும் மரமல்ல, மாறாக, அவர் பட்ட கொடிய இன்னல்களே. நள்ளிரவு கைதுசெய்யப்பட்டது முதல் சிலுவையில் தம் உயிரை மாய்த்தது வரை பட்ட பாடுகள் கொஞ்சமல்ல. விசாரணைக்காக பலமுறை அங்குமிங்குமாக அலைக்கழிக்கப்பட்டு அவரது சொந்த ஆடையைக் களைந்து, செந்நிற ஆடையையும் உடுப்பித்து முள்முடி பின்னி அவரது தலையில் சூட்டி, அதை கோலால் அடித்து, அவர்மீது காறி உமிழ்ந்து அசிங்கப்படுத்தப்பட்டார் (மாற்கு 15:17,19). பின்பு அவரை “யூதரின் அரசே வாழ்க” (வ.18) என்று ஏளனம் செய்து, முழந்தாளிட்டு வணங்குவது போல கேலி செய்து (வ.19) இழிவுப்படுத்தினர். மீண்டும் அந்த செந்நிற ஆடையை கழற்றி சொந்த ஆடையை அணிவித்து அசிங்கப்படுத்தினர் (வ.20). இப்படி இயேசு பட்ட துன்பங்கள் ஒவ்வொன்றும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அளவிற்கு கொடியவைகள். மட்டுமல்ல, சிலுவையில் அறைந்த இடத்தில் அவரது ஆடைகளை குலுக்கல் முறையில் சீட்டு போட்டு பங்கிட்டு (வ. 24), கொடிய குற்றவாளி என்று உலகிற்கு உரைப்பதற்காக அவரது இரண்டு புறத்திலும் கொடிய கள்வர்களை அறைந்து ஆண்டவரை இழிவுப்படுத்தினர் (வ. 27,28). சிலுவையில் தொங்கி எல்லாருடைய பிழைகளையும் ஏற்று சுமந்து கொண்டிருக்கும் போது அனைத்து தரப்பு மக்களும், ஏன் அந்த குற்றவாளிகள் கூட இயேசுவை எப்படி அசிங்கப்படுத்தினார்கள் என்பதை கண்கூடாக காண இயலும்.

ஆக, சிலுவை என்பது வெறும் மரமல்ல. மாறாக, அனுபவிக்கவே நினைக்காத அளவுக்கு உள்ள இன்னல்கள், இழிவுகள், வலிகள் என்பதை அறியமுடிகிறது. இவைகளைத் தாமாக முன்வந்து இயேசுநாதர் ஏற்றுக்கொண்டார். இச்சிலுவையை ஆண்டவர் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையே நம்மீது கொண்ட அன்புதான். இவ் அன்பு தம்மையே கையளிக்கும் அளவுக்குத் தூண்டியது. நாம் இதனால் வாழ்கிறோம். அன்பை நாமும் கடைப்பிடிப்போம். சிலுவை சுமந்து அவரைப் பின் தொடர்வோம்.

திரு. L. **லோபின் லினேஷ்**

# புதுவாழ்வுக்கான எதிர்நோக்கு

## HOPE FOR THE NEW LIFE

| | |
|---|---|
| தானி 12:1-4 | 1பேது 4:12-19 |
| திபா 4 | மத் 27:62-66 |

**“...கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் வேளையில் இன்னும் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்கள்”.** (1பேது 4:13)

தவக்காலத்தின் நிறைவுநாள் புனித சனிக்கிழமை என்று அழைக்கப்படுகிறது. இன்றைய திருமறைப் பாடங்கள் புது வாழ்வுக்கான எதிர் நோக்கினை நமக்கு வலியுறுத்துகின்றன. புது இலைகளை துளிர்விட (துளிர்விடும் காலத்தில்) பழைய இலைகளை உதிரச் செய்யும் (இலையுதிர் காலத்தில்) மரத்திற்கு ஒப்பாக புதுவாழ்வினை நமக்கு தரவும், படைப்பனைத்தையும் மீட்கவும் நம்மை பலியாக ஈந்த இயேசுகிறிஸ்து மாட்சிமையோடு உயிர் பெற்று எழும்ப, தம் தந்தையிடம் ஒப்படைத்த உயிர், தம்மில் திரும்ப பெற எதிர் நோக்கி காத்திருக்கிறார். இதன் எதிர்நோக்குகளை சற்றே ஆராயலாம்.

### *1. பாடுகளுக்கு அப்பால் மகிழ்ச்சி* : (1பேது 4:12,13,14)

தூய பேதுரு தனது திருமுகத்தில் “துன்பத்தில் நீங்கள் சோதிக்கப்படும் போது ஏதோ எதிர்பாராதது நேர்ந்து விட்டதென வியக்காதீர்கள்” என்றும், “கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணை பங்கு கொள்ளுகின்றீர்கள் என எண்ணி மகிழுங்கள்” எனக் குறிப்பிடுகின்றார். பேதுரு இந்த திருமுகத்தை பொந்து, கப்பதோக்கியா, கலாத்தியா, ஆசியா மற்றும் பித்தினியா ஆகிய இடங்களிலுள்ள கிறிஸ்தவ சமூகங்களுக்கு (Christian Communities) எழுதுகின்றார் (அப் 2:9,10). அதிலும் குறிப்பாக இந்த 4-ம் அதிகாரத்தில் கிறிஸ்துவை அறிக்கை பண்ணுவதினால் அவமானங்களையும் வசைசொற்களையும் அனுபவிக்கும் கிறிஸ்தவர்களை (1பேது 3:4-16) பாடுகளில் உற்சாகமூட்டி எழுதுகின்றார். மேலும் நீதியுள்ளவராக்கும் கிறிஸ்து நீதியற்றவர்களுக்காக இறந்தார். அவர் ஆவிக்குரிய இயல்புடையோராய் உயிர் பெற்றெழுந்தார். எனவே நீங்களும் கிறிஸ்துவுக்காக பாடு அனுபவித்தால் கடவுளின் தூய ஆவி நம்மீது தங்கி, நம்மை புது வாழ்வுக்காக உயிர்ப்பிக்கும். அந்த எதிர்நோக்கு தொடர்ந்து நன்மைச் செய்ய வேண்டும் என ஆன்மிக உரமூட்டுகிறார்.

இதில் அவர் குறிப்பிட்டு சொல்வது, நீங்கள் துன்பங்களை குறித்து வியக்க வேண்டாம். ஏனென்றால் நாம் பின்பற்றும் கிறிஸ்து இயேசுவையும் துன்புறுத்தினார்கள். அவர் அடைந்த துன்பத்திற்கு நாம் பங்குகொள்ளுகிறபடியால் அதனைக் குறித்து மகிழ்ச்சியாய் இருங்கள். நீங்கள் மகா பேறு பெற்றவர்கள் என்று பாடுகளின் வழியே மகிழ்ச்சியை எதிர்நோக்க வலியுறுத்துகின்றார்.

இந்தியாவில் இன்று சமய, சமூக நல்லிணக்கத்துக்கு ஊறு விளைவிக்கும் செயல்கள் பல அரங்கேறுகின்றன. கிறிஸ்தவம் பல சவால்களை சந்திக்கின்ற போது நாம் கிறிஸ்துவுக்காக இதனை சகித்து வாழவேண்டும். அப்போது கிறிஸ்து நம்முள் மகிமைப்படுகிறார்; அதோடு நமக்குள் இருக்கும் தூய ஆவியார் நம்மை கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பிக்கிறார் என்ற எதிர்நோக்குடன் முன்னேறுவோம்.

### *2. தடைகளுக்கு அப்பால் புதுவாழ்வு* : (மத் 27:62-66)

இயேசு வாழ்ந்த காலத்தில் அவர் போதனைகளை மறுத்தவர்கள், எதிர்த்தவர்கள் அவரது இறப்புக்கு பின் மீண்டும் இணைந்து அவரது உயிர்த்தெழுதலை தடுக்க முயலுகின்ற நிகழ்வை மத்தேயு நற்செய்தியாளர் மட்டும் பதிவு செய்கிறார். காவல் வீரரைக் கொண்டு கருத்தாய்க் கல்லறையைக் காவல் செய்தனர். இதன் நோக்கம் உயிர்தெழுதலை தடுப்பதே ஆகும். இயேசு இனி திரும்ப வந்துவிட்டால் தங்களுக்கு மிகப்பெரிய ஆபத்தாகிவிடும் என்று அஞ்சி இந்த ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். எவ்வளவு தடுக்கப் பார்த்தாலும் புது வாழ்வு உதயமாகும் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. அறிந்திருந்தும் அதனை மறுத்தனர். ஆகவே தான் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நற்செய்தியை அவமாக்க ‘அவர் உயிர்த்தெழவில்லை’ அவர் சீடர்கள் தான் அவர் உடலைத் திருடிச் சென்று விட்டனர் என்ற தவறான செய்தியை பரப்ப இந்த கிறிஸ்து மறுப்பாளர்கள் காவல் வீரருக்கு கைக்கூலி கொடுத்ததாகப் படிக்கிறோம் (மத். 28:11-15).

இப்படியெல்லாம் செய்த பின்பும் அவர் இறக்கும் முன் சொன்ன வார்த்தை அப்படியே நிறைவேறும் வண்ணம் அனைத்து காவல் தடைகளையும் உடைத்து உயிர் பெற்று எழுந்தார் (மத் 28:1-4). அதனால் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை பின்பற்றின அனைத்து மக்களும் புதுவாழ்வும், உயிர்மீட்சியும், புது நம்பிக்கையும் பெற்றனர்.

தடைகள் எந்நிலையில் வந்தாலும் அவைகளைத் தாண்டி ஒரு புது வாழ்வு மலரும் என்ற நல் எதிர்நோக்கோடு முன்னேறி உயிர்த்தெழுந்த இறைமகன் இயேசுவின் நல் ஆசி பெறுவோம்.

அருள்திரு. **வின்சிலோ G. ஷேபர்**

12-04-2020

*உயிர்ப்புப் பெருவிழா*

## உயிர்ப்பு : கிறிஸ்துவில் வாழ்வைக் கொண்டாடுதல்

**RESURRECTION : CELEBRATING LIFE IN CHRIST**

1 அர 17:17-24 | 1 கொரி 15:42-58
திபா 118:1-4, 14-17 | யோவா 20:1-18; லூக் 24:1-12

**"நான் ஆண்டவரைக் கண்டேன்"** (யோவா 20:18)

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தத்துவ மேதையும் நாத்திகவாதியுமான பெட்ரன்டு றசல் (Bertrand Russell) 1970-ம் ஆண்டு மரணத்தை எதிர்நோக்கிய போது "மனிதனின் வாழ்க்கை, இரவு முழுவதும் செல்லும் ஒரு நீண்ட அணிவகுப்பு போன்றது; கண்ணுக்குத் தெரியாத எதிரிகளால் சூழப்பட்டது; சோர்வு மற்றும் வேதனைகளால் சித்திரவதை செய்யப்படுவது..... இவ்வுலகில் ஒரு இலக்கை நோக்கி பயணித்து அதனை சிலர் அடையமுடியும். ஆனால் நீண்ட காலம் எவரும் அதில் நிலைக்க இயலாது. ஒருவரை ஒருவர் அணிவகுத்துச் சென்று, அவர்கள் தோழர்கள் அவர்களது கண்களை விட்டு மறைகிறார்கள். அனைத்து ஆற்றலும் பெற்ற மரணத்தின் கட்டளையிலிருந்து எவரும் தப்ப இயலாது", என்று எழுதினார். ஆண்டவரை விசுவாசிக்காத எவருக்கும் மரணம் என்பது அச்சமும் திகிலும் கொண்டதாகும். ஆனால் கிறிஸ்துவை தங்கள் மீட்பராகக் கொண்டிருப்போருக்கு உயிர்த்தெழுதல் எனும் உறுதியான நம்பிக்கை உண்டு. யோவான் 20:1-ல் வாரத்தின் முதல் நாளன்று கல்லறைக்குச் சென்ற மகதலா மரியாள் கல்லறை வாயிலில் இருந்த கல் அகற்றப்பட்டிருப்பதைக் கண்டார். உயிர்ப்புப் பண்டிகை என்பது மரணத்தைவென்று வாழ்வின் தொடர்ச்சியை உலகுக்குக் காட்டும் பண்டிகையாகும். நம்பிக்கையற்ற நிலையில் உலகில் பயணித்துக் கொண்டிருக்கும் இவ்வுலக மக்களுக்கு கிறிஸ்துவில் நாம் பெற்றுள்ள வாழ்வை ஒவ்வொரு ஆண்டும் எவ்வாறு வெளிப்படுத்தி வருகிறோம் என்பதை சிந்திக்கப் போகின்றோம்.

### *1. கிறிஸ்துவை நினைவுகூரக் கொண்டாடுதல்*

வாரத்தின் முதல் நாளன்று விடியற்காலையில் இருள் நீக்கும் முன்பே மகதலா மரியாளும் இதர பெண்களும் இயேசுவின் உடலுக்கு நறுமணப் பொருட்களை இடும்படி கல்லறைக்குச் சென்றனர்

(யோவா 20:1, லூக் 24:1). யூத முறைமையின் படி இறந்தோரை நினைவுகூரும்படி இவ்வாறு செய்வது வழக்கம். இயேசுகிறிஸ்து அவர்களுடன் வாழ்ந்த போது தாம் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுவேன் என்று கூறிய அவருடைய வார்த்தைகளைச் சீடர்கள் நம்பாமல் யூத முறைமையின்படி கிறிஸ்துவை நினைவுகூரப் புறப்பட்டது போல இன்றும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை ஒரு நிகழ்வாகக் கருதி அவரைக் கொண்டாடும் கிறிஸ்தவர் உள்ளனர். இத்தகையோர் ஈஸ்டர் பண்டிகையை கிறிஸ்துவில் பெற்ற வாழ்வைக் கொண்டாடும் பண்டிகையாகக் கருதாமல், நினைவுகூரும் பண்டிகையாகக் கருதி கொண்டாடி வருகின்றனர். இவர்களால் இதர சமய பண்டிகைகளுக்கும் ஈஸ்டர் பண்டிகைக்கும் வேறுபாடு காட்ட இயலாது. தலைவர்கள் அல்லது பெரியோர் இறப்பை நினைவுகூரும்படி நினைவு தினம் கொண்டாடப்படுவது போல கிறிஸ்துவின் உயிர்ப்பையும் நினைத்து கொண்டாடுதல் இவ்வகையைச் சார்ந்தது. ஜிம் கேன் எனும் போதகர் “ஈஸ்டரின் ஆற்றல் ஒரு குறுகிய காலம் மட்டும் நினைவுகூரக் கூடியது அல்ல..... இது ஒரு அன்றாடக ஒப்பந்தம்” என்கிறார். உல்ப்ஹார்ட் பேன்னன்பர்க் (Wolfhard Pannenberg) எனும் ஜெர்மனிய இறையியலாளர் “உயிர்த்தெழுதல் என்பது ஒரு அசாதாரண நிகழ்வு..... இந்நிகழ்வினை நினைவு கூர்ந்து வாழ்வு மாற்றப்படாவிட்டால் பயன் ஒன்றும் ஏற்படப் போவதில்லை” என்கிறார்.

### *2. கிறிஸ்துவை அறியாது கொண்டாடுதல் :*

மகதலா மரியாள் சொன்னதைக் கேட்டு சீமோன் பேதுருவும், யோவானும் கல்லறைக்குள் சென்று அங்கு துணிகளையும் இயேசுவின் தலையை மூடியிருந்த துண்டையும் கண்டனர். ஆனால் இயேசு உயிர்த்தெழ வேண்டும் எனும் மறைநூல் வாக்கை அவர்கள் அதுவரை புரிந்துகொள்ளவில்லை (யோவான் 20:9). பின்பு அவர்கள் தங்கள் இடத்திற்குத் திரும்பிச் சென்றனர் (யோவன் 20:10). இந்நிகழ்வு மறைநூலில் உயிர்த்தெழுதல் குறித்து சொல்லப்பட்டவற்றை அறியாது உயிர்த்தெழுதலை கொண்டாடுதல் குறித்து நம்மை சிந்திக்க அழைக்கின்றது. “இயேசு உயிர்த்தெழுந்தார்” என்று இரவு முழுவதும் லாறியில் சென்று பாடுவதும் நன்கு மது அருந்திவிட்டு சாலையில் நின்று ஆடுவதும் கிறிஸ்தவ இளைஞருள் சிலருக்கு இன்று வாடிக்கையாக உள்ளது. உயிர்த்தெழுதல் என்பது என்ன, என்பதை அறியாமல் கொண்டாடும் கொண்டாட்டங்கள் திருமறையின் செய்தியை அறிந்து கொள்ளாமல் இயேசுவின் கல்லறைக்குள் ஓடிச் சென்ற சீடர்களைப்

போன்றதே. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்தில் சிறந்த அருளுரையாளராக விளங்கியவர் ஆர். டபிள்யூ. டேல் (R.W. Dale). இவர் உயிர்த்தெழுதல் பற்றி குறிப்பிடுகையில் "கிறிஸ்து உயிர்த்து வாழுகிறார்! வாழுகிறார்! என்று ஒவ்வொரு ஈஸ்டருக்கும் அறிவித்தேன். ஆனால் கிறிஸ்து உயிர்த்தெழுந்ததை எனது வாழ்வில் காண்பிக்கக் தொடங்கிய போதே எனது திருச்சபையினர் அதனை ஏற்கத் தொடங்கினர்" என்கிறார்.

### *3. கிறிஸ்துவில் வாழ்வைக் கொண்டாடுதல்*

இயேசுவின் கல்லறைக்கு முதலாவது வந்தவர் மகதலா மரியாள். ஆண்டரின் உடலை யாரோ எடுத்துச் சென்று விட்டனர் என்று பேதுருவுக்கும், யோவனுக்கும் தெரிவித்தவரும் அவரே. இதர சீடர்கள் அவர் உயிர்த்தெழுந்தார் என்பதை சில அடையாளங்களால் அறிந்தவுடன் ஊருக்குள் ஓடிச்சென்று ஆண்டவர் உயிர்த்தார் என அறிவித்தனர். ஆனால் மகதலா மரியாள் இயேசுவைக் காணும் வரை கல்லறையைச் சுற்றிக் கொண்டே வருகிறார். யோவான் 20:11-18 வரையுள்ள வசனங்கள் உயிர்த்த ஆண்டவரை மகதலா மரியாள் சந்தித்த நிகழ்வை நமக்கு விளக்குகின்றன. உயிர்த்த கிறிஸ்துவை சந்தித்த மரியாள் கிறிஸ்துவில் பெற்ற புது வாழ்வை "நான் ஆண்டவரைக் கண்டேன்" (யோவான் 20:18) என்று சீடர்களிடம் கூறி கொண்டாடுகிறார். கல்லறைக்கு வந்தவர்களில் மகதலா மரியாளின் கொண்டாட்டமே மிக அதிகமாயிருந்திருக்க முடியும். ஏனெனில் அவர் கிறிஸ்துவில் புதிய அனுபவத்தைப் பெற்றார். புதிய அனுபவம் பெற்றவரால் மட்டுமே கிறிஸ்துவில் பெற்ற வாழ்வைக் கொண்டாட இயலும்.

ஜோசப் பெய்லி என்பவர் "ஒரு பாடையிலிருந்து பார்வை" (The view from a Hearse) எனும் புத்தகத்தில் இறந்து கொண்டிருக்கும் தனது மகனைப் பற்றி தாய் ஒருவர் குறிப்பிடுவதை பின்வருமாறு எழுதுகிறார். "மருத்துவப்படி எனது மகன் வாழ்க்கை மீது நம்பிக்கை வைக்க முடியாவிட்டாலும் என் மகன் நோய் மற்றும் துன்பம் இல்லாத ஆண்டவரின் மகிழ்ச்சியான வாழ்வுக்குள் சென்று கொண்டிருக்கிறான் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன்" என்றார்.

நம்பிக்கையற்ற உலகில் வாழும் நாம் இன்றைய உயிர்ப்பு கொண்டாட்டம் வழி உலகுக்கு கிறிஸ்துவில் பெற்ற வாழ்வைப் பகிர்வோமெனில் அதுவே பொருளுள்ள உயிர்ப்புப் பண்டிகை.

அருள்திரு. முனைவர். A. **இராயப்பன் ஐசக்**

19-04-2020 **உயிர்ப்புக்கு பின்வரும் முதலாம் ஞாயிறு**

## கிறிஸ்துவை ஆண்டவராகவும், கடவுளாகவும் உறுதிமொழிதல்
**AFFIRMATION OF CHRIST AS LORD AND GOD**

விப 3:13-17 கொலோ 1:15-23

திபா 93 யோவா 20:24-29

**"தோமா அவரைப் பார்த்து, "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!!" என்றார்.** (யோவா 20:28)

உறுதி மொழிதல்' என்பது உண்மை நிலையை தெளிவாக உணர்ந்து வெளியிடும் வலுவான அறிக்கையாகும். இந்த அறிக்கை வழியாக வெளிப்படும் உண்மையினை பிறரும் உணர்ந்து, அதனை ஏற்றுக் கொண்டு செயல்பட வேண்டுமென்பதே உறுதிமொழியின் நோக்கமாகும். எடுத்துக்காட்டாக, தேசப்பற்றைவெளிப்படுத்தும் உறுதிமொழி, நெகிழி ஒழிப்பு உறுதிமொழி, சுற்றுச் சூழல் பாதுகாப்பு உறுதிமொழி போன்றவற்றைக் கூறலாம்.

உயிர்த்த இயேசு நாதரை சந்தித்த தோமாவின் உறுதிமொழி கிறிஸ்தவ விசுவாச செயல்பாட்டிற்கு அச்சாணியாக அமைந்துள்ளது எனில் அது மிகையன்று. உயிர்த்தெழுதல் பற்றி எழுந்த கேள்விகள் சந்தேகங்கள், குழப்பங்கள் ஆகியவற்றிற்கு தெளிவு வழங்கும் உறுதி மொழியாக அது அமைகிறது. இயேசுவின் தழும்புகளைப் பார்க்க வேண்டுமென தோமாவுக்குள் எழுந்த ஆவல், இயேசுவை வெறுக்கவோ, தவிர்க்கவோ எழுந்த சந்தேகமன்று, அது இயேசுவை விரும்பி ஏற்றுக் கொள்வற்கும் பிறரிடம் தைரியமாக அறிக்கை செய்வதற்குமான சான்று தேடிய நிலையே அன்றி வேறெதுமில்லை. ஏனெனில் இயேசு சீடர்களுக்கு வழங்கிய முதல் சாட்சியின் போது அவர்கள் அச்சத்துடன் அறைக்குள் இருந்தனர். தோமா தைரியமுள்ள இயேசுவின் சீடராக வெளியே நடமாடினார். மறுமுறைஇயேசுவைக் காணும் ஆவலுடன் அவர்களோடு இணைந்திருந்தார். தோமாவின் அறிக்கை அல்லது உறுதிமொழிதல் நமக்கு அருளும் ஆன்மீகத் தூண்டுதல்களை புரிந்து கொள்ள முற்படுவோம்.

### *1. உண்மையை உணர்ந்திட்ட உறுதிமொழி :*

"ஆண்டவரைக் கண்டோம்" (வ. 25) என தோமாவிடம் சீடர்கள் கூறிய செய்தி, அவருக்கு, ஓர் அறிவிப்பாக மட்டும் அமைந்ததேயன்றி

உள்ளத்தைத் தொடும் செய்தியாக அது அமையவில்லை. ஆனால் அச்செய்தி அவருக்குள் உயிர்த்தெழுந்த ஆண்டவரைக் காணும் ஆவலை பெருமளவில் தூண்டியது என்பதற்கு சந்தேகமில்லை. ஆண்டவர் தம் மக்களை அறிபவரும், தமது மக்களால் அறியப்பட வேண்டுமென்று விரும்புபவரும் ஆவார். யோவான் 10-ஆம் அதிகாரத்தில் அமைந்துள்ள ஆட்டுக்கொட்டில் பற்றிய உவமையில் இதனை இயேசு தெளிவுபடுத்துகின்றார் (வ.15) தம்மை அறிய விரும்பிய தோமாவின் ஆவலை புரிந்து கொண்ட இயேசு அந்த வாய்ப்பை தோமாவுக்கு வழங்கினார்.

இரண்டாம் முறை சீடர்களுக்கு தம்மை வெளிப்பத்திய இயேசு, அமைதி வாழ்த்தினை தெரிவித்து விட்டு தோமாவிடம், இதோ! என் கைகள், இங்கே உன் விரலை இடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள் என்றார்; (வ. 27). தோமா, உடனே பரிசோதிக்க முன் வரவில்லை. அவர் தம் கரங்களை நீட்டிப் பேசிய வார்த்தைகள் தோமாவை உணர்வடையச் செய்தது. உயிர்த்தெழுந்த இயேசுவை உண்மையாகவே அவர் புரிந்து கொண்டார். எனவே, உறுதிகொண்ட மனதுடன் நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!! என அறிக்கையிட்டார். உயிர்த்தெழுந்த இயேசு நாதர் பற்றிய எந்த கேள்வியும் சந்தேகமும் இனி சிறிதளவேனும் இல்லை என்றஒப்படைப்பு அவரது அறிக்கையில் வலுவாய் தொனிக்கிறது.

கடவுள், தமது மக்களின் ஏக்கப் பெருமூச்சினை உணர்பவரும், துயர்களை அறிகிறவரும், அபயக் குரலை கேட்கிறவருமாய் இருக்கிறார் (விப 3:7). எனவே அவர்களை விடுவிக்கும் கரிசனையை மோசேயிடம் வெளிப்படுத்தி, அவரை விடுதலைப் பணியில் பங்கு கொள்ள அழைக்கிறார். நமது வாழ்வின் துயர்களை அறியும் கடவுள், நாம் அவற்றிலிருந்து விடுபடுவதற்கான வழியை ஏற்படுத்துகிறார். மேலும் அவரது தொடர் விடுதலைப் பணியில் இணைந்து செயலாற்றநம்மை அழைக்கிறார். பல்வேறு காரணங்களைக் கூறி அழைப்பை மறுத்த மோசேக்கு கடவுள் ஆலோசனையும், வியத்தகு ஆற்றலும் வழங்கி எகிப்துக்கு அனுப்பி வைத்தார் (விப 4:18-20).

மோசேயும் கடவுளின் விடுதலைத் திட்டத்தை புரிந்து கொண்டு பார்வோனிடம் போராடி இஸ்ரயேல் மக்களை மீட்கும் கடவுளின் பணியை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றினார். உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஆற்றலையும், உடனிருத்தலையும் உணர்ந்திடும் அனுபவம் நம் வாழ்வில் மிக அவசியமானதாகும்.

## *2. உறவினை உறுதி செய்த உறுதிமொழி :*

நான் உம்மோடு சேர்ந்து இறக்க வேண்டியதாயிருந்தாலும் உம்மை ஒரு போதும் மறுதலிக்க மாட்டேன் (மத். 26:35) என்று உறுதிமொழிந்த பேதுரு சில மணி நேரத்துக்குள் இந்த மனிதனை எனக்குத் தெரியாது என்று சொல்லிச் சபிக்கவும் ஆணையிடவும் தொடங்கினார் (வ. 74). இந்த உறவின் உறுதிமொழித் தடுமாற்றம் இயேசு நாதர் உயிர்த்தெழுந்த பின் பேதுருவுடன் நிகழ்த்திய உரையாடல் வாயிலாக மீண்டும் உறுதி செய்யப்பட்டது. (யோவான் 21:17)

யோவான் 11-ஆம் அதிகாரத்தில் லாசர் இறந்த செய்தியறிந்து யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள் என்று இயேசு சீடர்களை அழைத்த போது, ரபீ இப்போது தானே யூதர்கள் உம்மேல் கல்லெறிய முயன்றார்கள். மீண்டும் அங்கு செல்ல வேண்டுமா? என்று தயக்கம் காட்டினர். அவ்வேளையில் தோமா, நாமும் செல்வோம், அவரோடு இறப்போம் (வ.16) என்று இயேசுவுடன் செல்ல அனைவரையும் அழைத்தார். எச்சூழலிலும் ஆண்டவருடன் இணைந்திருப்பதே பொருத்தமானது என்றஉணர்வுடன் உறவை வெளிப்படுத்தியவர் தோமா. பேதுரு வார்த்தைகளில் உறவை உயிரோட்டம் உள்ளது போல் காட்டினார்; ஆனால் வாழ்க்கையில் தடுமாறினார். தோமாவை அவிசுவாசி, சந்தேகப் பேர்வழி என்றெல்லாம் அழைப்பார் உண்டு. ஆனால் தோமா உணர்ச்சி வசப்படாமல் தெளிந்த மனதுடையவராய் உறவினை இங்கு உறுதி செய்கின்றார்.

“நீரே என் ஆண்டவர்” (வ. 28) என தோமா கூறியதன் வாயிலாக, நீர் என்னை ஆண்டு கொள்ள உம்மிடம் ஒப்படைக்கிறேன் என்ற அர்ப்பணத்தை உணர முடிகிறது. ஆண்டவர் (Lord) என்பதன் கிரேக்கச் சொல் ‘Kyrios’ (குரியோஸ்) என்பதாகும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கடவுளின் ஆற்றலையும், ஆளுகையையும் குறிப்பிடும் விதமாக இச்சொல் கையாளப்பட்டது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இச்சொல் சமய நம்பிக்கை சார்ந்து தெய்வங்களைக் குறிப்பிடும் சொல்லாகவும், அரசரைக் குறிப்பிடும் சொல்லாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது. எகிப்து, சீரியா, ஆசியா மைனர், கிரீஸ் போன்றநாடுகளில் மனிதர்களின் மன்றாட்டைக் கேட்டு விடுவிக்கும் தெய்வங்களைக் குறிப்பிட இச்சொல் (Kyrios) பயன்படுத்தப்பட்டு வந்தது. ரோமப் பேரரசர்கள் 'ஆண்டவர்' (Kyrios) என புனித நிலை வழங்கி அழைக்கப்பட்டு வந்தனர். அவர்களை வணங்க வேண்டுமெனவும் மக்கள் வற்புறுத்தப்பட்டனர். இந்நிலையில் தொடக்க கால விசுவாசிகள் இயேசுவை ஆண்டவராக அறிக்கை செய்ய தோமாவின் உறுதி மொழி வழிகாட்டியாக அமைந்தது.

உயிர்த்தெழுந்தவராய் விலகிச் சென்றிடாமல் திரும்பத் திரும்ப தேடி வந்து உறவு பாராட்டி அமைதியின் வாழ்த்து வழங்கி குழப்ப நிலையை அகற்றிய இயேசுவை ஆண்டவர் என உறவினை உறுதியாக்கி அறிக்கையிட்டார் தோமா. நமது உறுதிமொழிகள் வார்த்தை ஜாலங்களால் வடிவமைக்கப்பட்டவைகளா? என சிந்திப்போம். வார்த்தைகளால் அல்ல, வாழ்வின் நல் தகவுகளால் ஆண்டவருடனான உறவை உறுதி செய்ய நம்மை அழைக்கின்றார்.

## *3. உரிமையை உரைத்திட்ட உறுதிமொழி :*

"நீரே என் கடவுள்!" (வ. 28) என்று உரிமைக் குரலுடன் உறுதி மொழிந்தார் தோமா. வி.ப. 3:14ல் கடவுள் மோசேயிடம் 'இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே' என்றார். இதன் பொருள் "எக்காலத்துக்கும் உரியவராய் முடிவில்லாதவராய் இருக்கிறேன்" என்பதாகும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கடவுளை குறிப்பிடுவதற்கு முக்கியமான மூன்று பெயர்களை பயன்படுத்தினர். அவை 'El', 'El Elyon' 'Elohim' (ஏல், எல் எலியோன், எலோகிம்) என்பவைகளாகும். இச்சொற்கள் கடவுளின் அதி உன்னத தன்மையையும், ஆற்றல் அதிகாரத்தையும் சுட்டிக்காட்டுபவையாக அமைந்துள்ளன. 'நீரே என் கடவுள்' என்றதோமாவின் உறுதிமொழி இயேசுவை மேற்குறிப்பிடப்பட்ட நிலையில் ஏற்றுக் கொள்வதையே வெளிப்படுத்துகிறது.

யோவான் 14:3,4 ஆகிய வசனங்களில் இயேசு, நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்த பின் உங்களை அழைத்துக் கொள்வேன். நான் போகும் வழி உங்களுக்குத் தெரியும் என்றார். மற்றசீடர்கள் அமைதியாயிருந்த போது தோமா, ஆண்டவரே நீர் எங்கே போகிறீர் என்றேஎங்களுக்குத் தெரியாது, வழியை எப்படித் தெரிந்து கொள்ள இயலும்? (வ. 5) என வினா எழுப்பினார், வழியும் உண்மையும் வாழ்வும் நானே (வ. 6) என இயேசு பதிலுரைத்தார். இந்த பதிலுரை தோமாவுக்குள் நிலைவாழ்வு பற்றிய உறுதிப்பாட்டை ஏற்படுத்தியிருந்தது எனலாம். எனவே தோமாவின் அறிக்கையினை இயேசுவை கடவுளாகவும், நிலைவாழ்வுக்கு நடத்துபவராகவும் உரிமை பாராட்டும் நிலை எனலாம். சாவை வென்று உயிர்த்தெழுந்த இயேசு நிலை வாழ்வென்னும் உரிமைப் பேற்றினை மானுடர்க்கு வழங்குபவர் என்பது தோமாவின் உறுதிமொழியில் எதிரொலிக்கிறது. தான் புரிந்து கொள்ளாததை புரிந்து கொண்டதாகவோ, அறிந்து கொள்ளாததை அறிந்து கொண்டதாகவோ காட்டிக் கொள்ளாத தோமா இயேசுவைக் கண்டபோது தெளிவடைந்து முழுமனதுடன் உறுதி மொழிந்தார். கொலோசையர் 1:17ல் அனைத்துக்கும் முந்தியவர் அவரே

அனைத்தும் அவரோடிணைந்து நிலை பெறுகின்றன என்று படிக்கிறோம். எனவே மானுடர் அனைவரும் முந்தியவரான அவரின் ஆளுகையில் இணைந்து நிலைவாழ்வடையும் வாய்ப்பினை பெறுகிறோம்.

Sir கிறிஸ்டோபர் கெர் என்ற புகழ் பெற்ற கட்டடக் கலைஞர் லண்டன் மாநகரிலுள்ள St. Paul’s Cathedral என்ற பேராலயத்தை வடிவமைத்தார். அதன் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, அப்பணிகளை பார்வையிடச் செல்வது அவரது வழக்கமாயிருந்தது. ஒரு நாள் பெரிய கற்களை சுமந்து கொண்டிருந்த ஒருவரை அணுகி, “என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?” என்று கேட்டார். அந்த நபர் பதிலாக. “எனது முதலாளி இதைச் செய்யும் படி கூறினார். எனவே, செய்கிறேன்” என சலிப்புடன் கூறினார். அடுத்த பணியாளரிடம் சென்று அதே கேள்வியை கேட்க, “அவர் எனக்கு மனைவியும், இரண்டு பிள்ளைகளும் உண்டு, அவர்களைக் காப்பாற்ற இப்படி உழைக்கிறேன்” என்றார். மூன்றாமவரிடம் சென்று அதே கேள்வியைக் கேட்ட போது, “Sir கிறிஸ்டோபர் என்ற கலைஞர் ஒரு பேராலயத்தைக் கட்டுகிறார், கடவுளுக்காக செய்யப்படும் அப்பெரும் பணியில் நானும் ஒரு எளிய பணியாளனாய் வேலை செய்ய எனக்கு வாய்ப்பு கிடைத்தது” என மகிழ்ச்சியுடன் கூறினார்.

அறிக்கையின் பலமும், பலவீனமும் அது நிறைவேற்றப்படுதலைக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. உறுதி மொழிகள் உதட்டளவோடு நின்று விட்டால் அது பயனற்றதே. இங்கு தோமாவின் உறுதிமொழி செயலாக்கம் பெற்றது. கி.பி. 52-ல் தோமா மலபார் கடற்கரையிலுள்ள கிராங்கனளூக்கு வந்து நற்செய்திப் பணியாற்றயதாகவும் கி.பி. 72-ல் சென்னையில் உள்ள சின்னமலையில் வைத்து ஈட்டியால் குத்தி கொலை செய்யப்பட்டார் எனவும் செய்திகள் வழங்கப்பட்டு வருகின்றன. அனைத்து நன்மைகளையும் ஆண்டவரிடமிருந்து நமக்குரியதாக எதிர்நோக்கும் நாம் அவருக்குரியவர்களாய் நம்மை அர்ப்பணிப்போம்.

அருள்திரு. R. **ஹென்ஸ்லின் நேசராஜ்**

26-04-2020 **உயிர்ப்புக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு**

# கிறிஸ்துவின் விருந்தோம்பலுக்கு அழைப்பு

**INVITATION TO CHRIST'S HOSPITALITY**

| | |
|---|---|
| தொநூ 18:1-10 | எபி 13:1-8 |
| திபா 15 | யோவா 21:1-14 |

**இயேசு அவர்களிடம், "உணவருந்த வாருங்கள்" என்றார்.** (யோவா 21:12)

திருமறை விருந்தோம்பலை ஒரு அறச் செயலாகவே கருதுகிறது. அண்டி வந்தவருக்கும், அந்நியருக்கும் அடைக்கலம் கொடுப்பதும், உண்டி கொடுத்து உபசரிப்பதும் இஸ்ரயேலர் மத்தியில் எழுதப்படாத சட்டமாக இருந்தது. இஸ்ரயேலின் முதுபெரும் தந்தையர்கள் விருந்தோம்பலுக்கு எடுத்துக் காட்டாக விளங்கியதை திருமறை சிறப்பாக சித்தரிக்கிறது (தொநூ 18:1-8; 19:1-11; 24:14-51). ஆபிரகாம் தன்னை தேடி வந்த விருந்தினர்களுக்காக சிறப்பான விருந்தொன்றைப் படைக்கிறார் (தொநூ 18:1-8). லோத்து தனது விருந்தினர்களை இழிமனிதரிடமிருந்து பாதுகாக்க ஆண் தொடர்பு அறியாத தனது புதல்வியர்களையும் கையளிக்கத் தயங்காதவராக இருந்தார் (தொநூ 19:1-11). ஆபிரகாமின் பணியாளருக்குப் பெத்துவேலின் வீட்டில் சிறப்பான உபசரிப்புக் கிடைக்கிறது (தொநூ 24:14-51). கிபயாவின் சதுக்கத்தில் அமர்ந்திருந்த லேவியருக்கு முதியவர் ஒருவர் அளிக்கும் உபசரிப்பும், இழிமனிதர்களின் கைகளிலிருந்து அவரைப் பாதுகாப்பதற்கு எடுக்கும் முயற்சிகளும் விருந்தோம்பலுக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும் (நீதி 19:16-24). "வீதியில் வேற்றார் உறங்கியதில்லை, ஏனெனில், வழிப்போக்கருக்கு என் வாயிலைத் திறந்து விட்டேன்" என யோபு தன் விருந்தோம்பலைக் குறித்து உயர்வாகப் பேசுகிறார் (யோபு 31:32). புதிய ஏற்பாட்டு நூல்களில் விருந்தோம்பல் ஒரு அறச்செயலாகவும், தர்ம செயலாகவும் கருதப்பட்டு உயர்வாகப் பேசப்படுகிறது (லூக் 14:13,14; உரோ 12:13; எபி 13:2; 1திமொ 3:2; தீத்து 1:8; 1பேது 4:9). இந்நாளிலும் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து தம் அடியவர்களான சீடர்களை எவ்வாறு விருந்தோம்பலுக்கு அழைக்கிறார் என அறிய முயலுவோம்.

### *1. அக்கறை கொண்டு அழைக்கிறார்* : (யோவா 21:5)

"....பிள்ளைகளே..."

ஆண்டவர் இயேசு சாதாரணமானவர்களைத் தமது சீடர்களாக இருக்க அழைத்து, மூன்றரை ஆண்டுகள் அவர்களுக்குப் பயிற்சிக் கொடுத்ததோடு, நோயின் மீதும் பேயின் மீதும் அதிகாரம் வாங்கி, தமக்குப்

பின் இறையரசைப் பறைச்சாற்றும் மாபெரும் பொறுப்பினைக் கொடுத்தார். ஆனால், சீடர்களோ இயேசுவின் விருப்பத்திற்கு மாறாகச் செயல்பட்டதோடு, இயேசுவைப் போல பாடு அனுபவிக்கப் பயந்து இயேசுவுக்கு வந்த சிலுவைப் பாடுகள் தங்களுக்கும் வந்துவிடும் என அஞ்சி அவர்கள் ஓர் அறையில் கூடி, யூதர்களைப் பற்றிய பயத்தினால் கதவைப் பூட்டி ஒளிந்திருந்தனர். பின் சில சீடர்கள் இயேசு தங்களை அழைத்த அழைப்பையே உதறித்தள்ளிவிட்டு தங்கள் பழையத் தொழிலான மீன் பிடிக்கிறத் தொழிலுக்கே திரும்பி, திபேரியாக் கடலில் தங்கள் தொழிலைத் தொடங்கவும் செய்து விட்டனர். உயிர்தெழுந்த இயேசு கிறிஸ்து இப்படிப்பட்ட சீடர்களை உதறித்தள்ளி விடாது, அவர்கள் மீது அக்கறைக் கொண்டவராக அவர்களை, அவர்கள் மீன் பிடிக்கச் சென்றக் கடலுக்கேத் தேடிச் சென்று அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தியதோடு, தமது எதிர்பார்ப்பை நிறைவேற்றாது சென்ற சீடர்கள் மீது கோபம் கொள்ளாது. “பிள்ளைகளே” என பாசத்தோடு அழைத்து அவர்கள் மீது கொண்டிருந்த மாறாத அன்பை, அக்கறையை வெளிக்காட்டி “உணவருந்த வாருங்கள்” என விருந்தோம்பலுக்கு அழைத்தார்.

தொண்ணூற்றொன்பது ஆடுகளை விட்டு விட்டு காணாமல் போன ஒரே ஆட்டைத் தேடிச் சென்ற ஆயரைப் பற்றிய உவமையைத் திருவாய் மலர்ந்தருளிய இயேசு தமது உயிர்ப்பிற்கு பிறகும் தம்மைவிட்டு பின் வாங்கிச் சென்றச் சீடர்களைத் தேடிச் சென்று அவர்களை விருந்துண்ண அழைத்தது உயிர்த்த இயேசு தம் சீடர்கள் மீது கொண்ட அக்கறையை வெளிக்காட்டுகிறதல்லவா? அது போல, நாமும் மற்றவர்கள் நலனில் அக்கறையுடன் செயல்பட்டு பலரை விருந்தோம்பலுக்கு அழைக்க ஆண்டவர் அழைக்கிறார்.

**2. *ஆலோசனை கொடுத்து அழைக்கிறார்*** : (யோவா 21:6)

“....படகின் வலப்பக்கத்தில் வலை வீசுங்கள் மீன் கிடைக்கும்...”

இயேசு ஆண்டவரின் விருப்பத்திற்கு மாறாகச் செயல்பட்டு, தங்கள் அழைப்பையும், அர்ப்பணத்தையும் உதறி தள்ளிவிட்டு தங்கள் பழையத் தொழிலாகிய மீன் பிடிக்கும் தொழிலுக்காக திபேரியாக் கடலில் வலையை வீசிய சீடர்களுக்கு மீன் எதுவும் அகப்படவில்லை. இரவு முழுவதும் முயன்றும் ஒரு மீன் கூட அவர்களுக்கு கிடைக்கவில்லை. விடியற்காலை வேளையில் இயேசு கடற்கரையில் நின்று தம் சீடர்களை நோக்கி “படகின் வலப்பக்கத்தில் வலை வீசுங்கள்” மீன் கிடைக்கும் என ஆலோசனைக் கொடுத்ததர். இயேசு கிறிஸ்துவின் ஆலோசனையை ஏற்றுக்கொண்ட சீடர்கள் அப்படியேச் செய்து வலையை இழுக்கமுடியாத

அளவுக்கு மிகுதியான மீன்களை பிடித்தனர். “ஆலோசனை கர்த்தர்” என்பதாகும். இங்கே உயிர்த்த இயேசுகிறிஸ்து சீடர்களுக்கு ஆலோசனை கொடுத்து விருந்தோம்பலுக்கு அழைக்கிறார். உயிர்தெழுந்த இயேசு மகதலேனா மரியாளிடம் சொன்ன ஆலோசனை “...நீ என் சகோரர்களிடம்...சொல்” (யோ 20:17) என்பதாகும்.

உயிர்த்தெழுந்த இயேசு தம் சீடர்களிடம் சொன்ன ஆலோசனை திருமறையில் இயேசுவின் பெரியக் கட்டளை என எழுதப்பட்டுள்ளது. அது “...நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்” (மத் 28:19-20) என்பதாகும். நாமும் இயேசுவின் ஆலோசனையை ஏற்று செயல்படுத்த ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.

### *3. ஆயத்தப்படுத்தி அழைக்கிறார்* : (யோவா 21:9)

இயேசு அவர்களிடம் “உணவருந்த வாருங்கள்” என்றார்.

இயேசுவால் இறையரசின் பணி செய்ய அழைக்கப்பட்ட சீடர்கள் இயேசுவின் விருப்பத்திற்கு மாறாக செயல்பட்டனர். இயேசுவைப் போல பாடு அனுபவிக்க பயந்து, இயேசு தங்களை அழைத்த அழைப்பையே உதறித்தள்ளிவிட்டு தாங்கள் முன்னர் செய்து வந்த மீன்பிடித் தொழிலைச் செய்ய திபேரியாக் கடலுக்கு சென்று இராமுழுவதும் முயன்றும் ஒன்றும் கிடைக்காத சூழலில், இயேசு அங்கு சென்று உணவருந்த அவர்களை அழைத்தார். அப்படி சீடர்களை அழைப்பத்ற்கு முன்னரே விருந்தை ஆயத்தம் செய்து வைத்துவிட்டு (யோவா. 2:19) அவர்களை அழைக்கிறார். அப்படியே இயேசுவால் அழைப்பு பெற்ற சீடர்களிடம் சென்று, முதலில் அப்பத்தையும் பின்னர் மீனையும் எடுத்துக் கொடுக்கிறார். இங்கே இரவு முழுவதும் எதுவுமே சாப்பிடாமல் பசியோடு இருந்த சீடர்களின் பசியைப் போக்க இயேசு உணவை ஆயத்தம் செய்து அவர்களை அழைப்பதாக இருந்தாலும், இறையரசின் பணியைத் தொடர்ந்து சீடர்கள் முன்னேறிச் செல்வதற்கான ஆயத்தம் அல்லது சீடர்களை ஆயத்தப்படுத்தினார் என்பதே உண்மை.

உலக மக்களின் நல்வாழ்வுக்காக கடவுள் தம் மைந்தர் இயேசுவை எப்படி ஆயத்தப்படுத்தி அனுப்பி வைத்தாரோ, அதுபோல இயேசுவும் தம் அடியவர்கள் இறையரசின் பணியைத் தொடர மீண்டும் ஆயத்தப்படுத்தியதையே இந்த நிகழ்வு நமக்கு வலியுறுத்திக் காட்டுகிறது. நாமும் இயேசுவைப் போல இறைப்பணி செய்ய ஆயத்தப்படவும் ஆயத்தப்படுத்தவும் அழைக்கப்படுகிறோம்.

அருள்திரு. K. **எட்வின் ஜாண் தேவகுமார்**

01-05-2020

**புதிய மாத நன்றித் தொழுகை**
**உழைப்பாளர் திருநாள்**

# நற்பலன் அருளும் ஆண்டவர்

திருமறைப்பாடம் : திபா 128

**"உமது உழைப்பின் பயனை நீர் உண்பீர்! நற்பேறும் நலமும் பெறுவீர்".** (திபா 128:2)

திருப்பாடல் 128-க்கு கொடுக்கப்பட்டுள்ளள தலைப்பு என்னவென்றால் ஆண்டவருக்கு அஞ்சி நடப்பதன் பயன்கள் என்பதாகும். திபா 128:1 மற்றும் 128:4 ஆகிய வாக்கியங்கள் ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவர்கள், பேறுபெற்றோர் என்றும் அவரே ஆசி பெற்றவராக வாழ்வர் என்பதாகவும் அழுத்தம் திருத்தமாக கூறுகிறதைக் காணமுடியும். ஆசிகளின் ஊற்று ஆண்டவராக இருக்கிறபடியால் அவருக்கு அஞ்சி அவரது வழியில் நடந்து அவரால் நற்பலன் பெறவேண்டியது அவரது பிள்ளைகளின் கடமை. ஆண்டவருக்கு அஞ்சுதல் என்பது இறை நீதிநிறைவேற்றி வாழும் வாழ்வாகும். அத்தகையோர் பெறும் ஆசிகளைக் கவனிப்போம்.

***1. உழைப்பினால் வரும் நற்பலன்*** : (திபா 128:2)

"உமது உழைப்பின் பயனை நீர் உண்பீர்" தொடக்க நூலில் 3-ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளபடி மனிதனின் வருந்தி உழைக்கும் உழைப்பு அல்லது வேர்வை சிந்தி உழைக்கும் உழைப்பு என்பது இறைவன் இட்ட சாபத்தினால் வந்தது போன்ற கருத்து எடுத்தாளப்பட்டுள்ளது. ஆனால் தொநூ 2:15-ஆம் வாக்கியத்தில் அவன் படைக்கப்பட்டதின் நோக்கமே இறைவனால் படைக்கப்பட்டு மனுக்குலத்திற்காக வழங்கப்பட்ட அழகிய உலகத்தை உழைத்து பண்படுத்தவும், பாதுகாக்கவுமே என்பதாக உள்ளது. ஆக உழைத்தல் என்பது ஆசீர்வாதம் திருத்தூதுவர் பவுலும் ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று தெசலோனிக்கே சபைக்கு கட்டளையிடுகிறார். உழைப்பது நமது கடமை. உழைப்பதற்குரிய பலனைத் தருவது இறைவனின் அருள்செயல். கடவுளுக்கு அஞ்சி இறைநீதியில் நடந்து இந்த ஆசிகளை பெற்றுக்கொள்வோம்.

## 2. உறவுகளினால் வரும் நற்பலன் : (திபா 128:3)

"உம் இல்லத்தில் உம் துணைவியார் கனிதரும் திராட்சை கொடிபோல் இருப்பார்; உண்ணும் இடத்தில் உம் பிள்ளைகள் ஒலிவக் கன்றுகளைப் போல் உம்மை சூழ்ந்திருப்பர்". இவ்வாக்கியம் செழித்து வளரும் குடும்பத்தையும், குடும்பத்தினுள் வளரும் அன்பினால் கட்டப்பட்ட குடும்ப உறவுகளையும் குறிக்கிறது. திராட்சை செடியும், ஒலிவ மரமும் இஸ்ரவேல் மக்களின் வாழ்வாதாரத்தோடு தொடர்புடையது. வாழ்வில் முக்கியப்பங்காற்றுகிறது. துணைவியார் வாழ்வின் ஆதாரமாகவும் பிள்ளைகள் பெற்றோரின் நற்பண்பில் உறவின் நிழலில் வளர்ந்து பெருகி செழிக்கும் அனுபவத்தைக் குறிக்கிறது. இவ்வித ஆசியும் அதினால் கிடைக்கும் சமாதானமும் இறைவனால் கிடைக்கிறது. இன்று பல குடும்பங்களில் உறவுகளில் விரிசல் ஏற்பட்டு, நற்பண்புகள் என்ற பேச்சுக்கே இடமில்லாம்மல் பிள்ளைகளால் பெற்றோர்களும், பெற்றோர்களால் பிள்ளைகளும் இருதயமில்லாதவர்களாய் விளங்கும்போது, இறைவனுக்கு அஞ்சி இறைநீதியில் நடக்கும் கடவுளின் பிள்ளைகளுக்கு குடும்ப உறவினால் வரும் நற்பலனை இறைவன் கொடுக்கிறார்.

## 3. நீடிய ஆயுள் என்ற நற்பலன் : (திபா 128:6)

"நீர் உம் பிள்ளைகளின் பிள்ளைகளைப் காண்பீராக". நீடிய ஆயுள் என்பது ஒவ்வொரு மனிதரும் மனதார விரும்பும் ஒன்று. மனிதன் உலகமனைத்தையும் ஆதாயப்படுதிக்கொண்டாலும் தன் வாழ்வை இழந்தால் அவனுக்கு என்ன லாபம்? என்பதாக திருமறை கூறுகிறது. இறைவன் தரும் ஆசீர்வாதங்களை அனுபவிக்க இயலாத நிலை மாயை தோற்றம் போன்றது என்பதாக பிரசங்கியும் கூறுகிறார். 'நீடிய ஆயுள்' என்பதற்கு பற்பல விளக்கங்களை நாம் அறிந்திருந்தாலும் திபா. 128:6-ன் படி பிள்ளைகளின் பிள்ளைகளை காணுதல் என்பதும் ஒரு சிறப்பான விளக்கம். நீமொ 17:6-இல் முதியோருக்கு பிள்ளைகளின் பிள்ளைகள் கிரீடமாக விளங்குகிறார்கள் என்பதும் ஒரு மனிதனின் மனமகிழ்வாக விளங்குகிறது. நீமொ 10:27-இல் கர்த்தருக்கு பயப்படுதல் மூலமாக தனது ஆயுள் நாட்களைப் பெருகப்பண்ணமுடியும் என்பதாக சொல்லப்பட்டுள்ளது. எனவே இப்புதிய மாதத்தில் இறைவனுக்கு அஞ்சி அவரது நீதியின் படி வாழுவோம் என்று தீர்மானித்து நமது வாழ்வை திட்டம் பண்ணுவோம். நற்பலனை அருளும் ஆண்டவர் நமது உழைப்பின் பலன், நல்ல குடும்ப உறவு என்ற பலன், நீடிய ஆயுள் என்ற பலனைத் தந்து நம்மை ஆசீர்வதிப்பாராக.

அருள்திரு. G. **சாம் ரிச்சர்டு நெல்சன்**

03-05-2020 உயிர்ப்புக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு

## அன்றாட வாழ்வில் உயிர்த்த கிறிஸ்துவுடன் கூட்டுறவு

### COMMUNION WITH THE RISEN CHRIST IN DAILY LIFE

விப 40:34-38 பிலி 3:8-16
திபா 23 லூக் 24:13-33

**"....அவர்கள் உரையாடிக் கொண்டும், வினவிக்கொண்டும் சென்றபோது, இயேசு நெருங்கி வந்து அவர்களோடு நடந்து சென்றார்."** (லூக் 24:15)

இறையவர் தமது ஆற்றல் நிறைந்த வார்த்தையினால் அனைத்தையும் படைத்தார். தம் உருவில் மானிடரைப் படைத்தார். தம்மால் படைக்கப்பட்டவர்களுடன் நெருக்கமான தொடர்பையும் வைத்திருந்தார் (தொநூ 2:8). ஆயினும் கீழ்ப்படியாமையினால் மனிதர் கடவுள் திருமுன்னிலிருந்து விலகிப் போயினர். வரலாற்றின் ஆண்டவர் மனிதரின் வழிப்பயணத்திலும் உடன் பயணியாய் பயணித்து வருகிறார் என விவிலியம் தெளிவாக எடுத்துரைக்கிறது. பல முறைகளிலும், பல வழிகளிலும் இறைவன் தன்னை முற்காலத்தில் நம் மூதாதையர் வழியாக பேசினார். இவ்விறுதி நாட்களில் தம் மகன் வழியாக பேசிவருகிறார் என்கிறார் எபிரேயர் நூல் ஆசிரியர் (எபி 1:1). இறையவர் இயற்கையிலும் (திபா 19:1-6), இறைமக்களிலும் (1கொரி 3:16,17), ஏழை எளியவர்களிலும் (மத் 25:40), தம் பெயரின் பொருட்டு ஜெபிக்க கூடியிருக்கும் மக்களிலும் (மத் 18:20) இடைவெளியில்லாது இறைக் கூட்டுறவு வைத்துள்ளார். இறையவர் மனிதரை விட்டு தொலைவில் விலகி இருப்பவரல்ல, மாறாக எங்கும், எதிலும், எப்போதும், எவரிலும் கூட இருப்பவர் என்பதை இன்றைய நற்செய்திப் பகுதி தெளிவுபடுத்துகின்றது. இறைவனது உடனிருப்பை "எம்மாவு" பயணிகளின் அனுபவத்தின் அடிப்படையில் சிந்திப்போம்.

### *1. வாழ்வுப் பயணத்தில் உடன் பயணிக்கும் ஆண்டவர் :*

(லூக் 24:15)

எருசலேமிலிருந்து ஏறத்தாழ 11 கிலோமீட்டர் தொலைவில் உள்ள எம்மாவு என்ற சிற்றூருக்கு சீடர்கள் இருவர் கடும்மன விரக்தியுடன் விரைந்து சென்று கொண்டிருந்தனர். இயேசு நெருங்கி வந்து உடன் பயணியாய் அவர்களோடு நடந்து சென்றார். அவர்களிடம், வழிநெடுகிலும் நீங்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டிருப்பது என்ன? என்று கேட்டறிந்தார். நசரேயனாகிய இயேசுகிறிஸ்து இஸ்ரயேலை

மீட்கப்போகிறார் என்று நாங்கள் எதிர்பார்த்திருந்தோம், தலைமைக் குருக்களும் ஆட்சியாளர்களும் அநியாயமாய் அவருக்கு மரணத்தண்டனை விதித்து சிலுவையில் அறைந்தார்கள். இது நிகழ்ந்து மூன்று நாட்கள் ஆகின்றன. ஆயினும் எங்கள் பெண்கள் சிலர் காலையில் கல்லறைக்கு சென்றும் கர்த்தரைக் காணாமல், தூதரைக் கண்டதாகவும், இயேசு உயிர்த்தார் என அவர்கள் கூறியதாகவும் தங்கள் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்த இரு சீடர்களும் உயிர்த்தெழுதலை நம்பாத, உயிர்த்த கிறிஸ்துவை அனுபவத்தில் கொள்ளாத, வாழ்வு பயணத்தில் உயிர்த்த கிறிஸ்துவை உடனிருப்பை உணராத நம் ஒவ்வொருவருக்குமான குறியிடு ஆவார். ஏற்கெனவே பெண்கள் கூறியும் நம்பாமல் இயேசு தங்களுடனே கூட நடந்தும் அடையாளம் காணாமல் தயக்கத்துடனும், தடுமாற்றத்துடனும் இருந்தனர். காரணம் இறைநம்பிக்கையின்மை ஆகும். இதுவே அவர்களது கவலை, அச்சம், ஐயம், அவநம்பிக்கைக்கும் அடிப்படையாயின. இயேசு அனுபவத்திற்கு முதல் எதிரி அவநம்பிக்கை ஆகும். மத் 21:21 ஐயம் எதுவுமின்றி நம்பிக்கையுடன் இருங்கள் என்கிறார் ஆண்டவர். உயிர்த்த இயேசு கூட இருக்கிறார். கூட்டுறவுடன் வாழ்வோம். அவர் நம்மை விசாரிக்கிறார் விசுவாசம் கொள்வோம்.

## *2. வார்த்தை வழியே பிரசன்னமாகும் ஆண்டவர் :*

(லூக் 24:27)

பற்றுறுதிக் குறைவினாலும், ஐயம் உணர்வினாலும் விரக்தியுடன் வீடு திரும்பியவர்களை வலிய தேடிச் சென்று தொடர்புபடுத்தினார் தம் பிரசன்னத்தால். நொறுங்கிப் போனவர்களுடன் இயேசு இவ்வளவு நெருங்கிப் போனார். உயிர்த்த பின்னும் தேடி மீட்கும் தம் திருப்பணியை (லூக் 19:10). தொடர்கிறார். தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது (யோவா 1:1) என்பதன் மூலம் கடவுள் வார்த்தையின் வழியே தம்மை பிரசன்னப்படுத்துகிறார் (லூக் 24:25-27).

அவநம்பிக்கையால் அழுக்கடைந்திருந்த சீடர்களின் இருதயம் பற்றி எரிந்தது (24:32). வாழ்வுப் பயணத்தின் கடின அனுபவங்களில் இறைவனின் உடனிருப்பை, கூட்டுறவை உணர்ந்து கொள்ள இயலாமல் கல்லாகிப்போன அவர்கள் இருதயம் சரியான சம்மட்டி அடி (எரோ 23:29). வாங்கியது. இறைவார்த்தைகளை உள்ளடக்கிய மறைநூலில் மகிமையை (2தீமோ 3:16). பவுலடியார் உலகறியச் செய்துள்ளார் உயிருள்ளதும், ஆற்றல்மிக்கதுமான (எபி 4:2). அடக்கி வைக்க முடியாததுமான (எரோ 20:9). கறைபடுத்தப்பட முடியாததுமான (2தீமோ 2:9). பலன் தரக்கூடிய (லூக் 21:33). நம்பிக்கைத் தருகின்ற (திப 18:9-10). அனைவரையும்

மீட்கவல்ல (யாக் 1:21). அறை வார்த்தையை நம்ப மறுத்த மந்த உள்ளத்தினராக, அறிவிலிகளாக இராமல், நம்மோடு கூட்டுறவு கொள்ளும் நலமளிக்கும் இறைவார்த்தையை நாள்தோறும் நேசித்து, வாசித்து, விசுவாசித்து வாழ்வது சிறப்பு. வார்த்தையானவர் நம்மிலே, நமக்குள்ளே, நம்பிக்கையுடன் பயணம் தொடர்வோம்.

### *3. நற்கருணை வழி நல்லுறவு கொள்ளும் ஆண்டவர் :*

(லூக் 24:30)

உயிர்த்த இறைவனின் உடனிருப்பை எம்மாவு சீடர்களின் வழிப்பயணத்தில் உடன்பயணியாய் பயணித்து, தம் ஆற்றல் நிறைந்த வார்த்தைகளால் அவர்களிலிருந்த அச்சத்தையும், அவநம்பிக்கையும் அகற்றி, அவர் தம் அகக் கண்களைத் திறந்து நம்பிக்கையை பற்றியெரியச் செய்து (v.32) தாங்கள் பெற்ற கிறிஸ்து அனுபவத்தை உலகறியச் செய்ய உதவியாய் உணவு வழியாய் தம் உடனிருப்பை உறுதிப்படுத்தினார் (30,31)

நற்கருணை என்னும் அருள் அடையாளம் தெளிவான, முழுமையான, உறுதியான விதத்தில் இயேசுவின் அருட்பணியை, அன்புப் பணியைச் செய்ய இறைமக்களைத் தூண்டுகிறது. ஈடுபாட்டுடன் செயல்பட உதவுகிறது. கடவுள் நம்முடனும், நாம் கடவுளுடனும் இருப்பது தான் நமது வாழ்வின் சிறப்பு. இது நற்கருணை வழியாய் உறுதிப்படுகிறது. இயேசு அவர்களோடு பந்தியில் அமர்ந்திருந்த போது அப்பத்தை எடுத்து கடவுளைப் போற்றி, பிட்டு அவர்களுக்கும் கொடுத்தார். அப்போது அவர்கள் கண்கள் திறந்தன. அவர்கள் அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள் (24:31). அவர்கள் கால்கள் விரைந்தன. அந்நேரமே அவர்கள் புறப்பட்டு எருசலேம் திரும்பிப்போனார்கள் (24:33). அவர்கள் வாய் திறந்தனர், அறிந்தது, உணர்ந்தது, கண்டது, என நிகழ்ந்தது. அனைத்தையும் எருசலேமிலிருந்த அனைவருக்கும் விளக்கமாக எடுத்துரைத்தார்கள் (24:35).

சாதாரண, அனுதின உணவை உண்ணும் போதே உடல் ஊக்கம் பெறும் நாம், உயிர்த்த இயேசுவின் உன்னத உடலை உண்டு, உதிரத்தைப் பருகி ஊக்கத்தையும், உற்சாகத்தையும் பெற்று அனுதினமும் கிறிஸ்துவுடனான கூட்டுறவில் மகிழ்ந்து முழுவாழ்வு வாழ்வோம். இவ்வுண்மையை, இயேசு அனுபவத்தை அன்றாட வாழ்வில் விரைந்து பிறர் அறியச் செய்வோம் உயிர்த்த இயேசுவின் அன்புக் கட்டளைக்கு (மத் 28:18-20). உண்மையாய் கீழ்ப்படிவோம்.

அருள்திரு. D. **ஜாண் ஜெபதாஸ்**

10-05-2020 **உயிர்ப்புக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு**

# கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல் : வழி

**BELIEVING IN CHRIST : THE WAY**

விப 14:10-20 திப 16:19-34
திபா 116 யோவா 14:1-7

**"இயேசு அவரிடம், வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை".** (யோவா 14:6)

அரசு பொது மருத்துவமனைக்குச் செல்ல ஒருவர் மூன்று பேரிடம் வழி கேட்டார்.

முதலாம் நபர் கூறினார் : நான் இந்த ஊருக்குப் புதியவன் எனக்கு வழி தெரியாது என்றார்.

இரண்டாம் நபர் : நானும் அங்கு செல்லத்தான் நிற்கிறேன், நீங்கள் தெரிந்தால் சொல்லுங்கள் என்றார்.

மூன்றாம் நபர் : அரசு பொது மருத்துவமனைக்கு உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு செல்லவேண்டும் என்றார்.

அரசு பொது மருத்துவமனைக்கே வழி காட்டத் தெரியாத மனிதர் விண்ணகம் செல்ல வழிகாட்ட முடியுமா? விண்ணகம் செல்ல வழி; கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்வதே என்பதைச் சுட்டிக்காட்டுவதே இன்றைய சிந்தனை தலைப்பு. கிறிஸ்துவில் கொள்ளும் நம்பிக்கையின் வெளிப்பாடு எத்தகையது? என்று தியானிக்கும்போது மூன்று உண்மைகளை புரிந்து கொள்ளலாம்.

## *1. சவாலைச் சந்திக்கும் வாழ்வு* : (விப 14:10-20)

வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் சவாலை சந்திப்பதின் மூலமாக நாம் கிறிஸ்துவில் கொள்ளும் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறோம்.

இஸ்ரயேலரின் விடுதலைப் பயணத்தில் முன்னால் செங்கடல், பின்னால் பார்வோன் படைநெருங்கி வந்து கொண்டிருக்க, பெரிதும் அச்சமுற்றவர்களாய் மோசேயை நோக்கி, "எகிப்தில் சவக்குழிகள் இல்லையென்றா நீர் எங்களைப் பாலைநிலத்தில் சாவதற்கு இழுத்து வந்தீர்? எகிப்திலிருந்து எங்களை வெளியேற்றி இப்படி எங்களுக்கு செய்துவிட்டீரே! எங்களை விட்டுவிடும் நாங்கள் எகிப்தியர்களுக்கு ஊழியம் செய்வோம் என்பது தானே எகிப்தில் நாங்கள் உம்மிடம் கூறிய

வார்த்தை! ஏனெனில் பாலைநிலத்தில் செத்தொழிவதைவிட எகிப்தியருக்கு ஊழியம் செய்வதே எங்களுக்கு நலம் என்றனர்'' (விப 14:11,12).

இவ்வாறு வாழ்வில் சவாலை சந்திக்க விருப்பமற்று அடிமை வாழ்வே மேலானது என்ற தங்கள் இறைநம்பிக்கை இல்லா வாழ்வை இங்கு வெளிப்படுத்தினர். ஆனால் மோசே மக்களைநோக்கி ''அஞ்சாதீர்கள் நிலை குலையாதீர்கள்! இன்று ஆண்டவர் தாமே உங்களுக்காக ஆற்றும் விடுதலை செயலைப்பாருங்கள், இன்று நீங்கள் காணும் எகிப்தியரை இனிமேல் என்றுமே காணப்போவதில்லை. ஆண்டவரே உங்களுக்காகப் போரிடுவார்; நீங்கள் அமைதியாயிருங்கள் என்றார்.'' (விப 14:13,14).

வாழ்வில் சந்திக்கும் சவால்களை கண்டு பின்வாங்கும் வாழ்வு கிறிஸ்துவில் கொள்ளும் நம்பிக்கையின் வெளிப்பாடு அல்ல சவால்களை சந்தித்து சாதிக்கும் வாழ்வுதான் கிறிஸ்துவில் கொள்ளும் நம்பிக்கையின் வெளிப்பாடு.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை கெத்சமனே தோட்டத்தில் உரோமை படைவீரர்கள் ஆண்டவரை பிடிக்க வந்தபோது, தமக்கு நிகழப்போகிற அனைத்தையும் இயேசு அறிந்து, ''யாரைத் தேடுகிறீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் நாசரேத்து இயேசுவை தேடுகிறோம்'' என்று கூற ''நான்தான்'' என்னைத்தான் தேடுகிறீர்கள் என்றார். பின்னர் தமது சீடர்களை போகவிடுங்கள் என்று, சவாலைச் சந்திக்க சீடர்களுக்கும், இன்றைய அடியவர்களாகிய நமக்கும் ஆற்றல்மிகு அற்புத பாடத்தை கற்றுக்கொடுக்கின்றார்.

கிறிஸ்துவுக்காக நாம் அனுதினமும் சந்திக்கும் சவாலை எதிர் கொள்வதில்தான் நமது கிறிஸ்துவில் கொள்ளும் நம்பிக்கை வெளிப்படுகிறது.

***2. பாடுகளில் மகிழ்ந்திருக்கும் வாழ்வு*** : (திப 16:19-34)

பாடுகளில் மகிழ்ந்திருக்கும் வாழ்வுதான் கிறிஸ்துவில் நம்பிக்கைக்கொள்ளும் வாழ்வு என்பதை பவுலார் தன்னுடைய வாழ்வில் வெளிப்படுத்துகிறார்.

பவுலும் சீலாவும் பிலிப்பு நகரில் நற்செய்திபணிசெய்து கொண்டிருந்தபோது குறிசொல்லும் ஆவியைத் தம் முன்கொண்ட அடிமைப்பெண் ஒருவர் குறிசொல்லி கொண்டிருந்தாள். அவளிடம் இருந்த தீய ஆவியை திருத்தூதுவர்கள் துரத்தனர். இதனால் அவளை அடிமையாக வைத்திருந்தவர்களின் வருவாய் நின்றுவிட்டதால்;

பவுலையும் ஷீலாவையும் இழுத்து ஆட்சியாளர்களிடம் கொண்டுநிறுத்தி "இவர்கள் யூதர்கள்; நமது நகரில் கலகம் விளைவிக்கிறார்கள். உரோமையராகிய நாம் ஏற்றுக்கொள்ளவோ, செயல்படுத்தவோ இயலாது முறைகளை இவர்கள் அறிவிக்கிறார்கள்" என்றனர். உடனே மக்கள் திரண்டெழுந்து அவர்களைத் தாக்கினார்கள். நடுவர்கள் அவர்கள் மேலுடைகளைக் கிழித்து அவர்களை தடியால் அடிக்க ஆணையிட்டார்கள். அவர்களை நன்கு அடித்து சிறையில் தள்ளி உட்சிறையில் கால்களை தொழுமரத்தில் உறுதியாய் மாட்டிவைத்தனர். இத்தகைய வேதனையின் உச்சகட்டத்தில் பவிலும் சீலாவும் கடவுளுக்குப் புகழ்ப்பா பாடி இறைவனிடம் வேண்டினர். இத்தகைய சூழலில் அவர்களை கடவுள் விடுவிக்கிறார். இந்த நிகழ்வை கண்ட சிறைச்சாலை காவலரையும் அவன் வீட்டாரையும் கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளச் செய்தது.

ஆம் கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்வோர் பாடுகளை கண்டு அஞ்சி ஒடுங்கி விடுகிறவர் அல்ல பாடுகளிலும், வேதனையின் உச்சியிலும் கடவுளுக்கு புகழ்ப்பா பாடி கிறிஸ்துவில் கொண்டுள்ள தம் பற்றுறுதியை வெளிப்படுத்துவர்.

### ***3. கிறிஸ்துவை வாழ்ந்து காட்டுவது*** : (யோவா 14:1-7)

கிறிஸ்துவில் கொள்ளும் நம்பிக்கையின் வெளிப்பாட்டில் முழுமை கிறிஸ்துவைப்போல வாழ்ந்து காட்டுவது ஆகும். பற்றுறுதியாளர்களின் உள்ளக் கிடக்கையில் உள்ள இரண்டு வேட்கைகள். ஒன்று கடவுளைக் காணவேண்டும் (பிலிப்புவிடம் இருந்த வேட்கை) மற்றொன்று விண்ணகம் செல்ல வழியை அறிய வேண்டும் (தோமாவிடம் இருந்த வேட்கை (யோவா 14:5) இவ்விரு வேட்கைகளையும் நிறைவு செய்கிறவர் கிறிஸ்து ஒருவரே. அவரில் உலகம் கடவுளைக் காண்கிறது. அவரில் உலகம் விண்ணகம் செல்ல வழியைக் கண்டது.

இன்றைய நற்செய்தியில் கிறிஸ்துவிடம் விண்ணகத்திற்கு வழிகேட்ட தோமாவிடம் கிறிஸ்து, நானே வழி...என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை (யோவா 14:6) தம்மிடம் இரவில் வந்த நிக்கதேமிடம் கிறிஸ்து "விண்ணகத்திலிருந்து இறங்கி வந்துள்ள மானிடமகனைத் தவிர வேறு எவரும் விண்ணகத்திற்கு ஏறிச் சென்றதில்லை" (யோவா 3:13)

கிறிஸ்து ஒருவரே விண்ணகத்திற்கு வழிகாட்ட முடியும் ஏனெனில் அவர் ஒருவரே விண்ணகத்திலிருந்து மண்ணகம் வந்தவர். "கிறிஸ்து வெறும் கைக்காட்டியல்ல; மாறாக அவர் நமது வழிகாட்டி, வழியை காட்டுபவர் மட்டுமல்ல; நம்மோடு வழித்துணையார் வருபவர்" கிறிஸ்து

நமக்குக் காட்டிய வழி அன்பின் வழி; தியாகத்தின் வழி; மன்னிப்பின் வழி; தாழ்ச்சியின் வழி; பணிவிடை புரியும் வழி; நம்மையே வெறுமையாக்கும் வழி. இவ்வழியில் சென்றால் நாம் விண்ணகம் அடைவது உறுதி; விண்ணகத்தில் கிறிஸ்து நமக்காக ஏற்பாடு செய்துள்ள இடத்தைப் பெறுவதும் உறுதி. ஒருவர் ஆலயத்திற்கு குதித்து, குதித்து சென்றாராம் ஏனெனில் அவர் ஒரு பக்திமான். மற்றொருவர் ஓடி, ஓடி பரிசுத்த பந்தியில் பங்கு கொண்டாராம் ஏனெனில் அவர் ஒரு நீதிமான்.

ஆம் மான் குதித்து, குதித்து ஓடுவது போல் நாமும் ஆர்வத்துடன் ஆண்டவரது இல்லம் வருவோம். “கலைமான்கள் நீரோடைகளுக்காக ஏங்கித் தவிப்பது போல் கடவுளே! என் நெஞ்சம் உமக்காய் ஏங்கித் தவிக்கின்றது” (திபா 42:1)

ஆலயம் வந்து ஆண்டவர் நம்மோடு பேசும் அருள்வாக்கிற்கு செவிமடுப்போம்; நமது இதயத்தை மேலே எழுப்புவோம்; கிறிஸ்துவின் திருவுடலை உண்டு அவருடன் இணைவோம். அப்போது யோவா 14:12-ல் கிறிஸ்து கூறுவதுபோல “நாமும் கிறிஸ்து புரிந்த வல்ல செயல்களைச் செய்ய முடியும்; அவற்றைவிடப் பெரிய செயல்களையும் செய்ய முடியும்” இன்று நாம் செய்ய வேண்டியவை கடவுள் நம்மோடிருப்பதை அவருடைய உடனிருப்பை இன்றைய உலக மக்களுக்கு மறக்க முடியாத விதத்தில் வெளிப்படுத்துவதே, அதாவது நம் வாழ்வு வழியாய் கிறிஸ்துவை வாழ்ந்து காட்டுவதே, நம்மில் கிறிஸ்துவைக் காணும் அளவுக்கு நமது வாழ்வு ஒளியமயமாக அமைய வேண்டும். இன்றைய உலகிற்கு நாம் வழிகாட்டிகளாக அல்ல கிறிஸ்துவைப் போல வழியாக, ஒளியாக, வாழ்வாக விளங்க வேண்டும். ஆம் கிறிஸ்துவில் கொள்ளும் நம்பிக்கையின் வெளிப்பாடு கிறிஸ்துவை வாழ்ந்து காட்டுவது.

இயேசுவை வாழ்க்கையில் காட்டுங்களே
பேச்சில் அல்ல செயலில் நல்ல
இயேசுவை வாழ்வோராய் காட்டுங்களே

ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் ஒரே வழி கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல்.

இந்த வழியில் வாழ வழிநடக்க

1. சவால்களைச் சந்தித்து
2. பாடுகளில் மகிழ்ந்து
3. கிறிஸ்துவை போல் வாழ்ந்து

இறையரசைச் சுவைப்போம் விரிவாக்குவோம் ஆமென் !

அருள்திரு. S.M. **டேனியல் தேவதாசன்**

17-05-2020

**உயிர்ப்புக்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு**

## அருட்பணி : கிறிஸ்துவின் அமைதியைப் பகிர்தல்

**MISSION AS SHARING CHIRST'S PEACE**

| | |
|---|---|
| மீக் 4:1-7 | பிலி 4:4-9 |
| திபா 85 | லூக் 24:36-49 |

**"உங்களுக்கு அமைதி உரித்தாகுக!"** (லூக் 24:36)

"அருட்பணி" (Mission) என்ற வார்த்தையைப் பற்றிய புரிதல் ஒவ்வொரு கால கட்டங்களிலும் பல மாற்றங்களை கண்டிருக்கிறது. பொதுவாக 1952 முன்பு வரை "அருட்பணி" என்பது "மனிதர் செய்வது" என்கிற எண்ணமே மேலோங்கி இருந்தது. ஆனால் 1952-ல் Wellingen -ல் கூடிய IMC (International Missionary Council)-ன் கூடுகை "அருட்பணி கடவுளுடையது" ("Missio Dei" means Mission of God) என்ற வலுவான செய்தியைப் பிரகடனம் செய்தது. அதன் இன்னொரு அறிக்கை சொன்னது கடவுள் தம் அருட்பணியாக குமாரன் இயேசுகிறிஸ்துவை இவ்வுலகத்தில் அனுப்பினார். பிதாவும் குமாரனும் இணைந்து தூய ஆவியாரை அனுப்பினர். தூய ஆவியார் திருச்சபையை அனுப்புகிறார். ஆகவே அருட்பணி என்பது Karl Hartenstein-ன் வார்த்தைகளில், "அனுப்பப்பட்ட குமாரனாகிய கிறிஸ்துவின் அருட்பணியில் பங்கெடுப்பது" (Mission is Participation in the sending of the son in the Missio Dei) என்று விளக்கப்பட்டது.

எனவே மேற்கத்திய திருச்சபை அருள்தொண்டர்களை அருட்பணித்திட்டமாய் அனுப்புவதில் தீவிரம் காட்டியது. பல மிஷனரி இயக்கங்கள் புற்றீசல்கள் போல் எழும்பின. எனினும் அருட்பணியை குறித்த புரிதல் முற்றுப் பெறவில்லை. அருட்பணியில் வார்த்தையும்-செயலும் (Word and Deed) முக்கிய பங்காற்ற ஆரம்பித்தன. அருட்பணி கடவுளுடையது. அவர் படைப்பைக் கூட அருட்பணியில் பயன்படுத்த முடியும் (Holistic Mission). அவர் நினிவேயை சந்திக்க யோனாவையும், யோனாவை சந்திக்க நினிவே மக்களையும், சிறப்பாக படைப்பாகிய கடலையும், அறிவாற்றல் குறைந்த மீனையும் பயன்படுத்தினார். எனவே ஆண்டவரின் அருட்பணியின் ஆழங்களை அறிவது எளிதல்ல, இப்படி பல புரிதல்கள் வரலாற்றில் திருமறை பார்வையிலிருந்து எழுந்தன. சில ஆண்டுகளுக்கு முன் போப் பிரான்சிஸ்

தனது திருச்சபைக்கான கடிதத்தில் "நான் ஆண்டவரின் அருட்பணியாக இந்த பூமியில் இருக்கிறேன்" (I am the mission of God on this earth). நான் ஆண்டவரின் அருட்பணியை செய்யவில்லை. "என் வாழ்வே அருட்பணி" என்று எழுதினார். இதுவே திருமறையின் தெளிவு.

அருட்பணி என்ற வார்த்தையின் அர்த்தத்தைப் போலவே ஆண்டவரது அருட்பணித் திட்டங்களும் ஆராய்ந்து முடியாதவை. அமைதியை பகிரச் செய்வதும், நம்மைக் கொண்டு அமைதியை உருவாக்குவதும் அவரது அருட்பணித் திட்டங்களில் ஒன்று.

அமைதியை உருவாக்குவதைவிட அது இயல்பாய் உருவாவதே நிலையானது. ஒரு சமூகத்தின் அமைதி என்பது அதன் ஒவ்வொரு தனிமனிதனும் மதிப்போடும், நீதியோடும், விடுதலையோடும், முழுநலனோடும் வாழ்தலை அடிப்படையாகக் கொண்டது. லேவி 26:5,6-ல் ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுக்கு சொல்லும் போது, நீங்கள் விரும்பினவற்றை உண்டு நாட்டில் நலமாய் வாழ்வீர்கள், நாட்டிற்கு அமைதி அருள்வேன். அச்சுறுத்துவாரின்றிப் படுத்துக் கொள்வீர்கள்.... வாள் உங்கள் நாட்டில் உலாவுவதில்லை என்கிறார். இந்த அமைதியை மனிதரால் உருவாக்க முடியாது, ஆண்டவரால் மட்டுமே உருவாக்க முடியும். அமைதியை முதலில் என்னிலிருந்து, என் குடும்பத்திலிருந்து, என் சமூகத்திலிருந்து அதைத் துவங்கவேண்டும். அதற்கு நான் என்னை ஆண்டவரின் அருட்பணியாகக் கொடுக்க வேண்டும். அவர் நம்மை தமது கருவிகளாக, அவரது அருட்பணியாக பயன்படுத்த விரும்புகிறார். ஏனென்றால் நம் வாழ்வே அருட்பணி, அவ்வாழ்வை ஆண்டவருக்காய் பகிரும் போது அவரது அருட்பணித்திட்டத்தில் ஒன்றாகிய அமைதியை அவரே உருவாக்குகின்றார்.

அமைதி உருவாக்குவதற்காய் ஆண்டவரின் அருட்பணியாய் என் வாழ்வை நான் யாரோடு பகிர்வது? எப்படி பகிர்வது? எதற்காக பகிர்வது? என்பதைத் தன் வாழ்வையே நமக்காக தந்து "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்று (லூக்கா 24:36-49) கூறி, உயிர்த்தெழுந்த திருக்காட்சி தந்து தம் அன்பர்களை வாழ்த்திய இயேசு கிறிஸ்துவின் வாழ்விலிருந்து தியானிக்கலாம்.

### *1. கலக்கமுற்றிருக்கும் மக்களினத்தோடு அமைதியைப் பகிர்தல் :* (லூக் 24:36)

கல்லறை வாயிலிருந்த கல் புரட்டப்பட்டிருக்கிறது. இயேசுவின் உடலைக் காணவில்லை என்றதுமே கலங்கித் தவித்த அவரது அன்பர்கள்,

ஒருபுறம் நாமும் கைது செய்யப்பட்டு விட்டுவிடுவோமோ? என்று அரசைக் குறித்த அச்சத்தோடும், இன்னொருபுறம் வீட்டின் உள்முற்றத்தின் நடுவில் நெருப்பு மூட்டி குளிர் காய்ந்து கொண்டிருந்த பேதுருவை அன்று (லூக் 22:55-61). சாதாரண பணிப் பெண்ணே இயேசுவின் சீடர் இவர் என்று அடையாளம் கண்டு கொண்டார். எனவே சாதாரண ஜனங்களே நம்மைக் காட்டிக் கொடுத்துவிடுவார்கள் என்று மக்களைக் குறித்த அச்சத்தோடும் கலங்கி, தனிமைப்படுத்தப்பட்டவர்களாக ஒதுங்கி, ஒளிந்து கொண்டிருந்த சீடர்களின் நடுவில் இயேசு வந்து நின்று அவர்களுக்கு என்று சொல்லி நம்பிக்கையைப் பகிருகிறார். “உங்களுக்கு அமைதி உரித்தாகுக”

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் தேசத்திலும் இன்றும் எண்ணிலடங்கா மக்கள் இதைப்போல் கலக்கத்துடனும், நடுக்கத்துடனும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக சென்ற ஆண்டிலே (2019) 49 பிரபலங்கள் நமது பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதில் தேசத்தில் நடக்கும் சில கொடுமைகளை குறிப்பாக சமய உணர்வு சார்ந்த கும்பல் வன்முறைகளைப் பட்டியலிட்டு பிரதமரின் கவனத்திற்கு கொண்டு சென்றார்கள். கடிதம் எழுதிய இரண்டு மாதங்களுக்குள்ளாய் அவர்கள் மீது தேசதுரோக வழக்குப் பதியப்பட்டது. பேச்சுரிமை, எழுத்துரிமை, சமய உரிமை, கலாச்சார உரிமை இப்படி அனைத்திற்கும் அச்சுறுத்தலும், அமைதியற்ற சூழலும் எழும்பி நாம் பயத்தோடும், கலக்கத்தோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இச்சூழலில் தான் நாம் ஆண்டவரின் அருட்பணியாய் நம் வாழ்வை பகிர அழைக்கப்படுகிறோம். மீக்கா இறைவாக்கினர் தனது நூலில் 4:1-7-ல் ஆண்டவரின் அனைத்துலக அருளாட்சியில் ஏற்படும் மாற்றங்களைப் பட்டியலிடுகிறார். வேற்றினத்தார் ஆண்டவரின் வழிகளைத் தேடுவார்கள் (4:2), அமைதிக்காக அங்கே ஆயுதங்களின் தேவை இருக்காது (4:3), அச்சுறுத்துதல் இராது (4:4), விடுதலை அங்கு இருக்கும் (4:5), ஒடுக்கப்பட்டவர்கள் புறமாக்கப்பட்டவர்கள், கூட்டி சேர்க்கப்படுவார்கள். அமைதி அங்கு தளைத்திருக்கும். ஆண்டவர் அவர்கள் மேல் ஆட்சிபுரிவார்.

நாம் வாழும் சூழலில் நம் வாழ்வை ஆண்டவரின் அருட்பணியாய் பகிரும் போது ஆண்டவரின் ஆளுகையின் அமைதியை இங்கு அவர் விரிவாக்குவார். கலங்கி இருக்கும் மக்கள் அமைதி பெறுவதற்காக நம் வாழ்வைக் கொடுப்போம்.

## *2. கனிந்த உள்ளத்தோடு அமைதியைப் பகிர்தல் :*

(லூக் 24:38-43)

கலக்கத்தோடும், அச்சத்தோடும் இருந்த சீடர்களிடம் ஏன் கலங்குகிறீர்கள்? ஏன் உள்ளத்தில் ஐயம் கொள்ளுகிறீர்கள் என்று கனிவோடு வினவி, தம் காயப்பட்ட கைகளையும், கால்களையும், காண்பித்து, அவர்களை நம்பிக்கையோடு மகிழ்ச்சிப்படுத்தி அவர்களோடு அமர்ந்து உணவும் உண்டு தன்னை அனுப்பிய பிதாவின் அருட்பணியை இயேசு நிறைவேற்றி தன் வாழ்வையே பகிருகிறதை இங்கு காணலாம்.

நம் சமூகம் கனிவான நம் வார்த்தைகளுக்காய், வாழ்வுக்காய் காத்து நிற்கிறது. பிறரைக் குறித்து சிந்திக்க இன்று நேரமில்லை. அவசர உலகம் இது. அன்புக்கும், அரவணைப்புக்கும் இங்கு இடமில்லை. நீதிக்கும் நியாயத்திற்கும் மார்க்கமில்லை. இச்சூழலில் பவுலடிகளார் பிலிப்பியருக்கு எழுதிய மகிழ்வின் மடலில் கனிந்த உங்கள் உள்ளம் எல்லா மனிதருக்கும் தெரிந்திருக்கட்டும் என்கிறார் (பிலி 4:5). நம் கனிந்த உள்ளம், உண்மை, கண்ணியம், நேர்மை, தூய்மை, விரும்பத்தக்கவை, பாராட்டுதற்குரியவை, போற்றுதற்குரியவை, நற்பண்பு ஆகியவற்றின் வழியாக வெளிப்பட வேண்டும். அப்பொழுது அமைதியை அருளும் கடவுள் நம்மோடிருப்பார் என்று பவுல் சொல்கிறார் (பிலி 4:8,9).

நம் வாழ்வு கனிந்த உள்ளத்தினால் மட்டுமல்ல, ஆவியின் கனிகளாலும் நிரப்பப்பட்டு பகிரப்படுவது சிறப்பானது. அப்பொழுது ஆண்டவர் அருளும் அமைதி நம் வாழ்வு என்னும் அருட்பணியால் நம் மண்ணில் பகிரப்படும், அதற்காக நம் வாழ்வைக் கொடுப்போம்.

## *2. அருட்பணி முழுமை பெற அமைதியைப் பகிர்தல் :*

(லூக் 24:44-49).

சீடர்களுடன் கனிவுடன் பேசி உணவுண்ட இயேசுகிறிஸ்து, தன்னைக்குறித்த கடவுளின் அருட்பணித்திட்டத்தை விவரிக்கிறார். தன்னிலே நிறைவேற வேண்டிய மோசேயின் சட்டநூலிலும், இறைவாக்கினர் நூலிலும், திருப்பாடல்களிலும் எழுதப்பட்டிருக்கிற ஆண்டவரின் அருட்பணித்திட்டங்களை, அவர்கள் மனக்கண்களைத் திறந்து அறியச் செய்கிறார். கிறிஸ்துவின் அருட்பணியில் முத்தாய்ப்பானது, பாவமன்னிப்புப் பெற மனம் மாறுங்கள் என எங்கும் பறைசாற்றப்படுவது (லூக் 4:47). நம் வழியாய் இப்பணி இன்றும் முழுமைப் பெற வேண்டும் (லூக் 4:48) நாமே சாட்சிகள்.

மனிதர்களின் மனக்கடினத்தினாலே அநேக தீமைகள் எங்கும் மலிந்திருக்கின்றன. மனந்திரும்புதலும், பாவமன்னியும் இல்லாத கொடிய சமூகமாய் நம் சமூகம் மாறிவிட்டது. கிறிஸ்து உருவாக்கும் அமைதி வாழ்வு எங்கும் மலர, ஆண்டவரின் அருட்பணி நம்மில் முழுமை பெற, அவரது வல்லமையால் நிரப்பப்பட (லூக் 24:49). நாம் நம் வாழ்வை ஆண்டவரின் கரங்களில் கொடுப்போம். கலக்கமுற்றிருக்கும் மனுக்குலத்தோடு நம் வாழ்வைக் கொடுத்து கனிந்த உள்ளத்தை நம் வாழ்வின் வழிகாட்டி, ஆண்டவரின் அருட்பணி நம்மில் தொடர (லூக் 24:47) நம்மில் முழுமை பெற நம்மைப் பூரணமாகக் கொடுக்கும் போது ஆண்டவர் அருளும் அமைதியை இம்மனுக்குலம் பெறும். அப்புதிய சமூகம் உருவாக ஆண்டவர் நம்மை தமது அருட்பணியாகப் பயன்படுத்துவாராக. ஆமென்.

அருள்திரு. J. **ஹெரால்டு அனித்**

24-05-2020 **உயிர்ப்புக்குப் பின்வரும் ஆறாம் ஞாயிறு**

# தூய ஆவியாரின் வாக்குறுதி

**PROMISE OF THE HOLY SPIRIT**

யோவே 2:28-32 கலா 5:22-26
திபா 42 யோவா 14:15-21

**"உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன்."** (யோவா 14:16)

நம் ஆண்டவர் இயேசு நமக்குள் என்றும் நிறைந்திருக்க தூய ஆவியைத் தருவதாக வாக்களிக்கின்றார் என்றும் நம்முடன் தங்க விரும்பும் இறைவன் துணையாளராகத் தூய ஆவியாரைத் தருகின்றார். "ரூவாஹ்"என்னும் எபிரேய சொல்லுக்கும் "நின்யூமா" என்னும் கிரேக்க சொல்லுக்கும், Spirit என்று பொருள் இது நேரடியாக காற்று, மூச்சு என்னும் "வாழ்வு தரும்" பொருளாகவும் அமைகின்றது. இத்துடன் கடவுளின் தூய தன்மையை இணைக்கின்ற போது "தூய ஆவி" என்னும் இறை இயல்பு தன்மையை காட்டுகின்றது. இத்தூய ஆவியார் நம் அனைவரையும் ஆட்கொண்டு நம்மைத் தூய வாழ்வுக்கு தகுதிப்படுத்துகின்றார்.

Parakletos என்னும் கிரேக்கச் சொல் "வழக்காடுகிறவர்," "சட்ட ஆலோசகர்" என்னும் பொருளைத் தருகின்றது. இவை தீமையோடு எதிர்த்து வழக்காடி, சட்ட ஆலோசனையை நிறைவேற்றி தூயவராக வாழ்கின்ற, வாழ்வினை தரும் துணையாளரைத் தருவதாகவும் வாக்குரைக்கின்றார். இவரில் நாம் பெறும் நன்மைகளை தியானிப்போம்.

### *1. நிறைவாக்கும் தூய ஆவியார் :* (யோவே 2:28,29)

"அதற்குப் பின்பு, நான் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியை பொழிந்தருள்வேன்....." என்னும் இறைவார்த்தைகளானது முழுமையான வாக்குறுதியை தருவதாக அமைகின்றது. அதாவது, தூய ஆவியார் படைப்பு முதலே செயல்படுகின்றவர். (தொநூ 1:2) தூய ஆவியார் இறை ஏவுதலால் இறைமக்கள் மீது செயலாற்றுகின்றார். தலைவர்கள், நீதித்தலைவர்கள், அரசர்கள் மற்றும் இறைவாக்கினர், குறிப்பாக மோசே, யோசுவா, தாவீது, சாலமோன், எசா 42-ல் கூறப்படும் இறை ஊழியர் ஆகியோரது வாழ்வுவழி செயல்படுகின்றார். மட்டுமல்ல ஒருவரிடமிருந்து

மற்றொருவரிடம் செல்வதையும் அறியலாம். மோசேயிலிருந்து யோசுவாவுக்கும், சவுலிடமிருந்து தாவீதுக்கும், எலியாவிடமிருந்து எலிசாவுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததைத் திருமறை கூறுகிறது.

இவை அனைத்துமே ஒரு சிலரது வாழ்வில் தூய ஆவியாரின் செயல்பாடு இருப்பதாகக் காட்டப்படுகின்றது. ஆனால், யோவேல் 2-ம் அதிகாரத்தின் வசனங்களில் "மாந்தர் யாவர் மேலும்" தூய ஆவியைப் பொழிவதாக வாக்குரைக்கின்றார். பெற்றோர், பிள்ளைகள், வேலைக்காரர் ஆகிய அனைவர் மீதும் எந்த வேற்றுமையும், ஏற்றத்தாழ்வுமில்லாமல் அனைவருக்கும் தூய ஆவியார் வாக்குப்பண்ணப்படுகின்றார். பலவீனத்தைக் குறிக்கும் மாம்சத்தை பலத்தை குறிக்கும் தூய ஆவியார் ஆட்கொள்வது என்பது ஆவியாரின் அருள்மாரியில் வயது, பால், இனம், தாழ்த்தப்பட்டோர் என்னும் பேதமில்லாமல் அனைவர் மீதும் முழுமையான, நிறைவான தூய ஆவியார் ஊற்றப் பெறுவதாக வாக்குரைக்கப்படுகின்றார். ஒரு சிலருக்கென்றிருந்தது இன்று அனைவருக்குமாக நிறைவாய் கிடைக்கப் பெறுகின்றது.

***2. நிலைவாழ்வுக்கான தூய ஆவியார் :*** (கலா 5:22-26)

தூய ஆவியாரின் வாழ்வு நிலையான வாழ்வை தருவதாகும். அதை அறிந்து கொள்ளும் அடையாளம் தான் ஆவி கனியின் (கலா 5:22-26) இறைமகனாம் இயேசுவிடம் அவரின் சீடர்கள் "போலி இறைவாக்கினரை எப்படி அடையாளம் காண்பது? எனக் கேட்டபோது" "அவரின் வாழ்வின் கனிகளால் அறியலாம்" என்றார் (மத் 7:20). புதிய ஏற்பாட்டில் தூய ஆவியார் கடவுளால், உயிர்த்த கிறிஸ்துவால் அனுப்பப்பட்டவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

திருத்தூதர் பணிகள் நூலில் தூய ஆவியாரின் செயல்பாடுகளாக நற்செய்தி அறிவிப்பு, திருமுழுக்கு, நல்லொழுக்க வாழ்வு ஆகியன கூறப்பட்டுள்ளன. பவுலாரின் கடிதங்களிலும் இவை மெய்ப்படுத்தப் பட்டுள்ளன. ஊனுடல் ஆவியினின்று பிரித்துக் காட்டப்பட்டுள்ளது. ஊனுடல் பழைய காலத்திற்கும், ஆவி புதிய காலத்திற்கும் அடையாளமாயிருக்கின்றன. எனவே, மாய்மால உலகில் ஊனுடல் சார்ந்த செயல்கள் பெருகி வருகின்றன. அவை நிலையான வாழ்வை அல்ல, அழிவையே தரும். ஆகவே, ஆவியின் கனி நம் வாழ்வில் நிலைத்திருந்தால் அதுவே நம்மை நிலைவாழ்வுக்கு திருநிலைப்படுத்தும். நம் வாழ்வில் ஆவியின் கனிகள் உண்டா என ஆராய்வது சிறப்பு. நம்முள் ஆவியாரின் செயல் என்றும் நிலைத்திருக்க கனி கொடுத்து வாழ்வோம்.

***2. நீடிய வாழ்வுக்கான வாக்குறுதி*** (யோவா 14:15-21)

தூய வாழ்வின் சிறந்த பலன் நீடிய வாழ்வு. இது தூய ஆவியாரின் துணையோடு கிடைக்கும் ஒன்று. வாக்குறுதியாளராம் ஆண்டவரின் சிறந்த செயல்பாடு, நான் துணையாளரை அனுப்புவேன். அவர் உங்களுக்குள்ளே இருக்கின்றார் என்கின்றார். நமது பற்றுறுதி வாழ்வே நீடிய வாழ்வைத் தரும். வாழ்வின் தத்துவங்கள் பல உள்ளன. அவை ஒளி, அமைதி, ஆசி, நல்வாழ்வு, வெற்றி, பிரமாணிக்கம், மனமாற்றம், மகிழ்ச்சி, நெடிய வாழ்வு ஆகியன. இதில் நீடிய நெடிய வாழ்வு என்பது தனி சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகின்றது. அது நேர்மையான வாழ்வுக்கு கிடைக்கும் வெகுமதியாகவும் பார்க்கப்படுகின்றது. நற்செய்தி நூலில் இயேசுகிறிஸ்து தம் அடியவர்களோடு "உலகம்" அவரைப் பெற்றுக் கொள்ளவில்லை. நீங்கள் பெற்றுக் கொண்டீர்கள். எனவே, 'என்றென்றும் உங்களோடு இருக்கும்படி துணையாளரைத் தரும்படி தந்தையிடம் கேட்பேன்' என்கிறார். அவர் நமக்குள், நிறைவாக, நிலையாக, நீடிய வாழ்வுக்கு இட்டுச் செல்லும் தூய ஆவியாராக என்றும் நம்முடன் இருப்பாராக! ஆமென்.

திரு. G.R. **ஜெபசிங்**

31-05-2020

பெந்தக்கோஸ்து ஞாயிறு

# வாரும் தூய ஆவியாரே, முழுப் படைப்பையும் மாற்றுருவாக்கும்

## COME HOLY SPIRIT, TRANSFORM THE WHOLE CREATION

எசே 36:24-36 | திப 2:1-13
திபா 29 | யோவா 20:19-23

**"என் ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன்."** (எசே 36:27)

அமெரிக்காவில் புகழ்பெற்ற ஏரி மிக்ஸிகன் ஏரி. அந்த ஏரியில் ஜனவரி மாதத்தில் தண்ணீரெல்லாம் உறைந்து போய் பனிக்கட்டி படர்ந்திருக்கும். அந்நேரத்தில் சிறியோரும், பெரியோரும் அங்கு பனிச் சறுக்கு விளையாடுவது வழக்கம். 1984-ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் தேதி நான்கு வயது சிறுவன் ஜிம்மி தன் தந்தையுடன் விளையாட ஏரிக்குப் போனான். விளையாடிக் கொண்டிருக்கும் போதே திடீரென்று சிறுவனைக் காணவில்லை. பிளந்து போன பனிக்கட்டிகளுக்கிடையே ஆழத்தில் மாட்டிக் கொண்டான். சிறுவனை கண்டுபிடிப்பதற்கே 20 மணிநேரம் ஆனது. பின்னர் இழுத்து வெளியே போட்டபோது சிறுவன் விறைத்துப்போய் உறைந்து கிடந்தான். மூச்சு இல்லை, இதயத்துடிப்பும் நின்று போயிருந்தது. இருந்தாலும் அங்கே இருந்தவர்கள் முடிந்தவரை முயற்சி செய்தனர். வானஊர்தி (helicopter) துணையால் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று heart massage செய்தனர். இரத்தக்குழாய் வழியாக மருந்து கொடுத்தனர். நுரையீரலுக்குள்ளே oxygen pump செய்தனர், உடல் முழுமையும் heat lamp துணையால் சூடாக்கினர். ஆனாலும் மருத்துவர்களால் இருதயத்தை இயங்கவைக்க இயலவில்லை. ஐந்து முறை electric shock கொடுத்தனர். எந்த முன்னேற்றமும் இல்லை. இருந்தாலும் சிறிது நேரத்தில் ஒரு நம்பிக்கை வந்தது, இறந்து போன நிலைமையிலிருந்த அந்த சிறுவன், கோமா நிலைக்கு வந்தார். இந்த கோமா நிலையிலிருந்து திடீரென்று மீண்டுவந்தாலும் அது ஆபத்தில் முடியும். ஆதலால் மருந்து கொடுத்து மயக்க நிலையிலேயே வைத்தார்கள். ஏறக்குறைய 80 நாட்களுக்குப் பிறகு அச்சிறுவனின் உடலில் மாற்றம் எற்பட்டது. தன் கண்களைத் திறந்தான். ஒரு வாரத்திற்குப் பின்பு சிரித்தான். நான்கு மாதங்களுக்குப் பிறகு கை, காலை அசைத்தான். ஆறு மாதங்களுக்குப் பிறகு வீடு திரும்பினார். 20 மணித்துளிகள் தண்ணீரில் மூழ்கியிருந்ததால்

அதுவும் oxygen இல்லாத நிலையில் மூளை கெட்டுப் போய்விடும். பிழைக்கவே முடியாது. ஆனால் ஜிம்மி என்னும் சிறுவன் உயிர்பெற்றது மருத்துவ உலகில் இன்றும் பேசப்படுகிற ஒரு சாதனை, மைல் கல். மரணத்தின் நிழலில் ஒரு வாழ்வு.

இயேசுவின் மரணத்தோடு எல்லாம் முடிந்தது என்றிருந்த நிலையில் உயிர்ப்பு ஒரு நம்பிக்கையை விதைத்தது. ஆனாலும் சிலுவை மரண அச்சம் திருத்தூதுவர்களை விட்டு அகலவில்லை. நாற்பது நாள்கள் பற்றுறுதியில் திடப்படுத்தி, எருசலேமை விட்டு நீங்காமல் ஒரு தாய்ப் பறவை தன் முட்டைகளை ஒன்று சேர்த்து அடை காப்பது போல இயேசு கிறிஸ்து அனைவரையும் ஒன்றுசேர்த்து விண்ணேற்றம் அடைந்த பத்தாம் நாள் அதாவது உயிர்ப்புக்குப் பின் ஐம்பதாம் நாள், பெந்தகோஸ்துக் என்னும் இந்நன்னாளில், இவ்வுலகில் தூயஆவியார் வந்து இறங்கி திருச்சபையை இம்மண்ணில் பிறக்கச் செய்தார். மரணத்தின் விளிம்பில் வாழ்வு பிறந்தது. அவநம்பிக்கையின் விளிம்பில் தைரியம் பிறந்தது. சிலுவையின் நிழலில் சிறகுகள் முளைத்தன. திருச்சபை பிறந்தது. இந்தப் பெந்தக்கோஸ்து பெருவிழாவில் சிந்தனைப் பொருளாக அமைவது ‘வாரும் தூய ஆவியாரே, முழுப் படைப்பையும் மாற்றுருவாக்கும்’ என்பதாகும்.

படைப்பின் தொடக்கத்தில் தூய ஆவியாரின் பங்களிப்பைத் தொடக்க நூல் தெளிவாக எடுத்துரைக்கிறது. மண்ணுலகு உருவற்று வெறுமையாகவும், ஆழத்தின் மீது இருள் பரவியும் இருந்த நிலையில் கடவுளின் ஆவி நீர்த் திரளின் மீது அசைவாடிக் கொண்டிருந்தார், (தொநூ 1:2) என்ற சிந்தனையுடன் தொடங்குகிறது. அசைவாடுதல் என்பது இயக்க ஆற்றலைக் குறிக்கிறது. அசைவாடிக்கொண்டிருக்கும் தூய ஆவியார் செயல்பட்டு, படைப்பை முழுமைப்படுத்துகிறார். முட்டையினுள் குஞ்சு முடங்கிவிட்டால் அது சாவை சந்திக்கும். ஓட்டினுள் ஆமை ஒடுங்கிவிட்டால் அதற்கில்லை வாழ்வு. விதையினுள் முளை தங்கிவிட்டால் அதற்கில்லை வளர்ச்சி. இவ்வாறு தேக்கநிலை வாழ்வில் நிறைவை அல்ல மாறாக எதிர்மறை அனுபவத்தை தரும். இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் தங்களின் குருவின் மரணத்தை சந்தித்தபோது அச்சம் கொண்டவர்களாய், பூட்டிய இல்லத்தில் முடங்கிப்போய், தேக்கநிலையில் வாழ்ந்தவர்கள். பெந்தக்கோஸ்து நாளில் தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டபோது அவர்கள் மாற்றுருவாக்கம் பெற்றனர். துணிவுடன் கிறிஸ்துவின் பணியைத் தொடர்ந்தனர்.

### *1. மீள்வாழ்வு என்னும் மாற்றுருவாக்கம் :* எசே 36:24-36

ஏழை விவசாயி, ஒருவர் நற்செய்திப்பணி செய்ய விரும்பினார். ஆனால் அவருடைய வறுமையான வாழ்வு, காலை முதல் மாலை வரை உழைத்தாக வேண்டிய சூழல் அதற்கு துணைசெய்யவில்லை. எனவே ஒரு முடிவெடுத்தார். இரவில் இல்லத்திலிருந்து காகிதங்களில் திருமறை நற்செய்திப் பகுதிகளை எழுதுவது எனவும், காலையில் உழைக்கச் செல்லும் போது அதனை வழியில் உள்ள தொடர் வண்டி நிலையத்தில் வைக்கவேண்டும். நாட்கள் சென்றன. ஒரு ஞாயிறு தொழுகை, அருளுரைக்கு வந்தவர் சாட்சி சொன்னார், வாழ்வில் தோல்வி, நஷ்டம் எனவே தற்கொலை செய்ய தொடர் வண்டி நிலையம் சென்றேன். காற்றினில் பறந்து வந்த காகித்தை எடுத்து வாசித்தேன். அதிலிருந்த வசனம் என் வாழ்வை மாற்றுருவாக்கம் செய்தது. இதனைக் கேட்ட விவசாயி மிகுந்த மகிழ்சியடைந்தார். எசேக்கியேல் இறைவாக்கினர் தம் இறைவாக்கில் (எசே 36:16-23) இஸ்ரயேலின் மறு ஆக்கத்தைப் பறறிப் பேசும் முன் இறையவர் அவர்களுடைய சீர்கேட்டை மீண்டும் நினைப்பூட்டுகிறார். இஸ்ரயேலின் தீச்செயல்களும், அதனால் யாவேயின் பெயருக்கு வந்த இழுக்கும், இறையவர் அவர்களைத் தண்டித்ததன் நோக்கம் இங்கு குறிப்பிடுகிறார்.

எசேக்கியேல் 36:25,26 இல் இஸ்ரயேல் மக்கள் அவர்கள் வாழ்வை மாற்றுருவாக்கம் செய்ய, முதற்படி அவர்களிடத்திலுள்ள தீட்டை நீக்கி அவர்களை தூய்மைப்படுத்துவதே. இங்கு தீட்டு என்பது லேவியர் நூலில் கூறப்பட்டுள்ளபடி உடல் தொடர்பான அசுத்தம் அல்ல. உள்ளத்தில் இருக்கும் தீய குணங்களே. இவைகளிலிருந்து இறையருளால் விடுபடுவதே தூய்மையாக்கப்படுதலாகும். மாற்றுவாக்கத்தின் இரண்டாவதுபடி இறையருளால் தீய குணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு மன்னிப்பு பெற்றவருக்கு இறையவர் புதிய இதயத்தையும், புதிய ஆவியையும் அருள்கிறார். இதயம் என்பது நம்முடைய ஆள்தத்துவம் முழுமையும் குறிக்கிறது. இந்த மாற்றுருவாக்கத்தை நிலையானதாக்க இறையவர் தம் ஆவியை மானிடருக்குள் ஊற்றவேண்டும். இந்த ஆவி மாற்றுருவாக்கம் பெற்றவருக்கு புத்துயிர் அளித்து மீண்டும் தீமையில் விழாதவாறு காத்து நேர்த்தியான பாதையில் நடக்கும் ஆற்றலை அருளும். இஸ்ரயேல் மக்கள் தூய்மையாக்கப்பெற்று மாற்றுருவாக்கம் பெற்றவர்களாய் தங்கள் நாட்டில் வாழ்வர்.

**2. மனந்திரும்புதல் என்னும் மாற்றுருவாக்கம் :** (திப 2:1-13)

மனந்திரும்புதலின் செய்தியை விவிலியத்தின் தொடக்கம் முதல் இறுதி வரை பார்க்க முடியும். பழைய ஏற்பாட்டுக்கால இறைவாக்கினர்களின் இறைவாக்குகளில் மனந்திரும்புதலின் செய்தி முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. திருமுழுக்கு முனிவர் யோவானும் தம் திருப்பணியில், இறைவருகைக்காக மக்களை ஆயத்தப்படுத்தும் பணியில் மனந்திரும்புங்கள் விண்ணரசு நெருங்கிவிட்டது என்று மக்களுக்கு போதித்தார். லூக்கா 3:10-14 இல் மனந்திரும்பி பாவமன்னிபபுக்கென்று திருமுழுக்குப் பெற்றவர்கள் மனந்திரும்புதல் என்னும் மாற்றுருவாக்கத்தின் வாழ்வை எப்படி வாழவேண்டும் என்பதை கற்றுக்கொடுத்தார். இறைமகன் இயேசு கிறிஸ்துவும் பிதாவின் திருவுளத்தை நிறைவேற்ற கலிலேயாவில் தம் திருப்பணியை தொடங்கிய போது, மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு வந்துவிட்டது (மத் 3:17) என்று மக்களுக்குப் போதித்தார். இவ்வாறு மனந்திரும்புதலின் செய்தி விவிலியத்தில் முக்கியத்துவம் பெறுகிறது.

கிறிஸ்துவை முழுமையாக பின்பற்றிய இறைமக்கள் பெந்தக்கோஸ்து நாளில் ஒரே இடத்தில் கூடியிருக்கையில் தூய ஆவியார் அவர்களை ஆட்கொண்டது. அவர்கள் ஆற்றல் பெற்றனர். அப்பொழுது பேதுரு பதினொருவருடன் சேர்ந்து எழுந்து நின்று கடவுள் நாசரேத்து இயேசுவின் வழியாக செய்த வல்ல செயல்களையும், அருஞ்செயல்களையும், அடையாளங்களையும் எடுத்துக்கூறி உயிர்த்த கிறிஸ்துவைக் குறித்து அருளுரையாற்றினார். அருளுரையைக் கேட்ட மக்கள் உள்ளம் குத்தப்பட்டவராய் பேதுருவையும் மற்றத் திருத்தூதுவர்களையும் பார்த்து, சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டனர். ஆதற்கு பேதுரு, நீங்கள் மனம்மாறுங்கள். பாவங்களிலிருத்து மன்னிப்பு பெறுவதற்கு திருமுழுக்கு பெறுங்கள் என்றார். அன்று திருமுழுக்குப் பெற்றவர்கள் மூவாயிரம் பேர். அருளுரையைக் கேட்ட மக்களை மனந்திரும்புதல் என்னும் மாற்றுருவாக்கம் வாழ்வை தொடர செய்தது. மாற்றுருவாக்கம் பெற்றவர் வாழ்க்கை முறை பிற யூதர்களுக்கு மாற்றாக இருந்தது. நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர். எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர். ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடினர். பேருவகையோடும் எளிய உள்ளத்தோடும் அப்பத்தைப் பிட்டு, உணவை பகிர்ந்து உண்டு வாழ்ந்தனர். மாற்றுருவாக்கத்தின் வாழ்வு சமுதாயத்தில் பிறருக்குச் சான்றாக அமைந்தது.

## *3. மன்னிப்பு என்னும் மாற்றுருவாக்கம் :* (யோவா 20:19-23)

ஒரு கண்ணாடிக் குடுவை நிறைய தண்ணீர் ஊற்றி நிரப்பினால், அதனுள் இருக்கும் எல்லா வாயுவும் மெல்ல வெளியே போய்விடும். அதுபோன்று தூய ஆவியார் நம் உள்ளத்தில் ஆட்கொள்ளும் போது நாம் மனந்திரும்பியவர்களாக நம் உள்ளத்தில் உள்ள தீய சிந்தை, தீய செயல்கள் வெளியேற்றப்பட்டு, மாற்றுருவாக்கம் பெற்று தூய வாழ்வு வாழத்துவங்குவோம். உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்கிற வாழ்த்து செய்தியோடு பூட்டிய இல்லத்தில் இருந்த தம்முடைய சீடர்களை சந்திக்கிறார். உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்பது யூதர் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது கூறிக்கொள்ளும் வாழ்த்துச் செய்தி. சீடர் முன் தோன்றியது உண்மையிலே சிலுவையில் அறையப்பட்ட தாம்தான் என்பதை இயேசு எடுத்துக்காட்டுகிறார். சிலுவையில் அறையப்பட்டதால் ஏற்பட்ட காயங்களின் தழும்புகளை காண்பிக்கிறார். தங்கள் முன் நிற்பவர். இயேசு கிறிஸ்து என உணர்ந்ததும் சீடர்கள் மகிழ்கின்றனர்.

உயிர்த்த கிறிஸ்து, சமயத் தலைவர்கள் மீது கொண்ட அச்சத்தினால் தங்களை மறைத்து பூட்டிய இல்லத்தில், நாளைய வாழ்வைக் குறித்த நம்பிக்கை இழந்து வாழ்ந்த சீடர்களை சந்தித்தார். இச்சந்திப்பு அவர்கள் வாழ்வில் உயிரூட்டத்தை கொடுத்தது. அவர்கள் வாழ்வை மாற்றுருவாக்கம் செய்தது. இயேசு கிறிஸ்து நிறைவேற்றிய பணியைத் தொடர அவர்களை மாற்றுருவாக்கம் செய்தார். தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். தூய ஆவியர்ரால் நிரப்பப்பட்ட சீடர்களுக்கு பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை கொடுக்கிறார். மன்னிக்கின்ற பண்பு மானுட வாழ்விற்கு மிக முக்கியமானது. மன்னிப்பதனால் உறவுகளில் உள்ள சிக்கல்கள், விரிசல்கள், பகைமை எல்லாம் மறைந்து முறிந்துபோன உறவுகள் எல்லாம் ஒப்புரவு என்னும் செயலால் மாற்றுருவாக்கம் பெறும். மன்னிப்பு என்னும் பண்பை இறைமகன் இயேசு கிறிஸ்து தம் சீடர்களுக்கு கற்றுக்கொடுத்த இறைவேண்டலிலும் வலியுறுத்தினார். தம் சீடராகிய பேதுருவிடம் சொல்லும் போது உடன்பிறப்பு தவறு செய்தால் ஏழு எழுபது முறை மன்னிக்க வேண்டும் என்றார். இந்த மன்னிக்கும் பண்பை மீண்டும் தம் சீடர்களுக்கு நினைப்பூட்டி, அதனை அவர்கள் தொடர திருப்பணியில் செயல்படுத்தி சமுதாயத்தை மாற்றுருவாக்கம் செய்ய வலியுறுத்துகிறார்.

அருள்திரு. முனைவர். **முத்துசுவாமி கிறிஸ்துதாஸ்**

01-06-2020

**புதிய மாத நன்றித் தொழுகை**

# ஞானிகளாக்கும் ஆண்டவர்

திருமறைப்பாடம் : யோபு 35:1-11

**"நானிலத்தின் விலங்குகளை விட நமக்கு அதிகமாய்க் கற்பிக்கின்றவரும், வானத்துப் புள்ளினங்களை விட நம்மை ஞானி ஆக்குகின்றவரும் அவரன்றோ?".**

(யோபு 35:11)

ஞானம் (Wisdom) என்பது மானிடர் அனைவருக்கும் அவசியமானது. ஞானமுள்ள மனிதர் தான், மனிதம் (Humanity) உடைய மனிதராக (Human being) வாழமுடியும். மனிதம் உடையவரே புனிதர் ஆவார். கற்றுக்கொள்ளும் மாணவர் மட்டுமல்ல, மானிடராகப் பிறந்த அனைவரும் "ஞானம்" என்னும் பொக்கிஷத்தை கடவுள் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

எலிகூ என்பவர், யோபுவுக்கும் அவரது நண்பர்களுக்கும் பதில் கூறும் போது, மனிதனை ஞானி ஆக்குகின்றவர் ஆண்டவர் என்கிறார். அதுமட்டுமல்ல, வானத்துப் புள்ளினங்களை விட, மனிதன் ஞானி ஆக்குகின்றவர் நம் ஆண்டவர் என்று கூறுகிறார். வானத்துப் புள்ளினங்களிடம் இருக்கும் ஞானம், எரேமியா 8:7-ல் கூறப்பட்டுள்ளது. கொக்கு தன் காலங்களை அறிகின்றது; புறா, தகைவிலான், நாரை தம் இடம்பெயரும் காலத்தை அறிகின்றது. இதுமட்டுமல்ல, வானத்துப் புள்ளினங்கள் தங்களுக்கும், தங்கள் குஞ்சுகளுக்கும் உணவைத் தேடுகின்றது; கூடுகள் கட்டுகின்றது. இத்தகைய புள்ளினங்களை விட மனிதரை ஞானிகளாக்க ஆண்டவர் ஆசைப்படுகின்றார்.

ஆண்டவர் நம்மை ஞானிகளாக்க வேண்டும் என்றால் நாம் செய்ய வேண்டியது என்ன?

***1. ஆண்டவரிடம் அச்சம் கொள்*** (Fear the Lord) : நீமொ 1:7a

ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்.

மனிதர் ஆண்டவரிடம் அச்சம் கொண்டு வாழும் போது ஆண்டவர் அவரை ஞானி ஆக்குகின்றார்.

தங்களைப் புனிதமாய் காத்துக்கொண்டு, ஆண்டவரிடம் அச்சம் கொண்டு வாழ்ந்த தானியேல், அனனியா, மிசாவேல், அசரியா ஆகியோர் ஞானத்தில் பிறரை விட பத்து மடங்கு சிறந்தவர்களாய் திகழ்ந்தனர் என்று

தானியேல் 1:8,17,20-ல் கூறப்பட்டுள்ளது. எனவே ஆண்டவரிடம் அச்சம்கொண்டு நாம் அன்றாடம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யும் போது ஞானிகளாக மாறுகிறோம். என்பதை உணர்ந்து செயல்படுவோம்.

நம்மிடம், நம்மை படைத்த ஆண்டவரிடம் அச்சம் கொண்டு வாழும் வாழ்வுமுறை காணப்படுகிறதா? சிந்திப்போம். இல்லையேல் அத்தகு அச்சத்தோடு முன்னேறிச் செல்வோம்.

***2. ஆண்டவரிடம் முறையிடு :*** (Pray to the Lord) : யாக் 1:5

உங்களிடையே குறைவான ஞானம் கொண்டிருப்போர் கடவுளிடத்தில் கேட்கட்டும். அப்பொழுது அவரும் ஞானத்தைக் கொடுப்பார். அவர் முகம் கோணாமல் தாராளமாய் எல்லாருக்கும் கொடுப்பார்.

யாக்கோபு, உலகெங்கும் சிதறுண்டு வாழும் யூதக் கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது, "ஆண்டவரிடம் முறையிடு; அவர் முகம் கோணாமல் தாராளமாய் உனக்கு ஞானத்தை கொடுப்பார்" என்கிறார்.

சாலொமோன் "ஞானி" என்ற பெயரைப் பெறுவதற்கு காரணம், அவர் ஆண்டவரிடம் முறையிட்டதே ஆகும் (1அரச 3:9). மனிதரிடம் முறையிடுதல் பலநேரங்களில் நம் மனதை காயப்படுத்திவிடும். எந்த ஒரு பயனுள்ள பலனையும் தருவதில்லை. எனவே, மானிடராகிய நாம் நம்மைத் தாழ்த்தி, ஆண்டவரிடம் முறையிடும்போது, ஆண்டவர் நமக்கு ஞானம் தந்து, நம்மை ஞானிகளாக்குவார் என்பதைப் புரிந்துகொள்வது நலமானது.

அன்பானவர்களே! ஆண்டவரிடம் முறையிடும் பழக்கம் நமக்கு உண்டா? ஆண்டவரிடம் முறையிடுதலை நம் இளைய அறிவியல் தலைமுறைக்கு கற்றுக் கொடுக்கிறோமோ? சிந்திப்போம். ஆண்டவரிடம் முறையிட தவறியிருந்தால் கடவுளிடம் மன்னிப்பு கேட்போம்.

புதிய மாதத்தில் உட்புகுந்திருக்கும் நாம், நம்மை ஞானிகளாக்குகிறவர் ஆண்டவர் என்பதை உணர்ந்து, அவரிடம் அச்சம் கொண்டு, அவரிடம் முறையிட்டு, ஞானம் பெற்று வளர்ந்தோங்குவோம். இறை ஆசி பெறுவோம்.

அருள்திரு. P. **பிரின்ஸ்லி சாம் ஏசுதாஸ்**

07-06-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும்
முதலாம் ஞாயிறு &
திரித்துவ ஞாயிறு**

## நாம் திரித்துவக் கடவுளில் நம்பிக்கை கொள்கிறோம்

**WE BELIEVE IN THE TRIUNE GOD**

எசே 1:4-28 | 2கொரி 13:11-13
திபா 98 | மத் 28:16-20

**"ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக".** (2 கொரி 13:13).

"திரித்துவம்" அல்லது மூவொரு கடவுள் என்பது கோட்பாட்டு இறையியல் சார்ந்தது. "திரித்துவம்" என்கிற வார்த்தை நேரடியாகத் திருமறையில் இல்லாவிட்டாலும் மூவொரு கடவுளின் செயல்பாடு திருமறையில் ஆழமாக உள்ளது. தொடக்க நூலில், படைப்பில் கடவுள் மூவொரு கடவுளாகவே செயல்பட்டார் (தொநூ 1:26). "முத்தொழிலோனே நமஸ்காரம், மூன்றில் ஒன்றோனே நமஸ்காரம்" என்னும் பாடல் வரிகள் மூவொரு கடவுளின் தன்மை மற்றும் செயல்பாட்டினை உணர்த்துகிறது. C.S. லூயிஸ் எனும் இறையியலாளர், "எல்லா சாதாரண கிறிஸ்தவர்களும் இறைவேண்டல் ஏறெடுக்கும்போது மூவொரு கடவுளை அனுபவமாக்குகிறார்கள்" (Experiencing the Triune God) என்கிறார். இன்று திருச்சபைகளும் இறைமக்களும் மூவொரு கடவுளின் அனுபவத்தினை புரிந்துகொள்வதில் கடினப்படுகிறார்கள். (Jehova witness) யெகோவாவின் சாட்சிகள் என்னும் பிரிவினர், 'தந்தையாகிய ஆண்டவர் ஒருவர், அவரைத் தவிர வேறொருவர் இல்லை' என்கின்றனர். கிறிஸ்து சபை குழுவினர் (Church of Christ) 'இயேசுவே கடவுள், தந்தையும், தூய ஆவியாரும் இல்லை" என்கின்றனர். அமைப்பு வட்டத்தில் வராத திருச்சபையினர் (Independent Churches) தூய ஆவியாரை முக்கியப்படுத்தி, "அவரே ஆண்டவர்" என்கின்றனர். இச்சூழலில், ஒரே ஆண்டவர் அவர் மூவரில் ஒருவராய் நம்மிலே செயல்படுகிறார் எனும் உண்மையினைப் புரிந்து அவரிலே நம்பிக்கை கொண்டு வாழ்ந்திட அழைக்கப்படுகிறோம். நாம் ஏன் மூவொரு ஆண்டவரில் நம்பிக்கை கொள்ள வேண்டும்?.

### *1. மானிடருக்குத் தம்மை வெளிப்படுத்தின மூவொரு கடவுள் :* (எசே 1:4-28)

"இறைவெளிப்பாடு" (Theophany) என்பது (a visible Manifestation of God to human beings) கடவுள் மானிடருக்குத் தம்மை வெளிப்படையாக

வெளிப்படுத்தின அனுபவம், கடவுளை மானிடர் நேரடியாகவும் அடையாளங்கள் வாயிலாகவும் கண்ணாரக் காணும் நிலை. இன்றைய பழைய ஏற்பாடு திருமறைப்பகுதி, கடவுள் தம்மை இறைவாக்கினர் எசேக்கியேலுக்கு வெளிப்படுத்தி, அவரை திருப்பணிக்காக அழைக்கின்ற பகுதியாகும். எசேக்கியேலை அழைக்கையில் பெயரை கூப்பிட்டு அழைக்காதபடி "மானிடா" (Son of man, mortal) என (எசே 2:1) அழைக்கிறார். அதோடு கடவுள் தம்மை வெளிப்படுத்தின போது புயல் காற்றாகவும் (Stormy wind), நெருப்பாகவும் (fire), ஒளியாகவும் (light) வெளிப்படுத்தினார். திருப்பாடல்களில், "நம் கடவுள் வருகின்றார். அவரைச் சுற்றிலும் கடுமையான புயல்காற்று" என கடவுளின் வெளிப்பாடு குறிப்பிடப்பட்டுள்ளது (திபா 50:3). கடவுள் சீனாய் மலையில் தன்னை வெளிப்படுத்துகையில் "சீனாய் மலைமுழுவதும் புகைந்து கொண்டிருந்தது, ஏனெனில் ஆண்டவர் அதின்மீது நெருப்பில் இறங்கி வருகிறார்" (விப 19:18). கடவுளின் பிரசன்னமாகுதலுக்கும், அவரது ஆற்றலுக்கும் அடையாளமாக நெருப்பு உள்ளது. இதனை "நெருப்பு மூலம் பதிலளிக்கும் கடவுளே உண்மை கடவுள்" எனப் படிக்கிறோம் (2அர 18:24). அதோடு இறை வெளிப்பாட்டினை "சுடர் ஒளி" (எசா 9:2) என்றும், "ஆண்டவரோ உன்மீது எழுந்தருளுவார், அவரது மாட்சி உன்மீது தோன்றும் ஆகவே எழு! ஒளி வீசு! உன் ஒளி தோன்றியுள்ளது" (எசா 60:13) எனவும் ஏசாயா கூறுகிறார்.

எசேக்கியேலின் அழைப்பிலும் இருக்கிறவராகவே இருக்கிறேன் என்று மோசேக்கு தன்னை வெளிப்படுத்தின கடவுள், ஆற்றல் நிறைந்தவராகவும், புயல் காற்றாகவும், சுடர்விடும் தீப்பிழம்பாகவும் மின்னும் வெண்கலமாகவும் (எசே 1:4) வெளிப்படுத்தினார். கடவுளின் வெளிப்பாடு மூவொரு தன்மையுடையவராக இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. மூவொரு கடவுள் தன்னை மூன்று அடையாளங்களோடு வெளிப்படுத்தினது மட்டுமல்லாது. "மானிடா! எழுந்து நில், உன்னோடு பேசுவேன்" என்றார் (எசே 2:1). அதோடு மூவொரு ஆண்டவர் எசேக்கியேலோடு பேசுகையில் ஆவியாராய் அவரில் புகுந்து எழுந்து நிற்கச் செய்தார் (எசே 2:2). இவ்வாறு எசேக்கியேலின் முதல் காட்சி அரியணைக் காட்சியாகி, கடவுள் தனக்கு அருளிய வெளிப்பாட்டு தோற்றத்தின் வாயிலாக அவர் மீது நம்பிக்கை கொள்ளவும், அவரது திருப்பணிக்காய் தன்னை அர்ப்பணிக்கவும் உதவியது. மூவொரு கடவுள் நம்மிலும் தம்மை அனுதினம் வெளிப்படுத்தி அவரோடு வாழச் செய்கிறார்.

## 2. மானிடரின் வாழ்வோடு இணைந்திருக்கும் மூவொரு கடவுள் : (2 கொரி 13:13)

மூவொரு கடவுள் தமது அருளாலும், அன்பாலும், நட்புறவாலும் மானிடரின் வாழ்வில் ஒன்றாய் இணைந்திருக்கிறார். மூவரில் ஒருவராகிய இயேசு கிறிஸ்துவில் அருளும், அன்பும், நட்புறவும் இணைந்திருக்கிறது. அவரது அருளினால் வாழ்கிறோம் அவரது அன்பினால் மீட்கப்பட்டுள்ளோம். அவரது நட்பினால் மகிழ்ந்து வாழ்கிறோம். தூய பவுல் தனது முடிவுரையாக கொரிந்து திருச்சபைக்கு கடிதம் எழுதுகையில் மூவொரு கடவுளின் பெயரில் வாழ்த்தி, அவர் மூவொருவராக மானிடர் அனைவரிலும் இணைந்துள்ளார் என்கிறார். அதோடு மூவொரு ஆண்டவர் மக்களின் வாழ்வோடு இணைந்திருக்க என்ன செய்ய வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார் (2 கொரி 13:14).

மானிடர் தம் வாழ்வினில் மூவொரு கடவுள் இணைந்திருக்கவும், செயல்படவும் ஒருவரையொருவர் ஊக்கப்படுத்தி, தேற்றி, வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் (1தெச 4:18, 5:11). ஒரே மனத்தவராய் இருந்து உயர்வுமனப்பான்மை கொள்ளாமல், தாழ்நிலையில் உள்ளவர்களோடு நன்கு பழகி இயேசு கிறிஸ்துவின் முன்மாதிரிக்கேற்ப வாழ வேண்டும் (ரோம 12:16, 15:5). முடிந்தவரை அனைவரோடும் அமைதியுடன் வாழந்திட வேண்டும் (உரோ 12:18, 1தெச 5:13), ஒருவரையொருவர் வாழ்த்தி இணக்கத்துடன் வாழவேண்டும் (உரோம 16:16, 1கொரி 16:20, 1தெச 5:26). இத்தகைய வாழ்விற்கு இயேசு கிறிஸ்துவே நமக்கு முன்மாதிரி. ஆகவே அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி, மூவொரு கடவுள் நம்மோடு இணைந்திருக்கவும், செயல்படவும் நம்மை ஒப்படைத்திட வேண்டும்.

மூவொரு கடவுளின் ஒன்றிப்பினை நம்மிலே பெற்ற நாம் அவரில் வெளிப்படும் இறையருளை மற்றவர்களும் பெற்று வாழ்வில் சிறந்திட உதவிடவேண்டும். ஆண்டவரின் அன்பினையும், நட்புறவினையும் சொந்தமாக்கியள்ள நாம் நமது நற்செயல்களில் வாயிலாக நமது அன்பினையும், நட்புறவினையும் அனைவருக்கும் கொடுத்திட வேண்டும். மூவொரு ஆண்டவரின் அருளையும், அன்பினையும், நட்புறவினையும் சொந்தமாக்கிய அன்னை தெரசா அம்மையார் 2கொரி 13:11-ன்படி தன்னை உலகிற்கு அடையாளமாக்கி, நமக்கு முன்மாதிரியாய் இருக்கின்றார்கள். நமது வெளிச்சம் மற்றவர்கள் முன் பிரகாசித்திட நம்மையும் ஒப்படைப்போம்.

### *3. மானிடரின் வாழ்வில் இறுதிவரை உடனிருக்கும் மூவொரு கடவுள் :* (மத் 28:20)

உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் முதன்மையான கட்டளை இப்பகுதியாகும். மூவொரு கடவுளில் ஒருவராகிய தூய ஆவியாராய் கடவுள் உலகின் முடிவு வரை அவர் தம் மக்களோடு உடனிருந்து அவர்களை வழிநடத்துகிறார்; உயிர்த்தெழுந்த கிறிஸ்து தம் சீடர்களுக்கு முன்பாகத் தோன்றி அவர்களை வாழ்த்தினார் (மத் 28:9). பின்பு பதினொரு சீடர்களும் இயேசு தங்களுக்குப் பணித்தபடியே கலிலேயாவிலுள்ள ஒரு மலைக்குச் சென்றார்கள். அங்கே அவரைக் கண்டு பணிந்தார்கள், சிலரோ ஐயமுற்றார்கள் (மத் 28:16,17). உயிர்த்தெழுந்த ஆண்டவரின் உடனிருத்தலை சீடர்கள் சந்தேகப்படக் காரணம் ஒன்றுண்டு. சீடர்கள் இயேசு இஸ்ரயேலை மீட்கப் போகிறார் என எதிர்பார்த்து இருந்தார்கள். ஆனால், அவர் சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டார். மூன்றாம் நாளில் கல்லறையில் அவர் இல்லை, ஆகவே அவர் எங்களோடில்லை என சந்தேகப்பட்டார்கள் (லூக் 24:2024). சந்தேகப்பட்ட இச்சீடர்களை உயிர்த்தெழுந்த ஆண்டவர், அதே மீட்பு பணியினைத் தொடர்ந்து செய்யவும், அனைவரையும் சீடராக்கவும் தந்தை, மைந்தர், தூய ஆவியார் என்னும் மூவொரு கடவுளின் திருப்பெயரில் அவர்களுக்குத் திருமுழுக்கு கொடுக்கவும் அறிவுறுத்தினார். உலகின் இறுதி வரை மானிடர் இப்பணியைத் தொடர வேண்டும், “இறுதிவரை உதவியாக நான் இருப்பேன்” என்றார் (மத் 28:18-20).

மூவொரு ஆண்டவர் மானிடருடைய வாழ்வில் எப்போதுமே உடனிருப்பவர். இஸ்ரயேலர் வரலாற்றில் அவர்களோடு புது உடன்படிக்கை ஏற்படுத்தி வாழ்வின் பயணத்தில் அவர்களோடிருந்தார். மானிடரை மீட்பதற்காக மானிடரோடு தங்கி, இம்மானுவேலராய் உடனிருக்கிறார் (மத் 1:23). தம் பிறப்பிலிருந்து நம்மோடிருக்கின்ற ஆண்டவர், உயிர்த்தெழுந்தவராய், நம் வாழ்வின் இறுதி வரை நம்மோடிருக்கிறவர். உலகின் முடிவு வரை ஆவியாராய் நம்மோடிருப்பவர். நம்மைக் கண்டித்து உணர்த்தி இறையடியவர்களாய் கனி கொடுத்து வாழ உதவி செய்கிறார். ஆகவே மூவொரு கடவுளை கோட்பாடு சார்ந்து மட்டும் புரிந்து கொள்ளாது நமது வாழ்வின் அனுபவமாக்கி, அவரிலே உறுதியான நம்பிக்கையுடன் நமது வாழ்வினைத் தொடர்ந்திடுவோம்.

அருள்திரு. M. **ஜோஸ் குமார்**

07-06-2020

மாணவர் ஞாயிறு

## ஞானமும் அறிவும் கடவுளின் அருட்கொடை

### WISDOM AND KNOWLEDGE : GIFT OF GOD

| | |
|---|---|
| நீமொ 2:1-12 | யாக் 3:13-18 |
| திபா 119:9-16 | லூக் 2:41-52 |

**"...ஞானத்தை அளிப்பவர் ஆண்டவரே, அறிவிற்கும், விவேகத்திற்கும் ஊற்றானவர் அவரே."** (நீமொ 2:6)

"அறிவு வருகின்றது, ஆனால் ஞானம் நிலைத்து நிற்கின்றது" (Knowledge Comes: But Wisdom lingers) என்று ஆங்கில கவிஞர் Tennyson குறிப்பிட்டுள்ளார். கல்வியாலும், அனுபவங்களாலும் அறிவைப் பெறுகிறோம். அந்த அறிவை அறவழியில் பயன்படுத்த உதவும் திறனே ஞானம் (Wisdom is the ability to use the learned knowledge in the best and most ethical way). இன்றைய உலகத்தை The World of Updates என்று கல்வியாளர்கள் குறிப்பிடுகின்றனர். உலக இலக்கியங்களில் இருக்கும் எந்த நாவலை குறித்து கேட்டாலும் அதற்கு பதில் சொல்லும் திறன் கொண்ட இந்தியப் பெண் "மானசி" என்பவர் "ஒரு மாணவன் பள்ளிக்கு செல்லாமலே அறிவாளியாகவும், அறிஞனாகவும் மாறமுடியும், அவன் கையில் இருக்கும் Mobile Phone-னால்" (தி இந்து 17-10-2019) என்று குறிப்பிட்டுள்ளார். இன்றைய மாணவத் தலைமுறையை பல பெயர்கள் சொல்லி அழைக்கின்றார். அவைகளில் சில.....

(i) **2020 - தலைமுறை** (20-20 Generation) - அதாவது நெடிய வழிபாடுகளையும், நீண்ட அருளுரைகளையும் சொற்பொழிவையும் விரும்பாதவர்கள்.

(ii) **முகநூல் தலைமுறை** (Face-Book Generation) - அதாவது எப்போதும் முகநூலில் கருத்துக்களைப் பதிவு செய்து Likes, Comments போன்றவற்றைப் பெறக் காத்திருப்போர்.

(iii) **நுட்பமாகவும், விரைவாகவும் செயல்படும் தலைமுறை** (Shortcut Generation)-எல்லாவற்றையும் வேகமாகவும், வெகுவாகவும், நுட்பமாகவும் செய்யத் துடிக்கும் தலைமுறையினர்.

(iv) **பின்பற்றும் தலைமுறை** (Imitating Generation) - பிறர் செய்வதை அப்படியே ஒளியச்சு போல எடுத்துச் சொல்லும் தலைமுறையினர்.

(v) **தற்படத் தலைமுறை** (Selfie Generation) - துக்கம், மகிழ்ச்சி, விபத்து போன்ற எல்லா நேரத்திலும் Selfie - எடுத்து அதை Update செய்யும் தலைமுறை.

(vi) **துரித உணவுத் தலைமுறை** (Fast Food Generation) - நாவுக்கு இனிமையாகவும் வண்ண வண்ண நிறங்களுடன் காணப்படும் துரித உணவுகளை விரும்பும் தலைமுறை.

(vii) **மனம் போல வாழ விரும்பும் தலைமுறை** (Yolo Yodo Generation), Yolo (You Only Live Once) - Yodo (You only Die Once) - அதாவது, ஒரு முறை வாழ்வு, ஒருமுறை சாவு ஆகவே எப்படி தோணுகிறதோ அப்படி வாழ விரும்பும் தலைமுறை.

இந்தத் தலைமுறை மாணவர்கள் தனிப்பட்ட வாழ்விலும் சமூக வாழ்விலும் சந்திக்கும் சவால்கள் அதிகம். அறிவியல் தொழில் நுட்பம் போன்றவற்றில் அதிகம் வளர்ந்திருந்தாலும் இன்றைய மாணவர்கள் தீர்மானங்கள் எடுப்பதில் தடுமாற்றம் அடைகின்றனர். நாளுக்கு நாள் மாணவர்களின் தற்கொலை பெருகிக்கொண்டே செல்கிறது. இத்தகைய தலைமுறையினருக்கு ஞானமும் அறிவும் கடவுளின் அருட்கொடை என்பதையும், ஞானத்தை பெறும் வழிகளையும் சுட்டிக்காட்டி அவ்வழிகளை உலகின் தீமைகளுக்கு விலக்கி பாதுகாப்பது திருச்சபை, சமூகம், பெற்றோர், ஆசிரியர் போன்றோரின் கடமையாக இருக்கின்றது. கடவுளின் அருட்கொடையாகிய ஞானமும் அறிவும் இக்கால மாணவர்களுக்கு எவ்வாறு உதவுகின்றது என்பதைச் சிந்தனை செய்வோம்.

### *1. பாதுகாக்கும் ஞானம்* (நீமொ 2:1-12)

'ஞானம் உன் உள்ளத்தில் குடிபுகும்....அது உன்னைப்பாதுகாக்கும்' (நீமொ 2:10-12).

திருப்பாடல்கள் இஸ்ரயேல் மக்கள் தங்கள் தொழுகையில் பயன்படுத்தும் பாடல் புத்தகமானால், நீதிமொழிகள் புத்தகம் அவர்களது செயல்முறை வாழ்க்கையின் (Practical Living) பாடப்புத்தகமாக அமைந்துள்ளது. நீதிமொழிகள் புத்தகத்தின் நோக்கம், தலைப்பு, ஒட்டுமொத்த கருத்து அனைத்தும் ஞானத்தை மையமாக வைத்தே அமைந்துள்ளது. நீதிமொழிகள் 1:8 முதல் 9:18 வரை அடங்கிய பகுதியில் ஒரு பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு கூறும் ஆலோசனைகளைக் காணலாம். அதில் அப்பெற்றோரின் மனநிலை, அவர்களது பிள்ளைகள் குறித்த ஏக்கங்கள் அனைத்தையும் கண்டு கொள்ளலாம். 2-ம் அதிகாரத்தில் மகனுக்கு அறிவுரை கூறும் பெற்றோர், ஞானம், அறிவு

போன்றவை கடவுளிடமிருந்து வருகிறது என்றும், அது ஒரு மனிதனை தீமையிலிருந்து பாதுகாக்கும் (நீதி 2:10-12) என்பதையும் அழுத்தமாக பதிவு செய்கின்றார்.

இந்தப் பெற்றோர் எப்படிப்பட்ட பின்னணியத்தில் வாழ்ந்தார்கள். அவர்கள் ஏன் மகனுக்கு ஞானத்தைக் குறித்து அதிகமாக போதிக்கின்றனர் என்பதையும் இந்த அதிகாரத்தில் அவர்கள் பயன்படுத்தும் சில வார்த்தைகளும் சில வரிகளும் தெளிவுபடுத்துகின்றன. உதாரணமாக...

❋ தீய வழி (நீதி 2:12)
❋ வஞ்சகம் பேசும் மனிதர் (2:12)
❋ நேர்மையான வழியைவிட்டு விலகியவர் (2:13)
❋ இருளான பாதையில் நடப்போர் (2:13)
❋ தீமை செய்து களிக்கின்றவர் (2:14)
❋ கற்பு நெறி தவறியவர்கள் (2:16)
❋ பொல்லார் (2:22)
❋ நயவஞ்சகர் (2:22)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தைகள், வரிகள் அனைத்தும் இப்பெற்றோர் வாழ்ந்த சமூக சூழலை சுற்றிக் காட்டுகின்றது. தீமைகளில் மக்கள் வாழ்ந்த ஒரு சமூகத்தில் இப்பெற்றோர் ஞானத்தினால் காக்கப்பட்டுள்ளனர். ஆகவே, தங்கள் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்ந்த சமூகத்தின் நிலையை சுட்டிக்காட்டி ஞானத்தின் தேவையைக் குறிப்பிடுகின்ற ஒரு பெற்றோர் பகிர்வை (Parents Sharing) காணமுடியும். இன்றைய சூழலில் பெற்றோர் பகிர்வு என்பது மிகவும் குறைந்து வரும் ஒரு Busy உலகத்தில் நாம் வாழ்கின்றோம். பெற்றோர்கள் வேலை செய்து பணம், பொருள் சம்பாதிப்பது எந்த அளவிற்கு முக்கியம் என்று எண்ணுகிறார்களோ, அதைவிட தங்கள் அனுபவங்களை, முன் மாதிரிகளைப் பிள்ளைகளிடம் பகிர்ந்து கொள்ளும் பகிர்வு நேரங்களும் மிக அவசியம்.

இந்த பெற்றோர் மிக முக்கியமாக தங்கள் மகனுக்கு கூறும் அறிவுரை, 'ஞானம் ஒருவனுக்கு கிடைத்தால் அவன் இவ்வுலகின் எல்லா தீமைகளுக்கும் விலகி காக்கப்படுவான்' என்பதாகும். தீமைகளில் சிக்கிக்கொள்ளாத வண்ணம் ஞானம் அவனைப் பாதுகாக்கும் என்னும் கருத்தை அழுத்தமாக பதிவு செய்கின்றனர்.

இன்றைய மாணவ சமூகத்திற்கும் ஞானம் கடவுளின் அருட்கொடை என்றும் அறிவுறுத்துவது திருச்சபையின்

கடமையாகின்றது. "ஞானத்தை புறக்கணியாதே; அது உன்னைப் பாதுகாக்கும்; அதை அடைவதில் நாட்டங்கொள்; அது உன்னைக் காவல் செய்யும்" (நீதி 4:6) என்னும் இறை வார்த்தை இன்றைய மாணவர்களுக்கு அறைகூவலாக இருக்கின்றது.

### *2. ஏற்புடையோராக்கும் ஞானம்* (லூக் 2:41-52)

"இயேசு ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்" (லூக் 2:52).

இயேசு கிறிஸ்துவின் குழந்தைப் பருவம் மற்றும் மாணவப் பருவத்தில் நடந்த சில வரலாற்று நிகழ்வுகளை லூக்கா நற்செய்தியாளர் 2-ம் அதிகாரத்தில் பதிவு செய்துள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகள் அனைத்தும் அவர் ஞானம் பெறுவதற்கு காரணிகளாக அமைந்துள்ளது. அந்த நிகழ்ச்சிகள் யாதெனில்....

1. குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க அவர்கள் எருசலேமுக்கு கொண்டு சென்றார்கள் (லூக் 2:22).
2. சிமியோன் குழந்தையைக் கைகளில் ஏந்தி ஆசி கூறுதல் (லூக் 2:25-35).
3. அங்கே அவர் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டும் அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக் கொண்டுமிருந்தார் (லூக் 2:46).
4. நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் (லூக் 2:49).

மேலே குறிப்பிட்டுள்ள நிகழ்வுகளுக்கும் இயேசுகிறிஸ்து பெற்ற ஞானத்திற்கும் காணப்படும் தொடர்பினை சிந்திப்பது அவசியம். முதலாவதாக, இயேசுவின் பெற்றோர் இயேசுவை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க ஆலயம் செல்வதைப் பார்க்கின்றோம். ஆலயம் செல்லுதல், அதிலும் குடும்பமாய் செல்லுதல் பிள்ளைகள் கடவுள் தரும் ஞானத்தைப் பெறுவதற்கு அடித்தளமாய் அமைகின்றது. இரண்டாவதாக, தூய ஆவியைப் பெற்று, நேர்மையாளராய் வாழ்ந்த சிமியோன் என்னும் இறை மனிதரிடம் இயேசுவைக் கொடுத்து ஆசி பெறுகின்றனர். இச்செயலின் வாயிலாக இயேசுவின் பெற்றோர் இறைப்பணியாளருக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தைக் காண இயலுகின்றது. மூன்றாவதாக, இயேசு வளர்ந்து 12-ம் வயதில் விழா கொண்டாட சென்றபோது மூன்று நாட்கள் இயேசுவைக் காணாமல் பெற்றோர் தேடினர். அந்த மூன்று நாட்களும் இயேசு

ஆலயத்திலேயே இருப்பதைக் காணமுடிகின்றது. இச்செயல் இன்றைய மாணவர்களுக்கு ஒரு சவாலாகின்றது. இயேசுவைப் போன்று ஆலயத்தில் அதிக நேரம் செலவிட இன்றைய மாணவர்கள் முயல வேண்டும் என்பதை இயேசுவின் இச்செயல் சுட்டிக்காட்டுகின்றது. “அவர் போதகர்கள் நடுவில் அமர்ந்து” என்ற வார்த்தைகள் இயேசுகிறிஸ்து இறைவார்த்தையைக் கேட்கும் ஆர்வமுடையவர் என்பதை வெளிப்படுத்துகின்றது. “போதகர்கள் நடுவில்” என்ற பதம் இயேசுநாதரின் காலகட்டத்தில் போதர்கள் இணைந்து ஒரு மாணவனை உருவாக்க எடுக்கும் முயற்சியை சுட்டிக் காட்டுகின்றது. நான்காவதாக, “என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும்” (லூக் 2:19) என்ற இயேசுவின் வார்த்தைகள் கடவுளுக்காக செய்யப்பட வேண்டிய கடமைகளுக்கு (Duties) இயேசு கொடுத்த முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகின்றது.

இத்தகைய ஆலயம் சார்ந்த அனுபவங்கள் தான் இயேசுகிறிஸ்து ஞானத்தைப் பெற வழிவகுத்துள்ளது மட்டுமின்றி, அந்த ஞானத்தினால் அவர் கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவராதல் என்பது ஒரு Herculian task ஆகும். ஆனால் ஒரு மாணவரால் அப்படி வாழ வேண்டுமானால் இயேசுவை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும்.

யாக்கோபு 3:17-ல் விண்ணிலிருந்து வரும் ஞானத்தின் தலையாய பண்புகள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. அது அமைதியைத் நாடும், பொறுமை கொள்ளும், இணங்கிப் போகும் தன்மையுடையது, இரக்கமும் நற்செயல்களும் நிறைந்தது. நடுநிலை தவறாதது, வெளிவேடமற்றது போன்ற பண்புகள் கடவுள் தரும் ஞானத்திற்கு உரியது. இத்தகைய பண்புகள் அனைத்தும் இயேசுவிடம் காணப்பட்டது. இக்கால மாணவர்களும் கடவுள் தரும் ஞானத்தைப் பெற இயேசுவைப் போன்று ஆலயத்திற்கும், கடவுளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதே வேளையில் அதற்கு உதவியாக இயேசுவின் பெற்றோர், ஆலயத்தின் போதகர்கள், இறைப்பணியாளர்கள் போன்றோர் காணப்பட்டனர். அதைப் போன்று இன்றைய பெற்றோரும் திருச்சபையும் மாணவர்கள் கடவுளின் அருட்கொடையாகிய ஞானமும், அறிவும் பெறுவதற்கு உறுதுணையாக செயல்பட கடவுள் நம்மை அழைக்கின்றார்.

திரு. Y. **சுஜின் ராஜ்**

14-06-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு & சுற்றுச்சூழல் ஞாயிறு**

# படைப்பு விடுதலைக்காக வேதனையுற்றுத் தவிக்கிறது

**CREATION GROANS FOR LIBERATION**

| | |
|---|---|
| எசே 36:24-36 | உரோ 8:18-25 |
| திபா 29 | யோவா 20:19-23 |

**"இந்நாள்வரை படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது..."** (உரோ 8:22)

கடவுள் படைத்த இந்த உலகம் மிக அற்புதமானது. இயற்கை எழில் நிறைந்த அவரின் படைப்புகளின் இயல்பு நிலைகள் இன்று சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மனிதன், உயிரினங்கள் வாழ்வதற்கு மிக மிக அவசியமானவை நிலம், நீர், காற்று. இந்த மூன்றும் இன்று மாசு நிறைந்து உள்ளது. காற்று மாசு, தண்ணீர் மாசு, நிலம் மாசு, கால நிலை மாற்றங்கள், உலக வெப்பமயமாதல், அதிக மழை, மழை இல்லா வறட்சி, தண்ணீர் பெருக்கு, நிலச்சரிவுகள் இயற்கையின் சிதைவுகளை இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம்.

சென்னை வெள்ளப்பெருக்கு 2015, 2017 சென்னை தண்ணீர் பஞ்சம், 2019, மும்பை மற்றும் கேரளா வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு. தென் ஆப்பிரிக்கா கேப் டவுண் நகரம் தண்ணீர் பஞ்சம் 2018. 2019 ஜூன் சுற்றுலா சென்றவர்கள் உத்திரப்பிரதேசத்திலிருந்து இரயிலில் தமிழ்நாட்டிற்கு திரும்பியபோது வெயிலின் கொடுமையால் ஐந்து பேர் உயிரிழப்பு. கடல் சீற்றம் அதிகரிப்பு, முரண்பாடான காலநிலைகள் இவைகள் எல்லாம் நமக்கு எச்சரிப்பின் செய்திகள். இயற்கையை நாம் அழித்தால் இயற்கை நம்மை அழிக்கும் என்ற பாடத்தை இவைகள் நமக்கு கற்றுத் தந்து கொண்டிருக்கிறன. கன்னியாகுமரி மாவட்டத்தின் இயற்கை எழில்மிகு தோற்றம் இன்று அதிகமாய் சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மலைகள் சில முற்றிலும் சிதைக்கப்பட்டு காணாமல் போயிருக்கின்றன. நீர் நிலைகள் மூடப்பட்டு காணாமல் போய்விடுகின்றன. வளர்ச்சி என்ற போர்வையில் மரங்களும் காடுகளும் அழிக்கப்படுகின்றன.

இந்த அவல நிலைக்கு காரணம் தான் என்ன? மனிதனின் மனநிறைவு இல்லாத வாழ்வு முறையே ஆகும். கடவுள் நம்மைப் படைத்தவர் அனைத்தையும் அற்புதமாகப் பாதுகாக்கிறவர். திருப்தியான

வாழ்வுக்கு நேராய் நடத்துகிறவர். பறவைகள், மிருகங்கள் ஏனைய உயிரினங்கள் புல் பூண்டுகள் அனைத்தையும் ஆண்டவர் போஷித்து, உடுத்துவித்து அற்புதமாய் காத்து நடத்துகிறார். ஆனால் மனிதரோ மனநிறைவு இல்லாதவராய், பேராசையுடன் வாழ்வதால் இயற்கை சுரண்டப்படுகிறது. மனிதன் பொறுப்புடனும் இருக்கின்றவைகளில் மனநிறைவுடனும் வாழ்ந்தாலேயன்றி இயற்கையை நாம் பாதுகாப்பது இயலாதது.

கடவுள் பத்தாவது கட்டளையாய் இஸ்ரயேல் மக்களுக்குச் சொன்னது, பிறர் பொருளை இச்சியாதிருப்பாயாக (விப 20:17) என்பதாகும். ஆனால் இறைவனின் கட்டளையை மீறிய இச்சை அல்லது பேராசையே இயற்கை அழிக்கப்படுவதற்கு காரணமாகின்றன. இதன் விளைவு புவியியல் மாற்றங்கள், சுற்றுச்சூழல் பாதிப்புகள்.

உலகின் தலைசிறந்த விஞ்ஞானியான ஸ்டீபன் ஹக்கின்ஸ் (Stephen Hawking) மனுக்குலம் தற்கொலைக்கான செய்முறையில் இருக்கிறது என்றார். அதற்கான மூன்று முக்கியமான காரணங்களையும் அவர் விவரிக்கிறார்.

(1) Nuclear war - அணு ஆயுதப்போர்
(2) Global warming - உலக வெப்பமயமாதல்
(3) Transplantation of Viruses - நுண்ணுயிரிகளின் இடமாற்றம்

இந்த துயர நிலை ஏற்படுவதற்கு காரணம் இயற்கை மீதான மனிதனின் மனநிலையே என்கிறார். இயற்கையோடு இசைந்த வாழ்வை மனிதன் தவிர்த்து ஆடம்பரத்தையும் நவீன மயமாக்கலையும் பேராசையாக விரும்பி வாழ்வதே இதற்கு காரணம்.

கடவுள் படைத்த இயற்கை எழில்மிகு உலகம் மாசடைந்து இயல்பு நிலையை இழந்து நிற்கிறது. மட்டுமல்ல அது விடுதலைக்காய் ஏங்குகிறது. பவுலடியார், படைப்புகள் அனைத்தும் பேறுகால வேதனையுற்று தவிக்கிறது என்கிறார். வேதனையுறும், விடுதலைக்காய் ஏங்கும் படைப்புகளைக் காப்பதும் விடுவிப்பதும் நம் கடமையே. நாம் எதைச் செய்திட இயலும் என்ற கேள்வியுடன் நம் கடமை முடிந்து விடுவதில்லை. மாறாகக் கடவுள் படைத்து நம்கரங்களில் தந்திருக்கும் இவ்வுலகை, வரும் வழிமரபினர் பயன்படுத்திட புனிதமாய் விட்டுச் செல்லும் கடமை, பொறுப்பை கடவுள் நம்மிடமே தந்திருக்கிறார். படைப்புகளைப் பாதுகாக்க நாம் எடுக்கும் தீர்மானங்கள் நிச்சயம் வரும் வழிமரபினர் வாழ்வுக்கான வழிகாட்டும் தீர்மானங்களே.

## *1. மன நிறைவுள்ள வாழ்வு தேவை :*

**ஆதாம் ஏவாள் :** வாழ்வதற்குத் தேவையான அனைத்தையும் கடவுள் அவர்களுக்குக் கொடுத்திருந்தார். ஆனால் அவர்களோ அதில் மனநிறைவற்றவர்களாய் சர்ப்பத்தின் கவர்ச்சியான வார்த்தையை (நீங்கள் சாகவே மாட்டீர்கள் கடவுளைப் போலாவீர்கள்) நம்பி இறைவனின் கட்டளையை மீறினர்.

**ஆகாப் மன்னர் :** நாடு முழுவதும் அவர் கையில் இருந்தது. ஆனால் தனக்கு இருந்த செல்வத்தில் திருப்தியில்லை. ஏழை விவசாயி நாபோத்தின் நிலத்தை அபகரிக்க அவரைக் கொன்று நிலத்தை அபகரித்துக்கொள்கிறார்.

இன்றைய மனிதர்களின் நிலையும் இதுவே. 99 கோடியை எப்படி 100 ஆக்குவது. 999 கோடியை எப்படி 1000 ஆக்குவது இதற்கு யாரைச் சுரண்டலாம். கார்ப்பரேட் நிறுவனங்கள் எதை அழித்தாகிலும் லாபம் பெறும் நோக்கிலேயே செயல்படுவது. சுற்றுச் சூழலையும் நாட்டின் எதிர் காலத்தையும் பற்றி கவலை கொள்வதில்லை. பணப்பிரியர் பணத்தினால் திருப்தியடைவதில்லை செல்வப்பிரியர் செல்வத்தினால் திருப்தியடை வதில்லை (சஉ 5:10). சொத்து பெருகினால் அதைச் சுரண்டி தின்போரின் எண்ணிக்கையும் பெருகும். செல்வந்தர்களுக்குத் தங்கள் சொத்தைக் கண்ணால் பார்ப்பதை தவிர வேறு என்ன பயன் உண்டு (5:11). மனநிறைவோடு வாழும் போது, நிறைவான வாழ்வை இயற்கை வழியாய் பெறலாம்.

## *2. பொறுப்புள்ள குடிமக்களாவோம் :*

ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார் (தொநூ 2:15). கடவுள் ஆதாம் ஏவாளை ஏதேன் தோட்டத்தில் கொண்டு வந்து அதைப் பண்படுத்தி பாதுகாக்கின்ற பொறுப்பினையும் அவர்களிடத்தில் கொடுத்தார். கடவுளால் படைக்கப்பட்ட அனைத்தும் மனிதன் பயன்படுத்துவதற்கானவைகள். ஆனால் அவரின் எதிர்பார்ப்பு ஒவ்வொரு படைப்பும் பாதுகாக்கப்பட வேண்டும். அந்த பொறுப்பினை ஆண்டவர் நம்மிடம் கொடுத்திருக்கிறார். தாய் (Mother) என்பவள் எப்போதுமே தன்பிள்ளைகளைப் பேணிக்காப்பவள் பாசத்தைக் கொட்டுபவள். பிள்ளைகள் தாய்க்கு செய்யவேண்டிய கடமைகளைப் பொறுப்புடன் நிறைவேற்றி மகிழ்விக்க வேண்டியவர்கள். இந்த தாய் பூமி (Mother Earth) நமக்கு தேவையான அனைத்து வளங்களையும் நமக்குத் தருகிறது. பூமியை அதன் வளங்களை பேணிக்காக்க வேண்டியது நமது பொறுப்பு.

2019 செப்டம்பர் மாதம் நியூயார்க்கில் (Ameriea) நடைபெற்ற ‘காலநிலை மாற்றம்’ (Climate Change) குறித்த மாநாட்டில் கிரேட்டா தன்பெர்க் 16 வயதுடைய சிறுமி ஸ்வீடனைச் சார்ந்தவள், கலந்து கொண்டு உரையாற்றும் வாய்ப்பு பெற்றாள். உலக நாடுகளின் தலைவர்களுக்கு அவர் விடுத்த அறைகூவலும் எச்சரிப்பும் அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது. அவளது உரையில்.

“நாங்கள் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நான் இங்கு அல்ல பள்ளியில் இருக்கவேண்டும். என்ன துணிச்சல் உங்களுக்கு! உங்கள் வெற்றி வார்த்தைகளால் எனது குழந்தைப் பருவத்தையும் திருடி விட்டீர்கள் மக்கள் துன்புறுகின்றார்கள். அழிவைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் சுற்றுச்சூழல் பாதிப்படைந்து கொண்டிருக்கிறது. நாம் பேரழிவின் தொடக்கத்தில் நின்றுகொண்டிருக்கிறோம். உங்களின் பேராசையால் அழிவுறும் இயற்கையை, வழக்கம்போல் வணிகம் மற்றும் தொழில் நுட்பத் தீர்வுகள் வாயிலாகச் சரிசெய்ய முடியும் என்று வெளிவேடமாகச் சொல்லி வருகின்றீர்களே, என்ன ஒரு துணிச்சல் உங்களுக்கு!” என்று ஆவேசமாகக் குறிப்பிடுகிறாள்.

மாசடைந்துவரும், அழிந்துவரும் இயற்கையைக் காக்கும் பொறுப்பு அனைத்து குடிமக்களுக்குமுரியது. பரந்த இந்த உலகை மாற்றுவதில் நான் என்னதான் செய்திட இயலும் என்று நினைத்து அமைதிகாப்பது நமது பொறுப்பைத் தட்டிக் கழிப்பது ஆகும். நாம் வாழும் இடம் பணியாற்றும் இடம், நம் திருச்சபை, நம் கிராமம் இவைகள் முக்கியமானவை. நாம் நம்மில் முதலாவது மாற்றத்தை ஏற்படுத்தி, நம்மைச் சுற்றி விழப்புணர்வை ஏற்படுத்துவது இன்றியமையாதது.

நம் இல்ல வளாகங்களை தூய்மையாய் பேணுவோம்.
திருச்சபை வளாகங்களை பசுமை வளாகங்களாக்குவோம்.
மரம் நடுவதை ஊக்குவிப்போம்.
நெகிழி (Plastic) பயன்பாட்டைத் தவிர்ப்போம்.
புகை உருவாக்குவதைத் தவிர்ப்போம்
சூரிய எரிசக்தி (Solar Pannel) பயன்படுத்த முயற்சிப்போம்.

துன்புறும் படைப்புகளை விடுதலையாக்கிட விழிப்புடன் செயல்படுவோம். ஆண்டவர் படைத்த புனித பூமியை வரும் தலைமுறையினருக்கு புனிதமாய் விட்டுச்செல்வோம். இறையருள் பெறுவோம்.

அருள்திரு. J. **வின்சென்ட் றாபர்ட்**

21-06-2020

**பெந்தேக்கோஸ்துக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு**

# வழிபாடு : மக்களுடைய நம்பிக்கையின் கொண்டாட்டம்

**WORSHIP : CELEBRATION OF PEOPLE'S FAITH**

எசா 6:1-8 திவெ 4:1-11
திபா 148 யோவா 4:16-26

**"கடவுள் உருவமற்றவர். அவரை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில் தான் வழிபட வேண்டும்"** (யோவா 4:24)

'வழிபாடு', சமய நம்பிக்கையின் வெளிப்பாடு. ஒருவர் கடவுளை நேரடியாக சந்திப்பது அரிது. ஆனால் அன்றாட வாழ்வில் இறைவனது உடனிருப்பையும், செயல்களையும், மகிமையையும், புனிதத்தையும் புரிவது எளிது. அவ்வாறு இறைவன் மிக அருகே உள்ளார் என்ற உணர்வின் விளைவாக மனிதனிடம் பக்தி பிறக்கிறது. இவ்விதம் எழும் பக்தியின் புற வெளிப்பாடே தொழுகை அல்லது வழிபாடு. வழிபாடு என்பது வழிபடும் மக்களின் நம்பிக்கையின் வெளிப்பாடு. எனவே, அது கொண்டாட்டமாக வெளிப்படுகிறது. என்னைப் படைத்தவர் ஒருவர் உண்டு, அவர் என்னையும் பாதுகாக்கிறவர். நான் வாழ்வதற்கு அவர் அருள் தேவை, அவர் தொழுகைக்குரியவர் என்ற நம்பிக்கை வழிபாட்டிற்கு நேராய் மனிதனை அழைத்து செல்கிறது.

'வழிபாடு' மற்றும் 'கோயில்' மனித வாழ்வில் ஒன்றறக் கலந்த ஒரு அனுபவம். 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பர். இவ்வனுபவம் ஒரு மனிதரில் வெளிப்படும் போது, வழிபாடு கொண்டாட்டமாகிறது. வழிபாடு வாழ்வில் நம்பிக்கையின் கொண்டாட்டமாக அமைகிறது காரணம்:

## *1. வழிபாடு : இறைப் பிரசன்னம் உணர்ந்து கொண்டாடுதல்*

'மிகவும் உயரமானதோர் அரியணையில் ஆண்டவர் அமர்ந்திருப்பதை நான் கண்டேன்' (எசா 6:1).

உசியா அரசன் மறைந்த ஆண்டில் (2 குறி 26:16) இறைவாக்கினர் ஏசாயா இறை இல்லத்தில் இறைக்காட்சியை கண்டார். இறை இல்லத்தில் இறைவனின் மாட்சிமையும், தூய்மையும் வெளிப்பட்டு, தொங்கலாடை கோவிலை நிரப்பி நின்றதையும், சேராபீன்கள் பணிவிடை செய்வதையும்

கண்டு, ‘ஐயோ நான் அழிந்தேன், ஏனெனில் தூய்மையற்ற உணர்வுள்ள மக்கள் நடுவில் வாழ்பவன் நான்’ என்றார் (ஏசா 6:5). கடவுளை வழிபட வந்த ஏசாயா ஆலயத்தில் இறை பிரசன்னம் உணர்ந்த போது தன்னை உணர ஆரம்பித்தார். ஆம்! தொழுகை நாம் நம்மை அறிய நல்ல ஒரு வாய்ப்பு. தூயவரான இறைவனை கண்டபோது, தூய்மையற்றவன் தான் என உணர்ந்து, இக்காட்சி காண தன்னை தகுதியற்றவனாக கருதி முறையிடுகிறார்.

வழிபாட்டில் இறை பிரசன்னம் உணர்ந்து வழிபட, தற்பரிசோதனை தேவை. தன்னிலை அறிதல் இறைவனின் திரு பிரசன்னத்தை அனுபவிக்க துணை செய்யும். இறைமக்கள் இறைபிரசன்னத்தை உணரும் போது; காலணியை கழற்றிப்போடுவர் (விப 3:5). முழந்தாளிடுவர் (1 அர 19:18), மார்பில் அடித்துக் கொள்வர் (லூக் 18:13). முகத்தை மூடிக் கொள்வர் (விப. 3:6; எசா 6:2), முகம் குப்புற விழுவர் (தொநூ 17:13). இவைகள் எல்லாம் இறைவன் முன் நாங்கள் ஒன்றும் இல்லை, இறைக்காட்சி பெற தகுதியில்லை என்ற எண்ணத்தின் வெளிப்பாடு. இது இறை பிரசன்னம் உணர உதவுகின்றது. லூக்கா 18:13-ல் ஆயக்காரன், ‘ஆண்டவரே பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்’ என்றார். ‘ஐயோ நான் அழிந்தேன்’ என்ற ஏசாயாவின் வார்த்தைகள், ‘என்னை பார்த்த எவரும் உயிரோடிருக்க முடியாது’ இவைகளின் நடுவில் (விப 33:20) என்ற ஆண்டவரின் வார்த்தைகளினால் எழுகின்ற அச்சம் ஆண்டவர் ஏசாயாவின் அச்சத்தைப் போக்கி, அவரை தூய்மைபடுத்துகிறார் (எசா 6:7). இறை பிரசன்னத்தால் நிறைந்து இறைவனை தூயவராக ஏசாயா கண்ட போது தன் தவறுகளை தெரியப்படுத்துபவராகவும் கண்டு, தன் தகுதியின்மை அறிந்து, அறிக்கையிட்டு, அர்த்தமுள்ள வழிபாட்டின் அனுபவத்தைப் பெற்றார்.

### *2. வழிபாடு : இறைக்காட்சி கண்டு கொண்டாடுதல்*

‘படைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்கள் கண்டனவே’ (எசா 6:5).

இறைபிரசன்னத்தைக் கண்டு, தன்னிலை உணர்ந்த ஏசாயா கண்ட காட்சியில் ‘யாவே அரசாளுகிறார்’ என்பதை வழிபாட்டில் திருக்காட்சியாகக் காண்கிறார். ஆண்டவர் மிக உயரமான அரியணையில் வீற்றிருப்பதையும், அவரது தொங்கலடையால் ஆலயம் நிறைந்து இருப்பதையும், சேராபீன்கள் (கர்த்தரின் பணியாட்கள், ஒளிர்கிறவர்கள்) கடவுளை தூயவர் எனக் சொன்னதையும் கண்டார். அதே காட்சிகளை 1அர 22:19; திவெ 4:2-11 -ல் காணலாம். அரசர், அரியணை, ஆலயம் என்ற

பதங்கள் இறைவனின் அதிகாரத்தையும், மனித அதிகாரங்கள் அனைத்தும் இறைவன் முன் பணிய வேண்டும் என்பதையும் காட்டுகிறது. சேராபீன்கள் செயல்கள் இறைவனின் புனிதத்தன்மையை காட்டுகிறது. (எசா 6:3, திவெளி 4:2f). இறைக்காட்சியைப் பெற்ற ஏசாயா 'இதோ நானிருக்கிறேன் அடியேனை அனுப்பும்' தன்னை ஒப்படைத்தார். அற்பணித்தான். ஆகவே இறைக்காட்சி பெற ஒப்படைப்பு தேவையாகிறது.

வழிபாடு இறைமக்களுக்கு இறைவன் தந்த பணிவிடை. இதில் இறைமக்களின் ஒப்படைப்பு முக்கியத்துவம் பெறுகிறது. பொதுவாக, 'பலி', தொழுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டிருப்பதை திருமறையில் காணலாம் (தொநூ 8:20, 12:7,8) இப்பலியை இறைவன் சுகந்த வாசனையாக முகர்ந்ததாக சொல்லப்படுகிறது (தொநூ 8:21). கடவுளைத் தொழுதுகொள்ளும் மனிதன் தன் அனைத்தையும் சர்வ அங்கங்களையும் ஒப்படைப்பதே செய்வதே இதன் பொருள். எனவே பவுல் உரோ 12:1-ல் 'கடவுளுக்கு உகந்த தூய உயிருள்ள பலியாக உங்களை படையுங்கள் இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு' என்றார்.

'தூய்மையான உள்ளத்தோர் பேறு பெற்றறோர் ஏனெனில் அவர்கள் கடவுளை காண்பார்'. (மத் 5:8) என்பது போல் தூய உள்ளத்தினராய் நம்மை ஒப்படைத்து, இறைகாட்சி கண்டு வழிபட்டார்.

### *3. வழிபாடு : இறைவிருப்பம் ஏற்றுக் கொண்டாடுதல்*

'கடவுளை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் தான் வழிபட வேண்டும்' (யோவா 4:24).

வழிபாட்டில் இறை விருப்பம், திட்டம், எதிர்பார்ப்பு இவைகள் அறிந்து வழிபட வேண்டும். இறை காட்சிப்பெற்ற ஏசாயா, இறை பிரசன்னத்தில் தன் நிலை அறிந்தபோது, இறைவன் விருப்பத்தை, எதிர்பார்ப்பை அறிந்தார். 'யாரை அனுப்புவேன்' என்ற அழைப்பை கேட்ட போது, இறை விருப்பம் அறிந்து 'என்னை அனுப்பும்' என்று தன்னை ஒப்படைத்தார். வழிபாட்டில் மனிதன் தன்னை கடவுளிடம் ஒப்படைக்கும் போது வழிபாட்டின் நோக்கம் நிறைவு பெறும், முழுமை அடையும். 'என்னை அனுப்பும்'- ஏசாயா. 'சொல்லும் அடியேன் கேட்கிறேன்'- சாமுவேல். 'நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்'- பவுல். 'இதோ என் ஆண்டவருக்கு அடிமை'-மரியாள் போன்றவை ஒப்படைப்பின் வெளிப்பாடுகள். இப்படிப்பட்ட அனுபவத்திற்கு கடவுளை சரியாக புரிந்து கொள்ளும் அனுபவம் தேவை.

இயேசு கிறிஸ்து சமாரிய பெண்ணிடம் உரையாடும் போது, 'யாரை வழிபடுகிறீர்கள் என தெரியாமல் நீங்கள் வழிபடுகிறீர்கள்' இறைவிருப்பம் ஏற்று வழிபடுபவருக்கு எருசலேமோ, கெரிசீமோ, தேசிய சமயமோ தேவையில்லை. எல்லாம் அவருக்குரியவை. எங்கும் அவரை வழிபடலாம் என்பதை உணர்த்தினார் (யோவா 4:22). உரோ 12:1-ல் '..... கடவுளுக்கு உகந்த, தூய, உயிருள்ள பலியாக உங்களை படையுங்கள். இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு' எனக் கூறப்பட்டுள்ளது. இன்று வழிபாட்டிற்காக பலர் வெகுதூரம் சென்று, அதற்கு ஏராளம் செலவு செய்கின்றனர். ஆனால் வழிபாடு இடம் சார்ந்த ஒன்றாக அல்ல. இறை விருப்பம் அறிந்து செய்கிற உள்ளம் சார்ந்த அனுபவம். யோவா. 4:21-ல் 'எங்கும் பிதாவை தொழுதுகொள்ளும் காலம் வரும்' என்பது உலகமே ஆலயமாகும் காலம் வரும் என்பதை காட்டுகிறது. இறைமக்கள் தங்கள் பிரிவினைகளை அகற்றி, ஒரே மேய்ப்பனின் ஆளுகைக்குள் வருவதே இறைவிருப்பம். 'எல்லாரும் ஒன்றாயிருப்பார்களாக' (யோவா 17:21) என்பதே ஆண்டவர் விருப்பம். இதை ஏற்று வழிபடுவது சிறப்பு. துவக்ககால திருச்சபையில்'நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தார்கள்' (திபா 2:44).

உண்மையான வழிபாடு என்பது அசுத்தங்களுக்குள் நாம் மீண்டும் செல்லாதவாறு நம்மைத் தூய்மைப்படுத்தும். உண்மையான வழிபாடு பாவ விஷத்தை நமக்குள்ளிலிருந்து வேரறுத்து மீண்டும் தூய வாழ்வு வாழத் துணைசெய்யும். உண்மையான வழிபாடு இறைவிருப்பத்தை ஏற்று அதை நிறைவேற்ற நம்மை தூண்டும்.

'கடவுளை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் தான் வழிபட வேண்டும்.' ஆமென்.

அருள்திரு. T. **டேவிட் கிளேட்சன்**

28-06-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு**

# சான்றுபகர்வதே சீடத்துவம்

## DISCIPLESHIP AS WITNESS

| | |
|---|---|
| 2அர 2:1-15 | தீத் 2:1-15 |
| திபா 119:33-48 | யோவா 3:22-30 |

**"...எல்லா வகையிலும் நீயே முன்மாதிரியாய் இரு"** (தீத் 2:7)

குருகுலக் கல்வி முறையில் கல்விகற்ற மூன்று சீடர்கள் தங்கள் கல்விக்கு பின் குருவால் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மூன்று சீடர்களும் ஆச்சரியத்தோடு தங்கள் குருவை வணங்கி புறப்பட்டனர். வழியில் ஓரிடத்தில் முட்கள் சிதறிக்கிடந்தன. அதை கண்டு மூவரும் சற்று விலகி நின்றுவிட்டு அதனை கடக்க முயன்றனர். முதல் சீடன் முள் குத்தி கொள்ளக்கூடாது என்று கூறி மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்து அறிவாளியை போல கடந்தான். இரண்டாவது சீடன் சிறந்த விளையாட்டு வீரன் எனவே தாவிக்குதித்து முள்ளை தாண்டி விட்டான். மூன்றாவது சீடன் தன் மூட்டையை அங்கேயே இறக்கி வைத்து. வழியில் கிடந்த முட்களை அப்புறப்படுத்தினான். அவன் கை, கால்களில் சில முட்கள் தைத்து. ரத்தமும் கசிந்தது. ஆனால் அவன் பொருட்படுத்தினது முட்களை அப்புறப்படுத்தினால் நண்பர்கள் இருவரும் ஏன் வீணாக கஸ்டப்படுகிறாய்?; தாண்டி வந்துவிடேன் என்றனர். அவனோ தொடர்ந்து முயற்சி செய்து முட்களையெல்லாம் பாதையிலிருந்து மாற்றினான் அப்போது முதல் இரண்டு சீடர்களைப் பார்த்து. உங்களை சோதிக்க வேண்டும் என்பதற்காகவே நான் முட்களை இங்கே பரப்பினேன் தேர்வில் நீங்கள் இருவரும் வெற்றிபெறவில்லை பாதையில் உள்ள முட்களை அகற்றி மற்றவர்களுக்கு உதவி செய்து தொண்டுள்ளதுடன் சான்று பகிர்வதே சீடத்துவத்தின் அடையாளம் என்று சீடர்களை புரியவைத்தார்.

கிரேத்துத் தீவில் திருச்சபை வளர்ச்சி குன்றிய சூழ்நிலையில் உண்மையாய் ஆண்டவரை பின்பற்றி சான்றுபகரும் சீடத்துவ பண்புடைய தீத்துவை தேர்ந்தெடுத்து அச்சபையிலுள்ள உள்ள முதியோர், இளையோர், அடிமைகள், நல்லொழுக்கத்துடனும் அமைதியுடனும், அன்புடனும் வாழவும் பகைமை, வாக்குவாதம், பிளவுகளை தவிர்க்கவும் அறிவுரை கூற கூறுகிறார். இளையோர் முதல் முதியோர் வரை அனைவரும் ஆண்டவரை தெளிந்த அறிவுடன் பின்பற்றி வளர முயற்சி

செய் என ஆலோசனை கூறும் போது, தீத்து 2வது அதிகாரத்தில் ஆண்டவரைப் பின்பற்றி அவருடைய சீடனாக வாழும் நீ எல்லா வகையிலும் முன்மாதிரியாய் இரு என வலியுறுத்துகிறார். குறிப்பாக தீத்து 2:1-ல் "நீயோ" 2:7-ல் "நீயே" மற்றும் 2:15-ல் "நீ" "உன்னை" என்ற வார்த்தைகள் வழியாக முதலாவது நீ உண்மையான சீடனாக வாழ்ந்து சான்று பகிரும் போது அடுத்தவர்களை ஆண்டவருக்கு நேராக நடத்தலாம் என்று மிகத் தெளிவாக புரிந்து கொள்ள வைக்கிறார். கிரேத்தா தீவினர் மத்தியில் உழைப்பது அவ்வளவு சுலபமல்ல என்பதை மிகத் தெளிவாக அறிந்திருந்த பவுல் சற்று உற்சாகம் குன்றி காணப்பட்ட தீத்துவிடம் எல்லாவகையிலும் சான்று பகிர்ந்து சீடத்துவத்தின் சாரத்தை பிரதிபலிக்க குறிப்பிட்டு, எவைகள் வழியாக நீ சான்று பகர்ந்தால் நலமாயிருக்கும் என்பதை அறிவுறுத்துகிறார்.

## *1. நலந்தரும் வார்த்தைகள் வழி சான்றுபகர்தல் :*

நாம் பேசும் சொற்கள் தான் நம் வாழ்வின் திசைமானிகள். ஒருவர் எப்படிப்பட்டவர் என்பதை தெரிவிக்கும் உரைக்கல் தான் நம் உரைகள். கனிவுள்ள வார்த்தை நம்மை வாழவைப்பதோடு பிறரையும் வாழ வைக்கும். நலந்தரும் வார்த்தைகள் மனிதனை மற்ற உயிரினங்களினின்று உயர்த்தி நிறுத்தும். அத்துடன் வார்த்தையில் இரு பரிமாணங்கள் (உயர்த்தவும் செய்யும், தாழ்த்தவும் செய்யும்) இருப்பதால் கண்ணாடியைக் கையாளுவது போல் கவனமுடன் கையாள வேண்டும் என்ற சிந்தையோடு பவுல் தீத்துவுக்கு அறிவுரை கூறுகிறார். கிரேத்து தீவில் வாழும் வயது முதிர்ந்த ஆண்கள் அறிவு தெளிவு, கண்ணியம், கட்டுப்பாடு உடையவர்களா யிருக்கவும் (தீத்து 2:2) வயது முதிர்ந்த பெண்கள் தூய நடத்தை உடையவர்களாயும், புறங்கூறாதவர்களாயும், குடி வெறிக்கு அடிமை ஆகாதவர்களாய், நற்போதனை அளிப்பவர்களாய் இருக்குகிறவர்களாயும், (2:3) இளம் பெண்கள் தங்கள் கணவரிடமும் பிள்ளைகளிடமும் அன்பு காட்டி, கட்டுப்பாடும் கற்பும் உள்ளவர்களாய் வீட்டு வேலைகளை செவ்வனே செய்பவர்களாயிருக்கவும், நீயோ நலந்தரும் போதனைக்கேற்ப பேசு (2:1) என நல் ஆலோசனையை தூய பவுல் வழங்குகிறார். இத்தகைய நலந்தரும் வார்த்தைகளால் மட்டுமே சான்று பகிர்ந்திட முடியும்.

ஒரு நாள் யோவானின் சீடர் சிலருக்கும் யூதர் ஒருவருக்கும் இடையே தூய்மைச் சடங்கு பற்றி விவாதம் எழுந்தது (யோவா 3:25), அவர்கள் யோவானிடம் வந்து இயேசுவைக் குறித்து விவாதிறார்கள். யோவானின் வார்த்தைகள் விவாதத்தோடு வந்தவர்களுக்கு மெசியாவைக் தெளிவைத் தந்தது (யோவான் 3:28) ஆண்டவர் இயேசுவின் திருப்பணிக்

காலத்தில் அவரது வார்த்தைகள் அனைவரையும் ஈர்த்தது, குணமளித்தது, வாழ்வளித்தது, சோர்வடைந்த இதயங்களுக்கு ஆறுதலாக அமைந்தது. அவருடைய வார்த்தைகள் காலத்திற்கு உகந்த மருந்தாக, கனிவான சொல்லாக மிளிர்ந்தது. ஆண்டவரைப்போலவே அவரை பின்பற்றி வாழும் இறைமக்கள் அனைவரும் அவரது வார்த்தைகள் வாயிலாக சான்றுபகர உணர்த்தப்படுகிறோம். திருவள்ளுவர் தனது 200வது குறளில்

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். என்கிறார், அதாவது பேச வேண்டுமானால் பயனுடைய வார்த்தைகளையே பேச வேண்டும். பேசத்தகாத வீண்வார்த்தைகளைப் பேச வேண்டாம் என்பதை உணர்த்துகிறது. நலந்தரும் வார்த்தைகள் வழி சான்றுபகிரவேண்டிய ஆண்டவரின் சீடர்களாகிய நாம்,

பொறுப்பற்ற சொல் சச்சரவை ஏற்படுத்தும்
குரூரமான சொல் ஒரு வாழ்வை சிதைக்கக் கூடும்
ஒரு கசப்பான சொல் காழ்ப்புணர்வை ஏற்படுத்தலாம்
ஒரு முரட்டுச் சொல் மரணத்தை உண்டாக்கலாம்
ஒரு கருணையான சொல் பாதையை செப்பனிடலாம்
ஒரு மகிழ்ச்சியான சொல் நாளையையே வெளிச்சமாக்கலாம்
ஒரு நேரத்திற்குகந்த சொல் இறுக்கத்தை தளர்த்தலாம்
ஒரு அன்பான சொல் காயத்தை ஆற்றி ஆசீர்வதிக்கலாம்

என்ற உயரிய உண்மைகளையும் உள்ளத்தில் பதித்து நம் வார்த்தைகள் எல்லோருக்கும் எப்போதும் நலம் தருவதாய் அமையும்படி சான்றாய் வாழ்வோம்.

### *2. நற்செயல்கள் வழி சான்றுபகர்தல் :*

இயேசுவின் ரசிகர்களாக இருப்பதை விட அவரின் சீடராக வாழ்வது தான் பொருள் நிறைந்தது. அதுவும் அவரை பின்பற்றுவதை விட அவரை நற்செயல் வழியாக பிரதிபலிப்பதில் தான் பெருமை அடங்கியிருக்கிறது. பின்பற்றுதல் என்பது புறவயமானது. மானைப் போல ஓடுவதும் மயிலைப் போல ஆடுவதும் மிக மிக எளிது இவை முற்றிலும் புறமயமானது. ஆனால் நிலவைப் பிரதிபலிக்கிற குளம் போல முற்றிலும் அகவயப்பட்டு அப்படியே செயல்படுவது மிக மிகக் கடினம். ஆணவம் இல்லாமல், அவரிலே கரைந்து அவரைப்போலவே நற்செயல்கள் செய்து அவராக வாழ்வது மிக மிக கடினமானதும், சவால் நிறைந்ததுமாகும். இறைவாக்கினராகிய எலியா விண்ணுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு எலியாவிடமிருந்து விழுந்த போர்வையை எடுத்து, எலிசா பயன்படுத்தி, கடவுளுடைய பேராற்றலின் உதவியால் எலியா நற்செயல் செய்தது

போலவே (2 அரசர் 2:14) எலிசாவும் போர்வையினால் தண்ணீரை அடித்தார். அப்படி அடித்தவுடன் தண்ணீர் இரண்டாகப் பிரிந்தது. எரிகோவில் இருந்த இறைவாக்கினர் குழுவினர் தம் கண் முன்னால் நிகழ்ந்தவற்றைக் கண்டு எலியாவின் ஆவி எலிசாவின் மீது இறங்கியுள்ளது என்று கூறி அவர்கள் அவரிடம் வந்து அவர்முன் தரையில் வீழ்ந்து வணங்கினர் (2 அரசர் 2:15). எலியாவை போல நற்செயல் வழியாக எலிசாவும் நற்சான்றாளராக மாறினார்.

தூய பவுல் தீத்துவிற்கு எழுதும்போது கிரேத்தர்கள் ஓயாப் பொய்யர்கள், கொடிய காட்டு மிராண்டிகள், பெருந்தீனி சோம்பேறிகள் (1:12) கடவுளை அறிந்திருப்பதாக அவர்கள் அறிக்கை இடுகிறார்கள், ஆனால் அவர்களுடைய செயல்கள் அதை மறுதலிக்கின்றன அவர்கள் அருவருக்கத்தக்கவர்கள், கீழ்ப்படியாதவர்கள் எந்தச் நற்செயலையும் செய்யத் தகுதியற்றவர்கள் (1:16) ஆகவே நற்செயல்களைச் செய்வதில் எல்லாவகையிலும் நீயே முன்மாதிரியாய் இரு என ஆலோசனையாக கூறுகிறார். நற்செயலால் நற்சுகம் உண்டாகும். நற்செயல்செய்வதில் நாட்டங்கொள்ள வேண்டும், காரணம் என்னவெனில் இந்த உலகில் நாம் ஒருமுறை தான் வலம் வருவோம். யாருக்காவது எந்த நன்மையாவது செய்ய முடிந்தால், யாருக்காவது அன்பை காட்ட முடிந்தால் நாம் இப்போதே செய்துவிடவேண்டும். ஓத்திப்போடவோ ஒதுக்கவோகூடாது ஏனெனில் நாம் இந்த வழியே மறுபடியும் வர முடியாமல் போகலாம். நற்செயல் வழியாக சான்று பகரும்போது சமுதாயத்திலும் அமைதி பெருகும். 1947-ம் ஆண்டு பாரதம் இந்தியா பாகிஸ்தான் என பிரிந்தபோது இந்தியாவின் கிழக்குப் பகுதியில் நவகாளி என்ற இடத்தில் இரு சமயத்தினர் மோதிக்கொண்டனர். இதை அறிந்த காந்தியடிகள் அவ்விடத்திற்கு கால்நடையாகச் சென்று அப்பகுதி மக்களை சந்தித்தார். அவர்களிடையே அமைதி ஏற்படுத்தும் நற்செயலில் ஈடுபட்டார், ஆனால் இருசாராரும் இவர் மீது கற்களையும் அருவருப்பான சொற்களையும் வீசினர். பின்பு தியாக உணர்வோடு செயல்பட்ட காந்தியடிகளின் நல்லெண்ணத்தை புரிந்து தங்கள் ஆயுதங்களை அவரது காலடியில் வைத்துவிட்டு அமைதியோடும், நல்லுறவோடும் வாழ்வதாக தீர்மானத்தோடு திரும்பினர். இத்தகைய நற்செயல்களுக்கு நம்மை அர்ப்பணித்து ஆண்டவரின் சீடர்களாகிய நாம் சான்றுடன் முன்னேற முயற்சிக்க வேண்டும். நற்செயல்கள் வழி நாம் சமுதாயத்தில் சான்று பகிரும் போது கிறிஸ்து நம்மில் ஒளிர முடியும். நம்மில் கிறிஸ்துவை அடையாளம் காண்பார்கள். இப்படிப்பட்ட சிந்தனையோடு புனித அவிலா தெரசாள் என்பவர் இவ்வுலகில் உன்னை தவிர கிறிஸ்துவிற்கு வேறு உடல் இல்லை,

உன் கண்களின் வழியாகவே அவர் இவ்வுலகை கருணைக் கண் கொண்டு நோக்குகிறார். உன் பாதங்களைக் கொண்டே அவர் எங்கும் நன்மை செய்து கொண்டே செல்கிறார். உன் கரங்களைக் கொண்டே அவர் இப்பொழுது ஆசீர்வதிக்கிறார் என்ற வரிகளின் வழியாக உலகில் வாழும் நாம் ஒவ்வொருவரும் இயேசுவுக்கு சான்றுகளாய், கிறிஸ்துக்களாய் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

### *3. நற்குணம் வழி சான்றுபகர்தல் :*

தூய பவுல் திருப்பணியில் தன்னோடு இணைந்து இறையன்பை பல பட்டணங்களுக்கு பகிர உழைத்த இளையோரிடம் மிக அழுத்தமாய் அறிவுறுத்தின உண்மைகளில் ஒன்று நற்குணம் ஆகும். நற்குணம் வழி சான்றுபகிர்தல் சீடத்துவத்திற்கு அழகு சேர்க்கும். எனவே தீத்துவிடம் "...யாரும் உன்னை தாழ்வாக மதிப்பிட இடமளிக்காதே (2:15) என்கிறார். கிரேத்தா தீவில் நற்குணமற்று வாழ்ந்தால் மக்கள் உன்னை தாழ்வாக மதிப்பிடுவர், அத்தகைய சூழலில் நீ பின்பற்றி பறைசாற்றும் ஆண்டவரின் அன்பை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என எச்சரித்து ஆலோசனை கூறுகிறார். அப்படியே வயதில் இளமையான திமொத்தேயுவிடம் நீ இளைஞனாக இருப்பதால் யாரும் உன்னை தாழ்வாகக் கருதாதிருக்கட்டும், பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை, தூய்மை ஆகியவற்றில் நீ விசுவாசிகளுக்கு முன்மாதிரியாய் விளங்கு (1தீமொத் 4:12) எனவும் அறிவுறுத்தினார்.

ஆண்டவர் இயேசுகிறிஸ்து அன்பு என்னும் நற்குணம் வாயிலாக சீடத்துவத்திற்கு சான்றாக முடியும் என்கிறார். நீங்கள் ஒருவர் மற்றவருக்கு செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வார்கள் (யோவா 13:35) என தனது வார்த்தைகளின் வாயிலாக தெளிவுபடுத்துகிறார். இயேசுவின் சீடர்கள் தங்கள் சீடத்துவத்தின் உண்மையை புரிந்துகொள்ள தவறிப்போனபடியால் பதவியையும் பணத்தையும் எதிர்பார்த்து செயல்பட்டனர். ஆகவே ஆண்டவர் இயேசு பணிவிடை மூலம் அன்பு செய்யுங்கள் என சொல்லிலும் செயலிலும் வலியுறுத்தினார். யோவா 15:8-ல் சீடர்களிடம் "நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது" என மறைக்காமல் கோடிட்டுகாட்டினார; நற்குணமுள்ள வாழ்வையே கனியுள்ள வாழ்வு என ஆண்டவர் குறிப்பிடுகிறார். ஒருமுறை ஆபிரகாம் லிங்கன் தன் நண்பரோடு வெளியில் உலா சென்றார். அந்நேரம் ஒரு வயதான நீக்ரோ மனிதர் அவரை எதிர் கொண்டு வந்தார். ஆபிரகாம் அம்மனிதருக்கு வணக்கம் செலுத்திவிட்டு அவரோடு சிறிது நேரம் அளவளாவினார். அவருடைய நண்பருக்கு இது பிடிக்கவில்லை.

லிங்கனை பார்த்து நீங்கள் அமெரிக்காவின் ஜனாதிபதி எனவே உங்களுடைய தகுதிக்கேற்ப நடக்க வேண்டும். அமெரிக்க ஜனாதிபதி இந்த அளவுக்கு ஒரு சாதாரண நீக்ரோவிடம் (கறுப்பின மனிதன்) கரிசனையோடு இருக்க தேவையில்லை என்றார். அதற்கு லிங்கன் நாம் எல்லோரும் கடவுளுடைய குழந்தைகள் கடவுள் நம் எல்லோரையும் அன்பு செய்கிறார். நாமும் யாரையும் நம் அன்பிலிருந்து பிரித்து ஒதுக்கி வைக்ககூடாது. நான் உன்னை அன்பு செய்வதைப் போலத்தான் இந்த நீக்ரோ மனிதனையும் அன்பு செய்கிறேன் என்றார். நாம் கடவுளின் பிள்ளைகள் ஆகவே அவர் நமக்கு கற்றுத்தந்த நற்குணங்கள் வழி சான்றுபகிர்வோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சீடர்களிடம் நீங்கள் சாட்சிகள் (லூக் 24:48) என்றார். அப்படியே குருவாகிய இயேசுவை பின்பற்றுகிற நாம் அவரது சீடர்கள், அப்படி உண்மையான சீடன் குருவாகவே வாழவேண்டும். இயேசுவின் சீடராக வாழ்ந்து சான்று பகருவது மிக சவாலானது. ஆனாலும் சீடத்துவத்தில் சமரசத்திற்கு இடமில்லை மாறாக சீடத்துவத்தின் கடமைதுவத்தை உணர்ந்து தனிப்பட்டவாழ்வில் சான்று பகர்ந்து வாழ்வது தான் சமுதாயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என உணர்ந்து செயல்படுவோம். அத்துடன் எப்போதும் அவரது செல்வாக்கு பெருக வேண்டும், எனது செல்வாக்கு குறைய வேண்டும் (யோவா 3:30) என்பதை உள்ளத்தில் பதித்துக் கொள்வோம்.

அருள்திரு. G.S. ***ஆஸ்வின் ஜெய்சிங்***

01-07-2020 **புதிய மாத நன்றித் தொழுகை**

# ஆண்டவரே நம் புகலிடம்

திருமறைப்பாடம் : திபா 32:1-11

**“நீரே எனக்குப் புகலிடம்; இன்னலினின்று என்னை நீர் பாதுகாக்கின்றீர்; உம் மீட்பினால் எழும் ஆரவாரம் என்னைச் சூழ்ந்தொலிக்கச் செய்கின்றீர்”.** (திபா 32:7)

புகலிடம் என்பது ஆபத்து காலத்திலோ அல்லது துன்ப நாட்களிலோ பாதுகாப்பை தேடி அலைகின்றபோது கிடைக்கின்ற தஞ்சம் அல்லது அடைக்கலம். பருந்தின் பிடியில் இருந்து தப்பிய குஞ்சுகளுக்கு கோழியின் சிறகுகள் தான் புகலிடம். கோழி தன் குஞ்சுகளுக்கு செட்டையின் மறைவில் தஞ்சம் தருவது போல கடவுள் தம் பிள்ளைகளுக்கு சிலுவையின் நிழலில் புகலிடம் தருகிறார். “அவர் தம் சிறகுகளால் உம்மை அரவணைப்பார். அவர் தம் இறக்கைகளின் கீழ் நீர் புகலிடம் காண்பீர். அவரது உண்மையே கேடயமும் கவசமும் ஆகும்.” (திபா 91:4). “அடைக்கலம்” அல்லது “புகலிடம்” என்பது கடவுளைக் குறிக்கிற அடைமொழியாகும். கடவுள் மனிதர்களை காப்பவர் என்பதை குறிக்கும் இணைமொழியாகும். ‘அடைக்கலப் பாறை’, அரண் (திபா 18:1,2) போன்றவை கடவுள் புகலிடம் தருகிறார் என்பதை பற்றி திருப்பாடல்கள் முக்கியபடுத்துவதை காணலாம். பக்தியுள்ளவர்கள் கடவுளின் இறக்கையின் நிழலில் புகலிடம் பெறுகின்றனர் (திபா 36:7). அதுபோல கடவுளின் நம்பிக்கை கொண்டு வாழும் பாவிக்கும் புகலிடமாக இருந்து பாடுகள் நீங்கி வாழ வழிநடத்துகிறார் கடவுள் நம் வாழ்வில் எவ்வாறு புகலிடமாக இருக்கிறார் என்பதனை தியானிப்போம்.

### *1. பாவிக்குப் பரிவுகாட்டும் புகலிடம்* :

வயலில் விளைந்த கதிர்களை அறுவடை செய்து, அதன் பதர்களை விலக்கி நெல்மணிகளை பிரித்து எடுப்பது போல பாவம் கலந்த உலகில் தூயதாய் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆனால், பயிரோடு கலந்த களை போல தூய வாழ்வோடு பாவ வாழ்வும் கலந்து விடுகிறது. இப்படி தவறிப் போய் பாவ வாழ்வில் அடிமையாகும் பாவி தன் நிலை உணர்ந்து கடவுளிடம் திரும்பும் போது பரிவு காட்டும் புகலிடமாகக் கடவுள் இருக்கிறார். 32-ம் திருப்பாடல், கடவுளிடமிருந்து பாவத்திற்கு மன்னிப்பை புகலிடமாக பெற்ற அனுபவத்தில் இருந்து தோன்றியது. அறிக்கை செய்யப்படாத பாவம் கடவுளின் கோபத்திற்கும், துன்ப அனுபவத்திற்கும் அழைத்துச் செல்லும். “என் பாவத்தைஅறிக்கையிடாதவரை நாள்

முழுவதும் நான் கதறி அழுததால் என் எலும்புகள் கழன்று போயின. ஏனெனில், இரவும் பகலும் உம் கை எனக்கு எதிராக ஓங்கி நின்றது'' (திபா 32:3,4) எனப் பார்க்கிறோம். ஆனால், பாவத்தை உணர்ந்து திரும்பும் போது மீட்பு பெறுகிறோம். ''என் பாவத்தை உம்மிடம் அறிக்கையிட்டேன்; தீச்செயலை நான் மறைத்ததில்லை; ஆண்டவரிடம் என் குற்றங்களை ஒப்புக் கொள்வேன் என்று சொன்னேன். நீரும் என் நெறிகேட்டையும் பாவத்தையும் போக்கினீர்'' (திபா 32:5) என்னும் மறைவாக்கு பாவிக்கும் பரிவுகாட்டும் புகலிடமாக கடவுள் செயல்படுகிறார் என்பதை உறுதிபடுத்துகிறது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆறு பட்டணங்கள் அடைக்கலப்பட்டணமாக இருந்தன என்று எண்ணிக்கை 35:6-34 வரையுள்ள வசனங்கள் விளக்குகின்றன. கைபிசகாய் ஒருவனை கொன்றவன் அங்கு புகலிடம் தேடி போய் அடைக்கலம் பெற்று தன்னை தப்புவித்து கொள்ளலாமே. யாராவது அப்படி தப்பி அந்த அடைக்கலப்பட்டணத்திற்குள் புகுந்து விட்டார் யாரும் அவனை ஒன்றும் செய்ய முடியாது. இந்த அடைக்கலப் பட்டணங்கள் மனிதனால் உண்டாக்கப்பட்டவை அல்ல, மாறாக, கடவுளால் ஏற்படுத்தப்பட்டவை. இன்று நமக்கு அடைக்கலப்பட்டணம் போல புகலிடமாக நம் இயேசு கிறிஸ்து இருக்கிறார். பாவத்தின் கூலியாகிய இறப்பினின்று நம்மை மீட்க சிலுவையில் தம் இரத்தத்தை சிந்தி எந்த பாவிக்கும் பரிவுகாட்டும் புகலிடமான இயேசுவிடம் திரும்பி மீட்பின் அனுபவத்தை பெறுவோம்.

### *2. பாடுகளில் பாதுகாப்பு தரும் புகலிடம்* :

இன்பத்தில் உடன் சேர்ந்து கொள்ளும் மனிதர்களில் பலர் துன்பம் வரும் போது துணையாய் கூட இருப்பதில்லை. ஆனால் கடவுள் எல்லா சூழல்களிலும், நம் பாடுகளிலும் பாதுகாப்பு தரும் புகலிடமாக இருக்கிறார் என்பது உறுதி. திபா 27:5-ல் பார்க்கம் போது ''கேடு வரும் நாளில் அவர் என்னை தம் கூடாரத்தில் மறைத்து வைப்பார். தம் கூடாரத்தினுள்ளே என்னை ஒளித்து வைப்பபார்'' (திபா 27:5). தாவீது தன் துன்ப நேரத்தில் பாதுகாப்பை தேடி பல இடங்களில் அலைந்து திரிந்தாலும் கடவுள் தான் பாதுகாப்பும் மறைவிடமுமாய் இருக்கிறார் என்பதற்கு சான்று பகருகின்றார். ''நீரே எனக்கு புகலிடம். இன்னலினின்று என்னை பாதுகாக்கின்றீர்'' (திபா 32:7). கடவுள் தாவீதை அவனுடைய எல்லா சத்துருக்களின் கைக்கம் சவுலின் கைக்கும் நீங்கலாக்கி விடுவித்த போது ''என் கடவுள்; நான் புகலிடம் தேடும் மலை அவரே; என் கேடயம்; எனக்க மீட்பளிக்கும் வல்லமை; என் அரண்; என் தஞ்சம்; என் மீட்பர்; கொடுமையினின்று என்னை விடுவிப்பவரும் அவரே'' (2சாமு 22:3). என பாடினார்.

ஒரு முறை தாவீது சவுலுக்கு தப்பியோடி காத்தின் ராஜாவாகிய ஆகீசிடம் புகலிடம் தேடி போகிறார். ஆனால் புகலிடம் தேடிய இடத்தில் ஆபத்து என அறிந்த போது தன் முகநாடியை வேறுபடுத்தி பித்தங்கொண்டவனைப் போல காண்பித்து அங்கிருந்து தப்பி கடவுளிடம் மீண்டும் புகலிடம் கேட்டு அதுல்லாம் என்னும் கெபிக்குள் போய் புகலிடம் பெற்றார் (1சாமு 21:10-15). இன்றும் நாம் பாதுகாப்பில்லாத உலகில் புகலிடம் தேடி பாதுகாப்பற்ற இடத்தில் சில நேரங்களில் செல்லுகிறோம்.

“கடவுள் நமக்கு அடைக்கலும் ஆற்றலுமாய் உள்ளார். இடுக்கணுற்ற வேளைகளில் நமக்கு உற்ற துணையும் அவரே” (திபா 46:1) என்பதை உண்மையாய் உணர்ந்து பாடுகளில் பாதுகாப்பை தரும் கடவுளிடம் தஞ்சம் புகுந்து புகலிடம் பெற்று இன்பமாய் வாழுவோம்.

அருள்திரு. C. **ஜெபக்குமார்**

05-07-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும்**
**ஐந்தாம் ஞாயிறு & பொறுப்பாண்மை ஞாயிறு**

# பொறுப்பாண்மை: பொறுப்புள்ள வளமேலாண்மை

## STEWARDSHIP : RESPONSIBLE RESOURCE MANAGEMENT

விப 18:13-27 2கொரி 8:1-15
திபா 147:1-11 மத் 25:14-30

**"நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே, சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர். எனவே, பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன்".** (மத் 25:21)

பொறுப்பாண்மை என்னும் சொல் விவிலியத்தில் பயன்படுத்தப்படவில்லையென்றாலும் அச்சொல் சார்ந்துள்ள கருத்து திருமறையில் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. பொறுப்பாண்மை என்னும் தமிழ்சொல் ஆங்கிலத்தில் 'stewardship' என்றும் கிரேக்க மொழியில் 'oikonomous' என்றும், அறியப்படுகிறது. 'oikonomous' என்னும் இந்த வார்த்தை 'oikos' மற்றும் 'nomas' என்னும் இரண்டு வார்த்தைகளின் இணைவு ஆகும். 'oikos' என்பது வீட்டுக்காரியங்கள் '(household)' என்னும் 'nomas' என்பது சட்டம் அல்லது ஆளுகை (law or rule) என்றும் பொருள்படும். ஆக, 'oikonomous' என்பது வீட்டை ஆளுபவரைக் குறிக்கிறது. இவன் வீட்டின் உரிமையாளனல்ல. ஆனால் பொறுப்பாளி, வீட்டுக்காரியங்களை கவனிக்க, நிர்வகிக்க, நம்பிக்கையான அடிமைகளை வைத்திருக்கும் பழக்கம் அக்காலங்களில் இருந்தது. ஆபிரகாமுக்கு எலியேசரைப் போல, போத்திபாருக்கு யோசேப்பைப் போல. இவர்கள் அதிபதிகள் அல்ல, அதிகாரிகள் என்றாலும் அடிமைகளே. அனைத்தையும் ஆள இவர்களுக்கு அதிகாரம் உண்டு எனினும் உரிமை கோர முடியாது. மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை என்றும், மனிதன் உலகைப் பண்படுத்தவும், பாதுகாக்கவும் வைக்கப்பட்டிருக்கிறான் என்றும் திருமறை கூறுகிறது (திபா 24:1; தொநூ 2:15) கடவுளின் உலகில் மனிதன் பொறுப்பாண்மை உடையவன், பொறுப்பாளி, உக்கிராணக்காரன். கடவுள் நிலவளம், நீர்வளம், மனிதவளம், எனப் பல வகை வளங்களைத் தந்திருக்கிறார். இதனை பொறுப்புடன் மேலாண்மை செய்ய மனிதன் எதிர்பார்க்கப்படுகிறான். திருமறையில் உவமையாக, தாலந்து (மத் 25:14-30), திரவியம் (லூக் 19:11-27) என்று சொல்லப்பட்டிருந்தாலும், நமது சூழலில் நமக்கு தரப்பட்டிருக்கும்

பொறுப்புகளில் பொறுப்பாண்மை உடையவர்களாக வாழ அழைக்கப்படுகிறோம். மகன், மகள், தாய், தந்தை, சகோதரன், சகோதரி, ஆசிரியர், மருத்துவர், பொறியியலாளர், வழக்கறிஞர், தொழில் முறைவோர், தொழிலாளி, வியாபாரி, விவசாயி, போதகர், மூப்பர், ஓட்டுநர், கலைஞர் போன்ற பல்வேறு பொறுப்புகளைத் தனது உலகில் கடவுள் நமக்குத் தந்துள்ளார். பொறுப்புள்ள வளமேலாண்மை என்பது :

### *1. பதுக்கிவைத்தல் அல்ல பகிர்ந்துகொள்ளுதல் :*

"ஒரு தாலந்து பெற்றவரோ, போய், நிலத்தைத் தோண்டி, தன் தலைவரின் பணத்தைப் புதைத்து வைத்தார்" (மத் 25:18).

"ஐந்து தாலந்தைப் பெற்றவர் போய், அவற்றைக்கொண்டு வணிகம் செய்து வேறு ஐந்து தாலந்து ஈட்டினார்" (மத் 25:16).

புதைத்து வைத்தல் என்பது எவருக்கும் பயனற்றது. ஒருவேளை தன் எஜமானுடையதை அவன் அப்படியே கொடுத்துவிட்டானே என்று நாம் எண்ணலாம். ஆனால் அதை அப்படி எண்ணுவது முறையல்ல. இங்கு பணத்தின் காலமதிப்பு (Money value of time) என்று சொல்லப்படுவதை வைத்து சிந்திக்கவேண்டும். அதாவது, பணத்திற்கு ஒரு காலத்தில் இருந்த மதிப்பு மற்றொரு காலத்தில் இல்லை. காலத்திற்குத்தக்க பணத்தின் மதிப்பு வேறுபடுகிறது; குறைந்து வருகிறது. ஆக, எஜமானுடைய ஒரு தாலந்தை அவன் திருப்பிக் கொடுக்கும்போது அதனுடைய மதிப்பு குறைந்துவிட்டது. வங்கியில் போட்டிருந்தால் வட்டியாவது கிடைத்திருக்குமே (வ. 27) என்ற எஜமானுடைய ஆதங்கத்தினையும் இங்கு காணமுடிகிறது. பலருக்கு பயன்படவேண்டிய செல்வம் பதுக்கி வைத்ததால், பாழாய்ப்போயிற்று. இதன் வழி எத்தனையோ பேர் வாழ்வு பெற்றிருப்பர். ஆனால், பதுக்கி வைக்கப்பட்டதால் மற்றவர்களுக்கும் பயனின்றி அது தனது மதிப்பையும் இழந்துவிட்டது. சமீபத்தில் திருவனந்தபுரம், பத்மநாதசுவாமி கோயிலில் திரளான செல்வம் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு உலகமே அதிர்ந்தது. தேசத்தில் எவ்வளவோ நலத்திட்டங்களுக்கு பயன்படுத்தப் பட்டிலுக்க வேண்டிய செல்வங்கள் பதுக்கி வைக்கப்பட்டு அதன் நிலை இன்றளவும் அறியப்படாமலேயே உள்ளது. விப 18:13-27-ல் மோசேயின் மாமனாகிய எத்திரோ மோசேயிடம் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கக் கூறுகிறார். வ. 17-ல் "நீர் செயல்படும் முறை சரியல்ல" (அதிகாரக்குவியல்) என்று சொன்ன எத்திரோவின் அதிகாரப்பகிர்வு முறை (Decentralization of Power) இன்றளவும் நிர்வாக முறையில் தலைசிறந்தததாக விளங்குகிறது. மக்கதோனியா நாட்டு திருச்சபைகளாகிய பிலிப்பி. தெசலோனிக்கே

திருச்சபைகள் தாங்கள் ஏழ்மையிலிருந்த போதும் தங்களிடமிருந்த வளத்தை பஞ்சத்திலிருந்த எருசலேம் மக்களோடு பகிர்ந்து கொண்டதைத் திருமறை கூறுகிறது (2கொரி 8:1-15). பொதுவாக, எது எனதோ அது எனக்கு, எது உனதோ அது உனக்கு என்று எண்ணுவது சாதாரண மனம். எது என்னதோ அது எனக்கு எது உனதோ அதுவும் எனக்கு என்று எண்ணுவது தீயமனம். எது எனதோ அதுவும் உனக்கு எது உன்னதோ அதுவும் உனக்கு என்று எண்ணுவது தெய்வீகமனம். ஆக, பொறுப்புள்ள வளமேலாண்மை என்பது பதுக்கி வைத்தல் அல்ல பகிர்ந்துகொள்ளதல் என்பது தெளிவாகிறது.

### *2. பொறாமைகொள்ளுதல் அல்ல பொறுமைகொள்ளுதல்* :

ஒரு தாலந்தை வாங்கினவன் பொறுப்பாண்மையோடு செயல்படாததற்கு காரணம் எதுவும் நேரடியாக சொல்லப்படவில்லை. எனினும் பொறாமை முக்கிய காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. மற்றவர்களை போல தனக்கும் கிடைக்கவில்லை என்ற ஆத்திரமும் தன்னை விட பிறருக்கு அதிகம் கிடைத்துவிட்டது என்ற பொறாமையும் தவிர வேறு காரணம் ஏதும்சொல்லுவதற்கில்லை. மத் 25:15-ல் அவனவன் திறமைக்குதக்கதாக பிரித்து கொடுக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. இவன் தனது நிலையை அறியாதவர். அடுத்தவனுக்கு அதிகம்கொடுக்கப்பட்டதால் பொறாமை கொள்ளுகிறான். பொறாமை கொண்டது மட்டுமல்ல, பொறுமை இழந்து எஜமானனுக்கு எதிராக வார்த்தைகளையும் வீசுகிறான் (வ. 24). இரண்டு தாலந்தை வாங்கினவன் ஐந்து தாலந்தை வாங்கினவனோடு தன்னுடைய வளத்தை ஒப்பிடாமல், பொறாமைகொள்ளாமல், தனக்கு கிடைத்த தன் வளத்தை பொறுமையுடன் மேலாண்மை செய்ததால் ஐந்து தாலந்தைப் பெற்றவலனுக்கு கிடைத்த அங்கீகாரம் இவனுக்கும் கிடைத்ததைக் காணமுடிகிறது (வ. 21,23).

### *3. உபயோகமற்றிருத்தல் அல்ல உண்மையாயிருத்தல்* :

“பயனற்ற இந்தப் பணியாளனை...” (மத் 25:30).

“...நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே....” (மத் 25:23).

கடவுளால் நமது கரங்களில் தரப்பட்டுள்ள காலம், வாய்ப்புகள், தாலந்து, திறமை முதலிய வளங்களைப் பொறுப்புடன் பயன்படுத்தாவிட்டால் கடவுளின் பார்வையில் நாமும் பயனற்றவர்களே. கடவுள் தந்தவைகள் கடவுளுக்கே சொந்தமானவைகள். எனினும், அவைகள் நம் கரத்தில் தரப்பட்டுள்ளபடியால் உண்மையுடன் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகிறோம். அதிகம் கொடுக்கப்பட்டவர்களிடத்தில்

அதிகமாய் எதிர்பார்க்கப்படும் (லூக் 12:48). நம்முடைய உண்மைத்தன்மை நாம் வளங்களை எப்படி பயன்படுத்துகிறோம் என்பதிலேயே வெளிப்படும். “உண்மையுள்ள மனிதர் நலன்கள் பல பெறுவார்” (நீமொ 28:20). நம்மை அழைத்திருக்கிற கடவுள் நம்மை உண்மை உள்ளவர்கள் என்று எண்ணியே நமக்கு மாபெரும் வளங்களைத் தந்திருக்கிறார் (1திமொ. 1:12). பொறுப்பாண்மை வளர உள்ளத்தில் உண்மை வேண்டும். உண்மையுள்ளோரே கடவுளுக்கு உகந்தோரும் நல்ல பொறுப்பாண்மையாளருமாயிருப்பார்.

இறைவன் நமக்கு வழங்கியிருக்கும் அனைத்து வளங்களையும் பொறுப்புடன் மேன்மை செய்யவேண்டியது நம் கடமை. அனைத்தும் அனைவருக்குமுரியது என்ற எண்ணத்துடன் வாழ்வது அவசியம் கடவுள் தந்திருக்கும் வளங்களைப் பகிர்ந்து, பிறர் மீது பொறாமை கொள்ளாமல் பொறுமையோடு பயன்படுத்தி, அவருக்கு நம்பிக்கைக்கரிய, உண்மையுள்ள மனிதர்களாய் வாழ்வோம்.

அருள்திரு. M. **இம்மானுவேல் கின்சன்பெல்**

12-07-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும்**
**ஆறாம் ஞாயிறு &**
**இறையியல் கல்வி ஞாயிறு**

# இறையியல் கல்வி : இறைமக்களை மேம்படுத்துதல்

**THEOLOGICAL EDUCATION : EQUIPPING THE PEOPLE OF GOD**

| | |
|---|---|
| இச 6:1-17 | எபே 4:7-16 |
| திபா 119:89-104 | மத் 7:24-29 |

**"இன்று நான் உனக்குக் கட்டளையிடும் இவ்வார்த்தைகள் உன் உள்ளத்தில் இருக்கட்டும். நீ அவற்றை உன் பிள்ளைகளின் உள்ளத்தில் பதியுமாறு சொல்...".**

(இச 6:6,7)

இயற்கை சுரண்டப்பட்டு, மனித நேயம் மறைந்து, வன்முறைகள், வறுமை, ஏற்றத்தாழ்வுகள் உயர்ந்து, சுயநலம் பெருகி, காழ்ப்புணர்ச்சி மிஞ்சி வரும் காலகட்டம் இது. எதிர்காலம் எப்படிப்பட்டதோ என்று அஞ்சும் அளவுக்கு பேரழிவுகள். அன்பு மறைந்து போட்டி மனப்பான்மை நிலவுகிறது. திருச்சபை உலகுடன் இணைந்து சந்திக்கும் இந்த சவால்களுக்கு தரும் பதில் என்ன? இறைமக்களை எவ்வாறு தயார் செய்வது? திருச்சபை சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ள அதற்கு தேவையான இறையியல் பயிற்சி, அர்ப்பணிப்பு, விவிலிய பகுப்பாய்வு திறன் போன்றவற்றை வழங்குவதே இறையியல் கல்வியின் நோக்கமாகும். மறுபுறம் விரைவாக வளர்ந்து வரும் கிறிஸ்தவ இறையியல் கல்வியில் முன்னேற்றம் எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக Dr.Dietrich Werner கூற்றுப்படி, 1910-ல் 2.4% ஆக இருந்த ஆசிய மற்றும் 3ஆம் உலக நாடுகளின் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 2010-ல் 8.5% ஆக வளர்ந்தது. மூன்றில் ஒரு பங்கு இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாக மாறி வருகின்றனர். மேற்கத்திய நாடுகள் சரிவை சந்தித்தாலும் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் மூன்றாம் உலக நாடுகளின் வளர்ச்சி பாராட்டுக்குரியது. இறையியல் பயிற்சி இத்தகைய வளரும் மக்களுக்கு பன்முகத்தன்மையுடன் வழங்கப்பட வேண்டும். ஆகவே இறையியல் கல்வி இறைமக்களை இறைவார்த்தையில் ஊன்றக்கட்டி, அனைத்து இறைமக்களையும் இறைப்பணிக்கும், சான்று வாழ்வுக்கும் அழைத்து செல்வதே நோக்கமாக கொண்டுள்ளது. "இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் முறையாக இறையியல் பயிற்சிப் பெற்றிருக்கவில்லை. ஆனால் அவர்கள் இயேசுவின் வாழ்வு மற்றும் போதனைகளைக் கண்டு, அதற்கு சான்றளித்ததால் இயல்பாகவே

மக்களை கவர்ந்திழுக்கும் ஆற்றல் பெற்றிருந்தனர்'' என்று Harold Rowdan எனும் இறையியல் வல்லுநர் குறிப்பிடுகின்றார். ஆனால் இயேசு நாதர் தனது சீடர்களிடம் “நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்'' (மத் 28:20) எனக் கூறினார். யூதர்கள் மற்றும் புறஜாதியாருடன் ஏற்பட்ட விவாதங்கள் மற்றும் போதனைகள் முறையான, செறிவூட்டப்பட்ட இறையியல் பயிற்சி தேவை என்பதை முன்னுரைத்தன. ஆகவே முதல் 5 நுற்றாண்டுகளில் அலெக்சாந்திரியா, சிசேரியா, அந்தியோகியா, எடசா, நிகிபிஸ் போன்ற இடங்களில் பேராயர்களின் தலைமையின் கீழ் கிறிஸ்தவப் பண்புகள், முன்மாதிரி வாழ்க்கை, பற்றுறுதியின் முக்கியத்துவம் போன்றவைக் கற்பிக்கப்பட்டது.

இறையியல் பயிற்சி போதகர்களுக்கு மட்டுமல்ல மதசார்பற்றதாக அனைவருக்கும் அளிக்கப்பட்டது. ஆகவே இறையியல் அறிவியலின் அரசி என்றழைக்கப்பட்டது. 15-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட திருச்சபை மறுமலர்ச்சி “Back to the sources” என்பதை மையமாக வைத்து திருமறையை முக்கியப்படுத்தியது. திருமறையின் அடிப்படையில் முறையான இறையியல் பயிற்சியை மையப்படுத்தி, திருச்சபை நடைமுறை, பராமரிப்பு, தொழுகை ஒழுங்கு போன்றவை அளிக்கப்பட்டது. பின்னர் 19 -ம் நூற்றாண்டில் இறையியல் கல்வி அறிவு மற்றும் தத்துவம் சார்ந்த கல்வி பிரிவாக மாறியது. ஆகவே D.L. மூடி போன்றோர் தலைமைத்துவ மற்றும் நற்செய்திப்பணி இணைந்த பயிற்சியாக மாற வலியுறுத்தினர். இன்று இறையியல் சமூக, சமய, பொருளாதார காரணிகளை பகுத்து அதனூடே திருப்பணியை நிறைவேற்றிட வேண்டியது இன்றியமையாதது. இறையியல் கல்வி எவ்விதம் இறைவார்த்தையின் அடிப்படையில் அமைக்கப்பட்டு இறைப்பணியாளர்களையும் இறைமக்களையும் உருவாக்குவது என்பதை பின்வரும் பகுதிகளில் காண்போம்.

### *1. இறைவார்த்தையில் ஊன்றிய இறையியல்:* (இச 6:4-9)

ஆனால் இறையியல் கல்வியில் முதன்மை ஆதாரமாக வார்த்தையாக கடவுளிடம் இருந்து அவதரித்த இயேசுகிறிஸ்துவின் வழி மீட்பு அளிக்கும் வார்த்தைகள் பதிந்துள்ள திருமறை ஆகும். யூதர்களின் மெதுஷா வழக்கப்படி நான்கு திருமறைப் பகுதிகளை (விப 13:2-10, 13:11-17, இச 6:49,6:13-23) தோற் சுருளில் எழுதி சிறிய பெட்டியில் வீட்டு நிலைகளின் மேலும் அறைகளிலும் வைத்தனர். “ஆண்டவர் ஒருவரே; அவரிடம் முழு ஆற்றலோடும் உள்ளத்தோடும் அன்புகூர வேண்டும்'' என்ற கட்டளை யூதர்களின் அடிப்படை கற்பனையாயிருந்தது. குழந்தைகள் உள்ளத்தில்

பதியும்படி கற்பித்து வாழ்வில் பின்பற்றவும் கூறுகிறது. கையில் அடையாளமாகவும் நெற்றியில் அடையாளமாகவும் இருக்க அறிவுறுத்துகிறது. இயேசுவின் காலத்திலும் பரிசேயர்கள் இந்த வழக்கத்தை கொண்டிருந்தனர் என (இச 6:8) மத் 23:5-ல் பார்க்கிறோம். இஸ்ரவேலே "கேள்" அல்லது shema எனும் பகுதி அனைத்து மக்களாலும் கடவுள் மீது தாங்கள் கொண்டுள்ள பற்றுறுதியின் வெளிப்பாடாக காணப்பட்டது. இல்லத்தில் எழுதுவதன் வழி கடவுள்மீது பற்று கொண்டவை உறையும் இடம் அது என அடையாளப்படுத்தப்பட்டது. குழந்தைகளுக்கு முதற் கல்வி யூத வழக்கப்படி இல்லத்தில் ஆரம்பித்தது. ஆகவே குழந்தைகள் கடவுள் மீது பற்றுறுதி கொள்ள கற்பிக்கப்பட்டது. வீட்டிலும் வெளியிலும் நினைவு கூருவதற்குத் தொடர்கல்வியாக மோசே இதை நிறுவினார். திருமறையும் இவ்விதம் ஆய்ந்து இடைவிடாமல் பயிற்றுவிக்கப்பட வேண்டும். தூய பவுல் தன்னுடன் பணியாளரும், எபேசு திருச்சபையின் முதல் பேராயருமான தீமோத்தேயுவுக்கு அறிவுரையாக திருமறையைப் படித்து, பயிற்றுவித்து, போதிக்க அறிவுரை கூறுகிறார். (1 திமொ 4:13).

மார்ட்டின் லூதர் தனது 'sola' அல்லது 'alone' (மட்டும்) என்னும் முக்கிய போதனையின் முதலாவதாக Sola Scriptura, திருமறை மட்டுமே என்கிறார். ஆதிக்க சக்திகளுக்கு அடிமைப்பட்டு இருந்த திருமறையை விடுதலை அளித்து அனைத்து மக்களும் பயன்படுத்தும் விதமாக மாற்றி அமைத்தார். விட்டன் பர்க் பல்கலைக்கழகத்தில் திருமறைப் பேராசிரியராக பணிபுரிந்த லுத்தர், "இறையியல் கல்வி திருமறையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும், ஒருவர் நீதிமான்களாகும் முதல் படியாக இறை வார்த்தைகளை பின்பற்ற வேண்டும் விவிலிய வழிபாடு அல்ல, அர்த்தமுடைய விவிலிய பயன்பாடு ஆழமுள்ள ஆன்மிக வாழ்வு மற்றும் பயனுள்ள திருப்பணிக்கு பயிற்சியளிக்கும்; ஆகவே திருச்சபை மீண்டும் விவிலியத்திற்கு சிறப்புமிக்க இடம் கொடுக்க வேண்டும். நூற்றாண்டுகள் நிறைந்த பாரம்பரியங்கள் அல்ல, விவிலியமே இறையியலின் முக்கிய ஆதாரம் உண்மையான இறையிலுக்கு அதிகாரம் அளிப்பது இறைவார்த்தைகள். இறைவார்த்தைகளை போதித்து, கற்றுவித்ததே நான் செய்த முக்கியமான செயல். நான் அல்ல, இறை வார்த்தைகளே தேவையான மாற்றத்தை திருச்சபையில் கொண்டு வந்தது" என்றார். விவிலியம் சார்ந்த நற்செய்தி விடுதலை அளிப்பதாகவும் நித்தியவாழ்விற்கு வழி நடத்தி திருப்பணியை மேன்மைப்படுத்தவும் செய்கிறது. பயனுள்ள இறையியல் விவிலியம் சார்ந்து முழு வாழ்விற்கு வழி நடத்துகிறது.

## *2. இறைப்பணியாளர்களை உருவாக்கும் இறையியல் :*

(எபே 4:12)

இறைப்பணியாளர்களை திருப்பணிக்கு ஆயத்தம் செய்வது இறையியலின் தலையாய கடமையாகும். தூய பவுல் திருத்தொண்டாற்ற இறைமக்களை ஆயத்தப்படுத்தவும், கிறிஸ்துவின் உடலைக் கட்டியெழுப்பவும் இறைப்பணியாளர்களை ஆண்டவர் ஏற்படுத்தினார் என்கிறார். திருப்பணியாளர்கள் கிறிஸ்துவைப் போல் (Christ likeness) வளர இறையியல் உதவுகிறது. இயேசுவின் திருப்பணி முறைகளை புரிந்து கொண்டு கடவுளின் அன்பை பிற உயிரினங்களுக்கு எடுத்துரைக்கும் பணியை இறையியல் செய்கிறது. குறிப்பாக தற்கால உலகில் கிறிஸ்துவின் கரங்களாக திருப்பணியாளர்களை மாற்றுகிறது. இயேசு கிறிஸ்து தனது சீடர்களிடம் பிதா தன்னை அனுப்பியது போல தானும் அவர்களை அனுப்புகிறேன் என்றார் (யோவா 20:21). தன்னுடன் இருந்து பயிற்றுவிக்கப்பட்ட இயேசுவை கடவுள் உலகிற்கு அனுப்பினார். இயேசுவும் அவ்விதம் தன்னுடன் இருந்து பயிற்சி பெற்ற சீடர்களை திருப்பணி செய்ய பணித்தார். நமது இறையியல் கல்வியும் பயிற்சியும் இயேசுவிடம் இருந்து திருப்பணி மாதிரியை கற்றுக் கொள்ளும் விதமாக மாறவேண்டும். ஒருபுறம் இறையியல் கல்வி தனிப்பட்ட வாழ்வில் திருப்பணியாளரின் குணங்கள் வளர்ச்சியடைந்து கடவுளுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள பயிற்சி அளிக்கிறது. மறுபுறம் திருப்பணியாளர் பணிவிடை செய்ய பயிற்சி அளிக்கிறது கடவுளின் பணி இயேசுவில் வெளிப்பட்டதைத் தொடர்ந்து செய்ய தெரிந்து கொள்ளப்பட்டோர் திருப்பணியாளர். கடவுளின் பிரதிநிதியாக மிகுந்த ஒப்படைப்புடன் சளைப்பில்லாமல் தொண்டு செய்ய அழைக்கிறார். மாற்கு 10:45-ல் மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல மாறாக தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்பிற்கு ஈடாகத் தமது உயிரைக் கொடுக்கவும் வந்தார் என்று கூறப்பட்டுள்ளது. கலா 6:2-ல் அடுத்தவர் சுமைகளை தாங்கும் சுமைதாங்கிகள் திருப்பணியாளர்கள். இத்திருப்பணியை அன்பினால் செய்யுங்கள் என்று எபே 4:2-ல் பவுல் கூறுகிறார்.

“சான்றுள்ள வாழ்வு வாழ்வது இறைவார்த்தையை ஒருவருக்கொருவர் பகிர்ந்தளிப்பதற்கு சமம்” என்று Dietrich Bonhoefer என்னும் இறையிலாளர் கூறுகிறார். மேலும் நாசரேத் அறிக்கையில் விடுதலைப்பணியே தமது பணி என்று இயேசு கூறுகிறார் (லூக் 4:18,19). ஆக விடுதலைப் பணியில் கடவுளுடன் இணைந்து செயலாற்ற இறையியல் கல்வி பயிற்சி அளிக்கிறது. இறையியல் கல்வி நற்செய்தியாளர்கள் மற்றும்

போதகர்கள் இறையியலாளர்களாக வளரவும் இறையியலாளர்கள் நற்செய்திப்பணி மற்றும் திருச்சபையில் திருப்பணி நிறைவேற்றவும் பயிற்சி அளிக்கிறது.

பணியாளர்களாக பயனுள்ள திருப்பணிவிடை திருச்சபையிலும்; வெளியிலும் செய்ய இறையரசின் தகவுகளை விளக்கி இறை வார்த்தைகளை பகுப்பாய்வு செய்திடவும் கடவுளின் கரங்களாக மாறி தொண்டு மற்றும் விடுதலைப் பணி செய்ய உதவுகிறது. இறைமக்களுடன் இறைமக்களாக இணைந்து திருப்பணி செய்திட பயிற்சி அளிப்பது உயரிய இறையியல் ஆகும்.

### *3. இறைமக்களை உறுதிப்படுத்தும் இறையியல் :*

(எபே 4:13-16)

இறைமக்கள் பற்றுதியில் வளர்ந்து ஆன்மிக மறுமலர்ச்சி மற்றும் நிலைவாழ்வு பெற உதவுவது இறையியல் கல்வியாகும். இறைமக்களாக இருப்பதன் பொருள் விளக்கம் மற்றும் பிற மக்களுடன் இறை வார்த்தைகளைத் பகிர்ந்து வாழ இறையியல் உதவுகிறது. எபே 4:13-16-ல் இறைமகன் இயேசுவைப் பற்றிய அறிவு, பற்றுறுதியில் ஒருமைப்பாடு மற்றும் முதிர்ச்சி அடைதல், மனிதர்களின் தந்திரம், சூழ்ச்சி தவறான வழிகள் பகுத்தறியவும், அன்பின் அடிப்படையில் உண்மை பேசி கிறிஸ்துவை போல் வளரவும் கிறிஸ்துவின் மீதுள்ள அன்பு நம்மை திருச்சபையுடன் உறுதியாய் இணைத்திடவும் அவரவர் பணியை சிறப்புடன் செய்யவும் அழைக்கிறது. கிறிஸ்துவைபோன்று இறைப்பணி செய்வதே இறைமக்கள் பணி. எபே 5:19 மற்றும் கொலோ 3:16-ல் ஒருவரையொருவர் தேற்றி இறைவார்த்தைகளை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்கிறார். பாமர மக்கள், சிறுபான்மையினர் ஓரங்களில் வாழ்வோர் இறை அன்பை பெறுவதே நற்செய்தியின் அடிப்படை நோக்கம். திருச்சபை புதுப்பொலிவுடன் இறைமக்களுடன் இணைந்த திருப்பணி நிறைவேற்றுவதற்கும், தவறான போதனைகளை கண்டறிந்து தவிர்ப்பதற்கும் இறையியல் கல்வி இறைமக்களை பதப்படுத்துகிறது. 1பேது 2:9-12ல் இறைமக்கள் அனைவரும் தெரிந்தெடுக்கப்பட்ட ‘ஆசாரியக் கூட்டம்’ என்று கூறப்பட்டுள்ளது. ஆக அனைத்து இறைமக்களும் திருப்பணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். ஊனியல்புக்கு இருளில் இருந்து ஒளி வாழ்வுக்கும், பாவமானப் எதிராக போராடி தூய வாழ்வு வாழ இறைமக்களை இறையியல் பயிற்றுவிக்கிறது. மார்ட்டின் லுத்தர் இதைக்குறித்து, “கிறிஸ்தவர்கள் அனைவரும் ஆசாரியர்கள். திருமுழுக்கின்வழி நாம் அனைவரும் திருப்பணியாளர்கள் எனும் தன்மையை கிறிஸ்துவினால் பெற்றிருக்கிறோம்” என்கிறார். ஆக

இறையியல் கல்வி தொடர்கல்வி இறைமக்கள் பற்றுறுதியில் முன்னேற்றம் அடைந்து கிறிஸ்துவின் திருப்பணியைத் தொடர்ந்து செய்திடவும், திருச்சபையுடன் இணைந்து வாழ்ந்து திருப்பணியை தாங்க செய்வது உண்மையான இறையியல் கல்வி. ஆக இறைமக்களை தகுதிப்படுத்தி இறைப்பணியில் இணைந்து இறையரசை பரவிட செய்யும் இறையியலை பயனுள்ள முறையில் இயன்றமட்டும் பயன்படுத்துவோம்.

இறையியல் கல்வி விவிலியத்தின் மீது ஆழம் மிக்க அறிவு, பற்றுறுதியில் உயர்வு, குருத்துவ நடைமுறை அறிவு, திருச்சபை சட்டம் மற்றும் தொழுகை ஒழுங்கு ஆகியவற்றை இறையியல் நோக்கோடு ஒருங்கே பங்களிக்கும் உயரிய அருட்பணியாகும். அத்தகைய அருட்பணி போதகர்கள் மட்டுமன்றி இறைமக்கள் அனைவரும் இணைந்தே செயல்பட ஊக்கமளிக்கிறது. சமூக, சமய ஒற்றுமை தழைத்து சமத்துவ சமுதாயம் உலகில் ஏற்பட இறையியல் அடித்தளம் இடுகிறது. சூழ்நிலைகளைக் கடந்து, சமுதாயச் சிக்கல்களை புரிந்துகொண்டு அடிமைத்தனங்களை உடைத்து இறையரசு பரவிட இறையியல் உதவுகிறது. சமய, சமுதாய, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை திருமறை அடிப்படையில் எதிர்கொண்டு பயனுள்ள திருப்பணியின் புது முறைகளைக் கண்டு கொள்ள உதவுகிறது. ஆக இவ்வேளையில் இறையியல் கல்வியாளர்கள், நிறுவனங்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றின் நற்பணிகளை நன்றியுடன் நினைவு கூர்ந்து கடவுளுக்கு நன்றி நவில்வோம்.

அருள்திரு. முனைவர். M. **ஜஸ்டின் மோசஸ்**

19-07-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் ஏழாம் ஞாயிறு**

## இறைமக்கள் : கிறிஸ்துவின் தூதுவர்கள்

**PEOPLE OF GOD : AMBASSADORS OF CHRIST**

| | |
|---|---|
| யோசு 1:1-9 | 2கொரி 5:16-6:10 |
| திபா 18:1-6,20-30 | மாற் 6:7-13 |

**"....நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாய் இருக்கிறோம்..."** (2கொ 5:20)

தூதுவர் என்னும் வார்த்தை அரசு மற்றும் அதிகாரம் இவற்றோடு தொடர்புடையது. இறைமக்கள் இறைத்தூதுவர்கள் என்னும்போது அவர்கள் இறையரசுக்குரியவர்கள்; இறையரசிற்குரிய நற்செய்தியை உலக அரசின் மக்களுக்கு எடுத்துக் கூறி, அவர்களை இறையரசிற்குரியோராய் மாற்றுபவர்கள். பழைய ஏற்பாட்டில் சிலர் தூதுவர்களாகச் செயல்பட்டதை அறிய முடியும். காதேசிலிருந்து மோசே ஏதோமின் அரசரிடம் தூதுவரை அனுப்பி பாதுகாப்பான பாதையைக் கேட்டார் (எண் 20:14-20). சாலமோன் அரசர் தீரின் அரசர் ஈராமிடம் தூதுவரை அனுப்பி ஆண்டவரின் பெயருக்கு கோவில் எழுப்ப மரம் வெட்ட ஆட்களைக் கேட்டார் (1அர 5:1-12). திருமறை வரலாற்றில் இடம் பெற்றிருக்கும் தூதுவர்கள் சிறப்பானவர்களே. இறை மக்களை நாம் கிறிஸ்துவின் தூதுவர்களாகச் செயல்பட திரமறை கற்றுத்தரும் உண்மைகளைச் சிந்திப்போம்.

### *1. இறைவாக்குறுதி நிறைவேறத் துணையாகும் தூதுவர் யோசுவா :*

மோசேயின் இறப்புக்குப் பின் தலைமைத்துவ மாற்றத்தால் தம் வாக்குறுதியின் நிறைவேறுதல் சிதைவடையக்கூடாது எனக் கடவுள் விரும்பினார். மோசேயின் தொடர்பணியாளராக இறையழைப்புப் பெற்றவர் யோசுவா. மோசே செய்து நிறைவேற்ற வேண்டிய பணியை, அவரது இறப்புக்குப்பின் யோசுவாவிடம் கடவுள் ஒப்படைத்தார். அப்பணியை நிறைவேற்ற அதற்குரிய வாக்குறுதியையும், கட்டளையையும் கொடுத்தார். அவ்வாக்குறுதியில் இறை அதிகாரம், இறைப்பற்று, இறை உடனிருப்பு ஆகியவை இடம்பெற்றுள்ளன. யோசுவா ஓர் அலுவலகப் பணியாளராக இல்லாமல் சமய சேவகராகச் செயல்பட அழைக்கப்படுகின்றார். இங்கு தகுதியால் அழைப்பு பெறாமல், அழைக்கப்பட்டுத் தகுதிப்படுத்தப் படுகின்றார். இறை அழைப்பில் 'பணி' முதன்மைப்படுத்தப்படுகின்றது. கடமைக்கு முதலிடம் கொடுக்கும்போது அதை நிறைவேற்றத் தேவையான

திறமையைக் கடவுள் தருகின்றார். இறைமக்களான இஸ்ரயேலர் கானானுக்குள் நுழைதல் என்பது இறைச்செயல்; வாக்குறுதியின் நிறைவேறுதல். இவர்களை வழிநடத்தும் யோசுவா ஓர் கொள்ளைக்காரனோ, ஆக்கிரமிப்புக்காரனோ அல்ல. மாறாக, ஓர் பணியாள். தன் தலைவரின் கட்டளையைச் சுமந்து சென்ற ஓர் பணியாள் (இச 31:18).

யோசுவா இறைவனின் தூதுவர். மோசேக்கு கடவுள் கொடுத்த வாக்குறுதி நிறைவேறத் துணையாகச் செயல்படுகிறவர். அதோடு இஸ்ரயேலர் எகிப்தில் வாழ்ந்ததுபோல கானான் நாட்டில் வாழாமல், கானானியர் வாழ்ந்ததைப் போல வாழாமல், கானானில் தங்களுக்கானத் தனித்தன்மையுடன் வாழ வழிகாட்டிய தூதுவராகச் செயல்பட்டார். இறைமக்களும் யோசுவாவைப் போல, இறைவனின் வாக்குறுதி நிறைவேறத் துணையாகும் தூதுவர்கள் என்பதைப் புரிந்துகொள்வது அவசியம்.

### *2. ஒப்புரவு உருவாக மன்றாடும் தூதுவர் பவுல் :*

(2கொரி 5:16-6:10)

வேறு எந்த ஒரு சமயமும் கூறாத புதுமையான, புதுப்படைப்பான செய்திதான் இயேசுகிறிஸ்துவின் செய்தி. ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளான அனுபவத்தில் வரும்போது அவர் புதுப்படைப்பாகின்றார். “கிறிஸ்துவுக்குள்” என்பது கிறிஸ்துவில் பற்றுறுதி, அவருக்குக் கீழ்ப்படிதல், அவரை அறிதல் எனப்தாகும். இது தனிப்பட்ட முறையில் உண்டாகும் வாழ்வு மாற்றம். தூய ஆவியார் நம்மில் குடிகொண்டால் நாம் புதுப்படைப்பாக முடியும். இது ஒப்புரவாகுதலின் விளைவு எனலாம். மனிதனின் பாவம் கடவுளுக்குக் கோபத்தை உருவாக்கியது. இதனால் உண்டான இழப்பு என்பது பிரிவினை. அதாவது, கடவுளிடமிருந்து பிரிந்து நிற்கும் நிலை. அது அமைதி குறைவான வாழ்வுக்கு இட்டுச் செல்கிறது. ஆனால், அமைதியான வாழ்வுக்கு ஒரே வழி ஒப்புரவாகுதல் மட்டுமே. இந்த ஒப்புரவாக்குதலை இயேசு கிறிஸ்து நமக்காகச் செய்தார். அவர் உலகத்தை கடவுளோடு ஒப்புரவாக்கினார். இதில், மன்னிப்பும், விடுதலையும், தூய்மையாக்குதலும் அடங்கியிருக்கின்றன. அதாவது,

(1) மன்னிப்பு மனித பாவத்தால் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே இடைவெளி உருவானது. இயேசு கிறிஸ்துவின் சிலுவை இறப்பின் வழி இப்பாவம் மன்னிக்கப்பட்டு, இறை உறவு புதுப்பிக்கப்பட்டது.

(2) விடுதலை உலகில் அடிமைப்பட்டி கிடக்கும் மனிதரை இயேசுவின் சிலுவை இறப்பு திருச்சட்டம், இறப்பு, நேர்மையின்மை, அழிவு, இயலாமை, அலகை இவைகளினின்று விடுதலையளித்தது (கலா 3:15; உரோ 11:25; 8:21; 8:1; 7:24; 1யோவா 4:4).

(3) தூய நிலை மனிதருக்கு எதிர்கால நம்பிக்கை தேவையான ஒன்று. ஆனால், குறிக்கோள் தவறுதல், அதன் வழி இறைசாயல் இழத்தல் என்பது மானிடரின் பிரச்சனையாக இருக்கிறது. இங்கு ஒப்புரவாகுதலினால் இழந்த இறைச்சாயல் திரும்பத் தரப்படுகின்றது. அது தூய நியலைக்கு நம்மை மாற்றுகிறது.

கடவுள் நம் நலனுக்காக மட்டும் நம்மை அவரோடு ஒப்புரவாக்கவில்லை. மாறாக, நம்முடைய சான்றான வாழ்வின் வழியாகப் பிற மக்களும் கடவுளோடு ஒப்புரவாகும்படி நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். தூய பவுலைப் போல, நாமும் கிறிஸ்துவின் தூதுவர்களாக, கிறிஸ்துவின் சார்பில் பேசுகின்றவர்களாக, இவ்வுலகில் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாகச் செய்லபட அழைக்கப்பட்டிருக்கிறோம் (2கொரி 5:20).

ஒரு அரசரின் தூதுவர் என்பவர் மதிப்பும், பொறுப்பும் மிகுந்தவர். அரசர்களுக்கும் மேலானவரான கிறிஸ்துவுக்குத் தூதுவர்களாக இருப்பது பெரும்பேறு ஆகும் (1திமொ 6:15). இறைமக்களாயிருப்பவர்கள் ஏழைகளோ, செல்வந்தரோ, உயர்ந்தவர்களொ, தாழ்ந்தவர்களோ அனைவரும் கிறிஸ்துவின் தூதுவர்களே. கிறிஸ்துவில் வாழ்வு பெற்ற நாம் அவரது தூதுவர்களாக செயல்பட நம்மை ஒப்படைப்போம்.

### *3. குணமாக்குதலின் தூதுவர்கள் சீடர்கள் :* (மாற் 6:7-13)

இயேசு அளிக்கும் வாழ்வு முழுமையான வாழ்வு. அவர் பார்வையில் ஆன்மாவைப்போல மனித உடலும். அதன் நலவாழ்வும் முக்கியமானதே.

இயேசு சீடர்களை இரண்டு இரண்டு பேராக அனுப்பினார். காரணம் ஒருவருக்கொருவர் ஆதரவாக, சான்றாக, கூட்டுறவாக இருக்க வேண்டும் என்பதே சீடர்களை அனுப்புகையில் மத் 10:9,10 ன்படி உணவு, கை, பணம் இல்லாமல் செல்லவும் போதிக்கப்பட்டனர். ஆனால் மாற்கு நற்செய்தியில் செருப்பு, கையில் கோல் எடுத்துச் செல்லலாம். அவர்களின் பயணத்தின் தன்மையைப் பொறுத்து பொருட்களை பயன்படுத்தலாம். (1கொரி 9:14, 1தீமோ 5:18). நற்செய்தியை அறிவிக்கிறவனுக்கு நற்செய்தியினாலே பிழைப்பு உண்டாக வேண்டும் என்பது ஆண்டவரின் கட்டளை. தங்கள் உடமையை விட தங்களை அனுப்புகின்ற ஆண்டவரை அனைத்திற்கும் சார்ந்திருக்க வேண்டும்.

இயேசு சீடர்களை தாம் இந்த உலகில் செய்து நிறைவேற்றிய பணியை நிறைவேற்ற அதிகாரத்தையும், ஆற்றலையும் கொடுத்து அனுப்பினார். இவைகள் பிறர் நலன் அடைவதெற்கன ஆண்டவர் அருளிய அருட்கொடைகளாகும். இது ஒரு மருத்துவ சிகிச்சை போன்றது. (லூக் 10:34, யாக் 5:14).

மேற்குறிப்பிட்ட திருமறை பகுதி 12 சீடர்களின் அருட்பணியை விளக்குகிறன்றது. இத்திருப்பணி இயேசு மக்கள் மீது கொண்ட மன உருக்கத்திலிருந்து தொடங்குகிறது. இத்திருப்பணி செய்ய தம் சீடர்களை உடன் பணியாளர்களாகப் பயிற்றுவித்தார். இயேசுவின் ஆற்றல் தம் இருப்பிடத்தில் இருந்து வெகுதொலைவில் செயல்படுவதையும், இறைவன் தங்கள் தேவைகளை சந்திப்பதையும், அவர்கள் தங்கள் பணியில் அதிகாரம் மற்றும் ஒழுக்கம் சார்ந்த மதிப்பு இருப்பதையும் கற்றுக்கொண்டனர். இவர்கள் மூன்றடுக்கு திருப்பணியின் தூதுவர்களாக செயல்பட்டனர். அதாவது 1. மனம்திரும்புதலின் நற்செய்தியை அறிவித்தல் 2. பேய்களை விரட்டுதல் 3. நோயுற்றவர்களை குணப்படுத்துதல்.

இயேசுவின் சீடர்கள் இயேசுவைப் போல் அருஞ்செயல் செய்யும் தூதுவர்களாக செயலாற்றினர். இன்றும் ஆண்டவர் தமது சீடர்களின் வழியாக இதை செய்து கொண்டிருக்கின்றார். ஆண்டவரும் தமது மக்களுக்கு இப்பேற்பட்ட அதிகாரத்தையும், ஆற்றலையும் கொடுக்க ஆயத்தமாயிருக்கின்றார். ஆயினும் மிகத் தேவையானதும், முதன்மையானதுமான மனமாற்றமும், மறுபடி பிறத்தலும். திருப்பணி பலனாக வேண்டும். இதற்கான தூதுவர்களாக இருக்க அழைக்கப்படுகின்றோம்.

அருள்திரு. E. **ஸ்டேன்லி ராஜ்**

26-07-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் எட்டாம் ஞாயிறு**

# அருட்பொழிவுத் திருப்பணி : மாற்றுருவாக்கப்பெற்றது மாற்றுருவாக்கவே

## ORDAINED MINISTRY : TRANSFORMED TO TRANSFORM

எசே 33:1-9 | 1திமொ 3:1-13
திபா 99 | யோவா 21:15-19

**"...மானிடா! நான் உன்னை இஸ்ரயேல் வீட்டாருக்கும் காவலாளியாக ஏற்படுத்தியுள்ளேன்"** (எசே 33:7).

அருட்பொழிவுத் திருப்பணியானது கடவுளால் ஏற்படுத்தப்பட்ட ஓர் உன்னதமான பணி. ஆரோனைப் போல் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தான் அந்த பணியைச் செய்ய முடியும். இத்திருப்பணியானது ஒழுங்குடனும் (Order) ஒழுக்கமுடனும் (Discipline) செய்யப்பட வேண்டிய பணி. நோய், வறுமை, தனிமை, மனித ஒடுக்குதல், அடிமைத்தனம் போன்ற தவறான சிந்தனையிலிருந்து விடுவித்து அனைவரையும் இறைவனுக்கு ஏற்புடையவர்களாக்குகின்ற பணி. அனைவரையும் ஒன்றுபடுத்துகின்ற பணி. ஜாண் வெஸ்லி, 'அருட்பொழிவு திருப்பணியாளரை ஆவியானவர் ஆற்றல் படுத்துகிறார் என்றும், இறைமக்கள் இறைவேண்டல் மூலமாகவும் எல்லா வகைகளிலும் தாங்க வேண்டும்' என்று குறிப்பிடுகிறார். தாமஸ் அக்குவினஸ், 'அருட்பொழிவு என்பது திருவருட்சாதனங்களில் ஒன்று என்றும், திருச்சபையை நற்செய்திக்கு உண்மையுள்ளதாக இருக்கச் செய்வதும் அருட்பொழிவு திருப்பணியின் முக்கிய அம்சமாகும்'என்கிறார். எசேக்கியேல் இறைவாக்கினரின் வாழ்வு, பணியினூடாக அருட்பொழிவுத் திருப்பணியை சிந்திப்போம்.

எசேக்கியேல் என்ற பெயருக்கு 'ஆண்டவர் ஆற்றல் அளிப்பவர்' என்பது பொருள். நேபுகாத்நேச்சர் எருசலேமை முற்றுகையிட்டு அங்கு கிடைத்த விலை உயர்ந்த பொருட்களை எல்லாம் பாபிலோனுக்கு கொண்டு சென்றான். அறிவில் சிறந்த இளைஞர்களையும் விட்டுவைக்கவில்லை. அவர்களையும் அடிமைகளாக அழைத்துச் சென்றான். அவர்களில் எசேக்கியேல் இறைவாக்கினரும் ஒருவர். இறைவாக்கினரை இறைவன் 'மானிடா' என்று அழைத்து நீ போதிக்க வேண்டிய சுருளை 'உண்டு,' 'செரிமானம் செய்து' பின் போதிக்க வேண்டும்

என்கிறார் (எசேக் 3:1). அப்பொழுது ஆண்டவரின் கரம் அவர் மேல் இருந்தது (எசேக் 1:1). ஆண்டவரின் ஆவி அவரை ஆட்கொண்டு (எசேக் 2:2) அருட்பொழிவு திருப்பணியை எசேக்கியேல் இறைவாக்கினர் எப்படி மேற்கொண்டார் என்பதைச் சிந்திப்போம்.

## *1. அருட்பொழிவுத் திருப்பணி : குருத்துவப் பணியே!*

(எசே 1:3)

(Ordained Ministry : Ministry of Priesly Function)

எசேக்கியேல் சாதோக்கின் வழிவந்த ஆசாரியக் குலத்தை சார்ந்த ‘பூசி’ என்பவரின் மகனாவார். ஏழு நாட்கள் செயலற்றவராய் எதுவும் செய்ய இயலாதவராய் இருக்கிறார் (எசே 3:16-27). குருக்கள் இறைப்பணி தொடங்கு முன் ஏழு நாட்கள் தங்களைப் புனிதப்படுத்துவதற்கு செலவிடுவது வழக்கம். (சங் 99:6,7,8) குருக்களான மோசே, ஆரோன், சாமுவேல் ஆண்டவரை மன்றாடினார்கள். ஆண்டவரும் அவர்களுக்கு செவி சாய்த்தார். மேகதொனியிலிருந்து அவர்களோடு பேசினார். அவர்கள் அவருடைய ஒழுங்குமுறைகளையும், நியமங்களையும் கடைபிடித்தார்கள். ஆகவே ஆண்டவர் அவர்களுக்கு செவிசாய்த்தார். இங்கு ஆண்டவரின் ஒழுங்கு முறைகளையும், நியமங்களையும் கடைபிடிப்போர் அனைவரும் குருக்களே. எசே 22:25,26-ல் குருக்களின் அவலத்தை சுட்டிக்காட்டுகிறார். ஆண்டவரின் திருச்சட்டத்தை மீறுகிறார்கள், துய்மையானவைகளைத் தீட்டுப்படுத்துகிறார்கள். நன்மை தீமை பிரித்துணர இயலாதவர்கள், ஆண்டவரை அவமதிக்கிறார்கள், இப்படி குருத்துவப்பணியிலிருந்து தவறும் போது குருக்களுக்கு வரும் தண்டனையை, “மனுப்புத்திரனே நான் உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு காவல்காரனாக வைத்தேன். ஆகையால் நீ என் வார்த்தைகளைக் கேட்டு என் நாமத்தினால் அவர்களை எச்சரிப்பாயாக” என்கிறார். (எசே 33:7). குருத்துவப்பணி எச்சரிப்பதும், ஆபத்திலிருந்து தப்பும் வழியை எடுத்துக் கூறி உடனிருப்பதுமே.

## *2. அருட்பொழிவு திருப்பணி : இறைவாக்குரைக்கவே!*

(எசே. 33:7)

Ordained Ministry : Ministry of Prophectic Function

எசேக்கியேல் இறைவாக்கினர் கடவுளால் அனுப்பப்பட்டிருப்பது, இஸ்ரவேலருக்கு மட்டுமல்ல, எல்லா மக்களினத்தவருக்குமே. உடன்படிக்கையின் மக்கள் கலகவீட்டாராயினர். ஆகவே ஆண்டவரின் ஆசியும், அருளும் அவர்களை விட்டு நீங்கி விடும் என்று எச்சரித்தார். ஒருநாள் எசேக்கியேல் இறைவாக்கினர் தெரு முனைக்குச் சென்று கூரிய

கத்தியை எடுத்து தன் தலை முடியையும் தாடியையும் சிரைத்து தராசிலே மூன்று கூறுகளாக பங்கிட்டார். ஒரு பங்காக நெருப்பிலிட்டு எரித்து ஒரு பங்கை கூரிய கத்தினால் நறு நறுவென்று வெட்டினார். கடைசி பங்கை காற்றிலே பறக்கவிட்டு பின் அகப்படாத முடியை ஒரு பையிலே பத்திரப் படுத்தினார். (எசே 5). இது கூறுகின்ற செய்தி 'நெருப்பிலிடப்படுவீர்கள், துன்புறுத்தப்படுவீர்கள். மீந்தவர்களை கூட்டிச் சேர்ப்பார்' என்பதுவே. இஸ்ரவேல் வம்சத்தாரே உங்கள் பொல்லாத வழிகளை விட்டு திரும்புங்கள். தாங்கள் நம்பியிருந்த நாடு, இனம், சமயம், ஆலயம், அரசு அழிவுக்ககுள்ளாகி இருக்கிறது. அன்னிய நாட்டில் மாற வேண்டியதுதான். இழிவான சாவைத் தவிர வேறுவழியில்லை என்று எண்ணியவர்களுக்கு மனித அறிவுக்கு எட்டாத இறையருள் இறைவாக்கினரின் எச்சரிப்பிற்கு கீழ்ப்படிகிறபொழுது, கிடைக்கும் (எசே 33:11). "பொல்லார் தாம் செய்த பொல்லாப்பினின்று விலகி நீதியையும் நேர்மையையும் கடைபிடித்தார். தம் உயிரை ஆண்டவர் காத்துக் கொள்ளுவார். அவர்கள் வாழ்வது உறுதி". என எச்சரிப்பது மட்டுமல்ல புதிய சமூகத்தை உருவாக்க மறுகட்டுமான பணிசெய்வதும் இத்திருப்பணியாரும் (எசே 33:16) "நன்கு திருத்தொண்டு ஆற்றுவோர் உயர்மதிப்பு பெறுவர். இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள நம்பிக்கையை அதிக துணிவோடு பேசுவார்". என்பது தூய பவுலின் கூற்று (1தீமோ 3:13). 'நெடுவாசல்' விவசாயம் செய்யும் மக்களுக்காக போராடிய 'வளர்மதி'- என்ற கல்லூரி மாணவி ஹைட்ரோகார்பன் திட்டத்தையும் தீமைகளையும் எதிர்த்து துண்டு பிரசாரங்கள் போராடினார்கள். அரசு கைது செய்து குண்டர் சட்டத்தில் சிறையில் அடைத்தது. ஆனால் 'வளர்மதியோ' கல்வியையோ, தன்னைப் பற்றியே சிந்திக்கவில்லை. மாறாக எதிர்கால மக்களினத்தைப் பற்றியோ சிந்தித்தார். இறைவாக்கினர் பணியும் தன்னை இழக்கக் கொடுத்து பிறர் வாழ்வடையச் செய்வது.

### *3. அருட்பொழிவுத் திருப்பணி : மேய்ப்புப்பணி செய்யவே!*

(எசே 34:15)

(Ordained Ministry : Ministry of Shepherding )

இஸ்ரவேலின் குருக்கள் (மேய்ப்பர்கள்) கொழுப்பான ஆடுகளை உண்டு, ஆட்டு மயிராடையை உடுத்தி, மந்தையில் சிறந்தவற்றை அடிக்கிறார்கள். மந்தையையோ மேய்ப்பதில்லை என மேய்ப்புபணியின் அவலத்தைச் சுட்டிக்காட்டி, நல்ல மேய்ப்பன் மந்தையை தேடிச் சென்று சிதறுண்டவற்றை கூட்டிச் சேர்த்து நல்ல மேய்ச்சல் நிலத்தில் மேய்ப்பான் எனக் கடவுள் கூறுகிறார் (34:3). ஆண்டவராகிய நான் அவர்கள் சடவுளாயிருப்பேன். உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு தம் சீடர்களை

திபேரியாக் கடற்கரையில் சந்திக்கிறார். ஆண்டவர் காலை உணவு கொடுத்து, சீமோன் பேதுருவிடம் "யோனாவின் மகன் சீமோனே நீ இவர்களை விட மிகுதியாக அன்பு செலுத்துகிறாயா?" என்று கேட்டார். 'ஆம்' என்கிறார். ஆண்டவர், என் ஆட்டுக்குட்டிகளை பேணிவளர் (feed my lamps) "என் ஆடுகளை மேய் (take Care of my Sheep)" என்கிறார் (யோவா 21:15-20). மேய்ப்புபணி என்பது சமூகத்தால் சமயத்தால் புறக்கணிக்கப்பட்டோரை, ஆற்றல்படுத்தும் பணி ஆகும்.

1970-களில் உத்தரகண்ட் மாநிலத்தில் ஆரம்பிக்கப்பட்டது தான் 'சிப்கோ' (Chipko) என்ற காடுகளைப் பாதுகாக்கும் இயக்கம். 1973-ல் உத்திரகாண்ட் மாநிலத்தின் அரசு பெரும்பாலான மரங்களை வெட்டுவதற்கான ஒப்பந்தம் மேற்கொண்டது. அப்பொழுது மரங்களை அழிக்கக்கூடாது என்று இவ்வியக்கத்தின் பெண்கள் போராட்டம் நடத்தினார்கள். அரசாங்கம் அந்த திட்டத்தை கைவிட்டது. நாம் வாழும் சமூகத்தில் நீதி என்பது உலர்ந்து போன எலும்புக்கூட்டம் போல காட்சியளித்தாலும் இறைமக்கள் அருட்பொழிவாளர்களாக இருந்து மாற்றுருவாக்கத்திற்காக எடுக்கும் முயற்சிகளில் இறைவன் எழுந்தருளுகிறார். என்பதை உணர்ந்து இறைப்பணி செய்ய முன்வருவோம்.

அருள்திரு. அறிவர். J. **றசல் ஜசக்**

01-08-2020 **புதிய மாத நன்றித் தொழுகை**

## வலுவூட்டும் ஆண்டவர்

திருமறைப்பாடம் : பிலி 4:10-13

**“எனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு”.** (பிலி 4:13)

பவுல் தம் இரண்டாம் பயணத்தின்போது பிலிப்பியில் பலரை மனம் மாற்றினார். பின்னாளில் பவுல் சிறைப்பட்டபோது பிலிப்பியர்கள் தாராளமனதுடையவர்களாய் தமக்கு உதவி செய்ததை எண்ணி நன்றி செலுத்தும் பகுதியாக இப்பகுதி அமைந்துள்ளது. “என் தேவையைப் போக்க ஒருமுறைமட்டுமன்று, இருமுறைஉதவி அனுப்பினீர்கள்” என்று பிலிப்பியத் திருச்சபையை பவுல் பாராட்டிப் புகழ்கிறார் (பிலி. 4:16). பிலிப்பியத் திருச்சபை மக்களை புகழ்ந்து பாராட்டினாலும் தான் பிலிப்பியருடைய உதவியைச் சார்ந்தோ அல்லது அவர்கள் நிதி ஆதாரத்தைச் சார்ந்தோ வாழவில்லை என்பதைப் பவுல் விளக்குகிறார். ஆண்டவரைச் சார்ந்து வாழ்கின்றபடியினால் தன்னை வலுவூட்டுகிறவர் ஆண்டவர், அவர் மூலமாக எதையும் செய்ய தனக்கு ஆற்றல் வழங்குகிறார் என்பதை எடுத்துரைக்கிறார். ஆண்டவர் நம்மை வலுவூட்டுகின்றவராக மாற்றவேண்டுமானால் பவுலை போல் நாமும் வாழ தகுதிப் படுத்த வேண்டும்.

### *1. மனநிறைவுடன் வாழ்தல் :* (பிலி. 4:12)

“எனக்கு வறுமையிலும் வாழத் தெரியும், வளமையிலும் வாழத் தெரியும், வயிறார உண்ணவோ, பட்டினி கிடக்கவோ, நிறைவோ, குறைவோ எதிலும் எந்தச் சூழலிலும் வாழப் பயிற்சி பெற்றிருக்கிறேன்”.

துன்பத்திலே துவண்டு விடுவதும், இன்பத்திலே இறுமாப்புக் கொள்வதும், வறுமையிலே வாடி விடுவதும், வளமையிலே அகந்தை கொள்வதும் மனித இயல்பு. எலியா இறைவாக்கினர் ஈசபேல் தன்னை கொலை செய்வேன் என்று மிரட்டிய போது துவண்டதையும் சாக வேண்டும் என்று விருப்பியதையும் பார்க்கிறோம். அவ் வேளையில் ஆண்டவர் எலியாவை தேற்றினதை பார்க்கிறோம் (1அரச 19:1-8).

பவுல் பாடுகள் சந்தித்த வேளையில் அவைகளை ஏற்றுக் கொண்டார் (1கொரி. 4:11-13). ஊழியத்தின் நிமித்தம் தாக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்ட வேளையிலும் ஆண்டவரோடு நிலைத்து நின்றவர்

(2கொரி 11:23-27) எவ்வளவு கடினப்பாடு வந்தாலும் அதை மனநிறைவோடு கிறிஸ்துவுக்காக ஏற்று மேன்மை பாராட்டியதோடு அல்லாமல் அதுவே எனக்கு வலுவூட்டுகிறது என்று பவுல் கூறுகிறார் (2 கொரி 12:10).

**2. இறைநம்பிக்கையுடன் வாழ்தல் :** (பிலிப்பியர் 1:20)

கிறிஸ்துவே எல்லாம் என்று அவரைப் பற்றிக் கொண்ட நிலையிலே துன்பங்கள் எவையும் ஏன் சாவு கூடத் தன்னை கிறிஸ்துவிடமிருந்து பிரிக்க முடியாது என்றுதன் ஆழ்ந்த நம்பிக்கையில் பவுல் கூறுகிறார். மேலும் வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்று வாழ்கிறோம். இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கிறோம். ஆகவே வாழ்ந்தாலும், இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கிறோம் என்று ஆண்டவர் மீதுள்ள தன் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார். உரோ 14:8 இந்த நம்பிகையே வலுவற்ற பவுலை வலுவூட்டப்பட்ட பவுலாக மாற்றியது. ஆண்டவருடைய பணியில் சிறப்பான இடம் பிடிக்க உதவியது.

உலக பிரகாரமான நெருக்கடிகள், வேதனைகள், கண்ணீர் நம்மை வலுவற்றவர்களாக மாற்றுகின்றவேளையில், ஆண்டவரோடு உள்ள நம்பிக்கையின் காரணமாக வலுவூட்டப்பட்டகளாக நாம் மாறுகிறோம், இதற்கு பவுலே சாட்சி. புதிய மாதத்தில் பிரவேசிக்கின்ற நாமும் ஆண்டவரால் வலுவூட்டப்பட்டு ஆண்டவருக்கென்று சாட்சியாக வாழ்வோம்.

அருள்திரு. S. **ஜாண் பிராங்கிளின் ராஜ்**

02-08-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும்
ஒன்பதாம் ஞாயிறு &
அருட்பணி ஞாயிறு**

## அருட்பணி : அனைவருக்கும் நற்செய்தி

**MISSION : GOOD NEWS TO ALL**

எசா 55:1-6 திப 10:34-43
திபா 146 மத் 4:17-25

**"இயேசு கிறிஸ்து வாயிலாக அமைதி உண்டு என்னும் நற்செய்தியை அவர் இஸ்ரயேல் மக்களுக்கு அனுப்பினார். அவரே அனைவருக்கும் ஆண்டவர்".**
(திப 10:36)

மிஷன் என்கின்ற சொல் மிசியோ (அல்லது மிட்டரே Mittre) என்ற இலத்தீன் வினைச் சொல்லிலிருந்து உருவானதாகும். இச்சொல்லுக்கு "அனுப்புகிறேன்" என்பது பொருள். கிறிஸ்தவ அருட்பணியின் அடிப்படை கடவுளின் அனுப்புதலில் அமைந்திருக்கின்றது என உறுதிபடச் சொல்லலாம். எனவேதான் உயிர்த்த இயேசு நாதர் தமது சீடர்களும் அருட்பணி செய்ய வேண்டும் என்ற நோக்கில், "நீங்கள் உலகமெங்கும் போய் படைப்புகளுக்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்" என்ற மாபெரும் கட்டளையைக் கொடுத்து உலகினுள் அனுப்பி வைப்பதைக் காண்கிறோம். இன்று ஒவ்வொரு திருச்சபையும், ஒவ்வொரு கிறிஸ்தவரும் அனுப்பப்பட்ட நிலையில் இருக்கிறோம் என்பதை உணரவேண்டும். அருட்பணி ஞாயிறைக் கொண்டாடுகிற நாம் அருட்பணி எப்படி அனைவருக்கும் நற்செய்தியைப் பறைசாற்றுகிறது என்பது குறித்து சில உண்மைகளை திருமறைக் கண்ணோட்டத்தில் தூய ஆவியாரின் துணையோடு சிந்தனை செய்வோம்.

### *1. வாழ்விழந்தோர்க்கு நற்செய்தி :* (எசா 55:1)

(Good News to the Deprived people)

இரண்டாம் எசாயாவின் உரைகளில் இது இறுதிப்பகுதி. இப்பகுதி யூதாவின் மக்கள் பாபிலோன் தேசத்தில் சிறைப்பட்டு, நம்பிக்கையிழந்து வாழ வழியின்றி, வாடி வருந்தி இருந்த சூழலில் எழுதப்பட்டதாகும்.

தண்ணீரின்மையும் உணவின்றி தவிப்பதும் தண்டனையின் அடையாளங்களாகத் திருமறை சுட்டிக் காண்பிக்கின்றது. மனிதன் உயிர் வாழ வேண்டுமெனில் நீர், உணவு, காற்று இம்மூன்றும் இன்றியமையாதவை. இங்கு நீரின்றி, உணவின்றி வேற்று தேசத்திலே அடிமைப்பட்டு வலுவிழந்த

நிலையில் காணப்பட்ட இஸ்ரயேல் மக்களுக்கு புதிய உடன்படிக்கையின் ஆசிகளான நீர், உணவு, திராட்சரசம், பால் எனும் அருட்கொடைகளை கடவுள் தருவதாக உறுதிமொழிகின்றார். கிடைக்க பெறுவதற்கு அரிதான மீட்பின் பரிசாக இவை அளிக்கப்படுகின்றன. உணவு மற்றும் நீர் திருமறையில் பல இடங்களில் கடவுளின் ஈவைக் குறிப்பனவாக இருக்கின்றன.

நம்பிக்கையிழந்து வாடிய மக்களுக்கு நம்பிக்கையூட்டும் நற்செய்தியாக இங்கு எசாயா இறைவாக்கினரின் உரை இருந்தாலும், நம்பிக்கையின் நற்செய்தியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் மனமாற்றம் மிக அவசியமாகிறது. "எனக்குச் செவிகொடுங்கள், என்னிடம் வாருங்கள், கேளுங்கள் அப்பொழுது நீங்கள் வாழ்வடைவீர்கள்" (எசா 55:3). என்ற வாக்கின்படி மனமாற்றமடைகின்ற இஸ்ரயேலரோடு இறைவன் உடன்படிக்கை செய்வேன் என்கிறார். அது என்ன உடன்படிக்கை? எசா 55:3 (b) ன்-படி "தாவீதுக்கு நான் காட்டிய மாறாத பேரன்பை உங்களுக்கும் காட்டுவேன்" என்பதாகும். தாவீதைக் கடவுள் அரசராக தேர்ந்தெடுத்து ஆவியை அவருக்கு நல்கி, அவரது தலைமுறைக்கு சிங்காசனத்தை நிலைப்படுத்தினார். தமது பேரன்பை நாத்தான் வாயிலாக தாவீதுக்கு வெளிப்படுத்தினார். (2சாமு 7:816, திபா 18:50, 89:2836). இவ்விதமாக மனம் திரும்பும் போது தாவீதுக்கு கடவுள் காட்டிய பேரன்பு அனைவருக்கும் அருளப்படும் என்பதை தீர்க்கர் அழுத்தமாக குறிப்பிடுகின்றார். அதுமட்டுமன்றி, கடவுள் சிறைபட்ட இஸ்ரயேலருக்கு தருகின்ற நற்செய்தி அவர்களுக்கானது மட்டுமன்று. மாறாக, அனைத்து மக்களுக்கும் பகிரப்பட வேண்டியது (எசா 55:5) என்று நற்செய்தியின் பரவலாக்கத்தைக் குறித்து எடுத்துரைக்கின்றார்.

தான் மட்டும் வாழ்வடைந்தால் போதாது, மாறாக, தன்னைப் போன்று அனைவரும் வாழ்வு பெற வேண்டும் என்ற நோக்கில் நாம் அருட்பணி செய்ய வேண்டும். இத்தகு உயரிய நோக்கில் தான் இன்று நமது பேராயமும் பல நல்ல அருட்பணிகளை வாழ்விழந்த மக்கள் மத்தியில் செய்து வருகின்றது. எடுத்துக்காட்டாக, உடையார்விளை தொழுநோயாளர் மருத்துவமனை, ஐரேனிபுரம் பார்வையற்றோர் பள்ளி, கொற்றிக்கோடு மனவளர்ச்சி குன்றியோருக்கான காப்பகம், கொட்டாரம் காது கேளாதோர் பள்ளி, நெய்யூர் புற்றுநோய் நலமையம், பேராய நற்செய்தி ஜெபக்குழு போன்றவற்றைச் சொல்லலாம்.

நாசரேத்தூர் அறிக்கையில் இயேசு கிறிஸ்து இவ்வுலகில் தாம் அனுப்பப்பட்டதின் (Mission) நோக்கத்தைக் கூறுகையில் அருட்பணி செய்யவே என்பதாகக் கூறுகின்றார் (லூக் 4:18-19). அருட்பணியின் மையம்

எது? ஏழைகளுக்கு நற்செய்தி, சிறைப்பட்டோருக்கு விடுதலை, பார்வையற்றோருக்கு பார்வை, ஒடுக்கப்பட்டோருக்கு விடுதலை, ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அளிக்கவுமே என்பதாகக் காண்கிறோம். இயேசு கிறிஸ்து தம் வாழ்வு முழுமையையும் இதற்கென்றே ஒப்படைத்து செயல்பட்டார். ஒருமுறை புனித அன்னை தெரசா நடத்திவந்த இல்லத்தைப் பார்வையிட அன்றைய பிரதமர் நேரு சென்றிருந்தார். அவரை அன்னை தெரசா முகம் மலர வரவேற்றார். எங்கள் பணிகளையெல்லாம் நீங்கள் பார்வையிடும் முன் இவ்வருட்பணிகளை நாங்கள் செய்வதற்கு முன்மாதிரியாகவும், தூண்டுதலாகவும் இருப்பவரை நீங்கள் சந்திக்க வேண்டும் என்று பிரதமரை அழைத்து சென்று அவ்வளாகத்தில் அமைந்திருந்த சிற்றாலயத்தின் நடுவில் சிலுவையில் அறையப்பட்டிருந்த இயேசு கிறிஸ்துவைக் காண்பித்தார். வாழ்விழந்தோர் வாழ்வு பெற தம் வாழ்வையே அருட்பணியாக்கிய கிறிஸ்துவின் முன்மாதிரியே இன்றைய அருட்பணிக்கு அடித்தளமாக வேண்டும்.

### *2.வரையறைகளைத் தாண்டிச் செல்லும் நற்செய்தி:*

(திப 10:35) (Good News that goes Beyond Boundaries)

திப 10:34-43 வரையுள்ள பகுதியில் நற்செய்தியானது யூதரல்லாத பிற இனத்தவர்களுக்கும், பேதுருவின் வழியாக அறிவிக்கப்படுவதைத் தெளிவாக எடுத்துரைக்கிறது. திப.10:28ன் படி ஒரு யூதர் பிற இனத்தவர்களோடு போக்குவரவாயிருப்பது விலக்கப்பட்டிருந்த காலம் அது. ஆனால் பேதுரு கடவுளின் நடத்துதலால் வேறு இனத்தவராகிய இத்தாலிய படைப்பிரிவின் நூற்றுவர் தலைவராகிய கொர்நேலியுவின் இல்லத்திற்குச் சமூக வரையறைகளைத் தாண்டிச் சென்று நற்செய்தியாற்றுகிறார்.

இயேசுநாதர் திருப்பணி செய்த நாட்களிலும் செல்வந்தன் ஏழை, ஆண்பெண், யூதன் கிரேக்கன். போன்ற ஏராளமான சமூக வரையறைகள் இருந்தன. ஆனால், அவைகளைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் நிலை வாழ்வைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வரையறைகளைத் தாண்டிச் சென்ற படியினாலே, அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்துகொண்டே சென்றார் (திப 10:38) என்பதாகக் காண்கின்றோம். எனவேதான் மத்தேயு 4:25ன் படி திரளான மக்கள் இயேசுவுக்குப் பின் சென்றார்கள். வரையறைகளைத் தாண்டி மக்களோடு இயேசு கிறிஸ்து வைத்திருந்த நல்ல உறவு நிலை அநேகரை அவரைப் பின்தொடர வைத்தது. தமது சொல்லினாலும், செயலினாலும் வரையறைகளைத் தாண்டி சமூகத்தில் பல வளர்ச்சிக்கு ஏதுவான மாற்றங்களைச் செய்தவர்

இயேசு. மீன்பிடித் தொழிலை செய்து வந்த சாதாரண மக்கள், ஏழைகள், ஆதரவற்றோர், திக்கற்றவர்கள், நோயாளிகள், புற இனத்தவர்கள் போன்றோர்க்கு சமயத்திலும் சமூகத்திலும் உரிய இடம் வழங்கப்படவில்லை. ஆனால், இயேசுகிறிஸ்து வரையறைகளைத் தாண்டி வாழ்விழந்த மக்களோடு தம்மை இணைத்துக் கொண்டு அவர்கள் வாழ்விலே மாற்றத்தை கொண்டுவந்தார். தூய பவுல் 1 கொரிந்தியர் 4:20-ல் இறையாட்சியின் நற்செய்தி சொல்லில் அல்ல, செயல்பாட்டில் தான் இருக்கிறது என்கிறார்.

ஆக வெறும் அறிவிப்பு செய்தல் மட்டும் நற்செய்தி அன்று. அவைகளுக்குச் செயல்வடிவம் தருவதே நற்செய்தி. நமது அருட்பணியின் வாயிலாக மக்களின் வாழ்வின் தேவைகள் சந்திக்கப்பட வேண்டும். ஒரிசாவில் கிரஹாம் ஸ்டெயின்ஸ் அவர்கள் ஆற்றிய அருட்பணி வரையறைகளைத் தாண்டி மக்களின் வாழ்வில் மாற்றம் ஏற்படுத்தியது. நம் மாவட்டத்திலே 19-ம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் பலவிதமான சமய, சமூக, பொருளாதார அடிமைத்தனத்தில் சிக்கியிருந்த போது ரிங்கல் தௌபே ஐயர், சார்லஸ் மீட், இவர்களைத் தொடர்ந்து வந்த அருள்தொண்டர்கள் வரையறைகளைத் தாண்டி நம்மத்தியில் வந்து அருள்பணியாற்றினர். அவர்கள் புரிந்த அருட்பணியின் முன்மாதிரி இன்றைய திருச்சபை சமய, சமூக வரையறைகளைத் தாண்டி அருட்பணியாற்ற வேண்டும் என்னும் உந்துதலைத் தருகின்றது.

இன்று அருட்பணி நம்மை இயேசுவுக்குப் பின் செல்ல அழைப்பதோடு மட்டுமன்று, நம் வாயிலாக அநேக அரசியல், பொருளாதார, சமூக ஏற்றத்தாழ்வுகளினால் சமூகத்தில் நலிந்த நிலையில் வாழுகின்ற மக்களும் உயர்வு பெற்று இயேசு கிறிஸ்துவை பின் தொடர்ந்து செல்ல, அவர்களை ஊக்குவிக்கும் ஊடகமாக நாம் வரையறைகளைத் தாண்டி செயல்பட அழைக்கப்படுகின்றோம்.

திரு. P. **பால் ஒய்சர் ஷெல்லி**

09-08-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பத்தாம் ஞாயிறு**

# திருமணம் : உடன்படிக்கையின் கொண்டாட்டம்

**MARRIAGE : CELEBRATION OF COVENANT**

தொநூ 2:18-25 எபி 13:1-6
திபா 127 மத் 19:3-6

**பின்பு ஆண்டவராகிய கடவுள், "மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று; அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன்" என்றார்.** (தொநூ 2:18)

மனுக்குல நன்மைக்காக கடவுளால் ஏற்படுத்தப்பட்ட இணைப்பே திருமணமாகும். இரு உள்ளங்களின் இணைப்பு இது. உலகைப்படைத்த ஆண்டவரின் சிந்தையின் வெளிப்பாடு இது. ஏனென்றால் தாம் படைத்த எல்லாவற்றையும் நல்லதென்று கண்டவர் மனிதன் மாத்திரம் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று கண்டார். மனிதனுக்குத்தகுந்த துணையை உண்டாக்குவேன் என்று கடவுள் ஏற்றதுணையாக பெண்ணைப்படைத்தார். 'துணை' என்னும் வார்த்தை எபிரேய வார்த்தையிலிருந்து வருவதாகும். கிறிஸ்தவ திருமணமானது கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு ஆணும் பெண்ணும் உடன்படிக்கையின் மூலம் அன்பின் உறவுக்குள் நுழைவதாகும் (எபே 5:25). துணையை தேர்வுசெய்யும் போது அன்பு அவசியம். அது தூய்மையானதாகவும், கடவுளிடமிருந்து வந்ததாகவும் இருக்க வேண்டும். அதுவே தூய திருமணம்.

தத்துவஞானி சாக்ரட்டீஸ் ஒருமுறை தன் மாணவர்களைப் பார்த்து, "எப்படியாவது திருமணம் செய்து கொள்ளுங்கள். நல்ல மனைவி உனக்கு கிடைத்தால் அது நல்லது. நீ ஆசீர்வதிக்கப்பட்டவனாய் இருப்பாய். உனக்கு மோசமான மனைவி கிடைத்தாலும் வருத்தப்படாதே. நீ ஒரு தத்துவஞானியாக மாறிவிடுவாய்" என்றார். ஏனென்றால் மனுக்குலத்தில் தொண்ணூறு (90%) சதவீதத்தினர் திருமணமானவர்கள். அதில் ஐம்பது சதவீதத்தினர் (50%) வேண்டாவெறுப்பாக வாழ்க்கை நடத்துகிறார்கள். இந்த நிலைமாற வேண்டும். இன்றைய திருமறைப் பாடங்களின் அடிப்படையில், திருமணம், உடன்படிக்கையின் கொண்டாட்டமாக எவ்வாறு அமைகிறது என்பதை தியானிப்போம்.

### *1. திருமணம் : ஆண்டவரால் ஏற்படுத்தப்பெற்ற உடன்படிக்கை* : (தொநூ 2:18)

"பின்பு ஆண்டவராகிய கடவுள், "மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று; அவனுக்குத்தகுந்த துணையை உருவாக்குவேன்" என்றார்".

ஒரு வீட்டை பொறியாளர் வடிவமைப்பார். அது போல திருமண வாழ்வை கடவுள் வடிவமைக்கிறார். கடவுளால் வடிவமைக்கப்பட்ட திருமணம், கடவுள் மாட்சிமையையும், பூமியைப்பற்றி கடவுளின் அன்பின் நோக்கத்தையும் வெளிப்படுத்துவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரம் தான் அவர்கள் கடவுள் சமூகத்தில் கொடுக்கும் வாக்குறுதிகள், கிறிஸ்தவ திருமணவாழ்க்கையானது ஒன்றான உறவு. நமது உணர்ச்சிகளால் அந்த உறவுகள் பாதிக்கக்கூடாது. அத்துடன் பக்தி, அன்பு, பாதுகாப்பு, அர்ப்பணிப்பு, இறைவன் தரும் ஆலோசனைகள் இவைகளைக்கொண்டு திருமண பந்த கூட்டாளிகளாக ஒருவருக்கொருவர் பணிவிடை செய்து ஆண்டவரால் வடிவமைக்கப்பட்ட திருமணத்தை கொண்டாடி மகிழவேண்டும். தொநூ 2:23-ல் ஆதாமுக்கு ஏற்ற துணையை உண்டாக்குவதை படிக்கிறோம். ஆண்டவரால் வடிவமைக்கப்பட்ட துணை ஏற்ற துணையாயிருக்கும். எனவே கடவுள் பொருத்தமான துணையைக் கொடுத்ததை மனிதன் அடையாளம் கண்டு அறிக்கையிட வேண்டும். இருவரும் பிரிக்கமுடியாதபடி இசைவாக இணைக்கப்பட வேண்டும். இது திருமண உடன்படிக்கையின் கொண்டாட்டமாக அமையும்.

### *2. திருமணம் : ஆண்டவரில் ஒப்புரவாக்கும் உடன்படிக்கை* : (தொநூ 2:24)

“இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுத் மனைவியுடன் ஒன்றித்திருப்பான், இருவரும் ஒரே உடலாய் இருப்பர்”.

திருமணம் என்பது புதிய தீர்மானங்கள், வாக்குறுதிகள், புதிய உறவுகள், புதியபொறுப்புகள் இவைகளின் தொடக்கம். இரு நீரோடைகளின் சந்திப்பு ஒரே நதியாகும். அதுபோல திருமணத்தில் கணவர் தன் தாய் தந்தையை விட்டு தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான் இருவரும் ஒரே உடலாயிருப்பர். இது ஆண்டவரால் ஒப்புரவாக்கப்பட்ட உடன்படிக்கையாகும்.

மத் 19:3-6 வரையுள்ள பகுதியில் ஒருவர் தன் மனைவியை எக்காரணத்தையாவது முன்னிட்டு விலக்கி விடுவது முறையா? என்று கேட்டவர்களுக்கு இயேசு மறுமொழியாக, “படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் அவர்களை ஆணும் பெண்ணுமாக படைத்தார். எனவே இனி அவர்கள் இருவரல்லர், ஒரே உடல். இப்படியிருக்க கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்” என்றார். இவ்வாறு ஆண்டவரால் ஒப்புரவாக்கப்பட்ட உடன்படிக்கையே திருமணம் அதை கொண்டாடி மகிழ்வோம்.

## 3. திருமணம் : ஆண்டவரின் உயர்வான உடன்படிக்கை :

(எபி 13:4)

"திருமணத்தை அனைவரும் உயர்வாக மதியுங்கள் மறைவறைப்படுக்கை மாசுறாமல் இருக்கட்டும்".

திருமணம் உயர்வானது. காரணம் திருமணவாழ்வு இரு வேறுபட்ட மக்கள் ஒன்றிணைந்து வாழ்வதற்கு செய்துகொள்ளும் உடன்படிக்கை. ஆகவே கடவுள் திருமணத்தை அருட்சாதனமாக உயர்த்தினார். திருமணம் கடவுளால் புனிதத்தன்மைபெறுகிறது. திருமண ஒழுங்கில் ஆணும் பெண்ணும் தங்கள் வாழ்வை பகிர்ந்துகொள்ள உடன்பாடு செய்து கொள்ளுகிறார்கள். அன்பை பகிர்ந்துகொள்வதும், உடமைகளை பகிர்ந்துகொள்வதும், அதற்குரிய வாக்கு திருமணத்தில் கொடுப்பதும் மிகவும் உயர்வானதாகும் இன்று நாகரீகம் காரணமாகவும், தனித்தன்மையை வலியுறுத்தியும் இந்த உடன்பாட்டை எளிதில் மறந்துவிடுகிறார்கள். இதனால் ஏராளமான மண முறிவு நிகழ்ந்துவிடுகிறது. எனவே ஆண்டவரின் உயர்வான உடன்படிக்கையான திருமணத்தை மதியுங்கள். ஏனெனில் இயேசு, "பரத்தமையில் ஈடுபட்டதற்காக அன்றி வேறு எக்காரணத்தையாவது முன்னிட்டு தன் மனைவியை விலக்கிவிட்டு வேறொரு பெண்ணை மணப்பவன் எவனும் விபசாரம் செய்கிறான் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார் (மத் 19:9). பவுலடியார் திருமணத்தை "கிறிஸ்துவுக்கும் சபைக்குமுள்ள உறவு போன்றது" என்று கூறுகிறார் (எபே 2:25). எனவே திருமணத்தை தூயதாக நினைத்து அதில் ஈடுபட்டு சிறப்பாக வாழ்ந்தால் அது உயர்வான உடன்படிக்கையின் கொண்டாட்டமாக அமையும்.

அன்பர்களே, திருமணம் ஆண்டவரால் வடிவமைக்கப்பட்ட உடன்படிக்கையாகவும், ஒப்புரவாக்கப்பட்ட உடன்படிக்கையாகவும், உயர்வான உடன்படிக்கையாகவும் இருப்பதால் இறைச்சித்தம் கண்டு, இறை ஆலோசனைப்பெற்று திருமணத்தை கொண்டாடி மகிழுங்கள்.

அருள்திரு. M.P. **விஜயகுமார்**

15-08-2020 **இந்திய விடுதலைத் திருநாள்**

## நீதிக்கான விடுதலை

### FREEDOM FOR JUSTICE

விப 23:1-9 கலா 5:1-6

திபா 18:16-24 லூக் 6:20-26

**"கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்து நமக்கு உரிமை வாழ்வை அளித்துள்ளார். அதில் நிலைத்திருங்கள்".** (கலா 5:1)

இந்திய திருநாட்டின் 74வது விடுதலை நாள் இன்று பெருமையுடன் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. சுதந்திரத்திற்கு முந்தைய இந்தியாவை பல்வேறு பேரரசர்கள் சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள் ஆண்டு வந்தனர். இந்திய நாடு வளங்கள் கொழிக்கும் நாடாக இருந்தது. இதனால் இங்குள்ள சில பொருட்களை வாங்கி, தங்கள் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் பொருட்டு போர்சுகல், பிரான்ஸ், இங்கிலாந்து போன்றமேற்கத்திய நாடுகள், இந்தியாவிற்கு வருகை புரிந்தன. முதலில் வணிகத்திற்காக வந்த நாடுகள் இங்கிருந்த விளை பொருட்களை மட்டுமல்லாது. தங்கம், வைரம் என உச்சிதமான பொருட்களையும் தங்கள் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தன. இதையடுத்து இந்தியாவை வணிக தளமாக மாற்றிய ஆங்கிலேயர்கள் மெல்ல ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தனர். இங்குள்ள வளங்களை சுரண்டும் நோக்கிலும், காலணி ஆதிக்கத்திற்கு உட்படுத்தும் நோக்கிலும் இங்குள்ள சிற்றரசர்களிடமும், பேரரசர்களிடமும் நட்புறவு கொண்டு, நட்பாய் இருந்த அரசர்களிடையே ஒருவரை ஒருவர் படையெடுக்கச் செய்யும் தந்திரத்தை புகுத்தினர்.

இது போன்ற அநீதிகளால் இந்தியாவை முழுமையாக தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு ஆங்கிலேயர்களுக்கு 150 ஆண்டுகள் தேவைப்பட்டது. கிழக்கிந்திய கம்பெனிகள் இந்தியாவை கிட்டதட்ட சுமார் 300 ஆண்டுகள் ஆட்சி செய்தன. இவர்களின் ஆட்சியில் நம் நாட்டின் வளங்கள் சுரண்டப்பட்டதோடு, மக்களையும் அடிமையாக நடத்தியது. மக்களிடம் வரி வசூலித்தல், விளை பொருட்களில் பங்கு கேட்டல் என பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினர். அதோடு இங்கிருந்த மக்களை பிரித்தாளும் தந்திரத்தையும் பயன்படுத்தினர். பல்வேறு போராட்டங்கள், இன்னல்கள், உயிரிழப்புகளுக்கு பிறகு இறுதியாக 1947-ஆகஸ்ட் 15-ம் தேதி

நள்ளிரவில், இந்தியா விடுதலைக் காற்றைச்சுவாசித்தது. இத்தனை பாடுகளுக்கும், தியாகங்களுக்கும் மத்தியில் நாம் பெற்ற விடுதலையை எவ்வாறு பயன்படுத்துகிறோம்? அதை முறையாக அனுபவிக்கிறோமா? என்பதே இன்றைய நாளில் நமக்கு நாமே கேட்க வேண்டிய மிக முக்கியமான கேள்வியாக உள்ளது. இக்காலச் சூழலில் தனி மனித வாழ்வில் இந்த சிறப்பு மிக்க விடுதலை நாளை சீரிய வழியில் எவ்வாறு நினைவு கூறவேண்டும்? திருமறைக்கற்று தரும் விடுதலைக்கான நெறிமுறைகள் என்ன என்பதையும், இவ் விடுதலை நாள் நமக்கு தரும் அழைப்பு என்ன என்பதையும், திருமறையின் வெளிச்சத்தில் சிந்திப்போம்.

***1. நீதியை நிலைநாட்டுதல் :*** (விப 23:1-9)

Justic என்ன இலத்தீனிய சொல்லிருந்து பெறப்பட்டது நான் 'நீதி' அல்லது Justice என்றவார்த்தை. அரசியல், தத்துவம், சட்டம், நன்னெறி போன்றவற்றில் நீதி என்பது அதி முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. ஒரு நாட்டின் அரசியல், நாகரீகத்தின் முன்னேற்றம் அந்த நாட்டில் நிலவும், நீதி பரிபாலனத்தை வைத்தே தீர்மானிக்கப்படுகிறது. புனித தாமஸ் அக்வினாஸ் என்பவர் இயேசு கிறிஸ்துவின் சொல் மற்றும் செயல்களே, இவ்வுலகின் சட்டம் மற்றும் நீதி தோன்றகாரணம் என்கிறார். இறையாட்சி நீதியின் அடிப்படையில் தான் அமைத்திருக்கிறது. அமைதியின் வழியிலே தான் நீதி வளர்கிறது என்பதை கடவுள் திருமறையின் வழியாக எடுத்துரைக்கிறார். எனவே தான் தன் சொந்த மக்களான இஸ்ரவேலர் நீதியோடும், அமைதியோடும் தங்கள் வாழ்வை வாழ விரும்பி திருச்சட்டத்தினை அவர்களுக்கென்று ஏற்படுத்தினார். விப. 23:1-9 வரையிலான திருவசனங்களில் நீதி மற்றும் அமைதி வாழ்விற்கான அறிவுரைகளை இஸ்ரவேலருக்கு அருளியதை பார்க்க முடிகிறது. எந்த சூழலிலும், யாரிடத்திலும் எவ்விடத்திலும் அவர்கள் பகைவர்களாய் இருப்பினும் அவர்களுக்கான நீதி வெளிப்பட வேண்டும் என்பதே இப்பகுதியின் மையக் கருத்தாக அமையப் பெற்றிருக்கிறது. நீதி மற்றும் அநீதிக்கான வேறுப்பாடுகளை Henry David Thorean என்பவர் சொல்லும் போது Justice is sweet and musical, but injustice is harsh and discordant என்கிறார்.

நீதி மடிந்து போகும் இடத்திலிருந்து தான் அநீதி பிறக்கிறது. மனிதனின் நீதி ஆள் பார்த்து செயல்படுவது. ஆனால் இறைவனின் நீதி உலகிலுள்ள அனைவருக்கும் சமமாக, சுதந்திரமாக கிடைக்க பெறுவது. இந்த வருட விடுதலைத் திருநாளில், என்னால் மற்றவர்களுக்கு நீதியைச்

செய்ய முடியாவிட்டாலும், ஒரு போதும் பிறருக்கு அநீதிகளைச் செய்ய போவதில்லை என்றதீர்மானத்தை மனதில் ஏற்போம். அநீதியிலிருந்து விடுபட்டு நீதியை நிலை நாட்டுவோம்.

### 2. அடிமைநிலையிலிருந்து உரிமை வாழ்வை சுதந்தரித்தல் : (கலா 5:1-6)

கலாத்திய திருச்சபையில் யூதமயமாக்கும் கிறிஸ்தவர்கள் சிலர் பவுல் எடுத்துரைத்த போதனைகளுக்கு எதிராக வாதிட்டனர். திருச்சட்டத்தினால் மட்டுமே மீட்பு பெறஇயலும் என்றும் பிறஇன கிறிஸ்தவர்கள் மோசேயின் சட்டமாகிய விருத்தசேதனம் போன்றவற்றைக் கட்டாயம் கடைப்பிடித்தாக வேண்டும் என்றும் கூறினார். பிறஇன கிறிஸ்தவர்களிடத்தில் நற்பெயர் பெறவே சில சட்ட எதிர்பார்ப்புகளை பவுல் நீக்கி விட்டதாகக் கடுமையாக குற்றம் சாட்டினர். இந்த சூழலில் தான் யூதமயமாக்கும் கிறிஸ்தவர்களின் போதனையை முறியடிக்கக் கடுமையான முறையில் பவுல் இந்திருமுகத்தை எழுதுகிறார். கலா 5:1-4-ல் யூத கிறிஸ்தவர்கள் கொண்டிருந்த சில பண்புகள், வாழ்க்கை முறை, அவ நம்பிக்கை, சட்டங்கள், பாரம்பரியங்கள் போன்றவற்றை அடிமைத்தன நிலையாக சுட்டிக்காட்டுகிறார். அதிலிருந்து விடுபட்டு, கிறிஸ்து அருளும் உரிமை வாழ்வை பெற்றுக் கொள்ள அழைப்பு விடுக்கின்றார் பவுலார். கிறிஸ்துவைச் சார்ந்தோர் உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டவர்கள் என்பதை அழுத்தம், திருத்தமாகக் கூறுகிறார்.

கிறிஸ்தவ வாழ்வு என்பது கிறிஸ்துவின் மீது கொண்ட நம்பிக்கையால் விளையும் அன்பின் அடிப்படையில் அமைய பெற்றது என்பதை உறுதிப்படுத்துகிறார். இன்றைய நவநகாரீக உலகில் பாரம்பரியம், பண்பாடு, கலாச்சாரம், குலம், கோத்திரம், சமயம், இனம், பேதம் என சொல்லிக் கொண்டு தங்களுக்கு தாங்களே அடிமைச் சங்கிலிகளை போட்டுக் கொள்பவர்கள் அநேகர் உண்டு, மனித நேயத்தோடு வாழ வேண்டியவர்கள், மனிதனை இனம் கண்டு பழகும் மனநோயோடு வாழ்ந்து வருகின்றனர். எங்கு நம் உரிமை மறுக்கப்படுகிறதோ, அங்கு நாம் அடிமை என்பதை நினைவில் கொள்தல் அவசியம். இத்தகைய அடிமைத்தன நிலையிலிருந்து விடுபட்டு, அனைவரும் சமம், என்றஉரிமை வாழ்வு வாழ்வோம்.

### 3. அவலங்களை அகற்றி ஆசிபெற்றோராதல் : லூக் 6:20-26

இயேசுவின் சமவெளிப் பொழிவு என (லூக் 6:20-26) அழைக்கப்படுகிறது. ஏழ்மை, அடக்குமுறை, அநீதி போன்றசூழ்நிலைகள்

காரணமாக யூத மக்கள் நலிவுற்றநிலையில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் கடவுளே தங்கள் கதி என்றநம்பிக்கை கொண்டிந்தனர். தங்கள் வாழ்வில் கனிவு, இரக்கம், நீதி, தூய்மை போன்ற மதிப்பீடுகளுக்கு இடம் கொடுத்திருந்தனர். தங்களுக்கும் நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையே இவர்களின் சக்தியாக இருந்தது. இயேசு கிறிஸ்துவின் வருகையால் இவர்களின் நம்பிக்கை மெய்த்துவிட்டது என்றும், அவர்கள் தாங்கள் எதிர்பார்த்ததைப் பெற்று விட்டார்கள் என்றும் இந்த பகுதியில் லூக்கா எடுத்துரைக்கிறார்.

மேலும் இதை இயேசு கலிலேய மக்களுக்கு நேர்முகமாய் சொன்ன ஆசியுரையாக லூக்கா எழுதுகிறார். இச்சமவெளிப் பொழிவு, ஒடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டோருக்கு இயேசு கொடுத்த நம்பிக்கை மிக்க அழைப்பாகும், கடவுள் ஏழை, எளியோர் மீது தம் இரக்கத்தை தாராளமாய் காட்டுகிறார். அவர்களிடமே தம் நற்செய்தியை ஒப்படைப்பதோடு, தம்முடைய பணியிலே அவர்களைப் பங்கெடுக்க வைக்கிறார். இறையாட்சியைக் கட்டி எழுப்புவதில் இந்த ஏழை, எளியோரின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என்றுபேறுநிலையை எடுத்துரைக்கிறார். அவலங்களை அகற்றி ஆசி பெற்றோராய் மாற்றவும், நாம் அவலநிலையிலிருந்து விடுபட்டு பேறு பெற்றோராய் மாறவும் நம்மை ஒப்படைப்போம்.

இவ்வருட விடுதலை தினத்தின் மகிழ்வையும், நாட்டுப் பற்றையும், இணையம் மற்றும் வலைதளங்களில் பதிவிடுவதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல், அடிமைத்தன பிடியில் இருப்போரை விடுவிப்போம், ஏழ்மையோடும், தேவையோடும் இருப்போரைச் சந்தித்து அவர்களை ஆறுதல்படுத்துவோம். இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய திரு இரத்தமே நமக்கு மீட்பை அருளியிருக்கிறது என்றஉயர்ந்த நம்பிக்கையோடு, கிறிஸ்துவை நற்செய்தியாய் பிறருக்கு அறிவிப்போம், அடிமைத்தனத்தின் நுகத்தை முறித்து, நீதியின் ஒளிச் சுடர்களாய் இந்த உலகில் ஒளிர்வோம். அர்த்தமுடைய விடுதலை நாளை சொந்தமாக்கி கொள்வோம். நீதி மற்றும் அமைதியின் ஊடகங்களாய் இந்த உலகில் பயன்படுவோம்.

திரு. A.**ஜெனில் தாஸ்**

16-08-2020

பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும்
பதினொன்றாம் ஞாயிறு

# திருமுழுக்கு என்னும் திருவருள்சாதனம்

**SACRAMENT OF BAPTISM**

விப 14:15-31 | தீத் 3:3-8
திபா 32 | யோவா 3:1-8

**"ஒருவர் தண்ணீராலும், தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன்".** (யோவா 3:5)

தென்னிந்தியத் திருச்சபை திருமுழுக்கு, திருவிருந்து ஆகிய இரண்டையும் அருள் அடையாளமாக / திருவருள்சாதனங்களாக ஏற்றுக் கொண்டுள்ளது. இவ்விரண்டும் விசவாச வாழ்வில் உறுதியாய் நிலைத்திட துணைசெய்கிறது. திருமுழுக்கு திருச்சபையில் அங்கத்துவ உரிமையினை தருகிறது என்பதும், இறையாளுகையில் பங்கு பெறுவதற்கு தேவையானது என்பதும் திருச்சபை மக்களிடையேயுள்ள நம்பிக்கை. இந்த நம்பிக்கை திருமுழுக்கு உணர்த்தும் ஆழமான பொருளினை மறைக்கிறதாக உள்ளது. திருமுழுக்கைக் குறித்து M.M. தாமஸ் என்ற இந்திய இறையியலாளர் "புதுப்பிக்கப்பட்ட மனிதன் புதிய மானுடமாம் கிறிஸ்துவின் கூட்டுறவுக்குள் நுழையும் அடையாளமே திருமுழுக்கு" எனக் குறிப்பிடுகிறார். கிறிஸ்துவோடு இணைகின்ற அருள் அடையாளம் தான் திருமுழுக்கு. திருமுழுக்கு பெறுகின்றவர் தனது உள்ளான வாழ்வில் ஏற்படும் மாற்றத்தினை உணர்கிறார். இதனுடைய வெளிப்புற அடையாளமாக திருமுழுக்கைப் புரிந்துகொள்ளவேண்டும். திருமுழுக்கு பெறுகின்ற முறைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதினூடாய் பிரிவினை ஏற்படுத்துவதைத் தவிர்த்து, இதனால் வாழ்வில் ஏற்படுகின்ற மாற்றத்தை முக்கியமாக்க வேண்டும். திருமுழுக்கைச் சாதாரணமான சடங்காக புரிந்து கொள்ளாது அதின் நோக்கத்தினை புரிந்து, செயல்வடிவம் தருவது முதன்மையானது. திருமுழுக்கை இவ்வாறு ஓர் அருள் அடையாளமாக புரிந்து கொள்ளும் போது, இன்றைய திருமறைப் பகுதிகள் அதின் ஆழத்தினை உணர்ந்திட உதவிசெய்கிறது.

## *1. திருமுழுக்கு : விடுதலையின் அருள் அடையாளம்* :

(விப 14:15-31)

(Baptism : Sacrament Symbolizing Freedom)

இஸ்ரயேலரது விடுதலை பயணத்தின்போது, பார்வோனின் படைகள் அவர்களை விரட்டி வந்தனர், பயணத்தின் பாதையில் செங்கடல்

தொடர்ந்து செல்ல முடியாமல் தடுத்தது. ஆனால் கடவுள் செங்கடல் வழியாக இஸ்ரயேலரை நடத்தி அக்கரைப்படுத்தினார். அவர்கள் வலதுபக்கத்திலும், அவர்கள் இடது பக்கத்திலும் செங்கடலின் தண்ணீர் அவர்களுக்கு மதிலாக நின்றது. இஸ்ரயேலர் கடந்து சென்றனர் (விப 14:22-29). ஆனால் இஸ்ரவேலரைத் துரத்திவந்த பார்வோனின் ராணுவத்தை தண்ணீர் மூடிக் கொண்டது (விப 14:28). இங்கே கடல் இஸ்ரவேலரது விடுதலையின் அடையாளமாக இருக்கிறது. இதனை பவுல் கொரிந்து திருச்பைக்கு எழுதும்போது "அவர்கள் அனைவரும் மோசேயோடு இணைந்திருக்கும்படி மேகத்தாலும், கடலாலும் திருமுழுக்கு பெற்றார்கள்" என எழுதுகிறார் (1கொரி 10:1,2). அதாவது திருமுழுக்கிற்கு பயன்படுத்தப்படும் தண்ணீர் நிறைந்த கடல் மற்றும் புதுவாழ்விற்கு வழிநடத்தும் மேகம் இஸ்ரயேலருக்கு அழிவிலிருந்து விடுதலை தருகின்ற நிலையில் மதிலாகவும் பாதுகாப்பாகவும் அமைந்திருந்தது. ஆனால் அதே நீத்திரள் தீமைகளுக்கு அடையாளமான எகிப்தியருக்கு அழிவினை ஏற்படுத்தியது. ஆகவே வாழ்வின் தீமைகளை அகற்றி விடுதலைதரும் அருள் அடையாளமாக திருமுழுக்கு இங்கே புரிந்து கொள்ளப்படுகிறது.

இன்று திருச்சபைகளிலும் இறைமக்களிடையேயும் திருமுழுக்கு பிரிவினை ஏற்படுத்தாது. திருமுழுக்கின் மூலமாக கிடைக்கின்ற விடுதலை அல்லது புதுவாழ்வு முக்கியமானதாகக் கருதப்பட வேண்டும். திருமுழுக்கை ஓர் அருள் அடையாளமாக அனைவரும் ஏற்றுக்கொண்டு, ஆன்மிக வாழ்வில் சிறந்து விளங்கும் போது, திருமுழுக்கின் உண்மைத் தன்மை அனைவரிலும் வெளிப்படும். இத்தகையோர் திருமுழுக்கின் வாயிலாக புதுப்பிக்கப்பட்ட புதுமனிதன் மட்டுமல்லாது புதிய மானுடமாம் கிறிஸ்துவின் கூட்டுறவில் இணைந்து வாழ்வு முழுவதும் நற்கனி கொடுக்கின்றனர்.

## *2. திருமுழுக்கு : இறையருளின் அருள் அடையாளம்* :

(தீத்து 3:3-8)

(Baptism : Sacrament Symbolizing God’s Grace)

புனித பவுலார் தீத்துக்கு கடிதம் எழுதுகையில் திருமுழுக்கைச் சாதாரணமான ஒன்றாக குறிப்பிடாமல் "நாம் செய்த அறச் செயல்களை முன்னிட்டு அல்ல, மாறாக தம் இரக்கத்தை முன்னிட்டு புதுப்பிறப்பு அளிக்கும் நீரினாலும் புதுப்பிக்கும் தூய ஆவியினாலும் கடவுள் நம்மை மீட்டார் (தீத்து 3:5) என எழுதுகிறார். அதாவது திருமுழுக்கு என்பது" Celebration of God’s Grace" கடவுளின் கிருபையின் கொண்டாட்டம். திருமுழுக்கு கடவுள் அவரது அருளினால் நமக்கு

இலவசமாக அருளுகின்ற அவரது மீட்பு. கடவுளது கிருபையும் தகுதியற்ற அனைவருக்கும் இவ்வருள் அடையாளத்துடன் கிடைக்கப் பெறுகின்றது. திருமுழுக்கில் பயன்படுத்தப்படும் தண்ணீர் இறையருளின் அடையாளமாக மனுக்குலத்தின் வாழ்வில் செயல்பட்டு தூய்மையாக்குகிறது. திருமுழுக்கு வாயிலாக மனுக்குலத்தை புதுப்பிக்கும் தூய ஆவி, தொடர்ந்து தூய்மை வாழ்வினில் நிலைத்து வாழ உதவி செய்கிறது. மட்டுமல்லாது நாம் அவரது அருளால் அவருக்கு ஒளியுடையவர்களாகி, நாம் எதிர்நோக்கியிருக்கும் நிலைவாழ்வினை உரிமைப் பேறாக திருமுழுக்கு வாயிலாக பெற்றுக்கொள்கிறோம் (தீத்து 3:7).

திருமுழுக்கு ஓர் அருள் அடையாளமாக ஒவ்வொருநாளும் நம்மை புதுப்பித்து, கடவுளின் திட்டம் நம்மில் வெளிப்படவும், அவரது சித்தத்தின் படி வாழவும் நமக்கு வழிகாட்டுகிறது. கடவுளின் திட்டம் என்பது அவரிடம் நம்பிக்கை கொண்ட அனைவரும் வாழ்வு முழுவதும் நற்செயல்கள் செய்கின்றவர்களாக கருத்துடன் செயல்பட வேண்டும் என்பதாகும் (தீத்து 3:8). இறைத்திட்டத்தின் படி பாவமில்லாத இறைமைந்தர் இயேசு பாவிகளின் வரிசையல் நின்று “இப்பொழுது விட்டுவிடும், கடவுளுக்கு ஏற்புடையவை அனைத்தும் நாம் நிறைவேற்றுவதுதான் முறை” என யோவானிடம் கூறி திருமுழுக்கு பெற்றார். இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கில் கடவுளின் திட்டம் நிறைவேறி, கடவுளின் அன்பான மகன் எனும் நிலையினை உலகம் அறிய முடிந்தது. கடவுளின் அன்பான மகனாக திருமுழுக்கின் வாயிலாக அறியப்பட்ட இயேசு, தமது வாழ்நாள் முழுவதும் தூய்மையாக நடந்தார். தூய்மையின்றி வாழ்ந்தோரை தூய்மையாக்கினார். அனைவரையும் இறையாளுகையினை நோக்கிய பயணத்தில் முன்னெடுத்துச் சென்றார். இறையருளின் அருள் அடையாளமாகிய திருமுழுக்கு நம்மை கடவுளுக்கு ஏற்புடையவர்களாக மாற்றுவது மட்டுமல்லாது, நற்செயல்கள் செய்கின்றவர்களாகவும் அநேகரை இறையாளுகைக்குள் அழைத்து செல்கின்றவர்களாகவும் நம்மை மாற்றுகிறது.

### *3. திருமுழுக்கு : புதுப்பிறப்பின் அருள் அடையாளம்* :

(யோவா 3:1-8)

(Baptism : Sacrament Symbolizing New birth / New life)

அருள் அடையாளமாகிய திருமுழுக்கை புதுப்பிறப்பின் அடையாளமாக யோவான் நற்செய்தியாளர் குறிப்பிடுகிறார். புதுப்பிறப்பு என்பது இறையாட்சியை காண்கின்ற, இறையாட்சியில் பங்கு பெறுகின்ற அனுபவமாகும். இறையாளுகையினை நம் கண்களினால் காணவும், நாம்

அதிலே பங்குபெறவும் நம்மை வழிநடத்துகிறதாக திருமுழுக்கை இங்கே புரிந்துகொள்ள முடிகிறது. பாவத்தினால் இறைமாட்சியையும் இறைச் சாயலையும் இறைவனில் திரும்ப மாற்றுருவாக்கம் பெற்று இறைசாயலைப் பெறுதல் திருமுழுக்கு. இயேசு நிக்கதேம் கேள்விக்கு பதிலளிக்கையில் புதுப்பிறப்பு என்பது தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறத்தல் என்கிறார் (யோவா 3:5). தண்ணீர் தூய்மையின் அடையாளமாகவும், தூய ஆவி புதுப்பித்தலின் அடையாளமாகவும் புரிந்துகொள்ளப்படுகிறது. அதாவது வாழ்வு தூய்மையாகி, புதுப்பிக்கப்பட்டு கிறிஸ்துவின் ஐக்கியத்துக்குள் இணைந்திருக்கும் அனுபவம். அதாவது ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் போது அவர் புதிதாக படைக்கப்பட்டவராக இருக்கிறார் (2கொரி. 5:17). ஆகவே அவரிலிருந்து பழைய பொல்லாத பாவத்தன்மை முற்றிலும் நீங்கி புதிய தூயத் தன்மையோடு செயல்படுவதாகும்.

அதோடு, கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்படி திருமுழுக்கு பெற்றவர்கள் அனைவரும் கிறிஸ்துவை அணிந்தவர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்துவோடு இணைந்திருக்கிற அனைவரும் எவ்விதமான வேறுபாடுகளுமின்றி ஒன்றாயிருக்கிறார்கள். மட்டுமல்லாது வாக்குறுதியின் அடிப்படையில் உரிமைப்பேறு உடையவர்களாயும் இருக்கிறார்கள் (கலா 3:27-29). கிறிஸ்துவை அணிந்தவர்களும், கிறிஸ்துவோடு ஒன்றாயிருக்கிறவர்களிடம் உரிமைப்பேறு பெற்றவர்களும் புதிதாய் பிறந்தவர்கள். புதுப்பிறப்பின் அருள் அடையாளமான திருமுழுக்கு பெற்ற அனைவரும் கிறிஸ்துவை அணிந்தவர்களாய், கிறிஸ்துவை வாழ்வின் அனைத்து நிலைகளிலும் பிரதிபலிப்பவர்களாயிருந்தால் அவர்களால் இறைப்பெயர் மாட்சியடைகிறது.

ஆகவே, திருமுழுக்கு பெற்றவர்கள் அனைவரும் அதன் வாயிலாக பெற்றுள்ள விடுதலை, இறையருள், புதுப்பிறப்பின் அனுபவங்களோடு உலகில் வாழ்வோம் இவ்வனுபவத்தில் நிலைத்திருக்க முடியாதபடி நம்மிலே நிறைந்துள்ள துர்க்குணம், கபடம், வஞ்சகம், பொறாமை, புறங்கூறுதல் இவைகளை முற்றிலுமாக ஒழித்திடவேண்டும் (1பேது 2:2). அதோடு நமது வாழ்வோடு தொடர்புடைய உலகு சார்ந்த தீமைகளைக் களைந்து விட்டு மனம் புதிதாகுதலினாலே மறுரூபமாகி வாழ்வோம் (உரோ 12:11).

அருள்திரு. A. **மகேர் ஷால் அஸ்பாஸ்**

23-08-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பன்னிரண்டாம் ஞாயிறு**

# தூய நன்றித் திருவிருந்து என்னும் திருவருள்சாதனம்

**SACRAMENT OF HOLY EUCHARIST**

தொநூ 14:17-24 1கொரி 10:15-17
திபா 104:14-30 மாற் 14:12-26

**"அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில் தான் பங்குகொள்கிறோம்".**

(1கொரி 10:17)

இறைமக்களுக்கென மிகமுக்கியமான இரு திருவருள் சாதனங்கள் உள்ளன. (1) இயேசுகிறிஸ்து கட்டளையிட்ட திருமுழுக்கு. (2) இயேசுகிறிஸ்து ஏற்படுத்தின வாழ்விற்கு ஆதாரமான தூய திருவிருந்து. தூய அகஸ்டின், "இறைவனின் அருட்கொடைகளில் மேலானதும் மனுக்குலத்தைத் தூய்மைப்படுத்துவதுமான தூய அடையாளம் நற்கருணை" என்கிறார். கிறிஸ்துவின் திருவுடலாம் திருச்சபையின் இதயமாகிய திருவிருந்தினை, கடவுள் தம்மை நமக்காக இயேசுகிறிஸ்துவில் தூய ஆவியாரின் ஆற்றல் வழியாக தந்திருக்கிறார் என்பதற்கு அடையாளம். நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வட ஆப்பிரிக்கா கிறிஸ்தவர்கள் ஒன்றுகூட தடை வந்தபோது "திருச்சபையின் இதயமாகிய நற்கருணையில்லாமல் உயிர்வாழ முடியாது" என்று போராடி தூய திருவிருந்தைப் பகிர்ந்து கொண்டனர். தூய நன்றித் திருவிருந்து போதிக்கும் சில உண்மைகளைச் சிந்திப்போம்.

***1. உறவின் விருந்து*** : (1கொரி 10:17)

"அப்பம் ஒன்றே, ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம்".

இறைவன் அருளும் மாபெரும் அருட்கொடை "உறவு வாழ்வு". தொடக்கக் காலத்தில் முதல் பெற்றோர் விலக்கப்பட்ட கனியை உண்டதால் இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள தூய உறவு முறிந்துவிட்டது. இயேசுகிறிஸ்து தம் உடலை உணவாகக் கொடுத்து உறவை மீண்டும் புதுப்பித்துள்ளார். காயீன், ஆபேலுடைய இரத்தத்தைச் சிந்தி உறவை துண்டித்துவிட்டான் (தொநூ 4:12-14). ஆனால் இயேசுகிறிஸ்து சிலுவையில் இரத்தத்தைச் சிந்தி இறைவனோடு உறவினை ஏற்படுத்தியுள்ளார்.

திராட்சைச்செடியில் கொடியானது பற்றியிருந்தால் நல்லகனி கொடுக்கும். அதுபோல இயேசுகிறிஸ்துவுடன் தூய திருவிருந்தில் பங்குப்பெற்று அவரோடு உறவில் நிலைத்திருந்தால் நல்ல கனிகொடுக்க முடியும். திருத்தூதுவர் பவுல் உறவு என்பதனை 'கிறிஸ்துவுக்குள் ஒன்றாக்கப்படுதல்' என்று விளக்குகிறார். ஒன்றோடொன்று இணைக்கப்படுதல் ஒரு அப்பத்தில் பல கோதுமை மணிகள் இணைந்திருப்பதுபோல நாம் பலராயினும் கிறிஸ்துவுக்குள் ஒரே உடலாயிருக்கிறோம் (1கொரி 10:17).

சீனாவில் கம்யூனிஸ்டு அதிக வளர்ச்சி பெற்றிருந்த காலத்தில் கிறிஸ்தவத்திற்கு தடையிருந்தது. மிஷனெரிகள் விதைத்த விதைகளால் ஆங்காங்கு துளிர் விட்ட கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் பின்வாங்கக்கூடாது என்பதற்காக போதகர்கள் வியாபாரிகளாக மாறி பொருட்களைச் சுமந்துசென்று, அப்பொருட்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்ட தூய திருவிருந்திற்குரிய அப்பத்தை திராட்சை ரசத்தில் கலந்து கொடுத்தனர். விசுவாசிகள் வீட்டிற்குள் சென்று ஜெபித்து தூய திருவிருந்தை பகிர்ந்துண்டு உறவில் ஆற்றல் பெற்றனர். இயேசுகிறிஸ்துவின் உடலும் இரத்தமும் விசுவாசிகளின் உறவு வாழ்வில் நிழல் உலகிலிருந்து நிஜ உலகில் வழி நடத்தினது. "இனி நானல்ல கிறிஸ்துவே எனக்குள் வாழ்கிறார்" (கலா 2:20) என்பது இவ்வுறவு வாழ்வின் வெளிப்பாடாகும்.

***2. உணவாகும் விருந்து*** : (மாற் 14:22)

"...அவர் அப்பத்தை எடுத்து...இதைப்பெற்றுக்கொள்ளுங்கள்; இது எனது உடல் என்றார்".

இன்று உலகில் பல வகையான விருந்துகள் உண்டு. ஆனால் தூய திருவிருந்து எல்லா விருந்துகளிலும் வேறுபட்டதும், சிறப்புமிக்கதுமாகும். ஏனெனில் உணவு கொடுப்பவரே விருந்தாக மாறுகிறார். '....மானிடமகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடையமாட்டீர்கள்' (யோவா 6:53).

இயேசு கிறிஸ்து 'அப்பத்தின் வீடு' என்று பொருள் கொள்ளும் பெத்லகேமில் பிறந்தது அனைவருக்கும் உணவாகப்போகிறேன் என்பதை வெளிப்படுத்தவே. இயேசுவின் தாய் இயேசு கிறிஸ்துவை தீவனத்தொட்டியில் படுக்க வைத்தது உலகமனைத்திற்கும் உணவாகப் போகிறார் என்பதற்கு அடையாளம். ஆகவே, "இயேசுகிறிஸ்து வாழ்வுதரும் உணவு நானே" என்றார் (யோவா 6:48). தூய திருவிருந்து ஆயத்தம் பண்ணும்போதெல்லாம் இயேசுகிறிஸ்து எனக்காக உணவாகி என்னை அவரோடு இணைத்துக்கொண்டார் என்ற உணர்வு ஏற்படவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் கடைசி பஸ்கா விருந்தில் "இது எனது உடல், இது எனது உடன்படிக்கையின் இரத்தம்" என்று தம்மையே உணவாகக் கொடுத்து விருந்தானார். நம் ஆத்துமாவைக் கொல்லும் பாவ விஷம் நம்மில் ஒட்டிக்கொள்ளும் போதெல்லாம் உணவான தூயத் திருவிருந்து நம்மை சுத்திகரித்து வாழ்வு தருகிறது.

***3. உன்னதருடன் இணைக்கும் விருந்து*** : (1கொரி 10:16)

"கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப் பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்கு கொள்ளுதல் அல்லவா!".

தூய பவுலின் வார்த்தைகள் இறைவன் அருளுகின்ற விருந்தில் பங்கெடுக்க அழைப்புத் தருவதாக அமைகிறது. இவ்விருந்தின் வழி உன்னதருடன் நம்மை இணைக்கிறார். நிலவுலகும் அதில் வாழ்வனவும் உன்னதரை விட்டு விலகி விட்டது. இயந்திரங்களோடு பழகிபோன மானுடம் நிலவுலகில் வாழ்வனவற்றின் துன்பம், துயரம் காணாமல் தம்மை மறைத்துக்கொண்டு உணர்வற்றவர்களாய் மாறிவிட்டது. இச்சூழலில் உன்னதருடன் மீண்டும் நம்மை இணைத்துக்கொள்வதற்கு இயேசுகிறிஸ்து தூய நற்கருணை விருந்தினை தந்து விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவானார்.

டீட்ரிச் போன்காஃபர் (Dietrich Bonhoeffer) என்ற இறையியலாளர், "திருவிருந்தினை ஆயர் இறைமக்களுடன் இணைந்து எடுத்துக்கொள்வதால் கிறிஸ்துவுக்குள் ஒன்றுபடுகிறோம்" என்கிறார்.

மானிடரை உன்னதருடன் ஒன்றிணைத்து இறையாசிக் குரியோராய் மாற்ற இயேசுகிறிஸ்து தம்மையே விருந்தாக்கினார். "கர்த்தரின் பந்தியில் வா, சகோதரா கர்த்தரின் பந்தியில் வா" என்ற மரியான் உபதேசியாருடைய பாடல் வரிகள் பிரிவினையை அகற்றி இறையரசிற்குரியோராய் நம்மை மாற்ற விடுக்கும் அழைப்பாக அமைகிறது. இயேசுகிறிஸ்து இத்தூய விருந்தை ஓர் உறவின் விருந்தாக, உணவாகும் விருந்தாக, உன்னதருடன் இணைக்கும் விருந்தாக நமக்குத் தந்து நம்மை உயிருள்ளவர்களாக மாற்றினார்.

அருள்திரு. G. **சதிலால் விஜின்**

30-08-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பதிமூன்றாம் ஞாயிறு**

# பல்நம்பிக்கைச் சமூகத்தில் கிறிஸ்தவ இருப்புநிலை

**CHRISTIAN PRESENCE IN MULTIFAITH SOCIETY**

| | |
|---|---|
| தானி 1:1-21 | திப 10:9-16 |
| திபா 67 | மத் 13:31-33 |

**"...தூய்மையானது எனக் கடவுள் கருதுவதைத் தீட்டாகக் கருதாதே".** (திப 10:15)

நாம் வாழும் இந்திய நாடு, பல்சமய நம்பிக்கை கொண்டது. ஒவ்வொரு சமயமும் வேறுபட்ட கொள்கைகளையும், நம்பிக்கைகளையும் கொண்டுள்ளன. 2014-ம் ஆம் ஆண்டு Census கணக்கின்படி 80.5% இந்துக்களும், 13.4% இஸ்லாமியர்களும், 2.3% கிறிஸ்தவர்கள், 1.9% சீக்கியர்கள், 0.8% புத்தர்கள், 0.4% ஜெய்னார்கள் மற்றும் 0.6% பழங்குடியினார் ஆவார்கள். இச்சூழலில் நற்செய்தியை பல்சமய சூழலில் அறிவிப்பது சவால் நிறைந்ததும் ஆகும். இயேசுகிறிஸ்து பறைசாற்றிய நற்செய்தியில் சமயம் சார்ந்த பார்வைகளையும், சிந்தனைகளையும் மக்களின் வாழ்வு நோக்கிலான அடிப்படைகளில் பொருளோடு விளக்கினார். (Jesus christ has taught Spirtuality beyond religiosity). எனவே, கடவுளின் வார்த்தைகள் நற்செய்தியாக சமய பன்முக பார்வைகளை கடந்து மக்களின் வாழ்வுக்கு நேராய் பாதை காட்டுவதாய் அமைய வேண்டும். சூழலில் கிறிஸ்தவ வாழ்வு எப்படி அமைய வேண்டும் என்பதை பல்சமய தரப்பட்டுள்ள திருமறை பாடங்கள் வாயிலாக கற்றுக் கொள்ளவோம்.

## *1. நம்பிக்கையில் நிலைத்திருத்தல்* :

(Be firm in your faith) தானி 1:14

கி.மு. 605 பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றுகையிட்டு, எருசலேம் கோவிலின் கலன்கள் சிலவற்றையும் சில உயர்குடி ஞானம் படைத்த வாலிபர்களையும் கவர்ந்து சென்றான். அத்தோடு மட்டும் நின்றுவிடாமல், அவர்களுக்கு கல்தேயரின் எழுத்துக்களை கற்று கொடுக்க கட்டளை பிறப்பித்தான். ராஜ உணவான திராட்சை இரசம் குடிக்கவும், சிறப்புணவு உண்ணவும் அவர்களைக் கட்டாயப்படுத்தினான். ஆனால், தானியேலும் அவன் நண்பர்களும்

அவர்களுக்கு செவிகொடாமல், ‘இவைகள் எங்களுக்கு உரிய உணவு அல்ல அவைகள் எங்களை தீட்டுப்படுத்தும் எங்களுக்கு வேண்டிய சாதாரண உணவை தாருங்கள்; அவைகள் அரச உணவைவிட மேலானது, பின்னர் மாற்றத்தை சோதித்து பாரும்’ என்றார்கள். பத்து நாட்கள் கடந்த பின் அரச உணவு உண்டவர்களை விட இவர்கள் அறிவிலும், ஆற்றலிலும், அழகிலும், தோற்றத்திலும் சிறந்து விளங்கினார்கள்.

இவர்கள் யூத நம்பிக்கையில் கற்று வளர்க்கப்பட்டவர்கள். புதிய இடம், உணவு, கலாச்சரம் இவர்கள் வாழ்வு முறையை கட்டுபடுத்தவில்லை. குணநலன்களில் வேறுபாடு ஏற்படவில்லை. அவர்களது உள்ளம் சவால் நிறைந்த கலாச்சார உலகில், தங்கள் யூத நம்பிக்கையில் கற்றுகொண்ட நம்பிக்கையில் உறுதியாய் நிலைத்து நிற்கச் செய்தது. எல்லா சூழலும் நாம் பெற்றுகொண்ட நம்பிக்கையை பாதுகாப்பது, நற்செய்தியின் பிரதிபலிப்புக்குப் பெருத்தமானது (பேது 1:4). இவர்கள் பாபிலோனிய வாலிபர்களின் ஆளுமை திறமையைவிட, மிகுந்த அறிவும், ஆற்றலும், கலைத்திறனும் மிகுந்தவர்களாய் காணப்பட்டதினால் நற்செய்தியின் தகவுகள் நேபுகாத்நேச்சாரின் இருதயத்தையே தொட்டன.

## *2. அருகில் இருப்போரைப் புரிந்து கொள்ளுதல்* :

(Understanding our neighbours) திப 10:9-16

கடவுள், பேதுருவை யூதரல்லாத கொர்நேலியுவின் இல்லத்திற்கு அனுப்பி வைக்கிறார். அவன் இறைவேண்டலின் போது கேட்ட குரலும், கண்ட தரிசனமும் பேதுருவின் மனதிலிருந்த கேள்விக்கான விடையை பெற்றுகொள்ளச் செய்தன. கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுபவரல்ல (திப 10:34; எபி 13:5; கலா 3:27), கடவுளின் வெளிப்பாடுகள் சமயம் சார்ந்து போதிக்கப்படும் நம்பிக்கையை விட மேலானது என்பதை உணர்ந்து கொண்டான்.

பேதுரு தான் கண்ட காட்சியால் தன் மனதில் கடவுள் வெளிப்பாட்டினை குறித்த பார்வை மாற்றம் பெற்று நற்செய்தியை “எல்லா இனத்தவரிலும் அவருக்கு அஞ்சி நடந்து நேர்மையாகச் செயல்படுபவரே அவருக்கு ஏற்புடையவர்” என்பதை விளக்கினார்.

சமய சடங்குகளும், நம்பிக்கைகளும் ஒருபுறம் இருக்க, நிகழ்காலங்களில் நம் அருகாமையில் வாழும் நண்பர்களோடு எங்ஙனம் ஒன்றுபடுத்தி கொள்கிறோம்?. ஒவ்வொரு மனிதனின் இருதயச் செயல்களை அறிந்துகொள்வதும், அவர்களோடு ஒன்றித்து நேர்மையாய், மதித்து வாழும் வாழ்வே கிறிஸ்தவ நற்செய்தியின் நோக்கம் ஆகும்.

### 3. இறையரசின் மறைபொருளைத் தேடுதல் :
(Seek the mystery of the Kingdom of God) மத் 13:31-33

இயேசுகிறிஸ்து எடுத்துரைத்த உவமையில் கடுகு விதை மற்றும் புளித்தமாவை விண்ணரசுக்கு ஒப்பிடுகிறார். இயேசு தமது உவமைகளில் மக்கள் பயன்படுத்தும் பொருட்களை கொண்டு விண்ணரசின் தகவுகளையும், மறைபொருளையும் வெளிப்படுத்துகிறார்.

கடுகு விதை அளவில் சிறியது. ஆனால், அது வளரும்போது அதின் கிளைகள் எல்லாவகையான உயிரினங்களின் புகலிடமாய் மாற்றம் பெறுகிறது. அதுபோல விண்ணரசின் நற்செய்தி கலிலேயாவிலுள்ள பிற இன மக்களுக்கு கலப்பின்றி கொடுக்கப்படும் போது அவர்கள் வாழ்வில் ஒளியையும் புதிய நம்பிக்கையும் ஏற்படுத்துகிறது. இறையுறவில் பங்கேற்க துணைபுரிகிறது.

புளித்தமாவின் சிறப்பை குறித்து வெளிப்படுத்தும்போது அந்நாட்களில் ரோம அதிகாரங்களால் மக்கள் சோர்ந்து போயிருந்தார்கள். தினம்தோறும் புதிய சட்டங்கள், கொள்கைகள் ஒற்றுமைக்கு ஏதிராக அமல்படுத்தப்பட்டன. ஆனால், இயேசுவின் நற்செய்தியை நேரம் வாய்க்கும்போதும், மக்களுக்கு சிறிதாய் வெளிப்படும்போதும், அதின் சாரம் கண்ணுக்கும், பார்வைக்கும் புலப்படாமலேயே, செயல்களில் மாற்றத்தை ஏற்படுத்தும். அப்படியே கிறிஸ்துவின் அன்பின் செய்தி மனிதனின் உள்ளத்தில் சென்று புதிய ஒன்றிணைப்பின் சமூகத்திற்கான வெளிப்பாட்டைக் காண உதவி செய்யும்.

ரோம அதிகாரம் மக்களை பயத்திற்கு உட்படுத்தி, வன்முறையால் வடிவமைக்கப்பட்டிருக்கும். ஆனால், விண்ணரசோ அன்பு, நீதி, தாழ்மை, அமைதி, உண்மை, வாழ்வு, நம்பிக்கை போன்றவைகளால் நிறைந்திருக்கும். ஆகையால், கிறிஸ்தவ நம்பிக்கையை நிலைநிறுத்தி, பல்சமய சூழலில் கிறிஸ்துவில் வெளிப்பட்ட வாழ்வை தொடருவோம். அதற்கென்றே நம் வாழ்வை ஒப்படைப்போம்.

அருள்திரு. R. **ராஜ பக்தசிங்**

01-09-2020

புதிய மாத நன்றித் தொழுகை

## உயர்த்தும் ஆண்டவர்

திருமறைப்பாடம் : யாக் 4:1-10

**“ஆண்டவர் முன் உங்களைத் தாழ்த்துங்கள்; அவர் உங்களை உயர்த்துவார்”.**
(யாக் 4:10)

யாக்கோபு திருமுகத்தின் ஆசிரியர் யாக்கோபு ஆவார். மரபுக் கருத்துப்படி இவர் இயேசுகிறிஸ்துவின் சகோதரர் என்று சொல்லப்படுகிறது. இவர் எருசலேம் திருச்சபையின் தலைவர் என்றும், பவுலுடன் அதிகத் தொடர்பு கொண்டிருந்தார் என்றும் குறிப்பிடப்படுகிறது (கலா 1:19; 2:9; 12; திப 15:13). இவர் உலகெங்கும் சிதறுண்டு வாழும் இஸ்ரயேலரின் பன்னிரு குலத்தினருக்கும் தனது மடலை எழுதியுள்ளார். இது யூத கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டதாயினும், பிற இன கிறிஸ்தவர்களுக்கும் பொருந்துவதாக அமைந்துள்ளது. இம்மடலில் அறிவுரைகளும் எச்சரிப்புக்களும் அதிகமாக அடங்கியுள்ளன. ஆண்டவர் உங்களை உயர்த்துவார் என்று யாக்கோபு நமக்கு நம்பிக்கை வாக்கு தருகின்றார். அப்படி ஆண்டவர் நம்மை உயர்த்த வேண்டுமானால் நாம் செய்ய வேண்டியது என்ன? என்பதைத் தியானிப்போம்.

### *1. பணிந்து வாழுங்கள்* :

யாக் 4:7 “கடவுளுக்குப் பணிந்து வாழுங்கள்”

பணிவு (கீழ்ப்படிதல்) மனித வாழ்வில் தேவையான ஒன்று. பணிவற்றச் செயல் கடவுள் உயர்த்துவதற்கு தடைச் செய்கிறது. பணிவு நம்மிடத்தில் இருக்க வேண்டுமானால் செருக்கு நம்மிடமிருந்து அகல வேண்டும். ஏனெனில் கடவுள் செருக்குற்றோரை இகழ்சிசியுடன் நோக்குகிறார். தாழ்நிலையில் உள்ளவர்களுக்கு உயர்வைத் தருகிறார் (யாக் 4:6) என்று திருமறை குறிப்பிடுகின்றது.

நோவா கடவுளின் அருள்பெற்ற மனிதர், மண்ணுலகின் மக்கள் தவறு இழைத்த போது கடவுள் மண்ணுலகை அழிக்க விருப்பம் கொண்டார். அந்நேரத்தில் நோவாவிடம் கடவுள் மனிதர் எல்லாரையும் நான் ஒழித்து விடப்போகிறேன். எனவே கொப்பேர் மரத்தால் ஒரு பேழைச் செய். அதை இன்னஇன்ன பிரகாரமாகச் செய் என்று கட்டளைக் கொடுக்கிறார். நோவா கடவுள் தனக்கு கொடுத்த கட்டளையின் படி கீழ்ப்படிந்தார். இதனால் நோவாவும் அவர் குடும்பமும் மட்டும் காப்பாற்றப்பட்டது (தொநூ 6:7).

அன்பர்களே! புதிய மாதத்தில் ஆண்டவரின் கரத்தில் நம்மை ஒப்புக்கொடுத்து கீழ்ப்படிந்து வாழ்ந்து உயர்வைப் பெற்றுக் கொள்வோம்.

## *2. உள்ளங்களைத் தூய்மையாக்குங்கள்* :

"....உங்கள் கைகளைத் தூய்மையாக்குங்கள் உங்கள் உள்ளங்களைத் தூய்மைப்படுத்துங்கள்" (யாக் 4:8).

வாழ்வில் தூய்மை வேண்டும். ஆண்டவர் நம்மை உயர்த்த வேண்டுமெனில் நம்மை தூய்மைப்படுத்த வேண்டும். இறைவாக்கினர் ஏசாயா குறிப்பிடும் போது உங்களைக் கழுவித் தூய்மைப்படுத்துங்கள். தீமைச் செய்வதை விட்டுவிடுங்கள் (ஏசா 1:16) என்று குறிப்பிடுகிறார். தூய வாழ்வில் காணப்படும் பெருமை, நேர்மையின்மை, தீமை போன்றவற்றை விட்டு விட்டு தூய உள்ளத்துடன் செயல்பட வேண்டும் என்று தூய பவுலார் கொரிந்து திருச்சபைக்கு கற்றுக்கொடுக்கிறார் (Iகொரி 5:6-8).

தாவீது தன் வாழ்வில் கண்ணின் காட்சிகளுக்கு அடிமைப்பட்டு தவறு இழைத்து விடுகின்றார். அப்போது இறைவாக்கினர் நாத்தான் வழியாக உணர்த்தப்பட்ட போது நான் கடவுளுக்கு எதிராக குற்றம் இழைத்து விட்டேன் தூய உள்ளத்தை எனக்குத் தாரும் என்று ஆண்டவரிடம் மன்றாடுகின்றார் (திபா 51). இதனால் வாழ்வில் உயர்வு பெற்றார். தூய உள்ளத்தவர் பேறு பெற்றவர் என்று இயேசு கிறிஸ்து தனது மலைப்பொழிவில் குறிப்பிட்டுள்ளார் (மத் 5:8). எனவே தூய்மையான உள்ளத்தோடு ஆண்டவரைக் கிட்டிச் சேர்வோம். ஆண்டவர் நம்மை உயர்த்துவார்.

அன்பர்களே! இப்புதிய மாதத்தில் நம்மை சற்று ஆய்ந்து பார்த்து கடவுளுக்கு கீழ்ப்படிந்து (பணிந்து) வாழ்வோம். உள்ளங்களை தூய்மைப்படுத்தி வாழ்வோம். இறைவன் தரும் உயர்வைப் பெறுவோம்.

அருள்திரு. K. **அனில் குமார்**

06-09-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பதினான்காம் ஞாயிறு & கல்வி ஞாயிறு**

# ஆசிரியர்கள் : விடுதலையின் முகவர்கள்

**TEACHERS : AGENTS OF LIBERATION**

நீமொ 8:1-12 | திப 8:26-38
திபா 119:97-104 | யோவா 4:16-42; மாற் 6:34-44

**"....நாங்களே அவர் பேச்சைக் கேட்போம். அவர் உண்மையிலே உலகின் மீட்பர் என அறிந்து கொண்டோம் என்றார்கள்!".** (யோவா 4:42)

தமிழ்ப் பண்பாட்டில் மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் ஆன்றோர் மொழியில் தந்தைக்கும் கடவுளுக்கும் இடையில் ஆசிரியர் ஒப்பிடப்படுகிறார். ஏனெனில் மாணவர் உருவாக்கத்தில் சிற்பியாகச் செயல்படுகிறார். சிற்பியின் கையிலிருக்கும் உளி தான் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் கல்வி (eduation). Education என்ற வார்த்தை educare எனும் லத்தீன் மொழியிலிருந்து கையாளப்பட்டது. இதன் பொருள் வெளிக்கொணர்தல் (To bring out) அல்லது தோண்டி எடுத்தல் (dickout) ஆகும். சுருங்கக்கூறின், ஒரு மாணவரிலுள்ள திறமைகளை வெளிக்கொணர்தல் என்பதாகும். இந்த நல்ல பணியை செய்பவர் ஆசிரியர். ஆசிரியர் என்பவருக்கு ரபி என்னும் அரமேயச் சொல்லை நற்செய்தியாளர்கள் தங்கள் நூற்களில் பயன்படுத்தியுள்ளனர். இதன்பொருள் கற்றுக்கொடுப்பவர் (Teacher), போதிப்பவர் (Master), விளக்கிக் கூறுபவர் (Lecturer), ஆலோசனை தருபவர் (Adviser), விடுவிப்பவர் (Liberator) எனக் கூறிக் கொண்டே போகலாம். யோவான் நற்செய்தியாளர் தன் நூலில் இயேசுவை ஒரு சிறந்த 'ரபி' யாகக் காட்டுகிறார். சமாரியப் பெண்மணியிடம் கற்றுக்கொடுத்தல் வழியாக இயேசு மிகப்பெரிய விடுதலையின் முகவராக (பிரதிநிதியாக) செயல்படுகிறார் என்பதை அறியலாம். இயேசுவின் காலத்தில் பாலஸ்தீனப் பெண்கள் ஆணாதிக்க சமூகத்தால் அடிமைபடுத்தப்பட்டதால் அவர்கள் புறந்தள்ளப்பட்டுக் கிடந்தனர். இயேசுவின் போதனை முறை (உரையாடல்வழி) சமாரியாப் பெண் மக்களினுள் பின்னிப்பிணைந்திருந்த தாழ்வுநிலையை அகற்றி சமநிலைப்படுத்தியது. இத்தகு விடுதலைச் சிந்தைக்குரிய கல்வியில் ஒரு ஆசிரியர் எங்ஙனம் திகழ வேண்டும் என்பதை இவண் காண்போம்.

## *1. அங்கீகரிக்கும் ஆசிரியர்* :

ஒரு சிறுமி சேட்டை செய்ததற்காக நாள்தோறும் தன் தாயால் கண்டிக்கப்பட்டாள். ஒருநாள் அவள் எந்த தவறுமே செய்யவில்லை. தாயும் அவளை கண்டுகொள்ளவில்லை. இரவு படுக்கப்போகும் முன்பாக, சிறுமி ஏக்கத்தோடு தாயிடம், அம்மா! இன்றைக்கு நான் நல்ல பிள்ளையாக நடந்துகொள்ளவில்லையா? என்னைப் பாராட்டி ஒரு நல்லவார்த்தைகூட நீங்கள் சொல்லவில்லை என்றாளாம். மனிதர்கள் அனைவரும் ஏதோ ஒருவகையில் அங்கீகாரத்தை எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இன்றைய உலகம் பணம், பதவி, ஆள், இனம் போன்றவற்றை மையப்படுத்தியே அங்கீகாரம் செயலாக்கம் பெறுகிறது.

கி.மு. 128-ஆம் ஆண்டில் சமாரியர் வாழ்ந்த கெர்சீம் நகரை யூத அரசன் ஜாண் இர்கேனாஸ் அழித்ததால் யூதர் சமாரியர்களுக்கிடையே பகை வளர்ந்தது. யூதர்கள் சமாரியாவிற்கு செல்ல மாட்டார்கள். யூதர்கள் சமாரியர்களை இழிவாகக் கருதினர் (யோவா 8:48). இதனால் சமாரியர்கள் கெர்சீம் மலையில் தங்களுக்கென கோயிலை எழுப்பி இறைவணக்கம் செலுத்தினர் (யோவா 4:20). சமாரியாவிலும் பெண்கள் இரண்டாம் நிலையில் இருந்தனர். சமாரியப் பெண்கள் காலை மற்றும் மாலை நேரத்தில் தண்ணீர் எடுக்க வருகை தரும் பொதுவான பழக்கம் இருந்தது. பழக்கமில்லாத ஆடவர் அல்ல பெண்டிரோடு யாரும் பேசக்கூடாத சமூகக்கட்டுப்பாடும் இருந்தது.

யூதர்கள் மற்றும் சமாரியர்களுக்கிடையே வெறுப்பும் வேற்றுமையும் வேர்விட்டு வளர்ந்த காலகட்டத்தில் யூதர்கள் வரக்கூடாத இடத்தில், வரக்கூடாத நேரத்தில் (பகல் 12 மணி), பேசக்கூடாத நபரிடம் (சமாரியப் பெண்) இயேசு தொடர்பு கொண்டது அங்கீகாரத்தில் வித்தியாசமான அணுகுமுறை (Different Approach) எனவும் அங்கீகாரத்திற்கு ஏங்கிய சமாரியப் பெண்ணின் வாழ்வை அங்கீகரித்தது வித்தியாசமான அனுபவம் (Different experience) எனவும் கூறலாம். ஒரு நல்ல ஆசிரியரின் பணியென்பது வேறுபட்ட சூழலில் வேறுபட்ட நபரை சந்தித்து அவரை அங்கீகரிப்பதே சிறந்த பணி என்பது நிதர்சனமான உண்மை.

கந்தை துணி உடுத்தி, வாரிக்கட்டாத தலையோடு, கையில் புத்தகமின்றி, அழுகை முகத்தோடு வகுப்பறை வாசலில் நின்றாள் தமிழரசி என்ற மாணவி, ஏன் இந்த கோலத்தில் இப்படித் தாமதமாக வந்து நிற்கிறாய் என வகுப்பாசிரியர் கேட்டார். அதற்கு தமிழரசி, “என் தகப்பனார் குடித்து

வெறித்து வந்த வேகத்தில் என் புத்தகத்தை நேற்றிரவு எரித்துப்போட்டார். அடிக்கடி இப்படி நடப்பதனால் வாழப்பிடிக்காமல் தற்கொலை செய்துகொள்ளலாம் என முடிவுசெய்த நான் சாவதற்குமுன் ஒருவிசை என் வகுப்பு மாணவர்களையும் உங்களையும் பார்த்துப்போகலாம் என வந்தேன்" எனப் பதிலுரைத்தாள். "நீ என் மாணவி அல்ல இன்று முதல் என் மகள்" என அழுதவாறே ஆசிரியர் தமிழரசியிடம் கூறி அவளை அணைத்துக் கொண்டார். அங்கீகாரம் என்பது இனம், இடம், பொருளாதாரம், மொழி கடந்து செயல்படுவது. இதில் நம் பங்கு என்ன?

## *2. அறிவைப் புகட்டும் ஆசிரியர்* : (யோவா 4:20,21)

வீட்டு முற்றத்தைப் பெருக்கிக்கொண்டிருந்தார் இளைஞர் ஒருவர். ஒருநாளும் இல்லாமல் இன்று புதுசா இப்படி முற்றத்தைப் பெருக்கிக் கொண்டாயே காரணம் என்ன? என வழிப்போக்கர் கேட்டார். அதற்கு இளைஞர் "வங்கி வேலைக்கு கூட்டல், கழித்தல், வகுத்தல், பெருக்கல் தெரிந்தாலே போதும்" என என் நண்பன் என்னிடம் கூறினான். எனவேதான் முதலில் முற்றத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறேன் என பதில் சொன்னான். எத்தனைதான் கற்றாலும் சரியான அறிதலும் புரிதலும் இல்லாமல் இன்னமும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இயேசுவிடம் உரையாடிக் கொண்டிருந்த சமாரியப் பெண்மகளும் தன்முன் நிற்பவர் அனைத்துலகையும் மீட்கும் இறைமகன் எனவும் இவரே தொழுகைக்குரியவர் என அறியாமல், 'ஐயா, எங்கள் முன்னோர் இம்மலையில்தான் (கெர்சீம்) வழிபடுகின்றனர் (யோவா 4:20). ஆனால் நீங்களோ (யூதர்கள்) எருசலேமில்தான் வழிபடவேண்டும் என்கின்றீர்கள் (யோவா. 4:20)' எனக் கூறி வழிபாட்டின் இடத்தை முன்னிலைப் படுத்துகிறார். அதற்கு இயேசு வழிபாடு என்பது இறைத் தந்தையின் திருவுளச்சித்தத்தின்படி உண்மை, விசுவாசம், அன்பு இவற்றோடு இறைவன் மீது முற்றிலும் பற்றுவைத்து, தூய ஆவியாரின் உதவியுடன் அவருடன் இணைந்து எங்கும் இறைவனை வழிபடும் காலம் வரும் என்றார் (யோவா 4:21). "இறைத்தொழுகை ஒரு குறிப்பிட்ட இடம் சார்ந்ததல்ல, இடம் கடந்து அமைய வேண்டும் என்றும் எங்கு இறைவனை வழிபடுகிறோம் என்பதல்ல யாரை வழிபடவேண்டும்" என்பதையும் புரிய வைக்கின்றார். முதலில் இயேசுவை யூதர் (யோ 4:9) எனவும், பின்பு ஆண்டவர் (4:11) எனவும் தொடர்ந்து தீர்க்கர் (4:19) எனவும் கூறிய சமாரியப் பெண்மணி தன்னோடு உரையாடும் இயேசுவால் கிடைக்கப்பெற்ற அறிவுத்தெளிவிற்கு பின் இயேசுவை மேசியா (4:25) என அறிக்கைசெய்கிறார்.

எருசலேமிலிருந்து ஊருக்குத் திரும்பிப் போகிற வழியில் தேரில் உட்கார்ந்தவாறே எசாயாவின் இறைவாக்கு நூலைப் படித்துக் கொண்டிருந்தார். அது அவருக்கு விளங்கிக்கொள்ளாத நிலையில் தூய ஆவியரால் அனுப்பப்பட்ட பிலிப்புவின் விளக்கத்தால் எத்தியோப்பியன் திருமுழுக்கு பெற்றார் (திப 8:26-40). ஆசிரியரின் தலையாயக் கடமைகளில் ஒன்று என்னவெனில் மாணவரை அறியாமையிலிருந்து விடுவித்து அறிவுக்கு நேராக நடத்துவதாகும். ஆண்டவர் இயேசு சமாரியப் பெண்மணியின் அறியாமையிலிருந்து அவரை விடுவித்து விடுதலையின் முகவராக மாறுகின்றார். இன்றைய திருச்சபை விசுவாசிகளில் பலர் இயேசு ஒரு குறிப்பிட்ட இடத்திற்குரியவர் என்ற கருத்தோட்டத்தில் இருக்கும் அறியாமை அகற்றி அறிவூட்டும் பணியில் நம்பங்கு என்ன?

***3. அருட்பணியில் ஈடுபடுத்தும் ஆசிரியர்*** : (யோவா 4:28-30)

'அப்போஸ்தலோ' (Apostelo) என்னும் கிரேக்கச் சொல்லுக்கு அனுப்பப்படுதல் என்பது தமிழாக்கம். இதன் எபிரேயச் சொல் 'ஷாலஹ்'(shalah). இவ்விரு சொற்கள் பின்புலத்திலிருந்தே 'அருட்பணி' என்னும் பதம் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது. இதன் ஆங்கில வார்த்தை 'மிஷன்' (Mission) என்னப்படுகிறது. விவிலியப் பின்னணியத்தின்படி அருட்பணிக்கு அனுப்புகிறவர் இறைவனே என்பது இதன் மையம் (தொநூ 12:3; எசா 6:8-10; யோவா 3:16; திப 9:6). அருட்பணியின் நோக்கம் கடவுளின் திருவுளச்சித்தத்தை உலகறியச் செய்வதாகும். புதிய மதிப்பீடுகளின்படி வாழ்தல், போதித்தல், விடுதலைப்பணி செய்தல் இதில் உள்ளடங்கும் (லூக் 4:18,19). இந்த நோக்கத்தின்படி இயேசுவின் போதனையால் (உரையாடல்) தெளிவடைந்த சமாரியப்பெண்மணி தன்னில் மாற்றம்பெற்று அருட்பணிக்கு தூண்டப்பெறுகிறாா். அவளாகவே ஊருக்குள் சென்று இயேசுவை மேசியா என அறிவித்து "அவரை வந்து பாருங்கள்" என்ற அழைப்பை ஏற்று மக்கள் இயேசுவிடம் வந்தனர். ஆண்டவரைக் காட்டும் பணியே இந்த உரையாடலின் உச்சகட்டம் (Climax). அருட்பணிக்கு சமாரியப்பெண்மணி முன்னோடியாக மாறினாள். அருட்பணிக்கு இப்பெண்மணி பெற்ற தூண்டுதல் இயேசுவால் கிடைத்தது. அருட்பணிக்கு சென்ற செயல் அவருக்குள் ஏற்பட்ட மாற்றத்தால் வந்தது. இறைத் தூண்டுதலும் சுக மாற்றமும் அருட்பணிக்கு அடித்தளங்கள் எனப் புரியலாம். இதன் வழி அருட்பணி செய்தால், பெறுபவர்கள் மிகுந்த கனிகொடுத்து வாழமுடியும்.

சுமார் 25 ஆண்டுகளுக்குமுன் மத்தியபிரதேசத்தில் அருட்பணி செய்த கன்னியாஸ்திரி ஒருவரை ஜெமீந்தார்களால் ஏவப்பெற்ற சமந்தர்சிங் கொலை செய்தார். கொலையாளி இறையில் அடைக்கப்பட்டார். ஏவிவிட்ட ஜெமீந்தார்கள் கைவிட்டனர். கன்னியாஸ்திரீயின் குடும்பத்தினர் கொலைகாரனை மன்னித்த செய்தி கேட்ட சமர்தர்சிங் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் முதலில் சென்று கன்னியாஸ்திரீயின் கல்லறையை வணங்கி தன்னை கிறிஸ்தவராக அருட்பணி செய்ய அர்ப்பணித்தார். ஒரு அருட்பணியாளரின் குடும்பம் ஒரு சிறைக் கைதியை மாற்றி அருட்பணிக்கு அர்ப்பணிக்கச் செய்தது மிகச் சிறந்த செயல். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருட்பணியில் விடுவிக்கும் முகவரான பணியில் நமது செயல்பாடு என்ன?

இயேசு தமது போதனையின் ஊடாய் விடுவிக்கும் முகவராகத் திகழ்ந்து சமூகத்தில் விளிம்பில் இருந்த சமாரியப் பெண்மகளை அங்கீகரித்து, அறிவைப்புகட்டி, அருட்பணிக்குத் தூண்டிய மாதிரிப்பணியை நாமும் கற்று விடுதலையின் முகவராகத் திகழ்வோம்.

அருள்திரு. அறிவர். S. **வில்சன்**

13-09-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பதினைந்தாம் ஞாயிறு & மகளிர் ஞாயிறு**

## மகளிர் : மாற்றத்தை உருவாக்குவோர்
**WOMEN AS CHANGE MAKERS**

எண் 27:1-11 | திப 16:11-15
திபா 119:57-64 | யோவா 4:27-30, 39-42

**"நான் செய்தவை அனைத்தையும் என்னிடம் சொன்னார் என்று சான்று பகர்ந்த பெண்ணின் வார்த்தையை முன்னிட்டு அவ்வூரிலுள்ள சமாரியர் பலர் இயேசுவிடம் நம்பிக்கை கொண்டனர்".** (யோவா 4:39)

1536-ம் ஆண்டு 3 வயதாக இருந்த பெண் பிள்ளை ஒருவரை இங்கிலாந்து பாராளுமன்றம் திருமணத்திற்கு புறம்பாக பிறந்தவர் என்று அறிவித்தது. ஆனால் அரச குடும்பத்தில் பிறந்த அந்த பிள்ளை அரண்மனையிலேயே வளர்ந்து பலவிதமான தடைகளையும் தாண்டி 1558-வதும் வருடம் தனது 25-ம் வயதில் இங்கிலாந்தின் அரசியாக அரியணை ஏறினார். அந்த பிள்ளை காலம் முழுவதும் திருமணம் செய்யாமல் கன்னியாகவே இருந்து மாற்றங்கள் பல உருவாக்கி தன்னடைய 45 வருட ஆட்சிகாலத்தை இன்றளவும் இங்கிலாந்தின் பொற்காலம் என போற்றுமளவிற்கு சிறப்புற செய்தார்.

சமய சீர்திருத்தத்தை வலுப்படுத்தி சீர்திருத்த ஆங்கிலிக்கன் சபையை உருவாக்கினார். நாட்டை சமய சபை பிரிவினைவாதிகளிடமிருந்து விடுவித்து ஒற்றுமைபடுத்தினார். இந்த பெண்மணியின் ஆட்சியில்தான் இங்கிலாந்து உலகளாவிய வலுவான கடற்படையை உருவாக்கி உலகளாவிய நிலையில் ஒரு முக்கிய பேரரசாக நூற்றாண்டுகளாக நின்று கொடுக்கும் வலுபெற்றது. இப்படி உலகளாவில் வியப்பை உருவாக்கிய பேரரசான ஆங்கிலேய பேரரசு உருவாக காரணமாயிருந்த அந்த பெண்மணிதான். "முதலாவது எலிசபெத் அரசி" ஆவார். பெண்கள் மாற்றங்களை உருவாக்கும் போது சமூக நாற்றங்கள் பல மாற்றப்படுகின்றன.

திருமறையில் எகிப்தின் மருத்துவ பெண்கள் சிப்போராள், பூவாள் எடுத்து செய்த மாற்று சிந்தனை மோசே என்ற பிள்ளை பிறப்பதற்கு காரணமாயிருந்தது.

மோசேயின் தாயார் எடுத்துக் கொண்ட மாற்று சிந்தனை மோசே என்ற பிள்ளையை ஒளித்து வைத்து நைல்நதில் நதியின் சாவிலிருந்து

கூட பாதுகாத்தது. பார்வோன் குமாரத்தியின் மாற்றுசிந்தனை அந்த மோசே அரச அரண்மனையில் வளரவும், பின் நாட்களில் அடிமைகளான தம் மக்களை விடுதலையாக்கும் விடுதலை வீரராகவும் வளர துணையாயிருந்தது.

நியாதிபதிகளின் காலத்தில் யாகேல் என்னும் பெண்மணியின் மாற்று சிந்தனை (நீதி 4:18,19) கானானிய அரசனின் தளபதி சிசராவிடமிருந்து இஸ்ரவேலர் விடுதலை பெற துணையாயிருந்தது.

ஏன் இயேசுவின் தாயார் கன்னிமரியாளின் மாற்று சிந்தனை தான் கன்னியாக இருந்து இதோ நான் ஆண்டவருக்கு அடிமை என அர்ப்பணித்து இறைமகன் இயேசுவை பெற்றெடுக்க செய்தது.

இப்படி சமூகத்தில் மாற்றங்களை உருவாக்கி மக்கள் வாழ்வில் விடியல்களை தந்தவர்ககளில் பெண்களின் பங்களிப்பும் அதிகமாயிருக்கிறது. இங்கே யோவான் 4-ம் அதிகாரத்தில் ஒரு பெயர் அறியப்படாத சமாரிய பெண்மணி. அவருடைய செயல்கள் நல்ல மாற்றங்களைத் தந்திருக்கிறது. அதைதான் நாம் யோவான் 4:27-30 இறைவாக்குகளில் கற்றுக்கொள்ளுகிறோம். அதனை இரண்டு தலைப்புகளில் தியானிப்போம்.

### *1. பாரம்பரியத்தை உடைத்த சமாரியப் பெண்மணி* :

யோவான் 4:9-ல் இயேசு சமமரிய பெண்மணியோடு உரையாடினார் அவள் அவரிடம் நீர் யூதர்; நானோ சமாரியர், நீர் என்னிடம் குடிக்க தண்ணீர் கேட்பது எப்படி? என்று கேட்டார் ஏனெனில் யூதர்கள் சமாரியரோடு பழகுவதில்லை. இந்த வாசகம் யூதருக்கம் சமாரியருக்கும் இடையே இருக்கும் உறவற்ற நிலையை சுட்டி காட்டுகிறது. கிமு 721-ல் அசீரியா சமாரியாவை கைப்பற்றியது. (2இரா 17:6; 18:10) அங்கிருந்த இஸ்ரயேலரில் பலர் சிறைபிடிக்கப்பட்டு அசீரியாவுக்கு கொண்டு போகபட்டனர். இவ்வாறு கொண்டு போகபட்டவர்களின் இடங்களில் அசிரியர் குடியேற்றப்பட்டனர். இதனால் இங்கே ஒரு கலப்பினம் உருவாயிற்று. இவர்கள் சமாரியாவில் முன்பிருந்தே சமயத்தை ஓரளவு பின்பற்றினர். கலப்பின மக்களாகிய இவர்களை தென்னாட்டு யூதர்கள் மிகவும் இழிவாக கருதினர். பாபிலோனிய சிறையிருப்பிற்குபின் இவர்களிடைய பெரியதொரு பிளவு உண்டாயிற்று.

இப்படி பாரம்பரியமாக பிளவுபட்டிருந்த சமுதாயத்தை சார்ந்த சமாரிய பெண் தன் மரபுகளையும், தடைகளையும் தாண்டி நின்று இயேசு நாதரோடே உரையாடுகிறார். பாரம்பரியங்களை உடைத்து உதறிய அந்த

உரையாடலினால் அந்த கிராமமே மெசியா என தெரிந்துகொள்ள செய்கிறது சமாரிய பெண்ணின் மரபை உடைத்த செயல் அந்த கிராதத்திற்கே வாழ்வை கொடுத்தது.

லூக்கா 8:43-48-இல் ஒரு பெண் தன் இரத்த போக்கு நோய் நீங்கும்படி சமூதாயத்தின் தடைகளை எல்லாம் உடைத்து ஆண்டவர் இயேசுவை நெருங்குகிறார்கள். இரத்தபோக்கு தீட்டு என்கிற பாரம் பரியம் சார்ந்த தடையை நீங்கி ஆண்டவரிடம் நெருங்கிவர நலம்பெற்று மாற்றம் பெற்றார்.

லூக்கா 10:38-42-இல் இயேசுநாதர் மார்த்தாள் மரியாள் இல்லத்திற்கு செல்கிறார். மார்த்தாள் மரபின்படி இயேசுநாதருக்கு விருந்தோம்பல் செய்வதற்கு கவனமாயிருக்கிறார். ஆனால் மரியாள் மரபை உடைத்து அவர் பாதத்தில் அமர்ந்து போதனை கேட்கிறாள். குரு ஒருவரின் முன் அமர்ந்து போதனை கேட்க பெண்கள் தகுதியற்றவர்கள் என்ற மரபினை கொண்ட யூத சமூகத்தில் மரியாள் அந்த மரபினை உடைத்து அவரது போதனைகள் கேட்பதை இயேசுநாதர் தேவையானது ஒன்றே மரியாவே நல்லபங்கை தெரிந்தெடுத்துக் கொண்டாள்; அது வளிடமிருந்து எடுக்கப்படாது என்றார்.

அடுப்பதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என்ற சமூதாயத்தில் பிறந்தவர்கள் நாம். நமது அருள்தொண்டர்களின் துணைவியர்கள் பெண்கல்வியை கொண்டுவந்தபோது, பெண்களுக்கு தொழிற் கல்வியை கொண்டுவந்த போதும், கல்வியா பெண்களுக்கு பெண்களுக்க சுய சம்பாத்தியமா என்று நமது மரபில் நின்று கேள்வி எழுப்பியவர்கள் பலர். அத்தகைய மரபுகளை உடைத்தால்தான் இன்று ஆண்களை விட பெண்கள் கல்வியில் உயர முடிந்தது. சொந்த காலில் நின்று உழைத்து வாழும் தன்மை வளர்ந்தது. பெண்கல்வியின் வளர்ச்சி தாய்மார்களின் ஊக்கமாகவும் ஊட்டமாகவும் இருந்து அடுத்த தலைமுறையை நேர்த்தியாக வளரச் செய்வதற்கு உறுதுணையாயிருக்கிறது.

மரபுகளில் நீந்தலாம் ஆனால் மூழ்கி போக கூடாது என்ற ஆன்றோர் சொல் ஒன்று உண்டு. இயேசு நாதர் மரபுகள் என்று சொல்லி அடிமைப்படுத்தும் மேல்போங்கான ஓய்வுநாள் சட்டங்கள் (ஓய்வு நாளில் கதிர் கொய்தல்); உணவு உட்கொள்ளும்முன் கைகழுவுதல் இப்படிபட்ட மூடத்தனமான, அடிமைப்படுத்தம் மரபுகளை ஆண்டவர் உடைத்தார். மரபுகளை உடைத்து உண்மைக்கு நேராய் பயணிப்போம்.

## 2. பரமனிடம் வழிகாட்டிய சமாரியப் பெண்மணி :

யோவான் 4:29-இல் “நான் செய்த எல்லாவற்றையும் என்னிடம் சொன்ன மனிதரை வந்து பாருங்கள். அவர் மெசியாவாக இருப்பாரோ!” என ஊருக்குள் சென்று சமாரிய பெண்மணி அறிவிக்கிறார். யோவான் 4:39-இல் “நான் செய்தவை அனைத்தையும் என்னிடம் சொன்னார் என்று சான்று பகர்ந்த பெண்ணின் வார்த்தையை முன்னிட்டு அவ்வூரிலுள்ள சமாரியர் பலர் இயேசுவிடம் நம்பிக்கைக் கொண்டார்கள்” ஆக சமாரிய பெண்ணின் சான்று நல்ல மாற்றங்களை கொண்டு வந்ததோடல்லாமல் நற்செய்தியாகிய இயேசுநாதரை உலகிற்கு உயர்தி காட்ட செய்கிறது.

பழைய ஏற்பாட்டில் எண்ணாகமம் 27:1-11-ல் மக்லாவின் நான்கு மகள்களும் பாலையில் மறைந்த தங்கள் தந்தைக்கு ஆண்வாரிசில்லா நிலையினை சொல்லி தங்கள் தந்தையின் சகோதரர் நடுவில் உரிமைசொத்து கேட்கின்றனர். அந்த மாற்றுசிந்தனை கடவுளிடம் மோசேயால் கொண்டு செல்லப்படுகிறது, பரமனின் பதிலையும் பெற்று சமூகத்தில் உரிமை சொத்து பெறுகின்றனர்.

கிறிஸ்து இயேசுநாதர் எல்லாதளங்களிலும் விடுதலைத் தரும் மற்றங்களை உருவாக்கினார். மக்களுக்கு அவர் வழிநின்று சமாரியா பெண்மணிபோல நல்ல மாற்றங்களை உருவாக்கும் பயணத்தில் பயணிப்போம். பரமனிடம் பலரை சேர்க்கும் வழிகாட்டிகளாவோம். ஆண்டவர் நம்மனைவரோடுமிருப்பாராக! ஆமென்!!

அருள்திரு. A. **ஜெபகுஜி**

20-09-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பதினாறாம் ஞாயிறு**

# அமைதியும் முரண்பாட்டுக்கான தீர்வும்

**PEACE AND CONFLICT RESOLUTION**

தொநூ 13:2-12 திப 6:1-6
திபா 16 மத் 20:1-16

**ஆபிராம் லோத்தை நோக்கி, "எனக்கும் உனக்கும் என் ஆள்களுக்கும் உன் ஆள்களுக்கும் இடையே பூசல் ஏற்பட வேண்டாம். ஏனெனில் நாம் உறவினர்".**
(தொநூ 13:8)

ஆபிராம் பற்றுறுதியாளர்களின் தந்தை என அழைக்கப்படுகிறார். இது ஆண்டவர் மீதான அவரது ஆழமான பற்றுறுதிக்காகக் கிடைத்த ஒரு பட்டம். இந்தப் பட்டத்தை மோரியா மலையின் உச்சியிலே ஈசாக்கைப் பலியிடுவதற்காகத் துணிந்த அந்தப் பக்தியினால் பெறவில்லை. மாறாக, வாழ்விலே ஆபிரகாம் எதிர்கொண்ட பல ஏமாற்றமான நிகழ்வுகளினால் சோர்வையும், விரக்தியையும், கழிவிரக்கத்தையும், கசப்பையும், வெளிப்படுத்தாது பொறுமையாக நடந்து கொண்டதிலிருந்தே பெற்றுக் கொண்டார். ஆபிராமைப் பற்றுறுதியாளர்களின் தந்தையாக வளர்த்தெடுத்ததும் அவர் வாழ்ந்த உலகம் தான். குறிப்பாக, லோத்துவோடு ஆபிரகாம் வாழ்ந்த காலம் அவரை அதிகமாகப் பண்படுத்தியது. ஆபிராமின் குடும்பத்திலே ஒரு பெரிய குழப்பம் ஏற்பட்ட போது, குழப்பத்திற்கிடையே தெளிவையும், பரப்பரப்புக்கு இடையே நிதானத்தையும் ஆபிரகாம் பெற்றிருந்தார்.

சண்டைகளில் இரு முறை உண்டு; ஒன்று ஆயுதங்களால் சண்டையிடுவது. இது போர் என அழைக்கப்படுகிறது. இரண்டாவது வார்த்தைகளால் சண்டையிடுவது இது வாக்குவாதம் என அழைக்கப்படுகிறது. வார்த்தைகளால் மேற்கொள்ளப்படும் போரும் நியாயமாக செய்யப்பட வேண்டும். அதை விளக்குவதற்காக வாக்குவாதம் இரண்டு வகையாக இந்திய தத்துவத்திலே பிரித்து சொல்லப்படுகிறது.
(i) ஜம்பம் வாதம் (ii) விதண்டை வாதம்.

தன் பக்கத்து குணங்களையும், குறைகளையும் அடுத்த பக்கத்து குற்றங்களையும் நியாயமாக எடுத்துரைப்பது ஜம்பம் வாதம். தன் பக்கத்து குற்றங்களை மறைத்து அடுத்த பக்கத்தை பற்றி மட்டும் பேசுவது விதண்டை வாதம்.

வாக்குவாதம் என்னும் வார்த்தை போர் நடக்கும் போது அருகருகே நின்றாலும் ஊருக்கே கேட்கிறது போலச் சத்தம் போடுகிறோம். ஒரு பெரியவர் தன் பேரக்குழந்தைகளுடன் உரையாடும் போது வாக்குவாதத்தில் ஏன் அவ்வளவு சத்தம் கேட்கிறது எனக் கேட்டார். ஒரு பேரப்பையன் சொன்னான், கோபத்தில் நாம் அமைதியை இழக்கிறோம், அதனால் சத்தமிடுகிறோம் என்றான். அதற்கு தாத்தா உனக்கு மிக அருகிலிருக்கும் நபரிடம் நீ அமைதியை இழப்பதற்காக ஏன் சத்தமிட வேண்டும், மெதுவாகப் பேசலாமே என்றார். ஒவ்வொரு பேரப்பிள்ளைகளும் ஒவ்வொரு பதிலைச் சொன்னார்கள். எதிலும் தாத்தாவுக்கு உடன்பாடில்லை. கடைசியாக தாத்தா விளக்கினார். இரு மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் கோபம் கொள்ளும் போது அவர்களின் மனங்கள் இரண்டுமே வெகு தூரம் சென்று விடுகின்றன. எனவே தூரத்திலிருக்கும் மனதிற்குக் கேட்க வேண்டுமென்பதற்காக சத்தமிடுகிறார்கள். மனது எவ்வளவு தூரம் விலகி இருக்கிறதோ அவ்வளவு தூரம் இவர்கள் தங்கள் ஆற்றலை உபயோகித்து சத்தம் போட வேண்டியிருக்கும். அப்போது தான் அவர்களின் கருத்து வெகு தொலைவிலிருக்கும் மனதைச் சென்றடையும். ஆனால் இரு மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் அன்பாக இருக்கும் போது, ஒருவரை ஒருவர் பார்த்து சத்தமிடுவதில்லை. அமைதியாகப் பேசுவார்கள். காரணம் அவர்கள் மனம் அருகருகே இருக்கும். அன்பு அதிகமாகும் போது வார்த்தையே தேவைப்படாது. வாக்குவாதத்தினால் மனங்கள் தொலைவாகப் போகாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். மனதின் தொலைவை அதிகப்படுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்தாதீர்கள். அப்படியே தொலைவுபடுத்தினால் ஒரு நாள் மனங்களிரண்டின் தூரம் அதிகமாகி கடைசியில் ஒன்று சேரும் பாதையே அடைக்கப்பட்டு விடும். வாக்குவாதங்களால் லோத்துவின் மனம் தன்னை விட்டு தொலைவுக்குச் சென்று கொண்டிருப்பதை ஆபிரகாம் உணர்ந்து, வாக்குவாதம் வேண்டாம் என்னும் முக்கியமான தீர்மானத்தை எடுத்தார். நம் வாழ்க்கையைச் சந்திக்கும் சண்டைகளை மேற்கொண்டு சமாதானமாக வாழ, நாம் என்ன செய்ய வேண்டுமென்பதை திருமறை மூன்று பகுதிகளில் கூறுகிறது. அதைத் தியானிப்போம்.

***1. விட்டுக் கொடுத்தல்*** : (தொநூ 13:9)

ஆபிராமின் தம்பி ஆரானின் மகன் தான் லோத்து. ஆபிராமின் தந்தை தேராகு மரிக்கும் முன்பே ஆரான் மரித்துப் போனான். தந்தையை இழந்து தவித்துக் கொண்டிருந்த லோத்துவைத் தன் மகனைப் போல பெரியப்பாவாகிய ஆபிராம் ஏற்றுக் கொண்டார். ஆபிராம் ‘ஊர்’ என்னும்

தன் சொந்த ஊரை விட்டு வெளியே புறப்படும்படி ஆண்டவரால் கட்டளை பெற்ற போது, லோத்துவையும் தன்னோடு அழைத்துப் போனார். அவரது கவலைகளையெல்லாம் மறக்கச் செய்கிறார். தான் சம்பாதித்த எல்லாவற்றையும் லோத்துவோடு பங்கு போட்டுக் கொண்டார். சிறுவனாக இருந்தபோது லோத்து ஆபிராமிற்கு மிகவும் நன்றியோடு தான் இருந்தார். ஆனால் அவரும் வளர வளர, அவர் சொத்துக்களும் வளர வளர அவரது மனம் வளராமல் நின்று விடுகிறது. அதன் காரணமாக அடிக்கடி வாக்குவாதங்கள் ஏற்பட்டன. இந்தத் தொடர் போராட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க நினைத்தார் ஆபிராம். பொதுவாக, பிரச்சனைகளைப் பேசித் தீர்ப்பார்கள். ஆனால் லோத்துவும் அவர் மேய்ப்பர்களும் பேசிப் பேசியே பிரச்சனைகளை வளர்த்தார்கள். பிரிந்துப்போக வேண்டுமென்றே தீர்மானித்து விட்டவர்கள், பிரிந்து போகிறதற்குப் பல காரணங்களை அடுக்குவார்கள். ஏற்றுக்கொள்ள முடியாத பல விளக்கங்களைக் கொடுப்பார்கள்.

லோத்துவின் வாக்குவாதம் ஆபிரகாம் வாழ்க்கையைக் குறித்த பல உண்மைகளைக் கற்றுக்கொள்ளச் செய்தது. அதாவது லோத்துவின் மீது அவர் வைத்திருந்த அன்பின் அளவு, அவர் பிரிந்து செல்ல தீர்மானித்த போது அவருக்குப் புரிந்தது. தன் அன்பின் அளவை புரிந்து கொள்ளாதவர்கள், பிரிவின் வலியை எப்படி உணர்வார்கள்? என்பதை புரிந்து கொண்டார். மனம் ஒரு நிலையில் இல்லாதவர்களால் தொடக்கத்தில் இருந்த அன்பை அப்படியே தொடர முடியாது. காற்றின் திசை பக்கமெல்லாம் சாயும் மரம் போலப் பிரிவினை பேசும் எல்லாருடைய கருத்துகளுக்கும் செவிசாய்க்கும் லோத்துவால் இனி நேராக நிற்க முடியாது என ஆபிராமிற்குப் புரிந்து போனது. கடலின் அலைகள் எவ்வளவு தான் எழுந்தாலும் எப்படியோ அமைதியாகி விடும். ஆனால் மனதின் அலைகள் உயர எழும்ப எழும்ப அமைதியாகாமல் ஆக்ரோஷமடைந்துகு கொண்டிருக்கும். மனதின் அலைகளை அமர்த்தி விட முடியாது என்பது ஆபிராமிற்குப் புரிந்தது. நிலையான முடிவெடுக்க முடியாத லோத்து ஆபிராமோடுள்ள உறவை முறித்துக் கொள்ள மட்டும் தெளிவான முடிவெடுத்து விட்டார். இப்போது ஆபிராம் தான் லோத்துவிற்காக இதுவரை என்ன செய்தோமென்பதைப் பட்டியலிட்டுச் சொல்லி விட்டுப் பிரிந்து போகச் சொல்ல நினைத்தார். ஆனால், தான் எவ்வளவு சொல்ல வேண்டுமென்று நினைத்தாரோ அதையெல்லாம் சொல்லாமல் விட்டுக்கொடுத்து விட்டார்.

குடியிருப்புப் பகுதியைத் தெரிந்தெடுப்பதிலும் பெரியப்பாவான ஆபிராம் முந்திக் கொள்ளவில்லை. வெற்றி பெறுவதோடு எந்த யுத்தமும் முடிவதேயில்லை என்பது ஆபிராமிற்குத் தெரியும். வெற்றிக்குப் பின்னரே போர் கடுமையாகும்; எதிரி மூர்க்கமாகிறான், கூர்மையாகிறான் என அனுபவங்களின் வழியாக ஆபிரகாம் அறிந்து கொண்டார். ஆகவே, ஒரு நாளும் தான் வெற்றிபெற்றதாக லோத்து நினைத்து பழிவாங்கும் உணர்வை வளர்த்துக் கொள்ளக் கூடாதென்று இடம் தெரிந்தெடுக்கும் விஷயத்திலும் லோத்துவை விட பெரியவரான, பெரியப்பாவான ஆபிராம் ஜெயிக்க விரும்பவில்லை. விட்டுக் கொடுத்தார். தூரம் என்பது இடங்களுக்குத் தானே தவிர நம் இதயங்களுக்கன்று என்று சொல்லி நீ தாராளமாகப் பிரிந்து போகலாம் என்றார்.

கண்கண்ட இடங்களின் செழிப்பைப் பார்த்து தன் எதிர்காலத்தை தீர்மானித்த லோத்துவைப் போலத் தீர்மானிக்காமல், தான் போகும் இடத்தை செழிப்பாக்க கர்த்தரால் முடியும் என அவர் கரத்தில் விட்டுக் கொடுப்போம். ஆபிரகாமின் விட்டுக் கொடுத்தல் பற்றுறுதியாளர்களின் தந்தையாக அவரை உயர்த்தியது. விட்டுக் கொடுப்போம். சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளவோம்.

### ***2. காது கொடுத்தல்*** : (திப 6:1)

தொடக்ககால திருச்சபையில் அனைவரையும் நலம் விசாரித்து அவர்களுக்கு தேவையானதைச் செய்வதை பந்தி விசாரிப்பு என்று பொதுச் சொல்லாகச் சொன்னார்கள். பந்தியிலிருக்கும் ஒரு சிலரை ஒதுக்கி விட்டு பாரபட்சமாகக் குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் எல்லாவற்றையும் பரிமாறுவது எவ்வளவு வலியை ஏற்படுத்துமோ அப்படித் தான் ஒருவரைக் கண்டும் காணாமல் செல்லுவதும், அவர்கள் சொல்லிற்குக் காது கொடாமலிருப்பதும். இப்படியொரு நிலைமை தான் தொடக்கக்காலத் திருச்சபையிலே ஏற்பட்டது. அங்கே சமாதானமற்ற நிலை உருவானது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கொள்கை, பந்தியிலிருப்போருக்குக் கேட்டுக் கேட்டுக் கொடுக்க வேண்டும். இதை அவருடைய அற்புதங்கிலும், வழிகாட்டுப் போதனைகளிலும் காண்கிறோம். பந்தி பரிமாறுவோருக்குக் கூர்மையாக இருக்க வேண்டிய புலன் - காது கொடுத்தல். “மற்றவர்கள் பேசுதல்” என்பது வார்த்தை வழியாக மட்டுமே நடக்கும் என நினைக்கக் கூடாது. பந்தி பரிமாற்றம் என்பது எல்லா வகையான பரிமாற்றத்திற்கும் மாதிரி. பந்தியிருப்போரின் தகவல் பரிமாற்றத்தின் முக்கியமான பகுதிகள் பெரும்பாலும் வார்த்தைகள் அற்றதாகவே இருக்கும்.

பந்தியில் அமர வைக்கப்பட்ட ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு ஆண்டவர் உணவளிக்க காரணம்-அவர்களது பசித்த முகம், தளர்ந்துபோன நடை சில நேரங்களில் நம் உடலே நம்மோடு பேசும். விருந்திற்குப் போய் அளவுக்கு அதிகமாக நாம் சாப்பிடும் போது நம் உடல் போதும் எனச் சொல்லும். T.V. முன் உட்கார்ந்து பார்த்துக் கொண்டேயிருக்கும் போது கண்கள் போதுமெனச் சொல்லும். இதையெல்லாம் நாம் கேட்பது போல தான் மற்றவர்களின் உணர்வுகளையும், உறவுகளிலுள்ள உராய்வுகளையும் கவனித்துக் கேட்க வேண்டும். மற்றவர்களின் கஷ்டங்களை அவர்கள் வார்த்தைகளால் விவரிக்கும் முன்னரே புரிந்து கொள்வது தான் மனதுருக்கம். இது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடமிருந்த ஒரு அருங்குணம். இது நம்மிடமும் இருக்க வேண்டும். பசி என்றதும் புசி என உணவை நீட்டும் கை நமக்கு இருக்க வேண்டும்.

பிறரின் முகவாட்டம் கண்டதும் சிரிப்பூட்ட நினைக்கும் நெஞ்சம் நமக்கு வேண்டும். தான் பசித்திருக்க பிறரை பசியாறச் செய்து அதனைக் கண்டு மகிழும் கண் நமக்கிருக்க வேண்டும். தொடக்க கால கிறிஸ்தவர்களில் கிரேக்க மொழி பேசிய கிறிஸ்தவர்கள், எபிரேய மொழி பேசிய கிறிஸ்தவர்கள் பாரபட்சம் காட்டாமல் இப்படி நடந்துக்கொள்ள விரும்பினார்கள்.வாழ்க்கையிலே, பாரபட்சமில்லாமல் மாய்மாலமில்லாமல் உண்மையான அன்போடு ஒரு சிலராவது வாழத் தொடங்கினால் சமாதானம் ஏற்படும். தொடக்காலத் திருச்சபையிலே விசுவாசிகளின் வாழ்க்கை, பந்தியில் அமர்வதற்கும் பந்தியை விசாரிப்பதற்கு ஒப்பிடப்பட்டது. இந்தப் ‘பந்தி’ என்னும் வாழ்க்கை முறையிலிருந்தும் சமாதானத்துக்கானவைகளைக் கற்றுக் கொள்ளுகிறோம்.

அதாவது, நிகழ்ச்சியிலே பந்தியிலிருக்கும் போது பரிமாறப்பட்ட பதார்த்தங்களிலே ஒரு கசப்பான பண்டம் பரிமாறப்பட்டிருக்குமானால் மறுபடியும் அதை சுவைக்க நினைக்க மாட்டோம்.

வாழ்க்கையிலும் சிலர் நமக்கு தந்தவை கசப்பான நிகழ்வுகளென்றாலும் அதைப் பந்தியில் இருந்து கொண்டு மீண்டும் சுவைக்க நினைக்கக் கூடாது. இதைப் பின்பற்றினால் சமாதானம் ஏற்படும்.

### *3. கற்றுக் கொடுத்தல் :* (மத் 20:10-12)

சமாதான இழப்பு நாம் வேலை செய்யுமிடத்திலே அதிகம் ஏற்படுகிறது. இதற்குக் காரணம் சிறு வயதிலேயே உன் கூடப் படிக்கிறவன் / படிக்கிறவள் என்னவெல்லாம் செய்கிறான் / செய்கிறாள் என ஒப்பிடுவது...

வேலை செய்யுமிடத்திலே, அவன்/அவள் எவ்வளவு சிறப்பாக வேலை செய்கிறான்/செய்கிறாள். என ஒப்பிட்டு பேசுவது.... எதிர்மறையாக-நீ தோல்வி தான் அடைவாய் எனப் பேசுவதும்...உடன் வேலையாட்களைப் போட்டியாளர்களாக எண்ணச் செய்கிறது.

திராட்சைதோட்டத்திலே பணி செய்யப் போனவர்கள் எப்படியெல்லாம் ஒப்பிடுதலோடும், எதிர்மறை எண்ணங்களோடும் அடையாளப்படுத்தப்பட்டார்கள் என்பது சொல்லப்பட்டுள்ளது. அதிகாலையில் அமர்த்தப்பட்டவர்கள், மூன்றாம் மணி வேளையில் அமர்த்தப்பட்டவர்கள், ஆறாம் மணி வேளையில் அமர்த்தப்பட்டவர்கள், ஒன்பதாம் மணி வேளையில் அமர்த்தப்பட்டவர்கள், பதினோராம் மணி வேளையில் அமர்த்தப்பட்டவர்கள்.

காலாகாலமாக நம் உடன் வேலை செய்பவர்களைப் போட்டியாளர்களாகவும், நம் இடத்தை கைப்பற்றிக்கொள்ள காத்திருக்கும் எதிரிகளாக நினைத்துச் செயல்படுகிறோம். நம் எண்ண ஓட்டங்களையும் கண்ணோட்டங்களையும் நன்றாக தெரிந்து கொண்ட ஆண்டவர் நமக்குக் கற்றுத் தருவதற்காக இந்த உவமையைச் சொல்லுகிறார். கிறிஸ்து மட்டுமே நம்மோடு வேலை செய்பவர்களானாலும் சரி நம் அருகில் வசிப்பவர்களானாலும் சரி அவர்களைப் போட்டியாளர் எனப் பெயரிடாமல் ‘பிறன்’ (Neighbour) என பெயரிட்டு அவர்கள் முக்கியமானவர்களென அன்பு செலுத்தக் கூறினார்.

ஒரு மானுடவியலாளர் ஆப்பிரிக்கப் பழங்குடியினச் சிறுவர்களுக்காக ஒரு போட்டி நடத்தினார். ஒரு கூடை நிறைய பழங்களை நிரப்பி ஒரு மாரத்தின் கீழ் வைத்தார். அந்தச் சிறுவர்களை மரத்திலிருந்து ஒரு நூறு மீட்டர் தள்ளி வரிசையாக நிற்க வைத்தார். யார் முதலில் அந்த மரத்தைத் தொடுகிறாரோ அவர்களுக்கு அந்தக் கூடைப் பழம் முழுவதும் பரிசாகத் தரப்படும் என அறிவித்தார். அந்தச் சிறுவர்களை ஆயத்தப்படுத்தி விசில் ஊதினார். அப்போது அந்தச் சிறுவர்கள் அனைவரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு ஒன்றாக ஓடி மரத்தை அடைந்து அந்தப் பழங்களைப் பகிர்ந்து சாப்பிடத் தொடங்கினார்கள். அந்த மானுடவியலாளர் ஆச்சரியத்துடன் அவர்களைப் பார்த்து, ஏன் இப்படிச் செய்தீர்கள்? எனக் கேட்டார் அவர்ளெல்லாரும் ஒரே குரலில் ‘உபுந்து’ (obuntu) எனக் குரல் எழுப்பினார்கள். இதன் பொருள்-பிறர் சோகத்துடன் இருக்கும் போது, நான் ஒருவன்/ஒருத்தி மட்டும் எப்படி சந்தோஷமாக இருக்க முடியும்? ubuntu என்பதற்கு-நான் என்றால் அது நானல்ல, நாங்கள் (Iam because we are) என்பதே பொருளாகும்.

உலகம் கொடுக்கிற சமாதானத்தை விட ஆண்டவர் கொடுக்கும் சமாதானம் வித்தியாசமானது (யோவா 14:27). அவர் கொடுக்கும் சமாதானம் நமக்கு நம்பிக்கையை கொடுக்கும் சமாதானமாகும். வாழ்க்கையிலே நாம் தோல்வியடையவோ அவமானப்படவோ விரும்ப மாட்டோம். ஆனால் ஆண்டவர் வாழ்க்கையிலே நாம் சந்திக்கிற எதுவுமே நம்மைப் பக்குவப்படுத்தும் என்பதையே கற்றுத் தருகிறார். தோற்றுப் போகப் பழக வேண்டும். ஏனென்றால் தோல்வியே வெற்றிக்கு ஆற்றல்படுத்தும். அவமானப்படுத்தலை ஏற்றுக்கொள்ள வேண்டும். வெகுமதிகள் தராத பக்குவத்தை அவமானம் தரும்.

ஆண்டவருடைய சமாதானத்தைப் பெற்றவர்களால் மற்றவர்களை வாழ்த்தி வளர முடியும். அன்புகூர்ந்து ஆனந்தமடைய முடியும். நன்றி கூறி நன்மையடைய முடியும். மகிழச் செய்து மதிப்படைய முடியும்.

அருள்திரு. J. **பிரகாஷ் நாயகம்**

27-09-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும்**
**பதினேழாம் ஞாயிறு &**
**மூத்த குடிமக்கள் ஞாயிறு**

# முதியோரின் நற்பலன்

**FRUITFULNESS OF THE ELDERLY**

| | |
|---|---|
| தொநூ 17:1-8 | பில 8-22 |
| திபா 92 | மத் 7:13-20 |

**"...எண்ணற்ற நாடுகளுக்கு உன்னை நான் மூதாதையாக்குகிறேன்".**

(தொநூ 17:5(b)

தமிழகத்தில் மாநில ஆளுனராக கிபி 2002-2004 வரை பணி செய்தவர் மேதகு ராம் மோகன் ராவ். ஒருமுறை அவர் ஐதராபாத் சென்றார். அப்போது ஐதராபாத்தில் நிருபர்ஒருவர் நீங்கள் ஏன் ஆளுனர் பதவியை ராஜினாமா செய்தீர் என வினவிய போது அவர் வடநாட்டில் தட்பவெட்ப நிலை எனது 92 வயது தாய்க்கு ஒத்துவராது; அவர்களைப் பார்ப்பதற்கு அவ்வளவு தூரம் உறவினர் வரமாட்டார்கள். அரசு என் கோரிக்கையை பரிசீலிக்கவில்லை. வேறுவழியில்லாமல் ராஜினாமா செய்ய வேண்டியதாயிற்று என பதிலுரைத்தார். முதியவரின் நற்பலன் எவ்வளவு முதன்மையானது என்பதை இந்நிகழ்வு கற்றுத் தருகிறது.

குடும்பத்திலுள்ள அனைவர்மேலும் தந்தைக்கு (முதியவர்) அதிகாரம் இருந்தது. மகனும், மகளும், அவர்களது உடமைகள். தன் மகன் திருமணம் செய்தவராக இருந்தபோதிலும் தந்தை உயிரோடு இருக்கும் வரை மகனுக்கு எந்த உரிமையும் இல்லை. குற்றம் புரிந்தால் மகனை தண்டிக்கும் அதிகாரம் இருந்தது. எந்த முக்கிய நிகழ்ச்சிக்கும், விழாக்களுக்கும் தந்தையே தலைமை வகித்து முன்னின்று நடத்தி வைத்தார். (விப 12:13; 13:8). இயேசுவின் காலத்தில் பிள்ளைகள் தந்தைக்கு அனைத்து மரியாதையும் செலுத்த வேண்டும். வானக தந்தைக்கு ஒருவர் எப்படி பணிய வேண்டுமோ அத்தகைய பணிவை தன் பெற்றோருக்கும் அளிக்க வேண்டுமென்று போதித்தார் (விப 21:5,12). இதையே இயேசுவும் வலியுறுத்தினார் (மத் 19:19). பவுலடியார் எபேசியருக்கு எழுதும்போது தன் பெற்றோரை மதிப்பது தான் எல்லாவற்றிலும் முதல் கட்டளை என்று நினைவுறுத்துகிறார் (எபே 6:2).

நற்பலன்களை குடும்பங்களிலும், சமூகத்திலும், திருச்சபையிலும் வெளிப்படுத்திய முதியவர்கள் இன்று சந்திக்கும் சவால்கள் ஏராளம். கவலை அதிகம்; தனிமை; மருத்துவசெலவு அதிகரிப்பு; மதிப்பின்மை;

அங்கீகாரமில்லை; உணர்வுக்கு முக்கியத்துவம் இல்லை; பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள். இவர்களின் நற்பலன்களை அனுபவிக்கும் தலைமுறையினர், முதியவர்கள் முக்கியமானவர்கள் இல்லை என்ற நிலைபாட்டிலிருந்து மீட்கபடவே 1999-ஆம் ஆண்டை முதியோர் ஆண்டாக ஐ.நா. சபை அறிவித்தது. முதியோர் நமது இல்லத்தில் இருப்பது ஆசீர்வாதம். அவர்களது நற்பலன்களை எப்படி குடும்பங்களில் ஏற்படுத்துகிறார்கள் என்பதைச் சிந்திப்போம்.

### *1. முதியோரின் நற்பலன் - முதலிடம் கடவுளுக்கு* :

(தொநூ 17:1)

ஆபிராமுக்கு வயது தொண்ணூற்றொன்பதாக இருந்தபொழுது, ஆண்டவர் அவருக்குத் தோன்றி, நான் எல்லாம் வல்ல இறைவன் எனக்குப் பணிந்து நடந்து, மாசற்றவனாய் இரு.

நீதியர், நேர்மையாளர்; உண்மையைக் கடைபிடிப்போர் என விவிலியத்தில் அடைமொழிகள் பெறும் எவரும் கடவுளைப் பின்பற்றக் கூடியவராகவும், அவரின் கட்டளையைக் கடைபிடிக்கக் கூடியவராகவும் இருந்தவர் என்பது பொருள். மூதாதையரின் நல் வாழ்வு அவர்களின் தலைமுறைக்குப் போய் சேரும் என்பது யூதர்களின் நம்பிக்கை. அதேபோல் பெற்றோர் செய்யும் பாவமும் அவர்களின் தலைமுறைக்குப் போய் சேரும் (விப 20:5,6) என நம்பினர். ஆபிரகாம் வாழ்வை கவனித்துப் பார்க்கும்போது அவரிடம் உண்மையும், நேர்மையும், எதைச் சொன்னாலும் ஏற்றுச் செய்கிற கீழ்படிதலோடும் கடவுளோடு நெருங்கி வாழ்கின்ற அனுபவமும் இருந்தது. ஆபிரகாமை நோக்கி உன் நாட்டிலிருந்தும், உன் இனத்தவரிடமிருந்தும், உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்கு காண்பிக்கும் நாட்டிற்குச் செல் என்றபோது தனக்கு பழக்கமான இடத்தைவிட்டு சற்றும் நகரமாட்டேன் என்றல்ல; இறை அழைப்பிற்கு கீழ்படிந்து எந்த இடம் என கேள்வி கேட்காலே கடவுளுக்கு முதலிடம் கொடுத்து புறப்பட்டான் (எரோ 11:8). ஆபிரகாம் சென்ற இடமெல்லாம் கடவுளுக்கு முதலிடம் கொடுத்து பணிவோடும் பக்தியோடும் கடவுளுக்கு பலிசெலுத்தி வந்தார். இப்பலியினை இறைவன் சொல்லப்படுகிறது (தொட 8:21). இறைவனை பணிந்து வணங்கி, மனிதன் தன்னை முழுமையாக இறைவனுக்கு முன் அற்பணம் செய்தனர். ஆபிரகாம் சென்ற இடமெல்லாம் பணிந்து நடந்து மாசற்றவனாய் இருந்தான்.

### *2. முதியோரின் நற்பலன் - வழிமரபினரோடு நல்லுறவு* :

(தொநூ 17:4)

உன்னுடன் நான் செய்து கொள்ளும் உடன்படிக்கை இதுவே எண்ணற்ற நாடுகளுக்கு நீ தந்தையாவாய்.

திருமறையில் உடன்படிக்கை தூய்மையானதாக சுட்டிக்காட்டப்படுகிறது. கடவுளின் உடன்படிக்கையும் மனிதனுக்கு அதை அவர் நிறைவேற்றுகின்ற நிலைகளும் வியப்மானது. முன்பு பழுதற்ற ஆட்டுக்கடா முன்நிறுத்தப்படும். உடன்படிக்கை உறுதிசெய்த பின் ஆட்டின் கழுத்து துண்டிக்கப்படும். இரண்டு துண்டங்களின் நடுவே உடன்படிக்கையில் ஈடுபடும் இருவரும் கடந்து செல்வர். இதன்பொருள் இருவரும் தங்கள் உறவை வெளிபடுத்துகின்றன. இதில் ஒருவர் தம் உடன்படிக்கையை மீறினால் ஆட்டின் கழுத்து துண்டாக்கப்பட்டது போல, உடன்படிக்கையை மீறுகிறவரின் கழுத்தும் துண்டிக்கப்படும் என்பதை கருத்தில் கொண்டு உடன்படிக்கையில் இடம் பெறுகின்றனர்.

முதிர்ந்த காலத்தில் ஆபிரகாமுக்கு இறைவன் திருக்காட்சியளித்து மகப்பேற்றினைக் கொடுத்து தேற்றுகிறார். மனித இயல்புபடி இவ்வாழ்வினை நம்ப ஆதாரமில்வை. எனினும் இறைவன்பால் தனக்கிருந்த முதன்மை (or) பற்றுறுதியின் மிகுதியயல் இறைவனின் வாக்கை நம்புகிறார். பிற்காலத்தில் ஆபிரகாம் தன்னம்பிக்கை கொண்டோரின் தந்தை என்றழைக்கப் பெறுகிறார். இறைவன் ஆபிரகாமோடு ஏற்படுத்தும் உடன்படிக்கையில் பிள்ளைபேறும் உரிமைப்பேறு கானானும் வாக்களிக்கப்படுகின்றன.

இஸ்ரவேலர் கடவுளை குறிப்பிடும் போது ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் என முற்பிதாக்களின் பெயரோடு இணைத்து கவுளை அழைத்தனர். எனவே முற்பிதாக்களின் வாழ்வு நற்பலன் நிறைந்ததாக அமைந்தது. ஆபிரகாம் லோத்துவிடம் நமக்குள்ளும் நம் மேய்ப்பருக்கள்ளும் வாக்குவாதம் வேண்டாம். நீ வலப்பக்கம் போனால் நான் இடப்பக்கம் போகிறேன். விட்டுக்கொடுக்கம் மனநிலையுடன் செயல்படுகின்றார். ஆபிரகாம் நல்ல உறவுநிலை தொடர வேண்டும். பணம், செல்வம், பொருட்கள் இவைகளைக்காட்டிலும் மனித உறவு, சகோதர உறவு, சமூக உறவு முக்கியம் என்பதை செயலில் வெளிபடுத்தினார். நல்ல உறவு நிலைகள் தொடரவும் மனித உறிவுகள் மேம்படவும் முதியோர் முன்மதியோடும், விட்டுக்கொடுக்கும் மனநிலையோடும் நற்பலன்களை வெளிப்படுத்துபவராய் ஆபிரகாமின் நற்செயல் வெளிபடுத்துகிறது.

### *3. முதியோரின் நற்பலன் - வழிமரபினருக்கு ஆசி* :

(தொநூ 17:8)

நீ தங்கியிருக்கும் நாட்டையும், கானான் நாடு முழுவதையும் என்றுமுள்ள உரிமைச் சொத்தாக உனக்கும், உனக்குப்பின் உன் வழி மரபினருக்கும் வழங்குவேன். நான் அவர்களுக்குக் கடவுளாக இருப்பேன் என்றார்.

கடவுளை குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவதுதான் ஆசீர்வாதம். இறை ஆசீர்வாதம் வரும் தலைமுறைகள் தொடர ஆபிரகாமின் வாழ்வு காரணமாகிறது. கடவுள் ஆபிரகாமிடம் நீ என் குரலுக்கு செவிகொடுத்ததினால் உலகின் அனைத்து இனத்தவரும் உன் வழிமரபின் மூலம் தங்களுக்க ஆசி கூறிக் கொள்வர் (தொநூ 22:18). ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கை ஆசீர்வதித்தார். ஈசாக் தன் முதிர்வயதில் தன் மகன் யாக்கோபை ஆசீர்வதித்தார். தொநூ 27:27-29; 28:8-16 வரை படிக்கும் போது என் தந்தையரான ஆபிரகாமும் ஈசாக்கும் எந்த கடவுள் திருமுன் நடந்து வந்தனரோ அந்த கடவுளே என் வாழ்நாள் முழுவதும் என்னை வழிநடத்திவந்தார் என்று கூறி முற்பிதாக்களின் வாழ்வில் செயல்பட்ட கடவுள் பெயரால் ஆசீர்வதித்தார்.

ஒரு மனிதனுக்கு கர்த்தர் கொடுக்கிற ஆசீர்வாதங்களிலே மிக சிறப்பான ஆசீர்வாதம் பெற்றோரே. தாயினுடைய அன்பும், தியாகமும், ஜெபமும், பிள்ளைகளுக்கு என்றென்றும் ஆசீர்வாதம் என ஆபிரகாம் லிங்கன் ஒருமுறை சொன்னார்.

முதியோரே இதைக் கேளுங்கள். இதைக் குறித்து உங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லுங்கள். உங்கள் பிள்ளைகள் அடுத்த தலைமுறைக்கு கூறட்டும் (யோவேல் 1:2,3). ஆன்மீக அனுபவங்களை அறிவிப்பது; பகிர்ந்துகொள்வது திருச்சபைக்கும் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் உதவும் செயல்.

இஸ்ரவேல் மக்களக்கு ஆசாரியர்கள் முப்பெரும் ஆசீர்வாதங்கள் வழங்குவர்.

கர்த்தர் உன்னை ஆசீர்வதித்துக் காக்கக்கடவர்; முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி கிருபையாய் இருக்கக்கடவர்; கர்த்தர் உன்மேல் பிரசன்னமாகி சமாதானம் கட்டளையிடக்கடவர்.

ஆசீர்வாதம் என்பது செல்வம், குடும்பவளர்ச்சி, பேரழகு, ஞானம் என நாம் எண்ணிவிடலாம். முதியோர்கள் வழிமரபினருக்கு பாதுகாப்பு, அருள், அமைதி போன்ற ஆசிகளை வழங்கும் கடவுளை அறிமுகப்படுத்தி முன்னேறிச் செல்ல வழிவபைச் செய்ய வேண்டும். போலி வாழ்வை தவிர்த்து தலைமுறையினரின் நல்வாழ்வுக்கு வழிகாட்ட வேண்டும் (மத் 7:18). நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது. கெட்டமரம் நல்ல கனியைக் கொடுக்கமாட்டாது. முதியவர் நற்பலன்களை வழிமரபினருக்கு விட்டுச் செல்வதே கடவுள் ஆசியை சொந்தமாக்கும் அனுபவம்.

அருள்திரு. அறிவர் T. **ராஜன்**

27-09-2020

**தென்னிந்தியத் திருச்சபை நாள்**

# சான்று பகர்வதில் ஒன்றிப்பு

**UNITY IN WITNESSING**

எசே 37:15-22 எபே 4:1-6

திபா 122 யோவா 17:20-26

**"எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக!..".** (யோவா 17:21)

19-ம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியக் கிறிஸ்தவர்கள் மனதில் எழுந்தக் கேள்வி: நாம் எல்லோரும் ஒரே ஆண்டவரைத் தொழுகிறோம், நம்புகிறோம் அப்படியானால், ஏன் நமக்குள் பிரிவினை? பல்வேறு மிஷன்களின் பெயரில் நாம் ஏன் பிரிக்கப்படவேண்டும்? அடிப்படைக் கேள்விகள், 20-ம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் இருந்த பல்வேறு பிரிவு திருச்சபைகள் ஒன்றித்து தென்னிந்தியத் திருச்சபையாக, ஐக்கிய திருச்சபையாக உருவாகக் காரணமாயிற்று. 1947-ம் செப்டம்பர் 27-ம் நாள் ஒன்றித்த தென்னிந்திய திருச்சபை உலக அளவில் அன்று முதல் இன்று வரையிலும் சான்றாக நிற்கிறது. இந்த ஒன்றிப்பினால் திருச்சபை வளர்ச்சி அடைந்தது. அருட்பணிகள் சிறப்புடன் நடைபெறலாயிற்று.

இன்று கொடுக்கப்பட்டுள்ள திருமறைப் பகுதிகளின் அடிப்படையில் மூன்று குறிப்புகளின் வாயிலாக ஒன்றிப்பும் அதினால் உள்ள சான்றையும் குறித்துச் சிந்திப்போம்.

### *1. ஒன்றிப்பை விரும்பும் ஆண்டவர்* : (யோவா. 17:21)

படைப்பிலேயே மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று இணைந்து ஒன்றாக வாழும்படி துணையை ஏற்படுத்தினார் கடவுள். திருப்பாடகர், குடும்ப வாழ்வில் மட்டுமல்ல; மானுடம் அனைத்தும் ஒன்றித்து வாழ வேண்டும் என்பதை, "இதோ, சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று எத்துணை இனியது" என 133-வது திருப்பாடலின் முதல் வசனத்தில் கூறுகிறார். இயேசு கிறிஸ்து தமது மனித வாழ்வின் இறுதி நாட்களில் கடவுளிடம் ஏறெடுக்கும் விண்ணப்பத்தில் அவரைப் பின்பற்றுகிற மக்கள் தங்களுக்குள்ளும்; இறையவரோடும் ஒன்றாயிருக்கம்படி வேண்டுகிறேன் என்கிறார். இதை நாம் முக்கோண வடிவில் புரிந்து கொள்ளலாம்.

தன்னைப் பின்பற்றுகிறவர்கள் தனிமையாக இருப்பதை ஆண்டவர் விரும்பவில்லை. தன்னையே மாதிரியாகக் காட்டுகிறார். பிதாவாகிய கடவுளுடன் தான் ஒன்றாயிருப்து போலத் தம்மைப் பின்பற்றுகிறவர்களும் கடவுளுடனும் கிறிஸ்துவின் கூட்டுறவிலும், தங்களுக்கும் ஒன்றாயிருக்கவும் வேண்டும் என விரும்புகிறார்.

### *2. ஒன்றிப்பை நிலைப்படுத்தும் ஆண்டவர்* : (எசே 37:17)

கடவுளின் மக்களினமாகிய இஸ்ரவேல் நாடு ரெகோபெயாம் அரசருடைய தகாத நடவடிக்கையினால் இரண்டாகப் பிளவுற்று யூதா, இஸ்ரயேல் என தனித்தனி ஆளுகைக்குட்பட்டது. பிளவுற்ற நிலைகளில் அன்னிய நாடுகளுக்கு அடிமையானார்கள். ஆண்டுகள் பல கடந்தும் அவர்களால் விடுதலை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் கடவுள் எசேக்கியா இறைவாக்கின் வழியாக அவர்கள் ஏக்கத்திற்கு நம்பிக்கை ஊட்டி ஒன்றித்த வாழ்வை நிலைப்படுத்துகிறார். இது மனித முயற்சியால் மட்டும் முடியாது; கடவுளின் ஆற்றல் தேவை என்பதை இப்பகுதி தெளிவுபடுத்துகிறது. 37:2-ல் மகா திரளாய் உலர்ந்து கிடந்த எலும்புகளில் கடவுள் ஆசியைப் பிரவேசிக்கச் செய்து மகா பெரிய சேனையாய் நிற்கச் செய்கின்றார். ஆக நம்பிக்கை அற்றச் சூழலிலும் நம்பிக்கை ஊட்டுபவராக; மேலும், வாழ்விழந்த நிலையில் வாழ்வு தருபவராகக் கடவுள் செயலாற்றுகிறார்.

பிளவுபட்ட இஸ்ரவேலரை ஒன்றிப்புக்கு வழிநடத்த எசேக்கியல் தீர்க்கரிடம் கடவுள் பொறுப்பைக் கொடுக்கிறார். 37:16,17. கடவுளின் வார்த்தையை எடுத்துச் சொல்ல இறைவாக்கினரை பயன்படுத்துகிறார். மீண்டும் பழைய நிலையான ஐக்கிய ஒரே அரசரின் கீழ் செயல்படும் (வ 22) ஒன்றிக்கப்பட்டபின் அவர்கள் கடவுளின் மக்களாயிருப்பார்கள் (ப 23) என்கிறார். ஆக ஒன்றிப்பு கடவுளடைய ஆற்றலால் மட்டுமே இயலும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

### *3. ஒன்றிப்புக்கான அழைப்பு* : (யோவா 17:21)

அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன் என்ற விண்ணப்பம் மனுக்குலத்துக்கு ஓர் அழைப்பாகவும் உள்ளது. கடவுளிடம் இயேசு கிறிஸ்து விண்ணப்பிக்கும்போது தம்மைப் பின்பற்றுகிறவர்களின் ஒன்றிப்பின் தேவை அல்லது முக்கியத்துவம் சுட்டப்படுகிறது. 13-ம் வசனத்தில், மகிழ்ச்சியை மக்கள் நிறைவாய் அடையும் படியாகவும்; 15-ம் வசனத்தில், தீமையினின்று காக்கப்படும்படியாகவும்; 16-ம் வசனத்தில், வசனத்தினால்

துதய்மையாக்கப்படவும் ஒன்றித்த வாழ்வுக்காக வேண்டுதல் செய்கிறார். ஒட்டு மொத்தமாக இந்த ஒன்றிப்பும், அதன் முக்கியத்துவங்களும் சான்று பகரும் வாழ்வுக்காக என்பதை பரிந்துகொள்ள முடிகிறது. 18-ம் வசனத்தில், “நீர் என்னை உலகத்தில் அனுப்பினது போல நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்” என்கிறார். தூய பவுலார் எபே. 4:1-ல் அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள்; 2-ம் வசனத்தில் அன்பினால் ஒருவரை ஒருவர் தாங்கி; 3-ம் வசனத்தில் ஒருமையைக் காத்துக்கொள்ள முழு முயற்சி செய்யுங்கள் என்றும் 4-ம் வசனத்தில் ஒரே உடலாய் வாழ வேண்டும் என்று கூறுகிறார்.

ஆக, கிறிஸ்தவ வாழ்வு சுயநலத்தோடு பிரிந்து நிற்பதற்கல்ல; மாறாக, தலையாகிய கிறிஸ்துவுக்குள், ஒரே உடலாக உடலின், சரீரத்தின் அவயவங்களாக ஒன்றித்து வாழ்வதிலேயேயும், சான்றாக காணப்படுவதிலும் தான் வெளிப்படுகிறது. ஆண்டவர் அதை விரும்புகிறார்; கடவுள் ஒன்றிப்பை நிலைப்படுத்துகிறார்; நாம் அழைப்பை ஏற்று ஒன்றித்து இறைத்திருருப்பெயருக்கு சான்றாக இவ்வுலகில் வாழ்வோம்.

அருள்திரு. முனைவர் D. **சேம் கிறிஸ்டோபர்**

01-10-2020

**புதிய மாத நன்றித் தொழுகை**

# விருப்பம் நிறைவேற்றும் ஆண்டவர்

திருமறைப்பாடம் : திபா 20

**"உமது மனம் விரும்புவதை அவர் உமக்குத் தந்தருள்வாராக! உம் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவாராக!".** (திபா 20:4)

வாழ்க்கைப் பயணத்தில் பல்வேறு காலங்களைத் தாண்டி ஆண்டவரின் இரக்கத்தாலும், கிருபையினாலும், இந்தப் புதிய மாதத்தில் கடவுளின் பாதத்தில் பணிகிறபோது ஆண்டவரின் இந்த வார்த்தை (விருப்பம் நிறைவேற்றும் ஆண்டவர்) அகில உலக மக்களுக்கும் நம்பிக்கை ஊட்டுவதாகவும், வாழ்வு வழங்குவதாகவும், அருஞ்செயல்களை கொண்டு வருவதாகவும் அமைகிறது. இந்த உலகில் துன்பங்கள், பாடுகள், வேதனைகள், கண்ணீர் கவலைகள், சோர்புகள், பயங்கள், திகில்கள் சூழ்ந்த உலகில் மனிதன் பல்வேறு விருப்பங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

விருப்பம் என்பது ஒருவர் தனக்கு பிடித்த ஒன்றை அல்லது தனக்கு உகந்ததாக கருதும் ஒன்றை செய்யவோ, அடையவோ வேண்டும் என்ற உணர்வு.

திருப்பாடல் ஆசிரியர் தாவீது அரசர் திருப்பாடல் 20-ல் தன்னுடைய விருப்பத்தை இந்த திருப்பாடலிலே குறிப்பிடுகிறார். அரசனின் விருப்பம்; என்னவென்றால் அநீதி, அக்கிரமம் அழிந்து மக்கள் நீதியோடும், அமைதியோடும், வெற்றியோடும் வாழவேண்டும் என்பதாகும்.

இன்று புதிய மாதத்திற்குள் அடியெடுத்து வைக்கும் நமது விருப்பமும் அதுதான். விருப்பம் நிறைவேற்றம் ஆண்டவர் எச்சூழ்நிலையில் விருப்பத்தை நிறைவேற்றும் ஆண்டவராக செயல்படுகிறார் என்பதை திருமறையின் வழியாக தியானிப்போம்.

### *1. மனவிருப்பத்தை அறிகின்ற ஆண்டவர்* : (திபா 20:4a)

உமது மனம் விரும்புவதை அவர் உமக்குத் தந்தருள்வாராக.

என் மனவிருப்பத்தை யார் அறிந்து கொள்வார்கள், புரிந்து கொள்வார்கள் என்ற எண்ணம் மனிதர்களிடத்திலே காணப்படுகிறது. விவிலியம் சொல்லுகிறது "கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே, அரணான கோட்டை தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார் என்று. (நாகூம் 1:7)-ல் தம்முடைய மக்களை அறிந்திருக்கின்ற கர்த்தர் இருக்கிறார் என்று இறைவாக்கினர் குறிப்பிடுகிறார்.

திருப்பாடல் ஆசிரியர் தாவீது அரசர் கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர். என் நினைவுகளை தூரத்திலிருந்து அறிகிறீர் என்று குறிப்பிடுகிறார்.

இஸ்ரவேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் இருக்கும் பொழுது அவர்களுடைய மனவிருப்பம் விடுதலை பெற வேண்டும் என்பதே. அவர்களுடைய விருப்பத்தை அறிந்த ஆண்டவர் அவர்களுக்கு விடுதலை வழங்குவதை விவிலியம் வழியாக கண்டுகொள்ள முடிகிறது.

நம்முடைய மனவிருப்பத்தை அறிகின்ற ஆண்டவரிடம் நம்மை ஒப்படைக்கும் பொழுது நம்முடைய விருப்பத்தை நிறைவேற்றுகிறவராக செயல்படுகிறார்.

## *2. மனதின் திட்டங்களை நிறைவேற்றும் ஆண்டவர்* :

"உம் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவாராக!" (சங் 20:4b)

எல்லா மனிதர்களும் வாழ்வில் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்கு பல திட்டங்களை வகுப்பது வழக்கம். திட்டங்கள் பல வேளைகளில் வெற்றி தருகிறது. சில வேளைகளில் தோல்வியைத் தருவதும் உண்டு. திருப்பாடல் ஆசிரியர் தாவீது அரசர் கடவுள் நம்முடைய திட்டங்களை நிறைவேற்றுவாராக என்று (திரு 20:4) குறிப்பிடுகிறார்.

நெகேமியா 1-ம் அதிகாரத்தை பார்க்கும்பொழுது எருசலேமின் மதில்கள் தகர்த்தெறியப்பட்டு வாயிற்கதவுகள் தீக்கிரையாகிய சூழ்நிலையில் தகவல் அறிந்த நெகேமியா எருசலேமின் மதில்களை (அலங்கம்) கட்ட திட்டமிட்டு ஆண்டவரிடம் வேண்டிக் கொண்டு அரசரிடம் முறையிட்டார். அரசரிடம் அனுமதி பெற்று 52 நாளில் எருசலேமின் அலங்கம் கட்டி முடிக்கப்பட்டது. இதற்கு கடவுள் துணைச் செய்தார். நெகேமியாவின் திட்டமிடுதலும், மன்றாட்டும் துணைசெய்தது. போர் நாளுக்கென்று குதிரையை ஆயத்தமாக வைத்திருக்கலாம். ஆனால் வெற்றி கிடைப்பது ஆண்டவராலேயே (நீதி 21:31) என்று சாலமோன் குறிப்பிடுகின்றார். கூறுகிறார். திட்டமிடுவது மனிதனாக இருந்தாலும் திட்டம் நிறைவேற உதவி செய்வது ஆண்டவர்.

புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்திருக்கின்ற நம் மன விருப்பத்தை அறிந்து நமது திட்டங்களை நிறைவேற்றி தருகின்ற ஆண்டவரிடம் கையளித்து வாழ்வோம்.

திரு. D. **ஜாஸ்மின் மனோப ராஜ்**

04-10-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும்**
**பதினெட்டாம் ஞாயிறு &**
**இறைமக்கள் ஞாயிறு**

# இறைமக்களின் சான்று

**WITNESS OF THE PEOPLE OF GOD**

| | |
|---|---|
| தானி 3:12-30 | திப. 18:24-28 |
| திபா 15 | லூக் 10:1-20 |

**"...நாங்கள் வழிபடுகிற எங்கள் கடவுள், எரிகின்ற தீச்சூளையினின்று எங்களை மீட்க வல்லவர்".** (தானி 3:17)

இன்று நாம் காணும் உலகம் பொய்மை நிறைந்தது. யாரைப் பொய்க்கூறி ஏமாற்றலாம், யாரைப் பொய்மைக்கு நேராய் வழிநடத்தலாம் எனக் காத்திருக்கும் தருணத்தில் உலகும் பொய்மையை விரும்பி செல்வது தினமும் நாம் காணும் செயல்களே. ஆயிரம் பொய்ச் சொல்லி ஒரு திருமணத்தை நடத்தி விடலாம் என்பர் அன்றைய மக்கள். அதுவே இன்றய பல சிக்கல்களுக்கு வித்திட்ட ஒன்றாய் அமைகிறது. கணக்கெடுப்பில் அரிய விலங்கினங்கள் குறைந்திருப்பது தெரிய வருவது போல உண்மையுள்ளவர்கள் மனுப்புத்திரரில் குறைத்திருக்கிறார்கள். பல ஆயிரம் செலவழித்து உயர்ந்த சிறப்புப் பெற்ற கல்வி நிறுவனங்களில் பிள்ளைகளைப் படிக்க அனுப்பும் பெற்றோர் உண்மை, உத்தமம் உத்தரவாதம் இவைகளைக்கற்றுக் கொடுப்பதில்லை.

மேலை நாட்டுக்கு உயர் கல்வி பயில சென்ற தன் மகளிடம் அவரது அன்னை சில உறுதி மொழிகளைப் பெற்றுக் கொண்டார். சத்திய நெறியில் பிறழக் கூடாது. மது, மாது, புகை பழக்கம் போன்ற தீயகுணங்களை கடைப்பிடிக்க கூடாது. தேச தந்தை என்று உயர்ந்த காந்தியடிகள் அன்னைக்கு கொடுத்த உறுதிமொழியை உதறாமல் கடைப்பிடித்து சாட்சியாய் வாழ்ந்தார். பொய்மை நிறைந்த உலகில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பற்றி சாட்சியாய் வாழ அழைக்கப்பட்டுள்ளோம். மோசே ஒரு பணிவிடைக் காரரைப்போல அவருடைய வீட்டில் உண்மையுள்ளவராயிருந்தார் என வாசிக்கிறோம். எபி 3:5 கிறிஸ்தவ மாண்புகளைச் சிதைக்கும் உண்மையற்ற தகவுகளை விட்டொழிந்து உண்மை, நற்பண்பு, நீதி, தூய்மை, இறைப் பற்றுறுதி இவற்றை வாழ்வில் கடைபிடித்து கிறிஸ்தவ சாட்சியில் வளர வேண்டும். நிறுத்தப்பட்ட பொற்சிலையை வணங்காத மாமனிதர்களைப் போல கடவுள் நம்பிக்கையில் சான்று பகர வேண்டும். சான்றற்ற நிலமை மாறி வன்முறை, வழிப்பறி, தீய ஒழுக்கம், லஞ்சம் போன்ற தீமைகள் மலிந்த உலகில் எப்படி சான்றாளர்களாய் வாழ இயலும். எவ்வாறு எவற்றில் சான்று பகரலாம் என சிந்திப்போம்.

***1. பற்றுறுதியில் சான்று*** : (எபி 11:1)

“நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி; கண்ணுக்குப்புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை” விலையுயர்ந்த உங்கள் நம்பிக்கை மெய்ப்பிக்கப்படவே துயருறுகிறார்கள்.

(பேதுரு 1:7) உயிர்த்தெழுந்த ஆண்டவரைப் பார்த்தோம் என கூறிய சீடர்களின் வார்த்தையை தோமா நம்பவில்லை. எட்டு நாளைக்குப் பின் பூட்டிய வீட்டில் தோமா மற்ற சீடர்களோடு அமர்ந்திருந்தார். இயேசு நடுவே நின்று தோமாவிடம் ஐயம் தவிர்த்து நம்பிக்கைக்கொள் என்றார். (யோவா 20:27)

பற்றுறுதியில் தளர்ந்த நிலையில் இருந்த தோமா “நீரே என் ஆண்டவர் நீரே என் (‘My Lord and My God’) என அறிக்கையிட்டு கடவுள் இந்தியா வந்து நற்செய்தி பறைசாற்றி இரத்த சாட்சியாய் மரித்து பற்றுறுதிக்கு சான்றாக விளங்கினார். தானியேல் 3:17-ல் நேபுகாத் நேச்சார் நிறுத்தின பொற்சிலையை சாத்ராக், மேஷாக், ஆபேத்நெகோ வணங்க மறுத்து தாங்கள் வழிபடும் கடவுள் தங்களை விடுவிப்பார் என்ற அசைக்க முடியாத பற்றுறுதி, அரச அதிகாரத்தை அசைத்தது. நமது பற்றுறுதி தேச அமைப்பை அதிகாரத்தை அசைக்கும் ஆற்றலுள்ளதா? என சிந்தித்து பற்றுறுதிக்கு சான்றாவோம்.

***2. படித்ததில் சான்று*** : (திப 18:24)

அலெக்சாந்திரியா பட்டணத்தில் பிறந்தவரும், கற்றறிந்தவரும் மறைநூல்களில் அறிவு பெற்றவருமான அப்பொல்லோ என்றும் பேர் கொண்ட ஒரு யூதர் எபேசு பட்டணத்துக்கு வந்தார். அப்பொல்லோ சொல் வலிமையுள்ள மறைநூல் அறிஞர். எகிப்தின் அலெக்சாந்திரியாவைச் சார்ந்தவர். பழைய ஏற்பாட்டின் படி பிரசங்கித்தவர். எபேசுவில் வைத்து பற்றுறுதி கொண்ட தம்பதியரான ஆக்கில்லா, பிரிஸ்கில்லா இவரை புதிய ஏற்பாட்டுக்கு கொண்டு வந்தனர். அதன் பின் அவர் அகாயா சென்றார். இயேசுவே கிறிஸ்து என்று மறைநூல் வாக்கியங்களைக் கொண்டு நிரூபித்தார் (திப 18:28). அழிக்கிறவர் என்ற பொருள் கொண்ட அப்பொல்லோ சாத்தானின் கோட்டைகளை அனலுள்ள வார்த்தைகளால் தான் படித்த அறிவைத் தகர்த்து சான்று பகர்ந்தார்.

இந்திய வேதாகமச் சங்கம் குறைந்த பொருட்செலவில் திருமறையை நமக்கு அச்சிட்டு விநியோகித்து வருகிறது. இத்திருமறை இன்று பலர் இல்லங்களில் பார்வை பொருளாக இருக்கிறது. பல பட்டங்களை பெற்றவர்கள் பெருமைப்படும் நிலையில், திருமறையைப் படித்து அதனை வாழ்வில் கடைபிடித்து சான்று பகருகிறவர்களாக திகழ்கிறோமோ. திருபாடல் 15:1-ல் ஆண்டவரே உம்முடைய கூடாரத்தில் தங்கிட தகுதியுள்ளவர் யார்? என்ற கேள்விக்கு விடையாக பொய்மை

நிறைந்த உலகில் மாசற்றவராய் நடப்பவர் நேரியவற்றைச் செய்பவர், உளமார உண்மை பேசுபவர் என்ற விளிக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே திருமறை படிப்பதும், தியானிப்பதும் அவைகளின் படி வாழ்ந்து சான்று பகர்வதும் நமது கடமை என்பதை உணர்ந்து படித்ததில் சான்று பகர்வோம்.

***3. பறைசாற்றுவதில் சான்று*** : (தானி 3:29)

"...இவ்வண்ணமாய் மீட்கின்ற ஆற்றல் படைத்த கடவுள் வேறொருவம் இல்லை என்றான்".

மரணத்திற்கு முன் கற்றறிந்த, இறை பற்றுறுதி கொண்ட சவாலை சந்திக்கும் ஆற்றல் பெற்ற இளைஞர்களான சாத்ராக், மேஷாக், ஆபேத்நெகோ நின்றனர். அரசர் நேபுகாத் நேச்சரின் சொற்கள் மரண வாசனையுடன் அவர்கள் முன் விழுந்தன.

"பணியுங்கள் இல்லையேல் எரிக்கப்படுவீர்கள்" நண்பர்கள் மூவருக்கும் வந்த இறுதி வாய்ப்பு இது. இக்கட்டானச் சூழலில் பணிந்து அரசனின் நட்பைப் பெறுவதா துணிந்து பற்றுறுதியினை பறைசாற்றுவதா. துணிந்தனர். 'எங்கள் கடவுள் மீட்க வல்லவர்' என்றனர்.

தீயின் உள்ளே சுற்றுலா நடத்தி இறைப்புகழை மகிமைப்படுத்தினர். அரசர் இவ்விதமாக மீட்க வல்ல கடவுள் வேறொருவரும் இல்லை என்றார். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை பறைசாற்றுவதில் சான்றாய் விளங்க வேண்டும். லூக். 10-ம் அதிகாரத்தில் இயேசு 72 பேரை நியமித்து சகல பட்டணங்களுக்கும் இரண்டிரண்டு பேராக அனுப்பினார்.

அனுப்பப்பட்டவர்கள் இறையரசு, பற்றி பறைசாற்றி நோயாளிகளை குணமாக்கி, அவர்கள் எப்படி செயல்பட வேண்டுமென்ற இலக்கணத்தையும் வகுத்தார்.

சொற்றொடரில் இலக்கணப் பிழை ஏற்படுமாயின் பொருள் மாறிவிடும். பறைச்சாற்றுதலில் பிழையின்றி சான்றுபகரும் போது மட்டுமே இறையரசின் தகவுகளை முழுமையாக வெளிப்படுத்த முடியும். நமது நற்செய்தி அறிவித்தலின் சான்று கிறிஸ்துவின் சிந்தைக்கு உகந்த ஒன்றாக கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் நிலையில் உள்ளதா? என்பதை சிந்தித்து பறைசாற்றுவதில் சான்று பகர்வோம்.

இறைமக்கள் தங்கள் திருச்சபைக்கும் இறைவனுக்கும் சான்றாய் திகழவேண்டும். பற்றுறுதியிலும், படித்ததிலும், பறைசாற்றுவதிலும் சான்றாய் விளங்கி இறையரசின் தகவுகளைச் சரியாய் வெளிப்படுத்தி இயேசுவோடு இறையரசிலும் வாழ ஆயத்தமாவோம். பொய்மை இருள் அகன்று மெய்மை ஒளி பிரகாசிக்க நம்மை அர்ப்பணிப்போம்.

அருள்திரு. J. **ஞானதாஸ்**

11-10-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பத்தொன்பதாம் ஞாயிறு & மாற்றுத்திறனுடையோர் ஞாயிறு**

# மாற்றுத்திறனுடையோர் : வாழ்வின் புனிதம்

## PERSONS WITH DISABILITY : SANCTITY OF LIFE

விப 4:10-17 2கொரி 12:1-10
திப 37 யோவா 5:1-9

**“எழுந்து உம்முடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து செல்லும்”.** (யோவா 5:8)

கடவுள் மானிடரை அவர் தம் உருவில் படைத்தார். ஆணும், பெண்ணுமாக அவர்களை படைத்தார். மாற்றுத் திறன் படைத்தோரும் மனிதர்களே, மானிட மகனின் மக்களே. சமூகமானது மாற்றுத்திறன் படைத்தோரை வேறுபட்ட பார்வைகளில் பார்க்கிறது. அவர்களை குறித்து கூறும்போது பற்றுறுதியைச் சோதிக்க பிறந்தவர்கள், கடவுள் கொடுத்த தண்டனை, சாபம், மூதாதையரின் பாவச் செயலால் பிறந்தவர்கள் என்றெல்லாம் பேசுகின்றது. இது கிறிஸ்தவ உலகிற்கு சவால் நிறைந்த ஒன்றாக உள்ளது. இறையியலாளர்கள் கூறும் போது இவர்கள் “disabled’ அல்ல, ‘but as differently abled’ or ‘otherwise abled’ என்று கூறுகின்றனர். இவை அனைத்தையும்விட ‘Persons with disability’ எனக் குறிப்பிடுவது நல்லது.

### *மாற்றுத்திறனாளி என்றால் யார்?*

நலத்திட்ட உதவிகள் புரிகின்ற London கல்வி, சமூக பணி குழு உடல் அளவில் தொடர்ந்து மாற்றுத்திறனாளியாக இருப்போர், சிந்தனை குறைபாடுயுடையோர், கல்வி, கற்க போதிய மூளைவளர்ச்சியில்லாதோர் என்று மாற்றுதிறன் படைத்தவர்களை 3 பிரிவாக வரையறுக்கிறது. உலக அளவில் 10 பேரில் ஒருவர் சரீர அளவிலோ, மனதளவிலோ மாற்றுத் திறனாளியாக உள்ளார் என்று கூறுகின்றது. 2001-ம் ஆண்டு முதல் இந்திய அரசு மாற்றுதிறன் படைத்தோரை பார்வை இழந்தோர் பேச முடியாதோர், மனதளவில் பாதிக்கப்பட்டோர், கேட்கும் திறன் இல்லாதோர், ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பயணிக்க இயலாதோர், இவர்களை மாற்றுதிறன் படைத்தோர் என்று பட்டியலிட்டுள்ளது.

இஸ்ரயேல் நாட்டில் முற்காலத்தில் பார்வையிழந்தோர், கால் நடக்க முடியாதோர் ஆலயத்திற்கு செல்லும் உரிமையில்லாதவர்களாக காணப்பட்டனர் (2சாமு 5:8b) இச்சூழலில் கடவுள் மாற்றுதிறன் படைத்தோரும் கடவுளின் மக்களே, அவர்களும் இறைப்பணியை செய்ய

முடியும் என்று திட்டமாக கூறுகின்றார். லேவி. 19:14 காது கேளாதோரைச் சபிக்காதே! பார்வையற்றோரை இடறச் செய்யாதே, உன் கடவுளுக்கு அஞ்சிநட, நான் ஆண்டவர் என்று ஆண்டவர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கற்று கொடுக்கிறார்.

### *1. புனிதமற்றோராகக் கருதப்படுவோரைப் புனிதராக மாற்றும் ஆண்டவர்* :

இறைச்சட்டம் கூறுகிறது தொழு நோயால் பாதிக்கப்பட்டவர் தீட்டுள்ளவன். அவர் பாளையத்திற்கு வெளியே இருக்க வேண்டும். (லேவி 13:45,46) லேவி 21:16-24. உடல் ஊனமுற்றோர் தன் கடவுளுக்கு உணவுப்படையலைச் செலுத்துதல் ஆகாது. உடல் ஊனமுற்றவன் எவனும் அருகில் வரவேண்டாம். பார்வையற்றவன், முடவன், குறைந்த அல்லது நீண்ட உறுப்பு உடையவன் கால், கை ஒடிந்தவன், கூனன், குள்ளன், கண்ணில் பூ விழுந்தவன், சொறி, சிரங்கு உடையவன், அண்ணகன் எவனும் வேண்டாம். உடல் ஊனமுற்றவன் ஆண்டவரின் நெருப்பு பலியை செலுத்த அருகில் வரக்கூடாது. கடவுளின் உணவு படையலை செலுத்தவரக்கூடாது. ஆனால் அவன் கடவுளின் தூய அப்பத்தை உண்ணலாம். தொங்குதிரை அருகில் போகக்கூடாது. பீடத்தை அணுக கூடாது. நான் அவர்களை தூய்மை ஆக்கும் ஆண்டவர். (லேவி 21:16) மேலும் எவ்வகையிலும், தீட்டுபட்டவர்கள் ஆண்டவரின் இல்லத்தில் நுழையாதபடி வாயில் காவலரை அவர் ஏற்படுத்தினார் (2குறிப் 23:19). இந்த இறைவார்த்தைகள் மாற்றுதிறன் படைத்தல் கடவுளின் தண்டனையோ என்று சிந்திக்க தூண்டுகிறது. இது கடவுளின் தண்டனை அல்ல. நாவன்மை, திக்குவாய், குழறும் நாவுடைய மோசேக்கு எரியும் முட்செடியில் காட்சியளித்து அவரை கடவுளின் மீட்பு பணிக்கு அழைக்கும் நிலையைப்பார்க்கும் போது மாற்றுதிறன் படைத்தவர்களை புனிதராக மாற்றி பயன்படுத்துகிறோம் என்பது புலப்படுகின்றது. (யோவா 5:1-9) வரை இயேசு கிறிஸ்து 38 ஆண்டுகள் மாற்று திறன் படைத்த மனிதரை குணப்படுத்தி புனிதமற்ற நிலையிலிருந்து புனித நிலைக்கு மாற்றுகிறார். நமது வாழ்விலும் இத்தகுசெயல் செய்திட நம்மை ஆண்டவருக்கு ஒப்பு கொடுப்போம்.

### *2. புனிதமற்றோராகப் கருதப்படுவோரைப் புனிதராக்கக் கற்றுக்கொடுக்கும் ஆண்டவர்* : விப 4:12,13

ஆண்டவர் மோசேயிடம் நீ இப்போதே போ! நானே உன் நாவில் இருப்பேன். அதற்கு மோசே ஆண்டவரிடம் வேண்டாம் ஆண்டவரே! தகுதியுடைய வேறொருவனை நீர் இப்போதே அனுப்பிவைப்பீராக!

என்றுரைத்தார். இதைக் கேட்ட ஆண்டவர் மோசேயிடம் சினம் கொள்கிறார். ஆனாலும் ஆண்டவர் மோசேயை விடவில்லை. லேவியனான ஆரோன் உனக்கு சகோதரன் அல்லவா? அவன் நா வன்மையுடையவன், நீ அவனிடம் பேசி இவ்வார்த்தைகளை அவன் வாயில் வைப்பாய், நான் உன் வாயிலும், அவன் வாயிலும் இருந்து நீங்கள் செய்ய வேண்டியதை உங்களுக்கு கற்று தருவேன் என்று கூறுகின்றார். ஆண்டவர் ஏசாயா இறைவாக்கினரை அழைக்கும் போது எசாயா 6:5-7 வசனங்களில் “ஐயோ நான் அழிந்தேன். தூய்மையற்ற மக்கள் நடுவில் வாழ்பவன் நான் என்றார். ஆனால் சேராபீன்களில் ஒருவன் நெருப்பு பொறி ஒன்றை குறட்டால் எடுத்து, எசாயாவின் வாயை தொட்டு, நெருப்பு பொறி உதடை தொட்டது, உன் குற்றபழி உன்னை விட்டு அகன்றது. உன் பாவம் மன்னிக்கப்பட்டது என்றார். பின்னர் யாரை அனுப்புவேன், யார் என் பணிக்காய் போவார் என்ற ஆண்டவரின் குரலைக் கேட்டு, “இதோ நானிருக்கிறேன் அடியேனை அனுப்பும் என்றார்” எசாயா 6:9 மக்களுக்கு கூற வேண்டியதை ஆண்டவர் கற்று கொடுக்கிறார். “நீ இந்த மக்களை அணுகி, நீங்கள் உங்கள் காதால் தொடர்ந்து கேட்டும் கருத்தில் கொள்ளாதீர்கள் உங்கள் கண்களால் பார்த்துக் கொண்டேயிருந்தும் உணராதிருங்கள்” என்று சொல் என்று எசாயாவிற்கு கற்று கொடுக்கிறார். ஆண்டவர் அவருடைய அறுவடை பணிக்கு யாரை எல்லாம் தெரிந்தெடுத்தாரோ அவர்களுக்கு கற்றும் கொடுக்கிறார். ஆக ஆண்டவர் மாற்றுதிறனாளி என்று புனிதமற்றோர் வரிசையில் ஒதுங்கி நிற்பவர்களை புனிதராக்க ஆண்டவர் இறைவார்த்தைகளைக் கற்றுக்கொடுக்கிறார். இதை உணர்ந்து ஆண்டவரிடமிருந்து இறைவார்த்தைகளைக் கற்று புனிதராக முயற்சிப்போம்.

### *3. அருஞ்செயல்களைச் செய்யும் ஆற்றலைக் கொடுக்கும் ஆண்டவர்* : விப 4:17

“இந்தக் கோலைக் கையில் எடுத்துச் செல்வாய். இதைக்கொண்டு நீ அருஞ்செயல்கள் ஆற்றுவாய்”. ஆண்டவர் மாற்றுதிறனாளி மோசேக்கு வல்ல செயல்களைச் செய்யும் ஆற்றலை வழங்கினார். ஒரு வேளை நாவிலிருந்து வார்த்தைகள் வெளிப்பட தாமதம் ஆகும் போது செயல்களை தீவிரப்படுத்தும் கோலாக மோசேக்கு கடவுள் கோலைக் கொடுக்கிறார். மோசே மீதியான் நாட்டில் தன் மாமனாரிடமிருந்து விடை பெற்று எகிப்திற்கு வரும் போது, தம் மனைவியையும் தன் பிள்ளைகளையும், ஒரு கழுதையின் மேல் ஏற்றிக்கொண்டு கடவுளின் கோலையும் தன் கையில் எடுத்து வந்தார் (விப 4:20). ஆரோன், மோசேயை

சந்திக்கிறார். மோசேயிடம் கடவுள் கூறிய எல்லா வார்த்தைகளையும் ஆரோன் மக்களுக்கு கூறினான். (விப 4:30). அருஞ்செயல்களையும் மக்கள் பார்க்கும் வண்ணம் செய்தார். மக்களும் நம்பினர். மோசேயும், ஆரோனும் மூன்று நாட்கள் இறைவழிபாடு செய்வதற்கு பாலை நிலத்திற்கு மக்களை அனுப்ப பார்வோனிடம் வேண்டினர். ஆனால் பார்வோன் வேலைச் செய்வதற்கு பொருட்களை கொடுக்காமல் இஸ்ரவேல் ஜனங்களை மிகவும் அதிகமாய் கொடுமைபடுத்தினான். அவர்களை விடவில்லை. ஆண்டவரிடம் மோசே மறுபடியும் முறையிடுகிறார். இஸ்ரவேல் மக்கள் எனக்கு செவி சாய்க்கவில்லை, பார்வோன் எப்படி செவிசாய்ப்பான். நானே (விப 6:12) பண்பட்ட உதடுகள் இல்லாதவன் என்று சொன்னார். தான் மாற்றுதிறனாளி, திறமையற்றவன் என்று கூறிய மோசேயிடம் ஆண்டவர் அருஞ்செயல் ஒன்றைகாட்டி உங்களை பார்வோனுக்கு மெய்ப்பியுங்கள் என்றார் (விடுதலைப்பயணம் 7:9). உன் கோலை எடுத்து பார்வோன் முன்னிலையில் விட்டெறி, அது பாம்பாக மாறும் என்று சொன்னார். மோசேயும், ஆரோனும் பார்வோனிடம் சென்று, ஆண்டவர் இட்ட கட்டளைக்கிணங்கச் செயல்பட்டனர். பத்தாவது அடையாளச் செயலை செய்தபின், பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை அனுப்பினான். ஆக மாற்றுத்திறன் படைத்தோருக்கும் அருஞ்செயல்களை செய்யும் ஆற்றலை படைப்பாளராம் கடவுள் கொடுக்கிறார்.

புதிய ஏற்பாட்டிலும் இயேசு கிறிஸ்துவின் காலம் வரை எந்த மாற்றுருவாக்கமும் மாற்றுத்திறன் படைத்தோருக்கு ஏற்படவில்லை. அருள்நாதர் இயேசு கிறிஸ்து உடல் அளவிலும், மனதளவிலும் மாற்றுதிறன் படைத்தோரை அணுகினார். சுகம் கொடுத்தார், ஆற்றுப்படுத்தினார். இயேசு நாதர் மாற்றுத் திறன் படைத்தோர் மீது கரிசனை, அன்பு, மனதுருக்கம் உடையவராயிருந்தார். இயேசு நாதர்,யூதர்களும், ரோமர்களும் மாற்றுதிறன் படைத்தோரிடம் வைத்திருந்த சுவரை உடைத்தெறிந்தார். சமூகத்தால் தூய்மையில்லாதவர்கள் என்று ஓரத்தில், ஓரங்கட்டபட்டவர்களாய் இருந்தவர்களை தொட்டார். பிரச்சினை அல்ல, இது ஒரு சமூக, சமய பிரச்சினை என்பதை அடையாளபடுத்தினார். இயேசு சூம்பின கையுடைய மனிதரை அவர் நின்றிருந்த ஓரமான இடத்திலே சென்று குணமாக்காமல் ஜெபக்கூட்டத்தின் மையத்திற்கு அழைத்து சுகம் கொடுத்தார். முடக்கு வாதத்தாலோ, தீய ஆவிகளாலோ, இரத்த காயங்களாலோ புறந்தள்ளப்பட்ட எந்த மனிதனும் ஓரங்கட்டப்பட கூடாது என்பதில் இயேசுகிறிஸ்து மிக கவனமாக இருந்தார்

(மாற் 2:1-12; 14:29; மத் 15:21-28) மாற்றுதிறனாளிகள் குறித்த இயேசுவின் மனதுருக்கம் இறைமக்களாகிய நமக்கு தேவை.

தூய புலவார் தானும் ஒரு மாற்று திறன் படைத்தோன் என்பதை சுட்டிக்காட்டுகிறார். 2கொரி 12:7-10 நான் இறுமாப்பு அடையாதவாறு பெருங்குறை ஒன்று என் உடலில் தைத்த முள் போல் என்னை வருத்திக் கொண்டே இருக்கிறது. அது என்னை குத்தி கொடுமைப்படுத்த சாத்தான் அனுப்பிய தூதனைப் போல் இருக்கிறது. அதை மூன்று முறை நீக்கிவிட மன்றாடினேன். ஆனால் ஆண்டவர் பவுலிடம் “என் அருள் உனக்குப் போதும், வலுவின்மையில் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும் என்றார். என் வலுவின்மையிலும் கிறிஸ்துவை முன்னிட்டு அக மகிழ்கிறேன் என்று தூய பவுலார் கூறுகின்றார். இன்று நம் குடும்பங்களில், சமூகத்தில், திருச்சபையில் எவ்வித பார்வையோடு பார்க்கிறோம்.” நம் குமரிப் பேராயம் மாற்றுத்திறன் படைத்தோருக்கு செய்யும் அருட்பணியை நாம் பாராட்ட வேண்டும். மாற்றுதிறன் படைத்தோரும் விடுதலையின் ஊடகங்கள், வாய்க்கால்கள் என்பதை உணரவேண்டும். அவர்களின் வாழ்வை ஒளியேற்றும் ஒளிசுடர்களாய் வாழ்வோம். இறையாசி என்றும் நம்மோடிருப்பதாக.

அருள்திருமதி. **சார்லெட் சௌந்தரராஜன்**

18-10-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும்**
**இருபதாம் ஞாயிறு &**
**இளையோர் ஞாயிறு**

## தற்கால உலகில் இளையோரின் ஆன்மிகம்

**SPIRITUALITY OF THE YOUTH IN THE CONTEMPORARY WORLD**

தொநூ 41 : 37-43 பிலி 3 : 1-16
திபா 111 மத் 19 : 16-22

**"பரிசு பெற வேண்டிய இலக்கை நோக்கித் தொடர்ந்து ஓடுகிறேன். கிறிஸ்து இயேசுவின் மூலம் கடவுள் எனக்கு மேலிருந்து விடுக்கும் அழைப்பே அப்பரிசாகும்".**

(பிலி 3:14)

ஜாண் டெம்பிள்டன் பவுண்டேஷன் (John Templeton Foundation) என்ற அமைப்பு ஆரோக்கியமான (Healthy Community) சமூகத்தை உருவாக்குவதற்கு இளைஞர்கள் தான் முக்கியமானவர்கள் எனக் கருதி ஆரோக்கியமான இளைஞர்கள் (Healthy Youth) என்ற ஒரு மாநாட்டை ஒருங்கிணைத்து. இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்ட விவாதங்களில் ஆரோக்கியமான இளைஞர்கள் சமுதாயத்தை பார்க்க வேண்டுமென்றால், இளைஞர்களின் ஆன்மிகம் எங்ஙனம் காணப்படுகிறது என்பதை வைத்து தெரிந்துகொள்ள வேண்டுமென்று சொல்லி ஒரு குழு அமைக்கப்பட்டது. சுமார் 2 வருடங்களாக உலகின் பல நாடுகளில் காணப்படுகின்ற 12 முதல் 25 வயது வரை உள்ள இளைஞர்களிடம் அவர்களுடைய வாழ்வின் முறைப்பற்றியும், அவர்களுடைய ஆன்மிக உறுதித்தன்மை ஈடுபாடு பற்றியும் விபரங்கள் சேகரிக்கப்பட்டது. இந்த விபரங்கள் சேர்ப்பதற்கு பெரிதும் உதவியாயிருந்த ஆன்மிக முன்னேற்ற இயக்கத்தின் (Centre for Spiritual Development) இணை இயக்குநர் யூஜின் C ரோயல் கெப்பாட்டின் (Eugene C. Roehlkepartain) இந்த ஆய்வின் அறிக்கையை சமர்ப்பித்தார். இவ்வறிக்கையில் 34% இளைஞர்கள் சமயம் சார்ந்த ஆன்மிகத்தில் வலுவுடையவர்களாகவு,ம் 23% சமயம் சாராத ஆன்மிகப் பற்று கொண்டவர்களாகவும் காணப்படுவதாக காட்டப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் இளைஞர்களிடம் ஆன்மிகம் குறித்து இவர்கள் கேட்ட கேள்விக்கு இளைஞர்கள் 41% ஆன்மிகம் என்பதை வாழ்க்கையை வாழ்வதற்கு ஒரு குறிக்கோள் இருப்பது ஆன்மிக சிந்தை என்றும், 33% இறைவன் மேல் நம்பிக்கை கொள்வதே ஆன்மிகம் எனப் பதிலளித்ததாகவும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் இந்திய இளைஞர்களிடம் ஆன்மிகம் குறித்து கேட்ட கேள்விக்கு 38% ஆன்மிகம் என்பது ஒருவருடைய உள்ளான மனசான்றிற்கு உண்மையாய் இருப்பதே ஆன்மிகம் என்றும், 33% இறைவனிடத்திலே நம்பிக்கை கொள்வதே ஆன்மிகம் என்றும் பதிலளித்துள்ளனர்.

இன்றைய இளைஞர்கள் அதிவேகமாக உலகில் பயணிக்கின்றனர். வெற்றி, தோல்வி, ஏமாற்றம், பதற்றம், முடிவு எடுப்பதில் குழப்பம், பாதையைத் தெரிந்தெடுப்பதிலே தடுமாற்றம் எனப் பயணிக்கின்றனர். விஞ்ஞான ஆதிக்கம், தொழில் நுட்ப முன்னேற்றம், தகவல் தெடர்பு சாதனங்களின் பயன்பாடு இவைகளின் பெருக்கம் இன்று இளைஞர்களை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் இழுத்திருக்கிறது. இந்த சவாலான பயணத்தில் இளைஞர்களின் ஆன்மிகம் மிகமுக்கியமானதாகவும். மறுஆய்வு செய்ய வேண்டியதாகவும் காணப்படுகிறது. இளைஞர்களின் ஆன்மீக உறுதுணைக்குரிய பல ஆலோசனைகளையும், சில முன் மாதிரிகளையும் காண முயலுவோம்.

### *1. உயர்வைக் காணச்செய்த யோசேப்பின் ஆன்மிகம் :*

(தொநூ 41:41,42)

யோசேப்பின் வாழ்வின் வழி ஆன்மிகம் என்றால் என்ன என்ற கேள்வியை எழுப்பினால், யோசேப்பு தான் நம்பும் இறைவனுக்கும், நம்பும் தான் பணிசெய்த பணியிடத்தின் பொறுப்பை தந்தவருக்கும் எதிராகத் தவறு செய்வது எப்படி என்று தனக்கு வந்த சுலபமான தருணங்களை ஏற்றுக்கொள்ளாது. தன்னைத் தவறு செய்ய ஒப்புக்கொடுகாதபடி ஓடியதும், அதினால் வந்த சவால்களை மேற்கொண்டதும் ஒரு தூய்மையான ஆன்மிகமாகக் காணப்படுகிறது. யோசேப்பினுடைய வாழ்க்கையில் தனிமைப்படுத்துதல், கொலை செய்ய முற்படுதல் அடிமையாய் விற்றுபோடுதல், வாழ்தல், அடிமையாய் காவலிலே வைக்கப்படுதல், பொய்க் குற்றச்சாட்டுகளை ஏற்று தண்டனை அனுபவித்தல் போன்ற கடினப்பாடுகள் பல காணப்பட்டன. ஆனாலும் அவருடைய ஆன்மிக உறுதிதன்மை எந்த வித்திலும் அசைக்கபடவில்லை; பின்மாறின அனுபவம் இல்லை. அவருடைய ஆன்மிக தீர்மானத்தில் உறுதியாய் இருந்தார். இந்த யோசேப்பினுடைய ஆன்மிகம் அடிமையாய்க் கொண்டு போகப்பட்ட நாட்டில் அதிகாரி என்னும் நிலைக்கு உயர்த்தப்படும் அனுபவத்தைத் தந்தது.

### *2. கிறிஸ்துவின் சிந்தையை ஏற்றுக்கொள்ளும் ஆன்மிகம்:*

(மத் 19:21)

ஒருமுறை ஒருவர் இயேசுவிடம் வந்து நிலை வாழ்வை அடைய வேண்டுமென்று விரும்பி, அதற்காக என்ன செய்ய வேண்டுமென்று வழியைக் கேட்டார். கற்பனைகளை ஏற்று அதின்படி நடப்பது. முக்கியமானது என்று சொன்னபோது தான் அதை வலுவாக கடைபிடிப்பவன் என்ற வைராக்கியமான பதிலை இயேசுவிடம் கூறினார்.

ஆனால், இயேசுவோ அவரிடத்தில் இன்றும் குறையிருக்கிறது என்று கூறியபோது, அந்தக் குறையே நிவிர்த்தி செய்வதற்கு அவர் ஆயத்தபடவில்லை அந்த இளைஞனிடம் இயேசுவானவர் பேசும்போது நிலைவாழ்வை அடைவதற்கு அவனிடத்திலிருந்த குறைவு வறியநிலையில் காணப்படுகிறவர்களுக்கு தன்னிடத்தில் உள்ளவைகளைப் பகிர மனமற்ற நிலை என்பதை தெளிவாக சுட்டிகாட்டி அதை உடனடியாக நிறைவேற்றக் கூறினார். ஆனால் அவனுக்கோ நிலைவாழ்வை விட அவனிடத்தில் இருந்த ஆஸ்திகள் உயர்ந்தவைகளாக காணப்பட்டன. இயேசுவின் முன் மாதிரி விவிலியக் கண்ணோட்டத்தில் உற்று நோக்கினால் தன்னை இயேசுவானவர் வறியவர்களிடத்திலும் கைவிடப்பட்டவர்களிடத்திலும், புறக்கணிக்கப்பட்டவர்களித்திலும் அடையாளப்படுத்தி, தன்னைப் போல வாழ அழைக்கிறார். ஆகவே கிறிஸ்துவில் காணப்பட்ட சிந்தையை ஏற்றுகொள்வது முக்கியமானதாக காணப்படுகிறது.

### *3. தனக்காக அல்ல கிறிஸ்துவுக்காக வாழும் ஆன்மிகம்:*

(பிலி 3:7)

திருத்தூதராகிய பவுல் தன்னுடைய வாழ்வை ஒப்பிட்டு பிலிப்பி சபையாருக்கு ஆலோசனையாக கூறும்போது ஊனியல்பின்படி வாழவேண்டுமென்றால் அதன் மேல் நம்பிக்கை கொண்டு பலவற்றைச் செய்யமுடியும். அதினால் சில மகிழ்ச்சிகளும் லாபங்களும் கிடைக்கலாம். ஆனால், இவைகளையெல்லாம் கிறிஸ்துவுக்காக நஷ்டம் என்று எண்ணும்போது கிறிஸ்து இயேசுவுக்குள் இறைவன் அழைத்த பரிசுக்காக இலக்கை நோக்கி ஓடமுடியும். இன்று ஊனியல்பின் படி நடப்பதற்கு பல வாய்ப்புகள் காணப்படுகிறது. ஊனியல்பின்படி வாழ இடங்கொடுத்தால் ஆன்மிகம் இல்லா அவல நிலைக்கு மனிதன் சென்று, இறைவன் தந்துள்ள இறைசாயலை இழந்துவிடுவான் நம்முடைய வாழ்விலே நம்மைப் பின்னுக்கு தள்ளுகிற பின்னானவைகளை மறந்து, கிறிஸ்துவில் வாழும் முன்னானவைகளை நாடி நமக்கு தரப்பட்டிருக்கிற இறைசாயலை உலக வாழ்வில் பாதுகாத்து முடிவில்லா வாழ்வில் அவரோடு வாழும் வாய்ப்பை பெற்றுக் கொள்ள நம்மை அர்ப்பணிப்போம்.

அருள்திரு. R. **டட்ஸ் ஞான றாபி**

25-10-2020

**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும்
இருபத்தொன்றாம் ஞாயிறு &
சீர்திருத்த ஞாயிறு**

# பற்றுறுதியைத் திரும்பக் கண்டுபிடித்தலும் மீள்வாழ்தலும்

**REDISCOVERING AND RELIVING THE FAITH**

2 குறி 34:8-21 | திவெ 2:1-7
திபா 46 | யோவா 2:12-22

**“ஆனால் உன்னிடம் நான் காணும் குறை யாதெனில் முதலில் உன்னிடம் விளங்கிய அன்பு இப்போது இல்லை”.** (திவெ 2:4)

கடவுள் தாம் படைத்த மக்களினத்தை கைவிடுகிறவரல்ல என்பதும் அவர்களது வாழ்வில் மிக கவனமாயிருக்கிறார் என்பதும் திருமறை நமக்கு கற்றுத்தரும் பாடங்கள். இந்த மக்களினம் தன்னிடம் அதிக பற்றுறுதி, இணைந்த வாழ்வு இணைந்து போற்றுவது, மன்றாடுவது தூய்மையான வாழ்வு போன்றவற்றை வெளிப்படுத்த கடவுள் விரும்புகிறார். ஆனால் மனிதன் ஆண்டவரின் வார்த்தைக்கும் ஆலயத்திற்கும் ஆன்மிக வாழ்வுக்கும் எதிராக தன் வாழ்வை அமைக்கும் போது தனிமனித வாழ்வும், தான் சார்ந்த சமூகமும் வீழ்ச்சியடைகின்றன. இவைகளின்று மீண்டெழுவதற்கு பற்றுறுதி மிக அவசியம். வீழ்ச்சிக்கு காரணம் என்ன? எங்கே தவறு இருக்கிறது? என்பதை கண்டறிந்து மீண்டெழுளுவதையும் அதில் நிலைத்திருப்பதையும் கடவுள் விரும்புகின்றார்.

### *1. ஆண்டவரின் வார்த்தை :* (2 குறி 34:8-21)

ஆண்டவரின் வார்த்தை என்பது எழுத்துக்களின் தொகுப்பல்ல அது வல்லமையின் திரள். ஆண்டவரின் வார்த்தை ஆவியின் வெளிப்பாடு. அவைகள் மாறாதவைகள், மட்டுமல்ல அவை ஆசிகளாகவும், எச்சரிப்புகளாகவும் வழிகாட்டுதல்களாகவும், வாக்குத்தத்தங்களாகவும் அமைகின்றன.

மோசேயின் வழி கொடுக்கப்பட்ட சட்டம் ஆண்டவரின் வார்த்தைகள். இஸ்ரவேல் மக்களை நெறிப்படுத்த கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம். இது இஸ்ரவேல் மக்களால் காலகாலமாக கடைபிடிக்கப்பட்டது. அரசர் யோசியாவிற்கு முன் நியாயப்பிரமாணம் மீறப்பட்டது. ஆண்டவரின் வழியை விட்டு மக்கள் மாற்று வழிகளில் சென்றனர். யோசியா அரசரானபோது தன் நாட்டில் கண்ட அநீதிகள், சமய சீர்கேடுகளை தூய்மைப்படுத்த முற்பட்டார். எருசலேம் ஆலயம்

மக்களால் பயன்படுத்தப்படாமல் அழியும் நிலைக்குட்பட்டது. பிற கடவுள் வணக்கங்களே தொடர்ந்தது. யோசியாவின் ஆணைப்படி ஆலயம் சுத்தம் செய்யப்பட்ட போது திருச்சட்டம் (தோரா) கண்டெடுக்கப்பட்டது. அதை வாசித்த போது அரசர் இதயத்தில் குத்தப்பட்டவராக அனைவருக்கும் புது வழிகாட்டினார் (2குறி 34:19-21). திருச்சட்டத்தை மதித்து வாழ ஆணையிட்டார். தன் மக்கள் சாபக்கேட்டினின்று தப்பித்துக் கொள்ள வழி காட்டினார்.

ஆலயத்தை மெருகூட்டிய அரசர் யோசியா பஸ்காவை ஆசரித்து ஆலயத்தில் தொழுகை நடத்தினார் (2 குறிப் 35:16). மறைக்கப்பட்ட திருச்சட்டம் திரும்ப கண்டுபிடிக்கப்பட்டு ஆண்டவரின் வார்த்தைப்படியே மக்களை நல் வாழ்வுக்கு அழைத்துச் சென்றது மாபெரும் புரட்சியாகும். ஆண்டவரின் வார்த்தையின் ஆற்றல் பொய்த்துப் போகவில்லை, அவைகள் உயிருள்ள வார்த்தைகள். ஆண்டவரின் வார்த்தை (திருமறை) நம் கையிலிருக்கிறது. அது மறைக்கப்படவில்லை. ஆனால் அதனை மறந்து வாழ்கின்றோம். ஆண்டவரின் வார்த்தையின் மகத்துவத்தை திருப்பாடல் ஆசிரியர் வழிகாட்டும் வார்த்தைகளாகவும் வல்லமை தரும் வார்த்தைகளாகவும் தெளிவுபடுத்துகிறார் (திபா 119:105,19:7). யோசியா அரசர் காலத்தில் ஆண்டவரின் வார்த்தை சமூக சமய மாற்றத்தை ஏற்படுத்தியது. இன்றும் அதை கடைபிடித்தால் மாற்றங்கள் நிகழ்வது உண்மையே.

### ***2. ஆண்டவரின் ஆலயம் :*** (யோவான் 2:12-24)

இயேசுநாதர் பஸ்கா திருவிழா கொண்டாட எருசலேம் வந்தார் (யோவான் 2:13). பஸ்கா திருவிழா இஸ்ரவேல் மக்களுக்கு மிக முக்கியமானதும் புதிய விடுதலை அனுபவமாகவும், தங்களது முன்னோரின் வாழ்வு முறைகளை, இறைவனின் பேராற்றலை நினைவு கூருவதாகவும் அமைந்தது. இதற்கு ஆலயம் முக்கியப்படுத்தப்பட்டது. ஆலயம் ஆண்டவர் வாழும் இல்லம். இது திருமறை நமக்கு கற்றுதரும் உண்மை. ஆலயத்தில் அநீதி செய்வதை ஆண்டவர் ஒருபோதும் அனுமதிப்பதில்லை.

கானாவூர் திருமண இல்லத்தில் தனது அற்புதத்தை நிகழ்த்திய இயேசுநாதர் (யோவா 2:1-12), பஸ்காவை ஆசரிப்பதற்காக எருசலேம் வந்தார் (யோவா 2:13). ஆலயத்தில் அதிக பக்தி வைராக்கியம் கொண்ட இயேசுநாதர் அங்கு நடந்த அநீதிகளைக் கண்டு அதிர்ச்சியுற்றார். அநீதிகளை அகற்றிட சீர்திருத்தப் பணியை ஆலயத்தில் தொடங்கினார். அநீதி செய்தவர்களை அகற்றி கடிந்துரைத்தார். ஆண்டவரின்

ஆலயத்திற்கு தெளிவான விளக்கம் அளித்தார் (யோவா 2:16). அநீதிகள் புரட்சியை தூண்டுகின்றன. அநீதிக்கு எதிரான புரட்சி எப்போதும் வெற்றி பெறும். இயேசுநாதரின் சீர்திருத்தம் சிலுவை மரணத்தை கொடுத்தது. அதன் முடிவு உயிர்த்தெழுதல். உயிர்த்தெழுதல் சீர்திருத்தத்திற்கு அடித்தளமாக அமைகின்றது.

ஆண்டவரின் ஆலயம் அனைவருக்குமுரியது. ஆண்டவரின் ஆலயத்தில் இருப்பதை திருப்பாடல் ஆசிரியர் மேன்மையாக கருதுகிறார். ஆண்டவரின் ஆலயம் அனைவருக்குமுரியது. அது சுயநலத்திற்காகவும், பதவி சுகத்திற்காகவும் பயன்படுத்தப்படும் போது அதைச் சுட்டிக் காட்டுவதும் அதனைக் களைவதற்கு போராடுவதும் பற்றுறுதியின் அடிப்படையில் வருவதாகும். அவ்வாறு செய்வது நமது கடமையாகும். பற்றுறுதியினால் மட்டுமே இவைகளைச் செய்ய முடியும்.

நாம் வாழும் இன்றைய உலகில் நமது திருச்சபைகளின் நிலைகளைச் சீர்தூக்கிப் பார்ப்பதும், சீர்திருத்தம் செய்வதும் மிக அவசியமாயிருக்கிறது.

### *3. ஆன்மிக வாழ்வு :* (திவெ 2:4)

ஆன்மிக வாழ்வு என்பது பற்றுறுதியின் வெளிப்பாடாக அமைகின்றது. ஆன்மிக வாழ்வு நாளுக்கு நாள் மெருகூட்டப்பட வேண்டும் அல்லது வளர்ச்சி அடைய வேண்டும். எபேசு திருச்சபையை ஆண்டவர் புகழ்ந்தார். ஏனெனில் அத்திருச்சபையினர் கட்டுக்கோப்புடன் வாழ்ந்தனர். பக்தி நெருக்கடிகளில் பொறுமையோடிருந்தனர். பொல்லாதவர்களை சகிக்காமை, போலி இறைவாக்கினர்களை வெறுத்தல், பொய்யர்களைக் கண்டறிதல் பொய் போதனைகளைக் கண்டறிதல் போன்ற நற்செயல்களைச் செய்தனர். அதே நேரத்தில் கிறிஸ்துவில் கொண்டிருந்த பக்தி வைராக்கியத்தில் குறைபடுகின்ற நிலையையும் எச்சரிக்கின்றார். இத்திருச்சபையார் அறிவுக்கொள்கையாளர்களை (குணோஸ்தையர்கள்) பின்பற்றத் தொடங்கினர். ஆடம்பர விழாக்களில் பங்கு பெறுதல், அரசரைத் தொழுதல், வசதி படைத்த செல்வந்தர்களின் சுகபோக வாழ்வு, உயர்தர மக்களின் உறவுகளில் வீழ்தல் போன்ற செயல்பாடுகள் இவர்களில் இருந்தபடியினால் எச்சரிக்கப்பட்டனர். மனந்திரும்பும்படியாய் அழைக்கப்படுகின்றனர். ஆன்மிக வாழ்வுக்கெதிரான தீயோனுக்கெதிராக பக்தி வைராக்கியத்தோடு போராட எனவே நாம் இத்தகைய அனுபவத்தோடு முன்னேறிச் செல்ல முயற்சிப்போம் அழைக்கின்றார். அதற்கு ஆண்டவரின் கிருபை மட்டும் போதும்.

பற்றுறுதி வாழ்வு என்பது முடிந்துவிட்ட ஒன்றல்ல அது ஒரு தொடர் நிகழ்வு எனவே பற்றுறுதியை கண்டு பிடித்து மீண்டு வாழும் நாம் மறைக்கப்பட்ட உண்மைகளை வெளியே கொண்டு வந்து ஆண்டவரின் வார்த்தையிலும் அவரது ஆலயத்திலும் அனைவரது ஆன்மிக வாழ்விலும் உறுதியாய் இருந்து, உண்மை மறைக்கப் படும் போதும் ஆண்டவரின் ஆலயம் களங்கபடும்போதும், ஆண்டவரின் பிள்ளைகளின் ஆன்மிக வாழ்வு தடுமாறும்போது, ஆண்டவரின் பெலத்தோடு போராடுவதும், தவறு எங்கே என்பதை கண்டுபிடித்தலும், மீண்டும் ஆண்டவரின் பாதையில் வாழ்வதும் சிறப்பானதாகும் எனவே இத்தகைய தன்மையுடன் வாழ்ந்து ஆசியைப் பெற்று வாழ்வோம். இதனையே ஆண்டவர் நம்மில் எதிர்பார்க்கின்றார்.

அருள்திரு. S. **பெல்சன் கிராமணி**

01-11-2020

புதிய மாத நன்றித் தொழுகை

# அடையாளங்களாக்கும் ஆண்டவர்

திருமறைப்பாடம் : எசா 8:13-18

**"படைகளின் ஆண்டவர், சீயோன் மலையில் குடி கொண்டிருக்கிறார்; நானும் அவர் எனக்களித்த குழந்தைகளும் இஸ்ரயேலில் அவருக்கு அடையாளங்களாகவும் அறிகுறிகளாகவும் இருக்கின்றோம்".**

ஒரு மனிதரை, அல்லது ஒரு இடத்தை அறிந்து கொள்ள அடையாளங்கள் கொடுக்கப்படுகின்றன. பிறக்கும் குழந்தைக்கு அரசு ஒரு அடையாளத்தை கைகளில் பதிக்கின்றது. அது அவர்களை ஒரு நாட்டின் குடிமகன் என்பதை அடையாளம் காட்டுகின்றது. அதுபோல காப்பீடு செய்யப்படுகின்ற மிருகங்கள் கூட அடையாளப்படுத்தப்படுகின்றன.

தென் நாடாகிய யூதா வலிமைமிக்க அண்டை நாடான அசீரியாவின் அச்சுறுத்தலில் இருந்த காலம் அது. அப்போது யூதாவின் அழிவுக்கு காரணமாக இருந்த ஒன்று அவர்கள் கடவுள் மீதுவைத்திருந்த நம்பிக்கையை இழந்து போனதே காரணம், மட்டுமல்ல அவர்கள் இறைவனுக்கு விரோதமாக செய்த பாவங்கள் தான் என்பதை உணர்ந்த ஏசாயா அவர்களை நீதியோடும், நேர்மையோடு வரும்படியாக அழைக்கிறார். நீங்கள் கடவுளின் வார்த்தைக்கு செவிகொடாமல் போனால் இருளும், அழிவுமே உங்களுக்கு காத்திருக்கிறது என்று எச்சரிக்கிறார். இவைகளிலிருந்து ஒரு மாற்றம் பெற கடவுள் தருகின்ற அடையாளம் என்ன?

## *1. இறைவன் நம்மில் குடிகொண்டுள்ளார்* (எசா 8:18a)

படைகளின் ஆண்டவர் சீயோன் மலையில் குடிகொண்டிருக்கிறார்.

கடவுள் தம் மக்களினங்களை நேசிக்கின்றவர் என்பதை நாம் நன்கு உணர்வோம். அவர் எந்த நிலையிலும் நம்மில் குடிகொண்டிருக்கிறார். இறைவாக்கினர் மூலம் மக்கள் எச்சரிக்கப்பட்டும், அவர்கள் கடவுளின் அன்பை பெற்றுக் கொள்வதில் அவருக்கு ஒரு அடையாளமாக மாறுவதில் உறுதி இழந்த மக்களாய் இருந்தார்கள்.

இந்த நிலையில் நான் சீயோன் மலையில் குடிகொண்டிருக்கிறேன் என்று கூறி நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார். இவர்களுடைய மாயவித்தையான அனுபவங்களையும், குறி கேட்கிற அனுபவங்களையும்,

கடினமான எச்சரிப்பையும் அவர்கள் கேட்கின்றார்கள். இப்படியே நீங்கள் செய்தால் காரிருள் உங்களை மூடும் என்றும் எச்சரிக்கிறார். ஆனாலும் துயருற்றிருந்த நாட்டினருக்கு மனச்சோர்வு தோன்றாதிருக்க அவர் சொன்ன வார்த்தை நம்மில் அவர் குடி கொண்டிருக்கிறார் என்பதாகும். படைகளின் ஆண்டவர் நம்மில் குடிகொள்ளும் போது நிறைவான மேலான நன்மைகளை நாம் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். அந்த நம்பிக்கையில் நாம் முன்னேறிச் செல்வோம்.

***2. நம்மை அடையாளப்படுத்துகிறார்*** (எசா 8:18b).

" இஸ்ரயேலில் அவருக்கு அடையாளங்களாகவும்..........."

நாம் அவருடைய பிள்ளைகள் அவர் நம்மை நேசிக்கிறார். எனவே ஆண்டவர் நம்மை அவருக்கு ஒரு அடையளமாகவே பார்க்கிறார். எசா 7:14-ல் ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருளுவார். இந்த அடையாளம் கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண், ஓர் ஆண்மகவை பெற்றெடுப்பார் என்பது. இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பே அடையாளப்படுத்தப்பட்ட ஒன்றாக அமைகிறது.

எசாயா 11:6-8-ல் நாம் படிக்கும் போது இறைவன் இங்கு ஒரு அடையாளத்தை இறைவாக்கினர் வழியாக காட்டுகின்றார். பசுவும், கரடியும் ஒன்றாய் மேயும், சேர்ந்து படுத்துக் கொள்ளும், சிங்கம் மாட்டைப் போல் வைக்கோல் தின்னும், பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பின் வளையில் விளையாடும், பால்மறந்த பிள்ளை கட்டுவிரியன் வளையினுள் தன் கையை விடும். இவைகளால் ஒரு அடையாளம் காணமுடியும். எசாயா 42:3-ல் நீதியை நிலை நாட்டுமாறு உம்மை அழைத்தேன். உம் கையைப் பற்றிப் பிடித்து உம்மை பாதுகாப்பேன். மக்களுக்கு உடன்படிக்கையாகவும் பிற இனத்தார்க்கு வழியாகவும் நீர் இருக்குமாறு செய்வேன் என்ற ஒரு அடையாளத்தையும் தருகின்றார்.

இறைவன் நமக்கு தந்த புதிய மாதத்திலே நாம் நம்மை அவர் கையில் ஒப்படைத்து, அவர் நம்மில் குடி கொண்டிருக்கிறார், அடையாளப்படுத்துகிறார் என்ற நம்பிக்கையோடு நம்மை அவர் நமது பயணத்தைத் தொடர்வோம். இறைஆசிகளை நாம் நமக்கு சொந்தமாக்கிக் கொள்வோம்.

சுவி. E. **ஸ்டீபன்**

01-11-2020 உலக ஞாயிறுப்பள்ளி நாள்

# பற்றுறுதியில் பேணி வளர்த்தல்

**NURTURING IN FAITH**

நீமொ 23:15-26 எபே. 6:10-18
திபா 127 மத் 18:1-6

**"எந்நிலையிலும் நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள்".**
(எபே 6:16)

இன்று உலக ஞாயிறுபள்ளி நாள். அன்று இங்கிலாந்தை சார்ந்த இராபர்ட் ரெய்க்ஸ் என்பவர் சிறார்கள் நாட்டிற்கும், வீட்டிற்கும் பயனற்றவர்களாக, பற்றுறுதி வாழ்வு சிறிதும் இல்லாதவர்களாக இருந்தச் சூழலை எண்ணி வேதனையுற்று சிறார்கள் எந்நிலையிலும் இறைவன் மீது நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தை தன்னகத்தேக் கொண்டவராக தூரக்காட்சியோடு கி.பி. 1780-ம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ம் நாள் ஞாயிறுப்பள்ளித் தொடங்கினார். அந்த நாளைக் கொண்டாடும் நாம் சிறார்களை இறைப்பற்றுறுதியில் பேணி வளர்ப்பது சால சிறந்தது. அப்படி பற்றுறுதியில் பேணி வளர்க்கும் போது இன்றைய சிறார்கள் நாளை தலைவர்களாக சிறப்புடன் திகழ்வார்கள். இன்றைய திருமறைப்பகுதியின் வழியாக சிறார்கள் பற்றுறுதியில் வளர எவற்றால் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பதை தியானிப்போம்.

## *1. சான்றுடன் வாழப் பயிற்றுவிக்க வேண்டும்* :

(நீமொ 23:15-26)

சிறார்களை சான்றுடன் வாழ பயிற்றுவிக்க வேண்டும். இன்று சமூகத்தை விட்டு ஒதுங்கி வாழும் காலக்கட்டத்தில் சமூகத்தில் சான்றாக இணைந்து வாழ்வது சிறப்பானது ஆகும். இதைத்தான் நீதிமொழிகளின் ஆக்கியோன் அழகாக குறிப்பிடுகின்றார். "வளமுடன் இருக்கும் பாவிகளைப் போல நீயும் இருக்க வேண்டுமென்ற ஏங்காதே; ஆண்டவரிடம் எப்போதும் அச்சம் உள்ளவனாயிரு" (நீமொ 23:17). சமூகத்தில் வளமுடன், இருக்கிறவர்களைப் போல வளமுடன் வாழ வேண்டும் என்ற எண்ணத்தைவிட ஆண்டவரிடம் அச்சம் கொண்டு வாழ பயிற்றுவிக்க வேண்டும். ஏனெனில் ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கமாயிருக்கிறது (திபா 111:10).

ஆசாரியராகிய ஏலி இஸ்ரயேல் மக்களை சிறப்புடன் நியாயம் விசாரித்து வந்தார். அவருடைய புதல்வர்கள் ஓப்னி, பினகாஸ் மிகவும் கீழ்த்தரமானவர்களாக இருந்தார்கள். ஆண்டவர் மீது அச்சம் கொள்ளவில்லை. சான்றாளர்களாக வாழ பயிற்றுவிக்கப்படவுமில்லை. இதனால் சமூகத்தில் நற்பெயருக்கும் களங்கத்தை ஏற்படுத்தினர். தந்தை ஏலியின் பெயருக்கும் இழுக்கை ஏற்படுத்தினார்கள் (1சாமு 2). இதனால் அழிவைப் பெற்றுக் கொண்டார்கள் (1சாமு 3). சான்றாளராக வளர பயிற்றுவிக்கப்பட்ட சாமுவேல் நல்ல தலைவராக மாறினார்.

சமூகத்தில் தீமைகள் மலிந்து காணப்படுகின்றன. இந்த தீமைகள் நிறைந்த சமூகத்தில் சான்றாளர்களாக வாழ பயிற்றுவிக்கப்படுகின்ற சிறார்கள் சமூகத்தில் நற்பெயருடன் வாழ்ந்து உயர்வைப் பெற்றுக்கொள்கின்றார்கள். பற்றுறுதியில் பேணி வளரும் பிள்ளைகளாக காட்சி தருகின்றார்கள். எனவே, நமது சிறார்களை இத்தகு பண்புடன் வளர பயிற்றுவிப்போம்.

## *2. தீயவனை எதிர்த்திடப் பயிற்றுவிக்க வேண்டும்* :

(எபே 6:10-18)

சமூகத்தில் சான்றாளராக, பண்பாளர்களாக வாழப் பயிற்றுவிக்கப்பட்ட சிறார்கள் இறைவனின் ஆற்றலால் சாத்தானை அதாவது தீயவனை எதிர்த்திட பயிற்றுவிக்க வேண்டும். அதற்கு கடவுள் அருளும் படைக்கலன்களாகிய உண்மையாகிய இடைக்கச்சை, நீதியாகிய மார்புக்கவசம் இவைகளை அணிந்துகொள்ள வேண்டும். எச்சூழலிலும் நம்பிக்கை என்ற கேடயத்தைப் பிடித்துக்கொள்ள வேண்டும் (எபே 6:13-16) என்று எபேசியர் திருமுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமது திருப்பணியைத் தொடங்கும் முன் நாற்பது நாள் இரவும் பகலும் நோன்பிருந்தார். பசி மயக்கத்தில் இருந்த அவரிடம் தீயவன் நெருங்கி அவரைச் சோதிக்க ஆரம்பித்தான். அனைத்து சோதனைகளையும் இயேசுகிறிஸ்து இறை வார்த்தைககளைக் கொண்டே மேற்கொள்கின்றார் (மத் 4:4; இச 8:3; மத் 4:7; இச 6:16; மத் 4:10; இச 6:13). தீயவன் அவரை விட்டு அகன்று போனான். தீயவனை எதிர்த்த நின்று சமுதாயத்தில் உயர்ந்திட வேண்டுமென்றால் இறை வார்த்தையை நன்கு கற்றிடல் வேண்டும். எனவேதான் தூய பேதுரு தனது முதல் மடலில் "புதிதாய் பிறந்த குழந்தைகள் போல வஞ்சகமற்ற வார்த்தையாகிய பாலை அருந்த ஆர்வமுள்ளவர்களாயிருங்கள்" (1பேது 2:2) என்கிறார். எனவே சிறார்கள் இறைவார்த்தையாகிய பாலை அனுதினமும் அருந்திட திருமறை வசனங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும். அது தீயோனை எதிர்த்து நிற்கும் பயிற்சியைத் தரும்.

இறைவன் நம்மிடம் கொடுத்துள்ள சிறார்கள் தீயசக்தியை எதிர்க்கும் ஆற்றலைப் பெற்றவர்களாக வாழும் போது பற்றுறுதியில் வளர்ந்தவர்களாக மாறுகிறார்கள் என்பதை உணர்ந்து பயிற்றுவிக்கப்பட உதவிடுவோம்.

### *3. விண்ணரசின் பங்காளிகளாகப் பயிற்றுவிக்க வேண்டும்* : (மத் 18:1-6)

சிறார்களை இறையரசுக்கு நேராக நடத்திட வேண்டும். இயேசுகிறிஸ்துவின் சீடர்கள் இயேசு கிறிஸ்துவிடம், "விண்ணரசில் மிகப்பெரியவர் யார்"? என்ற கேள்வியைக் கேட்டார்கள். அதற்கு இயேசு கிறிஸ்து சிறு பிள்ளையைப் போல மாறுங்கள். அப்பொழுது விண்ணரசைப் பெற்றுக் கொள்வீர்கள் என்றார். ஏன் சிறுப்பிள்ளையை அடையாளப்படுத்தினார்? சிறுபிள்ளைகள் தாழ்மை உடையவர்கள், கள்ளம் கபடமற்ற வெள்ளை மனது படைத்தவர்கள். உதவிச் செய்யும் மனம் படைத்தவர்கள். இத்தகையப் பண்பே விண்ணரசின் பங்காளிகளாக நம்மை மாற்றுகின்றது. தாழ்மை அனைவராலும் ஏற்றுக்கொள்ளும் பண்பு ஆகும். தாழ்மை இல்லையேல் விண்ணரசின் பங்காளர்கள் அல்ல. "தாழ்ந்த இடத்தில் தான் தண்ணீர் நிற்கும்" என்பது பழமொழி. "மனத்தாழ்மையோடு மற்றவர்களை உங்களிலும் உயர்ந்தவராகக் கருதுங்கள்" (பிலி 2:3) என்று தூய பவுலார் பிலிப்பியருக்கு ஆலோசனைத் தருகிறார். ஆண்டவர் தாழ்நிலையில் உள்ளவர்களுக்கு கருணைக் காணைக் காட்டுவார் என இறை அடியார்களாகிய யாக்கோபும், பேதுருவும் குறிப்பிடுகின்றனர் (யாக் 4:6, 1பேது 5:5).

நேபுகாத் நேச்சார் தன்னை தாழ்த்த மறந்தார். எனவே, பல்வேறு இன்னல்களை அடைந்தார் (தானி 4:29-17). இயேசு கிறிஸ்து தாழ்மையை வெளிக்காட்டி சீடர்களின் கால்களைக் கழுவினார் (யோவா 13). முன்மாதிரி காட்டினார். ஆண்டவர் முன் தாழ்த்தும்போது ஆண்டவர் உயர்த்துவார் (யாக் 4:10). எனவே, விண்ணரசின் பங்காளிகளாக மாறிட பயிற்றுவிக்க வேண்டுமெனில் தாழ்மையை கற்று கொடுக்க வேண்டும். அப்போது சிறார்கள் பற்றுறுதியில் வளர்ந்து சிறந்த தலைவர்களாக மாறுவார்கள். எனவே, நம் சிறார்கள் இணைந்து கற்று பற்றுறுதியில் வளரச் செய்வோம். நல்ல தலைவர்களை உருவாக்குவோம்.

அருள்திரு. A. **பிரைட் சாலோமன்**

08-11-2020 **ஒன்றிப்பு ஞாயிறு**

# மண்பாண்டங்களில் செல்வம்

**TREASURES IN CLAY JARS**

| | |
|---|---|
| மீக் 6:1-8 | 2கொரி 4:7-15 |
| திபா 106:1-12 | மாற் 4:26-29 |

**"இந்தச் செல்வத்தை மண்பாண்டங்கள் போன்ற நாங்கள் கொண்டிருக்கிறோம்".**
(2கொரி 4:7)

இந்தியத் திருச்சபை வரலாற்றில், வட இந்தியத் திருச்சபை (CNI), தென்னிந்திய திருச்சபை (C.S.I.), மார்த்தோமா (MTC), சபைப் பிரிவுகள் இணைந்து 1978-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 4-ம் நாள் ஒரு கூட்டு மன்றத்தை (Joint Council), உருவாக்கினர். அம்மன்றத்துக்கு 1985-ம் ஆண்டு மேய் மாதம் "The Council of Churches in Communion CNI, CSI, MTC" என பெயர் மாற்றம் செய்து. Communion of Churches in India (CCI) என பெயர் மாற்றம் செய்தனர். "திருச்சபைகளாக ஒன்றிணைந்து ஒற்றுமையை ஏற்படுத்துவதும், சான்று பகர்வதும் சேவைச் செய்வதும்" இம்மன்றத்தின் நோக்கமாகும் (to work together collectively towards unity, witness and service). சபைகளின் இக்கூட்டுறவைக் கொண்டாட நவம்பர் திங்கள் இரண்டாம் ஞாயிறை ஒன்றிப்பு ஞாயிறாக ஆசரிக்கின்றோம்.

கிறிஸ்தவ வாழ்வின் சிறப்பு ஒன்றிப்புடன் வாழ்வதாகும். படைப்பில் கடவுள் - மனிதர் - இயற்கை அனைத்தும் ஒன்றித்திருந்த போது தீமைகள் இல்லாமல் இருந்தது. ஆனால் மனிதர் கடவுளைப் போல் இருக்க வேண்டும் (தொநூ 3:5) என்ற பெருமை கொண்டு, கடவுளுக்கு கீழ்ப்படியாமையால் (தொநூ 3:6) பாவம் செய்து உறவு நிலைகளில் விரிசல் ஏற்படுத்தினர். இந்த உறவுநிலை விரிசலைச் சீர்செய்ய கடவுள் தம் திருமகன் இயேசுவை உலகினில் அனுப்பினார் (கலா 4:5). கடவுளை தந்தை என்று அழைக்க தயங்கிய யூத சமுதாயத்தில் கடவுள் நம் தந்தை என்ற உறவு ஒன்றிப்பு நிலையை (மத் 6:9) இயேசு பிரகடனப்படுத்தினார்.

மனித உடலானது மண்ணினால் செய்யப்பட்ட மண்பாண்டங்களைப் போன்றதாகும். தூய பவுலார் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் குறிப்பிடும்போது மனித உடல்கள் வேதனை, துன்பம், வருத்தம், செய்வதறியாத நிலை இவைகளைக் கொண்ட மண்பாண்டமாகவும் (2கொரி 1:4, 8-9, 7:5), அந்த மண்பாண்டத்தில் கடவுள் செல்வத்தை

வைத்திருப்பதாகவும் குறிப்பிடுகிறார். இது கடவுளுக்கும், மனிதருக்கும் உள்ள ஒன்றிப்பை சுட்டி நிற்கிறது. மண்பாண்டங்களில் கொண்டுள்ள செல்வம் எவைகளை அடையாளமாக்குகிறது?

**1. அருளின் அடையாளம்** : (மீக் 6:4) (Sign of Grace)

மண்பாண்டங்களில் கொண்டுள்ள செல்வம் கடவுள் மனிதர் மீது காண்பிக்கும் ஒன்றிப்புடன் கூடிய அருளின் அடையாளமாகும். மண்பாண்ட தொழில் அதிகாரமாக பழக்கத்திலிருந்த காலத்தில் இஸ்ரவேலரை களிமண்ணுக்கும், வனைந்துகொள்ளும் குயவராக கடவுளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பழக்கம் இறைவாக்கினரிடையே இருந்தது (எரே 18:1-6). சாதாரண மண்ணினால் செய்யப்பட்ட மண்பாண்டமாகிய மனிதருக்கு கடவுள் தம் உயிர்மூச்சைக் கொடுத்தார் (தொநூ 2:7). கடவுளின் மக்களாகிய இஸ்ரவேலர் பாவம் செய்து, கடவுளை விட்டு பின்வாங்கிய போதும் கடவுள் தம் அருளினால் அவர்களை அடிமைத்தனத்தின் வீடாகிய எகிப்திலிருந்து வெளியே வரச் செய்தார் (மீக் 6:4). தெரிந்து தவறு செய்யும் தன் குழந்தையின் தவறுகளை தெரியாமல் செய்ததாகக் கருதும் தந்தையின் உள்ள நிலையை கடவுள் தம் அருளினால் இஸ்ரவேல் மக்களிடம் காட்டுகிறார். சிறிய ஆலம்பழத்தில் கடவுள் பல பெரிய ஆலமரங்களை வைத்திருப்பதைப் போன்று, விண்ணரசுக்குரிய செல்வத்தை கடவுளின் அருளினால் மண்பாண்டங்களாகிய உடலில் பெற்றிருக்கிறோம். கடவுளின் அருளை உணர்ந்த அன்னை தெரசா அம்மையார் தொழுநோயாளிகளைத் தொட்டு மருத்துவம் செய்து இறையருளை உலகினில் வெளிப்படுத்தினார். கடவுளின் அருளை மண்பாண்டங்களாகிய உடலில் பெற்றிருக்கும் நாம் அருள் நிறைந்தவராய் வாழ்வோம்.

**2. ஆசியின் அடையாளம்** : (2கொரி 4:7) (Sign of Blessing)

மண்பாண்டங்களில் இருக்கும் செல்வம் கடவுளின் ஆசிக்கு அடையாளம். முன்நாட்களில் நம் முன்னோர் மண்பாண்டங்களில் பாதுகாத்த செல்வங்கள் கிடைக்கப்பெற்றோர் அதனை ஆசியாக் கருதினர். மண்பாண்டங்கள் தோல்வியின் அடையாளமாகத் தோன்றினாலும், அதற்குள்ளாக இருக்கும் செல்வத்தை வெற்றிக்குரியவைகளாக பவுலார் குறிப்பிடுகிறார் (IIகொரி 4:7). இச்செல்வம் பெலனற்ற நிலையிலும் பெலனை பெற்றுக்கொள்ள உதவுகிறது (உரோ 8:37). மண்பாண்டம் தான் கொண்டிருக்கும் செல்வத்தால் மதிப்புக்குரியதாக மாறுகிறது. பலூன் வியாபாரி ஒருவர் தன் கையில் வைத்திருந்த சிவப்பு, பச்சை, மஞ்சள் பலூன்களை வானில் பறக்க விட்டுக்கொண்டிருந்தார். கருப்பு நிறத்தையுடைய சிறுவன் அவரிடம் சென்று, ஐயா நீங்கள் கருப்பு நிற பலூனை பறக்கவிடவில்லையே! ஏன்? கருப்பு நிற பலூன் வானில்

பறக்காதா? என்று கேட்டான். பலூன் வியாபாரி மறுமொழியாக சிறுவனிடம், தம்பி நிறத்தை பொறுத்து பலூன் பறப்பதில்லை. மாறாக பலூன் உள்ளே அடைக்கப்பட்ட ஹைட்ரஜன் வாயுவினால் பலூன் உயரே பறக்கிறது என்றார். நாம் நமக்குள்ளாக கொண்டுள்ள நீதிக்காக துன்பத்தை ஏற்கும் கடவுளின் ஆசிக்கு அடையாளமான செல்வத்தால் மதிப்புக்குரியவராக மாறுகிறோம். சாதாரண மண்பண்டங்கள் வீட்டின் வெளியே போடப்பட்டிருக்கும்; ஆனால் செல்வம் நிரப்பப்பட்ட மண்பாண்டங்கள் வீட்டுக்குள்ளே பாதுகாப்பாக இருக்கும். ஆசிக்கு அடையாளமான விலையேறப்பட்ட செல்வத்தை மண்பாண்டங்களாகிய உடலில் பெற்றிருக்கும் நாம் பரிசுத்த வாழ்வுடன் பிறருக்கும் ஆசீர்வாதமான வாழ்வு வாழ்வோம்.

***3. அமைதியின் அடையாளம்*** : (மாற் 4:27) (Sign of Peace)

மண்பாண்டங்களில் இருக்கும் செல்வம் அமைதியின் அடையாளம். செல்வம் மண்பாண்டங்களில் இருந்து ஆரவாரம் எழுப்புவதும் இல்லை, சுய விளம்பரம் செய்து தன்னை மிகைப்படுத்திக் காட்டுவதும் இல்லை. சிலர் தனக்குள்ளாக கொண்டிருக்கம் ஆண்டவரின் தன்மைகளை வாழ்வில் கனிகளாக வெளிப்படுத்தாமல் (மத் 7:20). சொற்களால் மட்டும் தூய்மையை காட்ட முற்படுகின்றனர். இறையரசு குறித்து இயேசு கூறிய “முளைத்து தானாக வளரும் விதை” உவமையில் ஆரவாரம் இல்லாமல், கண்களுக்கு புலப்படாமல் விதைகள் முளைக்கும் நிலையினைக் காணலாம். நிலத்தில் விதைக்கப்படும் விதை விதைப்பவருக்குத் தெரியாமல் முளைக்கிறது. விதை மாற்றுருவாக்கம் பெற்று மரமாக வளர்ந்து கனிகளைக் கொடுக்கிறது. இறையரசும் நம் கண்களுக்கு தெரியாமல் புளித்தமா போன்று வேலைச் செய்கிறது (மத் 13:33). மண்பாண்டமாகிய நமக்குள்ளாக பெற்றிருக்கும் இறையரசின் செல்வங்களாகிய அன்பு, பகிர்வு, நீதி, அமைதி இவைகள் நமக்குள்ளாக மாற்றுருவாக்கத்தை கொண்டு வருவதுடன் பிறரையும் கவர்ந்திழுக்கும், தன்மையுடன் அமைதியான முறையில் வெளிப்படுகிறது. தன் இனத்தைப் பெருக்க முட்டையிடும் கோழி தன் குரலை எழுப்பி முட்டையை இழக்கக் கொடுக்கிறது. ஆனால் அமைதியாக பாய்ந்து செல்லும் ஆற்றுநீர் கரையில் உள்ள பயிர்களை வளப்படுத்திச் செல்கிறது. இறையரசுக் குரியவைகளை மண்பாண்டங்களில் கொண்டுள்ள நாம் சுய பெருமையுடன் (Self-ego) வாழாமல் சுய மதிப்புடன் (Self-esteem) பிறரையும் வளப்படுத்தி வாழ்வோம்.

ஒரே பொதுவான சபையின் மீது நம்பிக்கை கொண்டிருக்கும் நாம் ஒற்றுமை உணர்வுடன் கடவுளின் அருளை உலகில் வெளிப்படுத்தி, கடவுளின் ஆசியை அனைவருடனும் பகிர்ந்து அமைதியுடன் வாழ்வோம். ஆமென்.

அருள்திரு. S. **கிரீஷ் குமார்**

15-11-2020

பெண் குழந்தை ஞாயிறு

# பெண் குழந்தைக்கு வருங்காலத்தை உறுதிசெய்தல்

## ASSURING FUTURE FOR THE GIRL CHILD

2அர 5:1-5 திப 12:11-17
திபா 8 மாற் 5:21-24, 35-43

**“என் மகள் சாகுந்தருவாயிலிருக்கிறாள். நீர் வந்து அவள் மீது உம் கைகளை வையும். அப்போது அவள் நலம் பெற்றுப் பிழைத்துக் கொள்வாள்.....”.** (மாற் 5:22,23)

செய்தித் தாள்களில் நிரந்தரம் வெளியிடப்படும் செய்திகளில் பெண் பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் எதிரான கொடுமைகள் அதிகம். இரயில் பயணத்தின் போது ஆக்கிரமிக்கப்பட்ட கேரளத்தின் சௌமியா, டெல்லி பேருந்து பயணத்தின் போது கூட்ட பாலியல் பலாத்காரத்தில் இரையான நிர்பயா, இரயில் நிலையத்தில் கொலை செய்யப்பட்ட தமிழகத்தின் சுவாதி உத்தரபிரதேச M.L.A. வின் வீட்டு வேலைகாரி பாலியல் வன்முறை இவைகள் அனைத்தும் பெண் குழந்தைகளின் பாதுகாப்பின்மையை நமக்கு நினைவூட்டுகிறது.

அலைந்து நடந்து வாகன ஓட்டிகளை பயணத்தில் ஆபத்திற்கு உட்படுத்தியும், மனிதர்களை உயிரோடு சாப்பிடத்துணியும் தெருநாய்களை கொல்பவர்களை வதைக்குற்றம் சுமத்த வேண்டும் என்று சத்தமிடுவதும், பசுவின் மாம்சம் தின்றான் என்று சந்தேகத்தின் பேரில் சமய வெறியர்கள் பலரைக்கொன்றும் தகுந்த நடவடிக்கை எடுக்காத ஆட்சியாளர்கள் ஆட்சி செய்யும் நாட்டில் பெண் குழந்தைகள் கர்ப்பம் முதல் கல்லறைவரை பலவிதங்களில் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். இந்த சூழலில் தான் தன் அன்புமகளை நோயினின்று விடுவிப்பதற்காக இயேசுவினிடத்தில் காலில் விழுந்து வேண்டுதல் செய்யும் தொழுகைக் கூடத் தலைவராகிய ஒரு தந்தையை நாம் காண்கிறோம். தன் மகளின் எதிர்காலத்தை உறுதிசெய்யும் ஒரு தந்தையின் முயற்சி தான் இன்றைய நற்செய்தி பாடம் சொல்லும் செய்தி. இந்த நாளின் திருமறைப் பாடங்கள் வழி பெண்குழந்தைகளின் எதிர்காலத்தை உறுதி செய்தல் குறித்து சிந்திப்போம்.

### *1. பெண் குழந்தைகள் ஆண்டவர் அருளும் ஈவு* :

(Girl Children as the Gift of God)

சங்கீதக்காரனான தாவீது சொல்கின்றார்; “பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம்; மக்கள்பேறு அவர் அளிக்கும் பரிசில்” (சங் 127:3); “உண்ணும் இடத்தில் உம் பிள்ளைகள் ஒலிவக் கன்றுகளைப்

போல் உம்மைச் சூழ்ந்திருப்பர்" (சங் 128:3ஆ) என்பது ஆண்டவரை விசுவாசித்து இல்லற வாழ்வு நடத்தும் பெற்றோருக்கு ஆண்டவர் தரும் ஆசி. இந்த பிள்ளைகள் ஆண்டவரின் சாயலையும் ரூபத்தையும் வெளிப்படுத்துகின்றவர்கள் "அவர்களை கடவுளாகிய உமக்கு சற்றே சிறியவர் ஆக்கியுள்ளீர் மாட்சியையும், அவர்களுக்கு முடியாக சூட்டியுள்ளீர்" (சங் 8:5)" ஆண்டவரின் படைப்பான மனிதருக்கு மகிமையையும் கனத்தையும் கொடுத்து அவர்களை வழிநடத்துகிறார் என்பது மிகவும் சிறந்த ஓர் அனுபவமாகும். இதை ஒருவர் தன் குழந்தைப்பருவத்திலேயே பெற்றிருக்கிறார் என்பது இன்னும் சிறப்பான உண்மை. பெண்குழந்தைகளும் இவ்வரிசையில் ஆண்டவரின் ஈவுகள் ஆவார்.

ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க வருடக்கணக்கில் காத்திருந்த அதிக செலவு செய்து சிகிட்சை பெற்றும் குழந்தை பாக்கியமற்று காணப்படும் தம்பதியருக்கே ஒரு குழந்தையின் மதிப்பைக் குறித்து அறிய இயலும். குழந்தை கடவுளின் கொடை எனச் சரியாய் புரிந்தவர் தான் ஜெபாலயத் தலைவனாகிய யவீரு. இந்த சிறுமி யவீருவின் ஒரே மகளாயிருந்தாள். (லூக் 8:42). அதானால் தான் அவள் ஆண்டவரால் தனக்கு கொடுக்கப்பட்ட பரிசு என புரிந்திருந்தார். நம் இல்லத்திலுள்ள பிள்ளைகள் அனைவரும் ஆண்டவரின் செல்வம். "இறையாட்சி இத்தகயோருக்கே உரியது" என்பது இயேசுவின் வாக்கு (மற் 10:14). எனவே, நம் பிள்ளைகள் நம் குடும்பத்தின் உரிமையானவர்கள் மட்டுமல்ல இறையரசில் உரிமையானவர்களுமாவர். அதனால் அவர்களை இறைவனுக்கு முன் ஒப்படைத்தது இறையரசிற்குரியவர்களாக மிகவும் கவனமுடன் வளர்ப்பதற்கே ஆண்டவர் நம்மிடம் ஒப்படைத்துள்ளார்.

### ***2. பெண் குழந்தைகளைப் புறக்கணிப்பது பாவம்*** :

(Ignoring the girl children is sin)

பெண் குழந்தைகள் ஆண்பிள்ளைகளைப் போல் அறிவிலும், குடும்பக் கடமைகளை நிறைவேற்றுவதிலும் சற்றும் குறைந்தவர்கல்ல என்றாலும், பிறப்பு முதல் பெண் பிள்ளைகளிடம் வேறுபாடு, புறக்கணிப்பு காட்டப்படுகின்றன. 2012-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி ஆண் பெண் விகிதம் 1000 ஆண்களுக்கு 943 பெண்கள் என்பதாகும். ஆனாலும் கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் பெண்கள் ஆண்களை விட அதிகமாகும். ஆயிரம் ஆண்களுக்கு ஆயிரத்து இருபத்து மூன்று பெண்கள் ஆனால் புதிதாய் பிறக்கும் குழந்தைகளின் கணக்கு மிகவும் துயரத்திற்குரியது. 2012-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி ஆறு வயதுக்கு கீழே உள்ளவர்களில் ஆயிரம் ஆண்களுக்கு தொள்ளாயிரத்து ஆறு

பெண்களாகும். அது மாத்திரமல்லாமல் குழந்தைத் தொழிலாளியாக ஆண்பிள்ளைகளை விட பெண் குழந்தைகள் தான் அதிகமாக ஈடுபடுத்தப்படுகிறார்கள் என்பதும், குழந்தை மரணங்களில் அதிகமும் பெண் குழந்தைகள் என்பதும் அதிர்ச்சி தரும் செய்தியாகும்.

1அரசர்கள் 5-ம் அதிகாரத்தில் சீரிய அரசரின் படைத்தலைவராகிய நாமானின் வீட்டில் பணிப்பெண்ணாக செயல்படும் ஓர் சிறுமி குறித்து நாம் அறிகிறோம். ஆனால் அவளுடைய பெயர் அங்கே குறிப்பிடப்படவில்லை. அவளை அன்னிய தேசத்திலே அடிமையாக்கி அங்கே வேலை செய்வித்தார்கள். அதுபோல இன்றைய திருமுகப்பாடத்தில் மாற்குவின் தாய் மரியாவின் வீட்டில் பேதுருவின் விடுதலைக்காக ஜெபிக்கிறவர்களின் கூட்டத்தில் ரோதி என்ற ஓர் பெண் பேதுருவின் சத்தத்தைப் பகுத்தறிந்து 'பேதுரு வெளியே நிற்கிறார்' என்ற தகவலை மற்றவர்களுக்கு அறிவித்தபோது அவள் சொன்னதை யாரும் நம்பவில்லை. அவள் மீண்டும் உறுதியாய் சொன்னபோது 'அது ஒருவேளை அவருடைய வான தூதராயிருக்கலாம்' என்றார்கள். இங்கே நாம் காண்பது ரோதின் ஆளுமைத் தன்மையை அங்கீகரிக்காமல் அவரைப் பேசுவதைக் காணலாம். இக்காலத்திலும் பல இல்லங்களிலும் இவ்விதமான அங்கீகரியாப் போக்கைக் காணலாம் ஆண் பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் உள்ள வீட்டில் ஆண்பிள்ளைகளுக்கு கொடுக்கப்படும் அங்கீகாரம் பெண்பிள்ளைகளுக்கும் கொடுக்கத் தயங்குகின்றார்கள் என்பது ஓர் உண்மையாகும். இது பாவம் ஆகும்.

### *3. பெண் குழந்தைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்துவது இறைப்பணி சார்ந்த கடமை* :

(Assuring future of the girl children is a ministerial duty)

பெண் குழந்தையின் எதிர்காலத்தை பாதுகாப்பதில் யவீரு ஓர் சிறந்த முன் மாதிரி. யவீருவீன் வாழ்க்கையில் சில சிறப்புக்களை நாம் காணமுடியும். யாவீருவின் வாழ்க்கையில் நாம் காண்பது, அவர் இயேசுவிடம் கொண்ட பற்றுறுதியாகும். சூழ்நிலைகள் கடினமாய் மாறினபோதும், மகள் இறநர்போதும் இயேசுவில் நம்பிக்கை கொள்ள அவரால் இயன்றது. பிள்ளைகளின் எதிர்காலத்தை பாதுகாக்க இறை நம்பிக்கையுள்ள ஓர் குடும்ப சூழலை ஏற்படுத்த பெற்றோர் முயலவேண்டும்.

இரண்டாவதாக, யாவீருவுக்கு தன் மகளிடம் உள்ள அன்பு. தன் மகளை அதிகமாக நேசித்ததால் தன் பதவியைக் குறித்து சிந்தியாமல் இயேசுவின் பாதத்தில் விழமுடிந்தது. பெண்பிள்ளைகளின் எதிர்காலத்தை பாதுகாக்க அவர்களோடுள்ள பெற்றோரின் அன்பு மிகவும் முக்கியமாகும்.

மூன்றாவதாக, யாவீரு தன் மகளைப் பயனற்றவளாகக் காணவில்லை. இறைசாயலில் படைக்கப்பட்ட அவளை அவள் நோயின் மத்தியிலும் அவளை பயனற்றவளாகக் காண முயலவில்லை. இதை நிரூபிக்கும் விதமாக இயேசுவின் வார்த்தைகள் அமைந்தது. “தலித்தா கூம் சிறுபெண்ணே, எழுந்திரு” என்ற வார்த்தை அவளை உயிரற்ற நிலையினின்று உயிருள்ள வாழ்வுக்கு நேராக நடத்தியது.

பெண் பிள்ளைகளை பயனற்றவர்கள் என் விதித்து ஒதுக்கக்கூடாது. மாறாக அவர்களிலுள்ள சாத்தியங்களைக் கண்டுகொள்ள முயலவேண்டும். இன்றைய பழைய ஏற்பாடு பகுதியில் எபிரேயப் பெண் தன் எஜமானின் நோயில் அவர் சுகவாழ்வு பெறும் வழியை நாகமானின் மனைவிக்கு தெரியப்படுத்துகிறார். அந்த மார்க்கத்தை நாகமான் ஏற்றுக் கொண்டதால் அவர் சுகவாழ்வை அடைந்தார். பெண் பிள்ளைகளை பயனற்றவர்கள் என்று தீர்பிட்டு புறக்கணிக்காமல் அவர்களுக்கு நல்ல விசுவாச அடித்தளத்தை ஏற்படுத்தி வளர்த்தி அவர்களுக்கு அன்பைக் காட்ட இயன்றால் எல்லா பெண் பிள்ளைகளுக்கும் ஆசீர்வாதமான எதிர்காலம் உருவாகும்.

அருள்திரு. P. **சேம் இம்மானுவேல் தோமஸ்**

22-11-2020

## இறையாளுகைக்காக இடர்வரவை ஏற்றல்

**TAKING RISK FOR THE REIGN OF GOD**

எஸ் 8:1-17 பிலி 2:25-30
திபா 12 மத் 10:37-42

**"தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்".** (மத் 10:38)

ஆண்டவர் இயேசுவின் திருப்பணியில் இறையரசு பற்றிய போதனைகள் சிறப்பிடம் பெற்றன. அவரது அருட்பணியில் குறைபோக்கும் அருட்பணிகள் சிறப்பிடம் பெற்றன. அதில் பல இடர் வரவுகள் இயேசு கிறிஸ்துவுக்கு எதிராக நின்றன. அவை எல்லாவற்றையும் தகர்த்து ஆர்வமாய் அவர் முன்னேறிச் சென்றார்.

பிரெஞ்சு புரட்சி பற்றி ஒரு நூல் வெளியிடும் எண்ணத்துடன் "ஸ்டுவர்ட் மில்" என்பவர் அதற்கான கைப்பிரதிகளை தயாரித்தார். அவற்றை தன் அறையில் ஒரு மூலையில் வைத்திருந்தார். அவருடைய வீட்டிலிருந்த பெண் பணியாளர் ஒருவர் அப்பிரதிகளை பழைய காகிதம் என்று எண்ணி தீயிட்டு கொளுத்தினார். பல ஆண்டுகளின் உழைப்பு சாம்பலாகி விட்டது. இருப்பினும், அவர் மனம் உடைந்து போகாமல் மீண்டும் கைப்பிரதிகளைத் தயாரித்து, அவற்றை நூலாக வெளியிட்டு உலகப்புகழ் பெற்றார். இறையாளுகைக்காக உழைக்கும் போதும் பல்வேறு வகையில் இடர்வரவுகள் வரும். அவற்றை நாம் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதனை இன்றைய திருமறையின் சிந்தனை பகுதிகளோடு இணைத்து தியானிப்போம்.

### *1. திடனுடன் ஏற்றல் :*

இறையாளுகைக்காக துணிவுடனும், திடனுடனும் இடர்வரவுகளை ஏற்றல் என்பது கிறிஸ்தவ வாழ்வின் ஒரு பகுதியாகும். இடர்வரவுகளின் போது இடறிப் போகாமல் திடனுடன் போராடுவதே உண்மை வாழ்வுக்கான அர்த்தம். யூதர்களை வேரறுக்க வேண்டுமென்று துடித்த ஆமானை, அரசி எஸ்தர் துணிவுடன் செயல்பட்டு, அரசரின் உதவியுடன் அழித்தாலும், உண்மையான சவால் இனிமேல் தான் காத்திருந்தது. ஆமான் உயிருடன் இல்லையென்றாலும், அவரால் வஞ்சனையாக எழுதப்பட்ட யூதருக்கு எதிரான மடல் அனைத்து

மாநிலங்களிலும் உயிரோடு இருந்தது. எனவே, எந்நேரமும் யூதர்களின் உயிர் பறிக்கப்பப்படலாம் என்பதே மிகப் பெரிய உண்மை. இந்நிலையில் தான் மனத்திடனுடன் மீண்டும் அரசரை நாடினார் எஸ்தர். அரசரிடம் அழுது மன்றாடி அவர் தயவினையும் பெற்றார் (எஸ்தர் 8:3,4). எஸ்தரின் துணிவு, யூதரின் வாழ்விற்கு புத்துயிரை தந்தது. அகஸ்வேர் மன்னனிடம் ஆளுகைக்கு உட்பட்ட எல்லா பகுதிகளிலும் யூதர்கள் உயர்த்தப்பட, பல மக்கள் யூதர்களாக மாறினர் (எஸ்தர் 8:17). இடர் வரவுகளை திடனுடன் ஏற்காவிடில் இறையாளுகைக்கு நம்மை ஆயத்தம் செய்ய முடியாது. இயேசு கிறிஸ்து கடல் மீது நடந்த போது பேதுருவும் நடக்க விரும்பினார். ஆனால் இடர்வரவுகளை சந்தித்த போது அவரால் மேற்கொண்டு நடக்க இயலவில்லை, கடல் நீரில் மூழ்கத் தொடங்கினார் (மத். 14:30). இயேசு கிறிஸ்துவின் கரமே அவரை மீட்டெடுத்தது. திடனுள்ளவர்களாய் இருந்தால் மட்டுமே இறையாளுகைக்காக உறுதியுடன் போராட முடியும்.

***2. தியாகத்துடன் ஏற்றல்*** :

இறையாளுகைக்காக நாம் உழைக்கும் போது, இடர்வரவுகளின் போதும் தியாகத்துடன் செயல்படுவது தேவையாக இருக்கிறது. “முழு உலகத்திற்கும் என் வாழ்க்கையை கொடுக்காமல் என் வாழ்வை இழக்கமாட்டேன்” என்றார் டேவிட் பிரெய்னார்டு. உடல் நலம் குன்றியிருந்த பவுலுக்கு உதவும்படியாக பிலிப்பி சபையினரால் அனுப்பி வைக்கப்பட்டவர் எப்பப்பிராதித்து (பிலிப் 2:25). ஆனால், அங்கு எப்பப்பிராதித்துவும் உடல்நலம் குன்றி இறப்பின் வாயில் வரை சென்று வந்தார். எனினும், சோர்ந்து போகாமல் உயிரையும் துச்சமாக மதித்து பவுலோடு இணைந்து திருப்பணியாற்றினார் (பிலி 2:30). தன் உயிரைப் பொருட்டாக கருதாமல், தியாக உள்ளத்தோடு இறையாளுகைக்காக உழைத்த எப்பப்பிராதித்துவை உளமார வாழ்த்தி, பிலிப்பி சபையாருக்கு கடிதம் எழுதுகிறார் பவுல். உயிரைக் கருதாமல் இறையாளுகைக்காக உழைப்பவர்கள் போற்றப்பட வேண்டும்.

அன்னை தெரசா அவர்கள் தன் இளமைப்பருவத்தையும், செல்வங்களையும் இழந்து பிறர் நலனுக்காக வாழந்தார். இறையாளுகையினை இவ்வுலகில் நிலைநாட்டும் மாபெரும் கருவியானார். எவ்வளவோ இடர்கள் வந்த போதும் அவர் சிறிதும் கலங்கவில்லை. சமயங்களைக் கடந்து அனைவரின் உள்ளத்திலும் அன்னையாய்க் குடியிருக்கிறார் என்றால், அவரது தியாகமே இதற்கு காரணம். இறையாளுகைக்கான எல்லையை விரிவாக்கம் செய்வதில் நம் பங்கு என்ன? என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். கிறிஸ்து நமக்காக தம்

உயிரைத் தியாகமாகவே தந்ததை உரோமையர் 5:8 பதிவு செய்கிறது. பாவிகளாகிய நமக்காக தூயவராம் இறைமகன் இரத்தம் சிந்தியதே தியாகத்தின் அடையாளம். இதில் நாமும் தியாக சிந்தனையுடன் இறையாளுகைக்காய் உழைப்போம்.

### *3. திறந்த மனத்துடன் ஏற்றல்* :

இறையாளுகைக்காக உழைக்கும்போது, இடர்வரவுகள் வந்தாலும் அவைகளை திறந்த மனதுடன் ஏற்கும் மனம் நமக்கு தேவை. இறையாளுகைக்கான தொடர் பயணத்தில் இடர்வரவுகள் என்பது உடன் பயணி. இதனை யாரும் தவிர்க்கவும் முடியாது, தடுக்கவும் முடியாது. இடர் வரவுகள் இன்றி இயேசு கிறிஸ்துவை நாம் பின்பற்ற முடியாது என்பதனை, "தம் சிலுவையை சுமக்காமல் பின்பற்றுவோர் என்னுடையவர்கள் என கருதப்பட தகுதியற்றோர்" என்று மத்தேயு 10:38-ல் கூறகிறார் இயேசு கிறிஸ்து. "மண்ணுலகில் சிலுவையை சுமக்காதவர்கள், விண்ணுலகில் கிரீடம் சூடாதவர்கள்" என்றார் சார்லஸ் ஹெச் ஸ்பர்ஜன். அதேப் போன்று உலகில் உள்ள உறவுகள் எல்லாவற்றையும் விட இறைவனை நேசிக்கும் பரந்த மனது நமக்கு தேவையாக இருக்கிறது (மத் 10:37). இடர்வரவுகள் வருகின்ற போது, இது எனக்கு ஏன் வருகிறது? என்ற கேள்விகளை எழுப்பாமல் திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். தூய பவுல் பல்வேறு பாடுகளை ஏற்றவர். சிறையில் அடைக்கப்பட்டும், சாட்டையால் பலமுறை அடிக்கப்பட்டும், கல்லெறியப்பட்டும், ஆழ்கடலில் அல்லலுற்றும், பசி தாகத்துடனும் முன்னேறினார். கடினப்பட்டும் இவை அனைத்தையும் திறந்த மனதுடன் ஏற்றுக் கொண்டார் (IIகொரி. 11:23-28). அருள்திரு. றிங்கல் தௌபே ஐயர் அவர்கள் இறையாளுகைக்கான விதைகளை குமரி மண்ணில் விதைத்த போது வந்த இடர்வரவுகள் கணக்கில் அடங்காதவை. ஆனால், அதைத் திறந்த மனதுடன் ஏற்றுக் கொண்டார். அதின் அறுவடையே குமரி மண்ணின் திருச்சபைகள்.

இறையாளுகைக்காக நாம் செயல்படும் போது இடர்வரவுகள் நிச்சயமே. இதனை திடனுடனும், தியாகத்துடனும், திறந்த மனதுடனும் ஏற்றுக்கொண்டால் அவை காணாமல் போகும். இறையாளுகை நம்மில் துளிர்க்கும். ஆற்றல் அருளும் இறைவன் இடர்பாடுகளை இடித்து இடர்வரவை ஏற்கும் ஆற்றலை இணையற்ற நம் ஒவ்வொருவருக்கும் தந்து வழிநடத்துவாராக. ஆமென்.

அருள்திரு. M. **கிதியோன்**

## திருவருகைக் காலம் (Advent)

திருவருகைக் காலம் (Advent) என்பது கிறிஸ்தவ திருச்சபைகளில் கடைப்பிடிக்கப்படுகின்ற வழிபாட்டுக் காலங்களுள் ஒன்றாகும். இயேசு கிறிஸ்துவின் பிறப்பு விழாவை எதிர்நோக்கிக் காத்திருந்து, அதற்காகத் தயாரிக்கும் காலமாகத் திருவருகைக் காலம் உள்ளது. இக்காலம், திருச்சபையின் வழிபாட்டு ஆண்டின் தொடக்கம் ஆகும். திருவருகைக் காலம் என்பது கிழக்கத்தியத் திருச்சபைகளில் (Eastern Churches) கிறிஸ்து பிறப்பு விழா நோன்பு (Nativity Fast) என்னும் பெயர்கொண்டுள்ளது.

### *திருவருகைக் காலம் - விளக்கம்*

திருவருகைக் காலத்தைக் குறிக்கும் “Advent” (அட்வெந்து) என்னும் ஆங்கில வார்த்தை, “வருகை” (Arrival) எனப் பொருள்படும் “adventus” என்னும் இலத்தீன் வார்த்தையிலிருந்து உருவானது. இதன் அடிப்படை “parousia” (பரூசியா) என்னும் கிரேக்க வார்த்தையாகும். Advent என்பது ஒரு குறிப்பிட்ட அல்லது சிறப்புடைய ஒருவரின் அல்லது ஒரு பொருளின் வருகையைக் குறிக்கும் (the arrival of a notable person or thing). பொதுவாக, “parousia” என்னும் சொல் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கப் பயன்படுகிறது. “பரூசியா” என்பது தொடக்க கால கிரேக்க நம்பிக்கையில் மனிதர்களின் கூடுகையில் எதிர்பார்க்கப்பட்ட கடவுளின் வருகையைக் குறித்தது. பின்னர் கிரேக்க உரோமையர்கள் காலத்தில் இது ஆட்சியாளர்களின் வருகையைக் குறிக்கப் பயன்பட்டது. பேரரசர்கள், அரசர்கள், ஆட்சியாளர்கள், தங்கள் மக்களை சந்திக்க, அவர்கள் இடங்களுக்கு எப்போதாவது வருவது வழக்கம். அவர்களின் வருகைக்காக மக்கள் காத்திருப்பர். இந்த நிகழ்வு அக்காலத்தில் வழக்கிலிருந்த ஒரு சாதாரண அரசியல் நிகழ்வு. கிறிஸ்தவம் வளர்ந்த பின்பு, இயேசுவின் இரண்டாம் வருகையை நினைப்பூட்டும் வண்ணம் “பரூசியா” என்ற சொல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக பயன்படுத்தப்படத் தொடங்கியது. கிறிஸ்தவ இறையியலில் Advent என்பது, கிறிஸ்துவின் வருகை அல்லது இரண்டாம் வருகையைக் குறிக்கிறது (the coming or the second coming of Christ). இக்காலம் பழைய கிறிஸ்தவ வழக்கில் “ஆகமன காலம்” என்றும் அறியப்பட்டது. இவ்வாறு, கிறிஸ்தவர்களுக்குத் திருவருகைக் காலம் என்பது, வரலாற்றில் மனிதராகப் பிறந்த, கடவுளின் மைந்தரான இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையை சிறப்பிக்கவும், உலக முடிவில் அவர் மாட்சியுடன் வரவிருக்கின்ற இரண்டாம் வருகையை எதிர்நோக்கவும் தயாரிப்பு செய்கின்ற காலமாக அமைந்துள்ளது.

## திருவருகைக் காலத்தின் அமைப்பு

கத்தோலிக்க திருச்சபை, ஆங்கிலிக்கன் சபை, லூத்தரன் சபை, மொராவியன் சபை, ப்ரெஸ்பிட்டேரியன் சபை, மெதடிஸ்டு சபை போன்ற மேலைக் கிறிஸ்தவத் திருச்சபைகளின் நாள்காட்டிப்படி, திருவருகைக் காலம் கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு (டிசம்பர் 25) நான்கு ஞாயிற்றுக் கிழமைகளுக்கு முன் தொடங்கும். திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமை நவம்பர் 27லிருந்து டிசம்பர் 3ஆம் நாள் வரையிலான ஒரு நாளாக இருக்கலாம்.

## திருவருகைக் கால மரபுகள்

திருவருகைக் காலத்துக்கு உரிய நிறம் ஊதா ஆகும். திருவருகைக் காலத்தின்போது வழிபாட்டில் அறிக்கையிடப்படுகின்ற திருமறை வாசகங்கள் மூவொரு இறைவனின் இரண்டாம் ஆளாகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகில் மரியாவின் மகனாகத் தோன்றிய நிகழ்வையும், அவர் உலக முடிவில் நடுவராக வருவிருக்கின்ற நிகழ்வையும் எடுத்துரைக்கின்ற பாடங்கள் ஆகும். கிபி 4ஆம் நூற்றாண்டிலிருந்து திருவருகைக் காலம் நோன்புக் காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. தற்போது நோன்பு கடைப்பிடித்தல் தவக் கால முயற்சியாக மட்டும் கருதப்படுகிறது. திருவருகைக் காலம் எதிர்பார்ப்பையும், மகிழ்ச்சியையும், விழிப்பையும் குறிக்கின்ற காலமாகப் பொருள்விளக்கம் பெறுகிறது.

கிறிஸ்துவின் பிறப்பை பொருள்பொதிந்த நிலையில் கொண்டாட நம்மைத் தயாரிக்கும் காலமாக இக்காலம் அமைகின்றது. இயேசுவின் இரண்டாம் வருகையோடு இக்காலத்தை தொடர்புபடுத்தி சிறந்த அறிவை இறைவார்த்தைகள் நமக்கு வழங்குகின்றன. எனவே, இக்காலத்தின் மாட்சியையும், பெருமையையும், புனிதத் தன்மையையும் ஆடம்பரங்களாலும், களியாட்டங்களாலும் கறைபடுத்தாதிருப்போம். இயேசு கிறிஸ்துவின் பிறப்பை, அது சுட்டிக்காட்டும் அன்பு, பகிர்வு, எளிமை, நட்பு முதலிய வாழ்க்கைப் பண்புகளோடு பொருளுணர்ந்து கொண்டாட முற்படுவோம். இவ்வாண்டின் திருவருகைக் காலத்தைப் பயனுள்ள வகையில் கடைப்பிடித்து, ஆண்டவர் இயேசுவின் அடுத்த வருகைக்காக நம்மை ஆயத்தம் செய்வோம்.

அருள்திரு. T.P. **சலீம் தங்க குமார்**

29-11-2020

வருகையின் ஞாயிறு

# கிறிஸ்துவின் வருகையை மகிழ்வுடன் எதிர்பார்த்தல்

**(எலிசபெத்துடன் மரியாவின் சந்திப்பு)**

**JOYFUL EXPECTATION OF CHRIST'S COMING**

**(MEETING OF MARY WITH ELIZABETH)**

எரே 33:10-16 1தெச 3:6-13

திபா 68:11-20 லூக் 1:39-45

**"ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறு பெற்றவர்".** (லூக் 1:45)

திருச்சபையின் நாள்காட்டி "திருவருகையின் காலம்" என்பதில் தொடங்குகிறது. கிறிஸ்து பிறப்பை மையமாக வைத்து இது அமைந்தது. பக்தி முயற்சியாகவும், பக்தி வளர்ச்சியின் காரணியாகவும் இந்த பண்டிகை காலங்கள் அமைந்திட வேண்டும் என்பதுதான் கிறிஸ்து பிறப்பு பண்டிகைக் காலங்களைக் கடைபிடிப்பதன் நோக்கம். வெறும் ஆசரிப்புக்களாக மாறிவிடாமல் அர்த்தமுள்ள ஆன்மிக தேடலுக்கு, இந்த காலங்கள் வழிவகை செய்ய வேண்டும். இந்த நாளுக்குரிய சிந்தனையில் இயேசுவின் பிறப்பை பற்றிய முன்னறிவை பெறுபவர் இரண்டு பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. திருமுழுக்கு யோவானின் பிறப்பைப் பற்றி எலிசபெத், சகரியா பெற்றனர். இயேசுவின் பிறப்பை பற்றிய செய்தியை மரியாள் யோசேப்பு பெற்றனர். பொருள் பொதிந்த எலிசபெத்-மரியாள் சந்திப்பில் வெளிப்படும் ஆன்மிக, சமகால சிந்தனைகளை திருமறையின் திருவாசகங்கள் வழியாக சிந்திப்போம். அதாவது, இறை வருகையில் சாத்தியமற்றவைகள் சாத்தியமாகிறது. வாக்குறுதிகள் வாக்குத்தத்தமாகிறது, அருட்பணிகள் ஆக்கப்பணியாகிறது.

### *1. இறைவருகையில் சாத்தியமற்றவைகள் சாத்தியமாகின்றன :* (லூக் 1:40)

ஆசாரியப் பணிவிடை செய்த குடும்பம் சகரியா-எலிசபெத் குடும்பம். இறைவனுடைய கற்பனைகளையும், நியமங்களின்படியும் வாழ்ந்து குற்றமற்றவர்களாய் நடந்து இறைவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாய் இருந்தார்கள் (லூக் 1:6). அவர்களுக்குக் குழந்தை இல்லாதிருந்தது. எலிசபெத் குழந்தை பெற்றெடுக்க இருந்தார். மேலும், இயலாத நிலையில் சகரியா-எலிசபெத் ஆகிய இருவரும் குழந்தை பெற்றுக்கொள்ளும் வயதைத் தாண்டிய முதிர்வயதுள்ளவர்களாய்

இருந்தனர். ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பது இவர்களுக்கு சாத்தியமில்லாத ஒன்றாக இருந்தது. எனினும் இதுகுறித்து இறைவேண்டல் ஏறெடுக்க சகரியா தவறியது இல்லை. இச்சூழலில் இறைத் தூதன் சகரியாவை சந்தித்து, "உம்முடைய இறைவேண்டல்" கேட்கப்பட்டது. சாத்தியமற்ற உடற் கூறுகளையுடைய எலிசபெத் ஒரு மகனை, உமக்குப் பெற்றெடுப்பாள். அந்த மகன் 'யோவான்' என்ற பெயரில் அழைக்கப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலையும் அறிவித்து கடந்து செல்கிறார். எலிசபெத் கர்ப்பவதியானவுடன் இறைவனைப் துதித்து புகழ்ந்து சான்று பகர்ந்தார். மக்கள் மத்தியில் எனக்கு இருந்த நிந்தையை நீக்கும்படி இறைவன் என்மேல் கருணை கூர்ந்து சாத்தியமற்றவையாக இருந்ததை சாத்தியமாக்கினார். இந்த செய்தி மரியாளுக்கும் சொல்லப்பட்டது. மரியாளும் எலிசபெத்தும் ஒரே இனத்தவராய் இருந்தனர். மாறாதவரும் மறக்காதவருமாகிய இறைவனுடைய மாட்சியை எண்ணிப் பார்த்த மரியாள் மகிழ்ச்சியுடன் எலிசபெத்தை தேடி வந்து வாழ்த்துகிறார்.

மரியாளும், எலிசபெத்தும் இறை வருகையின் மனித சமூகத்தின் அடையாளங்களாக அமைந்தனர். சகரியாவின் சலிப்பில்லாத இறைவேண்டல், சாத்தியமற்றவைகளை சாத்தியமாக்கிய செய்தியின் புரிதலோடு எலிசபெத்தை வாழ்த்திய மரியாள் ஆகியோர் தரும் செய்தி இன்றியமையாதது. இறையாட்சியை முன்னிட்டு துணிவு பெறுதலும், நம்பிக்கையில் உறுதிப்படுதலும், இறை வருகையின் இன்றியமையாத மாற்றமாக புது விடியலை இவ்வுலகில் இறையருளோடு அனுபவிக்க முடியும். அது தனிநபரோடு நின்றுவிடாதபடி சமூகத்தில் பிரதிபலிக்க வேண்டும்.

### ***2. இறைவருகையில் வாக்குறுதிகள் வாக்குத்தத்தங்களாகின்றன :*** (லூக் 1:42)

இறைப்பணியின் ஊடகங்களாக இறைவனால் தெரிவு செய்யப்பட்ட பாத்திரங்கள் எலிசபெத் மற்றும் மரியாள். இறைவனின் அறைகூவலை உண்மையான அழைப்பாக ஏற்று அற்பணித்தவர்கள். இறைவன் மனித புரிதல்களுக்கு மேலானவர். இறைவனை மனிதர்கள் காண இயலாது. இத்தகைய நம்பிக்கையில் நிலைத்திருந்த மக்களுக்கு ஒரு புதிய வாக்குறுதி, அதாவது இறைவன் இவ்வுலகிற்கு இறங்கி வந்து மனிதரோடு மனிதராக வாழவும், மனித அனுபவங்களுடன் தம்மை உட்படுத்திக்கொள்ளவும் முடியும் என்பதே அந்த வாக்குறுதி. எலிசபெத் முதிர்ந்தவர். கருத்தரிக்க முடியாதவர். அதுபோல, மரியாள் ஒரு இளம்பெண் கணவரோடு சேர்ந்து இதுவரை வாழவில்லை. ஆண்டவரின் திட்டத்தை நிறைவேற்றும் வாக்குறுதிகளைப் பெற்ற கருவிகளாக தங்களை கடவுளின் கரத்தில் முழுமையாக அர்ப்பணம் செய்தனர்.

தூய ஆவியாரின் ஆற்றலை உணர்ந்த மரியாள், இறை தூதன் அறிவித்த வாக்குறுதியை ஏற்றுக்கொண்டார். வாக்குறுதிகள் வெறும் வார்த்தை வடிவத்தில் நின்று விடவில்லை. அது அனுபவமான வாக்குத்தத்தமாக வாழ்க்கை வடிவம் பெற்றது. எனவேதான் மரியாள் எலிசபெத்தை வாழ்த்திய போது வயிற்றிலிருந்த பிள்ளை துள்ளிற்று. மட்டுமல்ல, எலிசபெத் தூய ஆவியரால் நிரப்பப்பட்டார் (லூக் 41). இந்த இருவரின் சந்திப்பு நிறைவாழ்வின் நிறைவேறுதலால் பிரதிபலிக்கிறது.

வார்த்தை ஜாலங்கள் நிறைந்த உலகத்திலே வாழும் நாம் வெறும் வார்த்தைகளின் பரிமாற்றங்களில் நின்றுவிடுவது இறைவிருப்பமல்ல. வார்தைகள் வெறும் வாக்குறுதிகளாக, விளம்பரமாக, வியாபாரமாக வியாபிக்கும் இன்றையச் சூழலில் வாக்குறுதிகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் ஒப்படைப்பே இன்றியமையாதது. இறை வருகையினால் வாக்குறுதிகள் வாக்குத்தத்தங்களாக மாற்றம் பெறட்டும். சமூகத் தடைகளை தாண்டி உயிரோட்டமுள்ள வாக்குத்தத்தங்களாக (Promising Personalities) வாழ்ந்து காட்டுவோம்.

### *3. இறைவருகையில் அருட்பணிகள் ஆக்கப்பணிகளாகின்றன :* (லூக் 1:43-45)

எலிசபெத் மரியாள் ஆகியோர் பெற்றுக்கொண்ட அருட்பணிகளின் சாரம் சிந்திக்க வேண்டிய ஒன்று. இயல்புக்கும், மரபுக்கும் அப்பாற்பட்ட அருட்பணியை முன்னெடுக்கும் அற்பணிப்பு இன்றியமையாதது. மரியாளின் துணிவு, எலிசபெத்தின் நேர்மறை சிந்தை அருட்பணியின் ஆற்றல் நிறைந்த அம்சங்களாகும். சமூக கட்டமைப்புகளை கடந்து நிற்கும் மரியாளின் தைரியம், சமூகத்தால் புரிந்து கொள்ளமுடியாத அருளாற்றல் பெற்ற எலிசபெத்தின் வாழ்க்கை அனுபவம், சமூகத்தையே மாற்றுருவாக்கம் செய்யும் காரணியாக இறைவருகையில் வெளிப்பட்டது. மேலும், அருட்பணியில் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துதலும், ஒவ்வொருவரும் பிறரின் இறைவாக்குகளை அங்கீகரிக்கவும் செய்ய வேண்டும் என்ற செய்தியும் இந்த திருவார்த்தைகளில் (43:45) பிரகடனப்படுத்தப்படுகிறது.

முடிவில்லா அரசின் ஆட்சியைப் பெற்றுக்கொள்ளும் இறைமைந்தன் உலகிற்கு தரும் ஊடகமான மரியாள், எலிசபெத்தை தன்னிடம் அழைக்காமல், தன் தாழ்மையை வெளிப்படுத்தும்படி எலிசபெத்திடம் சென்று மகிழுறவு கொள்வதுதான் அருட்பணி ஆக்கப்பணியாகிறது என்பதின் இன்றியமையாத வரையறை.

உயர்ந்தவர்-தாழ்ந்தவர் உயர்பதவி-சிறிய பணி, சிறந்த கல்வி உயர்கல்வி, சாதாரண கல்வி என்றெல்லாம் அருட்பணிகளுக்குள் தாக்கம் ஏற்பட்டு அல்லல்படும் இன்றைய சூழலில், தன்னைவிட மற்றவர்களிடமும் சிறப்புத் தன்மைகள் இருக்கின்றன என்ற அணுகுமுறையும், ஆத்தும ஆதாய அருட்பணி வெறும் ஆன்மிகப் பணியாக மட்டும் பார்க்காமல், தாழ்மை, துணிவு, பிறர்நலம், முதியோரை மதித்தல் போன்ற ஆக்கப்பணிகளாக முன்னெடுத்தலே இறை வருகையில் நமக்குத் ஒப்படைப்பு பங்களிப்பைக் கொடுப்போம்.

இவ்வாண்டின் திருவருகைக் காலத்தில் இறையருளைப் பெற்று, ஆண்டவரின் வருகையால் சாத்தியமற்றவைகள் சாத்தியமாகும் என்று நம்பி, இறைவனின் வாக்குறுதிகள் நம்மில் வாக்குத்தத்தங்களாய் மாறுவதை அனுபவித்து, நம் அருட்பணிகளை ஆக்கப்பணிகளாக முன்னெடுத்துச் செல்வோம். இறையாசி நம்மோடிருப்பதாக.

அருள்திரு. முனைவர். R. **பிரின்ஸ் வேதமாணிக்கம்**

01-12-2020

**புதிய மாத நன்றித் தொழுகை**

# இறங்கி வரும் இறைவன்

திருமறைப்பாடம் : விப 3:1-8

**"...எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும், அந்நாட்டிலிருந்து பாலும் தேனும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு...அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கி வந்துள்ளேன்".** (விப 3:8)

2020-ம் ஆண்டின் நிறைவு மாதத்தின் தொடக்க நாள் இன்று. நிறைவு மாதத்திற்கும் துவக்கம் இருப்பதென்பது, இறுதியென்று நினைத்த வாழ்வின் தருணங்களுக்கும் புதிய விடியல் உண்டென்பதை உணர்த்துகின்றது. வருடக்கணக்காக வாழ்க்கையில் அடிபட்டு, அவதிப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு, கூனிக்குறுகி, கூக்குரலிட்டு கொண்டிருந்த இஸ்ரவேலரின் வரலாற்றில் எகிப்து தேசத்தின் அனுபவங்கள் ஒவ்வொன்றும் தழும்புகளாக வரலாற்றில் தடம்பதித்து இருக்கின்றன. விடுதலைக்காக வித்திடுபவர்களையும், ஆளும் வர்க்கத்தின் அதிகாரங்களுக்கு அடிமைப்படாதோரையும், ஆளோட்டிகளால் அச்சுறுத்துகின்ற அநீதிகளும், அழித்தொழிக்கின்ற அவலங்களும் நமது நாட்டிலும் அரங்கேறுவதைப் போல இஸ்ரவேலரின் அடிமை வாழ்விலும் மிகுந்திருந்தன. எங்கிருந்து விடுதலை எழும்? என்ற கேள்விக்கணைகள் எழுந்த வேளையில் எரியும் முட்செடியயில் இறைவனின் பிரசன்னம் நெருப்பாய் காட்சி தருகின்றது. இஸ்ரவேலரின் பாடுகளை உடலிருந்து பார்த்து, அருகிருந்து கேட்டு, துயரங்களை அறிந்த இறைவன் விடுதலை வாங்கி தருவதற்காக இறங்கி வந்ததாக தன்னை மோசேக்கு அறிமுகம் செய்கின்றார். இறங்கி வருவது என்பது இஸ்ரவேலரை பொறுத்தமட்டில் இறைவனின் இரக்கத்தின் வெளிப்பாடு. ஆனால் அதிகார போதையின் மயக்கத்தில் இருந்த எகிப்தியரை பொறுத்தமட்டில் அடக்கு முறைகளை அடக்கம் செய்கின்ற இறைவனின் வெளிப்பாடு. "இறங்கி வந்துள்ளேன்" என்ற உரை. அஸ்தமித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு அனுபவங்களுக்கும் ஒளிர்கிறது.

இன்றைய புதிய காலைப்பொழுதும் அஸ்தமித்து நிற்பின் ஒவ்வொரு தருணங்களுக்கும் புதிய பாதையை தருவித்துக் கொள்ளவே நம்மை தொழுகையில் நம்மை ஒருங்கிணைத்திருக்கிறது. இறங்கி வரும் இறைவன் இஸ்ரவேலரின் வாழ்வில் எப்படி செயல்பட்டார் என்பதையும் நமது வாழ்வில் எப்படி செயல்பட போகிறார் என்பதையும் கருத்தூன்றி கவனிப்போம்.

***1. இடர் நீக்குகின்றார்*** : (விப 3:8)

"....எகிப்தின் பிடியிலிருந்து விடுவிக்கவும்...."

எகிப்தின் 'பிடி' என்பது இஸ்ரவேலரை கட்டுக்குள் வைத்திருந்த ஒரு அதிகார மையம் என்றும் சொல்லலாம் கடினமாக உழைத்தும் அதின் பலனை அனுபவிக்க தராமல் அடிமைப்படுத்தி அதிகமாக வேலை வாங்க தெரிந்திருந்த லாவகம் அது. ஆளும் வர்க்கம் என்ற பெயரில் இஸ்ரவேலரை ஆளோட்டிகளின் துணையோடு ஆக்கிரமிப்பு செய்திருந்த அவமான நிலையிலிருந்து விடுவிக்க இறைவன் இறங்கி வரவேண்டியதாகிறது. அநீதிகளும் அக்கிரமங்களும் அரங்கேறுகின்ற போது இடர் நீக்குகின்றவராக இறைவன் இறங்கி வருகின்றார். உன்னதங்களில் உறைகின்றவராக அல்ல. உடைந்த உள்ளங்களை ஊக்குவிக்குகின்றவராக, அவர்களை எத்தகைய தீங்கிலிருந்தும் மீட்கும்படியாக செயலாற்றுகின்றார்.

***2. இலக்கினைக் காட்டுகின்றார்*** : (விப 3:68b)

"பாலும் தேனும் பொழியும் நல்ல பரந்ததே நாட்டிற்கு..."

விடுதலைக்குப்பின் செய்ய வேண்டிய முக்கியமான பொறுப்பு இங்கே இறைவனால் இறைமக்களுக்கு முன்மொழியப்படுகின்றது. எதிப்தியரின் பிரியிலிருந்து இஸ்ரவேலரை மீட்பதோடு நின்றுவிடாமல் அடிமைப்பட்டிருந்த அவர்களாக எதுவும் எளிதாக செய்து விடலாகாது. நீண்ட நாட்கள் சங்கிலியால் கட்டிப்போடப்பட்டிருந்த யானை கசங்கிலியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டாலும் தான் கட்டுப்போடப்பட்டிருக்கிறேன் என்றே நினைத்துக் கொள்ளுமாம். அதுபோல இஸ்ரவேலரும் ஆண்டுக்கணக்கான அடிமைத்தனத்ததல் உடல் நிலையிலும், மன நிலையிலும் அடிமைப்பட்டிருந்தனர் என்பதைவிட, பழக்கப்பட்டிருந்தனர் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். எனவே அவர்களுக்கு தாங்கள் வாழ்ந்த சூழலைவிட வாழப்போகும் சூழ்நிலை முற்றிலும் மாறுப்பட்டதாக வாழ்வதற்கு ஏற்ற நிலையில் அமைய வேண்டும். எனவே தான் பசியினால் வாடும் நிலையிலிருந்து "பாலும் தேனும் பொழியும் நாடு" ஒடுக்கமும் இடுக்கமுமான நிலையிலிருந்து "நல்ல பரந்ததோர்" நாடு இலக்காக இறைவன் வைக்கின்றார்.

### *3. நடத்திச் செல்கின்றார்* : (விப 8:3c)

"நடத்தி செல்லவும்"

விடுதலை மற்றும் செல்லவேண்டிய இலக்கும் தெரிந்தால் போதாது. மாறாக உடனிந்து நடத்த வேண்டிய பொறுப்பும் உண்டு, என்பதற்கு இறைவன் செயலாக்கம் தருகின்றார் நடத்தி செல்வது அவசியமான அக்கரையோடு செய்யப்பட வேண்டியது என்பதை இறைவன் கற்றுத்தருகின்றார் இஸ்ரவேலரின் கானான் நோக்கிய பயணம் இதற்கு சாட்சியாக நிற்கின்றது (விப 15:13; திபா 13:14-72; 106:9; 107:7; 136:16) அடிமைப்பட்டு கிடந்த சமூகம் மீட்கப்பட்டாலும் கடினமான சூழ்நிலைகள் எப்போதாவது வந்து விட்டால் அதை நினைத்து "இதைவிட முன்பு நன்றாக இருந்தோம்" என்று சொல்லிவிடும் நிலைக்கு தள்ளப்படுவது உண்டு. எனவே இறைவனின் உடனிருப்பு வெளிப்பட இறைவனும் இணைந்து நடக்கின்றார் என்பது தான் சிறப்பு. தடம் மாறும்போது தட்டியும், தடுமாறும்போது தாங்கவும் செய்கின்றவர்தான் இறைவன்.

எதற்காக? இறைவன் இறங்கி வருகின்றார் என்பதற்கு பதில்தான் மேற்கூறப்பட்ட சிந்தனைகள். நமது வாழ்விலும் அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் அனுபவங்களை எண்ணிப்பார்ப்போம். நமது கூக்குரல்களுக்கு பதில் உண்டு. இடர்நீக்கி, இலக்கினை காட்டி நடத்திச் செல்ல இறைவன் ஆயத்தம். அவர் பின் செல்ல ஆயத்தமா? அதே வேளை அநீதிகளும், அக்கிரமங்களும், கூக்குரல்களும் எழுந்து கொண்டிருக்கும் சமூகத்திலும், இறைவ வழிநின்று, வீதியில் இறங்கி இடர் நீக்கி, பிறருக்கு இலக்கினைக் காட்டி இலக்கினை, குறிக்கும், நடத்தி செல்லும் நல்லுள்ளமும் நமக்கு வேண்டும் என்கின்ற நற்சிந்தையோடு புதிய மாதத்தின் கடமைகளை கருத்தாய் தொடர்வோம் - ஆமென்.

அருள்திரு. R. ***ஐசக் மெரின் சிங்***

06-12-2020

**திருவருகைக்காலம் இரண்டாம் ஞாயிறு & விவிலிய ஞாயிறு**

## இறைவாக்கு : நமது பாதைக்கு வெளிச்சம்

**WORD OF GOD: LIGHT TO OUR PATH**

| | |
|---|---|
| எசா 55:6-13 | கலா 1:11-17 |
| திபா 119:105-112 | லூக் 1:67-80 |

**"என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே!".**
(திபா 119:105)

திருவருகைக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு விவிலிய ஞாயிறாக ஆசரிக்கப்பட்டு வருகிறது. இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையை மகிழ்வுடன் கொண்டாட ஆயத்தமாகும் சூழலில் இறைவாக்கைக் கற்று, தியானித்து, இறைவாக்கு காட்டும் பாதையில் அழைக்கப்படுகிறோம். இறைவாக்கு என்பது கடவுளின் செயலை நிறைவேற்றும் கருவியாக அமைகிறது. வார்த்தை என்பது தொடர்பியலின் முக்கியமான ஊடகம். ஒருவர் பேசுகிறார் என்றால் அவர் வார்த்தையைப் பயன்டுத்துகின்றார். அந்த வார்த்தை அவரின் சிந்தையை வெளிப்படுத்துகிறது. அதுபோல கடவுளுடைய வார்த்தை அவரது விருப்பத்தையும், திட்டத்தையும் வெளிப்படுத்தும் ஊடகமாகவே அமைகிறது. கடவுளின் வார்த்தையைக் குறிக்க பழைய ஏற்பாட்டில் 'டாபர்' (Dabar) என்ற எபிரேயச் சொல்லும், புதிய ஏற்பாட்டில் 'லோகோஸ்' (Logos) என்ற வார்த்தை கிரேக்கச் சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

திருப்பாடகராகிய தாவீது கடவுளின் வார்த்தையை, "என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும்!" அதுவே எனக் கூறி, இறைவாக்கு மனுக்குலத்தின் இருளைப் போக்கி ஒளி வீசும் கருவியாக இருக்கிறது எனத் தன் வாழ்வின் அனுபவத்தோடு சான்றுரைத்தார். இறைவாக்கு எத்தகைய ஒளியாக மனுக்குலத்தின் வாழ்வில் காணப்படுகிறது என்பதைச் சிந்திப்போம்.

### *1. பலன்தரும் ஒளி :* (எசா 55:11)

கிமு 6-ஆம் நூற்றாண்டில் இஸ்ரயேல் மக்கள் பாபிலோனிய சிறையிருப்பில் இருந்த போது இரண்டாம் ஏசாயாவால் அருளப்பட்ட வாக்கே எசாயா 46 முதல் 55 வரையுள்ள அதிகாரங்கள். பாபிலோனிய சிறையிருப்பின் சூழலில் மக்கள், 'கடவுள் எங்களோடு பேசுவதை நிறுத்தி

விட்டார், அமைதியாகி விட்டார், எங்கள் உறவுகளுக்கு உடன்படிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார். எனவே, தான் நாங்கள் அடிமைத்தனத்திற்கு தள்ளப்பட்டோம்' என்ற எண்ணங்களோடு மனக்கலக்கங்களோடு இருளின் வாழ்வில் இருந்தனர். இத்தருணத்தில் இஸ்ரயேல் மக்களுக்கு வனாந்திரப் பயணம் நினைவூட்டப்படுகின்றது. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மக்களை கடவுள் எவ்வாறு விடுவித்தாரோ, அதுபோல பாபிலோனிய சிறையிருப்பிலிருந்தும் விடுவிப்பார் என்ற வார்த்தை ஒளியூட்டும் வார்த்தையாய், பலன் கொடுக்கும் வார்த்தையாய் உரைக்கப்பட்டது. எசாயா இறைவாக்கினர், இறைவனின் வாக்கு ஆற்றல் நிறைந்தது என்றும், அவற்றை மழைத்துளிக்கும், பனித்துளிக்கும் ஒப்பிட்டு எவ்வாறு காயந்துப் போன நிலத்தை ஈரப்படுத்தி நனைய வைத்து விதைகளுக்கு உயிரளித்து அது தளிராக துளிர்விடுவது போல் இறைவாக்கும் ஆற்றல் நிறைந்தது, ஒரு நோக்கத்தை அடைய பலன் தரக்கூடியது என உரைத்தார். மேலும், கடவுளின் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் அவர்தம் விருப்பத்தை வெறுமையாக அல்ல, வெற்றிக்கரமாக நிறைவேற்றும் எனக்கூறி இறைவாக்கின் பலனை அனுபவிக்க அழைப்புவிடுத்தார்.

நம்முடைய வாழ்விலும் இறைவார்த்தையை சார்ந்து வாழும் போது, உயிரற்ற வாழ்வையும் துளிர்விடச் செய்து, பலனுள்ள வாழ்வை வாழ கடவுள் நம்மை ஆற்றல் படுத்துவார்.

### 2. அமைதிகாட்டும் ஒளி : (லூக் 1:78,79)

யோவானின் தந்தையாகிய செக்கரியா தூய ஆவியால் நிரப்பப்பட்டு இயேசு கிறிஸ்துவின் வருகையைக் குறித்து இறைவாக்குரைத்தார். இந்த இறைவாக்கு 'செக்கரியாவின் பாடல்' (Song of Zechariah) என அழைக்கப்படுகிறது. செக்கரியா ஆரோனின் மரபைச் சார்ந்தவர். அந்நாட்களில் மக்களின் வாழ்வும் கவலையும், துன்பமும், இருளும், நம்பிக்கையின்மையுமாய் இருந்தது. இந்நிலையில் மக்களுக்கு ஆறுதல் தரும் வண்ணமாக செக்கரியா, 'இயேசு கிறிஸ்து மக்களை மீட்கும் அரசராக, இருளிலும், இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு ஒளி தந்து, நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்க செய்வார்' எனவும் கூறி இயேசு கிறிஸ்து கடவுளிடமிருந்து வெளிப்பட்ட ஒரு விடியல் எனவும் வாக்குரைத்தார்.

இருள் மனிதனுக்கு அச்சத்தை, அமைதியின்மையை ஏற்படுத்துகிறது. இதனால் இருளைப் போக்க விளக்குகளைப் பயன்படுத்துவது உண்டு. ஆனால், அது நிரந்தரமானது அல்ல. அதே

வேளையில் பாதைக்கு ஒளியாகும் இறைவாக்கை வாழ்வில் அனுபவிக்கும் போது நிரந்தரமான அமைதி, வெளிச்சம், மகிழ்ச்சி நம் வாழ்வில் பிறக்கிறது.

***3. சான்றாக்கும் ஒளி :*** (கலா 1:16)

கலாத்திய திருச்சபையில் யூத மயமாக்கும் கிறிஸ்தவர்கள் சிலர் புகுந்து தூய பவுல் எடுத்துரைத்த போதனைக்கு எதிராகப் பேசினர். இந்நிலையில் யூத மயமாக்கும் கிறிஸ்தவர்களின் போதனையை முறியடிக்க கலாத்திய திருமுகத்தை எழுதினார். யூதரல்லாதோர்க்கும் நற்செய்தி போதிப்பதே தம்முடையப் பணி எனச் சொன்னார். மேலும் தான் அழைக்கப்பட்டச் சூழலையும் நினைவுப்படுத்தினார். திப 9-இல் தூய பவுலின் அழைப்பை பார்க்கும் போது கடவுளின் சீடரை அச்சுறுத்தி கொலைச் செய்ய தமஸ்கு நோக்கி பயணித்தப் போது, ஓர் ஒளி தூய பவுலை சூழந்து வீசியது (திப 9:3). இந்த ஒளி பவுலின் வாழ்வில் மாற்றத்திற்கு அடித்தளமிட்டது. நற்செய்திக்கு சான்றுப் பகர தூண்டியது. இதைத் தான் கலா 1:11-17 வரையுள்ள வசனங்களில் தன் அனுபவத்தை, சான்றான வாழ்வைப் பகிர்ந்தார். கடவுளும் கடவுளின் வார்த்தையும் ஒர மனுதனை சந்திக்கும் போது அவன் வாழ்வு ஒளிப் பெற்று சான்றுள்ள வாழ்வை வாழத் தூண்டுகிறது.

இறைவாக்கு உயிருள்ளது. ஆற்றல் நிறைந்தது. பொதுவாக வார்த்தை மனிதனுக்கு ஒரு மனிதனுக்கு உயிர் கொடுக்கிறது. வார்த்தை ஒரு மனிதனின் உயிரையும் அழிக்கிறது. இது எதார்த்தமான ஒன்று. மனிதனின் வார்த்தைகள் வலிமைமிக்கது என்றால், அதை விட பன்மடங்கு வலிமை வாய்ந்ததாக இருக்கிறது கடவுளின் வார்த்தை. எனவே, வலிமைமிக்க கடவுளின் வார்த்தைகளால் நம் வாழ்வை ஒளியாக்குவோம்.

அருள்திரு. **பெனோ A. ஈனோஸ்**

13-12-2020 திருவருகைக்கால மூன்றாம் ஞாயிறு

# மீட்பின் நல்லெதிர்நோக்கு

**HOPE OF SALVATION**

| | |
|---|---|
| செப் 3:14-20 | 2பேது 3:8-13 |
| திபா 43 | மத் 1:18-25 |

**"அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்".** (மத் 1:21)

நாம் மீட்பின் நல் எதிர்நோக்கின்றி வாழும் உலகத்தையே முதன்மைப்படுத்தி வாழ்கின்றோம். இதன் விளைவாக உலகத் தீமைகள், சுயநலம், பிறரை ஏமாற்றி சுரண்டி தவறான வழியில் பொருள் ஈட்ட வேண்டும் என்கிற வேட்கை, சிற்றின்பம், ஆடம்பரம், அதிகாரம் என வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துள்ளோம். சமயத்தையும், சமய நெறிமுறைகளையும் நமக்கு சாதகமாக்கிக் கொள்கிறோம். இறைவன் விரும்பும் பண்புகளை இழந்து வாழ விரும்புகிறபடியால் இறைவனின் விருப்பத்தை ஏற்க தயங்குகின்றோம். இதன் விளைவு பாவம், பாடுகள், பயம் இவற்றால் வாழ்வின் மீட்பை இழந்து விடுகின்றோம். "நான் என் பாவ சுபாவத்தை பார்க்கையில் இரட்சகர் செய்த அற்புதங்களிலெல்லாம் சிறந்தது என் மீட்பே என்று காண்கிறேன்" என்கிறார் ரூதர்ஃபோர்ட்டு. நாம் மீட்படைய வேண்டும் என்பதே இறைவனின் விருப்பமும் நம்முடைய எதிர்பார்ப்பும். ஆகவே, இறைமக்கள் தங்களுக்குள் மீட்பின் நல் எதிர் நோக்குக்காக தங்கள் வாழ்கையை அற்பணித்து வாழும் போது இறைவன் விரும்பும் மீட்பை நம்மில் நாம் சொந்தமாக்கி வாழ முடியும்.

## *1. பாவத்திலிருந்து விடுதலை தரும் நல்லெதிர்நோக்கு :*

(மத் 1:21)

இயேசு கிறிஸ்து உலகமீட்பர், கிறிஸ்துவின் பிறப்பை பழைய ஏற்பாட்டில் தீர்கர்கள் முன் உரைத்தனர். யோசேப்பு மரியாள் திருமண ஒப்பந்தம் ஆனால் கூடிவாழுமுன் கர்ப்பவதியானதை வெளியே சொல்லி கேவலப்படுத்தாதபடி தள்ளிவிட மனதாயிருந்தான். ஆனால் யோசேப்பின் கனவில் சொல்லப்பட்ட செய்தி அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீப்பவர் என்பதாகும். பாவம் என்பதை குறிதவறுதல், இறைவன் அமைத்த நிலைக்கு ஏற்ப நடக்க தவறுதல் எனப் புரிந்துகொள்ளலாம். பாவம் செய்த மனிதன் பாவத்தினால்

பாதிக்கப்படுகிறான். ஆதிபெற்றோர் இறைவன் ஏற்படுத்திய ஒழுங்குகளையும், வரையறைகளையும் மீறி நடந்ததால் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள உறவு துண்டிக்கப்பட்டது. உறவு புதுப்பிக்கப்பட பாவத்திலிருந்து விடுதலை பெற வேண்டும். பழைய ஏற்பாட்டில் பாவத்திலிருந்து விடுத்தலைக்காக பாவங்களையெல்லாம் தன் மேல் சுமந்து செல்லும் வெள்ளாட்டுக்கடாவைக் (லேவி 16:20-22) குறித்து சொல்லப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் முழுக்கு முனிவர் யோவான். இதோ கடவுளின் ஆட்டுக்குட்டியாம் இவரே உலகத்தின் பாவத்தை போக்குகிறவர் (யோ 1:29) என இயேசுவை அறிமுகம் செய்கிறார். இந்த குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலேயே நாம் மீட்கப்பட்டோம். பாவத்தின் துன்பத்தை தாமே ஏற்று பகைமையை அழித்தார். சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஒன்றாக்கிக் கடவுளோடு ஒப்புரவாக்க இப்படி செய்தார் (எபே 2:16) கிறிஸ்துவின் வழியாக பாவத்திலிருந்து மீட்கப்ப்பட்ட மனிதகுலம் கனிகொடுப்பதோடு, அவருடைய சிஷராயுமிருக்கிறார்கள். (யோவா 15:8). நாம் நமது பாவத்திலிருந்து விடுதலையினை இயேசு கிறிஸ்துவின் மூலம் பெற்றிருக்கிறோம் என்கிற நம்பிக்கையினை கிறிஸ்து பிறப்பின் பண்டிகையில் வெளிக்கொணர்வோம். பாவ உணர்வு நம்பிக்கையுள்ள நமது மகிழ்ச்சியை, இறை நம்பிக்கையை, இறை பாதுகாப்பை, ஆரோக்கியத்தை நம்மிடமிருந்து எடுத்துக்கொள்கிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நமது பாவங்களிலிருந்து நம்மை விடுவிக்கிறது. (Iயோவா 1:9) பாவத்திலிருந்து விடுதலைதரும் மீட்பின் நல் எதிர்நோக்காகிய கிறிஸ்துவின் பிறப்பு நம் பாவங்களை நம்மிட்மிருந்து முற்றிலும் நீக்கி நம்மை நல்வழி நடத்துகிறது.

## *2. பாடுகளிலிருந்து விடுதலைதரும் நல்லெதிர்நோக்கு :*

(2பேது 3:14)

இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதலுக்கப்பின் உலகெங்கும் நற்செய்தி மிகவும் வேகமாக பரவியது போன்று விசவாசிகளுக்கு பாடுகளும் பெருகியது. பாடுகளினால் விசுவாசிகள் விசுவாசத்தை விட்டுவிலகி தளர்ந்து போயிருக்கையில் அப்போஸ்தலனாகிய பேதுரு அவர்களை உறுதியுடன் நிற்க, உற்சாகமூட்ட்டி அறிவுரை கூறுகிறார். இறைவன் அருளும் விடுதலையை சொந்தமாக இவ் உலகில் சந்திக்கும் துன்பங்களும், துன்புறுத்துதலும் தடையாயிருக்கிறது. இவைகளை மேற்கொள்ள நன்மை செய்ய வேண்டும் இதனால் பாடுகள் ஏற்படும் இந்த பாடுகளின் பலன் பரலோகத்தில் கடவுளின் வலதுபுறம் அமர்தல் என்ற

விடுதலையின் நம்பிக்கையை தருகிறது. கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணை பங்கு கொள்கிறீர்கள் என எண்ணி மகிழுங்கள். அப்பொழுது கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் வேளையில் இன்னும் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்கள் (1பேது 4:13) என்கிறார். பாடுகள் நிரந்தரமானது அல்ல, பாடுகளால் மகிமையடைந்த கிறிஸ்துக்காக நாம் வாழ்கிறோம். கிறிஸ்துவின் நற்செய்தியை நமக்கு தந்த அருட்பணியாளர்கள் தங்கள் வாழ்வை பாடுகளோடு பரமன்பணிக்கு கொடுத்தார்கள். இதனால் நாம் வாழ்வும் உயர்வும் பெற்றுள்ளோம். கிறிஸ்துவுக்காக வாழ்வதில் வரும் நிந்தைகள், அவமானங்கள், தனிமைபடுத்துதல் இவைகள் நமது பாடுகளின் மீட்பின் எதிர்நோக்கோடு முன் செல்லவும் சான்று பகரவும் நமக்கு துணை செய்கிறது.

### *3. பயத்திலிருந்து விடுதலைதரும் நல்லெதிர்நோக்கு :*

(செப் 3:14-20)

இறைவன் பாதுகாவலர் என்ற பொருள்கொண்ட செப்பனியா நமது பயத்திலிருந்து விடுதலையை கடவுள் அருள்வார் எனும் நம்பிக்கையுடன் உரைக்கிறார். இஸ்ரவேல் மக்கள் பலமுறை சிறையிருப்பை அனுபவித்தவர்கள். சிறையிருப்பை யாரும் விரும்புவதில்லை. சிறையிருப்பு ஓர் அடிமைத்தனம். சுதந்திரத்தையும், சுயாதினத்தையும் இழந்து அவமானத்தை அடைந்த மக்கள் அடுத்து என்ன நிகழும் என்ற பயம் வருத்தமாகவே மாறியது. இந்த வருத்தத்தின் காலத்தில் கடவுள் நீதியை நிறைவேற்றுவார். பயத்திலிருந்து பாதுகாப்பை தருவார், மகிழ்ச்சியின் காலம் உங்களுக்கு சமீபமாயிருக்கிறது. ஏன் எனில் கடவுள் உங்கள் நடுவில் இருக்கிறார். இனி தீங்கு பயப்படவேண்டாம் என விடுதலையின் நம்பிக்கையை தருகிறார். ‘இம்மானுவேல்’-கடவுள் நம்மோடிருக்கிறார் (மத் 1:23) செப்பன்நியா சொன்ன இறைவார்த்தை என்னும் நம்மோடு இருக்கும் இம்மானுவேலர் கிறிஸ்தவின் பிறப்பில் நாம் பெற்றிருக்கிறோம். இனி பயமில்லை, கலக்கமில்லை, நம்பிக்கை பிறந்துவிட்டது. “மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலே விடுதலை பெற்றவர்களாயிருப்பீர்கள்” (யோவா 8:36). பயம் நம்மை விட்டு அகன்று விடுதலையின் ம்பிக்கையை எதிர்நோக்குவோம்.

மீட்பின் நல்லெதிர்நோக்கு பாவத்திலிருந்த, பாடுகளிலிருந்து பயத்திலிருந்து விடுதலை என்ற நோக்கத்தை உணர்ந்து கிறிஸ்தவ பற்றுறுதியில் வளர்ந்து, பண்பட்டவர்களாய், பயன்படுகிறவர்களாய், பண்புள்ளவர்களாய் வாழ்ந்து கிறிஸ்துவில் சான்று பகருவோம்.

அருள்திரு. **இரா. சாம் கிறிஸ்டோபர்**

20-12-2020 **திருவருகைக்கால நான்காம் ஞாயிறு**

# பேருவகை கொள்ளுங்கள், ஆண்டவர் அண்மையில் உள்ளார்

**REJOICE, THE LORD IS NEAR**

செக் 2:6-13 | 1தெச 5:12-24
திபா 50:1-15 | யோவா 16:16-24

**"மகளே, சீயோன்! அகமகிழ்ந்து ஆர்ப்பரி; இதோ நான் வருகிறேன்...".** (எசே 2 : 10)

மனித வாழ்வில் மூன்று கால நிலைகள் உண்டு வாழ்ந்த காலம் (கடந்த காலம்), வாழும் காலம் (நிகழ் காலம்), வாழ போகும் காலம் (வருகாலம்). இதிலே மனிதர்கள் பெரும்பாலும் வருங்காலத்தைக் குறித்தே கவலை கொள்ளுகின்றனர். வாருங்காலத்தை வளப்படுத்தி கொள்ள சேமிப்பு கணக்கு, ஆயுள் காப்பீடு எனப் பல திட்டமிடுகின்றனர். திருமறை சுட்டிகாட்டும் வருங்காலத்தை குறித்து கவலையற்று காணப்படுகின்றனர். வாரந்தோறும் ஆலயத்தில் ஒன்று கூடி வழிபடும் போது 'தந்தையாம் கடவுளின் வலப்பக்கம் அமர்ந்திருக்கும் மைந்தராம் இயேசு கிறிஸ்து, வாழ்ந்திருப்போரையும், இறந்தோரையும் நடுத்தீர்க்க மீண்டும் வருவார்' எனப் பற்றுறுதியை நாம் அறிக்கை செய்கிறோம். இவைகள் அரசியல்வாதிகளின் வெற்று அறிக்கை போல தான் காணப்படுகிறது. கிறிஸ்துவின் வருகை அண்மையில் உள்ளது என்பதை இன்னும் நாம் புரிந்து கொள்ளாத நிலையில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். திருவருகைக் காலத்தில் நம்மை எவ்வாறு ஆயத்தப்படுத்த வேண்டும் என்றும், அது எப்படி மகிழ்ச்சியின் காலமாய் அமைகிறது என்பதைத் தொடர்ந்து தியானிப்போம்.

### *1. நம் உடன் தங்குவதால் மகிழ்ச்சி :* (செக் 2:6-13)

திருவருகைக்காலம் நம்மை ஒப்படைப்பின் வாழ்வுக்கு அழைக்கிறது. கடவுள் எங்கோ இருக்கிறார் என்றல்ல, அவர் எங்கும் இருக்கிறார்; நம் நடுவில் இருக்கிறார்; நடப்பவை அனைத்தும் அவர் திட்டப்படியே நடக்கின்றன. அவரை நம் திட்டத்திற்கு இசைவாக்க முயற்சியாமல் நாம் அவர் திட்டத்திற்கு இசைந்து வாழ்ந்தால் அவர் நம் நடுவில் வாசம் பண்ணுவதை அறிய முடியும். அதனால் வரும் மகிழ்ச்சியைப் பெற முடியும். எடுத்துக்காட்டாக, யோசேப்பு, மரியாள் இருவரும் கடவுளின் திட்டத்திற்கு இசைவாக நடந்தார்கள். ஆகவே

கடவுள் அவர்கள் நடுவில் உடன் தங்கினதால் மகிழ்ச்சியையும், ஆசிகளையும், அருளையும் பெற்றுக் கொண்டனர். இறைசாயலில் படைக்கப்பட்ட மனிதர் ஒவ்வொருவரிடமும் கடவுள் வவழ்ந்து கொண்டிருக்கிக்கிறார். நமக்காக, நம்மிடம் குடியிருக்க விரும்பிதான் அவர் இம்மானுவேலராய் வந்தார். பாவம் தவிர அனைத்திலும் நம்மை போல் வாழ்ந்து காட்டினார் தந்தையாகிய கடவுளின் திருத்திட்டதை நிறைவேற்றிச் சென்றார். அவரில் நம்பிக்கை கொள்வோர் வாழ்வின் நடுவில் அவர் தங்குவார்.

1818-ம் ஆண்டு சார்லஸ் மீட் அவர்கள் மயிலாடிக்கு வந்தார். அவரை பார்க்க மக்கள் கூட்டம் திரண்டது. அவர்கள் தாங்கள் என்ன நிலையில் இருக்கிறோம் என்று உணராமல், ஆடையின்றி வந்தனர். அவர்களை பார்த்த மீட் ஐயருக்கு மிகுந்த வேதனையாயிருந்தது. "ஏன் ஆடை அணியவில்லை?" என்று வினவினார். அதற்கு மக்கள் கூட்டம் ஆடை அணிந்தால் கிடைக்கும் தண்டனையைக் கூறினார்கள். உடனே மீட் ஐயர் இந்த நிலையை மாற்ற முயன்றார். 1822, 1828 மற்றும் 1855 ஆகிய ஆண்டுகளில் மூன்று மேலாடைக் கலகம் நடத்தி வெற்றி கண்டார். மீட் ஐயர் நம் நடுவில் வந்தமையால் நாம் இன்று நல்ல ஆடை உடுத்துவதுமல்லாமல், விடுதலை காற்றை மகிழ்ச்சியுடன் சுவாசிக்கிறோம். மீட் ஐயரின் வருகை முன்னோர்கள் வாழ்வில் மகிழ்ச்சி தந்தது. அது போலவே, கிறிஸ்துவின் வருகை நம் வாழ்வில் மகிழ்ச்சியை தந்தது. பெற்ற மகிழ்ச்சியின் அனுபவம் தொடர நம்மை அவர் கரத்தில் ஒப்படைக்க இத்திருவகைக் காலம் அழைக்கிறது.

***2. முழுமையாகக் காப்பதால் மகிழ்ச்சி :*** (1தெச 5:12-24)

திருவருகைக் காலத்தில் கடவுள் நம்மை சந்திக்க வருகிறார். நம் நடுவில் சங்க விரும்புகிறார். இவ்எதிர்பார்ப்பு நம் உள்ளங்களில் வரும்போது அவர் முன் நிற்க ஆயத்தப்படும் நாம் தீமைகளைக்களைய வேண்டும். கிறிஸ்துவின் முதல் வருகை அன்றைய சமூகத் தீமைகளையும், தனி மனிதத் தீமைகளையும் அகற்றியது. கடவுள் தீமைகளை வெறுக்கிறவர்.

கட்சன் போர்க்லெம் புகழ்பெற்ற சிற்பி. கலிபோர்னியாவிலே அவருடைய சிற்பக்கூடம் உள்ளது. அங்கு இருந்த ஒரு பாறையை சிற்பமாக்க உழைத்துக் கொண்டிருந்தார். இதனை பார்த்த சிறுவன் ஒருவன் அவரிடம் "ஏன் இந்த பாறையை இப்படி சிதைக்கிறீர்கள்?" என்று கேட்டான் அவர் சிரித்து கொண்டே ஒன்றுமில்லை எனக் கூறி இனிப்பு ஒன்றைக் கொடுத்து அனுப்பி வைத்தார். இந்த நட்பு தொடர்ந்தது.

ஒரு நாள் வந்தது கட்சன் செதுக்கிய பாறை ஆபிரகாம் லிங்கனாய் வெளிப்பட்டது. இதனை பார்த்த சிறுவன் கட்சனிடம் கேட்டான்; "எப்படி இந்த பாறைக்குள்ளே ஆபிரகாம் லிங்கன் இருப்பதை கண்டுபிடித்தீர்?" என்று அப்போது கட்சன் சொன்னார். "இந்தப் பாறையில் அகற்ற வேண்டியவைகளை அகற்றினேன் செதுக்க வேண்டியவைகளை செதுக்கினேன், அவ்வளவு தான்". கலிபோர்னியாவின் கவனிப்பரற்று கிடந்த பாறை வாஷிங்டன்னில் வரலாற்று சிற்பமாய் மாறினது. காரணம், அகற்ற வேண்டியவைகளை அகற்றியதால் விளைந்த விந்தை!

திருவருகைக் காலத்தில் நாமும் நம் வாழ்வில் உள்ள தீமைகளை அகற்றி, சரி செய்யப்பட வேண்டியவைகளை சரி செய்தால் நம் வாழ்வு மகிழ்ச்சியான வாழ்வாக மாறும் நம் வாழ்வில் ஒட்டி கொண்டிருக்கும் தீமைகளைக் களைந்து உறவுகளை சரி செய்து சுயநலம், பொறாமை, அகந்தை, ஆணவம், பெருமை....போன்றவைகளை களைந்து வாழ்வோம். திருவருகைக் காலத்தில் நம் உடல், உள்ளம், ஆன்மா அனைத்தையும் குற்றமின்றி பாதுகாக்கும் இறைகரங்களில் நம்மை ஒப்படைப்போம்.

### *3. நிறைவாழ்வு தருவதால் மகிழ்ச்சி :* (யோவா 16:16-24)

திருவருகைக் காலம் நாம் நம்முடைய செயல்களுக்குரிய பலனை பெற்றுகொள்ளும் காலம். கிறிஸ்துவின் திருப்பெயரால் நாம் பிறரால் பகைக்கப்படும் போது உலகம் மகிழும். ஆனால், ஆண்டவர் நம்மியிடம் வரும் காலத்தில் துக்கங்களும், பாடுகளும் மகிழ்ச்சியாக மாறும். அதுவரையில் நமது கண்கள் நாம் அனுபவிக்கும் இடுக்கண்களை நோக்காமல் கடவுளை நோக்குமாயின் நாம் பெறப் போகும் பலன் மகிழ்ச்சியே. நம் கண்கள் அவரையே நோக்கி பார்க்க வேண்டும் (சங். 123:2). வேலைகாரர்கள் அல்லது அடிமைகளின் கண்கள் தலைவனின் கையை நோக்கி இருப்பது கூலி அல்லது வெகுமதி பெறுவதற்குகே. கூலி என்பது நாம் செய்த வேலைக்கு கொடுக்கப்படுவது; வெகுமதி என்பது நம் வேலையைப் பாராட்டி நமக்குத் தரப்படுவது. திருவருகையின் காலத்தில் நமக்குரிய கூலியும், வெகுமதியும் கிறிஸ்துவுடன் கூட வரவிருக்கின்றன. எனவே, அவர் வரும் நாளில் நம் உள்ளம் மகிழும்படி இடுக்கண்களை அவரிடம் கூறி, தேவைகளில் உதவிடக் கேட்போம். நாம் கேட்டு கொள்ளுவது எதுவோ அதை அவர் நமக்கு தருவார். அதுவே நமக்கு மகிழ்ச்சியும் ஆசியுமாகும்.

டால்ஸ்டாய் நாவாலில் மார்டின் என்கிற செருப்பு தைப்பவர் கதை ஒன்று உண்டு. ஒருநாள் கடவுள் அவரது கனவில் வந்து "நான் நாளை உன் வீட்டிற்கு வரபோகிறேன்" என்றார். உடனே மார்ட்டின் மிகுந்த

மகிழ்ச்சியடைந்து தன்னுடைய வீட்டைத் தூய்மையாக்கி கடவுள் வந்தால் ஓய்வு எடுக்க ஒரு அறையை ஒதுக்கி, நல்ல உணவுப் பொருட்களை ஆயத்தம் செய்து மாற்று ஆடைகள் வாங்கி வைத்து காத்திருந்தான். கடவுள் வரவில்லை. நேரம் போய் கொண்டிருந்தது. அப்போது அவ்வழியாய் ஒரு வயது முதிர்ந்தவர் வந்து, "வெகு தூரத்திலிருந்து வருகிறேன், சற்று ஓய்வு எடுக்க இடம் தருவாயா?" என்று கேட்டார். உடனே மார்டின் கடவுள் வருவது வரை முதியவர் ஓய்வெடுக்க அந்த அறையைச் கொடுத்தார். கடவுளை இன்னும் காணவில்லை. அப்போது அந்த வழியாகக் கிழிந்த உடைகளுடன் ஒரு சிறுபையன் வந்தான். அவனை பார்த்த போது மார்ட்டின் இரக்கப்பட்டு வீட்டிலிருந்த மாற்று வஸ்திரத்தை கொடுத்து விட்டு, அவன் அனாதை என்பதை அறிந்து, தன்னோடு சேர்த்துக் கொண்டான். இரவு வந்தது. கடவுள் வரவே இல்லை. ஆகவே, கடவுள் மீது கோபத்துடன் நித்திரைக்கு சென்றான். அன்று இரவே மீண்டும் கனவில் கடவுள் வந்தார் கோபத்துடன் இருந்த மார்ட்டின் கடவுளிடம், "நீங்கள் ஏன் என் வீட்டிற்கு வரவில்லை?" என்று கேட்டான். அதற்குக் கடவுள், "நான் உன் வீட்டிற்கு வந்தேன். நீ எனக்கு ஓய்வு எடுக்க அறை தந்தாய், உண்ண உணவு தந்தாய், உடுக்க உடையும் தந்து என்னை உன்னோடு சேர்த்தும் கொண்டாய்" என்றார். இப்போது மார்டினுக்கு புரிந்தது; 'தான் ஏற்றுக்கொண்ட அனைவரும் கடவுளே' என்பதை உணர்ந்தார்.

நம்மைத்தேடி வரும் கடவுளை அலங்காரத்தோடும், ஆடம்பரத்தோடும், வரவேற்க ஆயத்தபடுகிறோம். ஆனால், கடவுளோ நம் நடுவில் எளிய நிலையிலே தான் வருகிறார் என்பதை புரிந்து கொண்டு இத்திருவருகைக் காலத்தில் நம் நடுவில் வந்து தங்க நம்மைப் பாதுகாக்க, நமக்கு நிறைவாழ்வு தர வரும் கடவுளைத் தீமைகளைக் களைந்து நல்ல பலனை பெறும் வண்ணம் வரவேற்று, அவருடன் வாழ அவர் கரத்தில் ஒப்படைப்போம்.

அருள்திரு. E. **சேம் ஜெபசிங்**

24-12-2020 **Christmas Eve**

# கடவுள் நம்மிடம் வருகிறார்

**GOD COMING TO US**

மீகா 5:1-9 திவெ 21:1-5

திபா 89:1-4;19-29 யோவா. 1:1-14

**"அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்து கொண்டிருந்தது".** (யோவா 1:9)

கிறிஸ்து பிறப்பின் நாளுக்கு முன் வருகின்ற 4 வாரங்கள் வருகையின் காலமாகும். இந்த வருகையின் காலங்களில் கிறிஸ்து பிறப்பின் மகிழ்வை மையப்படுத்திக் கொண்டாடுகிறோம். கிறிஸ்து பிறப்பின் கொண்டாட்டம் 3 முக்கிய கூறுகளை உள்ளடக்கியது.

1. **நினைவு கூர்தல்** : படைப்பை சீர்படுத்திய கடவுள் தமது உறவை, உடனிருப்பை உலகம் உணர குழந்தையாய் தோன்றினார்.
2. **உணர்த்துதல்** : கடவுள் வானுக்கு மேல் உள்ளவர் எனும் நிலையகற்றி நம்மிடையே குடிகொண்டார்.
3. **உலகமறிதல்** : கடவுள் தம் மீட்பு திட்டத்தை தனித்து நின்று செயல்படுத்தாமல் மனிதரோடு இணைந்து கூட்டுப்பணிக்கு வித்திடுகின்றார்.

இயேசு கிறிஸ்துவின் வருகையை மகிழ்ச்சியோடு எதிர்கொள்ள ஆயத்தப்படுவதுதான் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வின் வெளிப்பாடு ஆகும். ஒவ்வொரு வழிபாட்டிலும் நாம் அறிக்கையிடும் அப்போஸ்தலர் மற்றும் நிசேயா பற்றுறுதி அறிக்கையில் "நீர் திரும்பி வர காத்திருக்கிறோம்" என்று நம்முடைய பற்றுறுதியை உறுதிப்படுத்துகிறோம். வீட்டிற்கு விருந்தினர் வருகிறார்கள் என்றால் குழந்தைகளுக்கு மகிழ்ச்சி, குதுகலம் ஆவலோடு எதிர்பார்த்து காத்திருப்பார்கள். பெரியவர்கள் வீட்டை ஒழுங்காக வைத்து, தூய்மையாக்கி, விருந்து தயார்படுத்துவர். மேசியாவின் வருகையை ஆவலோடு இஸ்ரவேல் மக்கள் எதிர்பார்த்தனர். அவர் வருகை இஸ்ரவேல் மக்களுக்கு கொண்டாட்டம் நிறைந்த செய்தியாய் எதிர்பார்த்தனர். கடவுள் நம்மிடம் வருகிறார். அவரை எதிர்கொள்ள ஆயத்தப்படுவோம். அவர் வருகையால் நம் வாழ்வில் ஏற்படும் என்பதை சிந்திப்போம்.

## *1. அச்சம் அகன்று அமைதி வாழ்வு* : (மீகா 5:1-9)

"அவர் வரும் போது ஆண்டவரின் வலிமையோடும் தம் கடவுளாகிய ஆண்டவரது பெயரின் மாட்சியோடும் விளங்கி தம் மந்தையை மேய்ப்பார். அவர்களும் அச்சமின்றி வாழ்வார்கள்". அவரே அமைதியை அருள்வார் மீகா 5:4b.

மீக்காவின் காலத்தில் யூதா இஸ்ரயேல் ஆகிய இருநாடுகளிலும் சமுக, சமய அரசியல் நிலையில் குழப்பங்களும், கொந்தளிப்பும் மிகுந்து இருந்தது. இப்படிப்பட்ட சூழலில் ஒவ்வொரு பிரிவினரையும் ஆய்வுச் செய்து அவர்களது குற்றங்களை எடுத்துச்சொல்லி கண்டித்து பேசுகிறார். மேலும், அனைத்து மனுக்குலமும் கடவுளைத் தேடும் காலம் விரைவில் வரும்; அப்போது எருசலேமில் கடவுளுக்கு ஏற்புடைய உண்மையான வழிபாட்டை இறைவனுக்கு அளிப்பர், சமய பற்றுறுதி பெருகும். அக்காலத்தில் படையெடுப்பு, போர் ஆகியவற்றை பற்றிய அச்சுறுத்தல் இராது. நாட்டில் அமைதி உருவாகும், இஸ்ரயேலரின் எதிரிகள் அவர்களுக்குரிய தண்டனை பெறுவர். நாடு மீண்டும் அமைக்கப்படும். கடவுள் பற்றற்ற பேராசைமிக்க, அகந்தையுள்ள, நீதிமிக்க ஆட்சியாளர்களுக்குப் பதிலாக, நேர்மைமிக்க ஆட்சியாளர் ஆயரும், அரசருமாக தாவீதின் நகரமான பெத்லகேமிலிருந்து தோன்றுவார். இந்த மாட்சிமிக்க இறைவாக்கு கிறிஸ்து பிறப்பில் நிறைவேறும். அவரது தலைமையை மக்கள் ஏற்றுக்கொள்வர். சீயோனில் இறைவனது அரசு மகிமையோடு நிறுவப்படும். அப்போது அச்சம் அகன்று அமைதி வாழ்வு ஏற்படும் என்ற செய்தியை இறைவார்த்தையாக சொல்லி கடவுள் நம்மிடம் வருகிறார் என்ற செய்தியை மீக்கா வலியுறுத்துகிறார். நாமும் அச்சம் நிறைந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நோய், துன்பம், பாடுகள் வருகின்றபோது நாம் அச்சம் கொள்ளுகின்றோம். எதிர்காலத்தை குறித்த அச்ச உணர்வு. இன்றைய உலகில் நீதி, அமைதி, உண்மை நிலை இல்லை. வன்முறைகளும் அடக்கமுறைகளும் மிகுந்து அச்சம் நிறைந்தவர்களாய் வாழுகின்றோம். இந்நிலையிலிருந்து விடுபட்டு அமைதி வாழ்வு வேண்டி நிற்கின்றோம். இதோ கடவுள் நம்மிடம் வருகிறார் என்ற செய்தி புது நம்பிக்கையினையும், அமைதி வாழ்வினையும் தருவதாக அமைகிறது.

2008 ஆகஸ்ட் 25-ம் ஒரிசா மாநிலத்தில் இயேசுவைப்பற்றி சொல்லவும், வழிபடவும் தடைவிதிக்கப்பட்டு, கிறிஸ்தவர்களின் வழிபாட்டுத் தலங்கள் சமய வெறியர்களால் கொளுத்தப்பட்டு, கிறிஸ்தவர்களை வெறித்தனமாய் கொன்றனர். இயேசுவை வழிபட உரிமை மறுக்கப்பட்டது.

இந்நிலையில் ஐக்கிய நாட்டு பொது சபையின் 10-12-1948 அன்று உலகளாவிய மனித உரிமை உறுதிமொழி (Article-18 Universal declaration of Human Rights) சட்டத்தில் கூறப்பட்டதின் அடிப்படையில் எவரும் தம் சமய நெறியை பரப்பவும், வெளிப்படுத்தவும் உரிமை உண்டு என்ற தீர்மானம் உறுதிச் செய்யப்பட்டது. மறுக்கப்பட்ட உரிமை மீண்டும் நிலை நாட்டப்பட்டு அமைதி உருவானது. அச்சம் அகற்றி அமைதி வாழ்வு தர கடவுள் நம்மிடம் இருக்கிறார்.

### *2. பழையவை அகன்று புதிய வாழ்வு* : (திவெ 21:1-5)

“அப்பொழுது அரியணையில் வீற்றிருந்தவர் இதோ நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்” திவெ 21:5.

‘பழையவை அகன்று புதிய வாழ்வு’ என்பது புதிதாக ஒன்றை படைப்பது அல்ல. ஏற்கெனவே இருந்த பழைய வாழ்வின் கறைகளை மாற்றி புதிய தகவுகளோடு, அர்த்தமுள்ள வாழ்வாக மாற்றுவது தான் புதிய வாழ்வு. அதாவது, படைத்தவரின் சாயலை நம்மில் மீண்டும் நிலைநிறுத்தி கிறிஸ்துவை அணிவதாகும். கிறிஸ்துவின் வாழ்விற்குள் இணைக்கப்படுகிற அனுபவம். ஒருவர் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால் அவன் புதுபடைப்பு. அதாவது பழைய படைப்பு மறைந்து புதிய படைப்பு தோன்றுகிறது. புதிதாகப் பிசைந்த புதிய மாவாக இருக்கும் பொருட்டு, பழைய புளித்த மாவிலிருந்து தங்களை தூய்மைப்படுத்த வேண்டும். பழைய மனிதனை கழித்து விட்டு புதிய மனிதனை அணிய வேண்டும். உலகளாவிய இம்மறுநிலைப்படுத்துதல் இறுதி நாளில் வெளிப்படும். அந்நாளில் நீதி குடிகொள்ளும். புதிய வானம் புதிய பூமிதான் முழுமைப்பெறும். பழைய பாவ வாழ்வுகள் மண்ணில் நிலை நிற்பதில்லை. முந்நாளைய துன்பங்கள் மறைந்து போயின. அவை கடவுளின் பார்வையிலிருந்து மறைந்து போயின. முந்தியவை நினைத்துப் பார்க்கப்படுவதில்லை. மனதில் எழுவதும் இல்லை. மகிழ்ச்சியாக வாழும் வாழ்வை பெறுவர். முதலிலிருந்த வானமும் வையகமும் மறைந்து விடுகின்றன. கடவுள் நம்மிடம் வருகிறார் நம்மை புது படைப்பாக மாற்றுவோம்.

சிறுவன் ஒருவன் தன் ஆடுகளை காட்டுப் பகுதியில் மேய்த்துக் கொண்டிருந்தான். அப்போது ஒரு பொருளை காட்டுப்பகுதியில் கண்டெடுக்கிறான். கண்டெடுக்கப்பட்ட பொருள் என்ன என்பதும்? அதன் பயன்பாடு என்ன என்பதும்? அச்சிறுவனுக்கு தெரியாது. அந்த பொருளில் குழல் வடிவத்தில் நீளமான பாகம் ஒன்று இருந்தது. அந்த பொருளை உடைத்து நீளமான குழல் வடிவ பாகத்தை மட்டும் எடுத்துக் கொண்டான்.

இந்த குழல் பகுதியை விளையாட்டாக வாயில் வைத்து ஊதினான், அப்போது அதிலிருந்து ஒரு சத்தம் வந்தது. உடனே சிறுவன் சிந்தித்து அந்த குழல் பகுதியில் பல துளைகளை உருவாக்கினான். இப்போது ஊதுகின்றான். அதிலிருந்து இனிமையான இசைவந்தது. அனைவரும் விரும்புகின்ற புல்லாங்குழல் என்ற இசைகருவியாக மாற்றினான். கண்டெடுக்கப்பட்ட பொருள் என்பது வேட்டையாட பயன்படும் துப்பாக்கி ஆகும். இத்துப்பாக்கி பிறரைஅழிக்கின்ற கொலைக்கருவி. ஆனால் அதை உடைத்து கழிக்க வேண்டிய பாகங்களை கழித்து, சேர்க்க வேண்டியதை சேர்த்த போது ஒரு இசை கருவியாக அனைவரும் விரும்புகின்ற புது படைப்பாக மாற்றப்பட்டது. கடவுள் நம்மிடம் வருகின்றார் நம் வாழ்வில் தேவையற்றவைகளை மாற்றி மாற்றுருவாக்கத்தினை உருவாக்கி புதிய மனிதருடைய இயல்புகளோடு வாழ்வோம்.

### *3. இருள் அகன்று ஒளிர்விக்கும் வாழ்வு* : (யோவா 1:1-14)

“அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்து கொண்டிருந்தது” (யோவா 1:9).

யோவான் நற்செய்தியாளர், இயேசுவின் வருகையைப்பற்றி வெளிப்படுத்தும்போது வாக்கு மனிதரானார் என கூறுகின்றார். தொடக்கத்தில் உருத்தெரியாமல் கடவுளோடு இருந்த வாக்கு உருத் தெரியாமல் இருந்த உலகிற்கு ஒளி கொடுத்தார். ஆனால், இந்த ஒளியின் தகவுகளான நீதி, நேர்மை, அன்பு, அமைதி சாதாரண மக்களை சென்றடையவில்லை. இதனால் சமுகத்தில் சுரண்டலும் ஏமாற்றுதலும், அடிமைத்தனத்தின் கூறுபாடுகளும் மலிந்து காணப்பட்டன. இச்சூழலில் வாழ்விழந்து சாவின் விளம்பு நிலையில் இருப்போருக்கு ஒளிபிரகாசிக்கும், அது வரப்போகும் அரசர் வழியாய் கிடைக்கும். உலகின் ஒளியாம் இயேசு கிறிஸ்துவைப் பின் தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார். வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பர். கடவுளின் மாட்சியை நாம் காண்பது மாத்திரமல்ல, மற்றவர்களுக்கு முன் அந்த மெய்யான ஒளியை நம் நற்செயல்கள் மூலம் மற்றவரையும் ஒளிரச் செய்ய வேண்டும். கடவுள் ஒளியாய் நம்மிடம் வருகிறார். தம் ஒளியை பின்பற்றும் அனைவரையும் ஒளிரச் செய்கிறார். இதன் வழியாக அனைவரும் வாழ்வு பெறுவர்.

ஒரு முறை விமானி ஒருவர் ஒற்றை இஞ்சின் கொண்ட சிறு ரக விமானத்தில் இன்னொரு நாட்டிற்கு நேராக பயணித்துக் கொண்டிருந்தார். இருள் ஆரம்பித்தவுடன் தன்னுடைய விமானத்தை தரை இறக்க

முற்பட்டார். ஓடுதளம் பனிமூட்டத்தினால் சரியாகத் தெரியவில்லை. விமானத்தின் விளக்குகள் தரை இறங்கும் போதுமான வெளிச்சமாகவும் இல்லை. ஆகவே விமானத்தை தரை இறங்க முடியாமல் வட்ட மடித்துக் கொண்டிருந்தார். இந்நிலையில் தரையில் இருந்த மற்றுமொரு விமானி பார்த்து விட்டார் போதுமான வெளிச்சம் இல்லாத காரணத்தினால் தரையிறங்க முடியவில்லை என்று உணர்ந்து, அங்கு ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தின் விளக்குகளை எரியச் செய்து விமான ஓடு பாதையில் வெளிச்சத்தை பாய்ச்சினார். சரியான பாதை தெரிந்ததும் விமானி தனது விமானத்தை பத்திரமாக தரை இறக்கினார். ஆபத்திலிருந்து தப்பித்துக் கொண்டார். இருள் அகற்றிய பேரொளியாம் இயேசுவின் ஒளி நம் வாழ்விற்கு வழியாக அமைந்துள்ளது. இன்று நாமும் அந்த உண்மை ஒளியை பெற்று மற்றவர்கள் முன்பு பிரகாசிக்க வைக்கப்பட்டவர்கள். எங்கெல்லாம் இருளின் ஆதிக்கம் குடிக்கொண்டிக்கிறதோ, அங்கெல்லாம் கடவுளின் ஒளியை ஒளிரச் செய்வோம். கடவுளே நமக்கு முடிவில்லா பேரொளி. அவர் நம்மை ஒளிர்விக்க நம்மிடம் வருகின்றார்.

அன்பர்களே! கடவுளின் வருகையை மகிழ்ச்சியோடு எதிர்கொள்ள ஆயத்தப்படுவது தான் வெற்றியுள்ள வாழ்வின் வெளிப்பாடு ஆகும். இவ்வருகையில் நம் வாழ்வின் அச்சம் அகன்று அமைதி வாழ்வு ஏற்படும், பழையவை அகன்று புதிய வாழ்வு மலரும், இருள் அகன்று ஒளியுள்ள வாழ்வு ஒளிரும். இந்த தகவுகளோடு தூய வாழ்வு வாழ்வோம். இறையாசீர் நம்மில் நிறைந்திருப்பதாக ஆமென்.

அருள்திரு. S.G. ***பீபின்***

25-12-2020

*கிறிஸ்துப் பிறப்புப் பெருவிழா*

## கிறிஸ்துப் பிறப்பு : அமைதியின் அரசருக்கு இடத்தைக் கண்டறிதல்

**CHRISTMAS : FINDING SPACE FOR THE PRINCE OF PEACE**

| | |
|---|---|
| எசா 9:2-7 | எபே 1:3-14 |
| திபா 85:8-13 | லூக் 2:1-14 |

**“அவர் தம் தலைமகனைப் பெற்றெடுத்தார். விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே, பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார்”.** (லூக் 2:7)

வரலாறு, தங்களைத் தாங்களே கடவுளிடமிருந்து வந்தவர்கள் என்று பறைசாற்றிக் கொண்ட மனிதர்களாலும், இவர்கள் கடவுளிடமிருந்து வந்தவர்கள் அல்லது கடவுளால் அனுப்பப்பட்டவர்கள் என்று மக்களால் புகழப்பட்ட மனிதர்களாலும் நிரம்பிக் கிடக்கின்றது. அத்தகைய பல தலைவர்களைக் காலந்தோறும் இவ்வுலகம் பிரசவித்துக் கொண்டே இருக்கிறது. ஆனால் இத்தகைய தலைவர்கள் எல்லோரும் தங்கள் தலைசிறந்த போதனையாலும், வாழ்க்கை முறையாலும் மக்களால் அங்கீகரிக்கப்பட்டவர்கள். இத்தகைய தலைவர் ஒருவர் இவ்வுலகில் பிறப்பார், அதற்கான அடையாளங்கள் இவைகளே என்று இவ்வுலகில் எந்தத் தலைவரையும் குறித்த முன்னறிவித்தலோ, எதிர்பார்ப்போ இருந்ததில்லை. ஆனால், மெசியாவின் வருகையும், பிறப்பும் காலந்தோறும் முன்னறிவிக்கப் பெற்ற, எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகும். அப்படி முன்னறிவிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவுக்கு வழங்கப்பெற்ற பெயர்தான் “அமைதியின் அரசர்” (Prince of Peace) (எசா 9:6) என்பதாகும். அமைதிக்கான ஏக்க ஓலம் உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருந்த சூழலில் கடவுள் கிறிஸ்துவில் தம்மை முழுமையாக வெளிப்படுத்தி அமைதியை அருளினார்.

அமைதி என்பது அடக்குமுறையினால் வருவதன்று; பிறரை ஒடுக்கி உருவாக்கும் அமைதியும் அன்று. இவ்வுலக நாடுகளும் அதன் தலைவர்களும் உருவாக்கும் அமைதி அத்தகையதே. அதனால் தான் அவ்வமைதியின் நிலைப்புத் தன்மை குறுகியதாய் இருக்கின்றது. ஆனால் கடவுளின் மனுவுருவேற்பில் உருவாகும் அமைதி, தாழ்மையிலும், மனிதரோடு சமத்துவம் பேணுவதிலும், மனிதரின் வலுவின்மையில் பங்கேற்பதிலும் அடங்கியிருக்கிறது. இது அன்பின் மிகுதியினாலும் நிறைவினாலும் உருவாகும் அமைதியாகும்.

To love is to be vulnerable (அன்பு செய்வதென்பது பிறர் நலன்பொருட்டு தன்னை வலுவின்மைக்கு உட்படுத்துவதாகும்) (2கொரி

8:9) என்கிறார் C.S. லூயிஸ். In incarnation, God becomes vulnerable for human welcome (மானுடரை மாண்போடு வரவேற்க, மனுவுருவேற்பில், கடவுள் தம்மை வலுவின்மைக்கு உட்படுத்தினார்) என்கிறார் Christine D. Pohl. அனைத்து ஆற்றலும் பொருந்திய, அனைத்தையும் அறிந்த, அனைத்து இடங்களிலும் வியாபித்திருக்கின்ற கடவுள், மானிடர்க்கு நிலையான அமைதியை உருவாக்கும் பொருட்டு கிறிஸ்துவில் தம்மை வலுவின்மைக்கு உட்படுத்தினார் (எசா 53:2-5). அமைதியின் அரசராக இவ்வுலகில் பிறந்த குழந்தையை உலகம் காண அடையாளமாகச் சொல்லப்பட்ட இடம்தான் (லூக் 2:12) கிறிஸ்துப் பிறப்பின் ஆழ்ந்த பொருளையும் கடவுளின் ஒப்பற்ற அன்பையும் அமைதியையும் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

அமைதியின் அரசருக்கு இடத்தை எங்கே கண்டறிவது?

### *1) திருக்கோவிலில் அல்ல; தீவனத்தொட்டியில் :*

(லூக் 2:7,12,16)

பழைய ஏற்பாட்டில், பொதுவாக, திருக்கோவிலும், சந்திப்புக் கூடாரமும் கடவுள் தம் மக்களைச் சந்திக்கும் இடமாகச் சொல்லப்பட்டுள்ளன. கடவுள் தம் திருக்கோவிலில் வீற்றிருக்கிறார்; அங்கிருந்து மக்களுக்குக் காட்சியளிக்கின்றார், ஆசி வழங்குகின்றார் என்பது இஸ்ரயேலரின் நம்பிக்கை. திருக்கோவில், தூய தலமாக, கடவுளின் திருஉறைவிடமாகக் கருதப்பட்டது. காலப்போக்கில் அரசர்களின், மக்களின் தவறான வாழ்க்கை முறையாலும் நெறிகேட்டினாலும், திருக்கோவில் அதன் தெய்வீகத் தன்மையை இழந்துபோனது. ஏழைகள், நோயாளர்கள், புறவினத்தார் திருக்கோவிலுக்குப் புறம்பாக்கப்பட்டனர். என் இல்லம் மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய இறைமன்றாட்டின் வீடு (எசா 56:7) என்பதே திருக்கோவிலைக் குறித்த கடவுளின் திருவிருப்பம். ஆனால், திருக்கோவிலில், இனம், பொருளாதாரம், சமூகநிலை, உடல்நலன் என்பவற்றை முன்னிறுத்தி மக்கள் புறந்தள்ளப்பட்டனர். எனவே திருக்கோவில் அதன் மாட்சியை இழந்து நின்றது.

இச்சூழலில் மனுவுருவேற்ற கடவுள், மானிடரைச் சந்தித்த முதல் இடம் திருக்கோவில் அல்ல; தீவனத் தொட்டியாகும் (The manger was a first meating place of God in human form with humanity). அமைதியின் அரசராக உலகுக்கு வந்தவர் தம்முடைய முடிசூட்டுதலுக்கு அரியணையாகத் தேர்ந்தது முன்னையாகும். (stable was the Messiah’s first throne room) ஆன்மிக மையமாக இருக்க வேண்டிய ஆலயம் அதிகாரத்தின் மையமாக மாறிப் போனதால், அனைவரையும் ஒன்றிணைக்கும் ஊடகமாக இருக்க வேண்டிய கோவில் பிரிவினையின் தலமாக திகழ்ந்ததால் கடவுளின் பார்வையில் முன்னணை முதன்மை

பெற்றது. முன்னணை ஒருமைப்பாட்டு மையம். சமய, சமூக, ஆன்மிக எல்லைகளைக் கடந்து கடவுளைக் காணும் பேற்றை இடையர்கள் பெற்ற இடமாகும் (The Manger is open to all. It gives free access to all. It had no doors and windows).

ஆகவே தான் குழந்தை இயேசுவைக் காணும், தொழும் வாய்ப்பு விளிம்புநிலையிலிருந்த, இருளில் அச்சத்தோடிருந்த இடையருக்கு வழங்கப்பட்டது. காரிருளில் பேரொளியாக கிறிஸ்துப் பிறப்பின் நற்செய்தி அவர்கட்கு அறிவிக்கப்பட்டது. "எங்கு மிகவும் சிறியவராகிய ஒருவர் மிகுந்த ஆவலோடு கடவுளைக் காண ஏங்குகிறாரோ அங்கு கடவுள் இருக்கின்றார்" (Divinity is always where one least expects to find it) என்கிறார் ஃபுல்டன் ஷீன். எனவே அர்த்தமற்ற ஆரவாரங்களில் அல்ல, ஆடம்பரமான அலங்காரங்களிலும் அல்ல; மாறாக, எளிமையிலும் தாழ்மையிலும் கடவுளைக் காண முடியும் என்பதற்குத் தீவனத்தொட்டியும் இடையரும் சான்று.

வானமும் வான மண்டலங்களும் கடவுளைக் கொள்ள இயலாதிருக்க, திருக்கோவிலும் அவரைக் கொள்ளாதிருக்க (1அர 8:27). தீவனத்தொட்டி அவருக்குப் போதுமானதாக இருந்தது வியப்புக்குரியது. இதைத் தான் இந்த முழு உலகத்தைக் காட்டிலும் பெரியதை ஒருமுறை இவ்வுலகில் தீவனத் தொட்டி கொண்டிருந்தது (once in our world, a stable had something in it that was bigger than our whole world) என்கிறார் C.S. லூயிஸ்.

"காளை தன் உடைமையாளனை அறிந்து கொள்கின்றது; கழுதை தன் தலைவன் தனக்குத் தீனிபோடும் இடத்தைத் தெரிந்துகொள்கின்றது; ஆனால் இஸ்ரயேலோ என்னை அறிந்து கொள்ளவில்லை; என் மக்களோ என்னைப் புரிந்துகொள்ளவில்லை" (எசா 1:3) என்ற கடவுளின் மனித முறையிலான ஆதங்கத்தை எசாயா இறைவாக்கினர் வழியாக நாம் அறிந்து முன்னணையில் தம்மை வெளிப்படுத்திய இறையன்புக்கும் இறையமைதிக்கும் சான்று பகரவேண்டும்.

"வீடற்றவரின் பிறப்பு ஒவ்வொரு வீட்டிலும் நிச்சயம் கொண்டாடப்பட வேண்டும் என்னும் அழகான மற்றும் தன்முனைப்புடைய முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டதே கிறிஸ்துப் பிறப்பு" (Christmas is built upon a beautiful and intentional paradox that the birth of the homeless should be celebrated in every home) என்கிறார் G.K. செஸ்டர்டன். இவ்வுலகில் வீடற்றவர்களை, நாடற்றவர்களை, ஆதரவற்றோரை நம் திருச்சபையிலும் இல்லங்களிலும் உள்ளங்களிலும் ஏற்றுக்கொள்வதே தீவனத் தொட்டியில் தம்மை வெளிப்படுத்திய அமைதியின் அரசருக்கு இடத்தைக் கண்டறிவதாகும். திருச்சபை சத்திரமாக அல்ல, முன்னணையாகத் திகழ்வதே கிறிஸ்துவின் உடனிருப்புக்கு அடையாளம்.

### *2) அமைதியின் நகரில் அல்ல; அப்பத்தின் வீட்டில் :*

(லூக் 2:5)

எருசலேம் - அமைதியின் நகர் (City of Peace)
பெத்லகேம் - அப்பத்தின் வீடு (House of Bread)

இஸ்ரயேலரின் வாழ்வில் எருசலேம் அரசியல் மற்றும் ஆன்மிக மையமாக விளங்கியது. எருசலேம் என்பதற்கு அமைதியின் நகர் என்று பொருள். ஆனால் வரலாற்றில், அமைதியின் நகர் தனது அமைதியை இழந்துபோனது. எருசலேமில் சமாதானம் நிலைத்திருக்கும்படி வேண்டிக் கொள்ளுங்கள் (திபா 122:6,7,8) என்ற திருப்பாடலாசிரியரின் நம்பிக்கை பொய்த்துப் போனது. இவ்வுலகுக்கு அமைதியை அருள வந்த அமைதியின் அரசர் தம் பிறப்பிடமாகத் தேர்ந்து கொண்டது அமைதியின் நகர் என்றழைக்கப்பெற்ற எருசலேமை அல்ல; மாறாக, அப்பத்தின் வீடு என்னும் பொருள்கொள்ளும் பெத்லகேமையே தெரிந்துகொண்டார். அமைதியின் நகருக்கே அமைதியளிக்க அப்பத்தின் வீட்டைத் தெரிந்துகொண்டார் (மீக்கா 4:8; 5:2). இங்கு கிறிஸ்துவின் பிறப்போடு தொடர்புப்படுத்தி உரைக்கப்பட்ட இறைவாக்கையும் (மீகா 5:2), மத்தேயுவின் மேற்கோளையும் (மத் 2:6) அவற்றின் ஒத்திசைவையும், வேறுபாட்டையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மீக்கா : எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே! யூதாவின் குடும்பங்களுள் **மிகச்சிறியதாய் இருக்கின்றாய்!** ...என் சார்பாக ஆளப் போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார் (5:2).

மத்தேயு : யூதா நாட்டு பெத்லகேமே, யூதாவின் ஆட்சி மையங்களில் நீ **சிறியதே இல்லை**...ஆயரென ஆள்பவர் உன்னிலிருந்தே தோன்றுவார் (2:6).

மீக்கா, பெத்லகேமைச் சிறியது என்கிறார். மத்தேயுவோ, சிறியதல்ல என்கிறார். இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் சிற்றூர் சிறப்பு பெற்றது என்பதற்கு பெத்லகேமே சான்றாக உள்ளது. உலகுக்கு வாழ்வருளும் உணவாக வந்தவர், உணவின் இல்லத்தைத் தம் தவழும் இடமாகத் தேர்ந்தது குறிப்பிடத்தக்கது. சிறியதாகக் கருதப்படுவதை, முக்கியத்துவம் கொடுக்கப்படாததை முதன்மைப்படுத்துவதே கிறிஸ்துப் பிறப்பு என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

### *3) கோமகனின் குடியிருப்பில் (அரண்மனை) அல்ல; கொல்கொதாவில் :*

கடவுளின் மனுவுருவேற்பில் நாம் பெரிதும் கொண்டாட வேண்டியவை முன்னணையும் சிலுவையும் ஆகும். முன்னணையையும் சிலுவையும் ஒன்றையொன்று பிரிக்க முடியாது. உலகுக்கு அமைதியைத் தர வந்த ஆண்டவர், அரசராக முடிசூட்டிக்கொண்டது முன்னணையில் என்றால் வெற்றிவாகை சூடியது சிலுவையில் ஆகும். குழந்தை இயேசு

துணிகளில் சுற்றப்பட்டு தீவனத்தொட்டியில் கிடத்தப்பட்டதற்கும் (லூக். 2:12) இறுதியில் அவரது உடல் மெல்லிய துணியால் சுற்றப்பட்டு கல்லறையில் வைக்கப்பட்டதற்குமான (லூக் 23:53) பொருத்தப்பாட்டைப் புரிந்துகொள்வது அவசியம். இவ்வுலகில் வாழ்வைக்குறித்தும் சாவைக்குறித்தும் போதித்த தலைவர்களுக்கெல்லாம் அவர்களின் மரணம் தடைக்கல்லாய் இருந்திருக்கின்றது. ஆனால் கிறிஸ்துவுக்கோ அவரது மரணமே இலக்காகவும் இலட்சியமாகவும் இருந்தது. இதைத்தான் ஃபுல்டன் ஷீன், "இவ்வுலகுக்கு வரும் ஒவ்வொருவரும் வாழ்வதற்கென வருகின்றனர். ஆனால் இயேசு கிறிஸ்து பிறர்க்கென மரணிக்க இவ்வுலகுக்கு வந்தார்" (Every other person who ever came into this world came into it to live. But Jesus came into it to die) என்கிறார். இதை இயேசு முன்னணையில் தொடங்கி சிலுவையில் நிறைவு செய்தார் (எபே 1:7). கிறிஸ்துவின் சிலுவை என்பது அவரது பிறப்பிலிருந்தே தொடங்கிவிட்டது என்பதற்குத் தீவனத்தொட்டியே சான்று. முன்னணையும் சிலுவையும் தம்மையே வெறுமையாக்குவதற்கும் (Self-emptying) அடிக்கப்பட ஒப்புக்கொடுத்தலுக்கும் (Committing to be slain) அடையாளமாய் இருக்கின்றன.

ஏனெனில், உலகம் தோன்றிய தொடக்கத்தில் பாவம் பிறந்தது. பாவம் பிறந்த உடனேயே மனுக்குலத்திற்கான கடவுளின் மீட்புத் திட்டமும் பிறந்துவிட்டது (தொநூ 3:15). ஆகவே தான், திருவெளிப்பாட்டு நூலில், கிறிஸ்துவைக் குறித்து, உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி... (The Lamb who was slain from the creation of the world (KJV) (வெளி. 13:8) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிறிஸ்து கிடத்தப்பெற்ற முன்னணை விலங்கினங்களுக்கானது. அடக்கம் செய்யப்பெற்ற கல்லறை இரவலாகப் பெறப்பட்டது. ஆகவே கிறிஸ்துவின் சிலுவை என்பது தொடக்கத்திலிருந்தே அவரைத் தொடர்ந்த ஒன்றாகும்.

கிறிஸ்துப் பிறப்பைக் கொண்டாடும் நாம், அமைதியை நிலைநாட்ட வந்த அரசர், சந்திப்பு நிகழும் இடமாக, சமாதானத்தின் பிறப்பிடமாக, சிலுவையின் முன்னடையாளமாக முன்னணையையே தெரிந்து கொண்டார் என்பதையும், முன்னணையும், பெத்லகேமும், கொல்கொதாவும் அவரது வாழ்வில் முதன்மையான இடத்தைப் பெற்றன என்பதையும் உணர்வோம். முன்னணையே அவருக்கு அரியணை, சிலுவையே அவர் தலைசாய்க்கும் இடம்.

அமைதியைப் பெறுவதற்கான ஒரே வழி நீதிக்காக உழைப்பதாகும் (If you want peace, work for justice) என்றார் போப் இரண்டாம் ஜாண் பால். எளியோர், ஏழையர், ஒடுக்கப்பட்டோர், அகதிகளாகத் துரத்தப்படுவோர், ஆதரவற்றோர் போன்றோருக்கு நீதி செய்வதும், அவர்களை ஏற்றுக்கொள்வதும், அவர்களுக்கு இடமளிப்பதுமே அமைதியின் அரசருக்கு இடத்தை அளிப்பதாகும்.

திரு. **B. சாம் ஜெபசிங்**

27-12-2020

**கிறிஸ்துப் பிறப்புக்குப் பின்வரும்**
**முதலாம் ஞாயிறு & குடும்ப ஞாயிறு**

## குடும்பம் : கடவுளின் அருட்கொடை

**FAMILY AS GIFT OF GOD**

யோசு 24:14-22 எபே 3:14-21
திபா 128 மாற் 3:31-35

**"...நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்."** (யோசுவா 24:15)

கடவுள் உலகில் ஏற்படுத்தியுள்ள அமைப்புகள் இரண்டாகும். அவை (1) குடும்பம் (2) திருச்சபை. இவற்றுள் குடும்பம் முதன்மையானது. குடும்பம் என்ற அமைப்புக்கு அடிப்படை திருமணம் ஆகும். திருமண விழா தான் குடும்ப வாழ்வின் தொடக்கமாகும். குடும்ப வாழ்வில் கணவனும், மனைவியும், பிள்ளைகளும் மிக முக்கியமானவர்கள். முப்புரிக் கயிறு அறுவது கடினம் (சஉ 4:12) என சபை உரையாளர் கூறுகிறார். முதல் புரி - கணவன், இரண்டாவது புரி - மனைவி, மூன்றாம் புரி - இறைவன். இவ்விதமாக மூன்றுபுரிகள் இணைந்து அமைக்கப்பட்ட பாசப்பிணைப்புத்தான் குடும்பம். "வாழ்வின் சமூக, அரசியல் மற்றும் பரிணாமங்களைக் கொண்ட ஒரு தெய்வீக நிலையம்தான் குடும்பம்" என அருளாளர். K.V. சைமன் கூறுகிறார்.

குடும்ப உறவுகளை ஒன்றிணைத்து இறைவன் வழி நடத்துகிறார் (திபா 127). ஆண்டவரைத் தலைவராகக் கொண்ட குடும்பம் நிறைவை நோக்கிப் பயணம் செய்கிறது. எனவேதான் யோசுவா, "... நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்" (யோசு 24:15b) என்றார். மகிழ்ச்சியான குடும்பம் பூமியிலே ஒரு பரலோகம் போன்றது. அது பாசங்களையும் அன்பையும் கற்றுக் கொடுக்கும் படைப்புக்கூடமாகும். அதே நேரத்தில் குடும்பம் என்பது சவால்கள் நிறைந்தது. துன்பமும் மகிழ்ச்சியும் நிறைந்தது. சவால்களையும் துன்பங்களையும் சோதனைகளையும் கடந்து கடவுளில் குடும்பங்களைக் கட்டும் போதுதான் குடும்பங்கள் மேன்மை பெறுகிறது. கடவுளில் கட்டப்பட்ட யோசுவாவின் குடும்ப வாழ்வில் காணப்பட்ட கடவுள் பற்றும் குடும்பப் பாசமும் நமது குடும்ப வாழ்வுக்குச் சவாலாக உள்ளது என்பதைத் தியானப் பகுதியான யோசுவா 24:14-22 தெளிவுப்படுத்துகிறது.

### *1. தன்னை முன் நிறுத்தும் யோசுவா :* (யோசு 24:15b)

யோசுவா எப்பிராயீம் இனத்தைச் சேர்ந்த நூனின் மகனாவார் (1 குறி 7:20-27). மோசேயின் உண்மைத் தொண்டராக இருந்து அவருடைய புனிதச் செயல்களுக்கெல்லாம் சாட்சியாக விளங்கினார் (எண் 7:14). அடிமைத்தனத்திலிருந்து தங்களை விடுவித்த கடவுளை மறந்து போன இஸ்ரயேல் மக்கள் அனைவரையும் கூடி வரச் செய்து வரலாற்றில் கடவுள் எங்ஙனம் செயல்பட்டார் என்பதைத் தெளிவுப்படுத்தினார் (யோசு 24 அதி). அதுமட்டுமல்ல மக்களை நன்றியுடன் வாழ அழைப்புக்கொடுத்து தன்னை மாதிரியாக முன்நிறுத்தினார் (யோசு 24:15). யோசுவா ஜனங்களுக்கு முன் தைரியமாகக் கூறும் அளவில் தனது தலைமைத்துவத்தைச் சரிவர தனது வீட்டில் நடத்தி வந்ததைக் காண்கிறோம். ஆக்கில்லா பிரிஸ்கில்லா தம்பதியரின் குடும்ப வாழ்வும் முன்மாதிரியான குடும்பத்துக்கு உதாரணமாகத் திருமறை கூறுகிறது (திப 18:1-13). கணவனின் அன்பான தலைமைத்துவத்தை மனைவி ஏற்றுக்கொண்டு, கணவனை மதித்து அவரோடு சேர்ந்திணைந்து இருவருமாக குடும்பப் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

குடும்பவாழ்வு சிறக்க குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினர்களின் ஒத்துழைப்பும், மாதிரியான வாழ்வும் மிக முக்கியமானது. சரியான நிர்வாகம் குடும்பத்தில் இருந்தால் குடும்பம் கடவுளுக்குச் சாட்சியாகக் காணப்படும். அதற்கு யோசுவாவைப்போலத் தங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ளும் மனநிலை கணவனுக்கும் மனைவிக்கும் தேவையாகும். குடும்ப அங்கத்தினர்களுக்கிடையே உறவுகள் வலுப்பட பெற்றோரின் முன்மாதிரியான வாழ்க்கையும் போதனையும்தான் அடித்தளமாகும் (இச 6அதி). அதுமட்டுமல்ல பல்சமய மக்கள் நிறைந்த சூழலில் வாழும் நமது குடும்ப வாழ்வு கடவுளுக்கு சாட்சியாக அமைந்தால் அநேகர் கடவுளின் மக்களாக மாற நாம் கருவிகளாவோம்.

### *2. தன் குடும்பத்தை முன்மாதிரியாக்கும் யோசுவா* : (யோசு 24:15b)

அடிமைப்பட்ட நிலையில் காணப்பட்ட தங்கள் வாழ்வில் கடவுள் எப்படிச் செயல்பட்டார் என்பதை இஸ்ரவேல் குடும்பத்தார் மறந்து போயினர். எருசலேமில் காணப்படும் உயர்ந்த மலையின் மீதுள்ள கடவுளின் திருக்கோவிலில் அவரது பிரசன்னம் உள்ளது. விண்ணுக்கும்

மண்ணுக்கும் உயர்ந்திருக்கும் ஆண்டவர் நம்மை மேன்மைப்படுத்துகிறவர் என்ற அசையாத நம்பிக்கையும், எருசலேமின் நல்வாழ்வைத் தருபவர் என்ற உணர்வும் இஸ்ரயேலரிடம் இருந்தது. எருசலேம் என்ற வார்த்தையைப் பிரித்து பொருள் கொள்ளும் போது எரு-நகரம், சலேம்-அமைதி வாழ்வு என்பது எபிரேய மொழியின் பொருளாகும். முன்னொரு நாளில் எருசலேமின் நல்வாழ்வு என்பது இஸ்ரயேலரின் ஒட்டு மொத்தமான பாதுகாப்பையும் குடும்பக் கூட்டுவாழ்வின் மேன்மையையும் குறிப்பதாகக் கருதப்பட்டது. எனினும் திருப்பாடல் 128:5-6 வசனங்களில் சீயோனிலிருந்து ஆசி வழங்கி எருசலேமின் நல்வாழ்வைக் காண்பித்த கடவுளின் செய்கைகளை இஸ்ரயேலர்கள் அனுபவித்தும் நன்றி கெட்டவர்களாய் தடுமாறினர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் யோசுவா தன்னை முன் நிறுத்தியது மட்டுமல்ல தன் குடும்பத்தையும் மாதிரியாக முன்நிறுத்தித் தைரியமாகப் பேசினார். தானும் தன் குடும்பமும் கடவுளை மறந்துவிடவில்லை எனத் தன் குடும்பத்தின் அங்கத்தினர்களை, தடுமாறி நிற்கும் மக்கள் முன் மாதிரியாகக் காண்பித்தல் எத்தனை சிறப்பானது!

யோசுவா தனது குடும்பத்தை முன்மாதிரியாய் முன்நிறுத்தியவுடன் கூடியிருந்த அனைவரது உள்ளங்களும் உடைந்தது. தங்கள் தவறுகளை உணர்ந்து கொண்டவர்களாய் நாங்களும் ஆண்டவருக்கு ஊழியம் புரிவோம் என்றார்கள் (யோசு.24:18). கடவுளுக்காய் நம் குடும்பங்கள் சான்றுபகரும்போது அநேக குடும்பங்களை இறைவனுக்குச் சான்றுபகர உருவாக்க முடியும்.

### 3. *தயாபரரில் பக்தி கொள்ளும் யோசுவா :* (யோசு 24:15b)

குடும்ப மகிழ்ச்சியின் தொடர்ச்சிக்கு அடித்தளம் உண்மையான இறைப்பக்தியாகும் என்பதை யோசுவா ஆணித்தரமாகக் கூறுகிறார். ஏனெனில் விண்ணுலகிலும் மண்ணுலகிலுமுள்ள ஒவ்வொரு குடும்பமும் நல்ல குடும்பமாக விளங்கக் காரணமாயிருப்பவர் கடவுள் என்பதை யோசுவா தன் வாழ்வில் உணர்ந்து செயல்பட்டார். ஒருவர் தன் மனைவி, பிள்ளைகள் ஆகியோரின் பக்தி வைராக்கியமான வாழ்வினை நன்கு அறிந்து செயல்பட்டாலொழிய 'ஆண்டவருக்கே பணி செய்வோம்' என உறுதியாகச் சொல்ல முடியாது. யோசுவா தன் குடும்பத்தின் இறைப்பக்தியில் மிகக் கவனமாக கரிசனை உடையவராக இருந்தார் என்பதனை அவரது வார்த்தைகள் (Statement) தெளிவுப்படுத்துகின்றன. உரோமப் படைவீரனான கொர்நேலியு தம் வீட்டார் அனைவருடனும் கடவுளுக்கு அஞ்சி நடந்தார் (திப 10:1,2). அக்குடும்பத்தில் நல்லுறவும், கருத்தில் இசைவும், மகிழ்ச்சியின் பகிர்வும், இறையாசியும் செழித்திருக்கும். சீடர்கள்

கடிந்து கொண்டாலும் தம் குழந்தைகள் இறையாசி பெற வேண்டும் (மத் 15:27) என சிரமத்தையும் பாராது ஆசிக்காக காத்து நின்றது போன்ற மனப்போங்கு நம் குடும்பத்தில் இருந்தால் அது பக்தி வாழ்வுக்கு அதிக உரமிடும்.

இறைப்பக்தியை திருமறை வழியாகவும் ஆலயத் தொழுகை வழியாகவும் பக்தியுள்ள மனிதர்கள் வழியாகவும் பெறுகிறோம் (இச 6:6). திருமறையை மனதில் பதித்து பிள்ளைகளுக்குப் போதிக்கும் போது பிள்ளைகளின் பக்தி வளர்ச்சியோடு நினைவாற்றலும் வளருகிறது. ஒவ்வொரு வளர்ச்சியிலும் பக்தியின் பிரதிபலனை நாம் காணலாம். குழந்தைகளின் உள்ளத்தில் பதிக்கின்ற பக்தி வாழ்வை யாராலும் பறிக்க இயலாது. குடும்பத்தில் காணப்படும் நடைமுறைகள், தீர்மானங்கள், உணவருந்தும் முறை, பொருளாதார நிலைப்பாடு, குடும்பஜெபம், பாடல், தியானம் என அனைத்தும் சுத்தபக்தியின் அடையாளங்களாகும். இவைகளால் குடும்பங்கள் வேர் கொள்ளுதல் அவசியம், பக்தியை வளர்க்க நல்லவைகளைச் சிந்தித்தல், நல்லவைகளைப் பேசுதல், ஆலயத்தொழுகை போன்றவை முக்கியமானவையாகும். இறை பயமும், இறைப்பக்தியும் வாழ்வில் இருந்தாலும் இழப்புகளும் இன்னல்களும் குடும்பவாழ்வில் வருவது சகஜம் (லூக் 10:38-42). எனினும் கடவுளில் கொண்டுள்ள பற்றும் பாசமும் நம்மைவழி விலகிப் போகாதபடி மாதிரி வாழ்வுக்குக் காத்து நடத்தும்.

இறைவன் நமக்குத் தந்துள்ள குடும்ப வாழ்வுக்காய் நன்றி செலுத்துவோம். குடும்பத்தில் நாம் எப்படி வாழ்கின்றோமோ அதன் அடிப்படையில்தான் நம் மகிழ்ச்சியும் நமது குடும்பத்தின் மகிழ்ச்சியும் அமைகிறது என உணர்ந்து, மாதிரியாய் வாழத் தீர்மானிப்போம். யோசுவா தன் மாதிரியான வாழ்வு மூலம் சுட்டிக் காட்டும் தன்மைகளை வாழ்வில் கடைப்பிடித்துச் செயல்படும்போது அது நம்மைப் பக்திக்கு நேராய் வழிநடத்தும்.

அருள்திரு. P. ***ராஜா ஜெயசிங்***

31-12-2020

ஆண்டு நிறைவு

## நன்றியறிதலோடு ஆண்டவரிடம் வாருங்கள்

**COME TO THE LORD WITH THANKSGIVING**

2சாமு 6:1-15 கொலோ 3:12-17
திபா 91 லூக் 17:11-19

**"அவர்களில் ஒருவர் தம் பிணி தீர்ந்திருப்பதைக் கண்டு உரத்த குரலில் கடவுளைப் போற்றிப் புகழ்ந்து கொண்டே இயேசுவிடம் திரும்பி வந்தார்."** (லூக் 17:15)

நாம் வாழும் இன்றைய நாட்களில் நமக்குப் பெரிதும் தேவையான குணம் நன்றியறிதலாகும். "நன்றி மறப்பது நன்றன்று" என்று திருக்குறள் கூறுகிறது. நன்றிக் கெட்டவர்கள் என்ற குழுவினர். மனிதர்களிடம் மட்டுமே காணப்படுகிறார்கள். நன்றியுணர்வோடு வாழ்வது எப்படி என்பதை ஐந்தறிவு மிருகங்களிடமிருந்து மனிதன் கற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயப் பாடமாக இருக்கிறது. "நன்றியில்லாமல் இருக்கும் ஒரு பிள்ளை, பாம்பின் பல்லைவிடக் கூர்மையானது" (How sharper than a serpent's tooth it is to have a thankless child) என ஷேக்ஸ்ப்பியர் கிங்ஸ் லீயர் என்ற கதாபாத்திரத்தின் மூலம் சொல்லுவது பெற்றோர் தங்களுக்கு செய்த நன்மைகளுக்கு நன்றியற்றிருக்கும் பிள்ளைகளின் நிலையை நன்கு விளக்குகிறது. திருமறையில் கூட அநேகர் நன்றிக்கெட்டவர்களாக இருந்திருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, லாபான் யாக்கோபின் உழைப்பிற்கு நன்றிக்கடன் செலுத்தவில்லை (தொநூ 31:6-7). சிறையிலிருந்த யோசேப்பிற்கு உதவி செய்வதற்கு பானபாத்திரக்காரன் மறந்து போனான் (ஆதி 40:23). தங்களை எகிப்திலிருந்து விடுதலை செய்து அழைத்து வந்த மோசேயை இஸ்ரவேல் ஜனங்கள் கல்லெறியத் துணிந்தனர் (யாத் 17:1-4). தாவீதினால் உயிர்க்காக்கப்பட்டும் கூட அவனைக் கொலை செய்யத் தேடினான் சவுல் (சாமு 16:1-2). ஆனால், அன்னாள் ஆண்டவர் தனக்கு தந்த சாமுவேலுக்காக, பலிப்பொருட்களோடு ஆலயம் சென்று நன்றி செலுத்தினாள். இயேசு கிறிஸ்துவும் தனது தந்தைக்கு நன்றி சொல்ல ஒருபோதும் தவறவில்லை. இறைவனுக்கும் மனிதர்களுக்கும் நன்றி சொல்லுவதற்கு நம்மிடம் எத்தனையோ காரணங்கள் இருந்துகொண்டே தான் இருக்கின்றன. ஒரு வருட காலமாக நம் வாழ்க்கைப்பயணத்தில் நாம் அழிந்துபோகாதபடி பாதுகாத்திருப்பது இறைவனுடைய அருளே. இந்தநாளின் நற்செய்திப்பகுதியை மையமாக வைத்து எப்படி நன்றியறிதலோடு ஆண்டவரிடம் வரவேண்டும் என்று சிந்திப்போம்.

### *1. எட்டி நின்றவனைக் கிட்டிச் சேர்த்ததால்* : (வ. 13)

இயேசு ஒரு கிராமத்தில் பிரவேசித்தபோது, தொழுநோயாளர் பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து, தூரத்திலே நின்று; தங்களுக்கு இரங்கும்படி என்று கேட்டார்கள். தூரத்தில் நின்ற தொழுநோயாளிகளின் நிலை என்னவென்றால் தங்கள் விருப்பப்படி விரும்பியதைச் செய்ய முடியாது. மக்கள், கிராமம், நகரம் போன்ற இடங்களில் அவர்கள் வரமுடியாது. உறவினர்களை கூட சந்திக்க முடியாமல் எட்டி நின்று தான் பார்க்க வேண்டிய சூழ்நிலை. நியாயப்பிரமாணத்தில், இவர்கள் தூரத்தில் நிற்கவேண்டும் என்று கூறப்பட்டிருந்தாலும், எவ்வளவு தூரம் என்று குறிப்பாகச் சொல்லப்படவில்லை. இப்படி தள்ளி வைக்கப்பட்டவர்கள் தாழ்வு மனப்பான்மையில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் நகர எல்லைகளிலிருந்து பிச்சை எடுக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர். இயேசுவிற்கு இரக்கம் உண்டென்பதை அறிந்து எதிரே, தொலைவில் நின்று சத்தமாக கூப்பிடுகின்றனர். இவ்வியாதி பயங்கரமானதாகவும், எளிதில் தெற்றிகொள்ளக்கூடியதாகவும், அருவருக்கக்கூடியதாகவும் திருமறையில் சித்தரிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வியாதி அவர்களது தொண்டையையும் பாதித்திருந்தத்தால் அவர்களது குரல் கரகரப்பாகவும், கடுமையாகவும் இருந்தது. இந்நோயின் அகோரம் பத்துப்பேரையும் சத்தமாக இயேசுவைக் கூப்பிடச் செய்ததோடு, ஈனக்குரலில் அவர்கள் கெஞ்சுவது இயேசுவின் கவனத்தை ஈர்த்தது. அவர்களது, உடனடி ஆசிர்வாதமான இயேசு (“குணமாதல்”) தொலைவிலே இருந்ததால் சத்தமிட்டு கூப்பிடுகின்றனர். கண்டிப்பாக கண்ணீர் விட்டு அழுதிருப்பார்கள். இவர்கள் அனுபவிக்கும் வேதனைகளையும், துன்பங்களையும், அழுகுரலையும், மரணஓலத்தையும், ஏங்கும் இருதயத்தின் கதறலையும் இரக்கமுள்ள இறைவன் கண்ணோக்கி பார்க்கிறார். காதுகளால் கேட்கிறார். அவர்களுடைய கூப்பிடும் சத்தம், அழுகுரல் தொலைவிலிருந்த இயேசுவின் செவிகளில் எட்டுவது அவருடைய கரிசனையை இங்க காட்டுகிறது. ஒருகாலத்தில், தொலைவில் இருந்த நீங்கள் இப்பொழுது........அருகில் கொண்டுவரப்பட்டிருக்கிறீர்கள். நாமும் ஒரு காலத்தில் இறைஇல்லத்திற்குள் செல்ல இயலாதவர்களாக, தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பட்ட நிலைகளில், நாம் இறைவனை நோக்கி கூப்பிட்டபோது, அவர் நம்மை கிட்டிச் சேர்த்து, அரவணைத்து, ஆசீர்வாதித்திருக்கின்றார். நாம் கடந்து வந்த ஆண்டிலும் எட்டி நின்ற நம்மைக், கிட்டிச் சேர்த்ததால் நாம் நன்றியோடு ஆண்டவரிடம் வரவேண்டும். “சொந்த ஜனமான யூதரைத் தள்ளி, தொலையில் கிடந்த புற மாந்தராம் எமை மந்தையில் சேர்த்து பராபரன் தம்முடை மைந்தர்களாக்கின சந்தோஷத்துக்காக” என்ற பாடலின் வரிகளும் நாம் நன்றியோடு இறைவனிடம் வர அழைக்கின்றது.

### *2. பாடுபட்டவனைப் பாட்டுப்பாட வைத்ததால்* : (வ. 15,16)

பத்துபேரும் கூட்டமாக “ஐயா இயேசுவே, எங்களுக்கு இரங்கும்” என்று ஒரே குரலில் கூப்பிட்ட அவர்களுக்கு இயேசு திட்டவட்டமாக ஒரு நல்வழி காட்டினார். அதிலும், “இயேசுவே” என்று அவரை அவருடைய பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது ஏற்கனவே அவர்கள் இயேசுவை அறிந்திருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது.

தொழுநோயின் அகோரம் என்னவெனில், உடலில் உணர்வற்ற நிலையை ஏற்படுத்துவதே உடலில் வலியில்லாதபோதும் வாழுவதற்கு வழியேதுமில்லாத சூழ்நிலையில் வேதனையோடு இருந்தனர். ஆனாலும், பரிதாபமான சூழ்நிலைகள், பரம விரோதிகளான யூதரையும் சமாரியரையும் ஒன்றாக்கியிருந்தது. வலிமை இல்லாதவர்கள் என்ற வலியிலிருந்தவர்களின் கண்களில் கண்ணீரே மிஞ்சியிருந்திருக்கும். நகங்களில்லாத விரல்களையும், விரல்களில்லாத கைகளையும், கைகளில்லாத புஜங்களையும் தூக்கிக்கொண்டு தள்ளிவைக்கப்பட்ட இந்தப் பத்துப்பேரும் வாழ்க்கையில் பட்டபாடுகளை இறைமகன் இயேசு அறிந்திருந்தார். அதைக் கண் கூடாகக் காண்கிறார். அவர்களுக்கு கண்கள், காதுகள், மூக்கு கூட இல்லாமலிருந்திருக்கலாம். அவர்களது உடல் அழுக்கான, அருவருக்கக்கூடிய, அழுகிய நிலையில் இருந்தன. இந்நோய் உடலை பலவீனப்படுத்துவதோடு அவர்களுடைய ஆள்தத்துவத்தையும் பாதித்தது. தளர்ந்த உருவம், விரும்பத்தகாத ரூபம், உறுப்புக்களின் அழுகிய நிலை, புரையோடிப் போன புண்களின் பரிதாப நிலை, ரணப்புண்கள் ஆறினாலும் ஆறாதத் தழும்புகள், நாற்றமெடுக்கும் அழுகிய உடலை அழகிய உடலாக மாற்றியதோடு, நோயாளர் பத்துப்பேரையும் குணமாக்கினார் இந்த ரண வைத்தியன். வாழ்க்கையில் பாடுகள், வரலாம். ஆனால், இவர்களுக்கு பாடுகளே வாழ்க்கையாக இருந்தது. உணவுக்காக அழுக்கைச் சாப்பிட்டு தடாகத்தைச் சுத்தப்படுத்துகிறது மீன். ஆனால் ஒரு நேர ஆகாரத்திற்காக தங்களது அழுகிய உடலைக் கடை போட்டு விற்றுக்கொண்டிருந்தனர் இந்தப் பத்துப்பேரும். பாடுகளை அனுபவித்து இறைவனின் ஆலோசனையால் கூடிப் பத்துப்பேராய் குணம் பெற்றவர்களில், ஒருவனாய் தேடி, நாடி வரச் செய்ததோடு, உரத்த குரலில் கடவுளை மாட்சிமைப்படுத்தி அவருக்கு நன்றி செலுத்தினான். கிரேக்கத்தில் “நன்றி செலுத்தினான்” என்பது அவன் தொடர்ந்து நன்றி செலுத்திக்கொண்டேயிருந்தான் எனத் தொடர்வினையில் சொல்லப்பட்டிருப்பது அவன் பாடல்பாடி மாட்சிப்படுத்தியதைக் குறிக்கிறது. உரத்த குரலில் தங்களுடைய சுகத்திற்காக மன்றாடியவர்களில் (லூக் 17:13). இப்போது இவன் மட்டும் உரத்த குரலில் நன்றிசெலுத்துகிறான். பாடுகளிலிருந்து விடுவித்த பரமனை, “மனிதர் என்னை கைவிட்டாலும், மாமிசம் அழுகி நாறிட்டாலும், ஐசுவரியம் யாவும் அழிந்திட்டாலும், ஆகாதவன் என்று தள்ளி விட்டாலும்

இயேசு போதுமே'' என்று பாடல்பாடி மகிமைப்படுத்துகிறான். நாமும் ஒரு வருட காலமாக பாடுகளிலிருந்து மீட்ட ஆண்டவரிடத்திலே "பாடித்துதி மனமே பரனைக் கொண்டாடித் துதி தினமே'' என்ற பாடலோடு நன்றி சொல்லுவதற்கு வரவேண்டும்.

### *3. தீட்டுப்பட்டவன் மீட்கப்பட்டதால்* : (வ. 19)

அழிவின் விளிம்பிலிருந்தவனை, ஊராரின் பழியிலிருந்தவனை, ஊரின் எல்லையிலே உயிரிருந்தும் நடைபிணமாக வாழ்ந்து கொண்டிருந்தவனை குணப்படுத்தியதால் நன்றி சொன்னான். தீட்டு தீட்டு என்று வாய்திறந்து கத்திக்கொண்டிருந்தவன் இப்போது வாய்நிறைய "நன்றி'' என்று சொன்னதைப் பார்த்து தன் வாயில்கைவைத்து ஆச்சரியப்பட்டார் இயேசு. ஏனெனில், நன்றி சொல்ல வந்தவன் சமாரியன். இயேசுவுக்கு நினைவாற்றல் அதிகம். அவர் இருக்கிறவர்களைப் பற்றி கவலைப்படுவதில்லை. காணாமற்போன ஆடு (லூக் 15), காணாமற்போன வெள்ளிக்காசு (லூக். 15), காணமாற்போன மகன் (லூக் 15), என்று தான் சொன்ன உவமைகளில் கூட இல்லாதவர்களைக் குறித்தக் கரிசனை காணப்படுகிறது. திரும்பி வராத துரோகிகள் மீதும் கரிசனை கொண்டார். பாளையத்துக்கு புறம்பே கிடந்தவர்களை, தீட்டுப்பட்டவர்களை குணப்படுத்தினார், லூக்கா 5:12-ல் பதிவு செய்யப்பட்டிருக்கும் நிகழ்வில், இயேசு தன்னிடம் வந்த தொழுநோயாளர் மீது மனதுருகி, அவனைத் தொட்ட மாத்திரத்தில், அவனுடைய வியாதி மறைந்தது எனச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இங்கு இயேசு குஷ்டரோகிகளிடம் செல்லவோ, அவர்களைத் தொட்டு குணமாக்கியதாகவோ சொல்லப்படவில்லை. ஆனால், அவர்களுடைய நம்பிக்கைக்கு ஒரு சோதனை வைக்கிறார். அவர்களது நோய் குணமானது போல, அன்றைய நாட்களில், "ஆரோக்கிய ஆய்வாளர்களாக,'' செயல்பட்ட ஆசாரியர்களிடம் காண்பிக்கச் சொல்லுவது அவர்கள் அப்போதே, அந்நேரத்திலே குணமானதைச் குறிக்கிறது. கலிலேயாவிரிருந்த இவர்கள் எருசலேமிலிருந்த ஆசாரியர்களிடம் காண்பிக்கச் செல்ல வெகுதூரம் பயணம் செய்ய வேண்டியிருந்தது. ஆனாலும், ஒருவன் உடனடியாக இயேசுவுக்கு நன்றி சொல்ல வந்தது ஆச்சரியத்தை அளிக்கிறது. வசனம் 17-ல் "குணமாக்கப்பட்டவர்கள் பத்துப்பேர் அல்லவா மற்ற ஒன்பது பேர் எங்கே''? என கேட்பது அந்த ஒன்பது பேர் மேலும் அவருக்கிருந்த கரிசனையைக் காட்டுகிறது. மற்ற ஒன்பது பேர் உடலில் சுகம் பெற்று நன்றியற்றவர்களாக சென்றனர். ஆனால், இவன் தனது உடலில் மட்டுமல்ல, இருதயத்திலும், ஆன்மாவிலும் குணமடைய விரும்பியதால் திரும்பி வந்தான். இந்த அந்நியன் தன்னுடைய வாழ்வில் உடல் நலத்தோடு, மீட்பையும் பெற்றுக் கொண்டதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை (வ. 17).

தீட்டுப்பட்டவர்களைத் தொடுதல் எவ்வளவு முக்கியம் என்பதை தொழுநோய் நிபுணரான டாக்டர் பால் பிரான்டு கூறுகிறார். இந்தியாவில் தன்னிடம் சிகிச்சை பெற்ற ஒரு ஒரு தொழுநோயாளியைப் பரிசோதித்தபோது அவர் தோள்மீது தன் கைகளை வைத்த போது, திடீரென அந்தத் தொழுநோயாளி அழ ஆரம்பித்துவிட்டார். "நான் ஏதாவது தவறாகச் சொல்லிவிட்டேனா?" என கேட்ட போது, "இல்ல டாக்டர், என் தோளின் மீது நீங்கள் கை போட்டதால் அழுகிறேன். நீங்கள் இங்கு வரும்வரை பல ஆண்டுகளாக வேறு யாருமே என்னை தொட்டதில்லை" என்றானாம். குணம் பெற்ற ஒருவன் மாத்திரம் இயேசுவின் பாதத்திலே முகங்குப்புற விழுந்து அவருக்கு நன்றி செலுத்தினான் என்று பார்க்கிறோம். காலில் ஒருவர் விழும்போது காலில் விழுந்தவரை தொட்டு தூக்குவது மனித மரபு. எப்படியும் இயேசு தொட்டுத் தூக்கியிருக்கலாம். இந்தப் பத்துப்பேரும் இல்லாத சுகத்திற்காக மன்றாடினார். ஆனால், கிடைத்த சுகத்திற்கு ஒருவர் மாத்திரம் நன்றி செலுத்தினார். நன்றி சொல்லத் திருப்பி வந்ததால் கூடுதல் மீட்பையும் பெற்றான்.

அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் "நன்றியறிதல் நாள்" ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் கொண்டாடுவது வழக்கம். பொதுவாக, அந்த சிறப்பான நாளில் குடும்பத்தினர் அனைவரும் இணைந்து விருந்து அருந்துவார்கள். ஒவ்வொருவரும் தங்களது வாழ்வில் இறைவன் செய்த நன்மைக்கு சொல்ல வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒவ்வொருவராக சொல்லிக் கொண்டுவரும்போது ஒரு குட்டிப்பையன் சொன்னான்; "நான் இந்த சாப்பாட்டு மேஜையிலிருக்கும் பொரித்த வான்கோழியாக இல்லாததினால் இறைவனுக்கு நன்றி சொல்லுகிறேன்" என்று.

இல்லாத ஒன்றிற்காக ஏங்குகிறோம். ஆனால் அது கிடைத்தபிறகு நன்றி செலுத்துகிறோமா? எப்போது விடியும் என்று காத்திருக்கும் கண்களையும், வயிற்றுக்காக அனுதினமும் பிச்சையெடுக்கும் கைகளையும் நினைத்து அதற்காக வருத்தப்படுவதை விட்டுவிட்டு கண்களுக்கம், கைகளுக்கும் நன்றி சொல்லப் பழகிக்கொண்டோமானால் நம்மை படைத்த இறைவன் நிச்சயம் மகிழ்ச்சி கொள்வர். இல்லாத ஒன்றை நினைத்து ஏங்குவதைவிட்டு விட்டு எட்டி நின்ற நம்மைக் கிட்டிச் சேர்த்ததால், பாடுபட்ட நம்மைப் பாட்டுப் பாட வைத்ததால், தீட்டுப்பட்ட நாம் மீட்கப்பட்டதால், அதோடு இறைவன் நமக்கு தந்திருக்கின்ற நன்மைகளுக்கு நன்றி சொல்லி, இவ்வருடத்தினை நிறைவு செய்து ஒரு புதிய வருடத்துக்குள் நம்பிக்கையோடு அடியெடுத்து வைக்க இறைவன் கிருபை செய்வாராக!!!

முனைவர். திருமதி. **சோபனா கின்சன்பெல்**

# சிலுவைத் திருமொழிகள்

*சிலுவைத் திருமொழி - 1*

## வாழ்வுக்கு அணிகலனாகும் மன்னிப்பு

திருமறைப்பகுதி : லூக் 23:32-34

**"தந்தையே இவர்களை மன்னியும். தாங்கள் செய்வது இன்னதென்று இவர்களுக்கு தெரியவில்லை".** (லூக் 23:34)

மன்னிப்பைக் குறித்து பல்வேறு ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றின் முடிவாக சில உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். மன்னிக்கிற மனப்பான்மை உடையவர்களுக்கு உடல் ஆரோக்கியம், மன ஆரோக்கியம் கிடைக்கிறது. நீண்ட ஆயுட்காலம் அமைகிறது. புற்றுநோய் (Cancer) வரும் சாத்தியம் குறைகிறது. மன அழுத்தம் குறைகிறது. நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கிறது என்று ஆய்வு முடிவுகள் கூறுகிறது.

மன்னிக்க மறுக்கும் போது உடல், மனம் விஷத்தன்மையாகி, உடல் நோயின் இருப்பிடமாகிறது. உடலின் சராசரி இயக்கம், உடல் சமநிலை பாதிக்கப்படுகிறது.

பல ஆண்டுகள் அன்பை பரிமாறி திருமணம் செய்த தம்பியரிடம் பெண்ணின் தாய் ஒரு வங்கி கணக்கின் Pass book ஐ கொடுத்தாள். அதில் 5000 ரூ. போட்டிருந்தாள். அதின் கடைசியில் சில வெள்ளை தாங்களை இணைத்திருந்தாள். மகளிடம் Pass book ஐ ஒவ்வொரு முறை கணவனிடம் மிகுந்த அன்பு, ஆதரவு, தியாகம், கரிசனை கிடைக்கும் போதெல்லாம் வங்கியில் பணம் போட வேண்டும். அதனை கடைசி பக்க வெள்ளை தாளில் எழுத வேண்டும் என கேட்டுக் கொண்டாள். பலவருடங்கள் எல்லாம் அழகாக சென்றது. நாளடைவில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. விவாகரத்து நிலைக்கு குடும்பம் சென்றது. இறுதியாக வங்கியில் போய் பணத்தை எடுக்க சென்ற போது மேலாளர் வங்கி கணக்கை பார்த்து ஆச்சரியப்பட்டார். பல இலட்சம் ரூபாய் அந்த கணக்கில் இருந்தது. அப்பெண்ணும் ஆச்சரியப்பட்டு இறுதி பக்கங்களை புரட்டினாள். ஒவ்வொரு முறையும் பணம் போட்டதின் காரணம் அதில் எழுதப்பட்டிருந்தது. கணவனின் அன்பு, தியாக செயல்கள், கரிசனை அனைத்தையும் பார்த்தாள். கண்களில் கண்ணீர் எட்டிபார்த்தது. உள்ளம் அன்புக்காக ஏங்கியது. வீட்டை நோக்கி ஓடினாள் கணவனின் கால்களை பிடித்து கண்ணீர் விட்டாள். மன்னிப்பு ஆறாய் ஓடியது. உடைந்து நொறுங்கி போக இருந்த குடும்பம் மீண்டும் ஒன்றாகிறது.

மனிதனின் மனதின் தன்மையே ஒருவரது எதிர்மறையான நினைவுகளை, காயங்களை வெளிப்படுத்தும் தன்மை கொண்டது. பிறர் நம்மை காயப்படுத்தும் போது என்ன சூழல்களில் இருந்தார்கள், எந்த சூழலில் இப்படி நடந்து கொண்டார்கள், எந்த சூழலில் இப்படி நடந்து கொண்டார்கள் என்பதை எண்ணி பார்த்தால் மன்னிப்பது சுலபமாக இயலும். தெரிந்தே காயப்படுத்தினாலும் அவர்கள் அறியாமையை நினைத்து வருத்தப்பட வேண்டும். அவர்கள் (பிறர்) பக்கமே தவறு இருந்தாலும் மன்னிக்க முற்படுவது தெய்வீகத்தின் அனுபவமாக அமையும்.

உலகில் பலவித மன்னிப்பு அனுபவங்கள் உள்ளது தங்களது இயலாமையில் (தட்டிக்கேட்க பெலன் இல்லாததால்) மன்னித்து வாழ்வோர் உண்டு. நிபந்தனையுடன் மன்னிப்போர் உண்டு. பாவம் பிழைத்து போகட்டும் என மன்னிப்போர் உண்டு. பெருமைக்காக மன்னிப்பை வழங்குவோர் உண்டு.

ஆனால் கிறிஸ்துவின் மன்னிப்பு இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. மன்னிப்பின் எல்லா பக்கங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தக் ககூடியதாக அமைந்தது.

### *1. துன்புறும் நிலையிலும் மன்னிப்பு* :

இரவு முழுவதும் விசாரணை என்ற பெயரில் அலைக்கழிப்பு. உடல் எங்கும் காயம். அவமானமான வார்த்தைகள் சிலுவையில் அறையப்பட்ட நிலை. குற்றவாளிகள் இருவருக்கும் நடுவில் இயேசு தொங்குகிறார். உடன் சீடர்கள் ஓடிப்போன நிலை. இப்படி துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையிலும் அனைவரையும் மன்னிக்கும் மனநிலையே கிறிஸ்துவிடம் காணப்பட்டது.

மத் 5:44 உங்களை துன்பபடுத்துவோருக்காக ஜெபம்பண்ணுங்கள் இறைவனிடம் மன்றாடுங்கள் என்று சொன்ன ஆண்டவர் அதனை சிலுவையில் நிறைவேற்றி காண்பிக்கிறார்.

திப 7:60-லும் ஸ்தேவான் கல்லெறிபட்டுக் கொண்டிருக்கும் நிலையிலும் கிறிஸ்துவின் சிந்தையிலே இப்படித்தான், ஆண்டவரே இவர்கள் மேல் இந்த பாவத்தை சுமத்தாதேயும் என்று மன்றாடினார்..

துன்ப நிலைகளுக்கு பின் காலங்கள் செல்ல காயங்கள் மாற பிறரை மன்னித்து விடுவதற்கு பலரால் முடியும். ஆனால் துன்பபட்டுக் கொண்டிருக்கும் நிலையில் அடிப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், காயப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் மன்னிப்பு வழங்குவது என்பதுலே கிறிஸ்துவின் மன்னிப்பின் மாண்பு. இந்த மன்னிப்பின் பண்பிலே வளர இயேசுவின் மன்னிப்பின் அனுபவம் நமக்கு துணை செய்கிறது.

## *2. பாச உறவுடன் கூடிய மன்னிப்பு* :

இயேசுவின் வாழ்வும் போதனையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. பிரிக்க முடியாதது. பல இறை வார்த்தைகள் அதனை தெளிவுபடுத்துகிறது.

பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே என்னிடம் வாருங்கள் என்று அழைத்தவர் இயேசு (மத் 11:28).

இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்பதே நற்செய்தியின் மையம் (1 தீமோ 1:15).

மத் 18:14 இச்சிறியோருள் ஒருவர் கூட நெறிதவறிப் போகக்கூடாது என்பது விண்ணகத் தந்தையின் திருவுளம் என்று கிறிஸ்துவே கூறியுள்ளார்.

தனது பணியின் நோக்கமே மனுக்குலத்தின் மீதான பாச உறவு, அன்பின் உறவு, விடுதலை வாழ்வு, அதற்காகவே போதனைகள் என்பதை இயேசு உணர்ந்திருந்தார். சிலுவை மரண நேரத்திலும் பாச உறவை மறக்கவில்லை. எனவே தான் இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் என்று சிலுவையில் இருந்தும் இவர்களை மன்னியும் என்று மன்றாடினார்.

பிள்ளைகள் என்ன தவறு செய்தாலும் பெற்றோருக்கு அதை மன்னிப்பது லேசான காரியம் தான். ஏன்? அவர்கள் பிள்ளைகள். பாசம் கண்ணை கட்டிப்போட்டுவிட்டது. தம் பிள்ளைகள், தம் மக்கள் தம் சாயலில் படைக்கப்பட்டவர்களை சிலுவையில் இருந்து மன்னிப்பதும், பிதாவிடம் மன்னிக்க கேட்பதும் இயேசுவுக்கு இலேசான காரியம். நமக்கு?

இயேசு கிறிஸ்துவைப் போல பாச உணர்வுடன் மன்னிப்பை வெளிப்படுத்துவோம்.

## *3. புதிய வாழ்க்கைமுறைக்கான மன்னிப்பு* :

கிறிஸ்துவுக்கு போதனையும், வாழ்க்கை முறையும் வேறுபட்டது அல்ல. இரண்டும் ஒன்றுக்கொன்று சார்புடையது என்பதை இயேசு தெளிவுபடுத்தினார்.

பாவ மன்னிப்புப் பெற மனம் மாறுங்கள் என எருசலேம் தொடங்கி அனைத்து நாடுகளிலும் பறைசாற்றப் படவேண்டும் (லூக் 24:47). மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணக தந்தையும் உங்களை மன்னிப்பார் (மத் 6:14,15). கிறிஸ்துவின் போதனையிலும் வாழ்விலும் மன்னித்து வாழ்தலே நிறைவான வாழ்க்கை முறை என்பது தெளிவு. மன்னிப்பிற்காக நாம் நாள்தோறும் மன்றாட வேண்டும் (மத் 6:12) என இயேசுவே கற்று தந்துள்ளார்.

சிலவேளை நம் வாழ்வை சிந்தித்து பார்க்கும் போது நாம் சரியாக வாழவில்லை என்று, தோல்வி மனப்பான்மை, தாழ்வு மனப்பான்மைகள் நமக்குள் ஊற்றெடுக்கிறது. எது நமக்கு கிடைக்கவில்லையோ அதில் கவனம் செலுத்தாமல் கிடைத்தவைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். மன்னிப்பு கிடைக்காமல் போனதற்கு வருத்தப்படாமல் மன்னிப்பை வாழ்வு முறையாக்க முன்வரவேண்டும்.

வாழ்க்கை நிலையற்றது, நிரந்தரமற்றது. கொஞ்சக்காலமே வாழ்க்கை. நமது வாழ்க்கைப் பாதையில் நம்மை காயப்படுத்தினவர்கள், கஷ்டப்படுத்தினவர்கள் ஏராளம். ஆனால் கடவுள் மட்டுமே நிலையானவர். அவர் அனைத்து மனிதருக்குள்ளும் வாழ்கிறார். இதனை புரிந்தால் மன்னிப்பை அனுதின வாழ்க்கையாக்க முடியும்.

காயப்படுத்துவது, பழிவாங்குவது பெரிய விஷயம் இல்லை. நினைத்தவுடன் செய்யமுடியும். ஆனால் உள்ளத்தின் ஆழத்திலிருந்து மன்னிப்பது தான் பெரியசெயல்.

சிலவையின் அடிவாரத்திலிருந்து மன்னிப்பை வாழ்க்கை முறையாக கொண்ட சமூகம் உருவாக வேண்டும் என கிறிஸ்து விரும்பினார். தனது பாடுகளின் மூலமாக அதனை துவங்கி வைத்தார். கிறிஸ்து அறிவிக்கப்படும் இடங்களில் மன்னிப்பை வாழ்க்கை முறையாக ஏற்றுக் கொண்ட சமூகங்கள் வளர்ந்து பெருகுவதே அதற்கு சாட்சி.

நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகள் இனவெறிக்கு எதிரான போராட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டிருந்தான். சிறை அதிகாரி நெல்சன் மண்டேலாவை அதிகம் துன்பப்படுத்தினார். காயப்படுத்தினார். மண்டேலாவின் மகன் மரித்த போது கூட அவரது இறுதி சடங்கிற்கு செல்ல அனுமதிக்கவில்லை. தென் ஆப்பிரிக்காவில் மக்கள் ஆதரவுடன் மண்டேலா அதிபராக பொறுப்பேற்றதும் நாட்டின் அதிகாரிகளை சந்திக்கும் சந்திப்பு நிகழ்ச்சி நடந்தது. சிறை அதிகாரி அந்த கூட்டத்தில் கலந்து கொண்டார். ஆனால் பயத்துடன், தயக்கத்துடன் ஓரத்தில் அமர்ந்து கொண்டிருந்தார். நெல்சன் மண்டேலா அவரை பார்த்தார். அவரைத் தேடிச் சென்றார். கரங்களைப் பிடித்தார். உங்கள் மீது எந்த தவறான எண்ணமும் எனக்கு கிடையாது. உங்கள் கடமையைச் செய்தீர்கள். இணைந்து பணிச் செய்வோம் என வாழ்த்தினார். சிறை அதிகாரி மனம் வருந்தி மன்னிப்புக் கோரினார்.

மன்னிப்பு கேட்கும் எவரையும் மன்னிக்க மறக்க வேண்டாம். மன்னிப்பு கேட்தாகவர்களையும் மன்னிக்க முன்வருவோம். மன்னிப்பை வழங்கி மன, உடல் ஆரோக்கியத்தை முழுமைப்படுத்துவோம்.

அருள்திரு. S. **கிறிஸ்டோபர் ஏசுமணி**

# வாழ்வுக்கு வாசலாகும் மீட்பு

திருமறைப்பகுதி : மாற் 23:39-43

**"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்".** (லூக் 23:43)

மனித உள்ளங்கள் மரணத்திற்கு பின்பு ஆன்ம அமைதிக்கான ஓர் இடத்தை வாஞ்சிக்கின்றன. இதற்கு காரணம் நரகத்தைப் பற்றிய செய்திகள். நரகம் தீ, அவியாத அக்கினி, புழு சாகாது, மரண ஓலம், சாத்தான்களின் தாக்குதல் என பயங்கரமான இடமாக இருக்கும் என்பதால் பலர் மரணம் வரை எப்படியும் வாழ்ந்துவிட்டு பரலோகம், பரதீசு ஆகியவற்றை மரணத்திற்கு பின் பெற ஆவலாக உள்ளனர்.

அதே வேளை ஆண்டவர் இருக்கிற இடத்தில் தாங்கள் இருப்பதை பரதீசின் அனுபவமாக பார்க்கிற அனுபவிக்கிற இறைப்பணியாளர்கள் ஏராளமாக உள்ளனர்.

பதவி, புகழ், செல்வாக்கு, ஆட்சி, அதிகாரம், பணம், வசதியான வாழ்வு இவைகளுக்காகவே வாழ்வு முழுவதும் செலவிட்டு அதுவே பரதீசின் அனுபவமாக எண்ணி வாழும், திருச்சபை சமய, சமூக, அரசியல் தலைவர்களும் உண்டு.

உல்லாச வாழ்வு, உடல் சுகம், இவைகளிலே பெரும்பாலான காலங்களை செலவிட்டு இவைகளையே பேரின்ப வீட்டின் அனுபவமாக எண்ணி வாழும் மனிதர்களும் உண்டு.

உழைக்கும் மக்களோடு உழைத்து, நீதிக்காக குரல்கொடுத்து, போராட்டத்தையே வாழ்வாக்கி, ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக்காண உழைத்து, தனக்கென எதையும் சேமிக்காமல், மக்கள் விடுதலைப்பணியே பரலோகப்பணி என (பரதீசின் அனுபவம்) பணி புரியும் நல்ல மனிதர்களும் உண்டு. இரு குற்றவாளிகள் நடுவே இயேசு சிலுவையில் அறையபட்டுள்ளார். இருவரும் அரசியல் குற்றவாளிகளாக இருக்கலாம். ஒருவர் இயேசுவை சந்திக்கிறார். மற்றவர் நிந்திக்கிறார். ஒரு பக்க குற்றவாளி ஏற்கப்படுகிறார். இயேசுவால் ஏற்கப்படும் குற்றவாளி பரதீசின் வாழ்வை எதனால் பெற்றார்? எப்படி பெற்றார்? பேரின்ப வீட்டின் வாழ்வை பெறுவது எப்படி? என்பதைத் தியானிப்போம்.

## *1. கிறிஸ்துவின் பாடுகளையும் தனது பாடுகளையும் ஒப்பிட்டு பார்த்தார்* : (லூக் 23:41)

இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கையில் அவரை இகழ்ந்தவர்கள் பலர், போர் சேவகர்கள், ஒரு பக்க கள்வன், மக்கள், அதிகாரிகள் என பலரும் இயேசுவை பரித்தனர். யூதரின் ராஜாவானால் உன்னை இரட்சித்துக்கொள் என பழித்தனர். குற்றவாளிகளில் ஒருவனும் அவ்வாறு பழித்துரைத்தான்.

ஆனால் ஒரு பக்க குற்றவாளி தனது பாடுகளை இயேசுவின் பாடுகளோடு ஒப்பிட்டு பார்த்தார். நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம், நாம் நடப்பித்தவைகளுக்கு தக்க பலனை அடைகிறோம் என்றார் ஒரு பக்க குற்றவாளி. தாம்பெறுகிற தண்டனை நியாயமானது. தவறுக்கு உரிய தண்டனை இது என்பதை உணர்கிறார். தங்களை நீதிமான்களாக காட்டிக் கொள்வோர் கூட ஏற்க தயங்கும் அனுபவம் இது. தவறுகளை சுட்டிக்காட்டினால் உலகில் என்ன நடக்கும் என்பது நமக்கு தெரிந்ததே. ஆனால் தாமாகவே முன் வந்து, தனக்கு கிடைத்த தண்டனை நியாயமானது தான் என ஏற்கும் போதே அவனுக்குள் இறை நீதி பாய்ந்தோடுகிறதை உணரலாம்.

இயேசு கிறிஸ்துவின் பாடுகளைக் கூர்ந்து கவனிக்கிறார். எவரையும் குறைசொல்லாத, குற்றம் சாட்டாத, வசை பாடாத, பாடுகளின் ஓலமிடாமல் மென்மையாய் பாடுகளை தாங்கி கொள்ளுகிற கிறிஸ்துவின் பண்பு அவரைத் தொட்டிருக்க வேண்டும். எனவே மற்ற குற்ற வாளியை கடிந்து கொள்கிறார். இவரோ (கிறிஸ்து) தகாததென்னையும் நடப்பிக்கவில்லை என்கிறார்.

பாடுகளைத் தாங்கி கொள்வதில், ஏற்றுக் கொள்வதில் கூட கடவுளுடைய மக்கள் தங்கள் தனித்துவத்தை வெளிப்படுத்த முடியும். கிறிஸ்துவின் பண்பு சிலுவையில் குற்றவாளியையே மாற்றிவிட்டது. பிரதீசின் வாழ்வை பெற காரணமாகியது. ஒப்பிட்டு பார்த்து சரியான அறிக்கை செய்ததால் பேரின்ப வாழ்வை பெற்றார்.

## *2. கிறிஸ்துவின் ஆளுகையை நம்பினார்* : (லூக் 23:42)

“நீர் ஆட்சியுரிமை பெற்று வரும் போது என்னை நினைவிற்கொள்ளும்”.

இயேசுவின் சிலுவை மீது “நாசரேத்து இயேசு யூதர்களின் ராஜா” என எழுதப்பட்ட வாசகம் வைக்கப்பட்டது. கிறிஸ்துவை பரியாசம்

பண்ணவே இது வைக்கப்பட்டிருந்தது. இந்த வாசகத்தை படித்து கேலி செய்தனரே ஒழிய இயேசுக்கூறிய கடவுளின் ஆளுகையை ஒருவரும் நம்பவில்லை. இறையரசு குறித்து பல தருணங்களில் இயேசு பேசினார் (லூக் 4:43; லூக் 6:20; 9:2; 10:9 சீடர்களோ, அவரை பின்பற்றிய மக்களோ இறையரசின் உண்மைகளை அறியவில்லை.

ஆனால் இயேசுவின் உணர்வுகளில் கலந்து, பாடுகளின் மத்தியிலும் இயேசுவின் வாழ்க்கை முறையால் சந்திக்கப்பட்ட குற்றவாளி கிறிஸ்துவின் ராஜ்யமாகிய கடவுளின் ஆளுகையை (இறையரசை) கண்டுபிடித்தார். கிறிஸ்துவில் துவங்கபட்டுள்ள தேவ ராஜ்யத்தை நம்பினார். தன்னையும் அதில் இணைத்து கொள்ள வாஞ்சித்தார். தெளிவாக அறிக்கைச் செய்தான். அடியேனை நினைத்ருளும் என வேண்டினார். அவரின் வேண்டுதலை கேட்ட ஆண்டவர் இறையரசில் அவர் பங்குபெறும் பாக்கியத்தை அருளினார். இன்றைக்கு நீ என்னுடனே பேரின்ப வீட்டில் இருப்பீர் என்றுக் கூறி பேரின்ப பாக்கியத்தை அருளினார்.

உலகில் பல்வேறு ஆளுகைகளை பற்றி கேள்விப்படுகிறோம். ஆங்கிலேய ஆளுகை, முகமதிய ஆளுகை, அரசியல் கட்சியினரின் ஆளுகை, மன்னராளுகை, மக்களாளுகை, பேராயராளகை, என பலவித, ஆளுகைகளை பார்த்திருக்கிறோம். கடவுளின் ஆளுகையை, பரலோக ஆளுகையை கிறிஸ்துவிலே காண்போம், நம்புவோம்.

### ***3. பணிவோடு மன்றாடினார்*** : (லூக் 23:42)

“இயேசுவே, நீர்...என்னை நினைவிற்கொள்ளும்.”

குற்றவாளியின் அர்த்தமுள்ள மன்றாட்டு, பலவிதங்களில் வெளிப்பட்டது. முதலில் ஆண்டவரை மற்றவர்கள் பார்த்ததை விட தெளிவாக உணர்ந்து பார்த்தார். இறைப்பயத்தோடே நடந்து கொண்டான். தன்னிலையினை உணர்ந்தார். நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம் என்பதை அறிக்கை செய்தார். இயேசுவின் நிலையை உணர்ந்தார். தகாததொன்றையும் கிறிஸ்து நடப்பிக்கவில்லை என்பதை உணர்ந்தான். மொத்தத்தில் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவோடு ஒரு மனப்பட்டார். மத் 18:19-இல் மண்ணுலகில் மனமொத்திருந்தால் விண்ணுலகில் இருக்கும் தந்தை அருள்வார் என்பதை அறிந்தவராக கணிவோடு வேண்டுதல் செய்தார்.

இயேசுவே, நீர்...என்னை நினைவிற் கொள்ளும் என்ற மன்றாட்டு அர்த்தமுள்ள மன்றாட்டு, பணிவான மன்றாட்டு, தூய்மையான மன்றாட்டு, ஒரு மனத்தோடு கூடிய மன்றாட்டு இம்மன்றாட்டு இறைச்சமூகத்தை எட்டியது. ஆண்டவர் குற்றவாளியாக அறையப்பட்டவனுக்கு அவனது மன்றாட்டைக் கேட்டு பேரின்ப வீட்டின் வாழ்வை அளித்தார்.

இன்று மன்றாட்டுகள் விளம்பரமாகிவிட்டன, வியாபாரம் ஆகி விட்டது. எனவே பல மன்றாட்டுக்கள் பலனற்றவைகளாகி விடுகின்றன.

உலகின் பார்வையில் குற்றவாளியாக இருந்தாலும் கடவுளின் பார்வையில் வெற்றி பெற்றவராக மாறினான். வெளி 2:7 சொல்வது போல வெற்றி பெறுவோருக்கு கடவுளுடைய தோட்டத்தின் மத்தியிலிருக்கிற வாழ்வு தரும் மரத்த்தின் கனி உண்ண கொடுக்கப்படுகிறது. அந்த நற்பேற்றை இந்த குற்றவாளியும் பெற்றார். இன்று பல்லாண்டுகளால் கிறிஸ்துவை பின் தொடரும் நம் நிலை என்ன? பேரின்ப வீட்டில் பங்களாளிகளாய் மாற பண்பட்ட மனிதர்களாய் மாறுவோம்.

அருள்திரு. S. **கிறிஸ்டோபர் ஏசுமணி**

## வாழ்வுக்கு வழியாகும் உறவு

திருமறைப்பாடம் : யோவா 19:25-27

**"இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்பு சீடரையும் கண்டு தம் தாயிடம் "அம்மா இவரே உம் மகன் என்றார். பின்னர் தம் சீடரிடம் இவரே உம் தாய்" என்றார்."** (யோவா 19:26,27)

அது ஒரு முதியோர் இல்லம். சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தொலைக்காட்சி நிலையத்தார் திரண்டிருக்கிறார்கள். பொது மக்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள். முதியோரிடம் பொது மக்கள் பல கேள்விகள் கேட்கின்றனர். ஒரு தாயாரிடம் கேள்வி கேட்கப்பட்டது. முதியோர் இல்லத்தில் இருப்பதை குறித்து கேட்டபோது தாயார் அழுகையுடன் பதில் சொல்கிறார்கள். "10 மாதம் குழந்தைக்காக உறங்காமல், கடின வேலைகளை செய்யாமல், Bed rest என்று மிகுந்த சிரத்தையுடன் காத்திருந்த எனக்கு வீட்டின் ஒரு ஓரத்தில் கூட இடமில்லை என கூறிவிட்டார்களே" என அங்கலாய்த்தார். மற்றுமொரு தாய் "முதியோர் இல்லத்தில் நாங்கள் இருப்பதை பற்றி வெட்கப்படவில்லை, இங்கு அனுப்பிய பிள்ளைகள் தான் வெட்கப்பட வேண்டும். பாட்டியாக தனது அன்பு, அனுபவம், பாசம், நேரம், உதவி பேரப்பிள்ளைகளுக்கு கிடைக்க வில்லையே என அவர்கள் தான் வருத்தப்பட வேண்டும்" என குறிப்பிட்டார்கள். கேட்டவர், பார்த்தவர் கண்கள் கலங்கின.

சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் நிலையிலும் தன்னை சார்ந்து கண்ணீரோடு நிற்கும் தாய்க்கும் சீடர்களுக்கும் என்ன செய்யலாம்? எதைக் கொடுக்கலாம் என்ற உள்ளப்பூர்வ வாஞ்சையோடு இயேசு மூன்றாம் திருமொழியை மொழிந்தார். எந்த மனநிலையும் இழக்காமல் தாய்க்கும், சீடருக்கும் அவர் வழங்கும் புதிய உறவு, புதிய வாழ்வு, புதிய கொடை, இதைவிட வேறு என்ன வேண்டும்?

### *1. தாய்மைக்கு மரியாதை* :

தாயையும், தகப்பனையும் மதித்து நடக்க 10 கட்டளைகளில் ஐந்தாவது கட்டளை கூறுகிறது. சிலுவைப் பாடுகளின் நடுவிலும் தாயை குறித்த உணர்வுகள் ஏகமாய் ஊற்றெடுக்கும் நிலையில் தாய்க்கு புதிய ஆதரவை ஏற்படுத்துகிறார். ஆண்டவர் இயேசு கிறிஸ்து, "ஒரு தாய்க்காக எதையும் இழக்கலாம். எதற்காகவும் தாயை இழக்கக் கூடாது" என்பதை

உணர்ந்தவராய் தாயை கவனித்து கொள்ள புதிய உறவை ஏற்படுத்தும் அவரது மன உணர்வு வேறுப்பட்டது.

தாய், தந்தையின் அருமை வளரும் போது தெரியாது குழந்தையை வளர்க்கும்போது தான் தெரியும். ஆனால், இயேசு கிறிஸ்துவுக்கு வளரும் போதே தெரிந்திருந்தது. "உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" இறைவாக்கு நிறைவேறிக் கொண்டிருக்கும் நிலையில் அதைவிட தாய்மையின் உணர்வுகளில் கலந்து இயேசு காட்சியளிக்கிறார். தாயை இப்படியேவிட்டு விட்டு செல்லக்கூடாது, உரிய அரவணைப்பும், பாதுகாப்பும் கொடுக்க வேண்டும் என்ற உணர்வு இயேசுவிடம் மேலோங்கி நின்றது.

ஒரு தாய் தனக்கு என்ன செய்தாள் என்பதை மனிதன் கடைசி வரை உணருவது இல்லை. அவன் உணரும்போது தாய் உயிரோடு இருப்பதில்லை. புரண்டு படுத்தால் குழந்தை இறந்து விடக்கூடாது என்பதற்காக கருவில் இருந்தே நமக்காக இரவு தூக்கத்தைக்கூட தொலைத்து இரவிலும் விழித்திருக்கும் சூரியன் அம்மா. பிள்ளைகளின் வளர்ச்சியைக் கண்டு பொறாமைபடாத ஒரே உயிர் அம்மா. இப்படிப்பட்ட தாயை கடைசி நேரத்திலும் கைவிடப்படக்கூடாது என்ற கரிசனையை உலகின் அனைத்து பிள்ளைகளுக்கும் சிலுவையின் வழியாய் உலகிற்கும் ஓங்கி உரைத்து சென்றுள்ளார் நம் ஆண்டவர் கிறிஸ்து.

## *2. புதிய இறைக்குடும்பத்தின் தொடக்கம்* :

இயேசுவுக்கு யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என சககோதரர்கள் இருந்தார்கள். சில சகோதரிகளும் இருந்தார்கள் இயேசுவின் சிலுவையருகே மரியாளோடு இயேசுவின் தாயின் சகோதரி கிலேயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தனர். இவர்கள் அனைவருமே இயேசு துவங்கிய இறையாளுகை பணியிலே தங்களை இணைத்து கொண்டவர்கள். பல நிகழ்வுகளில் இயேசுவோடு இவர்கள் கலந்து கொண்டவர்கள். இயேசுவின் இன்ப துன்ப நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்கள். சிலுவை இறப்பின் பின்பு இவர்களை இப்படியே விட்டு செல்ல கிறிஸ்துவின் உள்ளம் விரும்பவில்லை.

இயேசுவுக்கு அன்பாயிருந்த ஒரே சீடன் யோவானும் சிலுவையின் சிலுவையின் அருகே நின்று கொண்டிருந்தான் (யோவா 19:26). யோவான் தனது படகையும் தனது தந்தையும் (குடும்ப உறவுகள்) விட்டு இயேசுவை பின் தொடர்ந்தவர் (மத் 4:22). தம்மை நம்பி வந்து இறையாளுகை இயக்கத்தில் இணைந்து பணியாற்றுகிற மக்களை அப்படியே விட்டு செல்ல

மனமில்லாத இயேசு சிலுவையிலிருந்து கொண்டே புதிய குடும்ப உறவுகளை உருவாக்குகிறார். கலா 3:28-ல் பவுல் "கிறிஸ்துவுக்குள் ஆண் என்றும், பெண் என்றும் இல்லை, நீங்கள் ஆபிரகாமின் வழித் தோன்றல்களுமாய் இருக்கிறீர்கள்" என்று குறிப்பிட்டது இயேசுவின் சிலுவையின் அடிவாரத்திலேயே நிறைவேறிவிட்டது. இயேசு இதனைக்கூறிய உடனே சீஷன் தாயை தன்னிடமாய் ஏற்றுக் கொண்டார்.

### *3. ஆதரவு நிலையை ஏற்படுத்துதல்* :

தங்களைப் பற்றியும், தங்கள் நலன், பிள்ளைகள், குடும்பம் என்ற சிந்தனையில் உலகமே ஓடிக் கொண்டிருக்கிறது. கிறிஸ்துவோ சிலுவையின் நிழலில் நின்று கொண்டிருக்கும் தன்னை நம்பி வந்தவர்களுக்கு ஒருவருக்கொருவர் ஆதரவாக செயல்படுவதற்கான அன்பின் அழைப்பை முன் வைக்கிறார். மகனை இழந்த துக்கம் தனது தாயாருக்கு வரக்கூடாது என்பதற்காகவும் குருவை இழந்த துக்கம் சீடனுக்கு வரக்கூடாது என்பதற்காகவும் இந்த புதிய உறவு நிலையை சிலுவையிலிருந்தே துவங்கி வைக்கிறார். ஆண்டவரை பின்பற்றுபவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டிய ஒருவருக்கொருவர் ஆதரவு என்பது இயேசுவின் பணியிருலும் போதனையிலும் அதிகமாக இழையோடிய அனுபவம். மத் 5-ம் அதிகார பேறுபெற்றோர் சிந்தனையிலும் இது வெளிப்பட்டுள்ளது. துயரப்படுவோருக்கு ஆறுதல், கனிவுடையோர் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர், இரக்கமுள்ளவர்கள் இரக்கம் பெறுவர், அமைதி ஏற்படுத்துபவர் கடவுளின் மக்கள் என்ற பொறுப்பு, நீதிக்காக துன்படுவோர் விண்ணரசை பெறுவர் இவை அனைத்துமே ஒருவருக்கொருவர் ஆதரவு நிலையில் செயல்பட வேண்டிய போதனைகளே.

திருச்சபை தாய்க்கு இணையானது. கடவுளுடைய பிள்ளைகள் (அதோ உன் மகன்) மகனாக இருந்து திருச்சபைக்கு ஆதரவாக இருந்து திருப்பணியை முன்னெடுத்து செல்ல இந்த அன்பின் ஆதரவு நிலை நமக்கு முன்வைக்கப்படுகிறது. தாயாகிய திருச்சபையை ஆதரவற்றோராக ஆக்கிவிடக் கூடாது.

இயேசு கிறிஸ்துவைப்போல தாய்மையை மதிக்கவும், புதிய இறைக் குடும்பத்தின் உறுப்பினர்களாய் வேறுபாடுகளை களைந்து ஆதரவற்றோருக்கு ஆதரவு பணி புரிந்தும் கிறிஸ்துவின் உணர்வுகளுக்கு கீழ்படிவோம்.

அருள்திரு. S. **கிறிஸ்டோபர் ஏசுமணி**

*சிலுவைத் திருமொழி - 4*

# வாழ்வின் ஏக்கமாகும் தவிப்பு

திருமறைப்பாடம் : மத் 27:45,46

**"என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?"** (மத் 27:46)

கைவிடப்படுதல் எத்தனை கொடியது என்பது மனுமக்கள் அனைவரும் அனுபவிக்கும் அனுபவம். இன்றும் பல கோடி மக்கள் இந்த வேதனைக் குரலை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். இந்திய மக்கள் தொகையில் 30 கோடி குழந்தைகள் உள்ளனர். இதில் 10 கோடி குழந்தைகள் கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம் இழந்த நிலையில் குழந்தைத் தொழிலாளர்களாக உள்ளனர். மலரத் துடிக்கும் மழலை மொட்டுக்கள் வீதிகளில் வாழ்ந்து, பாரம் சுமந்து, பாலியல் வன்முறைக்கு உள்ளாகி வாழ்க்கை கருகிப் போன நிலையில் என் இறைவா ஏன் எங்களை கைவிட்டீர் என்றகதறலின் குரல் உங்களுக்கு கேட்கிறதா?

ஒவ்வொரு ஆண்டிலும் இந்தியாவில் 15 இலட்சம் பெண் குழந்தைகள் 1 வயது ஆவதற்கு முன்பே இறந்து விடுகின்றனர். 5 வயது ஆவதற்கு முன்பே 8½ இலட்சம் பெண் குழந்தைகள் இறந்து விடுகின்றனர். முளையிலே கிள்ளி எறியப்படும் இந்த மொட்டுக்களின் கதறல் எத்தனை பேருக்கு கேட்கின்றது. ஒவ்வொரு ஆண்டிலும் வரதட்சணைக் கொடுமையால் மட்டும் 10000-க்கும் அதிகமான பெண்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். 1980-1990 ஆண்டுகளை விட 1990-2000ம் ஆண்டுகளில் வரதட்சணை சாவு 39 சதவீதம் உயர்ந்துள்ளது. வரதட்சணைத் தொடர்பான வன்கொடுமைகள் 22½ சதவீதம் ஏறியுள்ளது. என் இறைவா என் இறைவா ஏன் என்னை கைவிட்டீர் என்ற இவர்களின் கதறலுக்கு நாம் என்ன சொல்ல போகிறோம்.

கடந்த 50 ஆண்டுகளாக இலங்கையில் தமிழினம் தங்களது குடியுரிமைக்காகவும், மனித உரிமைக்காகவும் பேராட்டத்தில் ஈடுபட்டு போரிலே சாகடிக்கப்பட்ட 1,46,679 தமிழர்களும், அவர்களின் குடும்பங்களும், முள் வேலி முகாம்களில் அடைக்கப்பட்டு விலங்குகளைப் போல நடத்தப்படும் 3 இலட்சம் தமிழ் குடும்பங்களும் கதறும் கதறல் இதற்கு இணையானது என்பது எத்தனை மனிதர்களுக்கு கேட்கிறது?

இரவு முழுவதும் தூக்கமின்மை, விசாரணை என்றபெயரில் உடலும் உள்ளமும் சோர்ந்து போய் தளர்ந்து போகும் அளவிற்கு பாடுகள்,

சிலுவைச் சுமந்து நடந்த கொடிய வேதனை, பசி, தாகம், சிலுவையில் அறைந்து இரத்தம் சிதறிய, சிந்திய கொடுமை, உன்னை நீயே விடுவித்துக் கொள், சிலுவையிலிருந்து இறங்கி வா என்ற ஏளன பேச்சு, தன்னை இரட்சித்துக் கொள்ள சக்தியற்றவர் என்ற நிந்தனை சொற்கள். 3-ம் மணி வேளை முதல் சிலுவையில் தொங்கிய நிலையில் 9-ம் மணி நேரத்தில் என் இறைவா என் இறைவா ஏன் என்னை கைவிட்டீர் என்று இயேசு கதறுகிறார்.

இறைபக்தன் ஒருவர் இதனை கேட்கப்படாத இறைவேண்டல் என்கிறார். எப்படி பார்த்தாலும் கிறிஸ்து உணர்வு பூர்வமாக மக்களின் உணர்வை இங்கு வெளிப்படுத்துகின்றார். பவுல் நான் எல்லாருக்கு எல்லாமுமானேன் என கூறுவது போல கிறிஸ்து கைவிடப்பட்ட மக்களின் உணர்வுகளில் கலந்து இதன் மூலம் பதலளிக்கின்றார்.

### *1. கைவிடப்படுதல் கொடுமையான அனுபவம் :*

உயர்ந்த இலட்சியங்களுக்காக போராடுகின்றவர்கள் பல வேளைகளில் கைவிடப்படுதல் எனும் கொடிய அனுபவத்தை சந்திக்கின்றனர். எசாயா இறைவாக்கினர் (எசா 53:3) இதனைக் குறித்து முன்னறிவித்துள்ளார். அவர் அசட்டைப் பண்ணப்பட்டு, மனுஷரால் புறக்கணிக்கப்பட்டு, துக்கம் நிறைந்து பாடு அனுபவித்தவருமாயிருந்தார். உடனிருந்தவர்கள் தங்கள் முகங்களை மறைத்துக் கொண்டார்கள். எண்ணாமற் போனார்கள். சிலுவையின் பாடுகளில் இதுவே நிகழ்ந்தது. சீடர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப் போனார்கள் (மத் 26:56).

ஆயனை வெட்டு அப்போது ஆடுகள் சிதறிடிக்கப்படும் (செக் 13:7) என்ற இறைவாக்கிற்கிணங்க கிறிஸ்து மரண ஆக்கினைக்குட்படுத்தப்பட்டார். சீடர்கள் சிதறிப் போனார்கள். சீடர்களை தெரிந்து கொண்ட போது அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளை மாற்கு 3:14-ல் கூறப்பட்டுள்ளது. அவர்கள் தம்மோடு கூட இருக்கவும் ஏற்படுத்தினார். இந்த அடிப்படை அழைப்பை மறந்து சீடர்கள் அவரைக் கைவிட்டார்கள்.

மத் 27:39-43 இல் படிக்கையில் வழிபோக்கர், தலைமை குருக்கள், மறைநூல் வல்லுநர்கள், மூப்பர்கள் இயேசுவின் அதிகாரத்தை ஆற்றலை கேள்வி எழுப்பினர். பரிகசித்தனர், இந்த நிலையில் மனிதராகிய எவருக்கும் எழும்பும் கேள்வி இறைவனும் என்னைக் கைவிட்டு விட்டாரா? கிறிஸ்துவும் இந்த உணர்வோடு கேள்வி எழுப்பினார்.

எபி 11:36-38 இல் நம்பிக்கையினாலே கைவிடப்பட்டு துன்பப்பட்டவர்கள் குறித்து சொல்லப்படுகிறது. இறையரசின் விரிவாக்கப் பணியில் அர்ப்பணிப்புடன் செயல்பட அழைக்கப்பட்டோர்.

கைவிடப்படுதல் எனும் கொடிய அனுபவத்தை சந்திக்க வேண்டியது வரும். அதன் முன்னோடியாய் கைவிடப்படுகிற, கைவிடப்பட்டு கொண்டிருக்கிறமக்களின் பிரதிநிதியாய் கிறிஸ்து இத்திருமொழியை தந்தையை நோக்கி ஏறெடுத்தார். இதன் மூலமாய் இறையரசுப் பணியில் ஈடுபடும் அனைவரும் இவ்வனுபவத்தை ஏற்க தயாராக இருக்க வேண்டும் என்றஅறைகூவலை தந்துள்ளார். எனவே இயேசுவின் இந்த ஆழமான இறைவேண்டலை நமக்கு சொந்தாமாக்கி கைவிடப்பட்ட சூழல் வந்தாலும் இறைவனைச் சார்ந்து நின்று ஆசி பெறுவோம்.

## *2. கைவிடப்படுதலிலும் கடவுளைச் சார்ந்து நிற்றல் :*

உலகின் உறவுகள் பலவகைகளில் வெளிப்படுகின்றன. இரத்த சம்பந்தமான உறவுகள், பங்காளிகள் என பெருமையோடு சொல்லும் உறவுகள் உண்டு. பண உறவுகளால் இணைக்கப்பட்டிருப்போர் உண்டு. பதவிகளை பங்கு வைக்க, அண்ணன் தம்பி, மாப்ளே என்று கை கோர்ப்போர் உண்டு. இவர்கள் எல்லாரும் ஏதாவது ஒன்று நடக்காதிருந்தால், கிடைக்காதிருந்தால் ஒரு நிமிடத்தில் உறவுகளை தூக்கி எறியவும் தயங்குவதில்லை. உயர்ந்த இலட்சியங்களுக்காக உழைப்போர் கொண்டிருக்கிறஉறவு, நன்கு ஆராய்ந்து, உரையாடி, உறவாடி கொள்கைகளுக்காய் உயிரை கொடுக்கும் அளவிற்கும் உறவை உயர்வாய் மதித்து செயல்படும் உறவு ஆகும், கிறிஸ்துவுக்கும் தந்தைக்கும் (கடவுளுக்கும்) உள்ள உறவு உயிரைக் கொடுக்கும் அளவிற்குரிய உன்னத உறவு. இதையே இயேசு கிறிஸ்து என்னை அனுப்பினவர் என்னோடு கூட இருக்கிறார் (யோவா 8:29, என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும் (யோவா 14:9), நான் தனியாய் இருப்பதில்லை, தந்தை என்னோடு இருக்கிறார் (யோவா 16:32) என்று குறிப்பிடுகிறார்.

இயேசு கிறிஸ்துவின் உறவு குறுகிய பகுதியை (அல்லது) நிலையை சார்ந்திராமல் அனைவரையும் ஒன்றிணைக்கிற உறவு. கைவிடப்படும் நிலையிலும் தந்தையோடும், உலக மக்களனைத்தோடும் உள்ள உறவில் மாற்றமில்லை. உறவுகளுக்கு பாதிப்பு வரும் நிலையிலும் உண்மையான உறவை இயேசு சிலுவையில் நிலை நாட்டி விட்டார். கைவிடப்பட்ட நிலையிலும் தந்தையையே சார்ந்து நின்று ஏக்க குரல் எழுப்பி தனது உறவை குறுகிய வட்டத்திற்குள் சிந்தியாமல், உயர்ந்த இலட்சியத்திற்காக தியாகத்தோடு செயல்பட்ட, கிறிஸ்துவின் உறவு நமக்குள்ளும் ஆழமாக செயல்படட்டும். தண்டிக்கப்படும் நிலையில் குழந்தை பெற்றோரை கட்டிப்பிடித்து கதறுவது போல கிறிஸ்துவும் புதிய உறவின் உண்மையை உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளார். நாமும் அந்த அனுபவத்தோடு கடவுளைச் சார்ந்து நிற்போம்.

### 3. கைவிடப்பட்ட மக்களோடு இணைதல் :

மத் 10:16-17, 21-22 ஆகிய வசனங்களில் இறையரசின் விரிவாக்கப் பணியைச் செய்யும் போது ஏற்படும் கடிமையான, கைவிடப் படுகிற அனுபவங்களைப் பற்றி கிறிஸ்து தெளிவாக கூறியுள்ளார். ஆடுகளை ஓநாய்களுக்குள் அனுப்புகிறஅனுபவம், ஆலோசனைச் சங்கங்களில் ஒப்பு கொடுப்பது, வாரினால் அடிபடும் அனுபவம் சாவுக்கு ஒப்பு கொடுத்தல், கொலைச் செய்யப்படுதல், எல்லோராலும் பகைக்கப்படுதல் இவை அனைத்தும் இறையரசின் விரிவாக்கப் பணியில் ஈடுபடுவோர் சந்திக்கும் கொடிய அனுபவங்கள்.

கிபி 68-ம் ஆண்டு மரித்த நீரோ அரசனை, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் மறக்கமாட்டார்கள். முதல் நூற்றாண்டில் தொடக்கக்கால திருச்சபையில் 1000-ற்கு மேற்ப்பட்ட பற்றுறுதியாளர்களைப் படுகொலை செய்தான். பவுலும், பேதுருவும் இதனால் படுகொலை செய்யப்பட்டனர். கிறிஸ்து சிலுவையில் சாவை சுவைத்ததால் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களும் மரணத்தை கண்டு அஞ்சவில்லை. சாவிலும், துன்பங்களிலும், கைவிடப்பட்ட அனுபவங்களிலும் கிறிஸ்து தங்களோடு இருப்பதை உணர்ந்திருந்தனர். எனவே மறைச் சாட்சிகளாவதை பெரும் பாக்கியமாக கருதினர். எனவே தான் பவுலார் நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே, நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே என்கிறார் (பிலி 1:21)

என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர் என்பது தோல்வியின் தொனி அல்ல. அது நம்பிக்கையின் அறைகூவல், கைவிடப்படும் அனைவரோடும் கிறிஸ்து இணைந்திருக்கிறார் என்ற நம்பிக்கையின் செய்தியை உரக்க கூறும் உறுதியான வார்த்தை.

இதோ முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன். (மத் 28:20) என்ற ஆண்டவரின் திரு வார்த்தை கைவிடப்படும் வேளைகளிலும் அவர் நம்மோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையை தரட்டும். கிறிஸ்துவின் பாடுகளுக்கு இணையாக பாடுப்பட நாமும் நம்மை ஒப்படைப்போம். நீதிக்காக துன்பபடுகிறவர்கள் பாக்கியவான்கள்.

அருள்திரு. S. **கிறிஸ்டோபர் ஏசுமணி**

# வாழ்வின் எதிர்பார்ப்பாகும் தாகிப்பு

திருமறைப்பாடாம் : யோவா 19:28,29

**"தாகமாய் இருக்கிறது".** (யோவா 19:28)

ஆயிரம் ஆண்டு காலத்திற்கு பின்பு வரவேண்டிய மோசமான இயற்கை விளைவுகளை இந்த தலைமுறையில் நாம் சந்தித்து கொண்டு இருக்கின்றோம். காடுகள் அழிப்பு, தண்ணீர் பற்றாக்குறை, நிலம் மற்றும் நிலத்தடி நீர் மாசு, கடல் நீர் மாசு, வாயு மண்டல மாசு, தட்ப வெப்பநிலை மாற்றம், உணவு சங்கிலி நஞ்சாக மாறுதல், நோய்களின் புது வடிவங்கள், மூலாதாரங்களின் அழிவு, இவைகள் இன்று மனுக்குலத்தை ஏக்கம், தாகம் நிறைந்த சூழலுக்கு தள்ளி கொண்டிருக்கிறது.

சுற்றுப்புறச் சூழல் நெருக்கடி Environmental crisis, உயிரினச் சூழல் நெருக்கடி Ecological crisis என மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டு ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும் உலகெங்கிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தூய்மையான குடிநீர் உலகெங்கிலும் அரிய பொருளாக மாறி வருகிறது. ஒரு லிட்டர் பாலின் விலை- 2 லிட்டர் தண்ணீர் விலை என விற்கப்படும் அளவிற்கு காலம் மாறிவிட்டது. உலகமே தூய்மையான குடிநீருக்கு தாகத்தோடு காத்திருக்கும் நிலை உருவாகி இருக்கிறது. மனிதனாக பிறந்த எவரும் தண்ணீர் குடித்தே ஆக வேண்டும். உடலில் நீர் சத்து (தண்ணீர்) குறையும் போது தாகம் ஏற்படுகிறது. தாகம் மனிதனை எச்சரிக்கும் விதமான உணர்வை ஏற்படுத்துகிறது. நோய் தாக்குதலால் தாகம் ஏற்படும் போது நாம் விழித்துக் கொள்கிறோம்.

இரவு முழுவதும் விசாரணை, ஒய்வு இல்லை உறக்கம் இல்லை, உடலின் காயங்கள், இரத்தசேதம், இவற்றால் கிறிஸ்து தாகம் கொண்டது, தண்ணீருக்காக ஏங்கியது வியப்பு ஒன்றும் இல்லை. கிறிஸ்து இயேசுவுக்கு மூன்று முறைகாடி கொடுக்கப்பட்டது. அவைகளை ஆண்டவர் ஏற்கவும் இல்லை. மாற் 15:36ல் காடியை குடிக்க கொடுத்தனர் என கூறப்பட்டாலும் அது தாகத்தை தீர்க்க போதுமானதாக இல்லை. இந்த நிலையில் தான் யோவான் நற்செய்தியாளர் வேதவாக்கியம் நிறைவேறதக்கதாக தாகமாயிருக்கிறேன் என இயேசு உரைத்ததாக கூறியுள்ளார். கிறிஸ்து இயேசுவுக்கு ஏற்பட்ட தாகத்தை எப்படி புரிந்து கொள்வது.

## *1. மனித உணர்வுள்ள மானிடமகனின் தாகம் :*

நற்செய்தி நூல்களில் கிறிஸ்துவின் மனித தன்மை தெளிவாக கூறப்பட்டுள்ளது. மனித உடல் உடையவராக இருந்தார். (மத். 26:12) இரத்தமும் சதையும் இருந்தது. யோ 6:51, 52 பசியடைந்தார். மத் 4:2 தாகமடைந்தார். யோ 4:7 உணவு உண்டார். லூக் 2:41-43 களைப்படைந்தார். யோ 4:6 தூங்கினார். (மத் 8:24) பரிவு கொண்டார் மத் 9:36 கோபப்பட்டார். மாற்கு 3:5 வியர்வையால் நனைந்தார். லூக் 22:44 இரத்தம் சிந்தினார் யோ 19:34.

இயேசு கிறிஸ்துவின் உலக வாழ்வைக் குறித்து அறிவு நெறிக் கோட்பாட்டாளர்கள், தோற்றக் கொள்கையினர் ஆகியோர் இயேசு உடலோ உலகில் வாழவில்லை. மனிதன் போல வாழ்ந்த கற்பனை தோற்றம் என்றனர். இயேசு சிலுவையில் பாடுபடவில்லை என்றனர். இதை மறுத்த யோவான் இயேசுவின் மனித உணர்வுக்கு அதிக முக்கியத்துவம் தந்து கிறிஸ்து மனித உணர்வுள்ள மானிட மகன் என்பதை அவரது தாகத்தின் வழி வெளிப்படுத்துகிறார். இயேசு தம்மை மானிட மகன் என்று சொல்வதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார், (மாற்கு 8:31) மாற்கு 9:31 மாற்கு 10:45 (மானிட மகன் ஊழியம் கொள்ளும்படி வராமல்) மாற்கு 14:62 (மானிட மகன் வல்லவராம் கடவுளின் வலப்புறத்தில் வீற்றிருப்பார்).

மானிடமகனாக உழைத்த ஆண்டவர் பாடுகளின் பாதையில், சிலுவைப் பாடுகளில் அதிக தாகம் அடைந்தவராய் தாகமாயிருக்கிறேன் என்றார், மனித உணர்வுகளின் தம்மையும் இணைத்து, சரீர வேதனைகளால் தாக்குண்டு தாகமாயிருக்கிறேன் என்றஆண்டவரின் வேண்டுதல் சிலுவையை நோக்கிப் பார்க்க நம்மை அழைக்கிறது.

## *2. பாதிக்கப்பட்டவர்களை விடுதலையாக்க வேண்டும் என்ற தாகம் :*

கிறிஸ்து நாசரேத்தில் உள்ள ஜெப ஆலயத்தில் தனது திருப்பணி எத்தகையது என்பதை ஏசாயா இறைவாக்கினர் நூல் வழியாக அறிவித்தார். அதில் முக்கியமான பணியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு விடுதலையின் செய்தியே மைய இடத்தை பெற்றிருந்தது. ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர் பார்வையற்றோர் பார்வை பெறுவர், ஒடுக்கப்பட்டோரை விடுதலையாக்குதல், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிடுதல் (லூக் 4:18,19) இவைகளே தனது திருப்பணியின் நோக்கம் என்றார், இவற்றில் வெளிப்படும் உண்மை பாதிக்கப்பட்ட வர்களுக்கு விடுதலை.

கிறிஸ்துவின் காலத்தில் பல்வேறு பாதிப்புக்குள்ளானவர்கள் காணப்பட்டனர். நோய்களால், பிசாசின் அடிமைத்தனங்களால், யூத சமய கட்டுப்பாடுகளால், விதவைகள், அனாதைகள், தடம்புரண்டு போன சமூக அடிமை அமைப்புகளால் பாதிக்கப்பட்டோர், கொடிய வரி விதிப்புகளால் பாதிக்கபட்டோர், ரோம ஆட்சியின் அடக்கு முறைகளால் பாதிக்கப்பட்டோர் என திரளான பாதிக்கப்பட்ட மக்கள் இருந்தனர்.

லூக்கா 7:21-22ல் திருமுழுக்குநர் யோவானுக்கு அறிவிக்க வேண்டிய செய்தியை காணலாம். அதிலும் பாதிக்கப்பட்ட பலர் விடுதலை பெற்றிருக்கிறார்கள் என்பதையே யோவானிடம் சொல்லுங்கள் என கேட்டுக் கொண்டார். யோவானுக்கு அறிவிக்க வேண்டிய செய்தியை காணலாம். அதிலும் பாதிக்கப்பட்ட பலர் விடுதலை பெற்று இருக்கிறார்கள் என்பதையே யோவானிடம் சொல்லுங்கள் என கேட்டுக் கொண்டனர். இந்த விடுதலைப் பணி இன்னும் முழுமையடையவில்லையே, இந்த விடுதலை பணி தொடர்ந்து செய்யப்பட வேண்டுமே என்ற தாகம் கிறிஸ்துவிடம் அதிகமாக வெளிப்பட்டது. அந்த உணர்விலே இயேசு 'தாகமாயிருக்கிறது' என்றார். கிறிஸ்து விட்டுச் சென்ற விடுதலைப் பணியை திருச்சபை முன்னெடுக்கும் போது தான் இயேசுவின் தாகத்தை தீர்க்க முடியும்.

### *3. இறையரசின் நிறைவேறுதலுக்கான தாகம்:*

கிறிஸ்துவின் முதல் செய்தி, போதனை, அனைத்தும் என இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது என்பதே. சீடர்களுக்கு அவர் கொடுத்த திருப்பணி திட்டத்திலும் தேவனுடைய இறையரசின் குறித்து பறைசாற்ற வேண்டும் (லூக்கா 9:2) என்று கட்டளையிட்டார். சீடர்கள் தனித்துவந்து கிறிஸ்துவிடம் கேட்டபோதும் இறையரசின் ரகசியத்தைக் குறித்து பேசினார் (மாற் 4:11).

கிறிஸ்துவின் போதனைகள் மட்டுமல்ல அவர் கொடுத்த விடுதலை, அறஞ்செயல் அனைத்துமே இறையரசின் விடுதலைப் பணியே. நான் தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால் தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே என்றார்.

கிறிஸ்துவின் வாழ்வும், பணியும், செய்திகளும், இறையரசின் நிறைவேறுதலுக்காகவும், இறையரசில் மக்கள் அனைவரும் பங்கடைய வேண்டும் என்ற தாகம் கொண்டதாகவே இருந்தது. சிலுவை இறப்பிரானால் இறையரசின் பணி நின்றுவிடக் கூடாது, தடைபட்டு விடக்கூடாது என்பது கிறிஸ்துவின் தாகமாய் இருந்த படியினால் வேத வாக்கியங்கள் மூலம் தேவனுடைய ராஜ்யபணி கட்டியெழுப்பபட்ட படியினாலும் இயேசு இதை உணர்ந்தே தாகமாயிருக்கிறது என்றார்.

நாம் இறையரசின் மக்கள் இறை விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியவர்கள் இறையரசின் பணிகளைத் தொடர்ந்து செய்வதின் வழி இறைவனின் தாகத்தை நம்மால் தீர்க்க முடியும். இறையரசின் பணிகள் இறைவார்த்தைகள் வழி, கிறிஸ்துவின் வாழ்வு வழியாக நமக்குத் தரப்பட்டுள்ளன. கிறிஸ்துவின் தூரக்காட்சியான இறையரசின் பணியை முன்னெடுத்துச் செல்வோம். கிறிஸ்துவின் தாகத்தை தீர்ப்போம்.

அருள்திரு. S. **கிறிஸ்டோபர் ஏசுமணி**

*சிலுவைத் திருமொழி - 6*

## வாழ்வின் நம்பிக்கையாகும் நிறைவு

திருமறைப்பாடம் : யோவா 19:30

**"எல்லாம் நிறைவேறிற்று".** (யோவா 19:30)

உலகின் இன்றும் பலர் பல சாதனைகளுக்காய் நினைவு கூறப்படுகின்றார்கள். உள்ளத்தையும் உணர்வுகளையும் தூண்டி எழுப்பும் தத்துவத்தைத் தந்து விட்டு போனதால் சாக்ரடீஸ் அவரது தத்துவங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். புத்தர் போதிமர ஞானத்தை இந்த உலகிற்கு விட்டுச் சென்றதால் இன்றும் பலருக்குப் போதித்துக் கொண்டிருக்கிறார். மழையால் பொழிந்த உடன் இறந்துப் போகும் மேகமானது, பூமியை விளையச் செய்து தானியங்களாக மீண்டும் வாழ்கிறது. முழுவதும் உருகி ஒன்றுமில்லாமல் போகும் மெழுகுவர்த்தி இறந்த பின்பும் அதன் தியாக சுடரால் ஒளியாய் வீசுகிறது. குப்பை உரமாகி உயிர் வாழ்கிறது. கல்லறைக்கு பின்பும் கலங்கரை விளக்காக ஒளி வீசலாமென்று இயற்கையே புரிந்து வைத்திருக்கிறது.

இறப்பின் சூழலில் வைக்கப்பட்டுள்ள ஒருவர் இறுதியாக முடிந்தது என்று கூறுவது மேலோட்டமாக பார்த்தால், தோல்வியில் சொல்வதாக, விரக்தி உணர்வை வெளிப்படுத்துவதாகத் தெரியும். ஆனால் இயேசு கிறிஸ்துவை பொறுத்தவரை இதனை நிறைவின் குரலாகவே வெளிப்படுத்தியுள்ளார். இயேசு கிறிஸ்து சிலுவையில் இருந்து மொழிந்த "நிறைவேறிற்று" எனும் வார்த்தை சரித்திரத்தின் சாதனையாக கிறிஸ்து செய்து நிறைவேற்றிய விடுதலைப் பணியை உலகம் உள்ளவரை உலகிற்கு உரைத்து கொண்டே இருக்கிறது. அவர் செய்து முடித்த, எல்லாவற்றையும் நிறைவேற்றிய பணிகள் தான் என்ன என்பதை தொடர்ந்து சிந்திக்க துணை புரிகிறது.

### *1. பணியின் நிறைவைச் சுட்டிக் காட்டினார் :*

இயேசு கிறிஸ்துவின் இறையரசிற்கான பணி 3½ ஆண்டுகள் மட்டுமே. அதற்கு 30 ஆண்டுகள் இயேசு கற்றுக் கொண்டார். இறைப்பணிக்கு தன்னை ஆயத்தப்படுத்தினார். "டெட்டலஸ்றாய்" (Tetlestai) எனும் கிரேக்கச் சொல் தனது கடமையை நிறைவோடு செய்து முடித்தேன் என்று அறிக்கை விடும் அனுபவமாகக் கூறப்பட்டுள்ளது.

"நிறைவேறிற்று" என்று இயேசு கூறுவது பணியின் நிறைவை உரக்க கூறும் வெற்றியாளனின் மனநிலையை வெளிப்படுத்துகிறது.

திருப்பணித் தொடக்கத்தில் தனது திருப்பணி பற்றிய அறிக்கையை நாசரேத்தூர் ஆலயத்தில் தெளிவுபடுத்தினார் (லூக் 4:18,19). தான் சொன்னதை நிறைவேற்றி முடிக்க 3½ ஆண்டுகளிலும் ஓய்வு எடுக்காமல் கடினமாக உழைத்தார். தேடிச் சென்று, ஓடி ஓடி உழைத்து எளிய மக்களை, தேவையுள்ள மக்களை சந்தித்து நிறைவான விடுதலை வாழ்வை பூரணமாக வழங்கினார். தனது போதனையிலும், அருஞ்செயல்களினாலும், வறிய மக்கள் நற்பேறு பெற்றவர்கள் என்று ஓங்கி உரைத்தார். இறை ஆளுகையில் எளியவர்கள், குழந்தைகள், தள்ளப்பட்டவர்களுக்கே பங்கு என்பதை சுட்டிக் காட்டினார்.

'விடுதலை சமயங்கள் வாழும், அடிமைப்படுத்தும் சமயங்கள் வீழும்' என்பது போல கிறிஸ்து தொடங்கிய இறையரசின் பணி 3½ ஆண்டுகளில் மாபெரும் வளர்ச்சி கண்டது. தான் தொடங்கிய விடுதலைப் பணியின் நிறைவை உணர்ந்து, அனுபவித்து தன்னால் நிறைவேற்றப்பட்ட பணியின் நிறைவேறுதலை உணர்ந்தே **"**எல்லாம் நிறைவேறிற்று**"** என முழக்கமிட்டார்.

### *2. சீடத்துவப் பயிற்சியின் நிறைவைச் சுட்டிக் காட்டினார் :*

சிலுவையில் இருந்து இரத்தம் சிந்தி வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையிலும் சீடர்களைக் குறித்த சிந்தை இயேசுவுக்கு உண்டாக வாய்ப்புக்கள் உண்டு. ஆரம்பம் முதல் சிலுவை வரையிலும் சீடர்களுக்கு பல பயிற்சிகள் கொடுத்தார். இறையரசின் பணிவிடைகள், உண்மைகளை தனது பயிற்சியிலே சொல்லி கொடுத்தார். மத் 13: 24,31,36, 44,46,47 ஆகிய வசனங்களில் இறையரசின் உண்மைகளைக் கூறி பயிற்சி அளித்தார்.

"என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறி அநேக உண்மைகளை விளக்கி பயிற்சி அளித்தார். மறு ரூப மலையின் பயிற்சி, தீய ஆவிகளைத் துரத்த பயிற்சி, இறையரசில் யார் பெரியவர் என்ற பயிற்சி, பணிவிடைக்காரனாய் செயல்பட பயிற்சி, அதைத் தொடர்ந்து சிலுவை வரையிலும், சிலுவை சுமந்த போதும் சிலுவையில் தொங்கும் நிலையிலும் பாடுகளை எப்படி எடுத்து கொள்ள வேண்டும் என்ற பயிற்சியை அளித்தார். எல்லாம் நிறைவேற்றிற்று என்று திருவாய் மொழிந்து சீடத்துவ பயிற்சியின் நிறைவை சுட்டிக்காட்டினார்.

லியானார்டோ டாவின்சி என்ற The Last Supper என்ற ஒவியத்தை உடனடியாக வரைந்து விடவில்லை. முதல் முயற்சியிலேயே சானியா மிர்சா உலகப் புகழை அடைந்துவிடவில்லை. சோதனை, தோல்வி வந்தது. விடாமுயற்சியோடு போராடி வெற்றி பெற்றார்கள்.

சீடர்களும் இலட்சிய பயணம் முடியும் வரை உறுதியாக இருக்க வேண்டும் என்ற உணர்வு மேலோங்க முடிந்தது. பயிற்சியை நிறைவேற்றி முடித்தேன் என்று தமது வாஞ்சையையும், வேட்கையையும் வெளிப்படுத்தினார் ஆண்டவர் இயேசு.

### *3. பாடுகளின் நிறைவை உணர்த்தினார் :*

'எனக்குப் பாடுகளே இல்லை' என யாராவது கூறமுடியுமா? பிரச்சனைகளே இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. சுவாசிக்கும் எல்லா உயிரினங்களையும் பாடுகள், பிரச்சனைகள் ஆட்டிப் படைக்கின்றன. கிறிஸ்துவுக்கும் பாடுகள் தொடக்கம் முதலே அவரை நெருங்கியே பயணம் செய்தன. இயேசு இதை நன்கு அறிந்திருந்தார். லூக் 12:50 இல் நான் முழுக வேண்டிய ஸ்நானம் உண்டு. அது முடியும் வரை எவ்வளவோ நெருக்கப்படுகிறேன் என்று அடையப் போகும் பாடுகளை பற்றி குறிப்பிட்டார். மானுட மகன் உயிரைக் கொடுக்க வந்தார் என முன் கூட்டியே அடையப் போகும் பாடுகளை குறிப்பிட்டார் (மத் 20:28). பரிசேயர் தன்னைக் கொலை செய்யும் படி விரோதமாய் ஆலோசனை செய்வர் என்பதை குறிப்பிட்டார் (மத் 12:14) பாடுகள் பட்டு கொலை செய்ய படுவதை சீடர்களுக்கு அறிவித்தார் (மத் 16:21). சீடர்கள் இதைக் கேட்டு மிகுந்த துக்கமடைந்தார்கள்.

இயேசுவின் பாடுகளை குறித்து இயேசுவுக்கு பின் வந்த அடியவர்கள் பேதுரு, பவுல் போன்றோர் பாடுகளால் வரும் பலனைக் குறித்து எழுதி உணர்த்தினார்கள். (Iபேதுரு 2:20-22, II திமோ 2:12)

நிறைவேற்று என்று இயேசு கூறுவதின் மூலமாக கிறிஸ்துவுக்கு ஏற்பட்ட பாடுகள் நிறைவுக்கு வருகின்றதை கிறிஸ்து தெளிவாக உணர்த்தினார். அதே வேளை கிறிஸ்துவின் ராஜ்யத்திற்காக உழைப்போருக்கு இந்த பாடுகள் கண்டிப்பாக வரும், தொடரும் என்பதையும் உறுதியாகக் கூறினார்.

மனிதர்கள் இறந்த பின் கல்லறையில் பெயர், பிறந்த ஆண்டு, இறந்த ஆண்டு என மூன்று வார்த்தைகள் எழுதப்படுகின்றன. ஆனால் தேவ ராஜ்ய பணியில், விடுதலை பணிகளில், நீதிக்கான போராட்டங்களில் ஈடுபடுவோர் கூடுதலாக ஒரு வார்த்தையை முத்திரையாக பதிவு செய்கின்றனர். அது அருட்பணியாளர், தியாகி, ஊழியக்காரர், ஆயர், கண்டு பிடிப்பாளர், என்று தியாகச் செயல்களை ஒரு வரி வரலாறு பதிவு செய்யும். முடிந்தது என்று கூறும் ஒரு வார்த்தையில் எத்தனை ஆற்றலுள்ள ஆழமான செயல்களை செய்து நிறைவேற்றி முடித்தவராய் இயேசு வெற்றி வீரராய்க் காட்சியளிக்கிறார்.

அருள்திரு. S. ***கிறிஸ்டோபர் ஏசுமணி***

# வாழ்வுக்கு இலக்கணமாகும் ஒப்படைப்பு

திருமறைப்பாடாம் : லூக் 23:44-49

**“தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்”** (லூக் 23:46)

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிலுவையிலிருந்து மொழிந்த இந்த ஏழாம் திருமொழியினை, தம் முதல் திருமொழியைப் போலவே “தந்தையே” எனத் தொடங்குகிறார். இது அவருடைய மிகுந்த பலவீனத்திலிருந்து ஓர் நம்பிக்கையின் குரலாக வெளிப்படுகிறது. சூதத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு சிறுவயதிலேயே “தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்” என்று ஒவ்வொரு நாளும் இரவு படுக்கைக்கு செல்வதற்கு முன் இறைவேண்டல் செய்ய கற்றுக் கொடுப்பார்கள். திருப்பாடல் 31:5-லிலும் இதே வரிகளைக் காணலாம். இந்த இறைவேண்டலையே இயேசு தம் வாழ்வின் இறுதி வேளையில் சிலுவையிலிருந்து பிரதிபலிக்கிறார்.

இறப்பை ஒரு இனிமையான கனவுக்காக காத்துக் கொண்டிருப்பதை போல சிலர் தங்கள் எதிர்கொள்கிறார்கள். சிலரோ பதட்டமான உடல் வேதனையோடும், அதனோடு இணைந்த ஆன்மிக மனச்சோர்வோடும் எதிர்கொள்கிறார்கள். ஆனால், இயேசுவோ தம் தந்தையின் அன்பின் மீது ஆழமான உறுதியோடும், நம்பிக்கையோடும். தம் இறப்பை எதிர் கொள்கிறார். அதையே அவருடைய இந்த இறுதித் திருமொழி விளக்குகிறது. இந்த திருமொழி உணர்த்தும் சில உண்மைகளை தியானிப்போம்.

## *1. தந்தையோடு உள்ள உறவு :*

இயேசு சிலுவையில் மொழிந்த இந்த ஏழாம் திருமொழி தந்தையாம் கடவுளுக்கும் அவருக்கும் இடையே உள்ள உறவினை வெளிப்படுத்துகிறது. மத்தேயு 6 முதல் 8 வரையிலான மலைப்பொழிவிலும், யோவான் 14 முதல் 16ல் கூறப்பட்டுள்ள, தன் சீடர்களுக்கான இறுதிச் சொற்பொழிவிலும் இயேசு ‘தந்தையே’ என்கின்ற வார்த்தையினை பல முறை பயன்படுத்துகிறார். யோவான் 17-ல் இயேசு மன்றாடிய இறைவேண்டலில் 6 முறை ‘தந்தையே’ என்று கூறும் அவர், தன் வாழ்வின் வேதனையின் உச்சகட்டத்தில், வாழ்வின் இறுதி மணித்துளியிலும் ‘தந்தையே’ தன் தந்தையாம் கடவுளோடு உள்ள உறவை என அழைத்து மீண்டும் வெளிப்படுத்துகிறார்.

இறை மக்களாகிய நாம் தந்தையாம் கடவுளின் பிள்ளைகள். நாம் கடவுளை, ‘அப்பா’, ‘தந்தையே’ என அழைக்கிறோம் (உரோ 8:15). அதுமட்டுமல்ல அந்த தந்தை நம்மிடம் மிகுந்த அன்புள்ளவர். நாம் கடவுளின் மக்களென அழைக்கப்பட்டு கடவுளின் மக்களாகவே இருக்கிறோம் (1 யோவா 3:1). அவருக்கும் நமக்குமான உறவு எத்தகையது. தன் வாழ்வின் இறுதி வேளையிலும் தந்தையாம் கடவுளுக்கும் தனக்குமான உறவை உறுதிப்படுத்திய இயேசுவைப் போல, நாமும் எவ்வேளையிலும் தந்தையாம் கடவுளோடுள்ள உறவில் உறுதியாக வாழவேண்டும்.

### *2. முழுமையான கீழ்ப்படிதல் :*

இந்த திருமொழி இயேசுவின் கடவுளுக்கு முழுமையாக கீழ்ப்படியும் பண்பினை வெளிப்படுத்துகிறது. தன் 12 வயதில் பாஸ்கா விழா முடித்து திரும்பும் வழியில் அவரை காணாமல் தேடிய பெற்றோரின் கேள்விக்கு, “நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?” (லூக் 2:49) என்று பதிலளிக்கிறார் இயேசு. அலகையினால் சோதிக்கப்பட்டபோதும் அவர் ஒருபோதும் கடவுளின் கட்டளைகளிலிருந்து பின்வாங்கவில்லை (மத் 4). பல அருஞ்செயல்களைச் செய்து, பல நோயுற்றோர்க்கு சுகம் அளித்த போதும் அவர் தன்னை முன்னிறுத்தாமல் கடவுளையே மாட்சிப்படுத்துகிறார் (யோவா 11:4). இவை இயேசுவின் கீழ்படிதலையும் கடவுளை மட்டும் சார்ந்து இருக்கும் தன்மையையும் விளக்குகிறது. அந்த சார்புத் தன்மையும் கீழ்ப்படிதலும் இந்த ஏழாம் திருமொழியிலும் வெளிப்படுகிறது.

இயேசுவைப் போலவே கடவுளை, ‘தந்தையே’ என்று அழைக்கும் உரிமையை பெற்றி இருக்கும் நாம் அவரை போலவே வாழ்வின் எல்லாச் சூலிலும் முழுமையான கடவுள் சார்பு தன்மையோடும், முழுமையான கீழ்ப்படிதலோடும் காணப்பட கடவுள் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

### *3. நிறைவான ஒப்படைப்பு :*

தம் தந்தையாம் கடவுளால் அனுப்பப்பட்டு இவ்வுலகில் வந்த இயேசு கிறிஸ்து கடவுளின் விலுப்பத்தையே தம் பணிகளத்தில் செயல்படுத்தினார். தன்னை அனுப்பியவரின் விருப்பத் நிறைவேற்றவே இவ்வுலகில் வந்ததாகவும், தம்மை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும், அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே தன் உணவு எனவும் இயேசு குறிப்பிட்டார் (யோவா 6:38; 4:34). இவ்வுலக மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்க வேண்டும் (மத் 1:21)

என்ற, தம்மீது கடவுளால் வைக்கப்பட்ட பணியை இனிதே நிறைவேற்றிய மனநிறைவுடன் தம் உயிரைக் கடவுளின் கரங்களில் இயேசு ஒப்படைத்தார். கடவுள் நம் கரங்களில் தந்திருக்கம் பணிகளை நேர்மையாய் நிறைவேற்ற இச்சிந்தனை நம்மை அழைக்கிறது.

நாம் வாழும் உலகில் பல கடினங்களும் பல போராட்டங்களும் பல கவலைகளும், பல வேதனைகளும் நம்மை வருத்துகிறது. இயேசு இறக்கும் தருவாயில் சிலுவையில் மொழிந்த இந்த ஏழாம் இறுதி மொழியில் தந்தையாம் கடவுளுக்கும் தனக்குமான உறவினை உறுதிப்படுத்தி அவருக்கு தன் முழுமையான சார்புத் தன்மையையும் வெளிப்படுத்தியதை போல நாமும் நம்மை வருத்தும் உலகில் இயேசுவைப் போல செயல்பட்டு கடவுளை சார்ந்து அவருக்கு கீழ்ப்படிந்து, அவரோடு உள்ள உறவில் உறுதியோடிருந்து அவர்தரும் பணிகளை இனிதே நிறைவேற்றியது இறையரசை நம்பிக்கையோடு சொந்தமாக்குவோம்.

திரு. D.S. **எபனேசர் சாமுவேல்**

# சிறப்பு & விழாக்கால அருளுரைகள்

**புதிய கல்வி ஆண்டு தொடக்க நாள்**

# இலக்குகளாகும் இலட்சியம்

திருமறைப்பாடம் : பிலி 3:12-16

**"பரிசு பெற வேண்டிய இலக்கை நோக்கித் தொடர்ந்து ஓடுகிறேன்..."** (பிலி 3:14)

புது கல்வியாண்டின் புதுமைகள் தேடி இலட்சிய பயணம் துவங்கும் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். புதிய கல்வி ஆண்டின் நமது இலக்கு என்பது நாம் வாழ்க்கையில் அடைய விரும்பும் ஓர் விருப்பமான இடம், பொருள், நிலை ஆகும். ஆனால் இலட்சியம் என்பது அந்த விருப்பமான பொருளை அல்லது இலக்கை அடைய தேவையான உந்து சக்தி ஆகும்.

இலட்சியம் அல்லது குறிக்கோள் இல்லாத வாழ்க்கை பிடிமானம் இல்லாமல் அந்தரங்கத்தில் தொங்குவதை போன்றது. இது வெறுமையை மட்டுமே தேடி தரும்.

ஆனால் மனதில் என் இலக்கை அடைந்தாக வேண்டும் என்ற இலட்சியத்தோடு முயற்சி செய்யும் போது இடையில் எந்த பிரச்சனை வந்தாலும் அதை எதிர்கொண்டு மீண்டும் எழுந்து ஓட முடியும். வாழ்க்கையில் உறுதியான ஒரு பிடிமானத்தோடு வாழ வேண்டுமென்றால் அதற்கு இலக்கு வேண்டும் அந்த இலக்கை நோக்கி ஓடி கொண்டே இருக்க வேண்டும். அது தான் இரலட்சியம் கஷ்டத்தை அனுபவிக்காமல் எந்த ஒரு மனிதனும் தனது இலட்சியத்தை அடைய முடியாது.

பிலிப்பியர் 3-ம் அதிகாரத்தில் திருதூதுவர் பவுல் இலக்கை நோக்கி இலட்சியத்தோடு ஓடுதல் குறித்து குறிப்பிடுகிறார்.

கிறிஸ்து என்னை ஆட்கொண்டதற்கான நோக்கம் நிறைவேற இலக்கை நோக்கி இலட்சியத்துடன் தொடர்கிறேன் என்கிறார்.

இலட்சியத்தை அடைய விரும்புவோர் நான்கு நிலைகளை கடக்க வேண்டும்.

## *1. இலட்சியத் தெளிவு* :

இலக்கை முதலாவது தேர்வு செய்யவேண்டும். அந்த இலக்கை அடைய தனது நோக்கத்திலிருந்து தன்னை எதுவும் திசை திரும்பாமல் இலட்சியத் தெளிவு அடைதல் வேண்டும்

***2. இலட்சியத் தயாரிப்பு*** :

இலட்சியத்தை அடைய தன்னை தயார் செய்து கொள்ள வேண்டும். ஆயத்தம், பயிற்சி, உழைப்பு இவைகளின் வழியாக இலட்சியத்தை அடைய தயார் செய்ய வேண்டும்.

***3. இலட்சிய உறவு*** :

அந்த இலட்சியத்தையே தனது நோக்காக கொள்ள வேண்டும். இலட்சியத்தை அடைவதையே குறிக்கோளாக கொண்டு அதற்குள்ளே பின்னி இணைந்து விட வேண்டும்.

***4. இலட்சியப் பயணம்*** :

பவுல் சொல்லும்போது ஒன்று மட்டும் செய்கிறேன். நடந்ததை மறந்து விட்டு, முன்னிருப்பதை கண்முன் கொண்டு, பரிசு பெற வேண்டிய இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுகிறேன் (பிலி 3:13,14) என்கிறார்.

அந்த இலட்சியத்தை அடையும் வரை தொடர்ந்து, சலிப்பின்றி, தடைகளை கடந்து, கடின உழைப்போடு தொடர்ந்து போராடி கொண்டே இருக்க வேண்டும். இலட்சிய வாழ்வு முடங்கி கிடங்கும் வாழ்க்கை அல்ல. முன்னேற முனையும் வாழ்க்கை.

சாதாரண குட்டி மீன் அடித்து வரும் பெருவெள்ளத்திலும் எதிர் நீச்சல் அடிப்பது போல இலட்சிய பயணத்தை உறுதியாக கொண்டு கிறிஸ்து இயேசுவின் மேல் நம்பிக்கை வைத்து அவர் தரும் பெலத்தோடு இலட்சியத்தை அடைய முனைவோம்.

நம்பிக்கையை இழந்து விடாதே இலட்சிய பயணம் சக்தி முனையில் நடப்பது போல் மிகவும் கடினமானது தான் எனினும் எழிந்திடு, விழித்துகொள், போராடு மனம் தளராதே நீ அடைய வேண்டிய இலட்சியமாகிய உனது குறிக்கோளை கண்டு பிடி கண்டு பிடித்த குறிக்கோளை இறுதி வரை பற்றி கொண்டு முன்னேறு அப்போது உன் வாழ்க்கை இனிமையாகும் புதிய கல்வி ஆண்டு ஆண்டவரின் அருள், ஆசியை நமக்கு நிறைவாக தந்திட்டும்.

அருள்திரு. C. **ஜோண்ஸ் ராஜன்**

# தேர்வு : சாதனையாளருக்கான தொடக்கம்

திருமறைப்பாடம் : நீதி 6:11-16

**"....வலிமைமிக்க வீரனே! ஆண்டவர் உன்னோடு இருக்கிறார்....உன்னுடைய இதே ஆற்றலுடன் செல்வாய்...."** (நீதி. 6:12,14)

வேகமாக ஓடிக் கொண்டிருக்கும் இவ்வுலகில், போட்டி மனப்பான்மை எங்கும் எதிலும் காணக்கிடக்கின்றன. அவைகளில் முக்கியமான 34 இடத்தை பிடிப்பது கல்வி மற்றும் அதை சார்ந்து நிற்கும் தேர்வு. நகர்புறம் தாண்டி கிராமப்புறங்களிலும் நல்ல கல்வியை தங்கள் பிள்ளைகளுக்கு கொடுக்கவேண்டும் என்ற எண்ணமும், ஆசையும் பெற்றோரிடம் வலுத்துக்கொண்டே செல்கின்றது. அதற்குரிய முயற்சிகள் பல நிலைகளில் வெளிப்பட்டுக் கொண்டே தான் இருக்கின்றன. (Eg.) கிராமப்புறங்களில் தங்கள் பிள்ளைகளை பள்ளிக்கூட வாகனத்தில் வழியனுப்ப தங்கள் தோள்களில் பைகளை சுமந்து நிற்கும் தாய்மார்களின் காட்சி...

மறுமுனையில் "தேர்வு" மற்றும் கல்வியை சுமையாக எண்ணும் பள்ளிக் குழந்தைகளும் இருக்கத்தான் செய்கின்றனர். அதிலும் அரசாங்க பொதுத்தேர்வை சந்திக்கும் மாணவ, மாணவிகள் தேர்வு சார்ந்து சந்திக்கும் கடுமையான நெருக்கடிகள், 'இந்தச் சுமை எப்போது எங்களை விட்டு மாறும்' என்ற மனநிலைக்கே வந்து விடுகின்றார்கள். இம்மனநிலையில் மாற்றம் தேவை. சந்திக்கும் தேர்வு வாழ்வின் அடுத்த கட்ட முன்னேற்றத்துக்கான அல்லது சாதனைக்கான தொடக்கம் அல்லது வித்து என்பதைப் புரிந்து கொள்வது அவசியம்.

தரப்பட்டுள்ள திருமறைப்பகுதியில் இஸ்ரவேலரை மீதியானியரின் கையிலிருந்து மீட்டெடுக்கும் பணிக்காக தேர்வு செய்யப்பட்டவர் கிதியோன். தனக்கு முன் நின்ற கடினமான இத்தேர்வை ஏற்றுக் கொண்டு தைரியமும், மனதும் அவருக்கு இல்லை. அதை முதலில் மறுக்கின்றார். இச்சூழலில் கடவுள் அவனுக்கு தைரியமூட்டுகின்றார். "உனக்கு இருக்கிற இதே ஆற்றலுடன் செல்" தேர்வை சந்திக்க ஆயத்தமாகும் பிள்ளைகளுக்கு கடவுள் இதன்வழி இவ்வார்த்தையை நம்பிக்கையாக தருகின்றார்.

இரண்டு சிந்தனைகளைக் காண்போம்.

### *1. ஆண்டவர் உடன் உண்டு :* (நீதி 6:12,16)

கர்த்தர் உன்னோடே இருக்கிறார்.... உனக்கு இருக்கிற இந்த பலத்தோடே போ.....

மீதியானியரின் கைக்கு இஸ்ரவேலரை விடுதலையாக்கும் தேர்வுக்குட்பட்ட கிதியோனுக்குள் பய உணர்வு, தாழ்வு மனப்பான்மை போன்றவை அவருக்குள் இருந்தன. "நான் இஸ்ரவேலை எப்படி விடுவிப்பேன் என் குடும்பம் நலிவுற்றது; மிகவும் என் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன்...."

கிதியோனில் வெளிப்பட்ட தாழ்வு மனப்பான்மையும், பயஉணர்வும் அதிகமாக தேர்வை சந்திக்கும் மாணாக்கரிடையே காணக்கிடக்கின்றன. நல்ல திறன் படைத்தவர்களாகவும், தேர்வுக்காக நேர்த்தியாக ஆயத்தமானவர்களாகவும் இருந்தாலும், தேர்வை சந்திக்கும் தருணத்தில், பலர் என்னால் தேர்வை நேர்த்தியாய் எழுத முடியுமா? எனக்கு நல்ல மதிப்பெண்கள் எடுக்கும் திறமை இருக்கிறதா? என்னால் தேர்வில் சாதிக்க முடியுமா? என் பெற்றோரின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியுமா? என்ற பல கேள்விகளுக்குள் தள்ளப்படுகின்றனர். அத்தகைய குழப்பங்கள் மாறி நல்ல தெளிவோடு, எனக்கு இருக்கிற இந்த பெலன் போதும் எனவும், கடவுள் என்னோடே இருக்கிறார் என்ற நம்பிக்கையுடனும் தேர்வுக்காக ஆயத்தமாகுதல் அவசியம்.

***2. உனக்கு ஆற்றல் உண்டு :*** (நீதி 6:12-14)

கிதியோனிடம் உடனிருப்பதாக வாக்குப்பண்ணி, அவனை ஆற்றல்ப்படுத்திய ஆண்டவர் கிதியோனை திறமையற்றவர் என்றோ, ஆற்றலற்றவர் என்பதோ எண்ணவில்லை. தான் அனைத்தையும் செய்வதாகவோ, கிதியோன் வெறுமனே சென்றால் போதுமென்றோ கூறவில்லை. மாறாக, கிதியோன் ஆற்றல் வாய்ந்தவர் என்பதை உணர்த்தி, அந்த ஆற்றலை அவரே அடையாளம் காணச்செய்கிறார். கிதியோன் "வலிமைமிக்க வீரன்" என்றும், "இருக்கும் ஆற்றலுடன் செல்" என்றும் கூறி அனுப்புவதைப் படிக்கிறோம் (6:12-14). தேர்வுக்கென ஆயத்தப்படும் மாணவர்கள் அனைவரும், தாங்கள் இயலாதவர்கள், ஆற்றலற்றவர்கள் என எண்ணி ஒதுங்கி விடக்கூடாது. இவ்வண்ணம் நம்மை மட்டுப்படுத்திவிடும். மாறாக, நம் உடனிருக்கம் ஆண்டவர் நமக்குள்ளிருக்கம் ஆற்றலை நமக்கு அடையாளப்படுத்தும் போது, நம் ஆற்றலை மேம்படுத்தி முன்னேற வேண்டும். தேர்வு என்னும் சவாலை நாம் எளிதாக வெற்றி கொள்ள முடியும்.

"போர் நாளுக்கென்று குதிரையை ஆயத்தமாக வைத்திருக்கலாம், ஆனால் வெற்றி கிடைப்பது ஆண்டவராலேயே" தேர்வுக்காக பல நிலைகளில் ஆயத்தமாகலாம். ஆனால் நாம் எதிர்பார்க்கும் வெற்றியை ஆண்டவர் துணையோடு பெற்றுக்கொள்ள நம்பிக்கையுடன் முன்னேறுவோம்.

திரு. N.P. **அலெக்ஸ்**

# பற்றுறுதியின் அடையாளமாகும் திருச்சபை

திருமறைப்பாடம் : மத் 16:13-20

**"இந்தப் பாறையின் மேல் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றி கொள்ளா".** (மத் 16:18)

சபைநாள் விழா என்பது திருச்சபை வரலாற்றைநினைவு கூர்ந்து நன்றி செலுத்தும் நாள். திருச்சபையின் ஆன்மிக வளர்ச்சியை நினைவு கூறும் நாள். திருச்சபையின் அடித்தளமாகிய கிறிஸ்து எனும் பாறைமீது சபை கட்டப்பட்டிருக்கிறது. திருச்சபை என்பது கட்டிடம் மட்டும் அல்ல, அது இயேசு கிறிஸ்துவை மீட்பராக நம்பும் பற்றுறுதியாளர்களின் கூட்டம். திருமறையில் பாறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பாறைகற்களின் மீது பலி செலுத்துவார்கள். கடவுளின் வியத்தகு செயல்களை நினைத்து நன்றி கூறஒரு கல்லை நாட்டி அதன் வழியாக கடவுளுக்கு நன்றி கூறுவார்கள். பாறைஅதன் சிறப்பு தன்மைகள் வழியாக சிறப்புறுகின்றது. பாறைஎன்பது கனிமங்கள் அல்லது கனிமப் போலிகளின் சேர்க்கையினால் இயற்கையாக உருவாவது ஆகும். பாறைகள் மனித வரலாற்றுடன் தொடர்ந்து இணைந்திருக்கும் ஒன்றாகும். மனிதர்கள் ஆரம்பத்தில் வேட்டைக்கும், பாதுகாப்பிற்கும் தேவையான கருவிகளைப் பாறைகளிலிருந்து பெற்றுக் கொண்டனர். பின்னர் வாழ்விடங்களை அமைத்துக் கொள்ள கட்டடத்திற்குத் தேவையான பொருளாகவும், நினைவுச் சின்னங்களை அமைப்பதகும் பயன்படுத்தினர்.

இங்கு இயேசு கிறிஸ்து பேதுருவின் பற்றுறுதி அறிக்கையினைப் பாறையாகக் குறிப்பிடுகிறார், இந்த பாறைமீது என் திருச்சபையை கட்டுவேன் பேதுருவின் புரிதலையும், அவரின் உறுதியானத் தமையையும், அவர் வழியாக நற்செய்தி பரவும் என்பதை புரிந்த இயேசு அவரைப் பாறைஎனக் குறிப்பிடுகிறார். பாறைகள் மூன்று வகைப்படும். அவை ஒவ்வொன்றும் தனிதன்மைகளை வெளிப்படுத்தும். திருச்சபையையும் இப்பாறை வகைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லது. சபை நாளை கொண்டாடுகிற நாம் எப்படி பட்ட திருச்சபையாக இருக்கிறோம்?. எப்படி இருக்க வேண்டும்? என்பதைத் திருமறைவழியாகச் சிந்திப்போம்.

***1. தீப்பாறைத் திருச்சபை :*** (Igneous Church)

தீப்பறைபாறைஎன்பது பாறைவகைகளில் ஒரு வகையான பாறை. இது கற்குழம்பிலிருந்து உருவாகின்றது. இவை பாதாளப் பாறை, எரிமலைப் பாறைஎன இரண்டு பிரிவுகளாக அமைகின்றன. பூமியின் மையப் பகுதியிலிருந்து உருகிய கற்குழம்பு மேல் நோக்கித் தள்ளப்பட்டு, பூமியின் மேலோட்டுப் பகுதியிலுள்ள இடைவெளிகளில் தங்கி அங்கு மெதுவாகக் குளிர்ந்து படிவமாகும், தீப்பாறைமிக அதிக வெப்பத்தையுடைய மாக்மா (Magma) பாறைக்குழம்பு குளிர்ந்து உருவானதாகும். தீப்பாறைகள் முதன் முதலில் தோன்றியவை. இப்பாறைகள் குளிர்ந்த பின்பு அது ஒரே தன்மையில் காணப்படுகின்றது.

இன்று பாரம்பரிய திருச்சபைகளும் தீப்பாறைபோன்று காணப்படுகின்றன. தொடக்க காலங்களில் மிக வேகமாக தனது எல்லைகளை, பற்றுறுதியாளர்களை ஆதாயப்படுத்தினது. எங்கெல்லாம் வாய்ப்புகள் இருக்கிறதோ அங்கு தேடிச் சென்று நற்செய்தி உரைத்தது. இன்று திருச்சபைகள் குளிர்ந்த நிலையில் காணப்படுகிறது. கடவுள் குளிர்ந்த நிலையில் உள்ள திருச்சபையை விரும்பவில்லை. கிறிஸ்துவுக்கா ஒளிர்கின்றத் திருச்சபையாக விரிவடைய வேண்டும் . கல்விப் பணிகள், மருத்துவ பணிகள், அருட்பணிகளில் திருச்சபை விரிவடைய வேண்டும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கற்பித்தபடி ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்க, ஒடுக்கப்பட்டோருக்கு ஆதரவாக திருச்சபைகள் மாறவேண்டும்.

***2. படிவுப்பாறைத் திருச்சபை :*** (Sedimentary Church) மத் 16:18

திருச்சபைகள் படிவப்பாறைபோன்று காணப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் காற்று, வெப்பநிலை, நீர் மற்றும் பனிக்கட்டிகளால் பாறைகள் சிதைக்கப்படுகின்றன, சிதைந்த பாறைத் துகள்கள் ஆற்று நீரில் கலக்கின்றன. ஆறு அத்துகள்களை ஆற்றின் கரைகளிலும் ஏரி, கடல் போன்றவற்றின் முகத்துவாரங்களிலும் படிய வைக்கிறது. இவ்வாறு ஏதாவது ஓரிடத்தில் நிலை பெறுகின்றபொருள்களே படிவுகள் எனப்படுகின்றன. முதலில் படிவுகள் மிருதுவாகவும், தளர்வாகவும் இருக்கும். இவை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்குகளாகப் படிகிறது. மேலடுக்கின் சுமையினால் கீழடுக்கிலுள்ள கற்கள் அழுத்தப்பட்டு, பாறைகளின் தாதுக்கள் கற்களை ஒன்றோடு ஒன்று உறுதியாகப் பிணைக்கிறது. இதனால் மிருதுவான படிவுகள் திடமானதாக மாறுகிறது. இது இறுதியாக படிவுப்பாறையாக மாறுகிறது.

திருச்சபை பல்வேறு சிறப்பு வாய்ந்த தன்மைகளை உள்ளடக்கிய மக்கள் கூட்டம். இத்தன்மைகள் கொண்டுள்ள அனைத்து மக்களும் கிறிஸ்துவில் இணைகிறபோது அது மாற்றத்தை ஏற்படுத்தும். படிவு பாறைகளில் தங்கம், வெள்ளி, செம்பு, பிளாட்டினம், நிலக்கரி போன்றவிளையுயர்ந்த தனிமங்கள் கிடைக்கிறது. கிறிஸ்துவின் இணைந்தத் திருச்சபை கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருந்தால் அது விலையுர்ந்ததாக மாறமுடியும். அனைத்து மக்களும் ஒரே சிந்தையோடும் செயல்பாடுகளோடும் வாழமுடியும். இன்று திருச்சபைகள் இன்று விட்டுக்கொடுப்பதிலும், ஏற்றுக் கொள்வதிலும் வளரவேண்டும். கிறிஸ்து என்னும் ஒரே மைய கருத்தில் அனைவரும் ஒன்றாகி, அன்பிற்கும், ஒன்றிப்புக்கும் சான்றாகி வாழ்நாளில் திருச்சபை விலையுயர்ந்த பாண்டமாகிறது. எந்த பாதாளத்தின் வாயில்களும் அதை மேற்கொள்ளுவதில்லை.

### ***3. உருமாறிய பாறைத்திருச்சபை :*** (Metamorphic Church)

திருச்சபையின் மக்கள் உருமாற்றம் அடைய வேண்டும். உருமாறிய பாறைகள் தீப்பாறைகளிலிருந்தும். படிவப்பாறைகளிலிருந்தும் உருமாறியவைகள். இது முதல் நிலைப்பாறைஎனப்படும். இவை 15 பாகை செல்சியசுக்கு மேற்பட்ட வெப்பநிலையிலும். உயர்ந்த அழுத்த நிலையிலும் இயற்பியல் மற்றும் வேதியியல் மாற்றங்களுக்கு உட்படுகிறது. இவ்வாறு உருமாறிய பாறைகள் உருவாகிறது. இப்பாறைகள் தங்கள் பழைய தன்மையை களைந்து புதுப் பொலிவினை பெறுகின்றன.

திருச்சபையும் கிறிஸ்துவில் கட்டப்படும் போது பழைய தன்மைகளைக் மாறி புதிதாக்கப்படுகிறது. இறைமக்களின் தீமைகள் அகன்று புது வாழ்வுக்கான மாற்றுருவாக்கம் ஏற்படுகிறது கற்பாறை என அழைக்கப்பட்ட பேதுரு கிறிஸ்துவுக்காக எழும்பி பிரகாசித்தார். கிறிஸ்துவுக்காக உறுதியுடன் நின்றார். திருச்சபையின் தந்தையாக எழும்பினார். தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டு இரத்த சாட்சியாகவும் மாறினார்.

Your religion is not what you do on Sunday. It is how you live from Monday to Saturday என்றக்கூற்றுக்கிணங்க ஞாயிற்றுக்கிழமை தோறும் மட்டும் செயல்படும் திருச்சபைகளாக அல்ல, அனைத்து நாள்களிலும் வாழ்ந்து காட்டும் திருச்சபையாக உருமாற்றம் பெறவேண்டும். திருச்சபை என்பது வெறும் கட்டிடம் அல்ல; அது பற்றுறுதியாளர்களாய் கிறிஸ்துவுக்காக உருமாறிய இறைமக்கள் கூட்டம் வேற்றுமைகளை தவிர்த்து பிறருடன் இணைந்து கிறிஸ்து என்னும் அடித்தளத்தின் மேல், பற்றுறுதின் உறுதியில் கட்டப்படும் திருச்சபையாக மாறுவோம்.

திரு. **நிஸ்பர்ட் G.M. ஷாலோம்**

*விழாக்கால அருளுரை* | *திருமறைப்பள்ளி ஆண்டுவிழா*

## நல்வழியில் நடக்கப் பழக்குவோம்

நீமொ 22:1-6 | உரோ 6:16-23
திபா 123 | லூக் 2:22-33

**"நல்வழியில் நடக்கப் பிள்ளையை பழக்கு; முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை விட்டு விடமாட்டார்".** (நீமொ 22:6)

'வைரமும் துலக்கிட, துலக்கிடப் பளிச்சிட்டு மிளிரும்' எனும் பழமொழிக் கேற்ப நல்ல பழக்க வழக்கங்களை இளஞ்சிரார்கட்கு பெற்றோர், ஆசிரியர், ஆயர்கள் மற்றும் தலைவர்கள் கற்றுக் கொடுப்பதினிமித்தம் இளஞ்சிரார்களின் வாழ்வு சிறப்புபெறம். இயேசு கிறிஸ்து தமது குழந்தைபருவத்தில் தனது பெற்றோருக்கு கீழ்படிந்து, திருச்சட்டத்தை நன்கு கற்றுஇ நானே வழி எனத் தனது வாழ்வினை மக்களுக்கு முன் மாதிரியாக்கினார்.

ஐந்தில் வளையாதது ஐம்பதிலும் வளையாது என்பது முதியோர் முன் மொழியன்றோ? ஆகவே சிறுபருவத்தில் நம் பிள்ளைகள் அனைவரையும் நல்வழி நடக்க பழக்க வேண்டியது நமது கடமையாயிருக்கிறது.

### *1. பிள்ளையை நல்வழியில் அனுதினமும் நடக்கப் பழக்கிடுவோம்:* (நீமொ 22:6அ)

பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம், மக்கட்பேறு அவர் நமக்கு அருளும் பரிசில் (திருப்பாடல் 127:3) பிள்ளைகள் கடவுளின் அருட்கொடையாக குடும்பங்களுக்கு தரப்பட்டிப்பதினால் அவர்களை நல் வழியில் நடக்க பழக்கிடுவது இறைவன்பு நமக்குத் தரப்பட்டுள்ள பொறுப்புள்ள ஆரம்ப இறைப்பணி. மோசே தனது சிறு குழந்தை பருவத்தில் எகிப்தியரின் சகல கலைகளையும் கண்டு வாக்கிலும் செயலிலும் வல்லவரானார். சாமுவேல் தனது குழந்தை பருவத்தில் ஏலியிடம் ஒப்படைக்கப்பட்டு நல்வழியில் நடகக்ப் பழக்கப்பட்டார் என்பதை மிகத் தெளிவாக 1சாமுவேல் 3:9,10-ல் வாசிக்க முடிகிறது. தாவீது தன் வாழ்வில் அவர்வாயில் சொல் பிறவாதற்கு முன் ஆண்டவர் அவர் வழிகளை (சங். 139:3,4) அறிந்திருந்ததால், ஆண்டவரின் நல்வழிகளைப் பின்பற்றி சிறந்ததொரு அரசராகவும், அரசாட்சியின் அடையாளமாகவும் அறியப்பட்டார். அவரது வழிமரபிலே இயேச உலகிலே பிறந்தார்.

ஒரு நண்டு தன் குஞ்சுகளை நடக்கப் பழக்குகிறஓர் கதை ஒன்று உண்டு. தாய் நண்டு ஒன்று முன்னால் நடந்து தன் குஞ்சுகளுக்கு மாதிரியினையும் நடந்து வர பயிற்சியும் கொடுத்தது. குஞ்சுகள் தங்கள் தாயினைப் பின்தொடர்ந்து செல்ல தாய் நண்டு, நடைப் பயிற்சியினை முடித்து அவைகளின் நடையைப் பின்னால் நின்று கவனித்தது பின்னர் தாய் நண்டு தன் குஞ்சுகளிடம் நீங்கள் நேராய் நடக்கவில்லையே ஏன் என்றதாம். தன் தவறு புரியாமல் கூறியதை எண்ணி நண்டு குஞ்சுகள் சிரித்ததாம். எங்களை நடக்கப் பயிற்றுவித்த போது இப்படித்தான் கோணி, கோணி பக்கவாட்டில் நடந்து பயிற்சி தந்தீர்கள். இனி எங்களால் இப்படித்தான் நடக்க இயலும் என்று ஒரு சேர குரல் கொடுத்தாம். அப்போது தான் தாய் நண்டும் தன் குறைஉணர்ந்தது.

திருவிவியத்தினை கரத்தில் ஏந்தி சரியான நேரத்தில் ஆலயம் வராத பெற்றோர், பிள்ளைகளை கேள்வி கேட்குமுன், முன் மாதிரிகளாய் நான் நடக்கின்றேனா? எனச் சிந்திப்பது நல்லது. Face Book (முக நூல்) மற்றும் WhatsApp யில் (புலனம்) அதிக முக்கியத்துவம் தரும் இன்றைய தலைமுறையினருக்க இறைவார்த்தை உணர்ந்து நல்வழியில் அனுதினமும் நடக்கப் பழக்கிடுவோம்.

## 2. *முதிர் வயதில் நல்வழி பழக்கம் விட்டிடாது காத்திடுவோம் :* (நீமொ 22:6b)

ஆறில் பழகியது அறுபதிலும் தொடருவது இயற்கையான ஓர் உண்மை. முற்பிதாக்களின் மூன்றாமவரான யாக்கோபு எனும் இஸ்ரயேலும் தம் முதிர்வயதில் தம் பிள்ளை யோசேப்புக்கு ஆசி வழங்கினார். தனது பெற்றோரின் ஆசி வழங்கும் நல் பழக்கத்தினை விட்டிடாது அவரும் காத்திட்டார் என தொடக்க நூல் 32:26-30, மற்றும் 48:15,16ல் காண்கின்றோம்.

முதிர்வயதினராகிய சிமியோன் எனும் ஆசாரியர் எருசலேம் ஆலயத்தில் (லூக்கா 2:25 மற்றும் 26-31ல்) இயேசுவை குழந்தையாக பெற்றோர் கொண்டு வர அக்குழந்தையைக் கைகளில் ஏந்தி கடவுளைப் போற்றியுள்ளார் (லூக்கா 2:25; 26-31). 84 வயதுடைய அன்னா எனும் பெண் இறைவாக்கினர் ஆலயத்தில் எருசலேமின் மீட்புக்காக காத்திருந்த எல்லோரிடமும் குழந்தை இயேசுவைப் பற்றி பேசியுள்ளார். (லூக்கா 1:36,37). முதிர்வயது ஒரு பொருட்டல்ல, ஆனால் முதிர்வயதில் நல் வழி பழக்கம் விட்டிடாது காத்து அழியா வாழ்வினை சிறார்களும் பெற்றிட வாழ்வது இன்றியமையாதது.

தந்தையின் பணியில் உதவியாயிருந்து செருப்பு தைக்கும் போது செருப்பூசி முறிந்து ஓர் கண்ணில் பட அந்த கண் பார்வையினை இழந்தோடு, சில நாட்களில், மறு கண்ணிலும் அந்த நரம்புகள் பாதித்து இருகண்களின் பார்வையும் இழந்தார் லூயி பிரேயில் என்றஇளைஞன். பின் நாட்களில் மனவுறுதி, தளராத கடின உழைப்பினால் தம்மைப் போல் இரு விழிகளிழந்தாரும் தம் கை விரல் நுனியில் ஒளிச் கொணர்ந்திடச் செய்தார். கண் விழியிழந்தோர் மற்றும் கண் விழியற்றோரும் புத்தகங்களைக் காண விடினும் அதனைப் படித்து, எழுதிட வழி வகுத்தாரென்பது இன்று உலக சரித்திரம் ஆயிற்று.

### *3. நிலைவாழ்வில் நம் நட்புறவை உறுதிப்படுத்துவோம் :*

(நீமொ 22:6)

உலக வாழ்வு புல் போல், புல்லின் பூபோல் விரைவாய் ஓடி மறையும். ரப்பர் பந்தும் துள்ளி, துள்ளி ஓடி மறையும். ஆனால் மனிதராகிய நம்மனைவர்க்கும் நிலையான மீட்பின் வாழ்வை தர நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து அழைத்துக் கொண்டிருக்கிறார். நீதித்தலைவர் யோசுவா இஸ்ரயேலர் மக்களிடம் நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம் எனச் சவாலோடு பேசுவதை யோசுவா 24:15-ல் காண்கின்றோம். இயேசு கிறிஸ்து தம்மிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலை வாழ்வு பெறுவார் என அன்பின் அழைப்பு விருப்பதை யோவான் 3:1ல் காண்கிறோம். இவ்வுலகில் நேர்மையாய் வாழ்வோர் நிலைவாழ்வு பெறுவர் (மத். 25:46).

யோவான் 10:27, 28ல் அவரது குரலுக்கு செவிசாய்த்து அவரை போதகராக ஆண்டவர் கூறுகிறார். பின் தொடர்ந்தால், நிலை வாழ்வினை அளிக்கிறேன். அது என்றுமே அழியாத வாழ்வாகும்.

உரோமர் 6:22ன் படி பாவத்திலிருந்து விடுதலை வாழ்வு பெற்று கடவுளுக்கு அடிமைகள் ஆகி நிலை வாழ்வு. பெறவேண்டும். கடவுள் கொடுக்கும் அருள் கொடை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோடு இணைந்து வாழும் நிலை வாழ்வு (உரோ 6:23). நமது பிள்ளைகள், ஆண்டவரின் குரலைக் கேட்டு, பின் தொடரவும், பாவத்துக்கு விலகி, ஆண்டவரைப் பற்றியிருக்கவும் அவர்களை நாம் பழக்கிடுவோம். ஆண்டவர் அருளும் பலனான நிலைவாழ்வு பெற அவர்களை உறுதிப்படுத்துவோம்.

அருள்திரு. S. **காட்பிரே சாமுவேல்**

# அடிமையாகாதிருப்போம்

திருமறைப்பாடம் : 1 கொரி. 6:12-20

**"எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு. ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; ......ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன் ."** (1கொரி 6:12)

திருச்சபையின் ஆரம்ப காலத்தில் உரோமை நகரில் ஒரு கிறிஸ்தவ விதவைதாய் தன் 13-வது மகனுடன் வாழ்ந்து வந்தாள். ஒரு நாள் அவளது மகன் தான் ஒரு கிறிஸ்தவனாக இருப்பதற்காகவே அடிபட்டு வீங்கிய கன்னங்களுடன் வந்ததைப் பார்த்து முதலில் தன் மகனிடம் உன்னை அடித்தவர்களை என்ன செய்தாய்? என்று கேட்டாள். மகன் மிக அமைதியாக கிறிஸ்து மன்னித்தது போல மன்னிக்க வேண்டும் என்று நீங்கள் சொல்லித் தந்ததையே செய்தேன் என்று பதிலளித்தான். உடனே அந்த தாய் தன் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியில் கோர்த்திருந்த தங்க சிமிழை கழற்றி தன் மகனது மாலையில் கோர்த்துவிட்டாள். "எப்போது தன் மகன் ஒரு கிறிஸ்தவனாக நடந்து கொள்ளுகிறானோ" அப்போது அவனுக்கு அணிவிக்க வேண்டுமென்றே தனது கணவர் விசுவாசத்திற்காக வீர மரணமடைந்தபோது சிந்திய இரத்தத்தில் தோய்த்தங்க சிமிமை மிக பத்திரமாக வைத்திருந்தார்கள். இந்த உலகில் பல்வேறுபட்ட அடிமைத்தனங்களில் இன்றைய மக்கள் சிறைபட்டுக் கிடக்கின்றனர். அதில் பெரும்பான்மையர் இளையோரே. இவர்கள் தாங்கள் இப்படி அடிமைப்பட்டிருக்கிறோம் என்பதையே (யோ 8:33) அறியாமலே இருப்பதுவே விடுதலைப் பெற இயலாமைக்கான காரணமாகும். இளையோரை அடிமைப்படுத்தும் காரணிகளை இரண்டு பகுதியாக பிரித்துபார்க்க முடிகிறது. 1. உடலைக் கெடுக்கும் அடிமைத்தனங்கள். 2. உள்ளத்தை கெடுக்கும் அடிமைத்தனங்கள். நமது சிந்தனைப் பகுதியாக கொரிந்திய திருச்சபைக்கு பவுலார் எழுதிய கடிதத்தில் நாம் (இளையோர்) அடிமையாகாதிருக்கக் கூறும் வழிமுறைகளைச் சிந்திப்போம்.

## *1. தகுதியற்றவை என்ற அறிவு* (1கொரி 6:12)

மனிதரின் ஆசைகள் பலவிதம். அதில் தனக்கென்று தனி சாம்ராஜ்யம் கட்டி அதிலே நீந்தி மகிழ வேண்டும் என்று விரும்புகின்றனர். இந்த ஆசைகளால் மனிதர் செல்வத்தை பெருக்கி, தொழிலை வளர்த்து,

அதிகாரத்தையும் பற்றிக்கொள்ள விரும்புகின்றனர். இப்படிப்பட்ட ஆசைகளாலும், விருப்பங்களாலும் அடிமைப்பட்டுப் போகும் மனிதன் ஒரு போதும் இவற்றில் அடிமைப்படத் தகுந்தவர் அல்ல என்று அறியாமலேயே செய்கின்ற செயல்களே மிகுதியானவை. ஒவ்வொரு (இளைஞனும்) சகோதரனும் சகோதரியும், அவர்கள் உண்ணும் உணவு, அருந்தும் பானம், உடுத்தும் ஆடை இவைகளைத் தனதாக்கும் போது இது தனக்குத் தகுந்ததா என்று தன்னை சோதித்து பார்க்க வேண்டும். நண்பரோடு, தோழியரோடு உடனிருக்கும் போது அவர்களின் மகிழ்விற்காக நமது உடலை கெடுப்பவைகளை நாம் உட்கொள்ளல் அருந்துதல், போன்றவை நமக்கு தகுதியற்றது என்ற எண்ணம் எப்போதும் நம்மில் இருக்க வேண்டும். ஆதி 37-ம் அதிகாரத்தில் 17 வயதுடைய (ஆதி 37:2) இளைஞன் யோசேப்பு அவனுடைய சகோதரர் செய்த துன்மார்க்கத்திற்கு உடன்படவில்லை என்று காணலாம். யோசேப்பு அந்த நாட்களில் தனது செயயல்களை கடவுளுக்கு பிரியமானதாக அமைத்துக் கொண்டார் ஆகவே அவருக்கு அவமானம் வந்தது. இது போன்ற சில அவமானங்கள், ஒதுக்கப்படுதல் நமக்கு ஏற்பட்டாலும் நாம் நமது பற்றுறுதி வாழ்வில் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். (தானி 1:8-17) பாபிலோனிய அடிமைத்தனத்தில் இருக்கும் போது அரச உணவு கொடுக்கப்பட வேண்டும் என்று கட்டளை இருந்த போது தான் அந்த எபிரேய வாலிபர்கள் நால்வர் இந்த உணவாலும், பானத்தாலும் நாங்கள் தீட்டுப்படலாகாது என்றார். பவுலைப் போல எல்லாம் அனுபவிக்க உரிமை இருந்தாலும் தகுதியாயிராது என்று தங்களை தற்காத்துக் கொண்டனர். இப்படி இவர்கள் தங்களை தற்காத்துக் கொண்டதாலேயே அந்த எபிரேய இளைஞர் நால்வரும் அன்று அரண்மனையிலும், அரசன் முன்பும் சிறந்து விளங்கினார்.

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் மாநாடு ஒன்றில் கலந்திட ஆயத்தப்பட்ட நேரத்தில் அவரது குருவின் மனைவிடம் நல்லாசி பெற சென்றார். அந்த அம்மையரோ சமையலறையில் பணி செய்து கொண்டிருந்தார். தாயே என்னை ஆசி செய்யுங்கள் என்று கேட்டவரிடம் சமையலறையில் இருந்த கத்தியை சுட்டிக்காட்டி அதை எடுத்து தா என்றாராம். விவேகானந்தரும் உடனே கத்தியை எடுத்து அந்த அம்மையாரிடம் கொடுத்திட பெற்றுக் கொண்டவர் உனக்கு என் நல்வாழ்த்துக்கள். நீ வென்று வா என்று வாழ்த்தினாராம். ஒன்றும் புரியாது நின்ற விவேகானந்தர் கத்திக்கும் வெற்றிக்கும் என்ன தொடர்பு என்று கேட்க மகனே உன்னை பரிசோதிக்கவே கத்தியை எடுத்துத்தர கேட்டேன். பொதுவாக கத்தியை ஒருவருக்குக் கொடுப்பவர் அதன் கூர்மையான

பகுதியை பெற்றுக் கொள்பவரிடமும், கத்தியின் கைப்பிடியை தம்மிடமும் வைத்துக்கொள்வர் ஆனால் நீயோ கூர்மையான பகுதியை உன்கையில் வைத்துக் கொண்டு கத்தியின் பிடியையே என்னிடம் நீட்டினாய் பிறருக்குத் துன்பம் விளைவிக்காமல் துன்பத்தை தானே தாங்கிக் கொள்ளும் மனபக்குவம் உனக்குள்ளது ஆகவே நன்று வா என புகழ்ந்தேன் என்றார்.

இப்போதும் நாம் எத்தகைய தகுதியுடையோராக இருக்கிறோம் என்று சிந்திப்போம்.

## *2. தகுந்தோர் என்ற அறிவு* (1 கொரி 6:19,20)

தகுதியற்றதை தள்ளிவிடும்போது நமது உடல் கடவுள் வாசம் பண்ணுவதற்கு தகுந்தாகிவிடுகிறது. இந்த அடிப்படைகளை மனிதன் கடந்து வீரநடை போடலாம். ஆதி 39-ம் அதிகாரத்தில் இளைஞன் யோசேப்பு பாவத்துக்கு உடன்படமாட்டேன் என்று விலகி ஓடியதை. சாதாரணமான செயலாக எடுத்துக் கொள்ளாமல் இப்படி சிந்திப்பது பொருத்தமாக இருக்கும். “கடவுளுக்கு சொந்தமான உறைவிடத்தை தான் தீட்டுப்படுத்திட கூடாது என்று உள்ளுணர்வுடன் இருந்திருக்கலாம்” அதே நேரத்தில்தான் கடவுள் தங்கும் உறைவிடமாகவே என் தாயின் கருவறை முதலே வளர்க்கப்பட்டு தெரிவு செய்யப்பட்டவன் என்ற உண்மையை மறந்தபோது தான் சிம்சோம் என்ற இளைஞன் கண்களின் இச்சைக்கு அடிமைப்பட்டு, பெலிஸ்தியர் கையில் வேடிக்கைப் பொருளானானன். 1 கொரி 6:15 கூறியபடி கடவுளின் திருவுடலின் உறுப்பாகிய நமது உடலை தீமையின் உறைவிடமாக்கலாமா என்ற வினாவினை எழுப்பிப்பார்க்க வேண்டும்.

கடவுளின் திரு மகனாக நம்மைப் போல மானிட மகனாய் மண்ணில் வந்த போதும் அவர் இம்மண்ணுலகுக்குரியவைகளைச் செய்யாமல் தம்மை அனுப்பிய தந்தைக்கு விருப்பமானதையே செய்து நமக்கு சிறந்த சான்றாக இருக்கிறார். நாம் யார் என்பதை அறிந்தால் எப்போதும் நாம் எங்கே இருக்கிறோம், எதைச் செய்கிறோம், என்ன பேசுகிறோம் இவை நமக்குத் தகுதியானதுதானா, நம்மில் இறைவன் வாசமாக இருப்பதற்கு இவை தகுதியானதா என்பதை அறியமுடியும்.

இந்தியாவின் அப்போஸ்தலன் என்றழைக்கப்பட்ட சாது சுந்தர் சிங் இயேசு கிறிஸ்துவை தன் வாழ்வின் மீட்பராக ஏற்றுக் கொண்ட நாட்களில் அவரது பெற்றோருடைய கடுஞ்சினத்துக்கு உள்ளானார். குடும்ப உறவுகளைவிட்டு பிரிக்கப்பட்டார். ஒரு சூழலில் அவர் தங்கியிருந்த அவரது வீட்டிலிருந்தும் துரத்தப்பட்டார். அந்த நேரத்தில் “எனக்கு இந்த வீட்டில் தங்க இடம் இல்லாது நான் வீதியில் தள்ளப்பட்டாலும் என்

இதயத்தில் தங்கும் இயேசுவை நான் வெளியே விரட்டி விட மாட்டேன்" என்றாராம். நமது ஆன்மீக அனுபவம் எப்படியுள்ளது? இத்தகைய வைராக்கியம் நம்மிடையே உண்டா? கடவுளின் வீடாகிய எருசலேம் திருக்கோவில் வியாபார தலமாகவும், கள்ளர் குகையாகவும் மாறி இருத்தபோது இறைமகன் இயேசு அதை சுத்தம் செய்தார் (மத் 21:12,13). தூய உள்ளத்தோர் பேறு பெற்றோர். அவர்கள் கடவுளை காண்பார் என்றார் இயேசு. (மத் 5:8) நாமும் கடவுளின் வாழ்விடமாக வேண்டும் என்று நம்மில் எதிர்பார்க்கிறார்.

மேலே நாட்டு கலையுலகில் நட்சத்திரமாக திகழ்ந்தவர் மைக்கேல் ஆஞ்சலோ. உன்னதமான ஓவியர் மட்டுமல்ல சிற்பியும் கூட. இவர் கைபட்டால் கசங்கிப்போன காகிதம் கூட ஓவியமாகும். ஒருமுறை இயேசுகிறிஸ்துவின் ஓவியத்தை வரைந்து கொண்டிருந்தார். ஓவியம் வரைந்து முடியும் நிலையில் அவரது முகம் மட்டும் சரியாக அமையவில்லை. கருணையே உருவான இயேசுவின் கண்களில் பிரகாசிக்க வேண்டிய ஒளியும், தெய்வீகமும், மென்மையும் வர்ணங்களால் வருணிக்க முடியவில்லை. இவரது தூரிகை அன்று அவருக்கு கீழ்ப்படியவில்லை. பலமுறை முயன்று தோற்றவர் ஏன் என்று சிந்திக்கலானார். அப்போதுதான் நினைவில் வந்தது தனது அண்டை வீட்டுக்காரரிடம் முந்தினநாளில் சண்டையிட்டு கோபத்தோடே பேசியது மட்டுமல்ல அவரை பழிவாங்க வேண்டுமென்ற எண்ணம் மனதில் பதுக்கி வைத்தது. கோபம் சுமக்கும் தீக்கனலும் உணர்ச்சிக் கொந்தளிப்பு உரசிவிடும் நெருப்பும் உள்ளத்தில் எரியும்போது கருணையின் மென்மையான கண்களால் காணமுடியுமா, கைகளால் வரைந்திட முடியுமா? முடியாதே எழுந்த மைக்கேல் தன் அண்டை வீட்டுக்காரரிடம் ஒப்புரவாகினார். பின்னர் வந்து தனது கையில் தூரிகையை எடுத்த சில மணித்துளிகளிலேயே அவர் எதிர்பார்த்ததை விட மிகச் சிறப்பாக அமைந்தது. இயேசுவின் முகம் கருணையால் நிறைந்திருப்பதையும் அவரது கண்களில் பிரகாசம் இருப்பதுமான உயிரோட்டமான ஓவியமாக வரைபவருக்குக்கூட இயேசு அவரது உள்ளத்தில் தங்காமல் அதை வரைய முடியவில்லை. இன்று அவரது சான்றுகளாக வாழ அழைக்கப்பட்டிருக்கிற நம்மில் இயேசு தங்க நாம் இடமளிக்காமல் எப்படி கிறிஸ்தவராக வாழமுடியும் சிந்திப்போம், செயல்படுவோம், கிறிஸ்துவுக்கு பிரியமானதை மட்டும் செய்வோம். எப்போதும் அவர் நம்மில் தங்க தகுந்தோராக வாழ்வோம். கிறிஸ்துவுக்காகவும், திருச்சபைக்காகவும் வாழுவோம். இறை ஆசி நம்மில் தங்குவதாக. ஆமென்.

அருள்திரு. **ப. ஜேக்கப் பீற்றர்**

## உளமார இசை பாடுங்கள்

திருமறைப்பாடம் : எபே 5:9-21

**"...உளமார இசைப்பாடி ஆண்டவரைப் போற்றுங்கள்..."** (எபே 5:19)

இசைக்கு மயங்காதோர் எவரும் இல்லை. இசைக்கு பல்வேறு நிலைகளில் ஆற்றல் உண்டு. குறிப்பாக, கிறிஸ்தவ இசைக்கு (பாடல்களுக்கு) திருமறைப் போதனைகள், வரலாற்றில் கடவுளின் மீட்பின் செயல்பாடுகள், இறையடியார்களின் பல்வேறு அனுபவ வெளிப்பாடுகள் போன்றவைகள் உள்ளடங்கிய தனிச் சிறப்பு உண்டு. இப்பாடல்களை உற்சாகத்தோடும் கருத்தோடும் பாடும்போது நாம் இறை ஆற்றல் பெறுகின்றோம்.

திருச்சபைத் தொழுகைகளுக்கு அழகு சேர்ப்பது கருத்து நிறைந்த ஆன்மிக பாடல்கள். கிறிஸ்தவ வாழ்வில் இன்றியமையாத ஒன்று ஒருவருக்கொருவர் புத்தி சொல்வது ஆகும். தூய பவுலார் எபேசு திருச்சபைக்கு எழுதிய கடிதத்தில் முப்பெருந்தன்மைகளுடைய பாடல்கள் வழியாக ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள் என்று ஆலோசனைக் கூறுகிறார்.

### 1. "*திருப்பாடல்கள்*"

திருமறை இலக்கிய நூல் பிரிவில் திருப்பாடல் (சங்கீதம்) தனிசிறந்த இடத்தைப் பெறுகிறது. இவை தனிப்பட்ட இறையடியார் அல்லது ஒரு கூட்ட மக்களின் இறைப்புகழ், இறைவேண்டல், இறையனுபவ வெளிப்பாடு மற்றும் இறை நம்பிக்கையை மேம்படுத்தும் படையல்களாகவும், இறை ஆலோசனைத் தரும் பாடல்களாகவும் அமைந்துள்ளன. முதல் திருப்பாடல் ஆலோசனையாகவே தொடங்குவது குறிப்பிடத்தக்கது. இவைகளில் பல பாடல்களுக்கு இசை வடிவமும் கொடுக்கப்பட்டுள்ளது (எகா. திபா 4.5,6). இன்னும் பல திருப்பாடல்கள் ஞானப்பாடல்களிலும், கீர்த்தனைகளிலும் இடம் பெற்றிருக்கின்றன.

### 2. "*கீர்த்தனைகள்*"

கீர்த்தனைகள் தன்னாட்டுத் தன்மை கொண்டது. அந்தந்த மொழி, கலாச்சார அடிப்படைகளில் தனிசிறப்பு மிக்கவைகள். நாம் கிறிஸ்தவ பாமாலை புத்தக தொகுப்பில் பயன்படுத்துகின்ற ஞானக் கீர்த்தனைகள் இந்திய நாட்டு இசையடிப்படையில் பல்வேறு இராகங்களிலும், தாளங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் அநேக கிறிஸ்தவ

கவிஞர்கள், பேராயர்கள், போதகர்கள், இறைப்பணியாளர்களின் அனுபவப்படையல்கள். இவைகளும் இறைப்புகழ், இறை நடத்துதல், கிறிஸ்தவ வாழ்வியல், இறை நம்பிக்கை போன்ற பல கூறுகளைக் கொண்டவை.

### 3. '*ஞானப்பாட்டுகள்*"

இவைகள் பன்னாட்டு அளவில் இயற்றப்பட்டவை. மேலை நாட்டு கிறிஸ்தவ இசைத்தொகுப்பாளர்கள் வழியாக சீரான அளவீடுகளில் (Metric scale and sylable) வடிமைக்கப்பட்டுள்ளன. இவைகளும் அநேக இறைஅடியவர்களின் அனுபவ வெளிப்பாடுகள். ஒவ்வொரு பாடல்களுக்கும் பின்னணி வரலாறுகள் உள்ளன. இவைகள் ஆங்கில, ஜெர்மானிய மொழிகளில் எழுதப்பட்டவை. பின்னர் உலகின் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு கிறிஸ்தவத் தொழுகைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவைகள் நமக்குத் துன்ப வேளைகளில் ஆறுதலாகவும், புது நம்பிக்கை தருகின்றதாகவும், இறை ஆலோசனை நிறைந்தாகவும் அமைந்துள்ளன.

இறைப்பணியாளர்கள் திருமறைப் போதனைகள் அடங்கிய இறை ஆலோசனைகள் கொடுத்து, அனேகரை இறை அன்புக்கு நேராக வழிநடத்துகின்றனர். இதற்கு இணையாக இச்சீரிய பணியை பாடல்களும் செய்கின்றன. இவ்விதமான பாடல்களை கருத்துணர்ந்து பாடும் போது இறை ஆலோசனைகள் பெறுகின்றோம், ஒருவருக்கொருவர் புத்தி சொல்கிறோம். இதனை தூய பவுலார் கூறும்போது, இம்முப்பெருந்தன்மைகள் அடங்கிய பாடல்கள் வழியாக ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் தந்தையாம் கடவுளைப் போற்றி, இறை அச்சத்துடன் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் என ஆலோசனைக் கூறுகிறார் (எபே 5:19-21)

கிறிஸ்தவத் தொழுகைக்கு அழகு சேர்ப்பவை பாடல்கள் ஆகும். இச்சீரிய பணியினைப் பொறுப்புடன் செய்வது, தொழுகைகள் மற்றும் பல்வேறு சிறப்பு நிகழ்வுகளுக்கு அழகு சேர்க்கும் பாடகர் குழு ஆகும். ஓராண்டு காலம் அற்புதமாய் வழிநடத்திய ஆண்டவரை மனதாரப் போற்றி, வருகிற புதிய ஆண்டிலும், இனி வரும் காலங்களிலும் முன்னேற்றமான பாதைகளில் சென்று பாடல்கள் வழியாக இறைவனுடைய திருப்பெயரை மாட்சிமை படுத்துவோம். ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுவோம். இறைவன் தம் அருளுடன் தொடர்ந்து நடத்துவாராக.

அருள்திரு. D. **ஒனேசிமஸ் சகாயம்**

## மாண்புறு மகளிர்

திருமறைப்பாடம் : நீமொ 31:10-23

**"திறமை வாய்ந்த மனத்திடமுள்ள மனையாளைக் காண்பது மிக மிக அரிது, அவள் பவளத்தை விட பெருமதிப்புள்ளவள்"** (நீமொ 31:10).

தூர தேசத்து இளைஞன் ஒருவன் தன் மனதில் உறுத்தி வந்த சில கேள்விகளுகான பதிலை அடைய ஒரு அறிஞரை நாடினான். "என்னை பெற்றெடுத்து 20வயது வரை என் அம்மா நன்றாக பார்த்துக் கொண்டார்கள். அதேபோல் என் அம்மா முதுமை அடைந்தவுடன் அவர் இறக்கும் வரை 20 ஆண்டுகள் நான் பார்த்துக் கொண்டேன். அப்படியானால் கணக்கு நேராகி விட்டதல்லவா?" என்றான். அதற்கு அந்த அறிஞர், "ஒரு போதும் நேர் ஆகாது. உன் அம்மா உன்னை வளர்த்தது ஒரு முழு மனிதன் ஆக்குவதற்காக ஆனால், நீ உன் அம்மாவைப் பார்த்துக் கொண்டது அவர் மரணம் வரை அவரைப் பராமரிக்க மட்டும்தான், ஆக வளர்ச்சி அங்கு ஒரு போதும் இல்லை; பராமரிப்பு மட்டுமே உள்ளது. உன் அம்மா உன்னை வாழ்வுக்காக வளர்த்தார். நீயோ அவரை சாவுக்காக பராமரித்து இருக்கின்றாய்" என்றார்.

மனித வளர்ச்சியின் முதல் முழு காரணி ஒவ்வொரு தாமே. குழந்தை ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் தாயின் சுவாசத்தையும், ஊட்டத்தையும் நம்பியே இந்த உலகில் பிறக்கிறது. ஊட்டம் இல்லா தாய், ஊட்டம் உள்ள குழந்தையைப் பெற்றெடுக்க முடியாது. சமுதாயத்திற்கும் திருச்சபைக்கும் கொடுத்திடவும் முடியாது. ஆகவே, நல்ல சமுதாயத்திற்கு பெண்களின் பங்கு மிக முக்கியமானது.

"கடவுள் தம் அன்பை தொடர்ந்து வெளிப்படுத்தவே தாயை உண்டாக்கினார்" என்கிறது யூத பழமொழி, கடவுளால் மனிதன் படைக்கப்பட்டான். ஆனால், பெண்ணோ கடவுளால் உருவாக்கப்பட்ட அற்புத முதல் படைப்பு. எங்கும் எப்போதும் பெண்ணே உருவாக்கமும் உருவாக்குபவளுமாய் இருக்கிறாள். பவளத்தை விட சிறந்த பெண்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை தியானிப்போம்.

### *1. தியாகம் செய்பவர் :*

நண்டு இனங்கள் ஆச்சரியமானவை அதனைத் தாண்டி ஒரு வேதனையான ஒன்றும் உண்டு. தாய் நண்டு தனது பிரசவத்தில் 40க்கும் மேற்பட்ட நண்டுகளை உருவாக்கும் அதே நேரத்தில் அந்த நாற்பது நண்டுக்கும் உணவு கொடுத்து வளர்க்கும்படி தன் உடலை தியாகமாய் உண்ணக் கொடுத்து விடுமாம். மனித வாழ்விலும் ஒவ்வொரு பெண்களும் தன்னை தன் வாழ்வைத் தனது குடும்பம், தனது குழந்தை எனக் கருதி தியாகம் செய்கின்றார்கள். மோசேயின் தாய் மோசேயை வளர்த்து ஆளாக்க தியாகம் செய்கின்றார் (விப 2). இத்தகு தியாகத்தை நினைவு கூர்ந்து கடவுளை போற்றிட முற்படுவோம்.

### *2. ஒளியேற்றுபவர் :*

'அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்' என்கிறது தமிழிலக்கியம். அதாவது, தந்தையை விட முதல் படியாய் இருப்பவர் அன்னை என்பதே அதன் கருத்து. மனைவி என்றால் 'மனைக்கு விளக்கு போன்றவள்' என்று பொருள் ஒரு சாதாரண பெண் நான்சி 1806ல் தாமஸ் லிங்கன் என்பவரைத் திருமணம் செய்து கொண்டாள், தம் அன்பினால் தாமசுக்கு கல்வி புகட்டியதோடு அவரது போக்கையும் கட்டுப்படுத்தினாள். இவர்களுக்கு பிறந்தவரே பின்னாளில் அமெரிக்க ஐக்கிய நாட்டின ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன். ஆபிரகாம் லிங்கன் தான் 9 வயதாக இருக்கும் போது தாய் வியாதியில் இறந்தாலும், தாயின் தாக்கம் வருடங்கள் சென்றாலும் மகனை விடவில்லை. 9 வயது சிறுவனான ஆபிரகாம் லிங்கனுக்கு பெரிய பொறுப்பை உணர்த்தியது. "நானும் எனக்கு இருக்கும் நம்பிக்கையும் என் அன்னைக்கே உரியது" என்பார் லிங்கன்.

லூக் 1:39-45 உள்ள பகுதியில் மரியாளின் வாழ்த்துகளைக் கேட்ட போது எலிசபெத்தின் வயிற்றில் உள்ள குழந்தை களிப்பாய் துள்ளி என்பதாய் திருமறை கூறுகிறது. அதாவது ஒவ்வொரு தாயின் வாழ்த்தும் மனித வம்சத்தின் ஒவ்வொரு குழந்தையின் களிப்புக்கு, அதாவது, மகிழ்ச்சிக்கு பொறி நெருப்பாய் அமைகிறது. இதைதான் கவிஞன், 'மனிதன் ஆவதும் பெண்ணாலே' என்பார்கள். எனவே ஒளியேற்றும் தன்மையுடைய பெண்களாக வாழ முயற்சிப்போம்.

### *3. பொறுப்பு உடையவர் :*

பெண்கள் பொறுப்பு உடையவர்கள். குடும்பத்தைக் குறித்த கரிசனையோடு விசாரிப்பவர்கள். மோசேயின் தாய் யோகெபேத் தனது மகன் மோசேயை வளர்க்கின்ற பணியிலே பொறுப்புணர்ச்சியோடு

செயல்படுகின்றார். தனது மகனின் உயிரைக் காப்பாற்றவேண்டும் என்ற பொறுப்புணர்வு காணப்பட்டது (விப 2). ஏனோ தானோவென்றநிலை நில்லாமல் செயல்படுகின்றார். நீமொ 14:1-ல் "ஞானமுள்ள பெண்கள் தம் இல்லத்தை கட்டியெழுப்புகின்றனர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பொறுப்புணர்ச்சி ஞானத்தோடு விவேகத்தோடு செயல்பட்டு இல்லத்தைக் கட்டியெழுப்பச் செய்கிறது. எனவே, இறைஅடியார்களாகிய நாம் பொறுப்புடையவர்களாக மாறி இல்லத்தைக் கட்டியெழுப்புவோம்.

அன்பர்களே! திறமை வாய்ந்த பெண்கள் பவளத்தை விடவும் பெருமதிப்புடையவர்கள். அப்படி மதிப்புள்ள பெண்கள் தியாகம் செய்பவர்கள். ஒளியேற்றுபவர்கள், பொறுப்புடையவர்கள் என்பதை உணர்ந்து வாழ்ந்து பவளத்தை விட மதிப்பு மிக்கவர்களாக மாறி இறைஆசி பெறுவோம்.

திரு. S.D. **சுவீட்லின் ஜீவா**

# இறைப்பற்றாளர் கொர்நேலியு

தொநூ 22:1-14 திப 10:1-12
திபா 32 லூக் 4:16-20

**"அவர் இறைப்பற்றுள்ளவர்; தன் வீட்டார் அனைவருடனும் கடவுளுக்கு அஞ்சி நடந்தவர்; மக்களுக்கு இரக்கச் செயல்கள் பல புரிந்தவர்; இடைவிடாது கடவுளிடம் மன்றாடி வந்தவர்".** (திப 10:2)

அனைத்து மக்களுக்கும் ஓர் ஆசை உண்டு. நான் வளர வேண்டும், மேலும் வளர வேண்டும். சிலர் வாழ்க்கையிலே இதனை குறிக்கோளாக முன்வைத்து செயல்படுவார்கள். எதிலே வளர வேண்டும்? சிலருக்கு கல்வியிலே வளர வேண்டும், சிலருக்கு தொழிலிலே வளர வேண்டும், சிலருக்கு வேலையிலே வளர வேண்டும், சிலருக்கு அரசியலிலே வளர வேண்டும், சிலருக்கு விளையாட்டிலே வளர வேண்டும். இப்படியாக ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒன்றில் நான் வளர்ந்து கொண்டே போக வேண்டும் என்று நினைத்து அதற்கென்றே தங்களுடைய முயற்சிகளை செயல்படுத்துவார்கள்.

ஓர் நாள் ஒரு தாயார் தன்னுடைய 4-வயது மகளை கல்விக்கூடத்திற்கு தன்னுடைய நான்கு சக்கர வாகனத்தில் தன்னுடைய இருக்கைக்கு அருகாமையில் இருக்கவைத்து அழைத்து சென்றார். தாயார் ஓர் மருத்துவர். ஆகவே தன்னுடைய Stethoscope அருகாமையில் இருந்தது. தன்னுடைய மகள் அதனை தன் கையில் எடுத்து விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்த தாயார் மனதிலே எண்ணினார், தன் மகள் வளர்ந்து என்னைப்போல் ஒரு மருத்துவர் ஆக வேண்டும். இப்படியாக இன்று சமூகத்தில் வாழ்கின்ற அனைவரும் நான் வளர வேண்டுமென்று உலக காரியங்களில் அதிக நாட்டம் கொண்டு செயல்படுகிறார்கள்.

கொர்நேலியு இவர் இத்தாலி நாட்டைச் சார்ந்த ஒரு ரோம போர் வீரர். இவர் நூற்றுக்கு அதிபதி. புதிய ஏற்பாடு வரலாற்றில் புறஇனத்தாரில் வந்த முதல் கிறிஸ்தவர். இறைபக்தியில் வளர்ந்த மனிதர் என்று திருமறை சுட்டிக்காட்டுகிறது. கொர்நேலியு இறைப்பற்றில் வளருகின்ற மனிதராக காணமுடிகிறது. இவர் வாழ்வில் இறைப்பற்றில் வளருவதற்கு காணப்பட்ட நற்பண்புகள் எவைகள் என தியானிப்போம்.

***1. இறையச்சம் :*** (10:2)

தன் வீட்டார் அனைவருடனும் கடவுளுக்கு அஞ்சி நடந்தவர் கொர்நேலியு. தான் மட்டுமல்ல தன் குடும்பத்தார் அனைவரும் கடவுளுக்கு பயந்து நடந்தார்கள். கொர்நேலியு இறைப்பற்றில் வளருவதற்கு கடவுள் பயப்படுகிற பயம் முக்கியமாக அமைந்தது.

ஆபிரகாம் கடவுளுக்கு பயந்து நடந்த மனிதர் என்று கடவுள் சாட்சி கொடுத்தார். தன் ஒரே மகனை கடவுளுக்காய் பலியிடும் நேரத்தில், நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று இப்போது நான் அறிந்து கொண்டேன் (தொநூ 22:12) என்று கூறினார். அஞ்சுபவனாய் காணப்பட்டபடியால், தன் கண்களை உயர்த்திப் பார்த்தபோது முட்செடியில் கொம்பு மாட்டிகொண்டு நின்ற ஓர் ஆட்டுக்கிடாவை கண்டு, அதைப் பிடித்து தம் மகனுக்கு பதிலாக பலியிட்டார். (தொநூ 22:13) மேலும், கவியரசர் தாவீது கூறுகையில் ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவர் எவரோ, அவருக்குத் தாம் தேர்ந்து கொள்ளும் வழியை அவர் கற்பிப்பார். (திப 25:12) ஆபிரகாம் கடவுளுக்கு அஞ்சி நடந்தபடியினால் ஆபிரகாம் நடக்க வேண்டிய வழியைக் கடவுள் கட்டினார் என்பது தெளிவாகிறது.

இன்று மனிதனின் அறிவு பெருக்கத்தினாலே கடவுளுக்கு பயப்படுதல் குன்றிப்போய் தன்னுடைய பதவி, அதிகாரம், ஆணவம் என்று சுயம் சார்ந்த செயல்பாடுகள் மேலோங்கி மனிதனுக்கிடையே அன்பு, ஐக்கியம் இல்லாத நிலை உருவாகி சகோதர, சகோதரிகளுக்கிடையே கூட ஒற்றுமையில்லாமல் பகை, வைராக்கியம், பிரிவினை மேலோங்கி காணப்படுகிறது. கொர்னேலியுவை திருமறை வரலாற்றுப் பின்னணியில் ஆராயும்போது ரோம பட்டாளத்திலே ஆறு வகையான நூற்றுக்கதிபதி குழுக்கள் இருந்தன. 80 பேர் கொண்ட குழு முதல் 480 பேர் வரை கொண்ட குழு காணப்பட்டன. கொர்னேலியு ஒரு பெரும் கூட்டத்திற்கு அதிபதி என்று அறியப்படுகிறது. அப்படியென்றால் அவர் ஒரு உயர்ந்த அதிகாரமுள்ள பதவியை தன்னகத்தே கொண்ட மனிதர். இவர் கடவுளுக்கு பயந்து வாழ்ந்தபடியினால் தானும் தன் குடும்பத்தாரையும் இறைவனுக்கு பயந்து இறை பக்தியில் வளரச் செய்ய முடிந்தது.

***2. நற்செயல் :*** (10:2)

மக்களுக்கு இரக்கச் செயல்கள் பல புரிந்தவர் கொர்நோலியு மக்களுக்குப் பல உதவிகளை செய்து வந்தார். இஸ்லாமிய மதத்தில் ஓர் இஸ்லாமியர் தன் வாழ்வில் செய்ய வேண்டிய முக்கியமான ஐந்து காரியங்கள் உண்டு. அதனை ஐந்து தூண்கள் என்று குறிப்பிடுகிறார்கள்.

அதில் மூன்றாம் தூண் ஷகத் என்று சொல்வார்கள். இது ஓர் இஸ்லாமியர் தன்னுடைய வாழ்நாளில் கண்டிப்பாக தேவையோடு இருப்பவர்களுக்கு உதவி செய்தல் அவசியம்.

நாகரீக பெருக்கத்தினாலே தன்னுடைய அயலகத்தான் யார் என்று தெரியாத நிலையில், தானும் குடும்பமும் என்று மற்றவர்களைக் குறித்து எந்த அக்கரையுமில்லாமல் மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கிறான். திருமறை கற்றுத் தருகிற உண்மை என்னவெனில், நற்செயல் புரிவதற்காக கிறிஸ்துவால் படைக்கப்பட்டிருக்கிறோம். (எபே 2:10)

இயேசு நாதரின் நாசரேத் அறிக்கையில், லூக்கா4:18,19) ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலையடைவர் பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார். இயேசு நாதரின் வாழ்வும் பணிவும் தேவையோடு இருப்பவர்களுக்கு உதவி செய்தவைகளாகவே அமைந்தது.

வில்லியம் கேரி அருட்பணியாளர் 1761 ஆகஸ்ட் 17-ஆம் நாள் இங்கிலாந்து தேசத்தில் பிறந்தார். இவர் சிறுவயதிலே எதையும் கடினமாக முயன்று முடிப்பவர். தன்னுடைய பதினான்காம் வயதிலே இலத்தீன், கிரேக்கம், டச்சு, பிரெஞ்சு ஆகிய மொழிகளிலும், அறிவியல், வரலாறு பாடங்களிலும் புலமை பெற்றிருந்தார். இவர் தனது 28-வது வயது வரையும் செருப்பு தைக்கும் தொழில் செய்தவர். பின்னர் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட பிறகு, இந்தியாவில் மேற்கு வங்காள மாநிலத்தில் வந்து கடவுளுக்கு பயந்து இறைப்பணி செய்தார். இறைவனின் துணையோடு திருமறை மொழிபெயர்ப்பு பணியை திறமையாக செய்ததோடு செராம்பூர் பல்கலைகழகத்தையும் உருவாக்கினார். இவரின் வளர்ச்சியில் பொறாமை கொண்ட பலர் உயர் அதிகாரிகள் இவரை கனவீனப்படுத்த நினைத்து ஒரு பெரிய கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்து அதற்கு இவரையும் பேச வைத்தார்கள். பின்னர் பேசிய அதிகாரி வில்லியம் கேரியை கனவீனப்படுத்த எண்ணி வில்லியம் கேரி காலணி தைத்தவர் என்றார். உடனே வில்லியம் கேரி எழுந்து நான் செருப்பு தைக்கும் தொழில் செய்யவில்லை மாறாக கிழிந்த செருப்புகளை தைத்தவன் என்று தன்னை தாழ்த்தினார். ஆனால் கடவுள் வில்லியம் கேரி வழியாக ஒரு பெரிய பல்கலைகழகத்தை உருவாக்கும் அளவுக்கு உயர்த்தினார்.

கொர்நேலியுவும் கடவுளுக்கு பயப்பட்டவர் மட்டுமல்ல தன்னுடைய நிலையை தாழ்த்தி தேவையிலிருக்கிற மக்களுக்கு தானதருமங்களை செய்தபடியினால் இறைபக்தியில் வளர முடிந்தது.

***3. இறைவேண்டல் :*** (திப 10:2)

இடைவிடாது கடவுளிடம் மன்றாடி வந்தார். கொர்நேலியு இறைவேண்டல் ஒரு மனிதனுடைய வாழ்வில் மிகவும் இன்றியமையாத ஒன்று. இறைவேண்டல் இல்லாத வாழ்வு கூரையில்லாத இல்லத்திற்கு சமம் என்பார்கள். தானியேலின் வாழ்வு வெற்றியாய் மாறுவதற்கு அவருடைய இறைவேண்டல் வாழ்வு முக்கியமாக காணப்பட்டது. தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளே போய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, நாள்தோறும் மூன்று வேளையும் தன் கடவுளுக்கு முன்பாக முழந்தாளிலிருந்து மன்றாடி அவருக்கு நன்றி செலுத்துவார் (தானி 6:10). தானியேல் இறைவனோடு கொண்டிருந்த உறவிலே இறைவேண்டலிலே உறுதியாக காணப்பட்டார்.

இன்று நம்முடைய வாழ்வில் இறைவனோடுள்ள இறைவேண்டல் உறவு எவ்வாறு காணப்படுகிறது. புதிய தொழில்நுட்ப வளர்ச்சியினாலே அதற்கேற்றார்போல் ஓடிக்கொண்டிருக்கிறோமே தவிர இறைவனோடுள்ள இறைவேண்டல் உறவில் வளருவதில் பின்னுக்கு தள்ளப்பட்டிருக்கிறோம். சங்கீதக்காரன் சொல்லுகிறபோது காலை நண்பகல் மாலை வேளைகளில் நான் முறையிட்டு புலம்புகிறேன். அவர் என் குரலைக் கேட்டருள்வார் (திபா 55:17). உண்மையாகவே நாம் செய்யும் ஒவ்வொரு விண்ணக்கத்திற்கும் பதில் உண்டு. ஆகவேதான் தாவீது தன் திருப்பாடலில் சொல்லும்போது .......என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?

கொர்நெலியு ரோம படையில் உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்தவர். அப்படியென்றால் அவர் கல்வியாளராகவே தான் இருந்திருக்க முடியும். அப்படியாக உயர்வு நிலையிலிருந்த நூற்றுக்கதிபதி கடவுளுக்கு முன்பாக எப்போதும் விண்ணப்பத்திலே தரித்திருந்தபடியினால் இறைபக்தியில் வளர முடிந்தது. இறைபக்தியில் வளர நாமும் கடவுளுக்கு பயந்து, தேவையிலிருக்கிறவர்களுக்கு உதவிகள் செய்து எப்போதும் இறைவேண்டலில் தரித்திருக்க இறைவன் உதவி செய்வாராக.

அருள்திரு. R. **ஷினோ இயேசுதாஸ்**

## இதய வேண்டுதலாம் இறைவேண்டல்

திருமறைப்பாடம் : மத் 6:6-13

**"......மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளத்தைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு கைம்மாறு அளிப்பார்."** (மத் 6:6)

ஒவ்வொரு மனிதனுடைய இதயத்திலும் பல வேண்டுதல்கள் உள்ளன. அதை இறைவனிடம் வெளிப்படுத்தி வேண்டுவதே இறைவேண்டல். 25-10-2019 அன்று திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகே நடுகாட்டுப்பட்டி பகுதியைச் சார்ந்த 2 வயது சிறுவன் சுர்ஜித் மாலை 5 மணியளவில் வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்தான் எதிர்பாரா சூழலில் பயன்பாட்டில் இல்லாத ஆழ்துளை கிணற்றில் விழுந்துவிட்டான். 88 அடி ஆழத்தில் சிக்கித் தவித்த சிறுவனை மீட்பதற்காக போராட்டம் 4 நாட்களை கடந்து தொடர்ந்த நிலையில் சிறுவன் உயிருடன் மீட்கப்பட வேண்டும் என்பது இனம், மொழி, சமயம் கடந்து ஒட்டுமொத்த இந்தியாவின், குறிப்பாக, தமிழக மக்களின் இதய வேண்டுதலாய் அமைந்தது.

இறைவேண்டல் இறைவனுக்கும் மனிதனுக்குமான உள்ள உறவை வலுப்படுத்துகிறது. இறைவனிடம் ஏறெடுக்கும் நம் இதயவேண்டுதல் இனிய வேண்டுதலாய் அமைய நாம் எவ்வாறு இறைவேண்டல் ஏறெடுக்க வேண்டும் என்பதை இறைமகனான இயேசு இப்பகுதியின் வழி எடுத்துரைக்கிறார்.

### *1. அடுத்தவர் காண அல்ல ஆண்டவர் காண வேண்டுங்கள் :*

"நீங்கள் இறைவனிடம் வேண்டும் போது வெளிவேடக்காரரைப் போல் இருக்க வேண்டாம். அவர்கள் தொழுகை கூடங்களிலும் வீதியோரங்களிலும் நின்று மக்கள் பார்க்க வேண்டுமென இறைவேண்டல் செய்ய விரும்புகிறார்கள்".

இயல்பாகவே ஒருவர் செய்யும் செயலை மற்றவர்கள் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் மனிதனிடம் அதிகமாய் உள்ளது. எனவே தான் சில இளைஞர்கள் இருசக்கர வாகனத்தில் வித விதமான ஒலி எழுப்பும் உபகரணங்களை பயன்படுத்துகின்றனர். விதவிதமான ஆடைகளையும் கூட அணிகின்றார்கள். அவ்வண்ணமே தான் செய்யும் இறைவேண்டுதலை மற்றவர்கள் பார்க்கவேண்டும். தன்னை மேன்மையாக என்ன வேண்டும் என்ற சிந்தனையுடைய மனிதர்களும் இருக்கத்தான்

செய்கிறார்கள். அவர்களைக் குறிப்பிட்டு “வெளிவேடக்காரரைப் போல் இறைவேண்டல் ஏறெடுக்க வேண்டாம்” என்று. யார் இந்த மாயக்காரர்?

இயேசுவின் காலத்தில் காணப்பட்ட பரிசேயர்கள் இவர்கள். இவர்கள் ஏறெடுக்கும் இறைவேண்டதல் இறைவன் காண வேண்டும், கேட்க வேண்டும் என்பதாய் அல்லாது பிறர் காண வேண்டும், தங்களை உயர்வாக எண்ண வேண்டும் என்பதுதான் அடிப்படையாக அமைந்தது. இவர்கள் வாரத்தில் இரண்டுதரம் நோன்பிருந்து இறைவேண்டல் ஏறெடுப்பார்கள். லூக் 18:12 இதை சமயக்கடமையாக எண்ணியே நிறைவேற்றினார்கள். இந்த வெளிவேடக்காரர்கள் வாரத்தில் 2-ஆவது மற்றும் 5-ஆவது நாட்களில் நோன்பு இருப்பார்கள். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று மோசே கடவுளிடம் கட்டளைகளைப் பெற்றுக்கொள்ள சீனாய் மலையில் வாரத்தின் ஐந்தாம் நாள் ஏறிச்சென்று, மற்றொரு வாரத்தில் இரண்டாம் நாள் திரும்பி வந்தார் என்பது இவர்கள் சொல்லும் காரணம். இரண்டாவது உண்மையான காரணம் என்னவெனில், எருசலேமில் ஒவ்வொரு வாரத்தில் இரண்டாவது மற்றும் ஐந்தாம் நாட்களில் சந்தை கூடுவது வழக்கம். அந்நாட்களில் எருசலேமை சுற்றியிருந்த நாட்டுப்புறங்களிலிருந்து நகரத்தில் வந்து பெரும் திரளாய் மக்கள் கூடுவார்கள். இவர்கள் நோன்பிருந்து வேண்டுவதை அவர்கள் காண வேண்டும் என்ற சிந்தனையுடன் தலைமுடியை ஒழுங்குபடுத்தாமல், தலைக்கு எண்ணெய் பூசாமல், சோர்ந்த முகத்துடன் காட்சிப்படுத்துவார்கள். எனவேதான் இதயத்தைக் காணும் கடவுள் இங்ஙனம் வெளிவேடக்காரரைப் போல், மற்றவர் காண வேண்டும் என்ற சிந்தையோடு இறைவேண்டல் ஏறெடுக்க வேண்டாம் என்கிறார். எனவே இதய வேண்டுதல் இனிய வேண்டுதலாய் அமைய அறைவீட்டில் பிரவேசித்து இதயத்தில் ஆழத்திலிருந்து ஆண்டவரிடம் அவர் காண வேண்டுங்கள்.

### ***2. அற்பமாய் அல்ல அர்த்தமாய் வேண்டுங்கள்*** (மத் 6:7)

“நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது பிற இனத்தவரைப் போல் பிதற்ற வேண்டாம். மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள்”.

18 வயதில் இளைஞன் ஒருவன் இறைவனிடம் அற்பமான உலக காரியங்களுக்காய் வேண்டினான். அவனது வேண்டுதல், “எனது 24 வயதில் கைநிறைய பணம், விலையுயர்ந்த வண்டியில் பயணம், என்னை சுற்றிலும் ஒருகூட்டம் ஆட்கள் என்கின்ற ஒரு சிறப்பான வாழ்வைத் தரவேண்டும்” என்றான். ஆண்டவரும் வேண்டுதலைக் கேட்டார். அரசுப் பேருந்தில் நடத்துனராய் மாற்றினார்.

அஞ்ஞானிகள் அதாவது பிற இனத்தவர்கள் புறம்பான நன்மைகளை எதிர்பார்த்து அதிகமாய் வீண் வார்த்தைகளைப்

பிதற்றுவார்கள். இன்று பல மக்கள் இவர்களைப் போல, "ஆண்டவரே, எனக்கு அடுக்குமாடி வீட்டைத் தாரும்", ஆடம்பரங்களைத் தாரும், அள்ளி வீசும் அளவுக்குப் பணத்தைத் தாரும் என்று ஆண்டவரிடம் பிதற்றுகின்றனர். இதையே மத் 6:31,32-ல் ஆகவே, எதை உண்போம்? எதைக் குடிப்போம்? எதை அணிவோம்? எனக் கவலை கொள்ளாதீர். ஏனெனில் பிற இனத்தவரே இவற்றையெல்லாம் நாடுவர். அஞ்ஞானிகளின் வேண்டுதல் உண்பதைக் குறித்தும், குடிப்பதைக் குறித்தும், அணிவதைக் குறித்துமே அமையும். எனவே தான் இறைமகன் இயேசு அஞ்ஞானிகளைப் போல் அல்லாது அர்த்தமாய் "முதலாவது இறையரசையும் அதன் நீதியையும் தேடுங்கள்" என்கிறார். மட்டுமல்ல அர்த்தமுள்ள இறைவேண்டுதலையும் கற்றுத்தந்திருகிறார். (மத் 6:9-13). எனவே, நாம் நம் இறைவேண்டுதலாம் இதயவேண்டுதல் இனிதாய் அமைய அற்பமான காரியங்களுக்காய் அல்ல அர்த்தமாய் வேண்டுவோம்.

### *3. நம் சித்தம் அல்ல ஆண்டவர் சித்தம் நிறைவேற வேண்டுங்கள்* (மத் 6:10)

"உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல் மண்ணுலகிலும் நிறைவேறுக".

நம் விருப்பம் அல்ல. இறைவிருப்பம் நம் வாழ்வில் நிறைவாக வேண்டும் என்பதாக நமது வேண்டுதல் அமைய வேண்டும். இன்று ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பினதை எல்லாம் கடவுள் அருளவேண்டும் என்ற எதிர்பார்ப்புடனே இறைவேண்டல் ஏறெடுக்கின்றனர். எனவேதான் இறைமகன் இயேசு தாம் கற்றுத் தந்த இறைவேண்டலில் "உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக" என்று கூறுகிறார். இதுவே நம் இறைவேண்டுதலாய் அமைய வேண்டும். இதை கற்றுத்தந்த இறைமகன் இயேசு தன் வாழ்வில் பிரதிபலிக்கவும், செய்தார். கெத்சமேனேயில் துயருறும் வேளையில் மத் 26:39-ல் "என் தந்தையே முடிந்தால் இத்துன்பக்கிண்ணம் என்னைவிட்டு அகலட்டும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல. உம் விருப்பப்படியே நிகழட்டும்" என்று மன்றாடினார். ஆண்டவர் விருப்பம் எதுவோ அதுவே என் வாழ்வில் நிறைவாகட்டும் என்று வேண்டும் போது நம் இறைவேண்டுதல் இனிய வேண்டுதலாய் அமையும்.

அன்பர்களே! இறைவேண்டுதலாம் இதய வேண்டுதல் இனிதாய் அமைய அடுத்தவர் காண அல்ல, ஆண்டவர் காண வேண்டுவோம். நம் சித்தம் அல்ல ஆண்டவர் சித்தம் நிறைவாக வேண்டுவோம். இறைவேண்டுதலில் இறைமகன் இயேசு காண்பித்த முன் மாதிரியை தொடர்வோம்.

திரு. J. **ஸ்டாலின்**

# வாசிப்பு என்னும் கலை

திருமறைப்பாடம் : லூக் 4:16-21

**"இயேசு...தொழுகைக் கூடத்திற்குச் சென்று வாசிக்க எழுந்தார் ."** (லூக் 4:16)

நூலகம் அறிவை வளர்த்துக்கொள்ளும் ஓர் இடமாகும். வாழ்விற்கு தேவையான அனைத்தும் கிடைக்கும் பல்பொருள் அங்காடி என்று கூட கூறமுடியும். "நூல்களாலே ஆகுமாம் நுண்ணறிவு" என்று ஔவையார் கூறியிருக்கிறார். நாம் எவ்வளவு படிக்கின்றோமோ அந்த அளவிற்கு நமது அறிவு வளர்ச்சியடையும். அதற்கு முதுகெலும்பாக திகழ்வது நூலகமும், அதில் அமைந்திருக்கும் புத்தகங்களுமே. கல்வி மற்றும் அறிவை வளர்க்கவும் உலகிலுள்ள பல்வேறு கலாச்சாரம் மற்றும் தகவல்களை தெரிந்து கொள்வதற்கு புத்தகங்கள் உறுதுணையாக இருக்கின்றது. Gandhiji -யிடம் ஒரு முறை, "ஒரு கோடி ரூபாய் கொடுத்தால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்ட போது, "ஒரு நூலகம் கட்டுவேன்" என பதிலளித்தார். இன்று நூலக பயன்பாடு படிப்படியாய் குறைந்து கொண்டேயிருக்கிறது. புஸ்தகங்கள் புறந் தள்ளப்படுகின்றன. தொலைத் தொடர்பு சாதனங்களோடு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி கொள்கின்றோம். சுவாசிக்கும் மனிதனுக்கு வாசிக்க இன்று நேரமில்லை. எனவே நூலகத்தை பயன்படுத்துவதினால் கிடைக்கும் நன்மைகளை நாம் இங்கு சிந்திப்போம்.

## *1. புத்துணர்ச்சி அளிக்கிறது :*

வாசிப்பு மேல் ஒரு நேசிப்பு நமக்குத் தேவை. கிளேட்சன் என்ற அறிஞர், "புத்தகங்கள் பெற்றோரைப்போல அறிவுரை கூறும். மனைவியைபோல தாங்கி நிற்கும் பிள்ளைகளைப் போன்று மகிழ்ச்சியளிக்கும். நெருங்கி நண்பனாய் ஆலோசனை வழங்கும்" என்று கூறுகிறார். வாழ்க்கையில் நாம் துவண்டு போய் இருக்கும் போது புத்தகங்கன் புத்துணர்ச்சி அளிக்கிறது. லூக்கா4:16-21-இல் இயேசு ஜெப ஆலயத்தில் சென்று ஏசாயா இறைவாக்கு நூலைப் படித்த போது அங்கே இருந்த மக்கள் எல்லோரும் புத்துணர்வு பெற்றார்கள். லூக் 4:22 -இல் அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட அருள்நிறைந்த வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். நம்மை ஒருபோதும் ஏமாற்றாத ஒரு சிறந்த

நண்பன் புத்தகம் தான். அறிஞர் Ruskin, “புத்தகங்களைப் போன்ற சிறந்த கருவூலம் வேறு எதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது” என கூறுகிறார். புத்தகத்தை வாசிக்க வாசிக்க நம்மில் புத்துணர்ச்சி நம்மை அறியாமலே உட்புகுந்து விடுகின்றன. சங் 19:7-இல் “திருமறை நிறைவானதும் புத்துயிரளிப்பது மாயிருக்கிறது” எப்படி திருமறை நம்மை உயிர்ப்பித்து புத்துணர்ச்சி அளிக்கிறதோ அது போல புத்தகங்களும் நம்மில் பழையவைகளை களைந்து புதிய ஊக்கத்தை கொடுக்கிறது. புத்தகங்களை வாசித்து அதின் கருத்துக்களை உட்கொள்ளும் போது புத்துணர்வு கிடைக்கிறது.

### *2. புத்தாக்கம் செய்கிறது :*

பேரறிஞர் அண்ணாவை குறித்து “காஞ்சிபுரத்திலிருந்து முதுகலைப் பட்டதாரியான ஓர் இளைஞன் சென்னை நோக்கி சென்றான். பின்பு தமிழகத்தின் முதல்வராக திரும்பினான்” எனக் கூறுவார்கள். இதற்குக் காரணம் அவரது வாசிப்புக் கலை. சென்னை கக்கிமாரா நூலகத்தின் அனைத்து நூல்களையும் படித்தவர் என்ற சிறப்பை பெற்றவர். நூலகம் திறக்கும் போது உள்ளே நுழைந்து இரவு மூடப்படும் போது வெளியே வருவார் என வரலாறு சொல்லுகிறது. புத்தகம் ஒரு மனிதனின் வாழ்வை புதுப்பிக்கிறது. எந்த திசையில் பயணிக்க வேண்டும் என்பதை கற்று கொடுக்கின்றது. பொருளாதார மேதை அமர்த்தியா சென், “வால்கா முதல் கங்கை வரை வாசித்தேன். அது என் வாழ்வின் பாதையையே மாற்றிவிட்டது” என்று கூறியுள்ளார். நல்ல பாதைகளை தெரிந்தெடுத்துக் கொடுப்பது புத்தகங்கள் தான். எது சரி எது தவறு என்பதை அறிய புத்தகங்கள் மனிதனுக்கு புத்தியை கொடுக்கின்றது. “கடவுளின் திருச்சட்டம் அவர்களது உள்ளத்தில் இருக்கின்றது; அவர்களின் கால்கள் சறுக்குவதில்லை” (திபா 37:31) இல் என்ற வசனமும் இதைதான் கற்றுத் தருகிறது. நல்ல புத்தகங்களை படித்து கெட்டுப் போனவர்கள் யாரும் இல்லை. புத்தகங்கள் படிப்பதை கடமையாகக் கொண்டவர்கள் வாசிப்பதை படிப்பதை கடமையாகக் கொண்டவர்கள்; வாசிப்பதை, உயிர் என மதித்தவர்கள் வாழ்வில் உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறார்கள். ஜவஹர்லால் நேரு “நான் மறைந்த பின் என் உடல் மீது மலர்கள் வைக்க வேண்டாம். என் மீது புத்தகங்களை பரப்புங்கள்” என்று சொன்னார்.

புத்தகங்கள் மீது அன்பு வைப்போம்! வாசிப்பை நேசிப்போம்! வாழ்க்கையில் உயருவோம்!

திரு. K.S. **நியூபின் ஜேம்ஸ்**

# கடவுளுக்கு ஏற்புடைய படையல்

விப 25:1-9 2 கொரி 9:1-15
திபா 50:1-15 லூக் 21:1-4

**“....முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர்”.** (2கொரி 9:7)

கடவுளுக்கு காணிக்கை செலுத்தும் பழக்கம் முன் காலந்தோட்டே ஒரு வழக்கமாக இருந்தது கடவுள் தம் மக்களுக்குச் செய்த நன்மைகளுக்கு நன்றிக்கு அடையாளமாக காணிக்கைகள் செலுத்தப்பட்டன. மேலும், பூமியின் விளைச்சலுக்காகவும், ஆண்டவரின் கோபத்திருந்து விடுபடவும் காணிக்கைகள் படைக்கப்பட்டன. கடவுள் மோசேக்கு கொடுத்த கட்டளைகளில் பகள் பற்றியும், காணிக்கைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. விப. 25.1,2ல் கடவுள் மோசேயிடம் சீனாய் மலையில் வைத்து இஸ்ரயேல் மக்கள் காணிக்கை கொண்டு வரும்படி கட்டளை கொடுக்கிறார். காணிக்கைகளை கொண்டு வாருங்கள் என்று கட்டளையிட்ட கடவுள் “தன்னார்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக” என்றார்.

ஒரு நாள் ஒரு மனிதன் தன் சபைப் போதகரைச் சந்திக்க வந்தான். தனக்கு ஒரு முக்கியமானப் பிரச்சனை இருப்பதாகவும், போதகருடைய உதவி தேவைப்படுவதாகவும் கூறினான். “ஐயா, நான் ஆரம்பத்தில் ஏழையாக இருந்தேன். எனக்கு மாதவருமானம் ஐநூறு ரூபாய்தான் இருந்தது. நான் சபையில் சேர்ந்தபின் தசமபாகம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது என்று அறிந்து மாதம் ஐம்பது ரூபாய் உண்மையாக தசமபாகம் கொடுக்க ஆரம்பித்தேன். கடவுள் என்னை ஆசீர்வதித்தார். என் வருமானம் நாளுக்கு நான் அதிகரித்தது. இப்போது மாதம் ஆயிரக்கணக்கான ரூபாய் நான் தசமபாகம் கொடுக்குமளவுக்கு என் வருமானம் அதிகரித்திருக்கிறது. ஆனால், ஐம்பது ரூபாய் தசமபாகம் கொடுக்கும்போது என் மனதுக்குக் கஷ்டமாக இருந்ததில்லை. இப்போது ஆயிரக்கணக்கான ரூபாய் தசமபாகம் கொடுக்க மனம் இடம் தரவில்லை. நீங்கள் தான் ஒரு வழிசொல்ல வேண்டும்” என்றான். உடனே போதகர், “நீங்கள் கடவுளிடம் என்னுடைய ஆசீர்வாதங்கள் அனைத்தையும் நிறுத்திவிடும் என்று வேண்டுதல் செய்யுங்கள். அப்பொழுது அவர் உங்களுக்கு குறைந்த வருமானத்தை தருவார் நீங்கள் குறைந்த அளவு

தசமபாகம் செலுத்தினால் போதும்''. என்று கூறினார். இதைக் கேட்ட அந்த மனிதன், ''ஐயோ அப்படி வேண்டாம், கடவுள்தரும் ஆசீர்வாதங்கள் நிறுத்தப்பட்ட வேண்டாம், நான் அவருக்கு இனிமேல் உண்மையாக இருப்பேன்'' என்று கூறிச்சென்றான்; மனப்பூர்வமாய் யார் காணிக்கைகளைக் கொண்டு வருகின்றார்களோ அந்த காணிக்கை தான் கடவுளுக்கு ஏற்புடையது.

### *1. முகமலர்ச்சியுடன் படைக்கப்பட்ட காணிக்கை :*

''அங்கு வந்த ஓர் ஏழை கைம்பெண் ஒரு கொதிராந்துக்கு இணையான இரண்டு காசுகளை போட்டார்''. (மாற்கு 12:42)

எருசலேம் ஆலயத்தில் காணிக்கை பெட்டிகள் ஒரு குழாய் வடிவத்தில் உலோகத்தால் செய்யப்பட்டிருந்தன. எனவே, அவற்றில் நாணயங்களை மக்கள் போடும்போது அது மிகுந்த ஒயை உருவாக்கின. அந்த ஒ நீண்ட நேரம் கேட்க வேண்டும் என்பதற்காக செல்வந்தர்கள் தாங்கள் வழங்கிய காணிக்கை பணம் முழுவதையும் சிறு சில்லறைகளான செப்புக்காசுகளாக மாற்றி அதிக நேரம் அந்த காணிக்கை பெட்டியில் போட்டனர். அதிவும் மக்கள் கூடி வந்த பகல் நேரங்களில் அவர்கள் இப்படி செய்திருக்க வேண்டும். இயேசு காணிக்கை பெட்டிக்கு எதிராக அமர்ந்து கொண்டு மக்கள் அதில் செப்பு காசு போடுவதை உற்று நோக்கி கொண்டிருந்தார் என மாற்கு நற்செய்தியாளர் குறிப்பிடுகிறார். உற்று பார்த்து கொண்டிருந்த இயேசுவின் கவனம் செல்வந்தர்கள் போட்ட காசுகள் மீது திரும்பவில்லை மாறாக, இயேசுவின் கவனம் அங்கு வந்த சேர்ந்த ஏழை கைம்பெண் படைத்த காணிக்கையின் மீது திரும்பியது. எவருடைய கவனத்திற்கும் ஆளாகாமல் காணிக்கையை செலுத்தி விட்டு செல்ல நினைத்த அக்கைம்பெண் இயேசுவின் கவனத்தை ஈர்த்துவிட்டார்.

ஏழை கைப்பெண்ணின் காணிக்கையை இயேசு கிறிஸ்து மிகைப்படுத்தி பேசுகின்றார் (மாற் 12:43). செல்வந்தர்களின் செப்புக்காசை காட்டிலும் இவள் போட்ட இரண்டு காசை இயேசு மிகைப்படுத்துகின்றார். அப்பெண்ணின் காணிக்கையை குறித்து இயேசு புகழ்ந்து சொன்ன வார்த்தைகளில் ஆழமும் அர்த்தமும் உண்டு. 'இருந்ததை போட்டார்' என்று சொல்லாமல் ''இருந்த அனைத்தையுமே போட்டுவிட்டார்'' என்று இக்காணிக்கையின் முழுமையை அழுத்தமாக பதிவு செய்தார். இந்த கைம்பெண் தன்னையும் தன் வாழ்வையும் குறித்து நினைக்காமல் கடவுளுக்கு அனைத்தையும் வழங்கினார். காணிக்கை செலுத்திய திருப்தியுடன் அவள் கடந்து சென்றாள் இந்த காணிக்கையைத் தான் கடவுள் அங்கீகரித்தார். (2கொரி 9:) என்ற வாக்குக்கு இணங்க ''முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்பிற்கு உரியவர்'' ஏழைக் கைம்பெண் கடவுளின் அன்பிற்கு உரியவள் ஆனாள்.

## *2. முழுமனதுடன் படைக்கப்பட்ட காணிக்கை :*

"உன் மகனை, நீ அன்பு கூரும் உன் ஒரே மகனான ஈசாக்கை அழைத்துக்கொண்டு மோரியா நிலப்பகுதிக்குச் செல். அங்கு நான் உனக்குக் காட்டும் மலைகளில் ஒன்றின் மேல் எரி பயாக அவனை நீ ப யிட வேண் டும்'' (தொநூ 22:3).

ஆபிரகாம் வாழ்ந்த காலத்தில் பல சமயங்களிலும் தங்கள் கடவுளர்களுக்கு விலங்குப்களை ப செலுத்தி வழிபடுவது வழக்கம். அதனால் தான் இறைவன் ஆபிரகாமின் நம்பிக்கையைச் சோதிக்க அன்பு கூறும் ஒரே மகன் ஈசாக்கை தான் பயிடுவதற்கு கேட்கின்ற போது மறுப்பேதும் தெரிவிக்காமல் வாக்குத்தத்தின் மகனான ஈசாக்கை அழைத்துக்கொண்டு, பக்குரிய அனைத்து ஆயத்தங்களோடும் சென்றார். முழுமனதுடன் ஈசாக்கை கடவுளுக்கு கொடுப்பதற்கு துணிந்தார். முதல் அருட்கொடையாக நூறாவது வயதில் கடவுள் தந்த ஈசாக்கை, பலன் எதையும் எதிர்பாராமல் கேள்வி எழுப்பாமல் கடவுளுக்குக் கொடுக்க முன்வந்தார்.

கவிஞர் கலீல் கிப்ரான் தன்னுடைய The Prophet என்ற கவிதையில், "நீ சேர்த்து வைத்துள்ள உடமைகளிருந்து நீ கொடுக்கும் பொது வெகு குறைவாகவே கொடுக்கிறாய்; எப்போது நீ உன்னையே கொடுக்கிறாயோ அப்போதுதான் உண்மையிலேயே கொடுக்கிறாய்'' எனக் குறிப்பிடுகிறார்.

முதன்மையானது கடவுளுக்குரியது. ஆபிரகாம் தனக்கு கடவுள் கொடுத்த முதன்மையான ஈசாக்கை கடவுளுக்கு கொடுத்தபடியினால் கடவுள் அவனை அதிகமாக ஆசீர்வதித்தார். தொடக்க நூல் 22:16,17 ல் "உன் ஒரே மகனை எனக்குப் பயிடத் தயங்காமல் நீ இவ்வாறு செய்தாய். ஆதலால்; நான் உன்மீது உண்மையாகவே ஆசி பொழிந்து விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் உன் வழிமரபைப் பலுகிப் பெருகச் செய்வேன்''. எனக் கடவுள் ஆசி வழங்கியுள்ளார். கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவர் தலைவராக மாற்றப்படுகின்றார்.

கடவுளுக்கும் பிறருக்கும் தரும்போது எதையும் எதிர்பார்க்காமல் நம் உடலை, வாழ்வை வருத்தித் தர வேண்டும் முக மலர்ச்சியோடும், முழுமனத்தோடும் அதை ஆண்டவர் ஏற்று நமக்கு ஆசி வழங்குவார்.

திரு. P.C. **பெரின் போப்பி**

# நன்றியுடன் கொண்டாடுவோம்

லேவி 23:9-14

**"உங்கள் சார்பாக ஏற்கத்தக்கதாக, குரு அந்தத் தானியக் கதிர்க்கட்டினை, ஓய்வு நாளுக்குப் பின்வரும் அடுத்த நாளில் ஆண்டவரின் திருமுன் ஆரத்திப் பலியாக்குவார்."** (லேவி 23:11)

பண்டிகைகள் இஸ்ராயேல் மக்களின் சமூகத்தோடும், ஆன்மீகத்தோடும் மிகவும் தொடர்புடையவையாகும். பண்டிகை என்பதற்கு "Hag" என்கிற எபிரேய பதம் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு வீட்டில் குடும்பத்துடன் கொண்டாடுவது, அனைவரும் சேர்ந்து பொது இடங்களில் கொண்டாடுவது என அர்த்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

சிறப்புகால பண்டிகையும் (Harvest Festival), சேர்ப்புக் கால பண்டிகையும் (Festival of Inguthering) நன்றி கூறும் பண்டிகைகளுக்கும், இந்நாட்களில் மக்கள் ஒன்றாக கூடித் தங்களது பண்பாட்டை பகிர்தல், கூட்டுறவு ஏற்படுத்துதல், திருமண நிச்சயம், பிரச்சனைகளுக்கு தீர்வு, போருக்கான ஆயத்தம் மற்றும் தங்களது கலாச்சார நிகழ்வுகளையும் செயல்படுத்துவார்கள்.

விவசாயம், மேய்த்தல் போன்றவை இவர்களது முழுமையான தொழில்கள். ஆகிப் மாதத்தில் (மார்ச் - ஏப்ரல் ஆரம்பம்) இவர்கள் தங்கள் முதற்பலன்களை கடவுளுக்கு காணிக்கையாக படைப்பர். பார்லி, கோதுமை போன்ற தானியங்களே அதிகமாகக் காணிக்கையில் இடம் பெறும்.

கோடைக்கால அறுவடையாக பழவகைகளே அதிகம் கிடைக்கும். திராட்சை, பேரீச்சம்பழம், அத்திபழம், மாதுளை, ஒலிவ பழம் போன்றவற்றை காணிக்கையாக படைப்பார்கள். எனவே முதற்பலன் பண்டிகையின் போது தானியங்களும், சேர்ப்பின் பண்டிகையின் போது பழவகைகளையும் நன்றி காணிக்கையாகப் படைப்பார்கள்.

இந்த பண்டிகைகளானது வெறும் கூட்டுறவை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் கடவுளின் செயல்பாட்டை நினைவு கூர்ந்து நன்றி கூறும் செயல்பாடாகும்.

## *1) கடவுளின் கொடையை நினைவுகூரும் பண்டிகை :*

(லேவி 23:10)

கொடை (Gift) அனைவரையும் மகிழ்ச்சியடையச் செய்கிறது. இங்கே கடவுளின் கொடையானது இஸ்ராயேல் மக்களின் வாழ்வில்

நம்பமுடியாத ஆச்சரியமாக காணப்படுகிறது. (இச 8:7,8) வசனங்களில் கடவுள் இஸ்ராயேல் ஜனங்களுக்கு வாக்குரைத்த கானான் தேசத்தின் செழிப்பை விவரிக்கிறார். அடிமையாக சாந்தும், செங்கலும் செய்து, சுமந்து கொண்டிருந்த இஸ்ரவேலருக்கு இது மகிழ்ச்சியான செய்தியாகும். மேய்த்தல் தொழிலை செய்து வந்த இஸ்ரவேலர் எகிப்தில் கட்டிட வேலை செய்ய நிர்பந்திக்கப்பட்டார்கள். தங்களுக்கு பழக்கமில்லாத வேலை என்றாலும், அடிமைகளைப் போல கட்டாய வேலைச் செய்ய நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். இந்நிலையில் நீரூற்றுக்களும், தானியங்களும், செல்வமும் நிறைந்த கானான் தேசம் இவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. இது கடவுளின் மாபெரும் கொடையாகும். செழிப்பான சூழல், நல்ல காலநிலை, நல்ல விளைச்சல், நல்ல வருமானம் இவை அனைத்தும் கடவுள் இஸ்ராயேலருக்கு அருளின மாபெரும் கொடையின் வெளிப்பாடுகளே.

கடவுளின் சமூகத்தில் செல்லும்போது காணிக்கைகளோடு செல்வது சிறப்பானதாகும். லேவி 23:10-ல் கானான் தேசத்தில் செல்லும்போது அறுவடைக்கு ஆயத்தமான பயிரை (வெள்ளாண்மை) அறுவடைச் செய்து அதின் முதல் கதிர்கட்டை, ஆசாரியரிடத்தில் கொண்டுச் செல்ல வேண்டும் என கூறப்பட்டுள்ளது. ஆசாரியர் அதை கடவுளுக்குக் காணிக்கையாகச் செலுத்துவார்.

இந்நிகழ்வில் ஒரு சிறப்பு உண்டு. அதென்னவெனில், தாங்கள் பயிரிடாத, தாங்கள் பாதுகாக்காத, தங்களுக்கு உரிமையில்லாத பலனை கடவுள் தமது பிள்ளைகளுக்கு கொடுக்கிறார். இதைச் சிந்திக்கும் போது உரிமையற்றதை எப்படி உரிமை கொண்டாட முடியும் என்று சிந்திப்பதை விட நாம் எண்ணாததையும் கடவுள் நமக்கு தருவார் என்றே சிந்திக்க வேண்டும். எதிரியின் கையில் அடிமையாக வாழ்ந்த மக்களை விடுதலை பெறச் செய்து, தங்களதுச் சொந்த கலாச்சாரத்துக்கே (தொழில்) கொண்டு வந்து அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

இதைச் சிந்திக்கும் போது நமது விவசாயமும் நமது பலன்களும் நினைவில் வருகின்றன. கடவுள் தமது பிள்ளைகளுக்கு எண்ணாத நன்மைகளைக் கொடுக்கிறார். இதை உணர்ந்து கடவுளின் கொடையை நினைவு கூர்ந்து மகிழ்வோம்.

நமது பலன்களும், நமது ஆசீர்வாதங்களும் நமக்குரியதல்ல அது கடவுள் நமக்கு கொடையாக தந்தது.

### *2) கடவுளின் அன்பை நினைவுகூரும் பண்டிகை :*

(இச 8:10)

அன்பிற்கும் (love), கொடைக்கும் (gift) ஒற்றுமை உண்டு என்றாலும் இவை இரண்டும் வேறுபட்டவைகளே! அன்பில்லாமல் கொடை இல்லை. கடுமையான கோடையில் விலங்குகளைப் போல

கடினப்படுத்தப்பட்ட இஸ்ராயேல் மக்களின் மீது கடவுள் கொண்ட அன்பின் வெளிப்பாடுதான் "விடுதலை". தமது பிள்ளைகளுக்காக கர்த்தர் செயல்படுத்துகிறார். உணவிற்காக எகிப்தியரிடம் கையேந்த வேண்டும். ஊதியத்திற்காக எகிப்தியரிடம் கையேந்த வேண்டும். ஆனால், இப்போது செழிப்பான தேசத்தில் கடவுள் இவர்களை கொண்டுவிடுகிறார். இச 8:7-11-ல் அது செழிப்பான தேசம் என்றும், உணவுக்கு பஞ்சமில்லாத தேசம் என்றும், செல்வத்திற்கு குறைவில்லாத தேசம் என்றும் கூறப்பட்டுள்ளது. இது கடவுளின் அன்பின் வெளிப்பாடே! அடிமை எஜமானாக உயர்த்தப்படுகிறான். வெறுமை முழுமையாக மாற்றப்படுகிறது. இந்த அன்பை என்றென்றும் நினைவு கூர வேண்டும் என்று கடவுள் கட்டளையிடுகிறார் (இச 8:11).

கடவுளின் அன்பை அனுபவிக்கும் நாம் அதை நினைவு கூர வேண்டும் என்பது கட்டாயமாகும். ஒரு நன்மையை அனுபவிக்கும்போது அதன் காரணத்தை ஒருபோதும் மறக்கக்கூடாது. எகிப்தில் அடிமையாக இருந்த வேளையில் இஸ்ராயேலர் தங்களது மொழி, கலாச்சாரம், இறைநம்பிக்கை போன்றவற்றை இழந்தனர். சொந்த தேசத்திற்கு திரும்புதல் அல்லது விடுதலை என்பதை அவர்களால் சிந்திக்கவே முடியவில்லை. ஆனால் கடவுள் அவர்களுக்காக செயல்பட்டார்.

கானான் தேசத்தில் மகிழ்ச்சியோடு விவசாயம் செய்யும் போதும், செழிப்போடு வாழும் போதும் கடவுளின் அன்பை நினைவு கூர வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார்.

இன்றையச் சூழலில் நமது பண்டிகைகள் எப்படிக் கொண்டாடப்படுகின்றன என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். அர்த்தமற்ற ஆடம்பரங்களும், நன்றியற்ற சடங்காச்சார காணிக்கைகளும் புறக்கணிக்கப்பட வேண்டும். அடிமையைப் போல வாழ்ந்த நம்மை கடவுள் மீட்டுக் கொண்டார், நமக்கு புது வாழ்வு தந்தார் என்பதையும் சிந்திக்க வேண்டும். வாக்குரைக்கப்பட்ட கானான் தேசம் இஸ்ராயேலரின் கற்பனையைக் காட்டிலும் உயர்வாயிருந்தது. இதே போன்ற அனுபவங்களைதான் நாமும் நமது வாழ்வில் அனுபவிக்கின்றோம். கடவுளின் சமூகத்தில் நன்றியோடு, மனநிறைவோடு வருவது மிகவும் அவசியமாகும்.

கடவுள் நமக்கு தந்த வாழ்வு, நல்ல வாழ்க்கை, தேவையான ஆசீர்வாதங்கள் அனைத்திற்காகவும் நன்றி கூற வேண்டும். கடவுளின் கொடையை, கடவுளின் அன்பை நினைவு கூர்ந்து வாழ்வோம். கடவுள் நம்மை ஆசீர்வதிப்பாராக!

**திரு. C. மோகன்**

# விளைச்சலைச் சேகரித்துப் படைப்போம்

திருமறைப்பாடம் : இச 16:13-15

**"உன் ஆண்டவர் தெரிந்தெடுக்கும் இடத்தில் உன் கடவுளாகிய ஆண்டவருக்கு ஏழு நாள்கள் விழாக் கொண்டாடு....அப்பொழுது நீ நிறைவாக மகிழ்ச்சியுறுவாய்".** (இச 16:15)

இல்லங்களில் குடும்பத்திடனும், சமூகமக்களுடனும், நாட்டு மக்களுடனும் பொது இடங்களில் சேர்ந்து கொண்டாடி மகிழ்வதைப் பண்டிகை என்கிறோம். பண்டிகை என்பதன் எபிரேயச் சொல் அக் (Hag) பண்டிகைகள் இஸ்ரயேல் மக்களின் சமூகத்தோடும் ஆன்மீகத்தோடு மிகவும் தொடர்புடையது. இஸ்ரவேலர் பல பண்டிகைகளை கொண்டாடினர். குறிப்பாக முப்பெரும் பண்டிகைகளை சிறப்பாக கொண்டாடுவார்கள். அப்பண்டிகைகளில் ஒன்றான கூடாரப் பண்டிகை என்னும் சேர்ப்பின் பண்டிகையை யூதர்களின் சமூக ஆண்டாகிய திசிரி (செப்டம்பர்-அக்டோபர்) என்ற ஏழாம் மாதம் 15-ம் தேதி கொண்டாடுவார்கள். கனி வகைகள், எண்ணெய், திராட்சை ரசம் முதலிய சகல பலன்களையும் சேர்த்தபின் இப்பண்டிகையைக் கொண்டாடடுவர். சேர்ப்பின் பண்டிகையை எபிரேய மொழியில் சுக்கோத் என்பர்.

கடவுளுக்காக சேர்ப்பின் பண்டிகையைக் கொண்டாடும் இஸ்ரயேல் மக்கள் கடந்த காலத்தில் தங்களுக்கு செய்த அருட்கொடைகளை சேர்ப்பின் பண்டிகை காலத்தில் நினைவு கூர்ந்தார்கள். வருங்காலத்தில் இறைவனிடமிருந்து தாங்கள் பெறப்போகும் அருட்கொடைகளை எதிர்நோக்கி மகிழ்வார்கள். எபிரேயர்கள் திருச்சட்டத்தை அனுசரித்த பின், இப்பண்டிகை கொண்டாட உலக முழுவதிலும் பரவி இருக்கும் யூதர்கள் அனைவரும் ஒன்று கூடுவார்கள். இஸ்ரவேல் மக்கள் ஆண்டவரின் கட்டளைப்படி ஏழு நாட்கள் தங்கள் வீடுகளை விட்டு தற்காலிக கூடாரங்களில் வாசம்பண்ணி இப்பண்டிகையை கொண்டாடினர். இந்நாளில் இப்பண்டிகை உணர்த்தும் உண்மைகளை இங்கு காண்போம்.

### *1. இறைவனை நினைவுகூரும் விழா :*

இஸ்ரயேல் மக்களுக்கு கடவுள் வாக்குப்பண்ணின கானானை கொடுத்தார். கானானில் நல்ல செழிப்பான சூழல், நல்ல காலநிலை, நல்ல விளைச்சல், நல்ல வருமானம் கிடைத்தது. விவசாயத்தின் வழியாக தானியங்களும். செல்வமும். கனி வகைகளும், விவசாயத்திற்கு ஏற்ற நீருற்றுகளும் கிடைத்தன. நல்ல உணவும் சொந்த வீடும் பெற்றனர். தங்கள் வயல்களில் திராட்சைச் செடிகளையும் அத்தி மரங்களையும் நட்டு பயன் பெற்றார்கள். இத்தகைய அதிசயங்களை நினைவுகூர்ந்து பண்டிகையை ஆசரித்தனர். இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து ஆண்டவர் விடுதலைச் செய்த பின்னர் 40 ஆண்டுகள் வனாந்திரத்தில் சுற்றி அலைந்து குடிசைகளில், கூடாரங்களில் வாழ்ந்ததையும் நினைவு கூர்ந்தனர். நலமான வாழ்வின் காலத்திலும் தங்கள் துன்ப காலத்திலும் ஆண்டவர் செய்த நன்மைகளை நினைத்து நன்றி செலுத்தி துதிக்க இப்பண்டிகையை கொண்டாடினார்கள். நாமும் கடந்த கால வாழ்க்கையை நினைவு கூர்ந்து துன்ப வாழ்வின் மத்தியிலும், நன்மையைத் தந்த கடவுளை நினைவு கூர்ந்து பண்டிகையைக் கொண்டாட அழைக்கப்படுகின்றோம்.

### *2. இறைவனில் மகிழும் விழா :*

இது ஒரு மகிழ்வுமிக்க பண்டிகை. சமூக ஆண்டின் தொடக்கத்தில் வருவதினால் பெருமகிழ்வு அடைந்தனர். வருடத்தின் நன்மையாகிய பழம் எண்ணெய் முதலியவற்றை சேர்த்தபின் வருவதினால் இப்பண்டிகை மகிழ்வைக் கொடுத்தது. இவ்விழாவின் முதல் நாள் ஓய்வு நாளாகவும் சபை கூடி வரும் நாளாகவும் காணப்பட்டபடியினால் மகிழ்வாக பங்கேற்றனர். திருச்சட்ட நூலை மக்கள் அனைவரும் கேட்டு படித்தனர். அப்போது கடந்த கால வாழ்வை நினைத்து தற்போதைய வாழ்வில் கடவுள் நம்மை நன்மைகளினால் நிரம்பி வழி நடத்தினார் என எண்ணி, பாவம் போக்கும் பலி பொருட்கள், தானிய படையல்கள், எண்ணெய், கனி வகைகள் போன்றவைகளை படைத்து மகிழ்ந்தனர். மகிழ்ச்சியின் அனுபவத்துடன் பரிசுகளையும் பரிமாறி மகிழ்ந்தனர். இப்பண்டிகையைக் கொண்டாடும் நாமும் ஆண்டவரில் நாமும் மகிழ்வுடன் வாழ்ந்தும், பிறரையும் மகிழ்வுக்கு நேராக நடத்திட முற்படுவோம்.

### *3. இறைவனுக்காகப் படைக்கும் விழா :*

பண்டிகையின் போது மக்களின் உள்ளம் துதியினாலும் நன்றியினாலும் நிறைந்து, முழு உள்ளத்துடன் தர்மங்கள் செய்து, பத்தில் ஒன்று காணிக்கைகள், தசம பாகம், நேர்ச்சை காணிக்கைகள், தன்னார்வ

காணிக்கைகள் போன்றவற்றைப் படைத்தனர். கோடைக்காலத்தில் அறுவடையாக திராட்சை, பேரீச்சம்பழம், அத்திப்பழம், மாதுளை, ஒலிவப்பழம் அதிகமாக கிடைத்த படியினால் மிகுதியாக நன்றியுடன் பல வகைக் கனிகளை படைத்து மகிழ்ந்தனர். முதன்மை காணிக்கையாகவும் கனி வகைகளை படைத்தனர் கடவுள் இஸ்ரயேலரை எகிப்திலிருந்து விடுவித்த வரலாற்றையும் அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாட்டின் வரலாற்றையும் பாடி காணிக்கை படைத்தனர். இறைவன் நமக்கு தந்த மீட்பினையும் நாட்டில் மகிழ்வுடன் வாழ வைத்திருக்கும் நன்மைகளையும் நினைத்து முகமலர்ச்சியோடு காணிக்கைகளைப் படைப்போம்.

சேர்ப்பின் பண்டிகையின்போது எருசலேம் ஆலயம் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு. ஒளியினால் அழகாகக் காட்சியளிக்கும். இதைக் கண்ட இயேசுகிறிஸ்து உலகின் ஒளி நானே என்றார். கூடாரப் பண்டிகையை இயேசுகிறிஸ்து ஆசரித்தார். சேர்ப்பின் பண்டிகையின் இறுதி நாளில் ஜீவத்தண்ணீர் நானே என்றார். ஏனெனில் கூடாரப் பண்டிகை தினத்தில் ஆசாரியனும் மக்களும் பாடிக்கொண்டு சீலோவாம் குளம் சென்று தண்ணீர் எடுத்து எருசலேம் ஆலயத்திற்கு ஊர்வலமாக வந்து மேடையில் உள்ள வெள்ளித் தொட்டி ஒன்றில் விடுவார்கள். மற்றொரு வெள்ளித் தொட்டியில் குடிக்கும் கொடையாக பணபலி திராட்சை ரசத்தை கொண்டு வந்து ஊற்றுவார்கள். தண்ணீரும் திராட்சை ரசமும் ஊற்றப்பட்ட பின்னர் இறைவனுக்காக கொண்டாடும் சேர்ப்பின் பண்டிகை நிறைவுபெறும். இஸ்ரவேலர் கடந்த காலத்தில் தங்களுக்கு செய்த அருட்கொடைகளை சேர்ப்பின் பண்டிகை காலத்தில் நினைவு கூர்ந்தார்கள். வரும் காலத்தில் இறைவனிடமிருந்து தாங்கள் பெறப்போகும் அருட்கொடைகளை எதிர்நோக்கி இறைவனைப் புகழ்ந்தார்கள் எனவே இந்த பண்டிகைக் காலத்தில் கடவுள் நமக்கு செய்திருக்கும் செய்யப்போகும் அருட்கொடைகளை எண்ணி மகிழ்வோம்.

சுவி. T.S. ***ஏசையன்***

**Notes**

**Notes**

***Notes***

***Notes***

***Notes***

Notes

***Notes***